நகரத்தார் மரபும் பண்பாடும்

தொல்லியல் அறிஞர்

மா. சந்திரமூர்த்தி எம்.ஏ.,

மேனாள் துணை இயக்குநர், தொல்லியல்துறை

வண்ணப்படங்கள்

வை. முத்துராமன்

புகைப்படக் கலைஞர்

மணிவாசகர் பதிப்பகம்

31, சிங்கர் தெரு, பாரிமுனை.

சென்னை-600108.

முதல் பதிப்பு : 21, சூன். 2007

திருவள்ளுவர் ஆண்டு : 2038

உரிமை : ஆசிரியர்க்கு

விலை: ரூ. 250.00

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1400

நினைவில் வாழும்
நிறுவனர்



ச. மெய்யப்பனார்

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'பதிப்புச்செம்மல்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, **சிதம்பரம்**- 608001. **✆:230069**

31, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை**-600108. **✆:25361039**

6, சிவஞானம் தெரு, **தி. நகர், சென்னை**-600017. **✆:24357832**

110, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை**-625001. **✆:2622853**

15, ராஜ வீதி, **கோயமுத்தூர்**-641001. **✆:2397155**

78, செரி சாலை, **சேலம்**-636001. **✆:3207722**

28, நந்தி கோயில் தெரு, **திருச்சி**-620002. **✆:2706450**

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 021,
தொலைபேசி : 25954528



என்றும் என் நினைவில் வாழும்
அமரர் பதிப்புச்செம்மல்
ச. மெய்யப்பனார் அவர்களுக்கு
இந்த நூல் காணிக்கை

மா. சந்திரமூர்த்தி

30-2

பதிப்புரை

ச.மெ. மீனாட்சி சோமசுந்தரம்

தென்னாட்டில் புகழ் மிக்க சமூகங்களில் நகரத்தார் சமூகம் தனிச் சிறப்பிடம் பெறுகிறது.

'தமிழன் என்றொரு இனமுண்டு தனியே
அவர்கொரு குணமுண்டு'

என தேசியகவி நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் அன்று பாடினார். **'தமிழ்நாட்டில் நகரத்தார் என ஓர் குலம் உண்டு. அவர்க்கென்று ஒரு குணமுண்டு'** என்ற புதுமொழியை நாம் உருவாக்கலாம். பாரதியார், பாரதிதாசன், கவிமணி, நாமக்கல் கவிஞர், சுத்தானந்த பாரதி முதலிய இருபதாம் நூற்றாண்டு கவிஞர்கள் அனைவராலும் பாராட்டப்பெற்ற ஓரே சமூகம் நகரத்தார் சமூகம்.

'நகரத்தார்' நகரேஷு காஞ்சியாகிய தொண்டை மண்டலத்திலிருந்து புறப்பட்டு, சோழ மண்டலத்தில் அரசர்களிடம் பணியாற்றி, பின் பாண்டி மண்டலம் வந்தவர்கள். மூன்று பேரரசுகளின் மன்னர்களாலும் பொறாமைப்படத்தக்க வகையில் வாழ்ந்தவர்கள். பாண்டிய மன்னனால் அளிக்கப்பட்ட வளமற்ற பூமியை வளமுடையதாக்கப் பெரு முயற்சி மேற்கொண்டவர்கள். மன்னனால் அளிக்கப்பட்ட ஏழு கோயில்கள் ஒன்பது கோயில்களானாலும் ஒற்றுமையாக வசிப்பவர்கள். இன்றும் கோயிலைச் சார்ந்த குடிகளாகவே வாழும் பக்தியுடையவர்கள். எத்துணைப் பெரிய பதவியில் இருந்தாலும் முன்னோர் வழிபாடுகளிலும், குலதெய்வ வழிபாடுகளிலும் நம்பிக்கை கொண்டவர்கள். நாட்டு விடுதலைக்காகப் போராடிய விடுதலை வேட்கையுடையவர்கள். தமிழ் வளர்ச்சிக்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் பாடுபட்டவர்கள். நாட்டில் பல தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள்.

இந்தியாவின் ஆன்மிக வாழ்வு மலைக்குகைகளில் இருந்தே திருக்கோயில்களில் தோன்றியது. பொறியியல் படிப்பு என்ற ஒன்று இல்லாத காலத்தில் நமது தமிழகச் சிற்பிகளால் தோற்றுவிக்கப்பட்ட சிற்ப, கட்டடக் கலையை இன்றைய பொறியியல் வல்லுனர்களால் தோற்றுவிக்க முடியாது. அத்தகைய சிற்பச் செறிவு நகரத்தார் திருப்பணி பெற்ற செட்டிநாட்டின் எல்லாக் கோயில்களிலும் உண்டு. நகரத்தார் திருப்பணிகள் பற்றிய செய்தி காவியப்புகழ் பெற்றது. அது விவாதத்திற்கு இடமின்றி ஏற்றுக் கொள்ளப்பெற்ற வரலாற்று உண்மை.

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுல மில்லாகி யாங்கு"

என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவரின் வாக்கு. பணம் என்பது ஒரு அடையாளம். பயன்படுத்திக் கொண்டே செல்லும்போது பயனளிக்கின்ற எத்தனையோ சக்திகளுள் பணமும் ஒன்று. அது எதற்காக உள்ளதோ அதைக் கருதியே அதனைச் சரியான வழியில் நல்ல நோக்கத்தில் செலவிடக் கற்றவர்கள் நகரத்தார்கள். இதனைக் கருதும் பொருட்டே திருவும் - கலையும் கூடினாற் போன்று பல தொடக்கப் பள்ளிகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை நகரத்தாரின் வள்ளல் தன்மையினால் நடைபெற்று வருவது எண்ணிப் போற்றத் தக்கது. இதனைக் கருத்திற் கொண்டே இவர்கள் தொழில் துறையிலும், நிருவாகத்திலும் புகழுடன் மிளிர்கின்றனர். தமிழகத்தை வளப்படுத்திய சமூகங்களுள் நகரத்தார் சமூகம் முதன்மையானது என்பது பொருளாதார வல்லுனர்களின் கணிப்பு - மதிப்பீடு.

திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடிய மரபு நகரத்தார் மரபு. திரட்டியசெல்வத்தில் குறிப்பிட்ட விகிதம் அறப்பணிகளுக்கு கொடை வழங்கிக் கொடை மன்னர் பனுவலில் இடம் பெற்ற பெருமக்கள் நகரத்தார்கள். சிறுகச் சிறுகச் சேர்த்து பேரறங்கள் செய்த பெருமக்கள் நகரத்தார்கள். பாய்மரக்கடலில் அலைக்கடலுக்கு அப்பால் சென்று பெரும் பொருள் ஈட்டி நல்லறங்களை நாளும் செய்தவர்கள் இவர்கள். பர்மாவிலிருந்து கொண்டு வந்த பெருஞ் செல்வத்தை திருக்கோயில் திருப்பணிகளுக்கு வாரி வழங்கியதோடு தங்கள் ஊர்களில் தங்களுக்கென அரண்மனை போன்ற பெரியவீடுகளைக் கட்டிக் கொண்டவர்கள் பலர். 1900 முதல் 1940 வரை செட்டிநாட்டு 78 ஊர்களிலும் கட்டப்பெற்ற வீடுகள் அவர்களின் செல்வ வளத்தைக் காட்டும் சிறிய சீரிய அடையாளங்கள். அவர்கள் இறைவனுக்கும் தங்களுக்கும் செய்து கொண்ட அணிகலன்கள் எண்ணில, பல்வகையின, தனித்தன்மை உடையன. விலை மதிக்க முடியாதவை.

சீரோடும் - சிறப்போடும், பெயரோடும் - புகழோடும் வாழ்ந்த இந்த சமூகம் பல இடிபாடுகளில் எதிர்நீச்சல் போட்டு வளர்ந்த ஆற்றல் மிகுந்த சமூகம். விடுதலைப் பெற்ற ஐம்பது ஆண்டுகளில் கையூன்றிக் கர்ணம் பாய்ந்து கடின உழைப்பால் தன்னிறைவு பெற்றனர். ஒவ்வொரு காலத்திலும் அவர்களுக்கு ஏற்பட்ட இடர்கள் இடிபாடுகளிலிருந்து அவர்கள் மீண்ட கதை பொருளாதார வளர்ச்சியின் படிநிலை தனி ஆய்வுக்குரியது. பர்மா, மலேசியா, இலங்கை, செய்கோன் வீழ்ந்தபின் பரம்பரை விலாசங்கள் ஒளியிழந்தன. புத்துணர்ச்சி, புத்தார்வம், புத்தெழுச்சியுடன் புறப்பட்ட இளைஞர் அணி கல்வி வளர்ச்சியால் புதிய விலாசம் பொறிக்கத் தொடங்கினர்.

விடுதலைக்கு முன் பெண்கல்வி முற்றிலுமாக மறுக்கப்பட்ட சமூகங்களுள் இது முதன்மையானது. அண்ணாமலை அரசர்தான் திருப்பணிகளில் முழுதும் ஈடுபட்டிருந்த நகரத்தாரை கல்விப்பணிக்கு திருப்பிய முதன் முன்னோடி. கல்விக்கலம் செலுத்திய முதல் மீகாமன். அவர் வழியில் குடியிருந்த வீடும் கொடுத்த கொடை வள்ளல் அழகப்பரே

30-2

செட்டிநாட்டின் கல்வி முகத்தை மாற்றிவிட்டவர். அவரை அடியொற்றிக் கலைத்தந்தை கருமுத்து தியாகராசர் மதுரையில் கல்லூரிகள் பல கண்டார். இன்று நகரத்தார்கள் வீடுகளில் படிக்காத பெண்களே இல்லை. இதனால் இன்று இந்த சமூகத்தில் பல இளைஞர்களும், பெண்களும் பல்வேறு நிலைகளில் பட்டம் பெற்று பல் துறைகளிலும் தம் திறமையை அடையாளம் காட்டி வருகின்றனர். வளர் தொழில் செய்து, வளர் பொருள் குவித்து, வளவாழ்வு வளமனைகளில் வாழ்கின்றனர். திரைக்கடல் ஓடி திரவியம் திரட்டிய இச்சமூகம் முன்பு லேவா தேவி ஒன்றையே நம்பி இருந்தது. ஆனால் இன்று மருத்துவம், பொறியியல், கணினி கல்வி கற்று நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் வித்தகர்களாய், விஞ்ஞானிகளாய், நிறுவனத் தலைவர்களாய் வீறு பெற்று பெரும் செல்வம் குவித்து அங்கு சுகபோக வாழ்வை மேற்கொள்வதோடு இந்திய திருநாட்டிற்கு அந்நியச் செலாவணியை அள்ளித் தரும் சமூகமாய் இச்சமூகம் இன்று திகழ்கிறது. சொந்தத் தொழில் தவிர்த்து வேலைக்கு போவதை இழிவாகக் கருதிய இந்த சமூகம் வேலைகள் பார்த்து உயர்ந்து இன்று தொழிற்சாலைகள் பல நிறுவி ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் ஆலமரமாக வளர்ந்து விட்டது.

இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் செட்டி நாட்டில் பெரும்பாலும் பால்ய மணமே நடந்தது. இது 30 வரை தொடர்ந்ததாகக் கூறப்படுகிறது. விடுதலைக்குப் பிறகு உரிய வயதில் பெற்றோர்கள் பார்த்து நடத்தி வைக்கும் திருமணங்களே அனைத்தும். தற்போது பெண்கள் தமக்குப் பிடித்த இளைஞர்களையே மணம் செய்து கொள்கின்றனர். அந்த அளவில் நகரத்தார்கள் சமூகத்தில் பெண்கள் கல்வி முக்கியத்துவம், முதலிடம் பெற்று விளங்குகிறது.

பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இந்த சமூகம் குடும்பத்தைக் கட்டுப்படுத்துவதிலும் விழிப்பாக உள்ளது. குடும்பக் கட்டுப்பாட்டைக் கட்டுக்குள் வைத்துக் கொண்ட சமூகத்திற்குப் பரிசு உண்டு என்று சொன்னால் இந்த சமூகத்திற்கு மட்டுமே முதல் பரிசைப் பெறும் தகுதி உண்டு.

மக்களினம் புதிய ஞானம், புதிய சக்தி, புதிய திறமைகள் வாயிலாகத் தன் எல்லைகளை விரிவாக்கம் செய்து நாகரிகம் அடைந்து வரும் நாளில் இன்றும் பழைமையை மறக்காது எந்த விழாவானாலும் அனைவரும் வீடுகளில் ஒன்று கூடி விழாக்கள் நடத்துவதிலும், அதில் வரும் விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்று, முதலில் 'கிள்ளிப் போட்டுப் பின் அள்ளிப்போட்டு' உபசரிப்பதும், பாரம்பரியச் சடங்குகளை மரியாதையுடன் நடத்துவதும், பாரம்பரிய உணவுகள் சமைத்து, அதனை பரிமாறப்படும் முறைகளும் பாராட்டத்தக்கது.

இந்த சமூகம் பற்றி சில நூல்களும் பல கட்டுரைகளும் வெளி வந்திருந்தாலும் நவீன கால வரலாறு இதுவரை எழுதப் பெறவில்லை. வாயில் திறக்கும் நிகழ்வாக ஒரு புது முயற்சி இந்நூல். நகரத்தார்கள் வாழ்க்கை, பண்பாடு, மரபுகள், சடங்குகள், சமுதாயத்திற்கும் நாட்டிற்கும்

அவர்களது பங்களிப்பு எனத் தொடக்கம் முதல் முடிவு வரை சம்பிரதாயங்களைச் சார்ந்து வாழ்வதை விரிப்பது என்பது இன்னும் விரிந்து கொண்டே போகும். இதனை எளிய 33 தலைப்புகளில் இந்நூலாசிரியர் கொண்டு வந்திருப்பது சிரமமான செயலே. எனினும் இதனைச் சீரிய முறையில் தொகுத்தளித்துள்ள ஆசிரியர் ஏற்கெனவே நம் பதிப்பகத்தில் எம் தந்தையாரின் விருப்பத்திற்கு இணங்க நகரக் கோயில்கள் ஒன்பதையும் தனித்தனியே ஆய்வு செய்து நூல் எழுதியவர். இந்நூல்களேயன்றி நகரத்தார் சமூகம் பற்றிய தனிக் கலைக்களஞ்சியம் ஒன்றையும் மெய்யப்பன் பதிப்பகம் விரிவான முறையில் வெளியிட்டுள்ளது.

முன்பே நகரத்தார்களைப் பற்றிப் பல அறிஞர் பெருமக்கள் பல நூல்கள் எழுதி இருந்ததை அடிப்படையாகக் கொண்டு, தொல்லியல் நோக்கில் கல்வெட்டுகள், பட்டயங்கள், செப்பேடுகள் ஆகியவற்றை அறிவியல் பார்வையில் ஆராய்ந்து இந்நூல் அளிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் தொல்லியல் துறையில் பல ஆண்டுகளாகப் பல நிலைகளில் பணியாற்றியவராதலால் இவற்றைச் சுவை படவே விவரித்திருக்கிறார்.

மேலும் நமது நாட்டுக் கோயில்களைச் சார்ந்தே இசை, முழவு, திருமுறை, கட்டடம், சிற்பம், ஓவியம், நாட்டியம் எனப் பல கலைகளை மன்னர்கள் வளர்த்து வந்துள்ளனர். மன்னர்களுக்குப் பின்னால் இக்கலைகள் நகரத்தார்களால் போற்றி வளர்க்கப்பட்டதை விவரிக்கும் ஆசிரியர் இதனை 'நகரத்தார் கலை', 'நகரத்தார் கலைப்பாணி' என்றே சுட்டுகிறார். அந்த அளவில் மன்னர்கள் போற்றி வளர்த்த கலைகளை அழிவுறாமல் சீர்படுத்தி நகரத்தார்கள் தந்திராவிட்டால் இன்று பல திருக்கோயில்கள் சிதைவுற்றிருக்கும்.

இந்நூலுக்குச் சிறந்ததோர் அணிந்துரையும் ஆசியுரையும் வழங்கிய நகரத்தார் சமூகத்தின் தலைமைத் திருமடம் கோவிலூர் ஆதீனம் சீர்வளர்சீர் நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் அவர்களுக்கும், நல்லதொரு மதிப்புரை வழங்கிய சிற்பச்சித்தர், கலைமாமணி டாக்டர் வை. கணபதி ஸ்தபதி அவர்களுக்கும் எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்நூலுக்குத் தேவையான புகைப்படங்களைத் தந்துதவிய நண்பர் திரு. வை. முத்துராமன் அவர்களுக்கும் எனது அகங்கனிந்த நன்றி.

மிகக் குறைந்த அளவே எண்ணிக்கை உள்ள ஒரு சமூகத்தினர் மிகப்பெரிய அளவில் அறப்பணிகளையும், திருப்பணிகளையும், கல்விப்பணிகளையும், தொழிற்பணிகளையும், வாழ்வியல் சமுதாயப் பணிகளையும் ஆற்றி முன் நிற்பது பெருமைக்குரியதாகும். அந்த வகையில் இந்நூல் இச்சமூகத்தினர் பற்றிப் பிறர் அறிந்துகொள்ள உதவும் வாயிலாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.



கோவிலூர் ஆதீனம்
சீர்வளர்சீர்
நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள்

அணிந்துரை

மகுடதன வைசியர்கள் என்று போற்றப்படும் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் சாந்தியாபுரியிலிருந்து முதலில் காஞ்சிக்கும் பின்னர் காவிரிப்பூம்பட்டினத்திற்குக் குடிபெயர்ந்தனர். பிறகு பாண்டிய மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க பாண்டிநாடு வந்து தமக்கே உரிய இரத்தின வியாபாரம் செய்து வந்தனர். பின்னர் மன்னனிடம் வேண்டி ஏழு பிரிவினரும் ஏழு கோயில்களையும், ஏழு நகரங்களையும் பெற்றனர். இந்த ஏழு கோயில்களில் மேலும் பிரிவு ஏற்பட்டு ஒன்பது கோயில்களாக ஏற்பட்டு ஒன்பது கோயில்களையும் தங்களது குலக்கோயில்களாகக் கொண்டு வாழ்கின்றனர்.

நகரத்தார்கள் கோயிலைச் சார்ந்து வாழும் குடிகள் கோயிலையே கோத்திரமாகக் கொண்டவர்கள். சிவபெருமானையே வழிபடுபவர்கள்; ஆனாலும் நகரச் சிவன் கோயில்கள் தவிர தாங்கள் வாழும் 78 ஊர்களுக்கு அண்மையில் உள்ள ஆலயங்களுக்கும் சைவ - வைணவ - சாக்த- கௌமார - காணாபத்திய பேதம் இன்றிப் பல நற்பணிகளுக்குப் பொருளை வாரி வழங்கி இருக்கின்றனர். திருப்பணி செய்வதில் பெருவேட்கை கொண்ட நகரத்தார்கள் தேவாரத் தலங்களிலும், வெளிநாடுகளிலும் ஆற்றியுள்ள அறப்பணிகள் பல. கோயில் பணிகளில் மன்னர் பின்னோர் என்ற சிறப்புப் பெற்ற இவர்கள் நாட்டை வளப்படுத்துவதிலும் மன்னர் பின்னோராகவே உள்ளனர். தொழில் வளத்திலும், கல்வி நலத்திலும், தமிழ் எழுச்சியிலும் இவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. இவர்கள் கால் பதிக்காத துறையே இல்லை எனலாம்.

இந்நூலில் 33 தலைப்புகளில் நகரத்தார்களின் தோற்றம் முதல் - மரபுகள் வரை பல விஷயங்கள் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. குறிப்பாக நகரத்தார்கள் காப்பிய காலமான சிலப்பதிகாரக் காலத்திலிருந்து மரபு வழியாகச் சுட்டப்படுகின்றனர். காப்பியத்தில் காணப்படும் சில சொற்கள், நடைமுறைகள் இன்னும் இவர்களால் கடைப்பிடிக்கப்படுவது வியப்பிற்குரியதல்ல. தமது குலத்தவரான பட்டினத்தார் திருமணம் முதல் மருதவாணனை வியாபாரத்திற்காக அனுப்புவது, துறவு மேற்கொள்வது என ஒரு பாரம்பரிய விழாவை இன்றுவரை கடைப்பிடிப்பது பாராட்டுதற்குரியது. வானம் பார்த்த பூமியான செட்டிநாட்டில் ஊர் தோறும் ஊருணிகள் அமைத்தும், மருத்துவமனைகள், பள்ளிகள் என அமைத்தும் எதிர்கால சமுதாய மேம்பாட்டிற்கு முன்பே திட்டமிட்டு அடிக்கல் நாட்டியுள்ளனர். இன்றைய மழைநீர் சேகரிப்பை அன்றே ஊருணிகளில் திட்டமிட்டு நடத்திக் காட்டியுள்ளனர். சைவ வழிபாடு மட்டுமின்றித் தமது முன்னோர்கள் வழிபாடுகள் மற்றும் குலதெய்வங்களையும், தமக்கேயுரிய பிள்ளையார் நோன்பு போன்ற வழிபாடுகளையும் இவர்கள் மறக்கவில்லை. வேகமாக மாறிவரும் இன்றைய உலகில் இன்றும் தமது குழந்தைகளுக்கு இறைவன் பெயரையே இடு பெயராகச் சூட்டுகின்றனர். அக்காலத்தில் எப்போதும் இறைவன் நாமத்தையே உச்சரித்துக் கொண்டு இறைவன் நினைவிலேயே உழல வேண்டும் என்பதற்காகவே குழந்தைகளுக்கு கடவுள் பெயர்களைச் சூட்டினார். இன்று அவ்வழக்கம் அருகிக் கொண்டு வரும் வேளையில் நகரத்தார்கள் பெரும்பாலும் இறைப் பெயர்களையே சூட்டுகின்றனர்.

திருமண விழாக்களிலும் இன்று பல்வேறு துறைகளில் பெரிய நிலையில் இருந்தாலும் அன்றைய வணிக மரபை மறக்காது அரசாணிக் கால் நடும் போது பள்ளம் தோண்டிப் பவளத்தைப் போட்டுப் பால்விட்டு பின்னரே கால் நடுகின்றனர். நாகரிக மோகத்திற்கு ஆட்படாமல் எத்தனை வசதியானவராக இருந்தாலும் பாரம்பரியமான உணவு முறைகளே பாரம்பரிய முறையில் பரிமாறப்படுகிறது. செட்டிநாட்டில் வீடுகள் அனைத்தும் மிகப் பெரியதாக அரண்மனை போன்று இருக்கும். சாதாரண வீடுகள் கூடச் சற்றுப் பெரியதாகவே கட்டப்பட்டிருக்கும். அது ஆடம்பரத்திற்காக அன்று. உழைப்பிற்கு மதிப்புத்தரும் நகரத்தார்கள் மற்றவர்களுக்கு உழைக்கவும் தெரிய வேண்டும் . அதே நேரம் அவர்களுக்குப் போதுமான வருவாயும் அளிக்க முடிவு செய்தே பெரிய வீடுகளைக் கட்டினர். அந்த வீடுகள் அவர்களின் அந்தஸ்து. புகார் நகரத்தில் இருந்து வரும்போதே வேளாளப் பெண்களுக்கும் - ஆண்களுக்கும் தீட்சை அளிப்பதற்காகக் குருமார்களையும் தவறாமல் அழைத்து வந்து. இன்றும் அதனைத் தொடர்ந்து விடாமல் கடைப்பிடிக்கும் ஒரே சமூகம் நகரத்தார் மட்டுமே. இன்றும் ஆண்களும் பெண்களும் தவறாமல் தங்கள் குலகுருவிடம் தீட்சை பெறும் மரபும் திருமணத்தைக் கட்டாயமாகக் கோயிலில் பதிவு செய்யும் வழக்கமும் இந்தச் சமுதாயத்திலேயே கடைப்பிடிக்கப்படுகிறது.

எந்தத் துறையாக இருந்தாலும் அதனை மக்களிடம் எப்படிக் கொண்டு சேர்ப்பது என்ற திட்டமிடலுடன், அது மக்களின் பயன் பாட்டிற்குத் தேவை எதுவரை எனச் சிந்தித்துத் தொலை நோக்குடன் செயலாற்றுவதே அரிய திறமையாகும். அந்த வகையில் இன்றைய வங்கி நடைமுறைகளில் அன்று நகரத்தார் தொடங்கிய பெரும்பான்மையான வழிகளே இன்றும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இன்று வங்கிகள் எல்லாம் நாட்டுடைமை ஆக்கப்பட்ட போதும் இவர்கள் வகுத்த வழிமுறைகளே இன்றும் நடைமுறையில் காணப்படுவது இவர்களின் வெற்றிகரமான வங்கியியல் முறைக்குச் சான்று எனக் கூறலாம்.

நகரத்தாரைப் பற்றிய அனைத்து விஷயங்களும் முதலிலிருந்து முடிவு வரை **'நகரத்தாரின் மரபும் – பண்பாடும்'** என்ற இந்நூலில் விளக்கமாகச் சுவைபடக் கூறப்பட்டுள்ள பாங்கு வியக்க வைக்கிறது. இந்நூலாசிரியர் திரு. மா. சந்திரமூர்த்தி அவர்கள் தொல்லியல் துறையில் கல்வெட்டாய்வாளர், அகழ்வாய்வாளர், ஆழ்கடல் அகழ்வாய்வாளர், பதிவு அலுவலர், துணை இயக்குநர் எனப் பல நிலைகளில் பணியாற்றியவர். கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, படிமக்கலை போன்ற கோயிற்கலைப் பண்பாட்டை நன்கு அறிந்தவர். **'கோயிற்கலைகள் பற்றிய ஒரு பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டால் இவரது நூல்கள் அதில் பாடநூலாகத் தக்கவை'** என முனைவர் தமிழண்ணல் அவர்களால் பாராட்டப்பெற்றவர். நகரத்தாரின் குலமரபுக் கோயில்கள் ஒன்பது நூல்கள் தவிர 30க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியர். ஆதலால் அனைத்தையும் உற்று நோக்கிச் செட்டிநாடு, அதனைச் சார்ந்த கிராமங்கள், செட்டி என்ற பெயரின் தோற்றம், நகரத்தார் இனம், அவரது வாணிகம், வட்டித்தொழில் அவர்களது கோயில்கள், சிற்பங்கள், கட்டடக்கலை, வீடுகள், உறவுகள், உணவுகள், வழிபாட்டு முறைகள், நகரத்தார் பற்றிய வரலாற்றுச் செய்திகள், வாழ்வியல் முறைகள் மட்டுமின்றிக் கல்வெட்டு, செப்பேடு, சுவடி எனப் பலவற்றை ஆராய்ந்து தொகுத்தளித்திருக்கிறார்.

நல்ல பல தமிழ் நூல்களை வெளியிட்டுத் தமிழுக்குத் தொண்டு புரிந்து வரும் மெய்யப்பன் பதிப்பகம் இந்நூலை வெளியிடுகிறது. இந்நிறுவனரும், பதிப்புச் செம்மலும், தமிழ வேளுமான டாக்டர். ச. மெய்யப்பன் அவர்கள் இந்நூல் வெளியீட்டின் மூலம் தாம் தோன்றிய குலத்தின் பெருமையை நிலை நாட்டியுள்ளார். அவர் விட்டுச் சென்ற பணியைத் தொய்வின்றித் தொடரும் அவர் மகன் ச.மெ. மீனாட்சி சோமசுந்தரம் அவர்களையும், அவருடன் உடனிருந்து பணிப் பொறுப்புகளை மேற்கொள்ளும் பதிப்பக மேலாளர் இராம.குருமூர்த்தி அவர்களையும் மிகவும் பாராட்டுகிறேன். இதுபோன்று மேலும் பல நூல்களை வெளியிட நிறுவனத்தையும், எழுதிட ஆசிரியரையும் பாராட்டி எல்லாம் வல்ல கோவிலூர் அருள்மிகு திருநெல்லை உடனாய கொற்றவாளீசர் திருவடிகளை மனம் மொழி மெய்களால் வழுத்தி வாழ்த்துகின்றோம்.

ஓம் தத் சத் ஸ்ரீசற்குருநாதன் துணை



சிற்ப குரு, வாஸ்து விஞ்ஞானி

டாக்டர் வை.கணபதி ஸ்தபதி அவர்கள் வழங்கிய மதிப்புரை

தொல்லியல் அறிஞர் திரு.மா. சந்திரமூர்த்தி அவர்கள் எழுதிய **"நகரத்தார் மரபும் - பண்பாடும்"** என்ற நூலின் பிரதியினை என்னிடம் கொடுத்து அதற்கு மதிப்புரை அளிக்கும்படி என்னைப் பணித்தார். 500 பக்கங்கள் தாமே, விரைவில் படித்து மதிப்புரை அளித்து விடலாம் என்றெண்ணிப் படிக்கத் தொடங்கினால் அதிலேயே மூழ்கி என்னை முத்தெடுக்க வைத்துவிட்டார் நூலாசிரியர் திரு. மா. சந்திரமூர்த்தி அவர்கள்.

ஏராளமான விஷயங்கள், புள்ளி விவரங்கள், ஆராய்ச்சிக் குறிப்புகள் என ஓர் ஆய்வுக் களஞ்சியமாகவே புத்தகத்தை மாற்றி விட்டார். நகரத்தார் வாழ்க்கை முறையைப் பற்றி ஆராய்ச்சி மேற்படிப்புப் படிக்க எவரேனும் விரும்பினால் இப்புத்தகத்தை ஊன்றிப் படித்தாலே போதும். அவருக்குத் தேவையான அனைத்துச் செய்திகளும் கிடைத்து விடும்.

என் தந்தையார் திரு. வைத்தியநாத ஸ்தபதிக்கும், எனக்கும் நகரத்தாருடன் நீண்ட காலத் தொடர்பு உண்டு. என் தந்தையார் பிள்ளையார் பட்டித் திருக்கோயிலின் இராஜகோபுரப் பணியைச் செய்தவர். நானும் நகரத்தாருக்காக அனேக திருப்பணிகளைச் செய்து முடித்துள்ளவன் என்பதால் அச்சமூகத்தைப் பற்றி நன்றாக அறிந்தவன் எனப் பெருமையுடன் கூறிக் கொள்ள விழைகின்றேன்.

புத்தகத்தின் முதல் அத்தியாயத்திலேயே 'செட்டி' என்ற பெயரின் தோற்றம் 'செட்டு' என்ற சொல்லில் இருந்தோ அல்லது 'சிரேஷ்டி' என்ற வடமொழிச் சொல்லில் இருந்தோ வந்திருக்கலாம் என்பதில் தொடங்கி

நகரத்தார் என்று அழைக்கப்படும் அம்மக்களது பழக்க வழக்கங்கள், உணவு முறைகள், கோயில்கள், ஊருணிகள், இவர்களது அரண்மனைப் போன்ற இல்லங்கள், வாழ்க்கை முறை போன்றவற்றை விளக்கிக் கூறி இறுதியில் இறுதிச் சடங்கு செய்யும்வரை அனைத்தையுமே அருமையாக விளக்கியுள்ளார்.

அறப்பணியைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பட்டயங்கள், செப்பேடுகள், பற்றியும் நகரத்தாரது வாழ்வியல், மொழியியல், பற்றியும் சங்ககாலம் முதல் பாண்டியர் காலத்தில் மற்றும் ஐரோப்பியர் காலங்களில் நகரத்தாரது வாழ்க்கையைப் பற்றியும் சிறப்பாக விளங்கியுள்ளார்.

நகரத்தாரது ஒன்பது கோயில்களான இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, நேமம், இலுப்பைக்குடி, சூரக்குடி, வேலங்குடி, பிள்ளையார்பட்டி, இரணியூர் ஆகியவற்றின் கட்டட அமைப்பு, தெய்வ - மானுட வடிவங்களின் அமைப்பு, வாகனங்கள், சிற்ப மற்றும் ஓவியப் பணிகள், தலவரலாறு போன்றவற்றைத் தனித்தனியாகக் கவினுற எழுதியுள்ளார்.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகியோரால் பாடப்பெற்ற தலங்களில் நகரத்தார் ஆற்றிய அறப்பணிகள் பற்றிக் குறிப்பிடுகையில் ஏராளமான கோயில்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். சீர்காழி, திருக்கடவூர், திருப்பராய்த்துறை, திருக்கடம்பூர், திருவாடானை, திருவண்ணாமலை, திருவான்மியூர் போன்ற கோயில்கள் மட்டுமின்றி இலங்கை, பங்களாதேஷ், பர்மா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, மொரிஷியஸ், இங்கிலாந்து போன்ற அயல் நாடுகளிலும் ஆற்றிய ஆலயப்பணிகள் பற்றியும் அழகுபட விளக்கியுள்ளார்.

தமிழ் வளர்ச்சிப் பணியில் நகரத்தார் பங்கு பற்றி விளக்குகையில் வெவ்வேறு தமிழ்ப் பதிப்பகங்களைப் பற்றி அருமையாக விளக்கி யுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தகுந்த சில பதிப்பகங்கள் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மணிமேகலைப் பிரசுரம், மணி வாசகர் பதிப்பகம், பாரி நிலையம், வானதி பதிப்பகம் போன்றவையாகும்.

நகரத்தாரது கட்டடக்கலை மாண்பு , கோயிற் திருப்பணிகள், அறக்கட்டளைகள், தீட்சா மடங்கள், அவர்களது புள்ளிமுறை பற்றிய விவரங்கள் ஆகியவற்றைப் புள்ளி விவரங்களுடன் சிறப்பாக விளக்கியுள்ளார்.

மேலும் நகரத்தார் அணியும் அணிகலன்கள், அவர்களது உணவு வகைகள் போன்றவைகூட இந்நூலுக்கு அழகு சேர்க்கும் அணிகலன்களாகும். உணவு வகைகளில் செய்முறை விளக்கங்களைக் கூடத் தெளிவாக எழுதியுள்ளார். அதிலும் நகரத்தாரது பிரத்யேக உணவான பால் பணியாரம், வெள்ளைப் பணியாரம் போன்றவற்றின் செய்முறை விளக்கங்களைப் படிக்கும் போதே நாவில் நீர் ஊறுகின்றது.

நகரத்தாரது உறவுமுறைப் பெயர்கள், வீடுகள் அமைப்பு, வட்டார வழக்குச் சொற்கள், குழந்தை பிறந்த உடன் சூட்டும் பெயர்கள், வாய்வழியாக வழங்கப்படும் இலக்கியங்கள் என்று பல தலைப்புகளில் 400 பக்கங்களில் நகரத்தார் வாழ்க்கை முறையை நமது கண் முன்னே படம் பிடித்துக் காட்டுகிறார்.

இந்நூல் **நகரத்தார் மரபின் சின்னம்.** அனைத்து மக்களும், குறிப்பாக ஒவ்வொரு நகரத்தாருமே படிக்க வேண்டிய மிகமிக அருமையான புத்தகம். வருங்காலத் தலைமுறையினர் தாம் தோன்றிய பெருமை மிக்க சமூகத்தைப் பற்றி அறிய உதவும் புத்தகமும்கூட. புத்தகத்தின் பின்னே அறிஞர் திரு. மா. சந்திரமூர்த்தி அவர்களது கடின உழைப்புத் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. திரு. சந்திரமூர்த்தி அடிப்படையில் ஒரு நல்ல கலைஞர் - கலை நூலாசிரியர் - தொல்கலை வல்லுநர். ஒரு சிற்பியின் கையில் உள்ள சிற்றுளி ஆற்றலைப் போல, ஓவியனின் கையில் உள்ள தூரிகையைப் போல இவரது எண்ணமும், எழுதுகோலின் வலிமையும், இந்நூலைத் தந்துள்ளது. உண்மையான படைப்பாளி சிற்பியாகவும், ஓவியனாகவும், கலைஞனாகவும், கவிஞனாகவும் பிணைந்து ஒருங்கிணைந்த குணம் கொண்டவனாக இருப்பான். அப்படி இல்லாத ஒருவனால் உண்மையான படைப்பை உருவாக்க முடியாது. அந்த வகையில் கால் நூற்றாண்டுக்கு மேல் தம்மை முழு மனத்துடன் ஈடுபடுத்திக்கொண்டு தொடர்ந்து ஆய்வுப் பணிகளைச் செய்து வரும் இவரை **'தொல்லியல் சிற்பி'** எனப் பாராட்டலாம்.

இந்தப் புத்தகத்தைப் படித்து முடித்ததும் ஒவ்வோர் இனத்தாரைப் பற்றியும் இதே போல் விளக்கமாக அவர் எழுதலாமே என்று எண்ணத் தோன்றுகிறது. விசுவகர்மர்கள், சிவாச்சாரியார்கள் என்று பல இனத்தவரைப் பற்றியும் அவர் எழுத வேண்டும் என அன்புக் கட்டளையிடுகிறேன். வாழ்க திரு. சந்திரமூர்த்தி! வளர்க அவரது இலக்கியப் பணி!!

நகரத்தார் மரபில் தோன்றிய தெய்வத்திரு. ச. மெய்யப்பனார் அவர்களால் நிறுவப்பெற்ற மெய்யப்பன் பதிப்பகம் நகரத்தார் பற்றிய இந்நூலை வெளியிட்ட பெருமையைப் பெறுகிறது.

இந்த அருமையான நூலுக்காகத் திரு. சந்திரமூர்த்தி அவர்களுக்கு நகரத்தார் சமூகத்தினர் அனைவரும் ஒன்று திரண்டு பாராட்டு விழா நிகழ்த்திப் பரிசளித்துக் கௌரவிக்க வேண்டும் என நகரத்தார் சமூகத்தினருக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

ஆசிரியர் உரை

நகரத்தார்கள் நாக நாட்டில் சாந்தியாபுரியிலிருந்து தொண்டை நாட்டின் தலைநகரான காஞ்சிபுரத்திற்கு வந்ததாகச் செவி வழிச் செய்தி கூறுகிறது. பின்னர் மீண்டும் புகார் நகரம் திரும்பி சோழ அரசர்களுக்கு முடி சூட்டும் உரிமை பெற்று **மகுட தன வைசியர்கள்** ஆனார்கள். இவர்கள் புகார் நகரில் வாழ்ந்த காலமே கோவலன் - கண்ணகி காலமாகும். இதற்குச் சான்றாக,

"நாக நீள் நகரொடு அதனொடு
போக நீள் புகழ் மன்னும் புகார் நகர்அதுதன்னில்"

என்ற சிலப்பதிகார வரிகளைக் கூறலாம். இப்படி மன்னர் பின் மரபினோராக விளங்கிய வைசியர்களிடம் மன்னர்களுக்குப் பொறாமை ஏற்பட்டது. அதன் காரணமாக மீண்டும் புகார் நகரம் விட்டுப் பாண்டி நாடு வந்தனர். அவ்வாறு வந்த இவர்களுக்கு மன்னனால் வளமற்ற பகுதிகள் வழங்கப்பட்டது. அதனைத் திருத்தி ஊருணிகளையும், கண்மாய்களையும் ஏற்படுத்தியது 'முயற்சி திருவினையாக்கும்' என்ற மாண்பையே புலப்படுத்துகிறது. இதனையே பாடுவார் முத்தப்பர் தம் பாடலில் **'ஊருணிகள் கூபமிவை உண்டு பண்ணிப் பாரினில் படைத்திட்ட சத்புருஷர்'** எனக் குறிக்கிறார். இவ்வாறு வாழத் தொடங்கிய வைசியர்கள் இளையாத்தங்குடி நகரத்தில் வசித்ததால் **நகரத்தார்கள்** எனப்பெற்றனர்.

இயற்கையாகவே சிற்பக்கலையில் இருந்த ஆர்வம், சைவத்தில் இருந்த பற்றுக் காரணமாகத் தாம் வாழ்ந்த இளையாத்தங்குடியில் முதல் கோயிலை எழுப்பினர். இவ்விதம் வாழத்தொடங்கிய நகரத்தார்கள் பின்னர் பொருள் தேடுவதற்காக அயல்நாடுகளுக்குச் சென்றனர். அங்குச் சென்று பொருளீட்டித் தம் ஊர்களுக்குத் திரும்பினர். இங்கு நகரில் கோட்டை போல் வீடுகளைக் கட்டி வாழத்தொடங்கினர். இதன் பின்னர் இவர்கள் **நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்** என அழைக்கப்பெற்றனர்.

இன்று நாம் நடைமுறையில் காணும் அனைத்து வங்கி முறைகளுக்கும் நகரத்தார்களே முன்னோடி என்பது நாம் பெருமை கொள்ளத் தக்கதாகும். வங்கியியல் மட்டுமின்றிப் பல முன்னணித் தொழில் நிறுவனங்களும் இவர்களின் முயற்சியால் தொடங்கப்பெற்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். தொழிலில் 'வேறு யாரும் செய்ய முடியாத ஒரு சிறந்த பண்பை இவர்களிடம் மட்டுமே காணமுடிகிறது. தமது தொழிலில் நகரக்கோயில் இறைவனையும் ஒரு பங்குதாரராகச் சேர்த்துக்கொண்டு, வரும் இலாபத்தில் இறைவனுக்கும் ஒரு பங்கு ஒதுக்கி அதனை ஊருக்கு வரும்போது இறைவனுக்கு அளிப்பது வேறு யாரிடமும் காண முடியாதது. அதேபோல் திருமணத்தையும் கட்டாயமாகக் கோயிலில் பதிவு செய்யும் இவர்களது

வரன்முறையும் வேறு எங்கும் காண முடியாதது. எத்தனை தூரத்தில் இருந்தாலும் தமது தெய்வங்களையும், முன்னோர்களையும் ஆண்டுக்கு ஒரு முறை சொந்த ஊருக்கு வந்து வழிபடும் உயர்ந்த பண்புடையவர்கள். பொதுவாக நகரத்தார்கள் ஈடுபடாத தொழிலே இல்லை எனலாம். தொழில் நிலை மட்டுமின்றிக் கல்வியும் இவர்களால் வளர்ந்தது என்றால் மிகையில்லை. தமிழும் சைவமும் இவர்களுக்கு இரு கண்களாகவே இருந்தன. அன்றாடப் பேச்சு வழக்கில் தனித்தமிழ்ச் சொற்களும், இலக்கியச் சொற்களும் இடம் பெறுவது இவர்களின் சமூகத்தில் மட்டுமே.

திட்டமிடுதல், முடிவெடுத்தல், வினை முடித்தல் என்று ஒரு பெரும் போக்கை மாறாது கடைப்பிடிக்கும் இச்சமூகம் பல தமிழறிஞர்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளித்துள்ளது.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் காப்பியக் காலமான சிலப்பதிகாரக் காலத்திலிருந்தே வழிவழியாய் ஓர் இனம் அதே மதிப்புடன் விளங்கி இருக்கிறது என்றால் அது நகரத்தார் இனம் மட்டுமே. நீண்ட நெடிய பாரம்பரியம் உடைய நகரத்தார் சமூகத்தின் பதிவுகள், பண்பாட்டுக் கூறுகள் காலத்தினால் அழிக்க முடியாதவை ஆகும்.

பல நிலைகளில், பல துறைகளில், பல வழிகளில் நாட்டை வளப்படுத்திய சமூகம் நகரத்தார் சமூகம். அரசியல், ஆன்மிகம், கல்வியியல், சமூகம், தமிழ், இசை, கலை, பண்பாடு, பொருளியல் என்று பல துறைகளில் நிகழ்த்திய சாதனைகள் பல.

தமிழ் மரபுகளைத் தலைமுறை தலை முறையாகக் காத்து வரும் சமூகத்தின் மரபும் பண்பாடும் மகத்தானவை. இச்சமூகத்தின் தொடக்கமும் - தோற்றமும், வாழ்வும் - வளர்ச்சியும் அளவிடற்கரியன. அவை விரிப்பின் பெருகும். தொகுப்பின் மிஞ்சும். எனினும் இவற்றை மூலச் சான்றுகளான இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு, வரலாறு, வாய்மொழி இலக்கியம், அயல்நாட்டுச் சான்றுகள், ஆவணங்கள் போன்ற சான்றுகளின் அடிப்படையில் தொல்லியல் நோக்கில் ஆய்வு நூல் ஒன்றைத் தொகுத்தளிக்க வேண்டும் என்பது பதிப்புச் செம்மலின் விருப்பம். கடந்த கி.பி. 19 - ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் அவ்வப்போது ஒருசில அடிப்படை நூல்களும், செட்டி நாட்டு மலர்களில் அறிஞர் பெருமக்களின் ஆய்வுக் கட்டுரைகளும் வெளி வந்துள்ளன.

நான் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் மதுரை - இராமநாதபுரம் மாவட்ட பதிவு அலுவலராக 1976 - 1986 வரை பணியாற்றிய காலத்தில் செட்டி நாடு உள்ளிட்ட இராமநாதபுர மாவட்டத்தை முழுவதும் பார்வையிட்டு ஆய்வு செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. குறைந்த எண்ணிக்கையே உள்ள இச்சமூகம் அளவிடற்கரிய ஆலயப்பணி, சமுதாயப்பணி இரண்டையும் இரு கண்களாகப் போற்றி முன்நிற்பது எனக்குள் அவர்களைப் பற்றி எழுத வேண்டும் என்ற அடிப்படை ஆர்வத்தைத் தோற்றுவித்தது. இதுநாள் வரை கோயில்

வரலாறு. அதைச் சார்ந்த கோயிற்கலைப் பண்பாடு மட்டுமே எழுதி வந்த, பூம்புகார் நகரத்தைச் சார்ந்த எனக்குப் பூம்புகார் நகரத்தையே பூர்வீகமாகக் கொண்ட சமூகம் காலம் காலமாகக் காத்து வரும் மரபையும், பண்பாட்டையும் விரிவாக எழுதிப் பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை மலரச் செய்தது. அந்த எண்ணமே இப்போது நூலாக வெளிவருகிறது.

தந்தையார் விட்டுச் சென்ற அரும்பணியைக் கருத்தோடும் கவனத்தோடும் தொடர்ந்து செயலாற்றி வருகின்றவர் மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் திரு. ச. மெ. மீனாட்சி சோமசுந்தரம் அவர்கள். இந்நூலைச் சிறப்பாக வெளியிட அவருக்கும் எனக்கும் துணை நின்றவர் மணிவாசகர் பதிப்பக மேலாளர் இளவல் இராம.குருமூர்த்தி அவர்கள். இவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி.

இந்நூலுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் மகுடமென அணிந்துரை நல்கிய தவத்திரு கோவிலூர் ஆதீனம் சீர்வளர் சீர் நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் அவர்களுக்கும், மதிப்புரை நல்கிய சிற்ப குரு, வாஸ்து விஞ்ஞானி டாக்டர். வை. கணபதி ஸ்தபதி அவர்களுக்கும் என் பணிவான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைச் செட்டிநாட்டுப் பகுதிக்கு அறிமுகப்படுத்தியவர் அறிஞர் பெருந்தகை 'கம்பன் அடிப்பொடி' **சா. கணேசனார்** ஆவார்கள். செட்டிநாடு பற்றி என்னைத் தொல்லியல் நோக்கில் எழுதத் தூண்டிய பெருமகனார் **அறிஞர் சோமலெ** அவர்கள். என் வாழ்நாள் பணியாக நகரத்தார் கோயில்கள், செட்டிநாட்டுச் சிவாலயங்கள், செட்டிநாட்டுச் சிற்பங்கள், செப்புச் சிலைகள், செட்டிநாட்டு நகரத்தார் மரபும் - பண்பாடும் என நூல்கள் எழுதி வரும் எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து நூல்களை வெளியிட்டுச் செட்டிநாட்டுப் பகுதியில் என்பெயர் அறியச் செய்தவருமான பதிப்புச்செம்மல் தமிழவேள் டாக்டர் **ச. மெய்யப்பனார்** அவர்களுக்கு எனது அன்பும், நன்றியும் உரியது. இம்மூவரையும் என்றும் வணங்கி மகிழ்கிறேன்.

மேலும் கலந்துரையாடியபோது கருத்துரை நல்கிய மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார், தமிழ்ப்பேரறிஞர் டாக்டர். தமிழண்ணல், அறிஞர். சுப. அண்ணாமலை, கவிஞர். நாரா. நாச்சியப்பன், டாக்டர். ஆறு. அழகப்பன், டாக்டர். வ. தேனப்பன், பழ. அண்ணாமலை, திருமதி. அன்னபூரணி ஆச்சி, திருமதி. சீதா சிதம்பரம், டாக்டர் வள்ளி சொக்கலிங்கம், டாக்டர். சு.இராஜகோபால், டாக்டர் நா. அழகப்பன், டாக்டர் நாகப்பா நாச்சியப்பன் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலின் ஆக்கப்பணிக்கு அடிப்படையாக டாக்டர் S.சந்திரசேகர் அவர்களது The Nagarathars of South India, சதாவதானி சுப்பிரமணிய

ஐயரின் தனவைசியராகிய நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, வயிநாகரம் அ.இராமநாதன் செட்டியாரின் நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, திரு. வரகூர். சேஷாத்திரி சர்மா அவர்களது நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, சோமலெ அவர்களின் தமிழ் நாட்டு மக்களின் மரபும்-பண்பாடும், செட்டிநாடும் செந்தமிழும், பழ. அண்ணாமலை அவர்களின் நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், டாக்டர் ச. மெய்யப்பன், கரு. முத்தையா - சபா. அருணாசலம் அவர்களின் நகரத்தார் கலைக் களஞ்சியம் என இந்நூலின் செம்மைக்கும் - தெளிவிற்கும் பல நிலைகளில் உதவிய நூலாசிரியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல்களைப் படைக்கப் பின்புலமாக விளங்கி வரும் எனது துணைவியார் திருமதி.ச. இலட்சுமி அவர்களுக்கும், ஒத்துழைப்பு நல்கிய எனது மகள் திருமதி திலகா பொற்செல்வன், மகன்கள் சுந்தர பாண்டியன், விஷ்ணுவர்த்தன் ஆகியோருக்கும் எனது அன்பும் ஆசியும் உரித்தாகுக.

இந்நூல் உருவாக்கப் பணிக்காகப் பல நூலகங்கள் சென்று தொடர்பான பல தகவல்களைச் சேரித்து, இந்நூலை உருவாக்கும் பணியில் தொடக்கக் காலத்திலிருந்து இறுதிவரை உடனிருந்து ஒத்துழைப்பு நல்கிய திருமதி. ச. சூர்யா அவர்களுக்கு எனது அன்பும் ஆசியும்.

'மலரும் மணமும் இணைந்தது போல' என்பது உலக வழக்கு. அதுபோல மலர் போன்ற இந்நூலுக்கு மணம் போன்ற, ஒன்றோடு ஒன்று இயைந்த உயிரோட்டமான வண்ணப் படங்களை அளித்தவர் என் நண்பர் ஒளிப்படக் கலைஞர் திரு. வை. முத்துராமன் அவர்கள். அவருக்கு எனது அகங்கனிந்த நன்றியைக் கூறிக்கொள்ள விழைகிறேன்.

உலகத்தின் மிகவும் சிறிய தொகையினரான ஒரு மரபினர் மிகப்பெரும் அளவில் அறப்பணிகளையும் திருப்பணிகளையும் செய்துள்ளது பற்றி ஓர் ஆய்வு செய்தால் அதில் முதல் இடத்தை நகரத்தார் சமூகத்தினர்தாம் பெறுவார்கள். அவர்களது மரபையும் பண்பாட்டையும் பல கல்வெட்டுகள், பல பட்டயங்கள், பல சுவடிகள், பல காகித ஆவணங்கள், பல நூல்கள், பல தேடல்கள், பல மக்களின் கலந்துரையாடல்கள், பல கள ஆய்வுகள், பல விவரங்கள், பல சேகரிப்புகள் என அனைத்தையும் ஒருங்கிணைத்து இந்நூலை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் நான் முழு மனநிறைவு அடைகின்றேன். கடந்த 33 ஆண்டுகளாக எனது வாழ்நாள் முழுவதும் நூலாக்கப் பணியில் ஈடுபடுவதற்குக் காரணமான வாசக அன்பர்களுக்கும் நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

அன்புடன்,

மா. சந்திரமூர்த்தி.



திருமகள் துதி

காடு வெட்டிப் போட்டுக்
கடிய நிலம் திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும்
வேள்வணிகர் - வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா
இலக்குமியே என்றைக்கும் நீங்கா திரு.

– பாடுவார் முத்தப்ப செட்டியார்

உள்ளுறை

ந-2

1. நகரத்தார்களின் மரபும் - பண்பாடும்

ஆசியக் கண்டத்தில் தெற்கு நோக்கி நாக்கு போல் துருத்திக் கொண்டு விளங்கும் நம் இந்தியா, ஆசியாவின் பிறபாகங்களிலிருந்து மலைகள், கடல்களால் துல்லியமாகக் காட்டப் பெற்று, ஒதுக்கப்பட முடியாத பூகோள ஒற்றுமை, கலாச்சார வேறுபாடுகள் போன்ற முத்திரை பதிந்தும் விளங்குகிறது.

இந்நாட்டின் வடக்கே பனி போர்த்திய இமாலயம் எல்லையாகவும், தெற்கே குறுகித் தென்கிழக்கில் வங்காள விரிகுடாக் கடல், தென்மேற்கே அரபிக்கடல் போன்றவை அமைந்து உள்ளன. வங்காள விரிகுடாக் கடலில் உள்ள அந்தமான், நிக்கோபார் தீவுகள், அரபிக்கடலின் இலட்சத்தீவுகள் (லக்கடிவ், மினிகாய், அமின்திவ் தீவுகள்) போன்றவையும் இந்திய நாட்டின் ஒரு பகுதியே.

இந்தியாவின் நில எல்லையின் நீளம் 9425 மைல்கள் (15,200 கி.மீ). அதாவது பூமியின் குறுக்களவை விடக் கூடுதலானது. கடற்கரை நீளமோ 3535 மைல்கள் (6053கி.மீ). ஐக்கிய அமெரிக்காவில் பசிபிக் கடலிலிருந்து அட்லாண்டிக் கடல் வரை உள்ள தூரம்.1.2 மில்லியன் சதுர மைல்கள். அதாவது 32,80,483 ச.கி.மீ. பரப்புக் கொண்டு விளங்கும் இந்தியா, அலாஸ்கா தவிர்த்த ஐக்கிய அமெரிக்கா பரப்பினில் மூன்றில் ஒரு பங்கு கொண்டது. இந்தியா, வடக்கே காஷ்மீரத்திலிருந்து, தெற்கே குமரி வரை 3218 கி.மீட்டரும், மேற்கே குஜராத்துக் கச்சிலிருந்து, கிழக்கே அஸ்ஸாம் கொஹிமா வரை 2977 கி.மீட்டரும் நீண்டது. உலகிலேயே இந்தியா மக்கள் தொகையில் இரண்டாவது இடத்தையும், பரப்பளவில் ஏழாவது இடத்தையும் கொண்டுள்ளது. பரப்பளவில் அதிக அளவு கொண்ட முதல் ஆறு தேசங்கள் சோவியத் யூனியன், கனடா, சீனா, பிரேசில், ஐக்கிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகும்.

தமிழ்நாடு

கூட்டு சுயாட்சி கொண்ட இந்நாடு அரசு மற்றும் பிற அலுவல் களுக்காக ஏறக்குறைய மொழிவாரியாக பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உலகின் பல பாகங்களில் தென் பகுதி வடபகுதியிலிருந்து வித்தியாசப்பட்டு ஒரு தனித்தன்மையும், கலாச்சாரமும் கொண்டே விளங்குகிறது. இதற்கு இந்தியாவும் விதிவிலக்கன்று. இந்தக் கலாச்சார மாறுபாடு இன, மொழி, சீதோஷ்ண வித்தியாசங்களால் ஏற்பட்டவையே. அயல் நாட்டுப்

படையெடுப்புகளின் அலைகள் வட திசையை ஆட்டிப் படைத்ததோடு சிலர் நிரந்தரமாகக் குடியேறவும் நேர்ந்தது. தென்திசையிலோ அத்தகைய கடைசிப் படையெடுப்பு (ஐரோப்பியர்) 1639-இல் சென்னையில் உதித்தது என்பது உண்மையாயினும் பிற வெளி மாநிலத்தவர் தெற்கே புகவில்லை; அல்லது புகுந்த போது வலிமை இழந்தவர்களாகத் தான் இருந்தனர். இந்த அதிர்ஷ்டமான வரலாற்று நிகழ்ச்சி அரசியல் உறுதிப்பாட்டையும், தென்னிந்தியாவில் ஒரு தனிப்பட்டதும் மேம்பாடு கொண்டதுமான கலாச்சாரத்தைத் தோற்றுவித்தது. இதைப் பொதுவாகத் திராவிடம் எனலாம்.

இந்த நான்கு திராவிடத் தென்னிந்திய தேசங்களில் (கேரளம், கருநாடகம், தமிழ்நாடு, ஆந்திரம்) சென்னை அதாவது மொழிப்படி தமிழ்நாடு திராவிட தென்னிந்தியாவில் கலாச்சார மொழி வளங்களின் சிகரமாகத் திகழ்ந்தது.

இந்நான்கு தனிப்பட்ட தென்மொழிகளில் (மலையாளம், கன்னடம், தமிழ், தெலுங்கு) தமிழே சிறந்த மொழியாகும். ஏனெனில் இது வடக்கு இந்தோ - ஆரிய (ஹிந்தி) மொழிகளோடு பிணைப்பு அற்றது. மேலும் மற்ற மூன்றைக் காட்டிலும் சமயம் மற்றும் மதச் சார்பற்ற இலக்கியங்களின் பெருமையும்,பழைமையும் கொண்டது. அறிஞர்கள் சிலர் தமிழ்மொழி வடமொழியைக் காட்டிலும் புராதன மானது என்றும் இப்பொழுது வழக்கத்திலிருக்கும் இந்திய மொழிகளுக் கெல்லாம் தாய் என்றும் நம்புகின்றார்கள். இப்படி இந்தியாவிற்கு இரு கலாச்சாரங்கள் உள்ளன. வடக்கு - இந்து ஆரியன், தெற்கு - இந்து திராவிடன். இவர்களின் தனிப்பட்ட ஆடை, உணவு, சமுதாய அமைப்பு ஆகியவற்றால் வாழ்வில் பெருத்த வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பிரிட்டிஷார் காலத்தில் மலபாரிலிருந்து (கேரளா) ஒரிஸ்ஸா (இன்று தனி ஒரியா பேசும் நாடு) வரை பரவிக்கிடந்த சென்னை மாகாணத்திலிருந்து இன்றைய தமிழ்நாடு தோன்றியிருக்கிறது. சென்னை மாகாணம் முதலில் ஒரிஸ்ஸாவை இழந்தது. பின்னர் இதிலிருந்து ஆந்திரப்பிரதேசம் துண்டிக்கப்பட்டது. இன்று கேரளாவில் உள்ள திருவாங்கூர் பிரதேசத்திலிருந்து சிறு பாகங்களான கன்னியாகுமரி, நாகர்கோயில் ஆகியவற்றை இணைத்துத் தமிழ் பேசும் மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. நிருவாக வசதிக்காக இது மேலும் பல வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் பரப்பளவு 50,490 ச.மைல்கள் அதாவது 1,30,069 ச.கிமீட்டராகும்.

⌘ ⌘ ⌘

உ. வரலாற்று வழியில்

பண்டைய தமிழகத்தில் பிராமணர் சார்புடைய சபைகளும், விவசாயிகள் சார்புடைய நாடு-ஊர் அமைப்புகளும், வணிகர்கள் சார்புடைய நகர அமைப்புகளும் இருந்தன. இவர்கள் தங்களைச் **சபையார், நாட்டார் - ஊரார், நகரத்தார்** என்று அழைத்துக் கொண்டனர். இக்குழுக்களின் முடிவுகளே பண்டைய சமூகத்தின் நெளிவு, சுழிவுகளை நிருணயிப்பவையாக இருந்தன. இன்றும் செட்டிநாட்டுப் பகுதியில் கிராமக் கோயில்களில் **'காளாஞ்சி மரியாதை'** தரும்போது முதலில் பிராமணர்களுக்கு வழங்கிய பிறகு **நாட்டார், நகரத்தார், ஊரார்** என்று அழைத்து வழங்கும் மரபு உண்டு. குழந்தைகளைத் தங்கள் கால்களில் வைத்து ஊஞ்சலாட்டும் பெரியவர்கள் **'ஊஞ்சாலே, ஊராலே, நாட்டாலே, நகரத்தாலே'** என்று சொல்லி ஊஞ்சலாட்டும் வழக்குள்ளது.[1] இவை அண்மைக்காலம் வரை இக்குழுக்கள் வழக்கில் இருந்ததைக் காட்டுகின்றன.

தமிழகத்தில் உள்ள 2,300 ஆண்டுகளுக்கு முற்பட்ட அழகர்மலைக் கல்வெட்டில் **பொன் வணிகர், துணி வணிகர், சர்க்கரை வணிகர், கொழு வணிகர்** பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கரூர் - புகளூர் கல்வெட்டுகளில் **பொன் வணிகன், எண்ணெய் வணிகன்** ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர்.[2] புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள கருக்காகுறிச்சியில் 2000 ஆண்டுகளுக்கு முன் ரோமாபுரி அரசனால் வெளியிடப்பட்ட தங்க நாணயங்கள் கிடைத்திருப்பது அக்காலத்திலேயே இங்கு வாணிகம் நடைபெற்றதைத் தெரிவிக்கிறது. 2,300 ஆண்டுகளுக்கு முற்பட்ட மீனாட்சிபுரம் கல்வெட்டில் **'நிகமம்'** என்ற வணிகர்களின் குழு பற்றிய செய்தியுள்ளது. எனவே தமிழகத்தில் வரலாற்றுத் தொடக்க காலத்திலேயே விவசாயப் பொருள்கள் மற்றும் தொழில் உற்பத்திப் பொருள்கள் விற்கும் வணிகர்கள் தோன்றிவிட்டார்கள் என்றும், அவர்களிடையே குழு அமைப்புகள் தோன்றிவிட்டன என்றும் அறிகின்றோம்.

---

1. மா.சந்திரமூர்த்தி, வயிரவன் கோயில், மணிவாசகர் பதிப்பகம், 1996, பக் – 17.
2. Iravatham Mahadeven, Corpus of Tamil Brahmi Inscriptions, Seminar on Inscription,(Ed.) R. Nagaswamy, 1966. pp 57 - 73.

வணிகர் குழுக்கள் வடமொழியில் **'நிகமம்'** என்று அழைக்கப்பட்டன. தமிழில் **'சாத்து'** என்ற சொல் வணிகர் கூட்டத்தைக் குறிப்பதாக இருந்தது. சங்கப் புலவர்களில் பலர் **சாத்தன், சாத்தனார்** என்று பெயருடையவர்களாக இருந்ததும், பூம்புகாரில் பெரும் வணிகராகக் காட்டப்படும் கோவலனின் தந்தை, மாமன் முதலியோரும் **சாத்தன், மாசாத்தன்** என்று பெயர் பெற்றிருந்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். நகரத்தார்களிலும் **சாத்தப்பன்** என்ற பெயர் வழக்கு இன்றுமுள்ளது.

வாணிக நகரங்கள்

தமிழகத்தில் நகர் உருவாக்கம் இரண்டு காலகட்டங்களில் நிகழ்ந்தது. ஒன்று சங்ககாலம் தழுவியது. இக்காலகட்டத்தில் வாணிகம் வெளிநாடுகள் சார்ந்ததாகக் கடல் - கடற்கரையைச் சார்ந்ததாக அமைந்தது. இரண்டாவது நகர உருவாக்கம் விஜயநகரர் காலத்திற்குச் சற்று முன்பாகக் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் அமைந்தது. இக்காலகட்டத்தில் வாணிக நகரங்கள் பல கடற்கரையில் மட்டுமல்லாமல் உள் நிலப்பரப்புகளிலும் ஏற்பட்டன. இப்படித் தமிழகக் கடற்கரைகளிலும் உள்நாட்டிலும் வாணிக நகரங்கள் பல்கிப் பெருகின. **நகரம்** என்ற சொல் சமஸ்கிருதத்தில் **அகரம்** என்றசொல்லுக்கு எதிர்ச்சொல் ஆகும். ஆஸ்திகர் - நாஸ்திகர் என்பது போல அகரம் - நகரம் எனலாம். **அகரம்** என்பது பிராமணர்கள் குடியிருப்பாகவும், பிராமணர்கள் அல்லாத குடியிருப்பு **'நகரம்'** என்றும் பெயர் பெற்றிருக்கலாம்.[1]

கடல் சீற்றம்

நகரத்தார்கள் தங்களது பூர்வீகமாகக் காவிரிப்பூம் பட்டினத்தைக் குறிப்பிடுவர். இவர்கள் எப்பொழுது காவிரிப்பூம் பட்டினத்தை விட்டுத் தற்போதைய பகுதிக்கு இடம் பெயர்ந்தார்கள்? ஏன் இடம் பெயர்ந்தார்கள்? என்பது ஆய்வுக்குரியது. கடற்கரைப் பகுதியிலிருப்பவர்கள் உள்நாட்டிற்குக் குடிபெயர்வதற்குக் கடலின் சீற்றமும் ஒரு காரணமாகும்.

கடலகழாய்வு

அண்மையில் காவிரிப்பூம்பட்டினத்தில் நிகழ்ந்த கடலகழாய்வு களின் மூலம், ஒரு பெருநகரைக் கடல் தன்னுள் கொண்டுள்ளது வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது.[2] **'இயற்கைச் சீற்றம் - அச்சீற்றம் சீர் பெற்றமை'** குறித்த ஆய்வுகளில் கடைசியாக இவ்வித

1. மா.சந்திரமூர்த்தி, வயிரவன் கோயில், இரண்டாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், 2003, பக், 18 – 19.

2. The Results of the Under sea Exploration off shore of Pumpuhar, published on 29.9.1994, Madras.

இயற்கைச் சீற்றம் ஏற்பட்டு அது சீர் பெற்றது கி.பி. 1433 - இல் என்று ஆய்ந்துள்ளனர். இச்சமயங்களில் கடலின் நீர்மட்டம் 10 மீட்டர் அளவிற்கு உயரும் என்று குறித்துள்ளனர். இச் சீற்றம் முழுமையாக ***1134*** ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் விண்கோள்களின் சேர்க்கையால் நிகழும் என்றும், ***567*** வருடங்களுக்கொருமுறை அரைவட்டச் சுழற்சியில் ஏற்படும் என்றும் குறித்துள்ளனர். அப்படிப் பார்க்கின்ற பொழுது வரலாற்றுக் காலத்தில் இந்த அரைவட்டச் சுழற்சி கி.பி. 1433, கி.பி. 866, கி.பி. 299, கி.மு. 268 ஆகிய ஆண்டுகளில் நிகழ்ந்திருப்பது தெரிகிறது. இவ்வாண்டுகளுக்கு முன்பாக அவர்கள் குடிபெயர்ந்திருக்கலாம்.

நகரத்தார் குடிபெயர்வு

குடிபெயர்வு நிகழ்ந்தது உண்மையென்று கொண்டால், கல்வெட்டு மற்றும் ஆவணச் சான்றுகளைக் கொண்டு நோக்கும் போது நாட்டுக்கோட்டை நகரத்தாரின் பாண்டிமண்டலக் குடிபெயர்வு கி.பி. 11-12 - ஆம் நூற்றாண்டு வாக்கில் நிகழ்ந்திருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் நகரத்தார்களின் ஒன்பது கோயில்களின் பெயர்களில் கி.பி. 11-12க்குப் பிறகு வந்த பிற்காலப் பாண்டிய மன்னர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

இளையாத்தங்குடியான குலசேகரபுரம்
மாற்றூரான வீரபாண்டியபுரம்
நேமமாகிய குலசேகரபுரம்
ஏழகப்பெருந்திருவான வீரபாண்டியபுரம் (வயிரவன் கோயில்)

இவற்றில் குலசேகரன், வீரபாண்டியன் என்ற பெயர்கள் இடைக் காலப் பாண்டியர்களுடையனவாகும். ஏனைய கோயிற் பெயர்களில்

சூரக்குடியான தேசிகநாராயணபுரம்
வேலங்குடியான தேசிகநாராயணபுரம்

என்று வரும் 'தேசி' என்ற பெயரும் இடைக்கால வணிகர் குழுக்களைக் குறிக்கும் பெயராகும்.

வணிகர் குழுக்கள்

இடைக்காலத்தில் ***மணிக்கிராமத்தார், நாநாதேசிகள், திசைஆயிரத்து ஐந்நூற்றுவர், நகரத்தார், அஞ்சுவண்ணத்தார்***[1], ***எறிவீரப்பட்டணத்தார், சித்திரமேழிப் பெரிய நாட்டார், பதினெண் விசயத்தார், அய்யப்பொழிலார்*** என்று பல்வகையான வணிகர் குழுக்கள் இருந்துள்ளன. அவ்வெவ்வேறு வணிகர் குழுக்களில் நாட்டுக் கோட்டை நகரத்தார் ஒரு சிலக்குழுவில் இருந்தனர் என்பதை அறிய சான்றுகள் உள.

---

1. டாக்டர்.கே.வி. இராமன், பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977, பக் 192 – 93.

இடைக் காலத்தில் பிரான்மலைக் கல்வெட்டுகளில் சித்திரமேழிப் பெரிய நாட்டார் என்ற வணிகர் குழுவினர் குறிக்கப்பட்டுள்ளனர். பிரான் மலைப் பகுதியில் இன்றும் அருவியூர் நகரத்தார் என்ற நகரத்தார் குழுவினர் உள்ளனர். இவர்களும் நாட்டுக்கோட்டை நகரத்தார் போலவே தங்களுள் உட்பிரிவுகளுடன் விளங்குகின்றனர். நகரத்தாரின் பிரிவுகளில் மாற்றூரில் உள்ள அரும்பாக்கூர் என்பதுபோலவே இவர்களிடையும் அரும்பாக்கூர் என்ற உட்பிரிவு உள்ளது. புதுக்கோட்டை அருகில் உள்ள திருவரங்குளம் கல்வெட்டுகளில் கூட ஒன்பது நகரத்தார்கள் மதிற் சுவரைத் திருப்பணி செய்ததாகச் செய்தியுள்ளது. எனவே இடைக்காலத்தில் நாட்டுக் கோட்டை நகரத்தார் போலவே மேலும் சில நகரத்தார்கள் ஒன்பது பிரிவுகளுடன் இருந்துள்ளனர் என்பது தெளிவு.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களது இசைப் பிடிமானத்தில் பொன், வெள்ளி, வெண்கலம், தரா முதலிய உலோகப் பொருள்கள் நன்கொடை கொடுத்தல் குறித்த விதிமுறைகள் நிருணயிக்கின்ற போது, 'சக்கரம் அறுபத்து ஒன்று' என்ற குறிப்பும் வருகின்றது. சக்கரம் என்பது விஜயநகரர் (கிபி.14-16- ஆம் நூற்றாண்டு) காலத்தில் வழக்கிலிருந்த ஒரு காசு ஆகும். விஜய நகரர் காலத்தில் திருமணக் கொடைகள் தொல்லை தருவனவாக இருந்தன. தமிழகத்தில் அங்கங்கு இவை நெறிப்படுத்தப்பட்ட செய்திகளைக் கல்வெட்டுகளின் மூலம் அறிகின்றோம். வேலூர் அருகில் விரிஞ்சிபுரத்திலும், காரைக்குடி அருகில் கோயிலூரிலும் உள்ள கல்வெட்டுகள் பிராமண சமூகத்திடையே ஏற்பட்ட இத்தகைய நெறிமுறைகளைச் சொல்கின்றன. எனவே இக்காலகட்டத்தில் நாட்டுக் கோட்டை நகரத்தாரிடையேயும் இவ்வித நெறிமுறைகள் ஏற்பட்டு இசைப்பிடிமானம் எழுதும் வழக்கு நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

நகரத்தாரும் நானாதேசிகரும்

வாணிகத்துறையில் தலைசிறந்துவிளங்கியவர்கள் நகரத்தார் என்னும் வகுப்பினர் ஆவர். சிறிய ஊர்களிலும் பெரிய நகரங்களிலும் இருந்துகொண்டு வாணிகத்தை நடத்தி வந்தனர். இவர்கள் தம் வாணிகத்தொழிலைத் திறம்பட நடத்திக் கொண்டு ஈட்டிய பொருளில் கோயில் திருப்பணிகள் போன்ற பொதுநலக் காரியங்கள் செய்வதில் சிறந்த தொண்டு புரிந்தனர். [1]

சோழர் காலத்திற்கு முன்பே பாண்டிய நாட்டில் இது இயங்கியது எனலாம். திருமெய்யம் வட்டத்திலுள்ள முனிச்

1. டாக்டர்.கே.வி. இராமன், பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977,பக் 192 – 93.

சந்தையில் இக்குழு இயங்கியதை அங்குள்ள 9 - ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. அதன் பெயரால் ஒரு குளம் வெட்டப்பட்டது. அதை பராமரிக்க மூலதனம் வைத்துக் கட்டளை ஏற்படுத்தப் பட்டது. கி.பி. 1033 - இல் இக்குழு அம்பா சமுத்திரத்திலுள்ள சிவன் கோயிலுக்கு நிலங்கள் அளித்துள்ளது.

உக்கிரன்கோட்டையில் இராசசிங்கப் பேரங்காடி என்னுமிடத்தில் நகரத்தார்கள் பலர் வியாபாரம் செய்ததை ஒரு பழைய கல்வெட்டு தெரிவிக்கின்றனது. அவ்வூரிலுள்ள ‘வடவாயில் அமர்ந்தாள்’ கோயிலுக்கு ஐந்நூற்றுவர் குழுவைச் சேர்ந்த நகரத்தார் ஒருவர் கட்டிய திருச்சுற்றாலைக்கு **‘நகரத்தார் திருச்சுற்றாலை’** என்று பெயரிடப்பட்டிருந்ததை 9 - ஆம் நூற்றாண்டு கல்வெட்டு தெரிவிக்கிறது.[1] இராமநாதபுரம் மாவட்டம் பிள்ளையார் பட்டியில் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டொன்று பாண்டிய நாட்டில் பல ஊர்களில் குடியேறியுள்ள நகரத்தாரைப் பற்றிக் கூறுகிறது. எறுக்கன்குடியில் நகரத்தார் வசித்த வீதி ஐந்நூற்றுவப் பெருந்தெரு என்று வழங்கப்பட்டது. இதனைப் பிள்ளையார்ப் பட்டியில் உள்ள திருவீங்கைக்குடி மகாதேவர் கருவறைத் திருவாயிலுக்கு வலப்புறச் சுவரில் உள்ள கல்வெட்டு கூறுகிறது.

ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீ மேற்கித்துக்குமேல் திரிபுவன சக்ரவத்
திகள் எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீ குலசே
சகர தேவற்கு யாண்டு 18 வது மாசி மாதம்கேர
ளசிங்க வளநாட்டு அதளையூர் நாட்டு நாட்
டவரும், கல்வாயில் நாட்டுக் கீழ்வகை நாட்டு
நாட்டவரும், கீழ் [க்] குண்டாற்று நாட்டவரும் காந
நாட்டு [ணென்] காரிகுடி ஐஞ்நூற்றுவப் பெருந்செ
தருவில் நகரத்தாற்குப் பிடிபாடு பண்ணிக்கு
டுத்த பரிசாவது இவர்கள் கீழ் [க்] குண்டாற்றுமரு
தங்குடி ஊரரார் பக்கல் விலை கொண்டுடை
டய மருதங்குடி வயல் முன்னாள் அளந்த
புரவுக்கு வரிசை நீக்கி நாலு மாப்புரவுக்
கு நாட்டு விழுக்காட்டுப்படி இறை குடிமை
கொள்ளக் கடவதாகவும் இப்படிக்கு இப்பற்
றுக்கு இவ்வூர் தாங்களே கோயிலிற் திருமலை
யிலே கல்வெட்டிக் கொள்வதாகச் சம்மதி
த்துப் பிடிபாடு பண்ணிக் குடுத்தோம் அத
ளையூர் நாட்டு நாட்டவரும் கல்வாயில் நா
ட்டு நாட்டவரும் கீழ் குண்டாற்று நாட்டவ

1.K.A.Nilakanta sastri, The cōlas, 1995, p 596.

வரும் ஐஞ்நூற்றுவப் பெருந்தெருவில்
நகரத்தாற்கு மாதவராயர் தற்குறிக்கும்
இருங்கோளர் தற்குறிக்கும் நிலகங்கரைய
ர் தற்குறிக்கும் மாட் [டெ] டறிந்ததைக்கு தட
கைய .... த்து மெய்ய ரெழுத்து
இவை வல்லன் பெரியான் எழுத்து[1]

பிள்ளையார் பட்டியில் இவர்களது திசையாயிரத்தைந் நூற்றுவர் என்ற குழு இயங்கியது. சிவபுரியிலுள்ள கோயிலுக்கு ஆயிரத்தைந்நூற்றுவ ஈச்வரமுடையார் என்று பெயர் வழங்கப் பட்டது. அதற்கருகிலுள்ள அருவியூர் என்னும் ஊர் நானாதேசி உய்யவந்தான் பட்டணம் என்று வழங்கப்பட்டது. வாணிகக் குழுக்கள் பல கோயில்களைப் பராமரித்து வந்தன. அவர்களுக்குச் சில விசேஷ இறை அல்லது கட்டணங்கள் வசூலிக்க அதிகாரம் இருந்தது. மாறவர்மன் முதலாம் குலசேகரன் காலத்தில் (14 - ஆம் நூற்றாண்டு) திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் போன்ற பல வணிகக் குழுக்களின் பிரதிநிதிகள் ஒன்று கூடிக் கோயில் திருப்பணிகளுக்காக அவரவர் வியாபாரம் செய்த சரக்குகளின் தொகைக்கேற்ப கட்டவேண்டிய தொகையை நிருணயித்தது. பல ஊர்களில் தங்கியிருந்த நகரத்தார்களின் பிரதிநிதிகள் கீரமங்கலத்தில் ஒன்றுகூடி சில பொது நலக்காரியங்களுக்காக ஒவ்வொருவரும் அவர்களது வியாபாரத்திற்கேற்ப ஒரு கட்டணம் செலுத்த வேண்டியதை நிருணயித்துக் கொண்டனர். இச்செய்தியை 13 - ஆம் நூற்றாண்டு கல்வெட்டொன்று குறிக்கிறது. இதுபோன்ற மற்றொரு சமயம் இராமநாதபுரம் பகுதியிலுள்ள வணிகர் ஒன்றுகூடி அங்குள்ள ஒரு கோயிலைப் புதுப்பிக்கப் பல ஏற்பாடுகளைச் செய்தனர்.[2] அவர்களில் 'பதினெண் விஷயத்தார்'(பதினெட்டு நாட்டினர்) தென்இலங்கையைச் சேர்ந்த வளஞ்சியர், அஞ்சு வண்ணத்தார், மணிக் கிராமத்தார் என்ற வணிகக் குழுவினர் அடங்கியிருந்தனர் என்பது குறிக்கப்பட்டுள்ளது. வேலங்குடி, கொடும்பாளூர் போன்ற ஊர்களிலும் மணிக் கிராமத்தார் இயங்கியதை அறிகிறோம்.

மேலே குறித்துள்ள கல்வெட்டுச் செய்திகளிலிருந்து எப்படி பாண்டிய நாட்டில் நகரத்ததார் போன்ற வாணிகப் பெருமக்களும் அவர்களது சங்கங்களும் பரவலாகவும் திறம்படவும், இயங்கி வந்தன என்பது விளங்கும். உள்நாட்டிலும், கடல் கடந்த நாடுகளுடனும் அவர்கள் வாணிகம் செய்தனர்.

1. சா.கணேசன், பிள்ளையார்பட்டி தல வரலாறு, முதற்பதிப்பு, கற்பக விநாயகர் நகர விடுதி, பிள்ளையார்பட்டி, 1955, பக், 47 – 48.

2. Dr. K.V. Raman, Some aspects of Pandiyan History in the light of recent discoveries, *1972*, p 61.

இவர்கள் தென்னிந்தியா முழுவதிலும் மட்டுமின்றி கடல் கடந்து கிழக்கே மலேயா, சுமத்திரா, இலங்கை முதலிய நாடுகளிலும் வியாபாரம் செய்து வந்தனர். இவர்களது கல்வெட்டுகள் அங்கெல்லாம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நானா தேசிகர் என்றாலே பல தேசத்தவர்கள் அல்லது பல தேசத்துடன் தொடர்பு கொண்டவர்கள் என்று பொருள்படும். இக்குழுவிற்கு நீண்ட வரலாறும் உண்டு.[1]

சோழர் காலத்திற்கு முன்பே பாண்டிய நாட்டில் கடல் கடந்து சென்ற தலைவனின் பெயர் கி.பி. 3 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பூலாங்குறிச்சி கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பெருமக்களின் தொன்மையை அறியமுடிகிறது.

நகரத்தார் வரலாறு

இதுவரை பார்த்த செய்திகளிலிருந்து நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு மூன்று கட்டங்களைத் தாண்டி வந்துள்ளது என்பது தெளிவு.

1. சாத்தன் என்ற பெயர் முதலில் விளங்கிய சங்கம் மற்றும் சிலப்பதிகாரக் காலம். கி.பி. 1-3 ஆம் நூற்றாண்டு.

2. குலசேகரன், வீரபாண்டியன் என்ற பாண்டிய மன்னர்கள், தேசி என்ற வணிகர் குழுக்கள் நிலவிய இடைக்காலம். கி.பி. 11-13 ஆம் நூற்றாண்டு.

3. திருமண நெறிமுறைகள் வகுக்கப்பட்ட விஜயநகரர் காலம் கி.பி. 14-16 ஆம் நூற்றாண்டு. நாட்டுக்கோட்டை நகரத்தார் வாழ்வில் நான்காவது கட்டம் ஆங்கிலேயர் காலமாகும். கி.பி. 17-19 ஆம் நூற்றாண்டு. நகரத்தார்களிடையே இன்று காணப்படுகின்ற செல்வச் செழிப்பு ஏற்பட்ட காலம் ஆங்கிலேயர் அல்லது ஐரோப்பியர் ஆட்சிக் காலமாகும். இக்காலகட்டத்தில் எண்ணற்ற செல்வம் செட்டிநாட்டிற்கு வந்தன. தமிழ், சைவம், கோயில், கலை ஆகியவை இக்காலகட்டத்தில் நாட்டுக் கோட்டை நகரத்தாரால் பெரிதும் பேணப்பட்டன.

இப்படி நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாற்றை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம். இவற்றில் நான்காவது காலகட்ட வரலாற்று ஆவணச் சான்றுகள் ஓலைகளிலும், தாள்களிலும் இன்று நகரத்தார் வீடுகளில் நிறைய உள்ளன. அவை தேடப்படாமல் மெல்ல அழிந்து வருகின்றன என்பது நூலாசிரியர் நேரில் கள ஆய்வில் கண்ட உண்மை.

---

1. டாக்டர் கே.வி. இராமன், பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், பக், 193 – 194.

செட்டி நாட்டு எல்லைகள்

இன்றைய நகரத்தார்களின் பூர்வீக தேசம் செட்டிநாடு எனப் பட்டது. (செட்டிகளின் நாடு-நாடு என்றால் பிரதேசம்). கோயிற் கல் வெட்டுகள் மற்றும் இலக்கியங்கள் சான்றுபடி பாரம்பரியமான செட்டிநாடு, வெள்ளாற்றுக்குத் தெற்கு (சோழர் - பாண்டியர் அரசுகளுக்கு இடையே இருந்த எல்லைப் பகுதி), வைகை நதிக்கு வடக்கு, பிரான்மலைக்குக் கிழக்கு (பரம்பு மலை - 1800 அடி உயரமே கொண்ட ஒரு குன்று), வங்காள விரிகுடாக் கடலுக்கு மேற்கு இவைகளுக்கிடையே அமைந்தது.

வெள்ளாறது வடக்காமேற் குப்பிரான் மலையாந்
தெள்ளார் புனல்வைகை தெற்காகும் – ஒள்ளியநீர்
எட்டிக் கடற்கிழக்கா மிஃதன்றோ நாட்டரண்சேர்
செட்டிநாட் டெல்லையெனச் செப்பு.

– பாடுவார் முத்தப்பச் செட்டியார்

சரித்திர - ஆதாரச் சான்றுகளின் பாரம்பரியப்படி நகரத்தார்கள் புராதன சோழ மன்னர்கள் தலைநகரான காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து இப்போது செட்டிநாடு என வழங்கும் பிரதேசத்திற்குக் குடிபெயர்ந்தனர். (கி.மு. 3- கி.பி. 2 - ஆம் நூற்றாண்டு).

⌘ ⌘ ⌘

✓

3. செட்டி நாடும் அதன் கிராமங்களும்

கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இவர்களது பூர்வீக தேசம் சுமார் 96 கிராமங்களைக் கொண்டிருந்தது. 1. அரணிக்கோட்டை, 2. அழகிச்சிபட்டி, 3. ஆத்திக்காடு, 4. ஆர்க்காடு (நேமம் அருகில்), 5. ஆய்ங்குடி, 6. ஆலங்குடி, 7. ஆலம்பட்டு, 8. இடையப்பட்டி, 9. இரவிசேரி, 10. இலங்குடி, 11. இலுப்பைக்குடி, 12. இளையாத்தங்குடி, 13. உடப்பன்பட்டி, 14. உதயாச்சி, 15. உறங்கான்பட்டி, 16. ஒணான்குடி, 17.ஒலைக்குடிப்பட்டி, 18. கத்தப்பட்டு கருங்குளம், 19. கத்தாளைப் பட்டி, 20. கடியாவயல், 21. கம்பனூர், 22. கம்பங்காடு, 23. கருணாக்குடி, 24. கண்ணன்கோட்டை, 25. கடகம்பட்டி, 26. கண்ணனூர், 27. கல்லிவயல், 28. களபம், 39. காவனவயல், 30. கானப்பூர், 31. கைக்குளம், 32. கீரணிப்பட்டி, 33. கீழக்கோட்டை 34. கீழமாகாணம், 35. குருவிக்கிணாம்பட்டி, 36. குளத்துப்பட்டி, 37. கூத்தளூர், 38. கொ. அழகாபுரி, 39. கொல்லங்குடி, 40. கொரட்டி, 41. கொன்னையூர், 42. கௌரிபட்டினம், 43. சாக்குக்கோட்டை, 44. சாத்துக்குளி, 45. சாளூர், 46. சித்தாட்டிவயல், 47. சித்திவயல், 48.கீராத்தக்குடி, 49. சுண்டைக்காடு, 50. சூரைக்குளம், 51. செங்கல்கோயில்,52. செப்பவயல், 53. செம்பொன்மாறி, 54. செவரக்கோட்டை,55. செவலூர், 56. செஞ்சை, 57. சேந்தணி, 58. தட்டட்டி, 59. தளக்காவூர், 60. தாஞ்சூர், 61. திருக்கோளக்குடி, 62. துவார், 63. தெண்ணீர்வயல், 64. தேக்காட்டூர், 65. தேவிரிப்பட்டி, 66. நகரம்பட்டி, 67. நடுவிற்கோட்டை, 68. நெய்க்குளம், 69. நெய்வாசல்பட்டி, 70. நேமம், 71. பக்கிரிப்பட்டி, 72. பட்டணம், 73. பரளிப்பட்டணம், 74. பரியன்வயல், 75. பழையஆத்தங்குடி, 76. பாளையப்பட்டி, 77. புலிக்குத்தி, 78. புலிக்குளம், 79. புளியங்குடி, 80. பெருங்காணூர், 81. பேயன்பட்டி, 82. பொய்யலூர், 83. பொன்னாங்குடி, 84. மலம்பட்டி, 85. மல்லாக்கோட்டை, 86. மல்லுப்பட்டி, 87. முனையத்தை, 88. மேலமங்கலம், 89. மேலமாகாணம், 90. வடகாட்டுப்பட்டி, 91. வாணியங்குடி, 92. வாரியப்பட்டி, 93. வைரவன்பட்டி, 94. வெளியாறு, 95. வேங்காவயல், 96. வித்ராவயல் என்பவை!

பின்னர் .அடுத்த இரு நூற்றாண்டுகளில் நகரத்தார் இக்கிராமங்களிலிருந்து வாணிபப் பெருக்கத்திற்காகத் தென்னிந்தியாவின் பிற பாகங்களுக்கும், தென்கிழக்கு ஆசியாவின்

1. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், மு.மு. முத்தையா ஆய்வுத்தளம், சென்னை, 1986, பக் 7 – 9.

சில நாடுகளுக்கும் குடி பெயர்ந்தனர். இதன் காரணமாக நகரத்தார் இப்போது 78 கிராமங்களில் மட்டுமே உள்ளனர்.

செட்டிநாடு என்பது நகரத்தார் வாழ்ந்து வரும் ஊர்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு நிலப்பகுதி. தென் வடலாக ஏறத்தாழ 50 கி.மீட்டரும், கிழ்மேலாக ஏறத்தாழ 40 கி.மீட்டரும் உடைய ஒரு செவ்வகமாக இந்நிலப் பகுதியைக் குறிக்கலாம்.

நகரத்தார் வாழும் 78 ஊர்களைத் தவிர அதைவிட எண்ணிக்கை மிகுதியான வேறு ஊர்களும் இந்நிலப்பரப்பில் அடங்கியுள்ளன. இந்த ஊர்களிலும் பெரும்பாலான ஊர்களில் மொத்த மக்கள் தொகையிலும் நகரத்தார் அல்லாதவரே பெரும்பான்மையினர். அப்படி இருந்தும் இந்நிலப்பரப்பிற்குச் செட்டிநாடு என்ற பெயர் கடந்த இரு நூற்றாண்டுகளாக வழங்கி வருவது இச்சமூகத்தின் சிறப்பைக் காட்டுகிறது. தமிழகத்தில் வேறு எந்தப் பகுதியும் இவ்வாறு ஓர் இனத்தின் பெயரால் குறிப்பிடப் பெறவில்லை.

தொண்டைமான் சீமை

புதுக்கோட்டை மாவட்டத்துக்குத் "தொண்டைமான் சீமை" என்று ஒரு பெயர் வழங்கி வந்தது. ஒரு காலத்தில் இவ்வூர் செழிப்பாக இருந்ததை,

'தேங்காய் உருளத் தினைஉருள – இந்தத்
தேங்காய்த் தண்ணீர் அலை மோத
மாங்காய் காய்ந்து உருளுதடி – மகா
ராசன் தொண்டை மான் சீமையிலே"

எனும் நாட்டுப் பாடல் உணர்த்துகிறது. ஆனால் தற்போது செட்டிநாட்டின் பருவநிலையையும், நிலவளத்தையும் நோக்கினால் பொதுவாக இது வறண்ட பூமியே ஆகும். மலையாளம் (மழை) பெய்து விளைகிற சீமை, தஞ்சாவூர் பாய்ந்து விளைகிற சீமை சிவகங்கை காய்ந்து விளைகிற சீமை. இங்கு ஆங்காங்கே சில சிற்றாறுகளும், சில கண்மாய்களும் உள்ளன. இவை மழை பெய்தால் மட்டுமே நீர் வளத்தோடு காணப்படுபவை. பெரும்பாலும் கிணற்று நீர்ப்பாசனம் தான் இப்பகுதியில் உள்ளது. இப்பகுதிகளில் விளைநிலப் பகுதிகளும் குறைவு. தரிசுநிலப் பகுதிகளும், குடியிருப்புப் பகுதிகளுமே அதிகம்.

செட்டிநாடு

செட்டிநாடு 656.7 ச.மைல்கள் (1700 ச.கி.மீ.) பரப்பளவு கொண்டு பெரும்பாலும் சிவகங்கை மாவட்டத்திலோ, அதன் அண்மையிலோ அமைந்துள்ளது. சரித்திரச் சான்றுபடி செட்டிநாடு

என்பது தேவகோட்டை, (சிவகங்கை மாவட்டம்) புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) உள்ளிட்ட கிராமங்களுக்குச் சூட்டப்பட்ட பெயராகும். செட்டிநாட்டின் இன்றைய 78 கிராமங்களும் 5 தாலுக்காக்களைக் கொண்டது. அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் திருப்புத்தூர் வட்டம் - 45, சிவகங்கை வட்டம் - 10, திருவாடானை வட்டம் - 3, புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமய்யம் வட்டம் - 20 என்ற எண்ணிக்கையில் கிராமங்களைக் கொண்டுள்ளது.

நகரத்தார் கிராமங்கள்

1. அளகாபுரி, 2. அலவாக்கோட்டை, 3. அமராவதி புதூர், 4. அரண்மனைச் சிறுவயல், 5. அரிமளம், 6. அரியக்குடி, 7. ஆத்திக்காடு தெக்கூர், 8. ஆத்தங்குடி, 9. ஆத்தங்குடி முத்துப்பட்டினம், 10. ஆவினிப்பட்டி, 11. சொக்கலிங்கம் புதூர், 12. சொக்கநாதபுரம், 13. தேவகோட்டை, 14. காளையார்மங்கலம், 15. கல்லல், 16. கல்லுப்பட்டி, 17. கானாடுகாத்தான், 18. கண்டனூர், 19. கண்டவராயன்பட்டி, 20. கண்டரமாணிக்கம், 21. காரைக்குடி, 22. கருங்குளம், 23. கீழப்பூங்குடி, 24. கீழச்சிவல்பட்டி, 25. கொல்லங்குடி அளகாபுரி, 26. கோனப்பேட்டை, 27. கொப்பனாப்பட்டி, 28. கொத்தமங்கலம், 29. கோட்டையூர், 30. குழிப்பிறை, 31. குருவிக்கொண்டான்பட்டி, 32. லெட்சுமிபுரம் (கொத்த மங்கலம்), 33. மதகுப்பட்டி (சொக்கலிங்கபுரம்), 34. மகிபாலன்பட்டி, 35. மானகிரி, 36. மேலைச்சிவபுரி, 37. மிதிலைப்பட்டி, 38. நற்சாந்துப்பட்டி, 39. நாச்சியாபுரம், 40. நடராஜபுரம், 41. நாட்டரசன் கோட்டை, 42. நேமத்தான்பட்டி, 43. நெற்குப்பை, 44. ஒக்கூர், 45. உய்யக் கொண்டான் சிறுவயல், 46. பாகநேரி, 47. பலவான்குடி, 48. பள்ளத்தூர், 49. பனங்குடி, 50. பனையப்பட்டி, 51. பெரிய மருதுப்பட்டி, 52. பட்டமங்கலம், 53. பிள்ளையார்பட்டி, 54. பொன்னமராவதி, 55. பூலாங்குறிச்சி, 56. புதுப்பட்டி, 57. புதுவயல், 58. ராமச்சந்திரபுரம், 59. ராங்கியம், 60. ராயவரம், 61. சக்கந்தி, 62. செக்காலை, 63. செம்பனூர், 64. செவ்வூர், 65. சண்முகநாதபுரம் (ஆறாவயல்), 66. சிராவயல், 67. சிறுகூடல்பட்டி, 68. சோழபுரம், 69. தணிச்சாவூரணி, 70. தேனிப்பட்டி, 71. உலகம்பட்டி, 72. வலயப்பட்டி, 73. வேகுப்பட்டி, 74. வேந்தன்பட்டி, 75. வேதியூர் (வெற்றியூர்), 76. விராச்சிலை, 77. விராமதி, 78. வி. லெட்சுமிபுரம்.[1]

1.S. Chandrasekhar, The Nagarathars of South India, The Macmillan company of India Ltd., Madras, 1980, p 16.

இந்த 78 ஊர்களும் நகரத்தாரின் பூர்வீகக் கிராமங்கள் எனினும் இவர்களின் அன்றாட வாழ்விற்கு இவ்வூர்களை ஒட்டியுள்ள நான்கு பெரும் நகரங்களே முக்கியம் பெறுகின்றன. பெருமளவு வியாபாரம், மருத்துவம், கல்வி, போக்குவரத்துப் போன்ற அடிப்படைக் காரணங்களுக்காக இந்த 78 ஊர்களை இணைக்கும் தொடர்பு நகரங்களாக சிவகங்கை, திருப்புத்தூர், திருமய்யம், புதுக்கோட்டை விளங்குகின்றன.

அரண்மனைச் சிறுவயல், அலவாக்கோட்டை, நா. அளகாபுரி, ஒக்கூர், காளையார் மங்கலம், கீழப்பூங்குடி, சக்குந்தி, சோழபுரம், நடராசபுரம், நாட்டரசன் கோட்டை, பனங்குடி, பாகனேரி, மதகுப்பட்டி, வெற்றியூர் ஆகிய ஊர்களை இணைக்கும் மையமாக **சிவகங்கையும்** - பி. அளகாபுரி, ஆத்திக்காடு தெற்கூர், ஆவினிபட்டி, உலகம்பட்டி, கண்டரமாணிக்கம், கண்டவராயனபட்டி, கீழச்சிவல்பட்டி, சிறுகூடற்பட்டி, செவ்வூர், நெற்குப்பை, பூலாங்குறிச்சி, மகிபாலன்பட்டி, விராமதி ஆகிய ஊர்களைத் **திருப்புத்தூரும்** இணைக்கிறது.

அரிமளம், இராயவரம், வி. இலட்சுமிபுரம், கடியாபட்டி, தேனிபட்டி, விரையாச்சிலை ஆகிய ஊர்களை இணைக்கும் மையமாகத் **திருமய்யமும்** - இராங்கியம், குருவிக் கொண்டான்பட்டி, குழிபிறை, கொப்பனாப்பட்டி, நற்சாந்துப்பட்டி, பனையப்பட்டி, புதுப்பட்டி, மிதிலைப்பட்டி, மேலைச் சிவபுரி, வலையப்பட்டி, வேகுப்பட்டி, வேந்தன்பட்டி ஆகிய ஊர்களைச் செட்டிநாட்டின் நுழைவாயிலான **புதுக்கோட்டையும்** இணைக்கிறது.

⌘ ⌘ ⌘

4. செட்டி என்ற பெயரின் தோற்றம்

தென்னிந்திய மொழிகளிலும், பேச்சிலும் இச்செட்டி என்ற சொல் பொதுவாகத் தென்னிந்திய இந்துக்களான வியாபாரிகள், வாணிபக்குழுக்கள், வர்த்தகம் புரிபவர்களைக் குறிப்பதாகும்.[1] செட்டி என்ற சொல்லின் ஆரம்பப் பகுதி ஆராயத்தக்கது. அறிஞர்கள் சிலர் கருத்துப்படி இந்தச் 'செட்டி' என்ற சொல்லிற்கு 'எட்டி' என்ற சொல் வித்தாகிறது. சோழர்கள் காலத்திலும் (கி.பி. 846-1279) பின் பாண்டியர்கள் காலத்திலும் (கி.பி. 1190-1310) தமிழ் அரசர்களால் செல்வம் படைத்த வியாபாரிகளுக்கு அளித்த ஒரு கௌரவப் பெயரே 'எட்டி' என்பது. உதாரணமாக சிலப்பதிகாரத்தில் எட்டிச் சாயலனையும், மணிமேகலையில் எட்டிக்குமரனையும் (காவிரிப் பூம்பட்டினத்து வணிகன்) காண்கிறோம்.

முன் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் உள்ளூர் வியாபாரிகள் 'செட்டு' என்றும், கடலுக்கு அப்பால் வியாபாரம் செய்பவர்கள் 'நாயகர்' என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களுள் பெருஞ் செல்வம் ஈட்டுமளவு உள்ளூர் - வெளியூர் வாணிபத்தில் சிறப்பு கொண்டவர்களை 'எட்டி' என்ற பட்டத்தால் அழைத்தனர். கால வெள்ளத்தில் எட்டி என்ற சொல் செட்டியாக மாறி இருக்கலாம்.

'செட்டு'விலிருந்து 'செட்டி'

மற்றொரு கருத்துப்படி செட்டு-வாணிபத்தில் கிடைக்கும் இலாபப் பங்கு மூலமாகவும் செட்டி என்ற சொல் வந்திருக்கலாம். இன்றும் வட இந்தியாவில் சில வியாபாரிகள் செட்டுகள் எனக் குறிக்கப்படுவது மேற்சொன்ன உண்மைக்குப் பலம் சேர்க்கிறது. கூட்டமாகச் செல்லும் வணிகர் குழுக்களைச் **'சாத்து'** என்று சொல்வர். எனவே 'சாத்து' என்ற சொல்லிலிருந்தும் செட்டி என்பது வந்திருக்கலாம். மேலும் **'செட்டிறை'** எனப்பட்ட ஒருவித சுங்கவரியைக் குறிக்கும் புராதனத் தமிழ்ச் சொல்லிலிருந்தும் செட்டி என்பது வந்திருக்கலாம். செட்டியார்கள் வியாபாரிகள் தாமே!

'சிரேஷ்டி'யிலிருந்து 'செட்டி'

'சிரேஷ்டி' என்ற வடமொழிப் பதத்திலிருந்தும் செட்டி

1.S. Chandrasekhar, The Nagarathars of South India, The Macmillan company of India Ltd.,Madras, 1980, p 18.

உதித்திருக்கலாம் என்பது மற்றொரு கருத்தாகும். சிரேஷ்டா என்ற வடமொழிச் சொல் முக்கியமான (அ) மேலான என்று பொருள்படும். இன்றும் இது ஒரு பெயரின் அடைச்சொல்லாக - திரு. குலசிரேஷ்ட என்று (மேலான குடும்பத்தைச் சார்ந்தவர்) அமைந்துள்ளது. ஜவஹர்லால் நேருவும் செட்டி என்ற சொல் வடமொழி சிரேஷ்டி (வணிகக்குழுவின் தலைவர்) என்பதிலிருந்து வந்தது என்பதை ஒரு சந்தர்ப்பத்தில் எழுதியுள்ளார்.✪ பொதுச் சொல்லான சேட் என்பதும் சிரேஷ்டியிலிருந்து வந்ததே. செட்டியார்கள் தென்னிந்தியாவில் மட்டுமின்றிப் பர்மாவின் கிராமங்கள் உட்பட முழுவதும் பரவி இருந்தனர்.

இக்கருத்துகள் உண்மையானவை என்பதோடு இச்சொல் வடமொழியில் **வணிகன்** என்று பொருள்படும் சிரேஷ்டியிலிருந்து உதித்ததே என்றும் கூறலாம். இந்த உண்மையைப் பல வடமொழிக் கிரந்தங்களில் (அதர்வண சம்கிதை 19.3, சதாபத பிராம்மணம் 13.7.1.1, ஐத்ரேய பிராம்மணம் III 30.3) காணலாம்.

பாலி மொழியிலுள்ள பௌத்த ஜாதகக் கதைகளில் (சுமார் கி.மு.5-ஆம் நூற்றாண்டு) சிரேஷ்ட என்ற பதத்தோடு **மகாசெட்டி** (குழுத்தலைவன்) **அனுசெட்டி** (உபதலைவன்) **உத்தர செட்டி** (குழுவிற்கு நிOருவாகி) எனப் பல இருந்தன. எனவே அக்காலச் செட்டிகள் வியாபாரம், வாணிகத் தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கலாம். முதலிலேயே இவர்களுக்குள் அமைந்துவிட்ட இன, சாதிப் பிரிவுகளுக்கு ஆதாரமாக அவர்களின் செல்வச்செழிப்பு, இல்லத்து அமைப்பு, இந்திய சரித்திரத்தில் மௌரியர் காலத்தில் (கி.மு. 325-188) குழுக்களில் இவர்களது ஸ்தானம் ஆகியவற்றைக் கூறலாம். ஏற்கெனவே கூறியபடி இன்று வட இந்தியாவில் செட்டி என்பது செல்வ வணிகர்களையும், தென்னிந்தியாவில் வாணிப இனம் அல்லது வைசிய இனப்பிரிவுகளைக் குறிக்கும்.[2]

✪ The Chettys of Madras have also been leaders in business and banking especially from ancient times. The word 'Chetty' is derived from the Sanskrit 'shreshthi', the leader of merchant guild. The common appellation 'Seth' is also derived from 'shreshthi' The Madras Chettys have not only played an important part in south India, but They spread out all over Burma, even in the remoter villages.

Jawaharlal Nehru, The Discovery of India, Oxford University press, New Delhi, 16th Impression, 1996.

2. S. Chandrasekhar, The Nagarathars of South India, The Macmillan company of India Ltd.,Madras, 1980, p 20.

செட்டியும் செட்டியார்களும்

செட்டி என்ற சொல் ஓர் இனத்தைச் சார்ந்தவர் என்று பெயரோடு இணைத்துக் கூறும் போது 'ஆர்' என்ற விகுதிச் சொல் பெற்றுச் 'செட்டியார்' என ஆயிற்று. மேலும் 'ஆர்' என்ற சொல் கடைசி அரை நூற்றாண்டுகளாகத் தமிழர்களிடையே ஒரு கௌரவப் பெயராய் இணைக்கப்பட்டது. உதாரணமாக 20 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தென்னிந்தியாவின் ஒரு பெரிய அரசியல் தலைவரை ஸர்.பிட்டி. தியாகராய செட்டி என்றும், அப்போதைய நகரத்தார் தலைவரை ஸர்.எம்.ஏ. முத்தையா செட்டியார் என்றும் அழைத்தனர்.

தெலுங்கு பேசுபவர்கள் 'ஆர்' என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக 'காரு' என இணைத்து 'செட்டிகாரு' என அழைக்கின்றனர். ஆனாலும் உப இனத்தவர்கள் 'செட்டியார்' என்றே கூறுகின்றனர். செட்டி என்ற சொல் எப்படி ஆரம்பமாயினும் இன்று வாணிகம், வங்கித் தொழில் செய்யும் இவர்கள் இனம் தமிழகத்தில் பல கிளை இனங்களாகப் பிரிந்துள்ளன.

நாட்டுக் கோட்டைச் செட்டியார்

நகரத்தார், நாட்டுக்கோட்டையார், தனவணிகர், தனவைசியர், மகுடதன வைசியர், நாட்டரசன் கோட்டை செட்டியார் செட்டிப்பிள்ளைகள், நானாதேசிகர், ஏழு கோயில் நகரத்தார், 96 ஊர் நகரத்தார் எனப் பல பெயர்கள் இவர்களுக்கு உண்டு. எப்படியாயினும் இந்த வாணிபம், வங்கித் தொழில் செய்வதில் மிக முன்னேற்றமும் வெற்றியும் கொண்ட கிளை செட்டியார் இனம் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களே. (நகரத்தார்). எப்படி இந்தக் கிளை இனம் **நகரத்தார், நாட்டுக் கோட்டை செட்டியார்** என இரு பெயர்களை ஏற்றது என்பது சுவையான குறிப்பு. இவர்கள் பொருளாதார வரலாறு கூட சமீப காலத்தியதாய் இருக்க வேண்டும். ஏனெனில் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் கடல் கடந்த (பர்மா) வாணிபச் செழிப்புப் பரவியது. இச்செட்டியார்கள் பர்மாவில் வணிகப் பெருக்கினால் செல்வம் ஈட்டி முந்தைய இராமநாதபுரம் மாவட்டத்தில் தங்களது சொந்தக் கிராமங்களில் பழைய பாணியில் பெரிய இல்லங்களைக் கட்டினார்கள். இதனால் இவர்கள் பெயர் நாட்டுக் கோட்டை (கிராமத்துக் கோட்டைகள்) என்றானது.

இப்படி நாட்டுக்கோட்டை செட்டியார்கள் நாட்டுக் கோட்டையில் அதாவது கோட்டை போன்ற கிராமத்துச் சிறந்த வீடுகளில் வசிப்பவர்கள் என்றாகியது. இதில் ஒரு சுவையான விவரமும் கவனிக்க வேண்டும். செல்வ நகரத்தார்கள் 20-ஆம் நூற்றாண்டுத் திருப்பத்தில் பெருஞ்செல்வம் ஈட்டியும் தங்களது

பூர்வீகக் கிராமங்களை விடுத்து அருகிலுள்ள நகரங்களான சென்னை, மதுரை, திருச்சியில் வீடமைக்கவில்லை. தாங்கள் வேரூன்றிய இடத்திலேயே தங்கிவிட்டனர்.

நகரத்தார்கள்

இவர்களுக்கு 'பிரதான வைசியர்', 'மகுட வைசியர்', 'தன வைசியர்', 'இரத்தின வைசியர்', 'உபயகுல பூபால வைசியர்', சந்திர கங்காகுல வைசியர், ' சிவகோத்திர வைசியர்', 'இளையாற்றங்குடி நகர வைசியர்', 'நாட்டுக்கோட்டை நகர வைசியர்' என்னும் ஒன்பது காரணப் பெயர்களும் உண்டு.[1]

மற்றொரு பெயரான நகரத்தார்கள் என்பது இனிய ஓசை கொண்டு மூன்று வழிகளில் உதித்தது. பழைய தமிழில் நகரம் என்றால் வியாபார இடம் அல்லது கிராமம். தென்னிந்திய சரித்திரத்தில் சோழர் காலத்தில் (கிபி. 846-1279) இச்சொல் வியாபார அக்கறை கொண்ட ஓர் இனக்குழுவைக் குறித்தது. எனவே நகரத்தார் என்பது வாணிகத்தில் ஈடுபட்டவர்கள் என்ற பொருள் கொள்கிறது.

இரண்டாவதாக வடமொழியில் நகரத்தில் வசிப்பவன், மெருகேற்றுபவன் என்ற பொருள் தொனிக்கும் 'நகரக' என்பதிலிருந்தும் வந்திருக்கலாம். மூன்றாவதாக நகரத்தார் என்ற சொல்லிற்குத் தமிழ் இலக்கியமும் பொருள் கூறுகிறது. அதில் நகர் என்றால் ஒரு பிரம்மாண்டமான வீடு. அதனால் நகரத்தார் என்றால் பெரிய விஸ்தாரமான இல்லங்களைக் கட்டி அதில் வசிக்கும் பழக்கம் கொண்டவர்கள் என ஆகிறது.

சொல் வழக்கிலோ, மற்றச் சுற்று வழிகளிலோ இப்பெயர் ஏற்பட்டிருந்தாலும் நாம் 'நகரத்தார்' என்ற சொல்லையே இந்நூல் முழுதும் பயன்படுத்தப் போகிறோம். இதன்படி நாட்டுக் கோட்டைச் செட்டியார் என்ற சொல் இந்தியாவில் தமிழகத்தில், தமிழ்பேசும் வைசியகுல இந்து இனத்தைத்தான் குறிப்பிடுகிறது.

⌘ ⌘ ⌘

1. பசோ. ஆண்டியப்பன், சிவகோத்திர வைசிய விருத்தி, முதற் பாகம், 1924.

5. நகரத்தார் இனம்

சாதி, உட்சாதி, மதம், சமய உட்பிரிவு, மொழி, பேச்சு கலைப்பாங்கு இவைகளைக் கொண்ட எல்லா இனத்தவருள் இந்த நகரத்தார் சமூக ஆய்வாளர்களுக்குப் பல காரணங்களால் தனிப்பட்ட முக்கியத்துவம் கொண்டவராகிறார்கள். இவர்களின் மொத்த எண்ணிக்கை சரியாகத் தெரியவில்லை. 1931.-மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்குப் பின் மக்களின் சாதி விடப் பட்டதால் ஒரு சாதியின் மொத்த எண்ணிக்கையை அறிய முடியவில்லை.

ஆனால் இவர்களது பூர்வீகம் முந்தைய இராமநாதபுரம், (சிவகங்கை மாவட்டம்) மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தோடு அடங்கிவிட்டபோதிலும், அயல் நாடுகளிலும் வாணிகம் காரணமாகப் பரவியுள்ளதை ஆதாரங்கள் மூலம் அறிய முடிகிறது. **இந்நகரத்தார்கள் சீக்கியர், சிந்துக்கள் போலப் பர்மா, சிலோன், சிங்கப்பூர், மலேசியா, இந்தோ - சைனா, வியட்நாம், கம்போடியா, இந்தோனேஷியா, மொரிஷியஸ் போன்ற நாடுகளுக்குக் குடிபுகுந்தனர். இந்நாடுகளில் 19-ஆம் நூற்றாண்டில் தங்களைக் காலூன்றிக் கொண்டு வெற்றியோடு வாணிகம் புரிந்தனர்.**[1]

மக்கள் தொகை

கடந்த அரை நூற்றாண்டுகளாகப் பொதுவாக நிகழ்ந்துள்ள மக்கள் பெருக்கம் என்ற பிணியில் சிக்காத ஒரு சில இனத்தில் இவர்கள் சேர்ந்தவர்கள் என்பது முடிவு. **இந்த இனத்தின் குறைவான மக்கள் பெருக்கம், அதனால் ஏற்படும் சிறுகுடும்பம் பற்றி ஆராய வேண்டும்.** இந்தச் சிறு குடும்பம் என்பது உண்மைதானா, அப்படி உண்மை எனில் அதை நிறைவேற்ற என்ன உபாயம் மேற்கொண்டனர் என்பதும் ஆராய்ச்சிக்குரியது. அகில இந்திய மக்கள் கணக்கில் பல ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆண்-பெண் பால் பிரிவில் அதிக ஆண்களையும், குறைவான பெண்களையும் காட்டும்போது இந்த இனத்தவரில் பெண்கள் ஆண்களைவிட அதிகமாக உள்ளனர். இது பற்றிய சான்றுகள் பல பெற்றோருக்கு ஆண் குழந்தை இல்லையே என்ற கவலையையும்,

1. S. Chandrasekhar, The Nagarathars of South India, The Macmillan company of India Ltd.,Madras, 1980, p 23.

ஆண் குழந்தையற்ற செல்வக் குடும்பங்கள் தகுதியான ஆண் குழந்தைகளைத் தத்து எடுக்கும் பழக்கத்தையும் காட்டுகிறது.

இரண்டாவதாக இவர்களின் சமூகக் கோணமும் சுவையானதே. ஆதாரமான, உண்மையான நகரத்தார் சரித்திரம் எழுதப்படாமல் இருப்பதோடு, புராணங்கள்-கதைகள் வாயிலாக இவர்கள் பழைமையானவர்கள் என்பதை அறிகிறோம். சேரநாட்டு இளவரசர் இளங்கோ அடிகள் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு) வடித்த சிலப்பதிகாரத் தலைவன் கோவலனும் ஒரு வணிகன் எனத் தெரிகிறது. இது சாத்தியமாக இருக்கலாம்.

ஒரு பாரம்பரியத்தின் மத, இன, உணர்ச்சி சமய அலைகளின் இணைப்பைக் குறிக்கும் அளவுகோல், அவ்வினம் எவ்வளவு பங்கு பிற சமய நம்பிக்கைகளுக்குத் தாவுகிறது என்பதே. அது எவ்வளவு குறைவாயுள்ளதோ அவ்வளவு இணைப்பு உள்ளதாகும். உதாரணமாக நகரத்தார்களும், நாடார்களும் ஒரே பகுதியில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்த போதிலும் மிக்க குறைவான நகரத்தார்களே இந்து சைவ மார்க்கத்திலிருந்து விலகினார்கள். ஆனால் ஆயிரக்கணக்கான நாடார்கள் பிராடெஸ்டன்ட், கத்தோலிக்க கிருத்துவ மதத்தைத் தழுவியுள்ளனர். தமிழ் நாட்டிலோ அன்றி வெளிமாநிலத்திலோ நகரத்தார் குடியேறியதும் அவர்கள் முதல்பணி ஒரு சிவன்கோயிலைக் கட்டுவதே. தம் வீட்டையோ, இனத்தையோ தாண்டிய கலை, பொருளாதார, சமூக வாழ்வு அமைந்ததாக விளங்கும் அக்கோயில். இது இவர்களின் மிகுந்த மதஅபிமானம் - ஒருமைப்பாடு இரண்டையும் குறிக்கும்.

இவ்வினத்தாரின் பொருளீட்டும் செயல்களாகப் பண்டைய நாளில் உப்பு விற்பதில் இருந்து, கிராமங்களில் பணம் கொடுக்கல் - வாங்கல் செய்வது வரை இருந்தது. இவர்களது வங்கித் தொழில் இந்தியாவிலும், சில தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் வெற்றிநடைபோட்டது! இவர்களின் **தனிப்பட்ட வங்கிக்கணக்கு கண்காணிப்பு, கணக்கு வைப்பதில் தனித்தன்மை, சட்டத்திற்குப் பணிதல், பல நற்காரியங்களுக்கு வாரி வழங்குதல்** போன்றவை மதிப்பிடப்பட்டுப் பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்களாகும்.

⌘ ⌘ ⌘

1.B.V.N. Naidu, 'The Nattukottai chettiars and their Banking System', Rajah Annamalai chettiars commemoration Volume, (Annmalai Univer sity, India - 1941) p 457.

6. நகரத்தாரின் வாணிகமும் – வட்டித் தொழிலும்

நகரத்தார்கள் சோழநாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த காலத்தில் வணிகர்களாகவே வாழ்ந்திருக்கின்றனர். சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், பட்டினத்தடிகள் வாழ்க்கை வரலாறு ஆகியவை நகரத்தார்கள் கடல்வழி கப்பல்ஏறி அயல்நாடுகள் சென்று ஏற்றுமதி - இறக்குமதி வாணிகம் செய்வதைக் குலத்தொழிலாகக் கொண்டு இருந்தனர் என்பதைக் காட்டுகிறது. சிலப்பதிகாரத்தில் **மாசாத்துவான், மாநாய்கன், கோவலன்,** மணிமேகலையில் **சாதுவன்,** பெரியபுராணத்தில் **தனதத்தன், நிதிபதி, பரமதத்தன், இயற்பகையார், அமர்நீதியார், மூர்த்தியார், புனிதவதியார், கலிகம்பனார்** இவர்களைத் தவிர **பட்டினத்தாரும்** வாணிகம் மேற்கொண்ட நகரத்தார்கள். இவர்களது வாணிகத்தில் நவரத்தின வாணிகம் முதன்மை பெற்றிருந்தது.

சோழநாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்கு வந்த பிறகு இவர்கள் மேற்கொண்ட தொழில்கள் பற்றிய குறிப்பும், தொழில் முறை நியாயங்கள் பற்றிய குறிப்பும் பூங்குன்றநாட்டு வேலங்குடிக் கல்வெட்டு [1] மூலம் அறியவருகிறது.

"இரத்தினம், சுவர்ணம், பலசரக்கு முதலிய வியாபாரங்கள் செய்கிறது. சீவ வதையான வியாபாரங்கள் செய்கிறதில்லை. வாய்மை தவறா மேலோர்களிடத்தில் பணம் கொடுக்கல் - வாங்கல் செய்கிறது. தரும வட்டி வாங்குகிறது. குதிரை வியாபாரமும், வெற்றிலை முதலிய அழுகற்சரக்கு வியாபாரமும் செய்யக்கூடாது. திருட்டு வியாபாரம் செய்யக் கூடாது". [2] இக்குறிப்பின் மூலம் வாணிகமும், கொடுக்கல் - வாங்கல் லேவாதேவித் தொழிலும் நகரத்தார்களுக்குரிய மரபுத் தொழில் என அறியலாம். முக்கியமாகத் தொழில் வாணிகத்தில் **அறம் பிறழக்கூடாது** என்ற உணர்வு இவர்களிடம் இருந்ததை இக்குறிப்பு உணர்த்துகிறது.

---

1. S. Chandrasekhar, The Nagarathars of South India, The Macmillan company of India Ltd.,Madras, 1980, p 32.

2. சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், தனவைசியராகிய நாட்டுக் கோட்டை நகரத்தார் சரித்திரம், இரண்டாம் பதிப்பு, தேவகோட்டை, 1904, பக், 22 – 23 .

சென்ற நூற்றாண்டின் மையப்பகுதியில் நகரத்தார்கள் பர்மா செய்கோன், இலங்கை, சிங்கப்பூர் ஆகிய வெளிநாடுகளில் வாணிகத் தொடர்பு வைத்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அப்போது அவர்கள் செய்த ஏற்றுமதி வாணிகத்தில் அரிசியும், நவ தான்யமும் முதன்மை பெற்றிருந்தன. வாணிகத்திற்காக வெளிநாடு சென்ற நகரத்தார் அங்கெல்லாம் கொடுக்கல் வாங்கல் லேவாதேவி தொழிலையும் மேற்கொண்டனர். இவ்விரண்டு தொழிலும் வளமாக நடந்த காலத்தில் அங்கேயே சொத்துகளை வாங்கினர். எனவே வாணிகம், லேவாதேவி, சொத்து நிருவாகம் ஆகியவை வெளி நாடுகளில் நகரத்தார்களின் தொழில்களாக அமைந்தன.

இதே காலகட்டத்தில் உள்நாட்டிலும் பல்வேறு நகரங்களிலும் தொழில் வாணிக நிறுவனங்களை நடத்தி வந்தனர். இரண்டாம் உலகப் போர் தொடங்கிய காலத்தில் நகரத்தாரின் வெளிநாட்டுத் தொடர்புகள் குறையத் தொடங்கின. பர்மா, வியட்நாம், இலங்கை ஆகிய நாடுகள் விடுதலை பெற்றவுடன் நகரத்தார் அங்குத் தொழில் வாணிகம் செய்ய இயலாத சூழல் உருவாயிற்று.

இதனைத் தொடர்ந்து நகரத்தாரின் தொழில் வாணிக முயற்சிகள் அனைத்தும் பெருமளவில் உள்நாட்டிலேயே நிகழத் தொடங்கின. உள்நாட்டில் நகரத்தார் செய்த தொழில்களில் எண்ணிக்கையால் மிகுதியாக அமைந்தது வட்டிக் கடைகள் ஆகும். வட்டித்தொழிலின் அடுத்த கட்டமாக வங்கித் தொழிலையும் நகரத்தார் மேற் கொண்டனர். இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மதுரை வங்கி, காரைக்குடி வங்கி, செட்டிநாடு வங்கி ஆகியவை நகரத்தார் முயற்சியால் உருவான வங்கிகளாகும்.[1]

வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதும், நெருக்கடிநிலைக் காலத்தில் வட்டித் தொழில் தொடர்பாகக் கடுமையான சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டதும் வேறுவேறு புதிய தொழில்களில் நகரத்தார் ஈடுபடுவதற்குக் காரணங்களாக அமைந்தன.

தொழில் பிரிவுகள்

இப்போது நகரத்தார் மேற்கொண்டிருக்கும் தொழில் வாணிகங்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

இவற்றுள் முதல்வகையில் கனரகத் தொழில்களாகிய டி.ஐ. சைக்கிள் நிறுவனம், கார்போரண்டம் நிறுவனம், பாரி நிறுவனங்கள், ஸ்பிக் உரநிறுவனம், செட்டிநாடு சிமிண்ட், எஸ்ஆர்பி. டூல்ஸ் ஆகியவை முதன்மையாகக் குறிப்பிடத் தக்கவை. இவ்வகையில் அடுத்து இடம் பெறுபவை நூற்பாலைகள்.

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 258

அடுத்ததாகத் தோட்டத் தொழிலைக் குறிப்பிடலாம். குமுளியை ஒட்டிய மலைப்பகுதிகளில் ஏலக்காய்த் தோட்டங்களும் நாகர்கோவில், கேரளப் பகுதிகளில் இரப்பர், தேயிலைத் தோட்டங்களும் உதகை மலைப்பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களும் ஆனைமலை, குடகு, ஏற்காடு மலைப்பகுதிகளில் காப்பித் தோட்டங்களும் நகரத்தார்களுக்குச் சொந்தமானவை. நகரத்தார்கள் பெருமளவில் ஈடுபட்டிருக்கும் மற்றொரு துறை திரைப்படத் துறையாகும்.

இந்த வரிசையில் தோல் பொருள்கள் தயாரிக்கும் துறையை அடுத்துக் குறிப்பிடலாம். தோல் கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல், தோல் பொருள்கள் உற்பத்தி அவற்றை உள்நாட்டில் விற்றல், வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்தல் ஆகிய தோல்தொழில் தொடர்பான எல்லாத் துறைகளிலும் நகரத்தார் பங்கு குறிப்பிடத்தக்கது.

நகரத்தார்கள் வெற்றி பெற்றுச் சிறப்புடன் இயங்கும் மற்றொரு துறை நூல்களை வெளியிடும் பதிப்பகத் துறையாகும்.

நிறுவனங்களின் பங்குகளை வாங்கி விற்கும் தரகு நிறுவனங்கள் நீண்டகாலமாக நகரத்தார்களால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் தக்க பயிற்சி பெற்றுத் தொழில் செய்பவர்களாகிய வழக்கறிஞர், கணக்குத் தணிக்கையாளர், மருத்துவர்களாகவும் நகரத்தார் பலர் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் தொழில் புரிந்து வருகின்றனர்.

உயர்கல்வி பெற்று மாத ஊதியத்திற்கு வேலைக்குச் செல்வதையே மிகுதியாக விரும்பும் இக்காலச் சூழலிலும் நகரத்தார் இளைஞரிடையே தொழில் முனைப்புத் தொடர்ந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மரபை இறுக்கமாகப் பின்பற்றும் நகரத்தார் சமூகத்தினர் தொழில்துறைகளைப் பொறுத்தவரை மாறிவரும் காலத்திற்கேற்பப் புதிய புதிய துறைகளில் துணிந்து இறங்குகின்றனர். எத்தொழிலை மேற்கொண்டாலும் அறஉணர்வோடும் நாணயத்தோடும் நடந்து கொள்வதால் நகரத்தார் தொழில் முனைவோர்கள் சமுதாயத்தின் நன்மதிப்பைப் பெற்று விளங்குகிறார்கள்.[1]

⌘ ⌘ ⌘

---

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 260.

7. நகரத்தாரும் வங்கியியலும்

செட்டியார்கள் சைவர்கள். அவர்கள் பலர் கூடி வாணிகம் நடத்திய இடத்தில் நிச்சயம் ஒரு கோயிலைக் கட்டினார்கள். அக்கோயில் உள்ளூர் செட்டியார் இனத்திற்கு மையமாகவும், தொழிலுக்குத் தலைமையாகவும் விளங்கியது. இரங்கூனில் கோயிலின் ஆறு அறைகள் கிழே விளங்க, இரண்டாவது தளத்தில் ஒரு சிவாலயமும், தொழில் சம்பந்தமாகக் குழுக்கள் கூடும் இடமும் இருந்தன. இப்படிக் கோயில் விக்கிரங்களும் - பணப்பெட்டியும் ஒரே கூரையின் கிழ் அமைத்தது இவர்களின் சமய - சமுதாய இணைப்பைக் காட்டுகிறது.

ஒரு செட்டியாரிடம் முதன்முதலில் எதிர்பார்ப்பது நாணயம். பர்மா பிராந்திய வங்கி விசாரணைக் குழு ஆணைப்படி நாணயமற்றவர்கள் ஜாதியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். யார் யாருடைய நாணயமற்ற தன்மையால் நஷ்டம் விளைந்ததோ, அவர்களே இந்த நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டும். இது உதிரத்திலேயே ஊறிப் போன ஒரு பாதுகாப்பு. இது செட்டியார்களின் கௌரவத்தைப் பிரகாசிக்கச் செய்ததுடன் பணப்புழக்கத்தில் தாராளமும் கிடைக்கச் செய்தது. இதனால் எல்லாப் பணியாள்களும் மற்றும் ஏஜெண்டுகள் உட்பட நாணயமாய் நடக்க வேண்டியதாயிற்று.

"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்

அற்குப ஆங்கே செயல்"

எனும் குறளுக்கேற்ப பழைய காலத்திலிருந்து எல்லா நகரத்தார் கடைகளிலும் லாபத்தில் சில சதவீதம் தர்மத்திற்கு ஒதுக்கப்பட்டது. இப்பழக்கம் தமிழில் 'மகமை' எனப்பட்டது. புராதன யூதர்கள், இன்றைய கிருஸ்துவ குழுக்கள் தாங்கள் சார்ந்த ஆலய நிருவாகத்திற்கோ அவ்வாலயம் ஈடுபடும் நற்காரியங்களுக்கோ தங்கள் மாதாந்திர வருவாயில் ஒரு பங்கு அவசியம் கொடுப்பது போன்றதே இது. இந்த மகமை என்பது இந்த இனத்தாருக்கே உரியதாய் இருக்கிறது.

பழைய காலங்களில் கொடுக்கல் - வாங்கல் புரியும் நகரத்தார் கடைகளில், தங்கள் இலாபத்தில் ஒரு பங்கைத் தங்கள் இஷ்ட தெய்வ விக்கிரகத்தைக் கூட்டாளியாக்கி ஒதுக்கினர். இது திரும்பப் பெறமுடியாத ஒரு கொடையாகும். இப்படி இலாபத்தில் ஒரு பங்கைக் கடவுள் தருமத்திற்கு ஒதுக்குவது தவிர நகரத்தார் கோயில்

மடைப்பள்ளிகளில் தயாராகும் அன்றாட உணவை விக்கிரகத்திற்குப் படைத்து, பூசை முடிந்ததும் பக்தர்களுக்கும், ஏழைகளுக்கும் வினியோகிப்பர். குடியேறியது முதல் கி.பி. 19 - ஆம் நூற்றாண்டு வரையிலும் அவர்கள் இனத்தில் தேவையானவர்களுக்குத் தவிர, இந்தியாவில் முக்கியமாகத் தென்னாடு மற்றும் தமிழ் நாட்டில் புராதன இந்து கோயில்களைச் சீரமைப்பது, தாம் குடியேறி வாணிகம் புரியும் கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளில் புதிய சிவாலயங்கள் கட்டுவது , வருவாயிலிருந்து பராமரிப்புக்கு நிலம் அளிப்பது, பூசை புரிய, பூசாக்கிரியைகளுக்கு, விழாக்களுக்கு, யாத்ரீகர் தங்க சத்திரம் கட்டுவது போன்றவைகளுக்குச் செலவிட்டனர்.

பாண்டிய நாட்டிற்கு வந்த பின் வாணிகத்தோடு லேவா தேவியையும் தங்கள் தொழிலாகக் கொண்ட நகரத்தார் 19 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு வெளிநாடுகளிலும் லேவாதேவித் தொழில் செய்யத் தொடங்கினர்.

இவ்வாறு வெளிநாடுகளில் தொடங்கப்பட்ட வட்டிக் கடைகள் வங்கி (Bank) என்றே பெயரிடப்பெற்றன. அதற்கேற்ப இன்றைய வங்கிகள் செய்யும் நிதிசார் பணிகள் அனைத்தையும் இந்நிறுவனங்கள் செய்தன. வைப்புநிதி பெறுதல், குறுகிய கால, நீண்ட காலக் கடன் கொடுத்தல், உண்டியல் (Draft) வழங்குதலும் - மாற்றுதலும், அந்நியச் செலாவணிப் பணிகள், சரக்கு விற்பனைத் தொகைப் பரிமாற்றம் (Bill discounting) முதலிய பணிகளை நகரத்தார் நிறுவனங்கள் செய்துவந்தன. 1920 - இல் பர்மா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் நகரத்தார் கடைகளின் மொத்த முதலீட்டுத் தொகை 120 கோடி ரூபாய் என்று பர்மிய அரசாங்கம் நியமித்த ஒரு விசாரணைக் குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது

இன்றைய வங்கிகளில் சேமிப்புக் கணக்கு ஒரு வட்டி விகிதம், வைப்பு நிதிகளுக்குக் கால அளவைப் பொறுத்து வேறுபடும் வட்டிவிகிதம், ஊழியருக்குக் கொடுக்கும் கடனுக்குக் குறைந்த வட்டி விகிதம், பிற கடன்களுக்குக் கடனின் தன்மையைப் பொறுத்து மாறுபடும் வட்டி விகிதங்கள் என வட்டி கணக்கிடும் முறையில் பல்வேறு வகைகள் இருப்பது போல நகரத்தார் வட்டிக்கடை களிலும் மூன்று வகையான வட்டி கணக்கிடும் முறைகள் பின்பற்றப்பட்டன. அவை **நடப்பு வட்டி, தவணை வட்டி, வியன் வட்டி** என்பன. நடப்பு வட்டி என்பது நகரத்தார்கள் கள் கடைகளுக்குள் பரிமாறிக் கொள்ளும் தொகைக்குரிய வட்டியாகும். இது தனிவட்டி விகித முறையிலேயே கணக்கிடப்படும். இந்த நடப்பு வட்டி ஒவ்வொரு மாதமும் 16-ஆம் தேதி இரவு இரங்கூன் கோயிலில் நடைபெறும் நகரத்தார் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.தவணை வட்டி என்பது

குறிப்பிட்ட காலத்தவணை குறித்து 2 மாதம், 3 மாதம், 6 மாதம், ஒரு வருடம்) அந்தக் கால அளவில் வட்டியை அசலோடு சேர்த்துக் கணக்கிடும் கூட்டுவட்டி முறை. இந்தத் தவணை வட்டி இரங்கூன் நகரத்தார் கோயிலில் சனிக்கிழமை தோறும் காலையில் நடைபெறும் நகரத்தார் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

வியன்வட்டி என்பது நடப்பு வட்டியை விடச் சிறிது கூடுதலான வட்டி விகிதம். ஆனால் தனிவட்டி முறையிலேயே இவ்வட்டி கணக்கிடப்படும்.

உண்டியல் என்பது ஒருவர் மற்றொருவரை பணம் கொடுக்கும்படி எழுதிக்கொடுக்கும் ஆர்டர் அல்லது கட்டளை.[1] நகரத்தார் நிறுவனங்கள் வழங்கிய உண்டியல் களிலும் பலவகைகள் இருந்தன. இதில் குறிப்பிடத்தக்கவை **தரிசன உண்டியல், நடப்பு உண்டியல், தவணை உண்டியல், சீதன உண்டியல்** என்பன.

தரிசன உண்டியல் என்பது பார்த்தவுடன் பணம் கொடுக்கக்கூடிய உண்டியலாகும். உண்டியலில் குறிப்பிட்ட ஊரில் பணம் கொடுக்க வேண்டும் என்பதும், மூன்று நாள்களுக்குள் பணம் கொடுக்கப்பட வேண்டும் என்பதும் இவ்வகை உண்டியலின் நிபந்தனைகளாகும்.

நடப்பு உண்டியல் என்பது உண்டியல் வழங்கப்பட்ட நாளிலிருந்து அது மாற்றப்படும் நாள்வரை உள்ள காலத்திற்கு நடப்புவட்டி விகிதப்படி வட்டி சேர்த்துப் பணம் கொடுக்கப்பட வேண்டிய உண்டியலாகும்.

தவணை உண்டியல் என்பது உண்டியலில் குறிப்பிடப்பட்ட கால எல்லை (60 அல்லது 90 நாள்கள்) முடிந்த பிறகு அதற்குரிய பணத்தை வட்டியுடன் வழங்கும் உண்டியலாகும்.

சீதன உண்டியல் என்பது திருமணத்தின் பொழுது சீதனத் தொகைக்குப் பதிலாக எழுதிக் கொடுக்கப்படும் உண்டியலாகும். இவ்வுண்டியல் தொகைக்குத் தவணை முறையில் கூட்டு வட்டி கணக்கிடப்படும்.

இன்றைய வங்கித் தொழிலின் நிதிசார் பணிகளில் மற்றொன்று மறுகடன் வழங்குதலாகும் (Refinancing). இதனையும் நகரத்தார் வட்டிக் கடைகள் பெருமளவில் செய்திருக்கின்றன.

இவ்வாறு வங்கித் தொழிலில் முன்னோடிகளாக நகரத்தார்கள் திகழ்ந்தமையால் இந்தியன் வங்கியைத் தொடங்குவதற்கு நகரத்தார்களே பெருமளவில் காரணமாக இருந்தார்கள். 1907-இல் இந்தியன் வங்கியைத் தொடங்கியதிலும் அதைப் பல ஆண்டுகள் வழிநடத்திச் சென்றதிலும் நகரத்தார் பங்கு குறிப்பிடத்தக்கது என்று ஆர்.கே. சேஷாத்திரி சர்மா தம் நூலில் எழுதியுள்ளார்.

1. பழ. அண்ணாமலை, நகரத்தார் கணக்கியல் முறை, மு.மு. முத்தையா ஆய்வுத் தளத்தின் வெளியீடு, முதற்பதிப்பு, 1988, பக், 73 – 74.

1921-இல் இம்பிரீயல் வங்கி உருவாக்கப்பட்டதில் இருந்து அதன் இயக்குநர் குழுவில் நகரத்தார் பலர் அரசாங்கத்தால் நியமிக்கப் பெற்றனர். 1936-இல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியை எம்.சிடி.எம். சிதம்பரம் செட்டியார் தொடங்கினார். கருமுத்து தியாகராசன் செட்டியார் 1943-இல் மதுரை வங்கியைத் தொடங்கினார். இவை தவிர பாங்க் ஆப் காரைக்குடி, செட்டிநாடு கமர்ஷியல் பேங்க், நாட்டுக்கோட்டை பேங்க், செட்டிநாடு பயோனியர் பேங்க், நகரத்தார் பேங்க், தஞ்சாவூர் பெர்மணன்ட் பேங்க் ஆகிய சிறு வங்கிகள் பலவும் நகரத்தார்களால் உருவாக்கப் பெற்றவையே. சிறுவங்கிகள் பெரும் வங்கிகளோடு இணைக்கப் பட்டுப் பெரும் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட சூழ்நிலையில் நகரத்தார் நிருவாகத்தில் தொடர்ந்து இருக்கும் வங்கி மதுரை வங்கியாகும்.

இன்றும் பெருமளவில் நகரத்தார்கள் நிதி நிறுவனங்களையும், சீட்டு நிறுவனங்களையும் நடத்தி வங்கிகள் செய்யும் நிதிசார் பணிகள் பெரும்பாலானவற்றைச் செய்து கொண்டிருக்கின்றனர்.

நகரத்தார்கள் எந்தச் செயலில் இறங்கினாலும் அச்செயலுக் காகும் செலவுக்குரிய வட்டியைக் கணக்கிட்டுப் பார்ப்பது அவர்தம் பழக்கம். **வங்கியியல் என்பது நகரத்தார்களின் குருதியோடு கலந்திருக்கின்ற ஒரு சமூக இயல்பாகும். நகரத்தார்கள் நடத்திய, நடத்தி வருகின்ற வங்கித் தொழில்கள் நாடுகளின் வளர்ச்சிக்கும் பொருளாதார வளத்திற்கும் துணை செய்கின்றன.**[1]

இந்த நவீன வங்கி முறை சமீபத்தில் கொண்டுவரப்பட்டதே எனினும் 12-ஆம் நுற்றாண்டிலேயே இந்த நடைமுறைகள் காணப்பட்டதாக சரித்திரச் சான்றுகளிலிருந்து புலனாகிறது.

தோற்றம் - வளர்ச்சி

பொதுவாக ஓர் இனத்தின் தோற்றம் குறித்த சரித்திரமோ அல்லது இந்தியப் பகுதிகளின் கதையோ சில தலைப்புகளில் அடக்கலாம்.

1. இலக்கிய வரலாறு (சுதேசிகள் மற்றும் பிரயாணிகளின் எழுத்து கள் - புத்தகம், சுவடிகள், நாட்குறிப்பு, கடிதங்கள் போன்றவை).
2. கோயில், பொதுக் கட்டடங்கள், கல்லெழுத்துகள்.
3. நாணயச் சான்றுகள்.
4. பல பொறுப்புகளைத் திறம்பட வகித்த சிறந்த மக்களுக்கு அரசர்கள், இனத்தலைவர்கள் போன்றோர் ஓலைச்சுவடிகள், தாமிர சாசனப் பட்டயங்கள் மூலம் அளித்த தானங்கள்.
5. இதைப் போன்ற பிற வகைகள்.

⌘ ⌘ ⌘

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 258

8. நகரத்தார் – கல்வெட்டுகளில்

நானா தேசிகள் - அஞ்சு வண்ணம் - மணிக்கிராமம்[1] - நகரம் - என்பன வணிகர் குழுக்களில் சிலவற்றின் பெயர்கள் ஆகும். இந்தக் குழுக்களைப் பற்றிக் கல்வெட்டுகள் தகவல்கள் தருகின்றன.

மைசூர் கல்வெட்டு நானாதேசிகள் குழுவைக் குறிப்பிடும் பொழுது பதினெட்டுப் பட்டணங்களும், முப்பத்திரண்டு வீரா புரமும், ஐந்நூறு வீர சாசனங்களும் பெற்றவர்கள் என்று கூறுகிறது.

“நானாதேசிகள் சேர, சோழ, பாண்டிய, மலேய, மகத, கோசல, சௌராட்டிர, குறும்ப, காம்போச, லாட நேபாளம் போன்ற நாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்தனர்.[2] நாடுகளுக்கு நிலவழியாகவும், நீர்வழியாகவும் சென்று யானைகள், குதிரைகள் போன்ற மிருகங்களையும் இந்திர நீலம், சந்திர காந்தம், முத்து, அணிகலம், வயிரம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம், பத்மராகம், பவளம், மரகதம் முதலான மணிகளையும், ஏலம், இலவங்கம், அகில், சந்தனம், கற்பூரம், கஸ்தூரி, குங்குமம் போன்ற நறுமணப் பொருள்களையும் விற்று அவற்றிற்கு ஈடாக அங்குக் கிடைக்கும் அரும்பொருள்களை வாங்கிக் கொண்டு வந்து சேர்வர்” என்று மைசூர் கல்வெட்டு மேலும் சொல்கிறது.

சுமத்திராவில் - லோபோ - டோவா என்கிற இடத்தில் கி.பி.1088-இல் வெட்டப்பட்ட தமிழ்க்கல்வெட்டு ஒன்று **திசை ஆயிரத்தைந் நூற்றுவர்** என்ற வணிகர் குழுவினர் அங்கே இருந்ததாகக் கூறுகிறது.

நானா தேசிகள் குழுவினர் கடற் கொள்ளையரிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வீரர்களையும் அழைத்துச் சென்றார்கள். சென்ற இடங்களில் வாணிகம் செய்வதோடு நின்று விடாமல் பல திருப்பணிகளும் செய்துள்ளார்கள்.

அடுத்து பர்மாவில் பகவான் என்ற இடத்தில் உள்ள கல்வெட்டு,

“பக்கம் ஆன அரிவர்த்தனபுரத்து நானாதேசி விண்ணகர் ஆழ்வார் கோயில் திருமண்டபம் செய்து திருக்கதவும் இட்டேன், மலை மண்டலன்னுத் தூய மகோதையா பட்டணத்து ஈராயிரம் சிறியனான கிருபசேகர நம்பியோன்” என்ற தகவலைத் தருகிறது.

---

1. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள், மணிவாசகர் பதிப்பகம், 2003, பக், 15 – 18.

2. டாக்டர் கே.வி.இராமன், பாண்டியர் வரலாறு, 1977, பக் – 194

மைசூரில் கிடைத்த ஒரு கல்வெட்டு நானா தேசிகள் குழு பற்றிய அரிய செய்திகளைக் கூறுகிறது. ஐந்நூற்றுவர் மெய்க்கீர்த்தி என்று அதற்குப் பெயர். நானா தேசிகள் யார் என்று இனம் சுட்டி விளக்குகிறது இக்கல்வெட்டு. **செட்டி, செட்டி புத்திரர்** என்ற பெயர்கள் அதில் இடம் பெறுகின்றன.

"அஞ்சு வண்ணம்" என்னும் குழு பற்றி "கோவா நலச் செட்டி அஞ்சு வண்ணம் கூட்டம், மணிக்கிராமத்தார், மகோதையார் பட்டணத்து இரவிக் கொற்றய சேரமா உருவாகப் பெருஞ் செட்டிக்கு மணிக்கிராமப் பட்டம் கொடுத்தோம்" என ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

'மாராயம்' என்று ஒரு சொல் தொல்காப்பியத்தில் வருகிறது. மாராயம் என்பது அரசரிடம் பெறும் சிறப்பாகும். அது போன்ற சிறப்பை **எட்டி**, காவிதி போன்ற பட்டங்களைத் தனவணிகர்கள் மன்னர்களிடம் பெற்றிருக்கிறார்கள். இந்த எட்டிப் பட்டத்தைப் பெண்கள் கூடப்பெற்றிருந்ததாகக் கல்வெட்டுத் தகவல் தருகிறது.

செட்டிநாட்டு வட்டாரத்தைச் சார்ந்த பகுதிகளிலுள்ள கல்வெட்டுகளில் **'இளையாத்தக்குடி நகரத்தார்'** என்ற தொடர் காணப்படுகின்றது. அத்தொடர் பயிலும் கல்வெட்டுகளால் இளையாத்தக்குடி நகரத்தார்கள் பற்றிய பல்வேறு பெருமைகளை மேலப்பனையூர் ஞானபுரீசுவரர் சுவாமி கோயிலின் வடபுறச் சுவரிலுள்ள கல்வெட்டுக் குறிக்கின்றது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1360. இதனைப் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 12-ஆம் நாள் கல்வெட்டியிருக்கின்றனர். இக்கல்வெட்டில் மன்னர் பெயரில்லை.

அறம் சொன்ன மரபு

இளையாத்தக்குடி நகரத்தார், கோயில் தகராறில் நடுவர்களாக இருந்து நடுச்சொல்வது பற்றி இக்கல்வெட்டால் அறியமுடிகிறது. பனையூர், குளமங்கலம் ஆகிய இரண்டு ஊராருக்கும் கோயில் நில உரிமை பற்றிய வழக்கு எழுந்தது. பனையூர் அறிவீசுவரமுடைய நாயனார்க்கும், மலையக்கோயில் திருவெங்கைக்காலீசுவர நாயனார்க்குமிடையே தான் இடர்ப்பாடு. இவ்வழக்குத் தோன்றிய இடம், பொன்னமராவதி நாட்டு வடபத்து நாடு. இந்த வழக்கை ஆராய்ந்து நடுச்சொல்லப் பக்கத்து நாடுகளிலுள்ளவர்கள் அழைக்கப்பட்டனர். கோயில் தொடர்பான வழக்கு என்பதால் கல்வாசல் நாட்டில் வாழ்ந்த இளையாத்தக்குடி நகரத்தார்கள் நடுச் சொல்ல அழைக்கப்பட்டனர். இன்னொருபுறம் கோனாட்டு வேளாளர்கள் அழைக்கப்பட்டனர். பொன்னமராவதி நாட்டிலும் சிலர் இடம் பெற்றிருக்க வேண்டும். நடுவர்களாக இருந்தவர்களின் பெயர்கள் கல்வெட்டில் கிடையாது.

நடுச்சொல்ல வந்தவர்கள் இரண்டு ஊராரின் வாய்மொழி களைக் கேட்டு, இருதிறத்தாரும் நடந்து கொள்ள வேண்டிய வகையை நிலவரம் செய்தார்கள். இக்கல்வெட்டு வாசகம் வருமாறு,

1. பிலவங்க ஹூ பங்கூனி மீ 10 உ பொன்னமறாபதி நாட்டில் வடபத்து பனை
2. யர் குளமங்கலத்து ஊரவறோம். கோவில் வியாட்சியமாக
3. இரண்டு ஊரவற்க்கும் சட்சை நடந்த விடத்தி
4. லே கோனாட்டு வெள்ளாழரனைவரும் இளையா
5. த்தக்குடி நகரத்தாரனைவரும் பல நடுவரு
6. ம் கூடி இருவர் வாய்மொழியும் கே[ட்]டு வழக்கு தேர்ந்து நி
7. லவரம் பண்ணினது [*] அறிவீசுரமுடைய நாயனார்க்
8. கு கூடலூர் வயலிலே நிலமும் சொல்சுவந்திரமும் அவருக்கு நட
9. ந்துவரக்கடவோமாகவும் மலையில்க் கோவில் திருவங்கெகா
10. லியீசுரர் நாயனாறுக்கு ராராபுரத்து வயலில் நிலமும் கட்டும் சொல்
11. ச்சிவந்திரமும் அவருக்கு நடந்துவரக் கடவோமாகவும் இற்படிக்கு
12. நடுவர் தேர்ந்தபடி [க்கு]இரண்டு ஊராரும் நடந்து கொள்ளக் கட
13. வோமாகவும் இந்தப்படிக்கு இரண்டு கோவிலுக்கும் சந்திர
14. ாதித்தவரைக்கும் கல்லுங்காவெரியும் உள்ள நா [ளை] க்கு
15. ம் ஆண்டு அனுபவிப்பக் கடவோராகவும் இந்தப்படிக்கு [இ] த [ற்கு]
16. யாதாமொரு [த்த]ர் தப்பிதம் பண்ணினவன் கெங்கைக் கரையி
17. லெ எழு காராம்பசுவையும் கொன்று திருவம்பலத்திலும் சிவால
18. யத்திலும் தீய்யிட்ட பாவத்திலே போகக் கடவானாகவும் இற்ப்படிக்கு இவர்-
19. கள் சொல்லல கல்வெட்டு எழுதினேன் கோனாட்டு நெய்வேலி இழங்காவேழாரர் மணி
20. யத்தில் மேற்படியார் [எ]ழுத்து உ[1]

1. புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள், அரசு அருங்காட்சியகம், சென்னை கல்வெட்டு எண் 944, 2002, பக் – 613.

தொலைவில் இருந்தாலும் இளையாத்தக்குடி நகரத்தார்கள், நீதி சொல்லுவதற்கு நாட்டார்களால் அழைக்கப் பெற்றிருப்பது அவர்களின் வழிவழிப் பண்பாட்டை உணர்த்துவதாகும்.

செவலூர் கல்வெட்டு

செவ்வலூர் (செவலூர்) பூமீச்சுவரர் கோயிலில் இளையாத்தக்குடி நகரத்தார்கள் பற்றிய மூன்று கல்வெட்டுகள் இருக்கின்றன. இன்று இவ்வூரில் நகரத்தார் குடும்பங்கள் இல்லை. அவர்கள் வெளியூர் சென்றுவிட்டனர். பூமீச்சுவரர் கோயிலில் சுவாமிகோயில் வடபுறம் ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. இதன் காலம் கி.பி. 1458. (பார்த்திப வருஷம் தை மாதம்) இக்கல்வெட்டில் இளையாத்தக்குடி நகரத்தார்க்கும் கழனிவாசலுடையான் செழியதரையர் ஆவுடையார்க்கும் செவலூர் பூமியீசுவரமுடைய நாயனார் கோயில் பண்டாரத்தாரும் ஊராரும் பிரமாணம் பண்ணிக் கொடுத்திருக்கின்றனர். செவலூர் சிவன் கோயிலுக்கு நாயகரும் சுப்பிரமணியரும் இவர்கள் அமைத்திருக்கின்றனர். இவ்விறைவன் பூசைத் திருநாளுக்கு 'இளையாத்தக்குடி நகரத்தார் தம்பிரான் வந்தான்' என்று திருச்சின்னம் கூறினர். இத்திருநாளில் இவர்களுக்கு முதன்மை கிடைத்தது. இஃது இக்கல்வெட்டின் முற்பகுதி. இதனைத் தொடர்ந்து செவலூரில் நகரத்தார்க்கு முப்பது வீட்டுமனை ஒதுக்கியதைக் கல்வெட்டுச் சுட்டுகிறது.

இக்கல்வெட்டு செவலூர் பூமீசுவரர் கோயிலில் சுவாமி சன்னிதி வடபுறச் சுவரில் காணப்படுகிறது.

1. ஸ்வஸ்திஶ்ரீ சகாத்தம் 1387 என் மெல் செல்லா நின்ற பாத்திப வருஷம் தை மீ' 24 உ கல்வாசல்
2. நாட்டுக் குலசேகரபுரத்து இளையாத்தக்குடி நகரத்தாற்கும் மேற்படி ஊர் கழனிவாசலுடையான்
3. செழியரையர் ஆவுடையாற்கும் கூடலூர் நாட்டுச் செவ்வலூர் உடையார் திருப்பூமீசுவமுடைய நாயநார்
4. திருக்கோயீலில் ஶ்ரீபண்டாரத்தாரும் செவ்வலூர் ஊராக அமைந்த ஊரவரும் பிறமாணம் பண்ணிக்
5. குடுத்தபடி [*] இக்கோயிலுக்கு நாயகரும் சுப்பிறமண்ணி யரும் நகரத்தார் ஏறியருளப்பண்ணி இந்த நாய
6. கற்கு நாச்சியாரை ஆவுடையார் ஏறியருளப் பண்ணுகையில் இந்நாயனார் பூசை திருநாளுக்கு இளை
7. யாத்தக்குடி நகரத்தார் தம்பிரான் வந்தான் என்று திருச் சின்னம் பணிமாறத்திங்கள் திவதத்துக்கு நக

ந-4

8. ரத்தாற்கும் செழியதரையற்கும் ஒடுக்கும் குடுத்து திருக் காத்திகைக்கு பிறசாதமுங்கட்டி திருநாளுக்கு நகரத்தார்

9. ஒருநாளைக்குறையத்துப் பரிவட்டமும் கட்டிவித்துக் கொள்ளக்கடவார்களாகவும் [*] நகரத்தாற்கு

10. எங்கள் மலையடி ஊரில் வடக்கில் தெருவில் இட்ட மனை நகரத்தாற்கு மனை 28 ஆவுடையாற்கு மனை

11. 2 ஆக மனை முப்பதுக்கும் கீழ்பாற்கெல்லை நாராசத் தெருவுக்கு மேற்க்கும் தென்பாற்கெல்லை குச

12. வன் மதிளுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை தெருவுக்கு ஊன்றின நாட்டுக்கல்லுக்கு கிழக்கும் [*] வடபாற்

13. கெல்லை கோட்டை மதிளுக்கு வடக்கில் பாறைக்குத் தெற்கும் ஆக இசைந்த பெருநான்கெல்லைக்குட்பட்ட மனை

14. முப்பதும் சந்திறாதித்தவற் செல்லக்கடவதாகவும் இடு காடு இவர்களும் ஊராவரும் பொருந்தின இடத்திலெ இடக்கட

15. வோமாகவும் புழவரிலே குடி ஏறினாலும் முப்பது மனையும் இட்டு நான்கெல்லையும் கல்நாட்டிக் குடுக்க கடவோமாக

16. வும்இப்படி பிறமாணம் பண்ணிக்குடுத்தோம் இளையாத்தக்குடி நகரத்தாற்கும் ஆவுடையாற்கும் ஸ்ரீபண்டாரத்தாரும் ஊ

17. ராக அமைந்த ஊரவரோமும் ஸ்ரீ பண்டாரத்தாரும் ஊரவரும் சொற்படிக்கு இந்தப் பிறமாணம் எழுதினென் இவ்வூற் கண

18. க்கு இளங்காவுடையான் பிரகட்கண்டவேளான் எழுத்து இது மாஹேஸ்வர ரக்ஷை வ[1]

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் என்னும் செட்டியார்கள் வாழ்ந்த தொண்ணூற்றாறு ஊர்களில் செவ்வலூரும் (செவலூர்) ஒன்றாகும்.

கோயிலார் பெற்ற வீட்டுமனைகள்

இக்கல்வெட்டில் '*கல்வாசல் நாட்டுக் குலசேகரபுரத்து இளையாத்தக்குடி நகரத்தார்க்கும் மேற்படி ஊர் கழனிவாசலுடையான் செழியதரையர் ஆவுடையாற்கும்*' (வரி 1 - 3) என்ற பகுதி நகரத்தார் வரலாற்றுக்குரிய குறிப்பை வழங்குகிறது

1. புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள், அரசு அருங்காட்சியகம், சென்னை, கல்வெட்டு எண் 802, 2002.

கல்வெட்டுத் தொடரின் முற்பகுதி, இளையாத்தக் குடியில் வாழ்ந்த இளையாத்தக்குடிக் கோயிலைச் சார்ந்த நகரத்தார்களைக் கூறுகிறது. இதனையடுத்து இந்த ஊரில் வாழ்ந்த இந்த இனத்தாரான கழனிவாசலுடையாரைப் பற்றிப் பேசுகிறது. கழனிவாசலுடையார் இனத்தால் இளையாத்தக் குடியாரைச் சார்ந்தவர்கள்; பங்காளி உறவு முறையால் கோயில் அடிப்படையால் வேறுபட்டவர்கள். அதனால்தான் இரு திறத்தாரையும் ஒன்றாகக் கூறாமல் தனித்தனியே உரைத்திருக்கின்றனர். கழனிவாசல் குடியார் என்ற பிரிவு இளையாத்தக்குடிக்கு உரியது. ஆனால் இக்கல்வெட்டோ கழனி வாசலுடையான் என்று குறிக்கிறது. கழனிவாசலுடையான் என்ற பிரிவு, இன்று வயிரவன் கோயிலைச் சார்ந்தது. இதனால் கி.பி. 1458-இல் இளையாத்தக்குடி நகரத்தாரில் இளையாத்தக்குடி, ஏழகப் பெருந் தெருவான வயிரவன் கோயில் ஆகிய இரண்டு பிரிவினர் செவலூரில் குடிபோக வீட்டுமனை ஊராரிடமிருந்து பெற்றிருக்கின்றனர் என்பது புலனாம்.

செவலூரில் குடியேற்றம்

செவலூரில் இருபத்தெட்டு மனைகளை ஒருங்கே இளையாத்தக்குடியாரும் அவற்றைச் சார்ந்த இரண்டு மனைகளை வயிரவன் கோயிலாரும் ஊராரிடமிருந்து பெற்றிருக்கின்றனர். இந்த மனைக்கட்டுகள் செவலூர் மலையடி ஊரில் வடக்குத் தெருவில் உள்ளன. இக்கல்வெட்டில் **'இடுகாடு இவர்களும் ஊரவரும் பொருந்தின இடத்திலே இடக்கட வொமாகவும்'** (வரி 14-15) என்ற தொடர் காணப்படுகிறது. வீட்டுமனை பெறும் போதே பிறவற்றையும் நகரத்தார்கள் வரையறுத்துக் கொள்ளும் போக்கு இதனால் வெளிப்படுகிறது.

இளையாத்தக்குடி நகரத்தார்கள், இளையாத்தக்குடியில் இருந்து பல்வேறு ஊர்களுக்குக் குடிபோனமைக்கு ஓர் எடுத்துக் காட்டு, செவலூர்க் கல்வெட்டு. இங்கு முப்பது மனைகளைப் பிரித்து நகரத்தார்களுக்கு எவ்வகைப் பயனும் பெறாமல் ஊரார் வழங்கினர் என்பது குறிக்கத்தக்கது. இக்கோயில் கல்வெட்டுகள், இளையாத்தக்குடி நகரத்தார்கள் பற்றிய செய்திகளை மேலும் தருகின்றன.

முதல் மரியாதை

பூமீச்சுவரர் கோயில் வாயிலின் தென்புறச் சுவரிலுள்ள கல்வெட்டு, (ரௌத்திர வருஷம் ஆடி மாதம் 16-ஆம் தேதி) கி.பி. 1500 ஆம் ஆண்டுக்குரியது. இதில் செவலூர்க் கோயிலில் நகரத்தார் களின் வயதில் மூத்தவர்களுக்கு முதல் மரியாதை கொடுப்பது என்று கோயில் பண்டாரத்தாரும் ஊராரும் கல்வெட்டிக் கொடுத்திருக் கின்றனர். கல்வெட்டின் வாசகம் வருமாறு,

1. ஸ்வஸ்தஸ்ரீ சாகத்தம் 1422 மேற்செல்லா நின்ற ரெவுத்தர ஷு ஆ [டிமீ] 16வ பொன்ன
2. மராபதிநாட்டு வடபற்று செவ்வலூர் உடையார் திருப் பூமீசுவரமுடை [ய] நாய[னா]ர் திருக்
3. கோவில் ஸ்ரீபண்டாரத்தாரும் ஊரவரும் [மே] நகரத் தாற்கு கல்வெட்டிக் குடுத்தபடி
4. இன்னாயனார் கோவில் திருநாள் திங்கள் திவதங்களுக்கு அருளிப்பாடு யிட்டால்
5. நகரத்தார் நின்றவர்களில் மூப்பானவர்க[ள்வ]ர[க்] கடவார்களாகவும் இப்படிக்கு
6. பரமேசுரபட்டன் எழுத்து. இப்படிக்கு தில்லையாளி பட்டர் எழுத்து வ
7. ஸ்ரீ பண்டாரத்தாரும் ஊரவரும் சொற்படிக்கு இக் கோவில் கணக்[கு] பெ
8. குரம்பாண்டான் பிரகட்கண்டவேளான் எழுத்து வ[1]

செவலூரில், நகரத்தார்கள் குடியேறிய நாற்பதாண்டுகளில் அவர்கள் சிவன் கோயிலில் தனி மரியாதை பெற்றிருக்கின்றனர்.

அமுதுபடிக்கு நிலக்கொடை

பூமிச்சுரர் சுவாமி கோயில் வாயிலின் வடபுறச் சுவரிலுள்ள கல்வெட்டு, முன்கூறிய கல்வெட்டு வெட்டியபின் பத்து நாள்கள் கழித்து வெட்டப்பட்டிருக்கிறது. (ரௌத்திர வருஷம் ஆடி மாதம் 26-ஆம் தேதி) இக்கல்வெட்டும், இவ்வூரில் முப்பது மனை வாங்கிய நகரத்தாரோடு தொடர்புடையது. செவலூர் சிவன் கோயிலில் அமுதுபடிக்கு முட்டு ஏற்பட்டது. அப்போது அவ்வூரார் நூற்று நாற்பது சக்கரத்துக்கு மாதன் வயக்கல் (வாய்க்கால்) என்ற பெரிய செய்யையும் அதிலுள்ள கிணற்றையும் தெங்கடிப் பறியாலையும் விற்றனர். அத்துடன் இக்கோயிலில் இவர்கள் அமைத்த கடவுளர்க்கு இவர் தருமமாக அமுதுபடி வழங்க வேண்டும் என்றும் வரையறுத்தனர். இத்தருமத்தை இளையாத்தக் குடியாரும் கழனிவாசற்குடியாரும் இணைந்தே செய்ய உடன்பட்டிருந்தனர்.

மேலும் மூன்று மனைகள்

இதனைத் தொடர்ந்து, இக்கல்வெட்டு முப்பது வீட்டு மனைச் செய்தியில் ஒரு மாற்றத்தைக் கூறுகிறது. கி.பி. 1456-இல் கோயில் பண்டாரத்தாரும் ஊராரும் இளையாத்தக்குடி நகரத்தாருக்கு

1. புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள், அரசு அருங்காட்சியகம், சென்னை கல்வெட்டு எண் 833, 2002.

இருபத்தெட்டு மனைகள் ஒதுக்கினர். கி.பி. 1500-இல் இந்த இருபத்தெட்டு மனைகளில் மூன்றினைக் கழனிவாசலுடையான் செழியதரையர் சிவந்த கால அழகியரான சேதிபராயர்க்கு விடுத்தனர். சிவந்த கால அழகியர் கழனிவாசலுடையான், செழியதரையன் மகன் ஆவான். ஆதலின் முன் இரண்டு மனை பெற்றவர்கள் மேலும் மூன்று மனை பெற்றுப் புள்ளி பெருகினர் என்பது தெரியவரும். இளையாத்தக்குடியரோடு வயிரவன் கோயிலாரும் செவலூரில் வாழ்ந்து வளம் பெருகினர்.

இராங்கியம் கல்வெட்டு

செவலூர் கல்வெட்டுகள் போல இராங்கியம் பூமீச்சுவரர் கோயில் கல்வெட்டுகளும் இளையாத்தக்குடி நகரத்தார்களைப் பற்றிக் கூறுகின்றன. இராங்கியம், (இராசசிங்கமங்கலம்) இளையாத்தக்குடி நகரத்தார்கள் தொன்று தொட்டு வாழ்ந்த ஊர்களில் ஒன்று. பாடுவார் முத்தப்ப செட்டியார்,

"ராசசிங்கம் வாழ்பூமி நாதர் சிவகாமியையும்
நேசமுடன் போற்றி நிறைந்திருப்போர்"

என்று அவர் எட்டு நகரக்கோயிலோடு இணைத்துத் திருமுக விலாசத்தில் பாடியிருக்கிறார். இதனால் வழிவழியாக இராங்கியம் சிவன் கோயில் நகரத்தார்களால் போற்றப் பெற்றமை தெளிவாகும்.

வணிகராமர் தருமம்

இராங்கியம் பூமீச்சுவரர் கோயிலிலுள்ள சுவாமி கோயிலின் கீழ்ப்புறம் சுவரில் வாயிலின் தென்புறம் உள்ள கல்வெட்டு, கி.பி.1446-ஆம் ஆண்டுக்குரியது. இக்கோயிலைக் **'கல்வாசல் நாட்டு குலசேகர புரத்து ஒக்கூருடையான் வணிகராமர்'** தருமமாகக் கட்டினார். இவர் இக்கோயிலை எந்த ஆண்டு கட்டினார் என்ற விவரம் இல்லை. **'முன்னாள் கட்டினான்'** என்றுதான் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. ஆகையால் இக்கோயில் கி.பி. 1446-க்கு முன்பே கட்டப்பட்டது என்று புலனாகும்.

இக்கல்வெட்டு, இளையாத்தக்குடி ஒக்கூருடையான் இராமர் பற்றியது. இவர் இராங்கியம் பூமீச்சுவரர் கோயிலைக் கட்டினார். ஆனால் இது குறைத்திருப்பணியாய் முழுமை பெறாமல் கிடந்தது. அவருக்குப் பின் மகாமண்டபம், எழுபடை (எழுபடி) ஆகிய திருப்பணிகளை நிறைவேற்ற மூவர் முற்பட்டனர். அந்த மூவர்,

1. மேற்படி (கல்வாசல் நாட்டுக் குலசேகரபுரத்து ஒக்கூருடையான்) சிவந்தெழுந்தார் இராயர்.
2. மேற்படி சிராமதேவர் ஆசிரியங்காத்தார்.
3. மேற்படி ஊர் கழனிவாசலுடையான் திருக்கோளக் குடியாண்டாரான செழியதரையர்.

இக்கல்வெட்டு வாசகம் வருமாறு,

1. ஸ்வஸ்தஸ்ரீ சகாப்தம் 1378 இதன் மேற்செல்லா நின்ற தாது ஹு ஆவணி மீ 7உ பொன்னமராபதி
2. நாட்டு இராசசிங்க மங்கலத்து உடையார் திருப்பூமீஸ்வர முடைய நாயனார் திருக்கோயில் ஸ்ரீபண்டாரத்தாரும் மேற்
3. படி ஊராக அமைந்த ஊரவருமோம் பிரமாணம் பண்ணிக் குடுத்தபடி இக்கோயில் முன்னாள் கல்வா
4. சல் நாட்டு குலசேகரபுரத்து ஒக்கூருடையான் வணிக ராமர் தன்மமாகையில் இந்த மகாமண்டபம்
5. எழுபடை சமைந்து குறைத்திருப்பணியாய் கிடந்த படி யாலே மேற்படி சிவந்தெழுந்தார் இராயரும் மே
6. ற்படி சிராமதேவர் ஆசிரியங்காத்தாரும் மேற்படி ஊர் கழனிவாசலுடையான் திரு[க்]கோளக்குடியாண்
7. டார் திருக்கோளக்குடியாண்டாரான செழியதரையரும் ஆக இந்த மண்டபம் நிறைவேற்று விக்கை
8. யில் இக்கோயிலில் ஒரு திங்கட்திவதந் திருநாட்களிலே தற்மகற்தா ஒக்[கூ]ருடை[ய]ானுக்கு ஒரு ஒடுக்
9. கு குடுத்த பின்பு இரண்டாவது செழியதரையற்கு ஒரு ஒடுக்கு சந்திறாதித்தவரை செல்ல வழங்க கடவதாகவும் இ
10. ப்படிக்கு நாயினார் ஸ்ரீபண்டாரத்தாற்கும் ஊரவற்கும் சமைந்து இந்த பிரமாணம் எழுதினென் இவ்வூர் கணக்கு
11. உடையார் திருவொத்த சாமமழகியான் ஆன ஏறக்குடையான் எழு[த்து]உ [1]

ஒக்கூரார் - முதல் மரியாதை

இக்கோயில் கட்டிச் சிறப்பெய்தியமையாலும் முதற்கண் கோயில் திருப்பணியைச் செய்ய முற்பட்டமையாலும் பூமீச்சுவரர் கோயிலில் முதல் மரியாதை (ஒடுக்கு) ஒக்கூர் உடையானுக்கே கொடுக்க வேண்டும் என்று கல்வெட்டு வரையறை செய்கிறது. ஒக்கூரார்க்குச் சிறப்புச் செய்த பின்னர் தான் வயிரவன் கோயிலார்க்குச் (கழனிவாசற்குடியார்) சிறப்புச் செய்ய வேண்டும். இவ்வாறு விதிமுறை வகுத்துக் கோயில் பண்டாரத்தாரும் ஊராரும் ஒப்புக் கொண்டு கல்வெட்டிக் கொடுத்துள்ளனர். இன்றும் ஒன்பது கோயில் நகரத்தார்கள் கூடியிருக்கும் திருக்கோயில்களிலும் இதே

1. புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள், அரசு அருங்காட்சியகம், சென்னை கல்வெட்டு எண் 796, 2002.

மரபு பின்பற்றப்படுகிறது. இளையாத்தக்குடியில் வாழ்ந்த காலத்திலிருந்து முதற்கண் கோயில் கட்டிய சிறப்பால் ஒக்கூர் நகரத்தாருக்கு இச்சிறப்பு அளிக்கப்பட்டு வருகிறது. (PSI 796) ஆனால் முத்துமீனாள் கொலைக்கீடாக 'வியன்தலை' கொடுத்ததால் இச்சிறப்பு ஏற்பட்டதாகக் கி.பி. 1894-இல் நகரத்தார் வரலாறு எழுதியவர்கள் எழுதியுள்ளனர்.[1]

வணிகராமர் - தொல்குடி

இராங்கியம், பூமீச்சுவரர் கோயில் கட்டிய ஒக்கூர் நகரத்தார் வணிகராமர் இராங்கியத்தில் தொன்று தொட்டு வாழ்ந்து வந்த புகழ்பெற்ற குடியினர். பூமீச்சுவரர் கருவறையின் வடபுறமுள்ள கல்வெட்டு **'இவர்கள் பூறுவராகளில் உதையப்பெருமாள் ஆன வணிகராமர் எழுந்தருளிவித்த உடையார் திருப்பூமிசுவரமுடைய நாயினாற்கு'** என்று கூறுகிறது. **'பூறுவராகளில்'** என்ற சொல் **பூர்வீகமானவர்கள்** என்பதை உணர்த்துகிறது. வணிகராமரின் இன்னொரு பெயர் உதையபெருமாள் என்பதும் தெரிகிறது.

பெருந்தெரு

வயிரவன் கோயில் நகரத்தார்கள் இசைப்பிடிமானம் எழுதும் போது, **'கேரள சிங்கவள நாடாகிய ஏழகப் பெருந்திருவான வீரபாண்டியபுரத்தில் சிறுகுளத்தூர் உடையார்'** என்று எழுதுகின்றனர். இந்த வாசகத்தில் வயிரவன் கோயில் என்பது வரவில்லை. இவ்வழக்கு மிகப் பிற்பட்ட ஆட்சியுடையது. **ஏழகப் பெருந்தெரு** என்பதே வரலாற்றுத் தொடர்புடையது; தெரு என்பதனை மங்கலம் கருதித் திரு என மாற்றிவிட்டனர். வயிரவன் கோயிலுக்கு ஏழகப் பெருந்தெரு என்பது போல ஒவ்வொரு நகரக் கோயிலுக்கும் ஒவ்வொரு பெருந்தெரு என்ற ஆட்சி இருந்தது. இராங்கியத்திலுள்ள இக்கல்வெட்டால், இளையாத்தக்குடிக்குரிய பெயர் தெரிகிறது. **'கல்வாசல் நாட்டு இளையாத்தக் குடியான குலசேகரபுரத்துக் காளையகாலன் பெருந்தெருவில் ஒக்கூர் உடையான்'** என்று கல்வெட்டில் வருகின்றது. குலசேகரபுரம் என்பது இளையாத்தக்குடியே; இதனையே **'காளைய காவல் பெருந் தெரு'** என்பர். (PSI 854) வயிரவன் கோயிலார் மட்டும் தொன்மையான வழக்கை விட்டு விடாமல் பயன்படுத்தி வருகின்றனர்.

காளையார் கோயிலில் உள்ள கல்வெட்டொன்றிலும் (கி.பி.1511) **'இளையாத்தக்குடியான குலசேகரபுரத்துக் காளையார் காவற் பெருந்தெருவில் திருவேட்பூருடையான்'** (182/தொ) என்ற வாசகம் வருகிறது. எனவே காளையார் கோயிலோடு இளையாத்தக் குடி நகரத்தாருக்குத் தொடர்பு இருந்து இருக்கிறது. 'கோயிலொடு

1. சதாவதானம் சுப்பிரமணிய ஐயர்,தஞ்சாவூர் தேசாபிமானி அச்சுக்கூடம், தனவைசியராகிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம், 1894.

தொடர்புடைய பெருந்தெரு' என்று முடியும் ஒரு வகைப் பிரிவு முறை எல்லாக் கோயிலார்க்கும் இருந்திருக்க வேண்டும். அவ்வழக்கு காலப்போக்கில் மறைந்துவிட்டது.

ஊருணி அமைத்த பேராளர்

இளையாத்தக்குடி நகரத்தார்களுக்குப் பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டு முதலே நாட்டில் நல்ல மதிப்பும், சிறப்பும் இருந்தன. திருமயம் தாலுகா மறவாமதுரையிலுள்ள அகளங்கீசுவரர் கோயிலில் சுவாமி கோயிலின் தென்புறம் சுவரிலுள்ள கல்வெட்டு கி.பி. 1518 ஐச் சார்ந்தது. அதில் 'ஆறிலொன்று காணி அங்கிஷமாகப் பூண்ட செட்டிகளில் இளையாத்தக்குடிக் கழனிவாசலுடையான் பொதிய கோனார் திருவொத்த சாமமழகியாரான செழியதரையர்' என்று வருகிறது. செழியதரையர் உள்ளிட்டார் வடமதுரை என்னும் மறவாமதுரையில் ஓர் ஊருணி வெட்டினார். அந்த ஊருணிக்குத் தண்ணீர் வருவதற்காக மறவாமதுரை ஊராரும் பூச்சைநாயக்கரும் ஊருணியை ஒட்டிய பகுதியை ஊருணிப் புறமாக விடுத்துள்ளனர். இதற்கு எல்லா வகையான வரிவிலக்கும் அளித்துள்ளனர் (PSI 726) தொன்று தொட்டு இளையாத்தக்குடி (வயிரவன் கோயில்) நகரத்தார் ஊருணி வெட்டிக் கட்டி அறம் செய்துவந்துள்ளனர் என்பதற்கு இதுவும் நல்ல சான்று.[1]

இவ்வண்ணம் இளையாத்தக்குடி நகரத்தார்கள் நடுச்சொல்லியும் கோயிற்பணி செய்தும் குறைத்திருப்பணிகளை நிறைவேற்றியும் ஊருணிகள் அமைத்தும் பதின்மூன்று, பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளிலேயே சிறப்புற வாழ்ந்திருக்கின்றனர் என்பது அறிய வருகிறது.

வேலங்குடிக் கல்லெழுத்துகள்

வேலங்குடிக் கல்லெழுத்து என்பது சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூர் வட்டம், வேலங்குடி கிராமத்தில் உள்ள ஒரு சிவன் கோயிலில் உள்ள சாசனத்தைக் குறிக்கும். இந்தச் சாசனத்திற்குப் **பூங்குன்றம் வேலங்குடிச் சாசனம்** எனப் பெயர். இதைச் சில சமயம் **சுண்டக்காடு வேலங்குடிச் சாசனம்** என்றும் குறிப்பிடுவது உண்டு. இதைப்பற்றி நகரத்தார் சரித்திரம் எழுதுபவர்கள் இது நகரத்தார் சரித்திரத்திற்கு ஆதாரமாக விளங்கும் ஒரு முக்கியமான தடயம் எனக்கூறிய போதிலும், இந்தச் சாசனத்தின் அசலோ, நிழல்படமோ, பிரதியோ சான்றாக இது வரை காட்டப்படவில்லை. அதைக் கண்டு பிடிக்கும் முயற்சியும் சிரமமாக உள்ளது என்றும் கூறிவிட்டார்கள். ஆனால் சென்ற நூற்றாண்டின் இறுதியில் பிரபலமாகாத சதாவதானம் சுப்பிரமணிய அய்யர் என்ற தென்னிந்திய ஆசிரியர்

1. இனியவன், நனிபுகழ் நகரத்தார், முதற்பதிப்பு, ஔவை மன்றம் நூல் வெளியீட்டகம், சேலையூர், 1990, பக் – 223

ஒருவர் 'தனவைசியராகிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம்' என்ற ஒரு தமிழ் நூலை எழுதினார். (தஞ்சாவூர் தேசாபிமானி அச்சுக்கூடம் 1894)

இந்நூல் துலாவூர் மடத்தில் (சிவகங்கை மாவட்டம், குன்றக்குடிக்கு அருகிலுள்ள ஒரு சிறு கிராமம்) இருந்த ஒரு ஓலைச்சுவடியை அடிப்படையாகக் கொண்டது என நம்பப்படுகிறது. இந்தச் சுவடியோ, வேலங்குடிக் கல்வெட்டை ஆதாரமாகக் கொண்டது எனப்படுகிறது. வேலங்குடிச் சாசன அடிப்படையில் நகரத்தார் குடியேறிய சரித்திரம் கொண்ட சுப்பிரமணிய அய்யர் நூலின் சாரம் பல தமிழ் நூல்களில் காணப்படுகிறது. இந்த இன புராதன சரித்திரம், செல்வாக்கு, ஏற்றம் - இறக்கம், தமிழகத்தில் ஓரிடத்திலிருந்து பிற இடங்களுக்குக் குடியேற்றம் இவற்றை அலச புதிய ஆய்வாளர்களால் அந்நூலின் பல காலக் கணக்குகள் ஆதாரமாக ஏற்கப்பட்டுள்ளது.

இந்த நூலில் உள்ள சரித்திரம் கி.மு. 2898-முதல் கி.பி. 1565-வரை முடிகிறது. இதில் மூன்று குடியேற்றங்கள் குறிக்கப்படுகின்றன. முதலில் நாக நாட்டிலிருந்து தொண்டை மண்டலத்திற்கும், இரண்டாவது தொண்டை மண்டலத்திலிருந்து சோழ நாட்டிற்கும், மூன்றாவது சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டுக்கும் புகுந்தது பற்றியது. இச்சரித்திரம் பல சுவையான செய்திகளுடன் சாலிவாகன, கலி சகாப்தங்களில் உள்ளது. இந்நூல் நகரத்தார் சரித்திரத்திற்கு இதுவரை கிடைத்துள்ள செய்திகளில் முக்கிய ஆதாரம் எனப்பட்ட வேலங்குடிக் கல்வெட்டை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் 1894 முதல் நுணுக்கமாக ஆராயும் சில தென்னிந்திய ஆசிரியர்களால் அசல் வேலங்குடிச் சாசனங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதிர்ஷ்டவசமாகத் 'தென்னிந்திய நகரத்தார்' (The Nagarathar of south India) எனும் நூலை எழுதிய ஆசிரியர் திரு. எஸ். சந்திரசேகரன் அவர்கள் அந்தச் சாசனத்தின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்ததோடு மைசூர் தொல்பொருள் அலுவலகத்திலிருந்து ஒரு நிழற்படி நகலையும் கொணர்ந்தார். இந்த 12-ஆம் நூற்றாண்டின் சாசனம் அசல் வேலங்குடிச் சாசனமாயிருக்கலாம் என நம்புகிறோம்.

சாசன வாசகம் வருமாறு:

1. **ஸவஸ்தஸ்ரீ [ ] கோச்சடையபன்மரான திரிபுவனசக்க [ர்]வத்**
2. **திகள் ஸ்ரீ விக் [கி] ரம பாண்டிய தேவற்கு யாண்டு ரு எதிரா [மா[ண்]டு]**
3. **பூங்குன்ற நாட்டு வேலங்குடி வாணிய நகரத்தோம் எங்கள் தெ**
4. **ருவில் பாடிகாவல் நாயநார்க்கு குடுத்தோம் ந[க] ரத்தோம் சனத்தி**

5. ஊர் பகல் வாணிய நகரத்தோம் கல்வெட்டி குடுத்தோம் உடர்
6. ஆண்டொன்றுக்கு இதுக்கும் பழங்காசு இரண்டும் பெரு மிளகு ெ
7. பாதிக்கு காசு . . ம் பாக்கு பொதி ஒன்றுக்கு காசு உஇம் எள் பொதி க
8. க்கு கா[சு] உஇ ம் நெற்பொதிக்கு காசு கறும் அரிசி பொதிக்கு காசு உஇ ம் பரித்தி பொ -
9. திக்கு காசு உஇ ம் உப்பு பொ[தி]க்கு காசு கறும் இப்படிக்கு வேலங்குடி முதலி-
10. களும் ஊரும் அமைஞ்சு சொல்ல இப்படி செய்து குடுத்தோம் இவ்வூ ர் வா -
11. ணியரொம் பிளவால் ஒரு கட்டி பிண்ணாக்கும் குடுப்போமா
12. கவும்

இதைச் சந்தேகிக்க ஒரு காரணமும் இல்லை. ஏனெனில் இச்சாசனம் தோற்றம், வளர்ச்சி, குடியேற்றம் பற்றிய விவரங்கள் ஏதும் அளிக்க வில்லை. இது வேலங்குடித் தெய்வத்திற்கு வேலங்குடி வாணிக நகரத்தாரால் அளிக்கப்பட்ட கொடைகளை மட்டுமே குறிக்கிறது. வேறு எதுவும் இல்லை. ஆகையால் முன் ஒரு நூற்றாண்டில் ஆதாரமற்ற விபரங்களைக் கொண்டே நகரத்தார் சரித்திரம் கையாளப்பட்டுள்ளது என்றே கொள்ள வேண்டும். [ஒரே வார்த்தையில் கூறினால் இந்த ஆசிரியர் திரு. எஸ். சந்திரசேகரர் கருத்துப்படி இந்த இனத்தைப் பற்றிய ஓர் எலும்புக்கூடு போன்ற சரித்திரத்தைக் கூட நிலைநாட்ட ஒத்துக்கொள்ளக்கூடிய ஆதாரமான சான்றுகள் ஏதும் இல்லை.][1]

இச்சாசனத்தின் எண் *507/1958-59* கருத்து வருமாறு:

வாழ்க! வளம்! சடையவர்மனான திரிபுவன சக்கரவர்த்திகள் விக்கிரம பாண்டிய தேவர்க்கு ஆண்டு ஐந்து எதிராம் ஆண்டில், பூங்குன்ற நாட்டு வேலங்குடி வாணிய நகரத்தாரான நாங்கள் நாயனாருக்குக் கீழ்கண்ட இறைகளை ஒதுக்கியுள்ளோம். மேற்கண்ட உரிமையைக் கோயிற் சுவற்றில் வெட்டுவிக்கச் செய்தோம். அவை பின்வருமாறு:

ஊரார் மீது விதிக்கப்படும் பாடிக்காவல் - ஆண்டுக்கு இரண்டு பழங்காசு.

மிளகு வரி - ஒரு பொதிக்கு ___ காசுகள்
ஒரு பொதி பாக்குக்கு இரண்டரை காசுகள்
ஒரு பொதி எள்ளுக்கு இரண்டரை காசுகள்

1.S. Chandrasekhar, The Nagarathars of South India, The Macmillan company of India Ltd.,Madras, 1980, p 29 - 30.

ஒரு பொதி நெல்லுக்கு 1 1/8 காசுகள்
ஒரு பொதி அரிசிக்கு இரண்டரை காசுகள்
ஒரு பொதி பருத்திக்கு இரண்டரை காசுகள்
ஒரு பொதி உப்பிற்கு 1 1/8 காசுகள்

இவ்விதம் வேலங்குடி ஊராரும், அதிகாரிகளும் ஒத்துக் கொண்டோம். மேலும் வேலங்குடி வாணியர்களான நாங்கள் கோயிலுக்கு ஒரு துண்டு பிண்ணாக்கு கொடுக்க ஒப்புறோம்." எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

கடல் கடந்த நாடுகளில் தமிழ்க் கல்வெட்டுகள்:

எகிப்து நாட்டில் செங்கடல் பகுதியில் உள்ள ஒரு துறைமுகப்பட்டினம் பெரெனிகே' (Berenike). இங்கு அமெரிக்க தெலாவேர் (Delaware) பல்கலைக் கழகப் பேராசிரியர் ஸ்டீவன் ஸைட்பாதம் (Steven E.Sidebotham) அகழாய்வு செய்த போது ஒரு ரோமானிய மதுச்சாடியின் (Amphorae) சிதைந்த பகுதியில் தமிழ் எழுத்துகள் அறியப்பட்டுள்ளன.[1]

'கொற்ற பூமான்'

என்று உள்ள இவ்வெழுத்துகளில் 'ற', 'மா', 'ன்' ஆகிய எழுத்துகள் தமிழுக்கே உரியவை.[2] இதன் காலம் கி.பி. 60-70 என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதே பகுதியில் குசெயிர் அல் காதிம் `Quseir-Al-Qudim' என்ற துறைமுகப்பட்டினத்தில் கிடைத்த தமிழ்நாட்டுக் கறுப்பு-சிவப்புப் பானை ஓடுகள் தற்பொழுது கெய்ரோ நகர அருங்காட்சியத்தில் உள்ளன. அவற்றில்

'கணன்'

'சாத்தன்'

என்று தமிழ்ப் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. இவையும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

தாய்லாந்து நாட்டின் தீபகற்பப்பகுதியில் பு காவ் தோங் (Phu Khao Thong) என்னுமிடத்தில் தாய்லாந்து மற்றும் பிரான்ஸ் நாட்டு தொல்லியல் அறிஞர்கள் கூட்டாக அகழாய்வு நடத்தி வருகின்றார்கள். அகழாய்வில் கி.பி. 2 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் - பிராமி பொறித்த ஒரு பானை ஓடு கண்டெடுக்கப் பட்டுள்ளது.

---

1. Steven E.Sidebotham and willemina Z.wendrich, preliminary report of the 1995 excavation at Berenike and the survey of thy Eastern desert.
2. Iravatham Mahadevan, Ancient Tamil contact: Recent Epigraphical evidences, Journal of the Institute of Asian studies, Vol - XII, No.I, 1994, pp. 136 - 155.

இப்பானை ஒட்டிலுள்ள தமிழ் - பிராமி எழுத்துக்கள் புகளூர் குகைக்கல்வெட்டுகளைப் பெரிதும் ஒத்துள்ளன. எனவே இந்தப் பொறிப்பு கி.பி. 2 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கருதலாம். இதுவே இதுவரை தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கிடைத்துள்ள தமிழ் சாசனங்களில் மிகவும் பழமை வாய்ந்தது ஆகும்.

பானை ஒட்டில் காணப்படும் எழுத்துக்களாவன:

'தூ ற ஓ'

முழுமையாக இல்லாததால் இதன் பொருளை ஓரளவு ஊகித்துத்தான் உணர முடியும். சொல்லின் இறுதியில் **'ஓ'** என்ற உயிரெழுத்து வந்துள்ளதால் இது தமிழ் - பிராமி கல்வெட்டுகளில் காணப்படும் ஒன் அல்லது ஓர் ஆகிய விகுதியுடன் முடியும் சொல்லாக இருக்கலாம். மேலும் **'துறஓ (ன்)'** அல்லது **'துறஓ (ர்)'** ஆக இருக்கலாம். **'துறவோன்'** அல்லது **'துறவோர்'** ஒரு துறவியின் பெயரின் பகுதியாக இருக்கக்கூடும். தமிழகத்திலிருந்து அக்காலத்தில் தாய்லாந்து நாட்டுக்குச் சென்ற புத்தமதத் துறவிகளில் ஒருவரின் பெயராக இது இருக்கக்கூடும்.[1]

தாய்லாந்தில் **கிளோங் தோம்** (Klong Thom) என்ற இடத்தில் நிகழ்ந்த அகழாய்வில் தங்கத்தினை மாற்றுப் பார்க்கும் ஓர் உரைகல் கிடைத்துத் தற்போது புத்த மதத்தினர் நடத்தும் அருங்காட்சியகத்தில் உள்ளது. அதில் கி.பி. 3-4-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்தில்

'பெரும்பதன் கல்'

என்று அதனில் எழுதப்பட்டுள்ளது. 'ம்', 'ன்' ஆகிய இவ்வெழுத்துக்கள் தமிழுக்கேயுரிய பண்டைய எழுத்துகளாகும்.[2] தமிழகப் பொன் வணிகன் பல நூறு ஆண்டுகளுக்கு முன் தாய்லாந்து சென்றமைக்கு இது நல்லதொரு சான்றாகும்.

தாய்லாந்தில் உள்ள **நக்கோன்ஸி தம்மாரத்** (Nakhon-Si-Tammarat) என்ற நகர அருங்காட்சியகத்தில் **தகு-வாபா** என்ற இடத்தில் கிடைத்த கி.பி. 8-9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் கல்வெட்டு ஒன்றுள்ளது. இதில் தமிழக வணிகர்கள் குளம் வெட்டித் திருமாலுக்காகக் கோயில் எடுத்த செய்தி சொல்லப்பட்டுள்ளது. இவ்வணிகர் குழுவினர் **மணிக்கிராமத்தார்** என்று அழைக்கப் பட்டனர். (காவிரிப்பூம்பட்டினம் அருகில் இன்றும் மணிக்கிராமம் என்ற ஊர் உள்ளது. அங்கு நடந்த அகழாய்வில் ஏராளமான வண்ணக்

1. ஐராவதம் மகாதேவன், தாய்லாந்தில் தமிழ் – பிராமி பொறித்த பானை ஓடு, ஆவணம் இதழ் – 17, பக், 12 – 13, ஜுலை – 2006.

2. ப. சண்முகம், தமிழ்நாடும் தாய்லாந்தும்: தொன்மைத் தொடர்புகள், ஆவணம் இதழ் 3, பக், 81 – 84.

கல்மணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.) இவ்வணிகர்கள் தங்கள் பாதுகாப்புக்காக **'சேனாமுகம்'** என்ற படையினரை வைத்திருந்தனர்.

பரோஸ் (BAROS) *சுமத்திராவில் கி.பி. 1088-இல்* திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்ற தமிழக வணிகர் பற்றிய குறிப்புகள் உள்ளன.

கி.பி. 1183-ஆம் ஆண்டைச் சார்ந்த சோழர் காலத் தமிழ்க் கல்வெட்டு ஒன்று தாய்லாந்தில் உள்ள **நக்கோன்-ஸி-தம்மாரத்** (Nakhon-Si-Tammarat) என்ற நகரப் புத்தர் கோயிலில் பாதுகாக்கப் பட்டு வருகிறது. **தந்ம சேநாபதி** என்பவர் கொடுத்த கொடைகளை இது குறிப்பிடுகிறது.

தாய்லாந்தில் தமிழர் காசுகள்

சங்ககாலச் சோழர் காசில் பாயும் புலியின் உருவம் பதிக்கப்பட்டிருக்கும். தாய்லாந்தில் **குவான் லுக் பாட்** (Khuan Luk pat) என்ற இடத்தில் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சியில் இவ்வகை காசு ஒன்று கிடைத்துத் தற்போது ஒரு புத்தர் கோயில் அருங்காட்சியத்தில் உள்ளது. சதுர வடிவில் 2 செ.மீ. குறுக்களவுள்ள இந்தச் செப்புக் காசில் ஒருபுறம் பாயும் புலியும், மறுபுறம் யானை, குதிரை பூட்டிய தேர் ஆகியவற்றின் உருவங்களும் உள்ளன. இதே இடத்தில் கிடைத்த மற்றொரு காசில் ஒருபுறம் காளையும், மறுபுறம் பாய்மரக்கப்பலும் உள்ளன. இது பல்லவர் காலத்திய காசாகும்.[1] தாய்லாந்தில் தமிழர் வாணிகமும், காசுப்புழக்கமும் பல்லவர் காலம் மற்றும் சங்க காலத்திற்கு முன்பே இருந்தமைக்கு அக்காசுகள் நல்ல சான்றாகும். எனவே 2000 ஆண்டுகளுக்கு முன்பே கடல் வழி வாணிகம் தொடங்கிவிட்டது என்பதை இந்நாணயச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. வணிகர்கள் விட்டுச் சென்ற தமிழ்ச் சொற்கள் இன்றும் இந்தோனேஷியாவில் (ஜாவா, சுமத்திரா, பாலி) வழக்கில் உள்ளன. அவற்றில்,

ஆப்பம், உண்டை - உருண்டை, கப்பல், கடலை, காவல் (Security), கொண்டை, கோயில், சுங்கை (Tax), திரை என்ற சொற்கள் குறிப்பிடத்தக்கவை.

⌘ ⌘ ⌘

1. Dr.P. Shanmugam, Two Coins of Tamil Origin from Thailand, Studies in South Indian Coins, Vol - IV, pp 95 - 100.

9. பட்டயங்கள் - நகரத்தார்

இரண்டாவது ஆதாரமாகப் பழனி பட்டயங்களோ, பழனிக் கோயில் ஆவணங்களோ கொள்ளப்படுகின்றன. பழனி, திண்டுக்கல் மாவட்டத்தின் அருகே உள்ள ஒரு சிறு நகரம். இந்நகரத்தில் மலை மீது தமிழ்க் கடவுளான தண்டாயுதபாணிக்கு ஒரு கோயில் உள்ளது. இந்தப் பட்டயங்கள் தமிழில் ஓலைச் சுவடிகளாக உள்ளன. டாக்டர். வ.சுப. மாணிக்கம் அவர்கள் (மதுரை காமராசர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்) எட்டுப் பழனிப் பட்டயங்களையும் ஆராய்ந்து உள்ளார்.[1] அதன் பெயரும், விவரமும் காலமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. நிரம்பவழகிய தேசிகர் பட்டயம் - கி.பி.1627
2. பழனிக் கோயில் நடப்பு அட்டவணை - கி.பி.1670
3. ஏழு நகரத்தார் தரும சாசனங்கள் - கி.பி.1680
4. ஏழு நகரத்தார் தரும சாசனங்கள் - கி.பி.1766
5. ஏழு நகரத்தார் தரும சாசனங்கள் - கி.பி.1788
6. பிரான் மலை ஆதீனம் நடப்பு அட்டவணை - கி.பி.1800
7. ஆதீனம் பட்டாபிஷேகக் கணக்கு - கி.பி.1802
8. மடாலய தருமசாசனம் - கி.பி.1805

பட்டயத்தின் அமைப்பு முறைகள்

சாலி, கலி, தமிழ் என்ற மூன்று வகை ஆண்டுகளும் திங்கள், நாள், கிழமை, ஓரைகளும் பல பட்டயங்களில் குறிக்கப்பட்டுள்ளன. இன்னாருக்கு இன்னார் முன்பாக, இன்னார் கொடுத்த தருமசாசனப் பட்டயம் என்று எழுதும் முறையை இங்குக் காண்கின்றோம். இதில் விளக்கமாகவும் முடிவில் தொகுத்தும் சாசன நோக்கம் தரப் பட்டுள்ளது. சமயத்துறையில் யார் யார்க்கு என்னென்ன மரியாதைகள், மரியாதை வரிசைகள், அவ்வரிசைக்குரிய காரணங்கள், அற்புத நிகழ்ச்சிகள், பூசை நடப்புகள், அந்நடப்புக்கு வேண்டும் பொருள் தரங்கள் எல்லாம் சந்தேகத்திற்கு இடமின்றிக் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைக் குறிக்கும் நோக்கமே இப்பட்டயங்கள் தோன்றிய நோக்கமாகும். ஒரு பழங்

1. டாக்டர் வ.சுப. மாணிக்கம், (பதிப்பாசிரியர்) நகரத்தார் அறப்பட்டயங்கள், (நெற்குப்பை அன்னதான மடம்,) 1961.

கையெழுத்துப் புத்தகப் படியிலிருந்து இந்நூல் அச்சாக்கப்பட்டது. எனினும் மூலப்பட்டயங்கள் ஏடுகளாக இருந்தன என்று அறிய வேண்டும்.

இவ்வறப் பணியை உலகம் உள்ளவரை நடத்துவோம் எனவும், எது நிலைத்து இருந்தாலும் இவ்வறநிலை திரியோம் எனவும், இவ்வறத்திற்கு இடையூறு செய்தவர்கள் இன்ன பழிக்கு ஆளாவார்கள் எனவும் இறுதியில் விடாது குறிப்பிடுவது இப்பட்டயங்களின் வழக்காறாகும். இச்சாசனம் எழுதினது இன்னார் சொற்படிக்கு இன்னார் என்று காட்டி முடிக்கப்படும். யார் எழுதினால் சாசன நோக்கம் வலுப்படுமோ அவரைக் கொண்டு எழுதச் சொல்லும் அறிவுடைமையைப் பார்க்கின்றோம். பட்டயத்தின் தொடக்கத்திலும் கடைசியிலும் முருகன் பாடல்கள் இருத்தலுண்டு. இனி ஒவ்வொரு பட்டயத்தின் கருத்தினையும் சுருக்கமாகக் காண்போம்.

1. பழனிக் கோயில் நடப்பு அட்டவணை

நேமங்கோயில் இளநல வகுப்பு குப்பாபிச்சஞ்செட்டி மகன் குமரப்பன் பழனித்தலம் சென்று உப்பு வணிகம் செய்தது.

பழனிக்கோயில் தெய்வநாயக பண்டாரத்து மனையில் தங்கிப் பண்டாரத்தின் உதவியையும் அவர் மனைவி பார்வதியம்மாள் உதவியையும் பெற்றது,வேலாயுத சுவாமிக்கு இலாபத்தின் மகமைப் பணம் சேர்த்தது, பிறக்கோயில் நகரச் செட்டியார்களும் குமரப்பனோடு உப்பு வணிகத்திற்குச் சேர்ந்து கொண்டது, உப்புச் செட்டிகள் என்ற பெயர் பெற்றது, (கலாமடம்) ஈசானிய சிவாச்சாரியார் கட்டளைப்படி குமரப்பன், பழனிக்குக் காவடி கட்டியது, இன்னின்ன இடத்தில் தங்கிச் சென்றது, ஐந்து நாள் மகேசுவர பூசை செய்தது, ஏழு கோவில் நகரத்தாரும் காவடி எடுத்தது, ஈசானிய குருதேசிகர், குமரப்பன் முதலானவர் பசியைப் போக்கியது, பூசைக்குப் பிரம்புத்தடி அருளியது, குமரப்பன் சம்பட்டியில் நத்தலிங்க நாயக்கர் மனைவியின் வயிற்றுவலியைப் பழனியப்பர் அருளாற் போக்கியது, நாயக்கர் மனைவி குமரப்பன் வீடு தேடிவந்து நன்றி செலுத்தியது, நாயக்கர் இரண்டு வேலாயுதம் பழனியப்பருக்குக் கொடுத்தது, வேலாயுத சுவாமி பார்வதியம் மாளுக்கும், குமரப்பன் பெண்சாதி சிட்டாளுக்கும், ஈசானிய சிவாச்சாரியாருக்கும், ஆயிக்குடி சமீந்தாருக்கும் கனவில் தோன்றிச் சொல்லியது, சமீன்தாரின் சுரநோயைப் போக்கியது, மண்டகப்படி நடத்துவது, பண்டாரத்து மனையை மடமாக வைத்துக் கொள்வது, பண்டாரத்துக் குடும்பத்தார்க்கும் வழி வழி நன்றி மறவாதிருப்பது என்ற கருத்துகளும், இன்னாருக்கு இன்ன முறையில் கொடுப்பது என்ற வகையில் கட்டளை வரன் முறைகளும் இவ்வட்டவணையில் சொல்லப்பட்டுள்ளன.

மண்டகப்படியில் பண்டாரத்துக்கு அரிதிப் பரிவட்டமும், குமரப்பனுக்கு அலங்காரப் பரிவட்டமும், நகரத்தார்களுக்கு முதலாவது திருநீறும் காளாஞ்சியும் கொடுப்பது எனவும் நகரப் பொதுவிலிருந்து (கலாமடம்) ஈசானிய குரு தேசிகருக்கும் (பாதரக்குடி) திருப்புனல் தேசிகருக்கும், தெய்வநாயக பண்டாரத்துக்கும், குமரப்பனுக்கும் கொடுப்பது எனவும் இனம் ஒன்றுக்குத் திருநீற்றுப்பை ஒன்று கொடுப்பது எனவும் மரியாதைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

2. ஏழு நகரத்தார் தருமசாசனம்

இது தெய்வசிகாமணி பண்டாரத்து மகன் தெய்வநாயக பண்டாரத்துக்கு ஏழு நகரத்தாரும் எழுதிக் கொடுத்த தருமசாசனம். சாலி ஆண்டு 1780 என்பது பிழையெனத் தோன்றுகின்றது. கலியாண்டோடும் பிறசாசனங்களோடும் ஒத்திட்டுப் பார்க்கும் போது, சாலி 1520 என இருத்தல் வேண்டும் போலும். யுகங்களின் பெயர்கள், நகரத்தார் பெருமைகள், ஏழு நகரத்தாரின் இருபத்திரண்டு வகுப்புகள், தெய்வநாயக பண்டாரத்துக்கும் அன்னதான மடத்துத் திருவிழாவிற்கும் கொடுக்க வேண்டிய அரிசி முதலான பொருள் அளவுகள், தீர்த்தமும் திருநீறும் வழங்கும் மரியாதை வரிசைகள், பத்தாம் திருநாள் மண்டகப்படியில் கொடுக்கும் பொருளளவுகள், தங்கிவர வேண்டிய இடங்கள் எல்லாம் இச்சாசனத்தில் எழுதப்பட்டுள்ளன.

சோழவரசன் நகரத்தார் பெண்ணை மருவிப் பொறுக்க முடியாத தொந்தரவு செய்தபடியால், இளையாத்தங்குடி வந்த செய்தியையும், அரச தண்டனைக்கு ஒக்கூருடையான் மறுதலை கொடுத்த படியால் நகரக்கோயில்களில் ஒக்கூருடையானுக்கு முதல் மரியாதை நடக்கின்ற செய்தியையும் அறிகின்றோம். எனினும் நேமம் குமரப்பன் பழனித்தலத்துக்கு உப்பு விற்க வந்து பட்டபிரயாசையை மதித்து, பழனித்தலத்தில் முதல் விபூதியும் காளாஞ்சியும் பரிவட்டமும் குமரப்பனுக்கு நடக்கட்டும் என்று ஏழு நகரத்தார் அனைவரும் ஒரே மனதாய்ப் பேசி முடிவெடுத்தனர் என்பது இச்சாசனத்தின் உயிரான கருத்தாகும். இச்சாசனம் நகரத்தார் சொற்படிக்கு ஒக்கூருடையான் உடையப்ப செட்டி அடைக்கப்பன் எழுதியது. ஒக்கூருடையான் தனக்கு உரிய முதல் மரியாதையைப் பழனித்தலத்தில் நேமம் குமரப்பனுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருப்பதால், இச்சாசனத்தை ஒக்கூருடை யானைக் கொண்டு எழுதச் சொல்லினர் நகரத்தார் என அறியவேண்டும். ஏழு நகரத்தாரும் தனித்தனி ஆறு கால் கூடத்தில் குமரப்பனைக் கும்பிட்டு விழுந்து திருநீறு வாங்கிக் கொள்வது என்ற

மரியாதைச் செய்தியும், குமரப்பன் சன்னிதியில் முதல்வருடம் பட்டம் கட்டுகின்ற விவரமும் அறியலாம்.

3. ஏழு நகரத்தார் தருமசாசனம்

இது சாலி 1688-கலி 4868 (கி.பி. 1766) ஆம் ஆண்டில் குழந்தை பண்டாரத்து மகன் குமாரசாமி பண்டாரத்துக்கு ஏழு நகரத்தாரும் அளித்த சாசனப் பட்டயம். மேலைச்சாசனம் போல யுகங்களின் பெயர்களும் நகரத்தார் பெருமைகளும் பிரிவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இரணிக் கோயில் பெ. குட்டயன் பண்டாரத்துக்கும் குடும்ப வழியினர்க்கும் கொடுக்கும் கட்டளைகளும், வைகாவூர் நாட்டு விசயகிரி வேலாயுதத் துரையவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்கும் என்று சொல்லியது, துரையின் பட்டத்தம்மாள் குட்டயனிடம் மகப்பேறு கேட்டது, குன்னக்குடியில் பெரியமருது பாண்டியர் மூன்று கேள்வி கேட்டுத் தக்க விடை பெற்றது, குட்டயனுக்குக் கணையாழியும் யானைக் கொம்பும் கொடுத்தது என்ற அற்புதங்களை அறியலாம்.

விசயகிரித் துரையும் மருது பாண்டியரும் உத்தரவிட்டபடி, இரணிக் கோயில் பெ. குட்டயனுக்கு அருளாடும் காரணத்தால், இரண்டாவது காளாஞ்சியும், மரியாதைக் காளாஞ்சியும் கொடுப்பது என்ற முடிவு வரிசைகளும் காரணங்களும் முறைகளும் 59-62ஆம் பக்கம் வரை விரிவாக இடம் பெற்றுள்ளன. இப்பட்டயத்தில் விசயநகரத்து அரசர்களையும், அவர்கள் வழியாண்ட நாயக்கர்களையும், மகாமண்டலேசுவரன் எழுபத்தேழு பாளையம் முதலியவற்றையும் பற்றிச் சிறந்த குறிப்புகள் உள்ளன.

4. ஏழு நகரத்தார் தருமசாசனம்

இது சாலி 1710-கலி 4889 (கி.பி. 1788) ஆம் ஆண்டில் குமாரசாமி பண்டாரத்து மகன் தெய்வநாயக பண்டாரத்துக்கு ஏழு நகரத்தாரும் கொடுத்த தருமசாசனப் பட்டயம். நகரத்தார்களின் பெருமைகள், பிரிவுகள், ஐந்து நாள் பூசைக்கும் அன்னதானமடத்துத் திருவிழாவுக்கும் கொடுக்கும் அரிசி, பொன், பழம் முதலியவை, பள்ளயத்துக்குக் கொடுக்கும் பொருள் அளவுகள் குறிக்கப்பட்டுள்ளன. வெற்றிலை பாக்கு, பழம், காய்கறிகளோடு புகையிலையும் சுருட்டும் கொடுப்பதுண்டு என்ற ஒரு புதுச் செய்தியை இப்பட்டயத்தில் அறிகின்றோம். நேமங்கோயில் குமரப்பனுக்கும் இரணிக் கோயில் குட்டயனுக்கும் பிறருக்கும் உரிய மரியாதை வரிசைகளும் காரணங்களும் 73-76 ஆம் பக்கங்களில் இடம் பெற்றுள்ளன. தெய்வநாயக பண்டாரத்து மனையில் முன்பிருந்த ஆறுகால் கூரைக் கூடத்தைக் கல்திருப்பணி மண்டபம் செய்ததும் குறிக்கத்தக்க முன்னேற்றங்களாம். இங்ஙனம் நகரத்தார் செலவு

செய்து பணி பெருக்கினாலும் அனுபவிக்கும் உரிமை பண்டாரத்து வழியினர்க்கு என்றும் உண்டு. வயிரவன் கோயில் வேலப்ப செட்டி வயிரவன் திருப்பணி வேலையில் மிக்க முயற்சி எடுத்துக் கொண்டதனாலும், சுவாமி வயிரவனிடம் நேரில் தோன்றிப் பேசியதனாலும் (பக் 76) நகரத்தார்களில் மூன்றாவது மரியாதை வயிரவனுக்கு உரியது என்பது இச்சாசனத்தின் உயிரான செய்தியாகும்.

5. பிரான்மலை ஆதீனம் நடப்பு அட்டவணை

பழனிக் கோயில் இடும்பன்மலை முதல் ஊர் வரும் வரையில் ஈசானிய சிவாசாரியார், பண்டாரம், குமரப்பன், நகரத்தார் செய்ய வேண்டிய முறைகள் கூறப்பட்டுள்ளன. இன்னாருக்கு இன்ன கடமை என்று சன்னிதானம் சொல்லியபோது ஆதீன மரியாதை தனக்கும் வேண்டும் என்று இரணிக் கோயில் திருவேட்பூருடையான் குட்டயன் கேட்டான். மற்றவர்களைக் கலந்து ஆலோசித்துத் திருவாவினன்குடியில் நடக்கிற பட்டு பரிவட்டமும் அந்தச் செலவும் குட்டயன் தனதாக இருக்கட்டும் என்று சுவாமி சொல்லியது. சன்னிதானம் ஊருக்கு வரும்போது குட்டயனுக்கு மூன்றாவது பட்டுப் பீதாம்பரம் கொடுக்கின்றது.

6. ஆதீனம் பட்டாபிடேக அட்டவணை

குமரப்பன் பழனியாண்டவர் அனுக்கிரகம் பெற்றபடியால், ஆதீனத்துக்கு வேண்டும் காரியங்களும் உழைப்பும் செய்த படியாலும் ஆதீன பட்டாபிடேகத்து இரண்டாவதாகக் குமரப்பன் பட்டு சாத்துகின்றது என்று ஈசானகுருதேசிகர் மொழிந்தார். இதனை இருபத்தொரு கோத்திரத்து நகரத்தார்களும் சரியென ஒத்துக் கொண்டனர். வழக்கம்போல் நடக்க வேணுமேயொழியப் புதுவழக்கம் செய்யப்படாது என்று இளையாத்தங்குடி பட்டணசுவாமி வகுப்பு அருணாசலம் செட்டி அண்ணாமலை மட்டும் சன்னிதானத்தின் திருவடியில் விழுந்து மறுப்புக் கூறினார். குமரப்பன் பெருமையைக் குரு தேசிகர் ஒத்துக் கொண்டதற்கு உறுதியாக அண்ணாமலையையே அட்டவணை எழுதும்படி ஈசானிய சிவாசாரியார் பணித்தார்.

7. மடாலயத் தருமசாசனம்

இது சாலி 1727-கலி 1906 (கி.பி. 1805) ஆம் ஆண்டில் நாகப்ப பண்டாரத்து மகன் குழந்தைவேலுப் பண்டாரத்துக்கு ஏழு நகரத்தார் அனைவரும் கொடுத்த சாசனப் பட்டயமாகும். முன்னைச் சாசனங்கள் போலப் பண்டாரத்துக்குக் கொடுக்கும் நடப்புகளும் பிறவும் குறிக்கப்பட்டுள்ளன. இடம் போதாமை யினால் அடுத்தமனை மோளையத்தேவன் வகையறா இடத்தை

விலைக்கு வாங்கி ஆக்குபுரையும் முப்பத்தொன்பது கால் திருப்பணி மண்டபமும் கட்டிய வளர்ச்சி குறிப்பிடத்தகும். மடத்திற்காக வாங்கிய இம்மனைகளும் பண்டாரத்தின் அநுபோகத்திற்கு உரியனவே. பிள்ளையார் கோயில் வகுப்பு முத்தப்பனுக்குச் சிவப்பட்டியில் பழனியாண்டவருடைய அருள் வந்த செய்தியும், தொண்டைமான் அரசர் முத்தப்பன் வீட்டிற்கு வந்து நினைத்த காரியத்தைக் கேட்டு மகிழ்ந்து சால்வை முதலியன கொடுத்த செய்தியும், முத்தப்பன் கேட்டுக் கொண்டபடி கோயில் வீட்டுக்குத் தாம்பூரவேல் கொடுத்த செய்தியும், நேமங்கோவில் பழனியப்பன் பழனிக் கோயிலுக்குக் காவடி எடுத்து வரும்போது இந்த வேலாயுதத்தையும் வைத்துப் பூசை செய்து வரும்படி சொல்லிய செய்தியும், இதனைச் சொல்வதற்காகப் பழனியப்பனை அரண்மனைக்கு அழைத்து வந்து மரியாதை செய்த செய்தியும் இப்பட்டயத்துக்கு முக்கியச் செய்திகளாகும் (பக் 96-98). தேவகோட்டை ரத்தினவேலாயுதமும் குன்றக்குடி வேலாயுதமும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

8. நிரம்பவழகிய தேசிகர் பட்டயம்

இது சாலி 1549 கலி 4739 (கி.பி. 1627) ஆம் ஆண்டில் ஏழு நகரத்தார் முன்பாகக் குன்றக்குடி ஆதீனம் நிரம்ப வழகிய தேசிகர் (துளாவூர் மடம்) கொடுத்த பட்டயம். யுகங்களின் பெயர்களும் நாயக்கர் பெயர்களும் முன்னர்க் குறிக்கப்பட்டுள்ளன. தேசிகர் பெருமை, நகரத்தார் பெருமை, கோத்திரம், குலசேகரபுர சவுந்திரபாண்டியன் நகரத்தார்களை நற்குடியாகத் தன் சீமைக்கு அழைத்தது, நகரத்தாரின் வெள்ளாட்டிப் பெண்கள் சோழன் உத்தரவிட்டும் (கலாமடம்) ஈசானிய குருதேசிகரைத் தொழ மறுத்தது, எங்கள் நிரம்பவழகிய குருதேசிகர் (துளாமடம்) பாண்டிய நாட்டிற்கு வந்தால் நாங்களும் போவோம் என்று உரைத்தது, வெள்ளாட்டிப் பெண்கள் தங்கள் குருவிடம் முறையிட்டது, சோழன் குருதேசிகரை வரவழைத்துப் பாண்டியன் பல கிராமங்கள் தருவான் என்று மொழிந்து இருபத்திரண்டு கோத்திரத்து நகரத்தார் ஆண்களும், வெள்ளாட்டிப் பெண்களும் பாண்டி நாட்டிற்கு வந்தது, பாண்டியன் எல்லோரையும் எதிர்கொண்டழைத்து மாகாணங்கள் சர்வமானியமாக அளித்தது, குன்றக்குடி ஆதீனம் அமைத்தது முதலான நகரத்தார் வரலாற்றுக் குறிப்புகளை இப்பட்டயத்துள் தெளிவாக அறியலாம்.

நேமங் கோயில் குமரப்பனும் அவன் மனைவி வெள்ளாட்டி சிட்டாளும் உப்புமாறி எடுத்த மகமையால் இந்த ஆதீனமும் பிற தருமங்களும் நடைபெறுகின்றன எனவும் பழனித் தலத்தில் போல இந்த தலத்திலும் நகரத்தார்களில் முதலாவது தீர்த்தம், திருநீறு குமரப்பனுக்குக் கொடுப்பது எனவும் நிரம்பவழகிய தேசிகர்

உத்தரவுப்படி நகரத்தார் அனைவரும் உடன்பட்ட செய்தியை இப்பட்டயம் முக்கியமாகச் சொல்கிறது. பட்டயங்களில் குறித்துள்ள நடப்புகள் இன்றும் பெரும்பாலும் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன. காலப்போக்கில் சில மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பினும் பட்டயங்களில் மரியாதை பெற்றோரின் வழிவந்தவர் களால் முன்னோர் பணிகள் இடையறாது காக்கப்பட்டு வருகின்றன. எல்லாப் பட்டயங்களிலும் முதல் மரியாதைக்குரியவரான நேமம் குமரப்பன் வழிவந்தோரே இன்று நெற்குப்பை கு.பழ. வீட்டினர். இரண்டாம் மரியாதைக்குரிய அருளாடி இரணிக் கோயில் பெ. குட்டயன் வழிவந்தோரே இன்று கண்டனூர் குப.சு. வீட்டினர். மூன்றாம் மரியாதைக்குரிய வயிரவன் கோயில் வயிரவன் வழி வந்தோரே இன்று காரைக்குடி கும.பெரி.சு.பழ. வீட்டினர். தாம்பூரவேல் பெற்ற பிள்ளையார் கோயில் முத்தப்பன் வழி வந்தோரே இன்று மேலைச்சிவபுரி ஆறு.முரு. குடும்பத்தினர். இக்குடும்பத்தார் இன்றும் தம் குழந்தைகளுக்கு முருகன் பெயர்களையே வைப்பர் என்பது குறிக்கத்தக்கதாகும்.

ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகட்கு முன் தோன்றிய இச்சாசனத்தமிழ் பல வகையாலும் ஊன்றி ஆராய்தற்குரியது. நகரத்தார்கள் ஔவையின் தமிழ்ப் பாட்டுக்குப் பொற்பாடகம் கொடுத்தார்கள் எனவும், 'வரப்புயர' என்று ஔவை உழவர்களை வாழ்த்தியது போல 'மடிச்சீலை பெருக' என்று வணிகம் செய்யும் இந்நகரத்தார்களை வாழ்த்தி வரம் கொடுத்தார் எனவும் இப்பட்டயங்கள் விளம்புகின்றன. நாயக்க மன்னன் **முத்தமிழ் அணங்கன்** என்றும், வள்ளுவமறையும் கற்று முப்பால் மொழியும்படியே அறிவை அறிந்து, அல்லவை கடிந்து, நல்லவை நாட்டிக் குடிதழைக்க ஆண்டான் எனவும் மொழிகின்றன. **நாங்கள் ஏழு நகரத்தார்கள் நட்ட கல்லையும், இட்ட சூலமும் அழிக்க மாட்டோம். மகாமேருகிரி சாய்ந்த போதிலும் கடல் ஏழும் வற்றின போதிலும், காவேரி வறண்ட போதிலும், சந்திராள் - சூரியாள் தெற்கு வடக்கான போதிலும் நாங்கள் நகரம் பொய் சொல்ல மாட்டோம் என வரும் உறுதிப்பாடுகள் நகரத்தாரின் நாணயத்தைப் பறைச்சாற்றுகின்றன.**

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி யெனப் படுவார்.

என்ற வள்ளுவ மறைப்படி வாழ்ந்தவர்கள் நகரத்தார்கள் என்ற கருத்தினை இந்த அறப்பட்டயங்கள் உறுதிப்படுத்துகின்றன! இந்தப் பழனிப் பட்டயம் பேச்சு நடைமுறைத் தமிழிலேயே உள்ளது. இது நகரத்தார்களின் முதலாவதும், பரம்பரையானதுமான உப்பு

1. டாக்டர் வ.சு. மாணிக்கம், (பதிப்பாசிரியர்) நகரத்தார் அறப்பட்டயங்கள், (நெற்குப்பை அன்னதான மடம்,) 1961

வாணிகத்தைக் குறிப்பிடுகிறது. மேலும் பழனிக் கோயிலுக்கு அளித்த கொடைகள், கி.பி. 17-18 ஆம் நூற்றாண்டுகளில் கோயில் சம்பந்தமான சமய நடவடிக்கைகள் பற்றியும் உள்ளது. இந்தக் காலங்களில் இப்பகுதி மதுரை தெலுங்கு நாயக்கர்களால் ஆளப்பட்டது. இதில் இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கைச் சீமையை கி.பி. 1780 முதல் 1781 வரை ஆண்ட மருது பாண்டிய சகோதரர்கள் வசம் சிவகங்கைப் பகுதி இருந்தது.

இந்த ஆவணங்களில் உள்ள கருத்துகள் நகரத்தார்களைப் பற்றிய முத்திரைக் கருத்துகளாக உள்ளன. இரண்டாவது சாசனத்தில்தான் (ஒலைச்சுவடியிலோ, தாமிர செப்புப் பட்டயத் திலோ பொறிக்கப்பட்ட ஆவணம்) முதல் முதல் விவாகமான தம்பதிகளைக் குறிக்கும் **'புள்ளி'**, ஒவ்வொரு புள்ளியும் கொடுக்கும் பணம் - **'புள்ளிக்காசு'** பற்றி வருகிறது. ஒவ்வொரு நகரத்தார் புள்ளியும் கோயிலாரும், நகரத்தாரும் ஒப்புக்கொண்ட ஒரு தொகையைக் கோயிலுக்குக் கொடுக்க வேண்டும். இது பழனிக்கோயில் பராமரிப்பு, மற்றும் சமய காரியங்கள் நிகழ்த்தப் பயன்படுத்தப் படுகிறது. பிற சாசனங்களும் இப்பணிக்கு வசூலிக்கும் தொகையைக் குறிப்பிட்டு உதவுகிறது. இங்குப் புள்ளி என்பது குடி (குடும்பம்) என்பதற்கு இணையானது. **இந்த ஆவணங்களி லிருந்துதான் புள்ளி என்ற சொல் சுமார் கி.பி. 1670 - லிருந்து நகரத்தார்களிடம் வழக்கத்திற்கு வந்ததை அறிகிறோம்.**

மற்றொரு சொல்லான **'வெள்ளாட்டி'** இந்த ஆவணங்களில் சில இடங்களில் காணப்படுகிறது. நகரத்தார் புராணத்தில் நகரத்தார் ஆண்கள் வேளாளகுலப் பெண்களை மணம் செய்ததாகக் கதை உண்டு. பொதுவாக நகரத்தார்கள் பரம்பரை மூன்றாம் வர்ண வைசியர்களாகும். இந்த வேளாளர்களோ நான்காம் வர்ண விவசாயி இனத்து உட்சாதியைச் சேர்ந்தவர்கள். இது நிச்சயம் கலப்பு மணமே! சாசனச் சான்றுபடி **வெள்ளாட்டி** என்றால் **மனைவி** என்று பொருள். குமரப்பன் என்பவன் மனைவி ஆவணத்தில் வெள்ளாட்டி சிட்டாள் எனக் குறிக்கப்படுகிறாள். **ஆச்சி** என்ற பதம் (இன்று நகரத்தார் மனைவிக்கு வழங்கப்படும் பெயர்) அன்று வழக்கத்திலில்லை.

மேற்கண்ட சாசனங்களில்தாம் பரம்பரையாக நகரத்தார்கள் தங்கள் பெயரை எழுதும் அபூர்வ விதம் முதன்முதலாக வெளியாகிறது. அதில் **முருகப்ப செட்டி வீரப்பன், அருணாசலம் செட்டி இராமநாதன்** என வருகிறது. இதன் பொருள் வீரப்பன், முருகப்ப செட்டியின் மகன், இராமநாதன், அருணாசலம் செட்டியின் மகன் என்பதாகும். **மொய்** (சமூக விழாக்களில் விருந்தினர் வழங்கும் பணம்) எழுதும் கணக்கிலும், திருமணத்திலும்

1. S. Chandrasekhar, The Nagarathars of South India, The Macmillan company of India Ltd.,Madras, 1980, p 33.

மாப்பிள்ளைகளின் பெயர்களும் இவ்விதமே குறிக்கப்படுகிறது. இதனால் முருகப்ப செட்டியின் மகன் வீரப்பன் எனச் சொல்வதில்லை. முருகப்ப செட்டி வீரப்பன் என்றே குறிப்பது வழக்கம். இப்பழக்கம் இன்று வரை உடன்படிக்கை, சட்ட சம்பந்தம் கொண்டவை போன்றவற்றில் நீடிக்கிறது.

இரணியூர் செப்பேடுகள்

இரணியூரில் வரலாற்றுச் சிறப்புடைய 3 செப்பேடுகள் இந்நூலாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[1] முதல் செப்பேடு விஜயநகரப் பேரரசு மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இச்செப்பேட்டின் காலம் கி.பி. 1775 என்பதால் அரசன் பெயர் குறிக்கப்படவில்லை.

ஸ்ரீமகாமண்டலீசுவரன் எனத் தொடங்கும் இச்செப்பேடு சிவபரபிம்பம் துணை என முடிகிறது. இச்செப்பேடு இரண்டு பக்கங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. இச்செப்பேட்டின் முதல் பக்கத்தில் 37 வரிகளும் இரண்டாம் பக்கத்தில் 32 வரிகளுமாக மொத்தம் 69 வரிகளைக் கொண்டுள்ளது. இது 24 செ.மீ. நீளமும் 16.5 செ.மீ. அகலமும் கொண்டது.

காலம்

சாலிவாகன சகாப்தம் 1697

ஆங்கில ஆண்டு கி.பி. 1775

தமிழ் ஆண்டு மன்மத வருடம் ஐப்பசி மாதம் 19-ஆம் தேதி.

செய்தி

கி.பி. 1775இல் கல்வாசல் நாட்டில் குலசேகரபுரமான இளையாத்தங்குடியில் நான்கு வகை வேளாளரும் ஊரவரும் அற விலைப் பிரமாணமாக மேற்படியூரில் நிலம் விடுவதைப் பட்டயம் விரிவாகக் குறிக்கிறது. இளையாத்தங்குடி ஆவுடையார் கோயில் உபகிராமத்தாரும், நயகுடி நாலாயிரமும், மணலூரு டையாரும், ஏழு நகரமும் கூடியிருந்து கரைச் சீட்டு போட்டு ஆறு வகை கருமார்படை முதலிகளுக்கு நிலம் விடுகின்றனர். இந்நிலத்தின் எல்லை செப்பேட்டில் விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளது.

நிலம் விட்ட இடம் இரணியூர் செம்பகம்பேட்டையாகும். இப்பட்டயம் ஆட்கொண்டயீசுவரன் கோயிலில் ரிஷபத்தடியில் கல்வெட்டாகவும் வெட்டப்பட்டுள்ளது எனச் செப்பேடு குறிக்கிறது. பட்டயத்தில் வேளார் தானம் செய்வதும் கருமார் படை தானம் பெறுவதும் பார்க்கிறோம். பட்டயத்தில் தொழிலாளி என்னும் சொல்லாட்சி காணப்படுகிறது.

அறுபடை மூவேந்த வேளார் பொய் சொல்லா மெய்யன் என்ற நாட்டுக் கணக்கரின் உத்திரவுப்படிக்கு இப்பட்டயத்தைச் சிதம்பர பத்தர் வெட்டியுள்ளார்.

பிற செய்திகள்

இப்பட்டயத்தில் நாலு வகை வேளார்களும் ஆறு வகைப் படையினரும், ஏழு நகரத்தாரும், மாத்தூர் நகரத்தாரின் ஒரு பிரிவான மணலூருடையாரும், நயக்குடி நாலாயிரமும் குறிக்கப்படுகின்றன.

நாலுவகை வேளார்

1. இரணி வேளார்
2. செம்பக வேளார்
3. ஆக்கொண்ட வேளார்
4. கணபதி வேளார்

ஆகிய நால்வரும் நாலு வகை வேளார் ஆவர்.

ஆறுவகைப் படையினர்

இச்செப்பேட்டில்

1) கருமாரு படை மன்னர் முதலிகாடப்பிள்ளை உள்ளிட்டார்.
2) சுந்தராண்டியப்பன் உள்ளிட்டார்,
3) காளியளகப்பன் உள்ளிட்டார்,
4) கள்ளமுளி பெரியளகன் உள்ளிட்டார்,
5) ஆக்கொண்டான் புள்ளான் உள்ளிட்டார்,
6) நயினானங்காடன் உள்ளிட்டார்.

ஆகிய அறுவரும் ஆறுவகை கருமாரு படைமன்னர் முதலிகளாவர்.

ஏழு நகரம்

இப்பட்டயத்தில் ஏழு நகரமும் கூடியிருந்து என்னும் குறிப்புக் காணப்படுகிறது. ஏழு நகரம் என்பது, 1) இளையாத்தங்குடி, 2) மாத்தூர், 3) வைரவன் கோயில், 4) நேமம், 5) இலுப்பைக்குடி, 6) சூரைக்குடி, 7) வேலங்குடி என்ற கோயில் நகரத்தார்களைக் குறிக்கும் சொல்லாகும்.

நாடும் ஊரும்

செப்பேடு கல்வாசல் நாடு என்னும் நாட்டுப் பிரிவைக் குறிக்கிறது. இது பாண்டியர் காலக் கல்வெட்டுகளில்

குறிக்கப்படும் 'கல்வாய் நாடு' ஆகும். மேலும் இப்பட்டயத்தில் இப்பகுதியைச் சூழ்ந்துள்ள பல ஊர்களின் பெயர்களும் குறிக்கக் காண்கிறோம். அவையாவன: இளையாத்தங்குடி, இரணியூர், செம்பகம்பேட்டை, காவேரிப்பட்டி, நாகப்பன்பட்டி, ஆவுடையார் கோயில், அம்மாபட்டி, காமினிப்பட்டி, களத்தூர் என்பன. இவை யாவும் கல்வாசல் நாட்டைச் சார்ந்தவை என்பதும், இரணியூரைச் சூழ்ந்துள்ள ஊர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரணியூர் செப்பேடு

(முதல் பக்கம்)

1. ஸ்ரீ மகா மண்டலல்லீசுபரன் அரியதள [வி]
2. பாடன் பாசைக்கித் திப்புமுவரயர் கண்ட ந
3. ாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பாண்
4. டி மண்டலத்தாபனா [சானனா]ச்சாரியான் சே
5. சாள மண்டலப் பிறதேஷனாச்சாரியான் தெ
6. ாண்ட மண்டலப் பிறதேச்ச னனாச்சாரியா
7. ன யீளமும் கபளமும் யாற்பாணமும் மங்கிை
8. ச வேட்டை கொண்டருளிய ராசாதிராச
9. ன் ராசமாத்தாண்டன் ராசகெம்பீரன் ராச
10. பயங்கரன் ராசாக்கள் தம்பிரான் சம்மட்டி நா
11. றாயிணன் வங்கி நாராயிணன் மல்லிகா ச்சி
12. ணராயர் மகாராயர் வீமராயர் விசைய ரா
13. யர் விருப்பாச்சிராயர் ஆனைகொந்தி ராயர் குறு
14. ம்பராயர் அசுபதி கெஷபதி நரபதி தெச்சிணாச்
15. தி சிறிது ராச்சியபாரம் பண்ணி அருளாயி நி
16. ன்ற சாலீகவாக (னஸா) காத்தம்
17. ச்செல்லாயி நின்றெென மன்மதஞு அற்ப்ப
18. சி மீ யகூவ கானாடு படை பத்துக் கல்வாசல் ந
19. ாட்டில் குலசேகரபுரம் யிருணி வேளார் செம்பக
20. வேளார் ஆக்கொண்டவேளார் கணபதி வே
21. வளார் நாலுவகை வேளாற்கு களு ஊரா

22. மயந்த ஊர்ரவர்களும் அறவிலைப்பிறமா
23. ணம்மாகக் கொண்டது ஷியூரில் விருக்கு
24. ம் கருமாரு படை மண்ணர் முதலி காடப்பிள்
25. ளை உள்ளிட்டாரும் கந்தன்னாண்டியப்பன்
26. னுள்ளிட்டாரும் காளியள கப்பன் னுள்ளிட்டாரு
27. ம் கள்ளமுளி பெரியளகன் னுள்ளிட்டாரும்
28. ஆக்கொண்டான் புள்ளான் னுள்ளிட்டாரு
29. ம் நயினானங் காடன் னுள்ளிட்டாரும் யிந்த ஆ
30. றுவகை கருமாரு படை மன்னருக்கும் குலசே
31. கரபுரம் யிளையாத்தக்குடியில் ஆவுடையா
32. ர் கோவில் யிருபத்து நாலு கிறாமத்தாரும் நய
33. குடி நாலாயிரமும் மனல்லூருடையார் ஏளு நக
34. ரமும் கூடியிருந்து கரைச்சீட்டுப் போட்ட படிக்கி
35. ஆறுவகைப் படை மன்னருக்கும் கரைச் சீட்டா
36. னது யிரணியூர் செம்புகம் பொட்டைக்கி எல்
37. லையாவது வடபாற்கெல்லை....

(இரண்டாம் பக்கம்)

38. படிக் கணக்கன் னும்பளக் கொல்லை எல்லைக்கு
39. பயப்பன் வயல் களவில் புள்ளடி கல்லுக்கு தெ
40. ற்கு காவேரிப்பட்டி கண்யிக்கி புள்ளடி கல்லு
41. ப்பாறைக்கு தடிப்பாறைக் கல்லுப் புள்ளடி
42. க்கி மேற்க்கு கவுதாரி முடுக்கு புள்ளடிக் கல்லு
43. க்கும் நாகப்பன்பட்டி எல்லுக்கும் அம்மாபட்டி
44. எல்லைக்கல்லுக்கும் உலகியா குண்ணு புள்ள
45. க்கல்லுக்கும் காமனிப்பட்டி எல்லைக் கல்லை
46. க்கும் வடக்கு மேய்பாற்க்கெல்லை களத்தூ
47. ராண்டவன் கோயிலுக்கு கிளக்கு அடிகல்
48. லுக்கும் உடைகுளத்துக்கும் காரளன் நத்த
49. துக்கும் கிளக்கு யிந்த நான்ங் கெல்லைக்கு
50. ள்ப்பட யிரணியூர் செம்புகம் பொட்டை பட

51. ல் மண்ணு மலை நஞ்சை கோவில்க் குளம் தி
52. ட்டு தித்திடல் மாவடை மரவடை பாசிபாட்
53. டம் அம்பலம் உம்பளம் சகலமும் பல தொளில்
54. லாளியளும் பள்ளுப்பறை ஷி யூரிலே எட்டு செ
55. வூறுகரை கரைச்சீட்டுப் படிக்கி யிருவத்து ந
56. ாலு ஊராரும் நயக்குடி நாலாயிரமும் ஏளு
57. நகரமும் ஆக்கொண்ட யீசுபரன் கோவில் ரிசபத்தடியில் கல்லும் வெட்டி பட்டை
58. யமும் தந்து குடுத்தபடிக்கி கல்லுலுங் காவெ
59. வரி புல்லுமி சந்திராதித்தன் சூரியாதித்தன்
60. னுள்ளவரைக்கும் வேண்டும் தானதற்மம் ப
61. ண்ணிவித்து விலைச்செயிது சீத
62. ளம் சீராட்டுக் குடுத்து யிந்த ஆறுவகைக் கருமாருபடை மன்னரும் ஆண்டுனுப[அ]விக்கவு
63. ம் யிப்படிக்கு ஷி யூரில்லிருக்கும் நாட்டுக்
64. கனக்கு அறுவுடை மூவேந்திர வேளா
65. ர் பெளய் சொல்லா மெய்யன் சொல்படி
66. க்கு சிதம்பரபத்தர் திருத்து ஷி சிவபர
67. ம்பம் துனை உ

இரணியூர் செப்பேடு

(முதல் பக்கம்)

1. உ கானாடாகிய கல்வாசல் நாடு குலசேக
2. ரபுரம் யிளைய்யாத்தாகுடி யிரணியமாக
3. ரனியூர் செம்புகம் பொட்டை நெய்வாசல்
4. யிருவத்து நாலு நத்ததுக்கு மங்லக் குடியி
5. ரணிய மாகாளியூர் செம்புகம்பொட்டைக்கி
6. எட்டு நகர[த்]துக்கும் பெருநாங்கு எல்லைக்கி வி
7. பாடிகளம் பிறமாண்டி கீள்பாற்க்கெல்லைத் த
8. டிப்பாறைப் புள்ளடி யிதின் சறுக்கடிப்பாளை
9. ற யிதின் கல்லடி பாறை எளுகுளிப்பாறை

10. யிதினடி னங்கொல்லி பள்ளத்தில் யிதி
11. ன் அரிபுரம் குசவன் வயல் கீள்புறம் களி
12. வில்க் கல்லு கணநாதர் கோவில் மேல் பு
13. றம் கல்லு யிதின் நத்ததில்க் கல்லு யிதின்
14. பாடலக் கோவில்க் கல்லு யிதின் நெடுமரம்
15. கன்ம்மாயி நீர்ப்புடியில்க் கல்லு ஷி வயல்க்
16. களிவில்க் கல்லு காரளன் நத்(த) தில்க் கல்லு யி
17. தின் ஆறொடிப் பள்ளத்தில் கல்லு நல்லூர் பொ
18. ட்ட ஏந்தல்க்கல்லு களத்தூர் வயலில் கல்லு
19. யிதின் ஒடையி கல்லு மாற்கன்டன் படியில்
20. க்கல்லு யிதின் நத்தப் பிஞ்சையில்க் கல்லு
21. யிதின் ஒட்டன் கண்ம்மாயில்க் கல்லு கலி
22. ங்கி ஒனையில் கல்லு புலமருதன் வயலி
23. ல்கல்லு விளாம்பிஞ்சையில் கல்லு வள
24. னிவயல் மேல் களவில்க்கல்லு செம்பொட்
25. டல்க் கல்லு யிதின் குரங்குப்பொட்டை கல்
26. லு யிதின் ஒடையில்க் குத்துக்கல்லு யிதி
27. ன் எட்டு மாவடியிசெய்க் கல்லு யிதின் பா
28. றைக் கல்லில்ச்சூலம் குலசேகரபுர நத்த
29. ப்பிஞ்சையில்க் கல்லு பயப்பாவ.... களி
30. வில்க் கல்லு வெள்ளுருவம் பிஞ்சையி
31. ல்க் கல்லு காவேரி ஏந்தல் முந்தலில்

(இரண்டாம் பக்கம்)

32. கல்லு பஞ்சம்ந் தாங்கும் செய்க் கினத்தில்
33. கல்லு யிரனியம் மாகாளுயூர் செம்புகம்பொ
34. ட்டை பெருநாங்கு ஒளுரு நஞ்சை விரை
35. யடி தளய்பிஞ்சை விரையடி 4730
36. பெரிய ஏரி சித்தேந்தல் யிருவத்து எ
37. ட்டு யீசுபரம் கோவில் ரெண்டு பெருமாே
38. காவில் ரெண்டு அய்யனார் 3 பிடாரி யர்

39. 1 புள்ளையாரு யீசுபரன் கோவில் தே
40. வாரம் கலாபத்தில்க் கொள்ளை போன
41. துபோக யிருக்குற தேவாரம் பிறப்போ
42. க்கு களை ப்போக்கு ஒன்னு தேவாரம் படி
43. உ திருவாசி 9 அய்யனார் சிலை 3 அம்ம
44. ன்சிலை 1 மெய்காவல் விய முத்திரி படைத்தல
45. வரில் கந்தன் காத்தான் ஊரது புரவுக்கும்
46. அம்பலம் 8 படைத்தலவர் கரை 7 யிடைய
47. ர்கரை எட்டு அம்பலத்துக்கும் உம்பளம்
48. குளி 1500 பிஞ்சையில் யிருகல விரைய
49. டி மந்தைக்கட்டில் பிஞ்சையில் உம்பளம்
50. நஞ்சை சம்மதித்த நிலத்தில் உம்பளம் பறை
51. யன் கரை ரெண்டு பள்ளர் வகுப்பு 4 கொல்
52. லன் வகுப்பு 1 தச்சன் வகுப்பு 1 நம்பிய
53. ரர் வகை 2 வன்னாவகுப்பு 1 நாவிதன் வன
54. க் 2 குவசன் வகுப்பு 1 படிக்கி நாங்கு உ
55. ஒளுகுப் பட்டையம் கனக்கு மூவேந்திரவேள
56. க்கி சிதம்பரபத்தர் தீர்ந்தது ஆக் கொண்ட
57. யீசுபரன் துனை.[1]

அதனால் முன்பு கூறப்பட்ட பழனி பட்டயங்கள் வழி பார்க்கும் போது ஏழாவது சாசனமான மடாலய தரும சாசனம் (சாலி 1727- கலி 4906) குறிப்பிடும் கி.பி. 1805 வரை ஏழு நகரத்தார் என்ற குறிப்பு மட்டுமே காணப்படுகிறது. எனவே 1805க்குப் பிறகே மேலும் இரு பிரிவுகளான இரணியூரும், பிள்ளையார் பட்டியும் ஏற்பட்டிருக்கக் கூடும் எனக் கருத வாய்ப்புள்ளது.

ஒரு சாசனம், தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சிகளில் நகரத்தார் தொண்டு பற்றிக் குறிப்பிடுகிறது. திருவள்ளுவரின் குறள், திருமூலரின் சைவ இலக்கியமான திருமந்திர மாலைகளில் நகரத்தார்களின் ஈடுபாடு பற்றி வருகிறது. பொதுவாக நகரத்தார்

1. மா.சந்திரமூர்த்தி, இரணியூர்க் கோயில், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990, பக், 223 – 227.

இனம் தமிழ்க்கவிகள் ஆசிரியர்களுக்கு அளித்த பேருதவி பற்றி அறிய சாசனங்கள் சான்றுகளாக உள்ளன. உதாரணமாகப் புகழ் வாய்ந்த ஔவைக்குத் தங்கக் கழல் அளித்தது, தமிழ் இராமாயணம் இயற்றிய கீர்த்தி பெற்ற கம்பருக்கு ஒரு கோயில் கட்டியது போன்றவை.

மேலும் உலகிலேயே மொழியைத் தெய்வமாக்கிக் கோயில் கட்டவேண்டும் என்ற இலட்சியம் ஒரு நகரத்தார் சிந்தனையில் தான் முதன்முதலில் தோன்றியது. அச்சிந்தனை செட்டிநாட்டின் மையப் பகுதியாகிய காரைக்குடியில் கம்பன் மணிமண்டப வளாகத்தில் தமிழ்த்தாய்க் கோயிலாகத் தலைநிமிர்ந்து நிற்கிறது.

ஆறுபட்டை, ஆறுநிலை, ஆறுவிமானங்கள் கொண்ட கோயிலாக மணிமண்டபத்திற்கு வலப்புறம் இது அமைந்துள்ளது. இதன் நடுவிமானத்தின் கீழ் தமிழ்த்தாய் வடக்கு நோக்கி மணிமண்டபத்தைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருக்கிறாள். வலப்புறம் அகத்தியரும் இடப்புறம் தொல்காப்பியரும் இடம்பெற்றுள்ளனர். சுற்றுக் கோயில்களாக வடகிழ்க்கோடியில் வள்ளுவர், தென்கோடியில் இளங்கோ, வடமேற்கோடியில் கம்பர் ஆகியோர் விமானங்கள் அமைந்துள்ளன.

தமிழ்த்தாய்ச் சிலையைக் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்களும், மறைந்த சிற்ப கலாசாகரம் ம. வைத்திநாத ஸ்தபதி அவர்களும், இணைந்து வடிவமைத்தனர். அச்சிலையைப் பற்றி வைத்திநாத ஸ்தபதி கூறுகையில் "நடராச மூர்த்திக்குப் பிறகு இம்மூர்த்தியே பல்லாற்றானும் கலை, தத்துவம், விஞ்ஞானம் ஆகிய மூன்றின் கருத்துச் செறிவும் உடையது. எங்களைப் போன்ற ஸ்தபதிகளுக்கு இந்த இருமூர்த்திகளுந்தான் அற்புதப் பொருளாக உள்ளன" என்று குறிப்பிடுகிறார். இவர் தொடங்கிய இக்கோயில் கட்டுமானப் பணியை இவர் மகனும் மாமல்லபுரம் சிற்பக்கல்லூரி முன்னாள் முதல்வருமான சிற்பச்சித்தர் டாக்டர். வை. கணபதி ஸ்தபதி அவர்கள் நிறைவு செய்தார்.[1]

⌘ ⌘ ⌘

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 225.

10. நகரத்தார் சுவடியில்

தமிழகத்தில் கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டுகளில் தன வணிகர் என்ற சிறப்புப் பெயரால் குறிக்கப்பெறும் நாட்டுக் கோட்டை நகரத்தார்களைப் பற்றிய செய்திகள் பல காணப்படு கின்றன. இவ்வாறாக சங்ககாலம் முதலாகத் தமிழகத்தில் விளங்கி வரும் தனவைசியரின் வரலாற்றினைப் பழைய ஏட்டுச் சுவடியொன்றும் விளக்கும் சான்றாக அமைந்துள்ளது.

ஓலைச் சுவடி

இச்சுவடி சோதிட நூல்வகையுள் நிமித்த சோதிட நூலாகும். நூலின் பெயர், 'சகாதேவன் நிமித்த சூடாமணி' என்பதாகும். நூல் குறிக்கும் மக்கள் வாழ்க்கை முறைகள், வாணிக வகைகள், சிறப்புரிமைகள், சொத்துரிமைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டு நகரத்தார் ஊரில் இன்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் இச்சுவடி வழக்கில் நிலவியுள்ளதனை அறியமுடிகின்றது. இச்சுவடி நகரத்தார் சீமையில் மணியம் ஒருவரால் பிரதி செய்யப் பெற்றிருப்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறப்பியல்

நகரத்தார்களுள் ஒரு பிரிவினர் அரசர்களுக்கு அன்று மகுடம் சூட்டும் உரிமையினைப் பெற்றிருந்தார்கள். இதனை நிமித்த நூல் 'இந்த ராசாவுக்கு முடி சூட்டலாமா, ஆகாதா?'என்ற வரியால் சுட்டுகின்றது. தனவணிகரே கடல் கடந்து வாணிகம் செய்த தமிழருள் பெரும்பான்மையினராவர். இதனைப் பட்டணத்துச் செட்டியார், (பட்டினத்தார் - துறவி) கண்ணகியின் தந்தை மாநாய்கன் (கப்பல் வணிகர் தலைவன்) ஆகியோரின் வரலாற்றால் அறியலாகும். கடலேறிப் போக இலாபம் ஆகுமா, ஆகாதா? கடலேறிப் போனவன் வருவானா, வாரானா? என்ற நிமித்தவுரைகள் இச்செய்தியினை, அறிமுகம் செய்கின்றன.

வணிகவியல்

தனவணிகர், முத்து, பருத்தி, புகையிலை, பலசரக்கு ஆடைகள் ஆகிய பொருள்களை வியாபாரம் செய்துள்ள தனையும்; யானை, குதிரை, எருது, ஆடு, நாவிப்பிள்ளை (புனுகுப்

பூனை) ஆகியவற்றை வளர்த்து வாணிகம் செய்துள்ளனர் என்பதனையும் சுவடி விளக்குகின்றது. தனவணிகருள் வேளாண்மைத் துறையில் பொருளீட்டியவர்கள், தென்னை, பலா, பாக்கு, பருத்தி, கரும்பு, வரகு, நெல் ஆகியவற்றைப் பயிர்செய்து மகசூலைக் கொண்டு மெத்த இலாபம் கண்டுள்ளனர். இவர்கள் வைசியவேளாளர், சந்திரகங்காகுலத்தினர், பூபாலர் என்ற குலப்பெயர்களை வேளாண் வாணிகத்தினாலேயே பெற்றுள்ளனர்.

வாணிகத்தில் சரக்குகளை விலைக்குப் பெற்றுச் சேர்த்துப் பாதுகாத்து வைத்திருந்து இலாபத்துடன் விற்பனை செய்யும் வாணிக முறை "கிடைச்சல் சரக்கு" என்று குறிக்கப் பெறுகின்றது. கிடைச்சல் சரக்கு பாதுகாக்கப்பட்ட இடம் 'கிடங்கில்' என்று குறிக்கப்பட்டு, கிட்டங்கி என்று இன்று திரிந்துள்ளதனை அறியலாம். 'கிடங்கி', 'கிட்டங்கு' என்னும் சொற்கள் மலாய் மொழிச் சொல்லான Gadong என்பதிலிருந்து வந்ததாகும்.[1] "பலசரக்கு கட்ட நன்றாய் வித்துப் பிரியும், மொத்த லாபமுண்டு" என்பது சுவடி தரும் செய்தி.

வாழ்வியல்

இச்சுவடி பெரும்பான்மை நகரத்தார்களின் வாழ்வியலின் தாக்கமாகவே அமைந்துள்ளதனைச் சான்றுகளால் அறிய முடிகின்றது.

தன் பெண்பிள்ளை பருவமடைந்த காலத்தில் பாது காத்தலும், சொத்தில் பாகமாகச் சீர்தனம் பரித்தலும், வயது வந்து மனுவான மகனுக்குத் தலைக்கட்டுதல் செய்து (தலைப் பாகை அணிவிக்கும் சடங்கு) முதலளித்து வணிகருள் ஒருவராக்கி விடுதலோடு, மனையில் ஒரு பகுதியிலேயே மனைவியுடன் வாழவைப்பதும், தான் வைப்பாட்டி வைத்துக் கொள்ளுதல், இரண்டு பெண்களை மணந்து கொள்ளுதல், மனைவிக்குப் பணியாளாக வெள்ளாட்டி அமர்த்துதல், சீமைக்கு நன்மை தீமை அறிதல், பாதுகாப்பாளனை அமர்த்திக் கொள்ளுதல், போருக்கு ஆள் அனுப்புதல், சந்தை நடத்துதல், தாவளத்தில் வியாபாரம் கொட்டை போடுதல், நெல் அளவையில் கோட்டை நெல் என்ற அளவீடு தருதல், மணியம் செய்தல், குருவிடம் தீட்சை பெறுதல், கோயில் கட்டுதல், குளம், ஊருணி, மண்டபம், விநாயகர் பிரதிஷ்டை செய்தல், கோபுரம், நந்தவனம், தண்ணீர்ப்பந்தல் ஆகிய திருப்பணிகளைச் செய்தல், தன சுகக்காரனாக இருத்தல், வட்டிக்குக் கொடுத்தல், பெயர்

1. டாக்டர் சு. சக்திவேல், தமிழ்மொழி வரலாறு, முதற்பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், 1984. பக் – 304.

கொடுத்து வியாபாரம் செய்வித்தல், ஈடுகொள்ளல், துணை தருதல், குருவிடம் தீட்சை பெறுதல், புலவரிடம் நாற்கவி பெறுதல், ஓலை அனுப்புதல், தவசம் கொள்ளுதல் ஆகிய செய்திகளை ஓலைச்சுவடி தருவதனால், நகரத்தார்களின் வாழ்வியல் புலனாகின்றது.

மொழியியல்

மெத்த பலிக்கும், மெத்த இலாபம், கனக்கவரும் நோக்காடு தீரும், அலசடிவரும், சிலுகு உண்டாகும் ஆகிய இணைநிலைச் சொற்களுடன், தவசம், ஆலிசம், தாபரம், ஊதியம், பாடு, கொட்டை, ஊருணி, மச்சு ஆகிய சொற்களும்; மெத்த, கனக்கசேர, வெகு, தீர, வெத்தி, ஒத்தி, அடை ஆகிய அடைநிலைச் சொற்களும் நகரத்தார் சீமை வட்டார வழக்கு மொழி நிலைகளுக்குச் சான்றாகச் சுவடியில் உள்ளன.[1]

⌘ ⌘ ⌘

1. சி.கோவிந்தராசனார், ஏட்டுச்சுவடி தரும் நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, பக், 173 – 176, பதினெட்டாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி – 3, (பதிப்பாசிரியர்) டாக்டர். ச. அகத்திய லிங்கம் – டாக்டர். தா.ஏ. ஞானமூர்த்தி, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1986.

11. இலக்கிய ஆதாரங்கள்

புராண காலம்

இவ்வினத்தாரின் புராதன சரித்திரம் பற்றிய கதைகளுக்குப் பஞ்சமே இல்லை. ஓர் இனத்தின் பரம்பரை பரம்பரையாக வரும் புராணக் கதைகள், அது எவ்வளவு திரிக்கப்பட்டும், மிகைப்படுத்தப் பட்டும் இருந்தாலும் ஓரளவு அவர்களின் கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக இனம், வளர்ச்சி, குடியேற்றம், பிரிவு இவற்றை அறிய உதவும்.

நம் புராணங்கள் அடிப்படையில் நாகநாடு பாதாள லோகத்தில் நாகவர்க்கங்கள் வாழும் இடமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. ஆனால் **"நீர்மலி கடல்சூழ் நிலவுலகத்திலே, சீர்மலி சம்புத் தீவத்தின்கண், ஆதியில், நாக நாட்டிலே, சாந்தியாபுரி என்ற நகரத்திலே, சந்திரகுல கோத்திர வைசியர்கள் கோமதீசுவர சுவாமி தரிசனமும், சதாசிவ குருபீடத்தில் தீட்சாகிரியையும், மரகத விநாயகர் பூசையும், இரத்தின வியாபாரமும், செய்து கொண்டு மகாயோக பாக்கிய சம்மன்னர்களாய், இராச பிரசாதமும், மன்னினை மரியாதையும் பெற்றுச் சிவாகமபுராண சித்தாந்த சைவதீட்சாசம் பன்னர்களாய், விபூதி உருத்திராட்ச மாலிகாபரணராய்ச்,சிவதரும குலதரம் பரபாலகர்ராய் வாழும் நாளில்"**[1] என்று நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம் கூறுகிறது. கலியுகம் பிறந்து 204-வது ஆண்டில் தான் தன வணிகர்கள் காஞ்சிபுரம் குடியேறியதாகக் கூறப்படுகிறது. கலியுகத்திற்கு முன்பு இவர்கள் நாகநாட்டில் இருந்து வந்ததாக இதனால் அறியமுடிகிறது. இந்த நாக நாடு **சம்புத்தீவத்தில்** உள்ளது என்ற குறிப்பும் காணப்படுகிறது. **சம்புத்தீவு**, நாவலந்தீவு என்ற பெயர்களெல்லாம் நம் பாரத பூமிக்கே உரியன. நாகநாடு - செல்வமும், இன்பமும் கொழித்த நாடு என்பதால், அது தனித் தீவாக இருந்திருக்க வேண்டும்.

நம் இந்தியாவிலேயே மிக மிகப் பூர்வீகக் காலத்திலேயே நாகநாடு என்ற ஒரு நிலப்பகுதி இருந்திருக்க வேண்டும். பாண்டிய

1. சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், தனவைசியராகிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம், கலாதர அச்சுக்கூடம், தேவகோட்டை, இரண்டாம் பதிப்பு, பக் 5, 1904.

நாடு, சோழ நாடு, சேர நாடு போன்று இதுவும் ஒரு ராஜ்ஜியமாக இருந்திருக்கலாம். ஆனால் பிற்காலத்தில் ஆரிய மக்கள் குடியேறி ராஜ்ஜியங்களை ஸ்தாபித்த பிறகு காணப்படும் ஐம்பத்தாறு தேசங்களில் நாகநாட்டின் பெயர் காணப்படவில்லை. அதனால் முன்பே அந்நாட்டின் பெயர் மாறியிருக்க வேண்டும். அக்காலத்தில் அரச குடும்பத்தின் பெயரைக் கொண்டே நாட்டின் பெயர் பெரும்பாலும் வழங்கப்பட்டு வந்ததால் பெயர் மாற்றத்திற்கு ஆளும் வர்க்கத்தில் ஏற்பட்ட மாறுதலே காரணமாக இருக்கலாம். உதாரணமாக **'பரதன்'** எனும் அரசன் அரசாண்ட காரணத்திற்காக நம்பூமி இன்றும் **'பரதகண்டம்'** என்று வழங்கப்படுவது அறிந்ததே.

மேலும் நாகநாடு தென்னிந்தியாவின் பல முக்கிய பட்டினங் களுள் ஒன்றாக இருந்திருக்க வேண்டும் என்பதற்கு நம் இதிகாசங் களில் ஒன்றாகிய இராமாயணத்தில் குறிப்புக் காணப்படுகிறது. கிஷ்கிந்தா காண்டத்தில் அனுமன் சீதையைத் தேடிப்போகும் போது, சுக்ரீவன் பார்க்க வேண்டிய இடங்களைக் கூறுகிறான். அதில் நாகர்களின் நாட்டைப் பற்றிய குறிப்பு ஒன்றும் காணப்படுகிறது.

தவிர நாகர் என்போர் இந்தியா, இலங்கை ஆகிய தேசங்களில் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் ஒருவகைச் சாதியினர் என்றும், அவர்கள் உயர்ந்த நாகரிகமடைந்தவர் என்றும், அவர்களுக்குள்ளே அரசர்கள் நல்ல முறையில் அரசாட்சி புரிந்து வந்தனர் என்றும் மகாபாரதத்தில் காணப்படுகிறது.

சரித்திர சாசனங்களிலும் நாக மன்னர்களது பெயர்கள் பல இடங்களிலே உள்ளன. காம்பில்ய நகரத்திலும், இன்னும் பல இடங்களிலும் நாக மன்னர்கள் அரசாண்டதாகப் புத்தர்களது சாசனங்கள் கூறுகின்றன. சமுத்திரகுப்தர் அலகாபாத்தில் நிறுவிய தூணில் உள்ள கல்வெட்டில் **நாகசேனன், நாகநாதன்** என்ற இரு மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நேபாளம், காஷ்மீர் ஆகிய நாடுகளை ஆண்ட அரசவம்சத்தில் **நாகார்ஜுணன்** என்ற மன்னன் இருந்ததாகவும், கூர்ஜரத்தில் **நாகப்பட்டன்** என்ற மன்னன் அரசாண்டிருக்கிறான் என்றும் வரலாறு கூறுகிறது. ஆந்திர ராஜவம்சத்தில் ஒரு பிரிவினரில் கடைசியாக அரசாண்டவன் பெயர் **சிவஸ்காந்த நாகன்** என்றும், இவன் சாதவாகன வம்சத்தை சேர்ந்தவன் என்றும் கூறப்படுகிறான். இந்த சாதவாகனர்களுக்கு சதகர்னிக நாகர் என்ற பெயரும் உண்டு. சாளுக்கிய மன்னராகிய இரண்டாம் புலிகேசிக்கு நாகவர்த்தனன் என்ற ஒரு நெருங்கிய உறவினன் இருந்திருக்கிறான் என்று வரலாறு கூறுகிறது. தற்போது நமது நாட்டிலேயே **நாகபுரி, நாகார் ஜுணமலை, நாகர்கோயில், நாகர்கோட்டம், நாகப்பட்டினம்** என்று பல்வேறு ஊர்களுக்குப் பெயர் உள்ளது குறிப்பிடத்தக்கது.

தொடக்கக் காலத்தில் நாகப்பட்டினத்தில் தான் கப்பலில் வந்த நகரத்தார்கள் படகு மூலம் கரையேறியுள்ளார்கள்.

"நாக நன்னாட்டு நானூறி யோசனை
வியன் மாதலத்து வீழ்ந்து கேடெய்தும்"

என்று மணிமேகலை கூறும் நாகநாடு வங்களா விரிகுடா கடலிலுள்ள தீவு என்றும், பின்னர் அது கடலால் கொள்ளப் பட்டது என்றும் சிலர் கூறுகின்றனர். சிலர் நாகநாடு என்பது சுமத்திராதீவு என்று கூறுகின்றனர். இதற்குச் சான்றாக, அக்காலத்தில் செட்டியார்கள் தமது திருமணக் காலங்களில் பவளக் கால்களை முகூர்த்தக் கால்களாக நாட்டியிருந்தனர். ஆகவே அவர்கள் பவளம் அதிகமாக விளையும் இடத்திலேயே இருந்திருக்க வேண்டும். (இப்போதும் செட்டியார்கள் தமது இல்லத் திருமணங்களில் முகூர்த்தக்காலுக்கு அடியில் ஒரு பவளத்தைப் பூமியில் பதித்து வைக்கிறார்கள்) எனவே பூகோள அமைப்புப்படி பவளப்பாறைகள் மிகுந்துள்ள கடல் இடமும், அதைச் சார்ந்துள்ள சுமத்திரா தீவும் இவர்களது பூர்வீகப் பூமியாக இருக்கலாம் என்று கூறுகின்றனர்.

மேலும் அயல் நாட்டிலிருந்து ஆரஞ்சு பழத்தை இந்நாட்டிற்குக் கொண்டு வந்தவர்களும் நாக நாட்டினர்தாம் எனவும் நம்பப்படுகிறது. ஏனெனில் **'நாரங்கி'** என்ற இந்திப் பதத்திற்கு **ஆரஞ்சு** என்பது பொருள். இந்த இந்திப் பதம் **'நாகரங்கா'** என்ற சமஸ்கிருதச் சொல்லின் அடிப்படையில் பிறந்தது. நாகரங்கா என்பதற்கு **நாகர்களுக்குப் பிரியமானது** என்று பொருள். (மத்திய மாகாணத்தின் தலைநகரான நாகபுரியில் தான் (போபால் - நாக்பூர்) இந்தியாவிலேயே சிறந்த ஆரஞ்சு பழங்கள் உற்பத்தியாகின்றன. இவற்றில் எதை அடிப்படையாகக் கொண்டாலும் இவர்கள் புராதனமானவர்கள் என்பது மறுக்க இயலாது என்பது சேஷாத்திரி சர்மா அவர்களின் கருத்தாகும். இதற்கு மேலும் ஆதாரமாக, 2-ஆம், 6-ஆம் நூற்றாண்டுகளில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் இருபெரும் காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பொதுவாக நகரத்தார்களையும், அவர்களது சமூக, பொருளாதார வாழ்க்கையையும் தெரிவிக்கின்றன. சிலப்பதிகாரத்தின் தலைவன்-தலைவியான **கோவலனும், கண்ணகியும்** வைசியர் இனத்தையும், நகரத்தார் (நாட்டுக்கோட்டைச் செட்டியார்) உட்பிரிவையும் சார்ந்தவர்கள் என்று முக்கியமாகக் கருதப்படுகிறது. [1]

⌘ ⌘ ⌘

1. அசேஷாத்திரி சர்மா, நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, வானதி பதிப்பகம், மூன்றாம் பதிப்பு, 2003, பக் 70 – 76.

12. சங்ககாலம் முதல் பாண்டியர் காலம் வரை

தொல்காப்பியம் மரபியலில் வணிகர், வைசியர் என அழைக்கப்படுவதிலிருந்து அக்காலத்திலேயே வைசியர் குடி சிறப்பாகக் கூறப்பட்டது தெளிவு. அவரது வாழ்க்கையை வாணிக வாழ்க்கை என்று தொல்காப்பியம் கூறுகிறது (மர.78). **'வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை'**. இவர்கள் **இளங்கோக்கள், மன்னர் பின்னர், இப்பர், எட்டியர், நாய்கர், ஆன்காவலர், உழமர், பரதர், வினைஞர், செட்டியர், சீரைட்டியர்** எனவும் அழைக்கப்படுவர் என்று நிகண்டு கூறுகிறது. இவர்களுக்கு அறுதொழில்கள் உண்டு எனப் பண்டைய நூல்கள் குறிக்கின்றன. **ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரைஓம்பல், வாணிகம்** என்ற அறுதொழிலும் இவர்க்குரியன ஆதலின் வைசியர் **'இருமூன்று மரபினர்'** என்று தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகின்றனர். இவ்வாறு தொழில்களை வணிகர்க்கு நிகண்டும் குறிக்கிறது. கல்வெட்டுகளில் இவர்கள் **வணிகர், நகரத்தார், திசையாயிரத்து ஐந்நூற்றுவர், வியாபாரி** என்றெல்லாம் அழைக்கப்படுகின்றனர். இவ்வணிக மரபில் வந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்களைப் பற்றி **'வணிக மண்டல சதகம்'** எனும் நூலும் குறிக்கிறது.[1]

பண்டைய வணிகர்

மதுரைக்கு அருகில் உள்ள அழகர் மலையில் சுமார் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல கல்வெட்டுகள் உள்ளன. அவை சமணப் பெரியோர்களுக்கு அளித்த பாழியைக் (படுக்கை) குறிக்கின்றன. இப்பரிசு கொடுத்தவர்களில் பலர் வணிகர் என்று குறிக்கப்படுகின்றனர். **அறுவை வணிகன், உப்பு வணிகன், கொழு வணிகன்** முதலிய மதுரையைச் சேர்ந்த பல வணிகர்கள் அங்குப் பொருள் கொடுத்துள்ளனர். இதிலிருந்து வணிகர்கள் பலர் சங்க காலத்தில் சமண மதத்தை ஆதரித்துக் கொடை அளித்துள்ளனர் என்று அறிகிறோம். கலத்தாலும், காலாலும் இவர் பொருள் ஈட்டுவோர் எனச் சிலம்பு கூறுகிறது. கலம் என்பது நீர்வழியாக, மரக்கலத்தின் மூலம் நடைபெறும் வியாபாரம். காலால் என்பது வண்டிகளால் தரைவழியாக நடைபெறும் வாணிகம். **நீர்வழி வாணிகம்** என்றும், **நிலவழி வாணிகம்** என்றும் அக்காலத்திலேயே வகுத்திருப்பது சிறப்பாகக் கவனிக்கத்தக்கது.

---

1. நா.நடராஜன் (இளவரசன்) வணிக மண்டல சதகம், செட்டிமார் கழக வெளியீடு, கீழச்சிவல்பட்டி, 1955, பக், 1 – 12.

சங்க கால வாணிகம்

சங்க காலத்தில் வணிகர் வியாபாரம் செய்த பொருள்கள் யாவை என்பதையும், அவர்கள் எத்தன்மையினர் என்பதையும் பட்டினப்பாலை மிகவும் சிறப்பாகக் கூறுகிறது. வணிகரது வாழ்க்கை எதைக் குறிக்கோளாகக் கொண்டு சிறந்தது என்பதற்கு இலக்கிய மரபாக இதைக் குறிக்கலாம்.

நிமிர்ந்த குதிரைகள் நீர்வழியேவந்தன. வண்டியில் மிளகு மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. வடமலையில் பிறந்த மணியும், பொன்னும், தென் கடல் முத்தும், குடமலையில் விளைந்த சந்தனமும், அகிலும், கீழ்க்கடலில் பிறந்த பவளமும், கங்கைக் கரைப் பொருள்களும், காவிரியாற்றங்கரைப் பொருள் களும் ஈழத்திலிருந்து உணவுப் பொருள்களும், கடாரத்திலிருந்து வந்த நுகரும் பொருள்களும், பிற நாட்டுப் பொருள்களும், அவர்களால் விற்கப்பட்டன என்று பட்டினப்பாலை கூறுகிறது. இவற்றிலிருந்து இந்தியா முழுவதிலிருந்தும் வந்த பொருள் களையும், பிறநாடுகளிலிருந்து வந்த பொருள்களையும் விற்கும் வணிகர் நிறைந்திருந்தது தமிழ் நாடு எனத் தெளியலாம்.

சங்க இலக்கியங்களில் செட்டிநாட்டைப்பற்றி வரலாற்றுக் குறிப்புகள் மிகுதியாக உள்ளன. முச்சங்கங்களின் வரலாற்றை அகவற்பாவில் தெரிவிக்கும் ஓர் ஒலைச்சுவடி செட்டிநாட்டில்தான் கண்டெடுக்கப்பட்டது. தொல்காப்பியத்தில் காணப்படும் **'முந்நீர் வழக்கம் மகடூவோ டில்லை'** என்பதற்கேற்ப கடல் கடந்து வாணிகத்துக்குச் செல்லும்போது பெண்களை அழைத்துச் செல்வதில்லை என்று இளம்பூரணர் உரை கூறுகிறது. இப்பழைமை யான தமிழ் வழக்கம் செட்டிநாட்டில்தான் பின்பற்றப்பட்டது என்றும் அறிஞர் சோமலே கூறுகிறார்.[1] (1945-ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த வரம்பு கலைந்து இருக்கிறது.)

'தென்பாண்டிக் குட்டம் குடங்கற்கே வேண்பூதி
பன்றி யருவா வதன்வடக்கு நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்'

இந்தப் பாடலில் வரும் பன்றிநாடு என்பதே சங்ககாலத்தில் பாண்டிநாட்டின் வடபகுதியாகவும், சோழநாட்டின் தென்பகுதியாக வும் விளங்கிய புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட பெயராகும்.

செட்டிநாட்டின் பல பகுதிகள் பல்வேறு பெயர்களில் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகிறது. அவை கானாடு என்ற கானகக் கூற்றம், மிழலைக் கூற்றம், உறையூர் கூற்றம், உறத்தூர்

1. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், முதற்பதிப்பு, வானதி பதிப்பகம், சென்னை - 1984, பக் – 16.

கூற்றம், ஒல்லையூர் நாடு எனும் ஒல்லையூர் கூற்றம், பூங்குன்ற நாடு, பறம்பு நாடு என்பன.

கானாடு

வெள்ளாற்றுக்கு வடக்கே உள்ளது கோநாடு, தெற்கே உள்ளது கானாடு என்று வழங்கப்பட்டது. இந்நாட்டின் வடஎல்லையாகக் கானாடுகாத்தான் இருந்து வந்தது. தற்போது **காளையார்கோயில்** என்று அழைக்கப்படும் தலம் அக்காலத்தில் **கானப்பேர்** என்றே வழங்கி வந்துள்ளது. இது பாண்டிய நாட்டின் கோட்டைகளுள் வலிமையால் சிறப்புற்றிருந்தது. **'கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி'** எனும் சங்ககால இலக்கிய வரியால், வேங்கைமார்பன் எனும் அரசனிடமிருந்து உக்கிரப் பெருவழுதி எனும் பாண்டிய மன்னன் இந்நாட்டை வென்றதாக அறிய முடிகிறது. கி.பி. 18 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த செப்பேடு ஒன்றிலும் கானாடாகிய கல்வாசல்நாடு குலசேகரபுரம் என்று குறிக்கப்படுகிறது.[1]

மிழலைக் கூற்றம்

மிழலைக் கூற்றம் என்பது முற்காலத்தில் பாண்டி மண்டலத்தில் இருந்த உள்நாடுகளில் ஒன்றாகும் என்ற உண்மையை,

"கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
சீவல்லிய தேவற்கு யாண்டு இருபத்தஞ்சாவது மேஷ
நாயிற்றுப் பூர்வ பக்ஷத்து ஏகாதசியும் சனிக்கிழமையும்
பெற்ற மகத்து நாள் பாண்டி மண்டலத்து மிழலைக் கூற்றத்து
ஒக்கூருடையார்"

என்ற திருக்களர் கோயில் கல்வெட்டும், வேறு சில கல்வெட்டுகளும் உணர்த்துகின்றன. **'வீரசோழியம்'** என்ற இலக்கண நூலின் ஆசிரியரான **புத்தமித்திரன்** என்பவர் மிழலைக் கூற்றத்திலுள்ள **பொன்பற்றியில்** வாழ்ந்த குறுநில மன்னர் என்பதை வீரசோழிய உரையிலுள்ள,

"ஈண்டுநூல் கண்டான் எழின்மிழலைக் கூற்றத்துப்
பூண்டபுகழ்ப் பொன்பற்றிக் காவலனே – மூண்டவரை
வெல்லும் படைத்தடக்கை வெற்றிபுனை வீரன்றன்
சொல்லின் படியே தொகுத்து"

என்ற பாடல் கூறுகிறது. மணிவாசகப் பெருமானை இறைவன் ஆட்கொண்டருளிய தலமான **திருப்பெருந்துறை** மிழலைக் கூற்றத்திலுள்ள ஓர் ஊர் என்பது கல்வெட்டு மூலம் அறியலாம்.

1. மா.சந்திரமூர்த்தி, இரணியூர் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990, பக் – 225.

ஒல்லையூர் நாடு

புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள ஒலியமங்கலமும் அதைச் சூழ்ந்த நாடும் ஒல்லையூர்நாடு எனப்படும். பொன்னமராவதிக்கு அருகே உள்ள ஒலியமங்கலம் எனும் ஊரே ஒல்லையூர் மங்கலம் எனப் பெயர் பெற்றிருந்தது என அவ்வூரிலுள்ள வரகுணீசுவரர் கோயில் கல்வெட்டு,

"கோனாடான கடலடையா
திலங்கை கொண்ட சோழ
வளநாட்டு ஒல்லையூர் கூற்றத்து
ஒல்லையூர் மங்கலத்து உடையார் வர
குணீசுவரமுடைய நாயனார்"

என்று கூறுகிறது. எனவே ஒல்லையூர் மங்கலத்தைத் தலைநகராகக் கொண்டது ஒல்லையூர் கூற்றமெனப்படும். இதுவே சங்க காலத்தில் ஒல்லையூர் நாடென்று வழங்கியதாகும். **ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன்** புறநானூற்றிலும், **ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்** அகநானூற்றில் ஒரு பாடலையும் (அகம் - 25), புறநானூற்றில் மூன்று பாடல்களையும் பாடியுள்ளனர். பூதப்பாண்டியனின் தேவியும் சிறந்த புலமை உடையவராவர். அவர் பாடியது புறம் 246 - வது செய்யுள்.

பூங்குன்றம்

புறநானூறு மட்டுமின்றிக் குறுந்தொகை, நெடுந்தொகையிலும் பாடல்கள் இயற்றியுள்ள கணியன் பூங்குன்றனார் பிறந்த ஊர். பூங்குன்ற நாட்டின் தலைநகர் **மகிபாலன்பட்டி**. மகிபாலன் என்பது, முன் ஆண்ட அரசர் ஒருவரின் பெயர். பாண்டி மண்டலத்தின் உள் நாடுகளில் ஒன்றாகிய பூங்குன்ற நாட்டுக்குப் பூங்குன்றம் தலைநகர் என்பது **"பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றமும்"** என்ற குகைக் கோயிலில் உள்ள சுந்தர பாண்டியன் கல்வெட்டால் அறியப்படு கிறது. **"ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய வர்மரான திரிபுவனச் சக்கர வர்த்திகள் எம்மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீசுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 19- ஆவது சிங்கநாயிற்று அமரபக்ஷமும் துதியையும் திங்கட்கிழமையும் பெற்ற பூரட்டாதி நாள் உடையார் குலசேகர ஈஸ்வரமுடைய நாயனார் திருப்பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றத் துடையார் திருப்பூங்குன்றமுடைய நாயனார் ஆதி சண்டேசுவர நாயனார்க்கு இந்நாட்டு நாட்டவரோம். பிரமாணம் பண்ணிக் கொடுத்த பரிசாவது"** என்பதே அக்கல்வெட்டின் வாசகமாகும்.

இந்நாடு 24½ கிராமங்களை உடையது. 1. மகிபாலன்பட்டி, 2. நெல்மேனிப்பட்டி, 3. வேலங்குடி, 4. மருதுக்குடிப்பட்டி, 5. பாப்பான்பட்டி, 6. கொன்னத்தான்பட்டி, 7. மலம்பட்டி,

8. திருக்கோளக்குடி, 9. ஆத்திரம்பட்டி, 10. மின்னக்குடி, 11. சந்தனம்பட்டி, 12. கருப்பன்பட்டி, 13. சுண்டைக்காடு, 14. நல்லிப்பட்டி, 15. கண்டவராயன்பட்டி, 16. கருவேப்பிலாம்பட்டி, 17. திருக்களாப்பட்டி, 18. சோளம்பட்டி, 19. வஞ்சினிப்பட்டி, 20. காவினிப்பட்டி, 21. கலாமடம், 22. கோயிலாப்பட்டி, 23. பிலாக்குடிப்பட்டி, 24. மையூர், 25. பறியாமருந்துப்பட்டி என வழங்கும் பெரிய மருந்துப்பட்டி உட்பட நெற்குப்பைக் கீழத்தெரு (கிராமத்தின் ஒரு பகுதி மட்டும் சேர்ந்திருந்ததால் இது அரைக் கிராமமாகக் கணக்கிடப் பெறுகிறது என்ற விவரத்தைச் சோமலெ அவர்கள் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.)[1]

பறம்பு நாடு

கபிலரும் செட்டிநாட்டில் வாழ்ந்தவரே எனக் கருதலாம். ஏனெனில் பாரி ஆண்ட பறம்புநாட்டின் ஒரு பகுதி செட்டி நாட்டிற்கே உரியது. கடையேழு வள்ளல்களுள் ஒருவரான பாரியின் மலை பறம்பு மலை. பறம்பு மலை, பரன் மலை என்றாகிப் பின்னர் பிரான்மலை என மருவியது. இப்பறம்பு மலையே பறம்பு நாட்டின் தலைநகர். பிரான்மலைக்குக் கொடுங்குன்றம் என்றும் பெயர் வழங்குகிறது. பறம்பு மலை எனும் பிரான்மலை செட்டிநாட்டின் மேற்கு எல்லையாக சிவகங்கை மாவட்டத்தில் திருப்புத்தூர் வட்டத்தில் இருக்கிறது

ஒக்கூர்

ஒக்கூர் மாசாத்தியாரின் பாடல்கள் அகநானூற்றிலும் (பாடல் 324, 384) புறநானூற்றிலும் உள்ளன. ஒக்கூர் மாசாத்தனார் பாடல்களும் அகநானூற்றிலும் (பாடல் - 14), புறநானூற்றிலும் (பாடல் 284) உள்ளன. இவர்கள் பிறந்த ஒக்கூர் சிவகங்கைக்கு அருகே உள்ளது. மேலும் திருக்குறளுக்கும் பரிபாடலுக்கும் உரைசெய்த பரிமேலழகர் ஒக்கூரைச் சேர்ந்தவர். பாடல் ஒன்று இவரை 'ஒக்கைக் காவலர்' என்று கூறுகிறது. இப்பாடலின் கூற்றுப்படி இவர் பாண்டிய அரசனால் சிறப்புச் செய்யப் பெற்ற ஒக்கூரில் தலைவனாக வாழ்ந்திருந்தார் எனக் கருதலாம். ஒக்கை என்பது ஒக்கூர். இது பாண்டிய நாட்டில் உள்ள ஊர் என்று அறிஞர் மு. அருணாசலம் கூறுகிறார். (தமிழ் இலக்கிய வரலாறு) இவர் தவிர ஒக்கூர் மாசாத்தியார், மாற்றூர் கிழார், கொற்றக் கொற்றனார், கபிலர், கோனாட்டு எறிச்சலூர் மாடலன், ஆகியோர் சங்க இலக்கியங்களில் இடம்பெறும் செட்டிநாட்டுப் புலவர்கள்.

1. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், முதற்பதிப்பு, வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 22 – 23.

சிவகங்கைக்கு அருகில் வேம்பத்தூர் என்ற ஓர் ஊர் உள்ளது. இவ்வூரைச் சார்ந்த வேம்பற்றூர்க் குமரனார் எழுதிய இருபாடல்கள் அகநானூற்றிலும், புறநானூற்றிலும் முறையே 157, 317-ஆம் பாடல்களாக உள்ளன. மற்றொரு புலவரான வேம்பற்றூர்க் கண்ணங்கூத்தன் என்பவர் குறுந்தொகையில் 350-ஆவது பாடலை இயற்றியுள்ளார்.

சிவகங்கை - மதுரை - வரிச்சூர் வழிச் சாலையில் படமாத்தூர் என்ற ஊர் உள்ளது. சங்ககாலத்தில் படுமாற்றூர் என வழங்கப்பட்ட ஊர் இதுவாக இருக்கலாம். அப்படியெனில் குறுந்தொகையில் 376-ஆம் பாடலைப் பாடிய படுமாற்றூர் மோசிகீரனார் கொற்றனார் இவ்வூரைச் சார்ந்தவராக இருந்திருக்கலாம்.

சிவகங்கையில் உள்ள அள்ளூர் எனும் சிற்றூரில் வாழ்ந்த 'அள்ளூர் நன்முல்லையார்' எனும் பெண்பாற்புலவர் பாடிய பாடல்கள் தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன.

நற்றிணை 211ஆவது பாடலைப் பாடிய சங்ககாலப் புலவரான கோட்டியூர் நல்லாந்தையார் திருக்கோஷ்டியூரைச் சேர்ந்தவரே.

சிலப்பதிகாரக் காலம்

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சங்ககாலத்தை அடுத்துச் செய்யப்பெற்றவை. சிலப்பதிகாரக் கதை சுருக்கமாகக் கூறப்படுகிறது. கோவலன் **"ஏகாச்சிறப்பின் இசை விளங்கும் பெருங்குடி மாசாத்துவான் மகனாய்"** தோன்றியவன். செல்வனான வணிகர் இனத்தைக் சார்ந்த கோவலனும், கண்ணகியும் இனிய தம்பதிகள். இவர்கள் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் சோழமண்ணில் புகழ் பூத்த துறைமுகத் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் உவகையோடு வாழ்ந்தனர்.

ஒருநாள் கோவலன் அழகுமேனி படைத்த ஆடல்மகள் மாதவியைக் காண நேர்ந்து, தன் உள்ளத்தை அவள் பால் இழந்தான். தன் மனைவி கண்ணகியை அடியோடு மறக்கும் அளவு இவன் மாதவியோடு இணக்கம் கொண்டான். கண்ணகியைப் பிரிந்து மாதவி பால் அடைந்தான். சில ஆண்டுகள் கழிந்தன. இந்திர விழாக் காலத்தில் நியாயக் காரணமின்றிக் கோவலன், மாதவியின் பாடலில் சந்தேகம் கண்டு அவளைத் துறந்து, வழி தவறிய கணவனுக்காகக் காத்துக் கிடந்த கண்ணகியிடம் திரும்பினான்.

மகிழ்ச்சிகரமான நிலையோடு கோவலனும், கண்ணகியும் அன்றைய பாண்டியர் தலை நகரமான மதுரைக்குப் புதுவாழ்வு தொடங்க வந்தனர். கண்ணகியின் ஒரு சிலம்பை விற்கக் கோவலன் புறப்படுகிறான். அப்போது அதே சமயம் பாண்டிய அரசியின் ஒரு சிலம்பும் களவுபோய் விட பணியாள்கள் நகரம் முழுவதும் தேடுகின்றனர். தன் மனைவியின் சிலம்பை விற்க முயலும் போது

கோவலன் பிடிபட்டு. அரசியின் சிலம்பைத் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. அக்குற்றத்தைச் செவ்வனே ஆராயாமல் பாண்டிய மன்னன் கோவலனுக்கு மரண தண்டனை விதித்தான்.

இந்த அதிர்ச்சியான செய்திக் கேட்டு கண்ணகி, பாண்டியன் அவைக்கு விரைந்து தன் மற்றொரு சிலம்பைக் காட்டித் தன் கணவனின் குற்றமற்ற தன்மையை நிரூபிக்கிறாள். தன் நியாமற்ற தண்டனையை உணர்ந்த மன்னன் அதிர்ச்சியால் அவ்விடத்திலேயே உயிர் துறக்கிறான். அரசியும் அவனைப் பின்பற்றி இறக்கிறாள். அரசன் - அரசியின் மரணமும் கண்ணகியின் கோபத்தைத் தணிக்கவில்லை. தன் நேர்மை, பத்தினித்தன்மையால் பெற்ற அமானுஷ்ய சக்தியால் மதுரை மாநகரத்தைச் சபித்துச் சாம்பலாக்குகிறாள். தன் கணவனின் அநீதி மரணத்திற்குப் பழி வாங்குகிறாள்.

முடிவு எல்லா இந்துப் புராணங்கள் போல மகிழ்ச்சியில்தான் முடிகிறது. மதுரை நகரத் தெய்வம் கண்ணகி எதிரில் தோன்றிச் சமாதானப்படுத்துகிறது. கண்ணகி நிதானமாகித் தெய்விக ஊர்தியோடு காத்திருக்கும் தன் கணவனைக் கூட மேற்கு மலை ஏறுகிறாள். இப்படிக் கணவனும் - மனைவியும் இணைந்து மேலுலகம் செல்கின்றனர்.

கோவலன் - கண்ணகியின் பழக்கங்கள் பற்றிய சில தகவல்கள் இன்றைய நகரத்தார்களை நினைவூட்டுகின்றன. இளங்கோவடிகள் உபயோகப்படுத்திய சில தமிழ்ச் சொற்கள் இன்று நகரத்தாரின் பேச்சு வழக்கில் காணப்படுகின்றன. எனவே கோவலனும் கண்ணகியும் இன்று நாம் காணும் நகரத்தார்கள் என்கின்ற வணிகர் இனத்தைச் சார்ந்தவர்களே எனலாம்.

இக்காவியத்தில்தான் செட்டி என்ற சொல் முதன்முதலாக உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. மணமகள் கழுத்தில் தாலி அணிவிப்பதற்கு முன் அதை ஊர்வலமாக எடுத்துச் செல்லுதல், விசேஷ காலங்களில் சங்கு ஊதுதல் போன்றவை நகரத்தார்கள் காப்பியக் காலத்தினரே என மேற்கோள் காட்ட உதவுகிறது. கண்ணகியும் பெருங்குடி வணிகர் மரபில் தோன்றியவள் (நகரத்தார் சமூகமும் - கோவலன் - கண்ணகியின் மரபில் தோன்றியவர்கள் என்பதாலும், சிலம்பின் தீவினையால்தான் கோவலன் மாண்டான் என்பதாலும் நகரத்தார் பெண்கள் காலில் தண்டை, சிலம்பு எதுவும் அணிவதில்லை) சிலப்பதிகாரத்தில் உள்ள 'மனையறம் படுத்த காதை' திருமணமான மணமக்களைத் தனிக்குடித்தனம் வைப்பதைக் கூறுகிறது. இது இன்றும் நகரத்தார் சமூகத்தில் வேறு வைத்தல் எனும் மங்கல நிகழ்வாகச் செய்யப்படுகிறது. மணமக்கள் வேறு வைக்கும் நாளில் கத்தரிக்காய் குழம்பு, வாழைக்காய் பொரியல், பருப்பு இம்மூன்றையும் சமைப்பர். இவர்களின் சமையல் செலவுக்காக ஓராண்டுக்கு ரூ. 200, இரண்டு பொதி நெல்லும்

வழங்கப்படும். இதற்கு **வருஷத்து போகம் (அ) பொதிபோடுதல்** எனப்படும். இதனை மணமகளிடம் மணமகனின் பெற்றோரால் கொடுக்கப்படுகிறது. இதை இளங்கோவடிகள் **'வேறுபடு திருவின் வீறுபெறக் காண'** எனக் குறிப்பிடுகிறார்.

திரைக் கடலோடியும் திரவியம் தேடி

கடற்பயிற்சி மிக்கவர் பழந்தமிழ் மக்களாவர். **ஆர்கலி, ஆழி, புணரி, முந்நீர், பள்ளம், பவ்வம், பரவை, கடல்** முதலிய பல சொற்கள் கடலையே குறித்தன. நாவாய் சாத்திரம் எனும் நூலில் (கி.பி. 1741) கப்பலைக் குறிக்க பல்வேறு சொற்கள் கையாளப் பட்டுள்ளன. அவை **நாவாய், வங்கம், கலம், ஏரா, தோணி, யாத்திரை மரம், படகு, ஓடம், கப்பல்** முதலியன. மேலும் கப்பலின் உறுப்புகளுக்கும் **ஏரா, பருமல், தொகுதி, வங்கு, பாய்மரம், பாய்** முதலிய தமிழ்ப் பெயர்கள் இருந்தன என்பதை இந்நூல் குறிக்கிறது.[1] இவை கொண்டு தமிழ் மக்களின் கடல் வாணிகச் சிறப்பை உணரலாம்.

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட வுரவோன் மருக"

என்று கரிகாற் சோழனை, வெண்ணிக்குயத்தியார் பாடுகின்றார்.

சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினமும், சேர நாட்டில் முசிறியும், பாண்டிய நாட்டில் கொற்கையும் புகழ் மிகுந்த துறைமுகப் பட்டினங்களாக விளங்கின. காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் குவிந்து கிடக்கும் பொருள்களே வாணிக வளம் கூறும். பட்டினப் பாலை இதைக் குறிக்கிறது.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்."

அகநானூற்றுப் பாடல்கள் (130, 201) 'கொற்கை முன் துறை'யைப் பற்றி குறிக்கின்றன. கொற்கையில் நடந்த அகழ்வாராய்ச்சியின் அறிவியல் சோதனைப்படி (C ^{14} Dating) கி.மு.785 - ஆம் ஆண்டிலேயே இவ்வூரில் மக்கள் வசித்து வந்தனர் எனத் தெரியவருகிறது.[2] மேலும்

1. டாக்டர் எஸ்.சௌந்தர பாண்டியன், (பதி) நாவாய் சாத்திரம், அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம், சென்னை, 1995, பக், 2 – 3.

2. R.Nagaswamy, (Editor) Damilica, (தமிழகம்)1970, p 50 - 54.

அகழ்வாய்வில் கிடைத்த உரோமர்களின் மட்கலன்கள் மூலம் இவர்கள் மத்தியத் தரைக்கடல் பகுதி வரை வாணிகத் தொடர்பு கொண்டிருந்தமை புலனாகிறது.[1]

சங்க இலக்கியங்களும், வாய்மொழி இலக்கியங்களும் கொற்கை முத்தின் வாணிகச் சிறப்பைக் கூறுகின்றது. சிறு பாணாற்றுப்படை யும், மதுரைக் காஞ்சியும் இது பற்றிப் பெருமிதத்துடன் கூறுகின்றன. கொற்கை முத்தின் புகழை அக நானூறு கூறுகிறது.

"மறப்போர்ப் பாண்டிய அறத்திற் காக்கும்
கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன"

என்பது பாடல் கூறும் முத்தின் பெருமையாகும். கொற்கையில் கிடைத்த தாலாட்டுப் பாடலும் இதனை,

கொற்கைத் தொறை முகத்தில் – கண்ணே நீ
கொண்டு வந்த கெட்டி முத்தோ
குலசேர பட்டினத்தில் – கண்ணே நீ
குளிச்சு எடுத்த முத்தோ
மூணு கப்பல் கொடி பிடிக்க
முத்துக் கப்பல் ஓடி வர
மூழ்கிக் குளிச்சி முத்தெடுக்கும்
மூத்தவனே கண்ணுறங்கு.[2]

என்று கூறுகிறது.

மதுரை, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய நகர்களின் கடைவீதிகள் பெறும் வருணனைச் சிறப்பின் வழி, பத்துப்பாட்டும் சிலம்பும் உள் நாட்டு வாணிக வளத்தின் உயர்வு கூறுவதை உணரலாம். எருது, கழுதை வண்டி இவற்றில் பண்டப் பொதிகளை ஏற்றிக் கொண்டு வணிகர் கூட்டங் கூட்டமாய்ச் சென்று வாணிகம் செய்தனர். இக் கூட்டம் வாணிகச் சாத்து எனப்பட்டது. ஆறலைக் கள்வருக்கு அஞ்சி அவர்கள் சாத்துக்களாகச் சேர்ந்து செல்வது வழக்கம்.[3] வழிகளில் தாக்கும் ஆறலைக் கள்வரை எதிர்க்கப் படை வீரர்களும் உடன் சென்றனர்.

நவமணி வணிகர் முதல், பிட்டு அப்பம் விற்ற வணிகர் வரை அனைவரும் நடுவுநிலை தவறாது வாணிகம் செய்தனர். இதனைப் பட்டினப்பாலை,

"நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்

1. சா.குருமூர்த்தி, தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும், சென்னைப்பல்கலைக் கழகம், 1974, பக், 46 – 47.

2. மா.சந்திரமூர்த்தி, தாலாட்டும் தாயக வரலாறும், கல்வெட்டு காலாண்டிதழ், தொல்லியல் துறை வெளியீடு, ஆனந்த ஆண்டு, ஆடித்திங்கள், இதழ் – 2 பக், 184 – 120.

3. மதுரைக்காஞ்சி, 365 – 373.

கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல்கொண்டித் துவன்றிருக்கை"

என்று கூறும்.

மணிமேகலை என்ற மற்றொரு காப்பியத்திலிருந்து நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் மூதாதையான சந்திராதித்தன் என்ற வணிகன், தன் சொந்தக் கப்பலிலேயே கிருஸ்து சகாப்தத்திற்குத் தொடக்கத்தில் இந்தியாவிலிருந்து மலேயா, தென்கிழக்கு ஆசியப் பகுதிகளுக்குச் சென்றான் என்பதை அறிகிறோம். நகரத்தார்கள் தமிழ்ப் பழமொழியான **'திரைக்கடலோடியும் திரவியம் தேடு'** (கடலைத் தாண்டியாயினும் செல்வம் ஈட்ட வேண்டும்) என்பதைக் கடைப்பிடித்தனர். அக்காலத் தமிழ் இலக்கியங்கள், செட்டியார் கடல் கடந்தும்கூடப் பருத்தித்துணி, முத்து, வாசனைத் திரவியங்கள், பட்டு முதலியவற்றை வாணிகம் செய்ததைக் குறிப்பிடுகின்றன.

வாணிகத் தொடர்பு

தமிழர்கள் கடல் வாணிகத்தில் சிறப்புற்றிருந்தனர். இது கி.மு. பத்தாம் நூற்றாண்டிலேயே காணப்படுகிறது. பழந்தமிழர்கள் மேற்கே கிரீஸ், ரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையில் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். எகிப்து, மெசப்பொடோமியா, பாலஸ்தீனம், பாபிலோனியா, சீனம் ஆகிய நாடுகளுடன் அத்தொடர்பு வளர்ந்து பெருகிற்று. மலேசியா, ஜாவா, வடபோர்னியா ஆகிய நாடுகளுடனும் பழந்தமிழர் மிகவும் வளமானதொரு கடல் வாணிகம் நடத்தி வந்தனர்.

கி.மு. பத்தாம் நூற்றாண்டிலேயே தமிழ்நாடு, சிரியா, பாபிலோனியா, எகிப்து முதலிய நாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. சான்றாகத், தமிழ்நாட்டின் மணம் பரப்பும் சந்தனம், ஆங்கிலத்தில் சந்தல் (Sandal) ஆனது. மயிலை ஆகுபெயரால் உணர்த்தும் 'தோகை' என்ற சொல் 'துக்கி' (Tukki) என்ற ஹீப்ரு மொழியில் வழங்குகிறது.

"தமிழில் அரிசி என்பது கிரேக்கத்தில் 'அரிஸா' எனவும், கருவா (இலவங்கம்) என்பது 'கார்ப்பியன்' எனவும், இஞ்சிவேர் என்பது 'சின்சிபேரோஸ்' எனவும் 'பிப்பாலியிலிருந்து' 'பெப்பரி' எனவும் பெயர்ந்து சென்ற மொழிகளாகும். கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் ஐரோப்பாவுடன் நடைபெற்ற தென்னிந்திய வாணிகத்தைப் பற்றிய விவரங்கள் பல கிட்டியுள்ளன. அவற்றுள் மிகச் சிறந்தவை உரோமை வல்லரசர் அகஸ்ற்றசின் காலத்தைச் சார்ந்த ஸ்டிராபோவின் விவரணம், சுமார் கி.பி. 60இல் தோன்றியுள்ள 'பெரிபுளூஸ்' என்னும் நூல், பிளினியின் 'இயற்கை

வரலாறு' (சுமார் கி.பி. 77), தாலமியின் 'பூகோள விவரணம்' (சுமார் கி.பி. 170) என்னும் நூல்களாகும். இவ் வெளிநாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கும் நுண்ணிய விவரங்கள் சங்கநூல்கள் பலவற்றில் காணப்படும் கருத்துகளுக்கு மிகப் பொருத்தமாயிருக்கின்றன. கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் அரிக்கமேடு, உறையூர், கரூர், காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம், வசவசமுத்திரம், தொண்டி ஆகிய வரலாற்று நககரங்களில்[1] நடந்து முடிந்த அகழ்வாராய்ச்சிகளும், அங்கு கிடைத்த உரோமர்களின் மட்பாண்டடங்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

வேதங்களில் குறிப்பிடப்படாத யானை, கி.மு. ஏழாம் நூற்றாண்டில் அசிரிய நாட்டு மன்னனுக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. நீலிச்சாயம் தோய்க்கப்பட்ட துணிகள் எகிப்துக்கும் பாரசிகத்திற்கும் அனுப்பப்பட்டன. பாண்டி நாட்டுத் துறைமுகப் பட்டினமான கொற்கையில் நடந்த அகழ்வாராய்ச்சியில் சங்ககாலத்தைச் சார்ந்த சாயத்தொட்டிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. யானைத் தந்தத்தாலான எழுத்தாணிகளும் கிடைத்துள்ளது இதனை உறுதிப்படுத்துகின்றன. சேரநாட்டின் தேக்குமரம் பிறநாட்டில் கட்டடங்கள் கட்டவும், கப்பல்கள் கட்டவும் உதவியது. யவனர் மிளகு கொண்டு சென்றனர்; பொன்னும் மதுவும் கொண்டு வந்தனர். அவர்கள் வாழ்ந்த குடியிருப்புகளும் தமிழ்நாட்டில் புதுவையிலும், புகாரிலும்[2] இருந்தன. புதுச்சேரியின் அருகே 'அரிகாமேடு' என்ற இடத்தைத் தோண்டிப் பார்த்ததில், அவ்விடத்தே அத்தகையதோர் யவனக் குடியிருப்பு இருந்தது என்பது தெரிந்தது. அப்பகுதியில் நடந்த அகழ்வாராய்ச்சியில் யவனர்கள் மத்தியத் தரைக்கடல் பகுதியிலிருந்து கொண்டுவந்த அம்போரே எனும் ரோமானிய மதுஜாடிகள் கிடைத்துள்ளன.[3] யவனரின் அழகிய புலிச்சங்கிலிகளும், பாவை விளக்குகளும் தமிழ் நாட்டிற்கு வந்தன. அவ்வாறே புகாரில் இன்றும் பண்டைய யவனர் குடியிருப்புப் பகுதி 'வெள்ளையன் இருப்பு' என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகிறது.[4] இராமநாதபுரம் அருகிலுள்ள அழகன் குளத்தல் நடந்த அகழ்வாய்வில் வேலன்டைன், ஆர்கேடியஸ், தியோடேசியஸ் போன்ற ரோமானிய மன்னர்களால் வெளியிடப்பட்ட காசுகளும், ரோமானிய மதுக்குடத்தின் பகுதிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[5]

1. சா.குருமூர்த்தி, தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும், சென்னைப்பல்கலைக் கழகம், 1974, பக், 30 – 41
2. Indian Archaeology, 1963 - 64; 1964 - 65; 1965 - 66;- A Review.
3. Ancient India, No.2, pp 17 - 124
4. ஆசிரியர் அறுவர், பூம்புகார், தொல்லியல்துறை வெளியீடு, 1973
5. Alagankulam (A Preliminary report) by Natana.Kasinathan, A.Abdul majeed, D.Tulasiraman, S. Vasanthi.

தென்பாண்டிக் கடல் முத்து உலகப் புகழ் வாய்ந்தது. முத்தம் (முத்து) முதலிய தமிழ்ச் சொற்கள் வடமொழியில் பழைய வேதமான இருக்கு வேதத்திலே இடம் பெற்றுள்ளன. உரோம் நாட்டுப் பெண்டிர் தமிழ் நாட்டு முத்தைப் பெரிதும் விரும்பினர். உலோலா என்னும் உரோம் நாட்டு அரசி 30,000 தங்க நாணயத்திற்கு ஈடான முத்துகளை அணிந்திருந்தாள். ரோமாபுரி வீதிகளில் கொற்கை முத்து விற்கப்பட்டதை இன்றும் பாண்டிய நாட்டு வாய்மொழி இலக்கியமான நாட்டுப் பாடல்கள் கூறுகின்றன. ரோம் நாட்டில் இறக்குமதியான சரக்குகளின் அளவு ஆண்டுதோறும் மிகுதியாகியது. ஆண்டு தோறும் 600000 பவுன் மதிப்புள்ள தங்கம் தமிழரின் கைக்கு மாறிக் கொண்டே வந்தது.[1] உரோம் நாட்டு மக்களின் இத்தகைய ஆடம்பர வேட்கையால், அந்நாட்டுப்' பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டதாகப் பெரிபிளஸ் (Periplus) நூல் குறிப்பிடுகின்றது.

அடுத்து, வடநாட்டவரும் தமிழ்நாட்டு வாணிகத்தைப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். மௌரிய மன்னன் சந்திரகுப்தனின் மதிபடைத்த அமைச்சர் - சாணக்கியர் என வழங்கும் கௌடில்யர்-வடநாட்டு வாணிகத்தினும் தென்னாட்டு வாணிகமே சிறந்தது என்றும், வடநாடு கம்பள ஆடை, தோல், குதிரை முதலிய எளிய பொருள்களையே வாணிகப் பொருள்களாகக் கொண்டிருக்க, தென்னாடோ விலைமதிப்பு வாய்ந்த பொருள்களாகிய சங்கு, வைரம், மாணிக்கக் கற்கள், முத்து, பொன்னணிகள் முதலியவற்றைக் கொண்டிருந்தது என்றும் வாயாரப் புகழ்கிறார். இவை எல்லாம் தமிழர் 'திரைக்கடலோடியும் திரவியந்தேடி' அந்நாளிலேயே நாகரிகச் சிறப்புற்றிருந்தனர் என்பதை அறிவிக்கின்றன.

நச்சினார்க்கினியத்தில் காணப்படும் ஒரு குறிப்பு, வாணிகம் வைசியர்களுக்கும், வேளாளர்களுக்கும் பொதுவானது எனத் தெரிவிக்கிறது. மேலும் கல்வி, வேள்வி, கொடை, விவசாயம், கால்நடை, பராமரிப்பு, வியாபாரம், தொழுகை இவ்வளவும் ஒரு வேளாளனுக்கு நியமித்த கட்டளைப் பணி. ஓர் இடத்தில் தொழுகைக்குப் பதிலாக வேள்ளி புரியலாம் என்றுள்ளது. எனவே அரச குடும்பம் போல வேள்வி புரிய அனுமதிக்கப்பட்டது. ஆனால் வைசியருக்கும் வேளாளருக்கும் இடையில் பெருத்த குழப்பம் ஏற்பட்டது. அவர்கள் புரிந்த தொழிலைக் கொண்டே அவர்கள் அறியப்பட்டனர். வியாபாரிகளும், வணிகர்களும் பெரும்பாலும் நகரத்தைச் சேர்ந்தவர்களே. கோவலன்-கண்ணகி போன்ற பெரிய வைசிய குடும்பங்கள் வாழ்ந்த இடமே புகார் நகரம். தென்னிந் தியாவில் வணிக இனத்தைச் சார்ந்த ஓர் இனத்தைக் குறிக்கும் செட்டி என்ற சொல் சங்க காலத்திலேயே விளங்கியிருக்கிறது.

1. அ.அப்துல் மஜீத், சீ. வசந்தி, எஸ். செல்வராஜ், காலினும் கலத்தினும் வணிகம், தமிழர் நாகரிகம், (பதி) நடன. காசிநாதன், தொல்லியல்துறை வெளியீடு, சென்னை, 1994, பக்,199.

சிலப்பதிகாரம் அரத்தன் செட்டி என்பவனைப் பற்றியும், மணிமேகலை சந்திராதித்தன் என்ற வணிகனைப் பற்றியும் பேசுகிறது. மற்றோர் இடத்தில் ஒன்பது செட்டிகள் குறிப்பிடப் படுகிறார்கள். இந்த செட்டிகள் வியாபாரிகள், தேசத்தில் இவர்கள் பெரும் செல்வர்கள். இவர்கள் வசித்த நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் செல்வத்தின் தெய்வம் உறைவிடம் போலவே விளங்கியது.

தமிழில் எழுந்த இரண்டாவது காப்பியம் மணிமேகலை. மணிமேகலைக் காப்பியக் கதை ஒரு புரட்சிக் கதை. வணிகரில் சிறந்த கோவலனுக்கும் கணிகையரில் சிறந்த மாதவிக்கும் பிறந்த மகள் மணிமேகலை. கோவலன் மறைந்ததும் மாதவி உலக வாழ்வை வெறுத்து அறவண அடிகளை அணுகித் துறவறம் பூண்டாள். மகள் மணிமேகலையைப் பரத்தை வாழ்வில் ஈடுபடுத்த பாட்டி சித்திராபதி முயன்றாள். மாதவி அதனை வெறுத்து 'மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை. அவள் தவநெறி மேற்கொள்வாளே தவிர அவநெறி மேற்கொள்ளமாட்டாள்' எனக் கூறி, மகளின், கூந்தலைக் களைந்து அவளையும் தூய துறவு வாழ்வு மேற்கொள்ளச் செய்கிறாள்.

ஒரு பரத்தை அதுவும் கர்வம் இருக்கும் மங்கைப் பருவத்துப் பேரழகி துறவியாவது, சான்றோரையும் கண்கலங்கச் செய்யும் நிகழ்ச்சி. இடையே நாட்டின் இளவரசன் உதயகுமாரன் அவளைக் காதலிக்கிறான். மணிமேகலை மணி பல்லவம் அடைந்து அத்தீவின் தெய்வத்தால் பழம் பிறப்பு உணர்ந்து அமுதசுரபி பெற்று மீள்கிறாள். நாடெங்கும் திரிந்து பசியும் பிணியும் போக்குகிறாள். உதயகுமாரன் கொலையுண்ணச் சிறை புகுந்து மணிமேகலை சிறைச்சாலையை அறச்சாலையாக்கி மகனை இழந்த மாதரசிக்கு அறமுரைக்கிறாள். ஊர் பல சென்று அறங்கள் உரைத்துப் பௌத்த நெறியின் படி முத்தியடைகிறாள். மணிமேகலையின் கதையோடு, இந்நூலில் வரும் ஆதிரை வரலாறு, ஆபுத்திரன் வரலாறு ஆகியனவும் காப்பியத்து க்குச் சுவை சேர்க்கின்றன.

மணிமேகலையை இயற்றியவர் சீத்தலை சாத்தனார். இவர் செய்த வியாபாரம் கூலவாணிகமாகும். இவர் தாம் எழுதிய மணிமேகலையில் "ஆபுத்திரனோடு மணி பல்லவம் அடைந்த காதையில்'' நகரத்தார்களின் வாணிகத்தையும், அவர்களிடம் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் சிறப்பித்துக் கூறுகிறார். இதனால் சாத்தனார் நகரத்தாரே என்று கொள்ளலாம். (சாத்தன், சாத்தப்பன் என்ற பெயர்கள் இன்றும் செட்டிநாட்டில் பரவலாகக் காணப்படுகின்றன.)

மணிமேகலை கோவலன் பெற்ற குலக்கொடி. மாதவிக்கு மணிமேகலை பிறந்தவுடன் ஊரில் அனைவரையும் அழைத்து முத்தும், மணியும் அளித்துச் சிறப்பித்தான் கோவலன். 'அணிமேகலையார் ஆயிரம் கணிகையர் மணிமேகலை என

வாழ்த்திய அந்நாள், செம்பொன் மாரி செங்கையில் ஈந்து' என வரும் சிலப்பதிகார வரிகள் இதற்குச் சான்றாகும். கோவலன் வணிகர் மரபானதனால் இச்சடங்குகளைச் செய்தான் என அறியலாம். இன்றும் செட்டிநாட்டில் குழந்தைப் பிறப்பை அறிவிப்பதை ஒரு சடங்காகவே கொண்டுள்ளனர் நகரத்தார் மரபினர். மேலும், "மயக்குறும் மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே" என்பதற்கிணங்க குழந்தை பிறந்ததும் புதுமையாகக் காட்சி தருவதால் **புதுமை** என்ற சடங்கையும் விழாவாகவே சிறப்பிக்கின்றனர். மணிமேகலை அட்சய பாத்திரம் பெற்றதும் முதலில் ஒரு பத்தினிப் பெண்ணிடம் பிச்சை பெறவேண்டும் என்ற நியதிப்படி பெண் திலகமான **'ஆதிரை'** என்பவளிடம் பிச்சை ஏற்றாள். **"பாரக மடங்கலும் பசிப்பிணி யறுக''** எனக் கூறி அவளிட்ட பிச்சை பெருகி உலகப் பசிப்பிணியை நீக்கியது. எனவே ஆதிரையும் **நகரத்தார் மரபினளாகவே சுட்டப்படுகிறாள். (மார்கழி மாதம் வரும் ஆதிரை நட்சத்திரத்தில் நகரத்தாரின் மணமாகாத பெண்கள் விழாவாக இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது. திரு ஆதிரை விழா நடத்தப்பட்ட பெண்களே இறந்தபின் எரியூட்டப் படுவர். ஆதிரை விழா நடத்தப்படாத பெண்கள் இறந்தால் புதைப்பதே வழக்கம்)**

பல்லவர் காலம்

வணிகர் சமுதாயம் பல பெயர்களில் திகழ்ந்தது. அவற்றில் **'மணிக்கிராமம்'** என்ற ஓர் அமைப்புச் சிறந்து விளங்கியது. கடல் கடந்த சயாம் நாட்டில் தக்கோலம் என்று பெயர் பெற்ற (தக்குவாபா) இடத்தில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. அதில் மணிக்கிராமத்தார் குறிக்கப்பட் டுள்ளனர். இக்கல்வெட்டு **தெள்ளாறெறிந்த நந்திவர்ம பல்லவன்** காலத்தது என்று வரலாற்று ஆசிரியர் கூறுவர். மணிக்கிராமம் என்னும் பகுதி காவிரிப்பூம்பட்டினத்தில் இன்றும் உள்ளது. காவிரிப் பூம்பட்டினம் சிறந்த துறைமுகமாகத் திகழ்ந்ததை, அனைவரும் அறிவோம். அங்கிருந்து தமிழக வணிகர் கடல் கடந்து வாணிகம் செய்யச் சென்றிருக்கின்றனர். அவர்களே தக்கோலத்தில் குறிக்கப் படும் மணிக்கிராமத்தார் எனலாம். அக்கல்வெட்டு சேனாமுகத்தை யும் குறிக்கிறது. இதிலிருந்து மணிக் கிராமத்தார் கடல் கொள்ளைக் காரர்களிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும், சென்ற இடத்தில் தங்களைக் காத்துக் கொள்ளவும் சேனையை உடன் அழைத்துச் சென்றனர் என்றும் அறியலாம். **மணிக் கிராமம்** என்பது போல **நானாதேசி** என்ற ஓர் அமைப்பு வணிகர் சமுதாயத்தில் இருந்தது. இவர்கள் **நானாதேசி திசையாயிரத்து ஐந்நூற்றுவர்** என்று பல கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றனர். திசை ஆயிரத்து ஐந்நூற்றுவரைக் குறிக்கும் ஒரு கல்வெட்டு இவர்களது

சாஸனத்தைப் பஞ்சசத வீர சாஸனம் என்று குறிக்கிறது. பஞ்சசதம் என்பது ஐந்நூற்றையே குறிக்கும்.

திசையாயிரத்து ஐந்நூற்றுவர்

'திசையாயிரத்து ஐந்நூற்றுவர்' என்ற சொற்றொடருக்கு பலரும் பற்பல விளக்கங்கள் சொல்லியிருக்கிறார்கள். இச் சொற்றோடர் ஆயிரத்து ஐந்நூறு வியாபாரிகளைக் குறிக்குமென கே.வி. சுப்பிரமணிய ஐயர் குறிப்பிடுகிறார்.[1] கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் இச்சொற்றொடர் ஆயிரம் பகுதிகளைச் சார்ந்த ஐந்நூறு வியாபாரிகளைக் குறிப்பிடுகிறது என்கிறார்.[2] இச் சொற்றொடர் பல நாடுகளில் வாழ்ந்த வியாபாரிகளைக் குறிக்கும் என்கிறார் டிஎன். சுப்பிரமணியம் என்ற வரலாற்று ஆசிரியர்.[3]

திசையாயிரத்து என்பது பல்வேறு திசைகளைச் சேர்ந்தவர் என்ற பொருளே எனக் கொள்ளலாம். மைசூர்ப் பருதியில் கிடைத்த சில கல்வெட்டுகள் இவர்களது தோற்றத்தையும் தொழிலையும் குறிக்கின்றன.

இவர்களது வாணிகம் பல நாடுகளிலும் பரவியிருந்தது. பல்வேறு தொல்லைகளைச் சமாளிக்க வேண்டியிருந்ததாலும் இவர்கள் வீரர்களாகவும் திகழ்ந்தனர் போலும். இவர்கள் சுமத்திரா தீவுகளுக்குச் சென்று வாணிகம் செய்துள்ளதை அங்கு 'லோபோ தோவேர்' என்ற இடத்துக் கல்வெட்டுக் கூறுகிறது. இது கி.பி.1088-ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நார்த்தாமலை என்ற இடம் உண்டு. நகரத்தார் மலை எனும் சொல் மருவி ஏற்பட்டதே நார்த்தாமலை. இவ்வூரில் சமணர் குன்று இருக்கும் இடம் செட்டிப்பட்டி என்ற பெயருடன் சிற்றூராக உள்ளது. பல்லவர் காலத்தில் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்ற வணிகர் குழுவினர் இவ்வூரில் வாழ்ந்து வந்ததாகக் கூறப்படுகிறது. செட்டிப்பட்டியில் ஐந்நூற்றுவப் பெரும்பள்ளி ஒன்றும் இருந்தது என்பர். பொன்னமராவதி அருகில் உள்ள பூலாங்குறிச்சியில் கிடைத்த கல்வெட்டு ஒன்று திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் செய்தளித்த ஐய்யனார் சிலையைப் பற்றிக் குறிக்கிறது. நகரத்தார்களின் குலக்கோயில்கள் ஒன்பதில் ஒன்றான மாத்தூர் கோயில் இதே ஐந்நூற்றுவர் குழுவால் கட்டப்பட்டது. (இன்று மாத்தூர் பிரிவினர் வணங்கும் இறைவன் பெயர் ஐந்நூற்றீசுவரர்.) ஐந்நூற்றுவதேவன், ஐந்நூற்றுவப் பேரறையன் ஆகிய இருவரும் கையெழுத்திட்ட ஓர் குறிப்பு விரையாச்சிலைக் கல்வெட்டில் உள்ளது. மேலும் ஐந்நூற்றுவர்

1. O.J.M.U.Vol.X, LVI, No. 2, pp 73.

2. K.A.N. Sastri, The Colas, pp 319.

3. எஸ். ஐ. டி. ஐ., தொகுதி – 3, பகுதி – 2, பக், 203

பெயரால் பில்ல மங்கலத்தில் ஊருணி ஒன்று இருந்தது என்றும், ஐந்நூற்றுவ மங்கலம், ஐந்நூற்றுவ நல்லூர் எனும் ஊர்கள் பிரான்மலைக்கு அருகிலிருந்தன என்றும் விரையாச்சிலை கல்வெட்டுக் கூறுகிறது. கி.பி 9-ஆம் நூற்றாண்டளவில் புதுக் கோட்டைப் பகுதியில் 'நகரம்' என்ற ஆட்சிக்குழு இருந்தது என்றும், அதில் வணிகர்களே உறுப்பினராய் இருந்தனர் என்றும் புதுக் கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள் ஆதாரப்படுத்துகின்றன.

சோழர்காலம்

இராஜாதிராஜ சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்று (திட்டக்குடி 291/8) சித்ரமேழி எனும் வணிகர் குழுவைப் பற்றிக் குறிக்கிறது. அது அரசனின் மெய்க்கீர்த்திக்குப் பின்னர் இவர்களது கீர்த்தியைக் கூறுகிறது.

ஸ்ரீமத் பூமிசுபுத்ரஸ்ய
சாதுர்வர்ணஸ குலோத்பவம்
சர்வலோக ஹிதார்த்தாய
சித்ரமேளஸ்ய சாஸனம்

என்று அச்சாஸனம் தொடங்குகிறது.

சோழ மன்னர்களுக்கும், நகரத்தார்களுக்கும் அதிகமான தொடர்பு உண்டு. சோழ மன்னர்களுக்கு மகுடம் சூட்டும் உரிமையும் பெற்று மகுடதன வைசியராகத் திகழ்ந்தனர். முதற்குலோத்துங்கன் காலத்தில் திசையாயிரத்து ஐந்நூற்றுவர் வணிகர்குழு சுமத்திரா தீவிற்கு வாணிகம் புரியச் சென்றதாக சுமத்திரா தீவிலுள்ள கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

சோழ மன்னர்கள் ஒவ்வொரு மண்டலத்தையும் பல வளநாடுகளாகப் பிரித்திருந்தனர். வளநாடு என்பது இரண்டிரண்டு பேராறுகளுக்கு இடையே அமைந்த பகுதியாகும். செட்டிநாட்டின் சில பகுதிகள் கேரளசிங்க வளநாடு என இசைவுப் பிடிமானத்தில் எழுதப்படுகின்றன.[1] அதன்படி கேரளசிங்க வளநாடு என்பது வெள்ளாற்றுக்கும், வைகை ஆற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியைக் குறித்திருக்க வேண்டும். இவை சுங்கமில்லாத சோழநாட்டின் ஒரு பகுதியாக இருந்த போது சோழமன்னர்களால் வழங்கப் பெற்றவை.

மேலும் வளநாடு, நாடு, ஊர் போன்றவையும் முதலாம் இராசராசன் காலத்தில் தோன்றியதாகவும் கூறுவர். 'கேரளசிங்கன்' என்ற பெயர் முதலாம் இராசராசனின் விருதுப் பெயர்களுள் ஒன்றாகும்.[2] எனவே இப்பகுதி கேரளசிங்க வளநாடு என்று அழைக்கப்பட்டது.

1. சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், தன வைசியராகிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம், 1904, பக், 30.
2. சா.கணேசன், இராசராசன், தொல்லியல் துறை வெளியீடு, சென்னை.

நாடு என்ற பாகுபாட்டில் **கல்வாசல்நாடு, பிரம்பூர் நாடு, பாலையூர் நாடு** என்ற பெயர்களைக் காண்கிறோம். இவற்றில் கல் வாசல் நாட்டில் இளையாற்றங்குடியும் அதனைக் குறிப்பிட்டு இரணியூரும், பிள்ளையார்பட்டியும் விளங்குகின்றன. பிரம்பூர் நாட்டின் கீழ் மாத்தூரும், இலுப்பைக்குடியும் குறிப்பிடப்படு கின்றன. பாலையூர் நாட்டில் வேலங்குடி குறிப்பிடப்படுகிறது.[1]

அடுத்து **புரம்** என்பது பற்றிய குறிப்பில் **குலசேகரபுரம்,வீர பாண்டியபுரம், தேசிக நாராயணபுரம், ராஜநாராயணபுரம்** ஆகியவை உள்ளன. **குலசேகரபுரம்** இளையாத்தங்குடிக்கும், நேமத்திற்கும் வருகிறது. **வீரபாண்டியபுரம்** என்பது மாத்தூருக்கும், வயிரவன் கோயிலுக்கும் உரியது. **தேசிக நாராயணபுரம்** சூரக்குடி, வேலங்குடியில் குறிப்பிடப்படுகிறது. **ராஜநாராயணபுரம்** என்ற மருதங்குடி பிள்ளையார்பட்டிக்கும், இரணியூருக்கும் வருகிறது.

அடுத்து உடையார் என்ற முடிவுச் சொல்லுடன் பல ஊர்கள் சேர்ந்து வருகின்றன. (உதாரணம்: இவர்களது பிரிவுகள்). உடையார் என்பது அந்த ஊரை உடைமையாகப் பெற்றவர்கள் என்பதைக் குறிக்கும். இவர்களில் காணப்படும் பெயர்கள் பூம்புகார் நகரத்தையொட்டி நகரத்தார்கள் உடைமையாகப் பெற்றுக் குடியிருந்த ஊர்களாகும்.

மேலும் கொப்பனாப்பட்டியிலிருந்து குழிப்பிறை செல்லும் சாலையிலுள்ள சுந்தரம் எனும் சிற்றூரில் தான்தோன்றீசுவரர் கோயில் உள்ளது. இங்குள்ள **இராசராசசோழனது கல்வெட்டு** இக்கோயிலுக்கு **நகரத்தார்** பொன் கொடுத்ததைத் தெரிவிக்கிறது. **பொன்னமராவதியிலும், மேலைச்சிவபுரிச்** சாலையிலுள்ள ஏனாதியிலும் சோழ மன்னர்கள் கட்டிய சிவன் கோயில்கள் உள்ளன. **இராசராச சோழன், குலோத்துங்க சோழன்** ஆகிய இருவர் கல்வெட்டுகளும் குன்றக்குடியில் உள்ளன.

சோழர்கள் பயன்படுத்திய **நாச்சியார்** எனும் சொல் இன்றும் செட்டிநாட்டில் வழக்கத்தில் இருக்கிறது. (பெண் குழந்தைகளுக்கு **நாச்சி, நாச்சம்மை** என்றும் ஆண் குழந்தைகளுக்கு நாச்சியப்பன் என்றும் பெயரிடுதல் வழக்கமாக உள்ளது.) **பெண்டுகள்** எனும் சொல் **மனைவி** என்ற பொருளில் இப்போது வழங்குகிறது. இச்சொல் முதலாம் இராசராச சோழனுடைய தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டில் காணப்படுகிறது.[2] **வட்டம், வாசி** என்ற சொற்கள் செட்டிநாட்டில் மிகுதியாக வழங்கி வருகின்றன.[3]சில்லறை

1. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், முதற்பதிப்பு, சென்னை, 1986, பக், 5.
2. இரா.நாகசாமி, தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், தொல்லியல்துறை வெளியீடு, சென்னை.
3. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், பக், 103.

மாற்றிக் கொடுப்பதற்கும், ஓர் ஊரில் பெற்றுக்கொண்ட பணத்தை வேறோர் ஊரில் கொடுப்பதற்கும் பெற்றுக்கொள்ளும் கழிவுத் தொகைக்கு (கமிஷன்) வட்டம், வாசி என்று பெயர். இப்பெயர்கள் சோழர் காலத்தில் வழக்கிலிருந்தன என்பதற்கு திருஞானசம்பந்தரின் தேவாரத்திலேயே குறிப்புக் காணப்படுகிறது. (திருவீழிமிழலைப் பதிகத்தில் வாசிதீரும் காசு வேண்டி ஞானசம்பந்தர் பாடுகிறார்.)

முற்காலப் பாண்டியர் காலம்

தவிர பாண்டிநாட்டில் குகைக்கோயில்களை முதன் முதலில் அமைத்த பெருமை முற்காலப் பாண்டியர்களுக்கே உரியது. பாண்டியர் தம் தலைநகரான மதுரையைச் சுற்றிலும் அமைத்த குடைவரைக் கோயில்கள் தவிர அதிகமான குடைவரைக் கோயில்கள் செட்டிநாட்டிலேயே காணப்படுகின்றன.

திருமெய்யம், குன்றக்குடி, பூங்குன்றம், (மகிபாலன்பட்டி) திருக்கோகர்ணம், (புதுக்கோட்டை) பூங்குடி திருமலை, பிரான் மலை, திருக்கோளக்குடி ஆகிய இடங்களிலும் பாண்டியர்களின் குடைவரைக் கோயில்கள் காணப்படுகின்றன. நகரக் கோயில்களில் ஒன்றான பிள்ளையார் பட்டிக் குடைவரைக் கோயிலும் முற்காலப் பாண்டியர்களால் தோற்றுவிக்கப்பட்டதே. இதன் காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு. இவ்விநாயகரின் பெயர்களில் ஒன்று **'தேசி விநாயகர்'** என்பது. இப்பெயர் **'நானாதேசி'** என்னும் வணிகக் குழுவுடன் தொடர்புடையது. செட்டிநாட்டுக் குடைவரைக் கோயில்களில் இவ்வகையில் இது தனிச்சிறப்புடையது எனலாம்.

வணிகர்கள்

பாண்டியப் பெருவேந்தர் காலத்து வணிகர்கள் பற்பல பொருட்களை விற்றனர். அப்பொருட்களில் குறிப்பிடத்தக்கவை. உப்பு, நெல், அரிசி, பச்சைப்பருப்பு, ஆமணக்கு, பாக்கு, மிளகு, மஞ்சள், இஞ்சி, வெங்காயம், கடுகு, எள், இரும்பு, பஞ்சு, நூல், துணி, மெழுகு, தேன், வாசனைப் பொருட்கள், கால்நடைகள், குதிரைகள், நவரத்தினக் கற்கள், சந்தனம், அகில் ஆகியவை ஆகும். தாங்கள் விற்ற பொருட்களின் அடிப்படையில் வணிகர்கள் பற்பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். துணி விற்ற வாணிகர்கள் **'அறுவை வாணிகர்கள்'** என அழைக்கப்பட்டனர். தானியங்களை விற்றவர்கள் **'கூல வாணிகர்கள்'** எனப் பெயர் பெற்றனர். உப்பு வணிகர்களை **'உமணர்கள்'** என அழைத்தனர். குதிரைகள் விற்ற வணிகர்களை **'குதிரைச் செட்டிகள்'** என அழைத்தனர். எண்ணெய் விற்றவர்கள் **'செக்கு வணிகர்கள்'** எனப்பட்டனர். முத்தும், மணிகளும் விற்றவர்கள் **'மணி வணிகர்கள்'** எனப்பட்டனர். வெற்றிலை விற்றவர்கள் **'இலை வணிகர்கள்'** என்ற பெயர் பெற்றனர்.[1]

1.A.J.Thinakaran, The Second Pandiyan Empire, p 180.

குதிரைச் செட்டிகள்

பாண்டியப் பெருவேந்தர் காலத்துக் கல்வெட்டுகளில் குதிரைச் செட்டிகளைப் பற்றி ஏராளமான குறிப்புகள் உள்ளன. இவர்களின் பெயரே இவர்கள் குதிரை விற்றவர்கள் என்பதைத் தெளிவாக நமக்கு உணர்த்துகிறது. இவர்கள் அரேபியாவிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்து விற்பனை செய்தனர். இக்குதிரைச் செட்டிகளுக்கு **'எட்டி'** என்ற பட்டப்பெயரும், **'வணிகராதித்தன்'** என்ற பட்டப்பெயரும் கொடுக்கப்பட்டன.[1]

பிரான்மலையில் உள்ள ஒரு கல்வெட்டு சித்திரமேழி குழுவினரின் தன்மையைக் குறிக்கும் தலையாய கல்வெட்டு ஆகும். இக்கல்வெட்டு, **ஸ்ரீ பூமிதேவி புத்ரானாம் க்ஷார க்ஷீரோத பூர்வினாம், ஜயந்தி சித்ர லோகானாம் ராஜ்ய பரிபாலகானாம் சர்வலோக ஹிதார்த்தாய சித்ரமேழி சாஸநம்'** என்று தொடங்குகிறது. இச்சாஸனம் **திரிபுவனாச்ரய பஞ்சசத வீரசாஸனம்'** என்று கூறப்படுகிறது. இதிலிருந்து **ஐந்நூற்றுவர் வீரசாஸனம்** என்றும் பெயர் பெற்றது என்று அறிகிறோம். இக்கல்வெட்டு திசையாயிரத்து ஐந்நூற்றுவர்களை 'ஐம்பொழில் பரமேசுவரியின் குழந்தைகள்' என்றும், 'பூமிதேவியின் குழந்தைகள்' என்றும் குறிப்பிடுகிறது. மேலும் இக்கல்வெட்டு பட்டினங்களிலும், 32 வளர்புரங்களிலும், 64 கடிகைத் தாவளங்களிலும் வாழ்ந்தனர் என்று குறிக்கப்பெறுகிறது. **பட்டினம்** என்பது கடற்கரையை ஒட்டிய நகரமாகும். **வளர்புரம்** என்பது வளர்ச்சி அடைந்த பெரிய நகரத்தைக் குறிக்கும். **கடிகைத்தாவளம்** என்பது வணிகர்களின் சபையைக் குறிக்கும். இந்த திசையாயிரத்து ஐந்நூற்றுவர்களுக்கு **'இராஜ்ய பரிபாலகர்கள்'** என்ற பட்டப் பெயர் இருந்ததாக அறிகிறோம். இவ்வியாபாரிகள் பாண்டிய நாட்டின் நிருவாகிகளாகவும், அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களாகவும் திகழ்ந்தனர் எனவும் அறிய முடிகிறது.[2]

முரசு ஒலித்துக் கொள்ளும் உரிமை பெற்றிருந்த இவர்கள் வாழ்ந்த வீதிகளில் முத்தமிழ்ப் பாடலோடு ஆடல் ஓவா விழாவும் வேள்வியும் விளங்கின. அவ்வாறு சிறந்த இவர்கள் **வாட்டம் இன்றி கூட்டம் பெருக, அறம் வளர, கலி மெலிய, புகழ் பெருக, பகை பணிய, திசை அனைத்தும் செவிடுபடச் செங்கோலே முன்னாகவும், செம்பொன் பசும்பையே தெய்வமாகவும் க்ஷமையினோடு கருணை எய்த சமயத்தன்மம் இனிது நடாத்துபவர்கள்** எனக் குறிக்கப் பட்டனர். இவர்கள் அனைவரும் **திசையாயிரத்து ஐந்நூற்றுவர்** என்று குறிக்கப்பட்ட போதிலும் பல்வேறு பிரிவினராகக் குறிக்கப் படுகின்றனர். இக்கல்வெட்டில் கீழ்வரும் உட்பிரிவுகள் குறிக்கப் பட்டுள்ளன.

1. முனைவர் நா. அழகப்பன், 'சமுதாயம்' (பதி) ம. இராசேந்திரன், தமிழ்நாட்டு வரலாறு, பாண்டியப் பெருவேந்தர் காலம், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை, 2000, பக்109.
2. முனைவர் நா. அழகப்பன், மேலது. பக், 110.

1. திசைவழங்கு திசாயயிரத்து ஐந்நூற்றுவர்.
2. கேரளசிங்க வளநாட்டுக் குலசேகரப் பட்டினத்து நகரத்தார்.
3. நான்குதிசை சமஸ்தலோகப் பதினெண் விஷயத்தார்.
4. துவராவதி நாட்டு நகரத்தார்.
5. புறமலை (பிரான்மலை) நாட்டு நகரத்தார்.
6. கொடும்பாளூர் மணிக்கிராமத்து நகரத்தார்.
7. திருகோஷ்டியூர் மணி அம்பலத்து நகரத்தார்.
8. கேரளசிங்க வளநாட்டு அழகபுரம் செழிய நாராயண புரத்து நகரத்தார்.
9. ஐம்பொழில் வளநாட்டுக் கல்வாயில் நாட்டுச் சுந்தர பாண்டியபுரம் நகரத்தார்.
10. களவழிநாட்டு அழகை மாநகரம் செயம் கொண்ட சோழப் பெருந்தெரு நகரத்தார்.

பாண்டிய அரசர்கள் தங்களின் வியாபார வளர்ச்சிக்காகத் தாங்கள் நாட்டிற்குத் திறமைமிக்க சில வியாபாரிகளை வரவழைத்துக் கொண்டனர் எனத் தர்ஸ்டன் தாம் எழுதியுள்ள ‘தென்னிந்திய ஜாதிகளும் பழங்குடிகளும்’ என்ற நூலில் குறிப்பிடுகிறார். கலியுக ஆண்டு 3808 இல் சுந்தர பாண்டியன் என்ற பாண்டிய அரசன் ஒருவன் சோழ அரசனிடம் நல்ல வியாபாரிகளை அனுப்பும்படிக் கேட்டுக் கொண்டான்.[1] அவ்வேண்டுகோளுக் கிணங்க அச்சோழ அரசன் அனுப்பிய வணிகர்கள் பாண்டிய நாட்டில் தங்குவதற்கு அப்பாண்டிய அரசன் ஏற்பாடு செய்துக் கொடுத்தான். இப்படி வந்த வணிகர்கள் வைகை நதிக்கு வடக்கேயும், பிரான்மலைக்குக் கிழக்கேயும், வெள்ளாற்றிற்கு தெற்கேயும் குடியேறினர். இப்படிக் குடியேறி வந்த வியாபாரிகள் தற்போது செட்டிநாட்டில் வாழும் நகரத்தார்களே ஆவர். ஏனெனில் பிரான்மலைக் கல்வெட்டு குறிப்பிடும் பத்துப் பிரிவு நகரத்தார்கள் அதே பெயர்களுடன் தற்போதும் திகழ்கிறார்கள். நகரத்தார்கள் தாங்கள் எழுதிக் கொள்ளும் திருமண ஒப்பந்தங்களில் இப்பத்து பிரிவுப் பெயர்களையும் இன்றளவும் குறிப்பிடுகிறார்கள்.

பிள்ளையார்பட்டியில் கிடைக்கும் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டு நகரத்தார்கள் ஒரு பிரிவினராகிய இராசநாராயணபுர நகரத்தார் குடியிருப்பைப் பற்றிச் சொல்கிறது.[2] இந்த நகரத்தார்கள் காரைக்குடி [3] என்ற ஊரில் ஐந்நூற்றுவர் பெருந்தெருவில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் மருதங்குடியில்

1. Thurston, Castes and Tribes of south india Vol. V, pp260.
2. ஏ.ஆர். இ. 1935 – 36, பத்தி – 52.
3. சா. கணேசன், பிள்ளையார்பட்டி ஸ்தலவரலாறு, பக், 39.

நான்கு மாநிலம் விலைக்கு வாங்கி இராசநாராயணபுரம் எனற் புதிய குடியேற்றத்தைக் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்படுத்தியதை இக்கல்வெட்டுக் குறிக்கிறது. இக்கல்வெட்டு சோழநாட்டு வணிகர்கள் பாண்டிய நாட்டில் குடியேறினார்கள் என்ற கருத்தை வலியுறுத்துவதற்கும் ஓர் ஆதாரமாக அமைந்துள்ளது.

வணிகர்களின் மெய்க்கீர்த்தி

முதலாம் மாறவர்மன் குலசேகரனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, வாணிய நகரத்தார்களின் மெய்க்கீர்த்தியைக் குறிப்பிடுகிறது. [1] இந்த மெய்க்கீர்த்தியிலிருந்து இந்த வாணிய நகரத்தார்களின் மலை **'கிஸ்கிந்த மலை'** என்றும், இவர்களின் நதி **'பம்பை நதி'** என்றும், இவர்களின் கொடி **'கருடக் கொடி'** என்றும், இவர்களின் யானை **'ஜெயவாரணம்'** என்றும், இவர்களின் குதிரை **'கலிமாருடம்'** என்றும், இவர்களின் தேர் **'கமலக்கண்டிகை'** என்றும், இவர்களின் மாலை **'தோன்றி மாலை'** என்றும் தெரிந்துக் கொள்கிறோம். மேலும் இக்கல்வெட்டு வாணிய நகரத்தார்கள் மீது வரி விதிப்பதற்கு இவர்களின் வாணிகக் குழுவிற்கு உரிமை இருந்தது என்றும், அந்த வரியைச் செலுத்தாதவர்களின் வீடுகளில் புகுந்து அவர்களது மட்பாண்டங்களை உடைத்தும், வெண்கலப் பாத்திரங்களை பறிமுதல் செய்தும் வரி வசூலிப்பதற்கு இந்த வாணிக நகரத்தார் குழுவிற்கு உரிமை இருந்தது என்றும் சொல்கிறது.

வணிகர்களின் வாழ்விடங்கள்

வணிகர்கள் வாழ்ந்த இடங்கள் **தாவளம்**[2], **நகரம்** [3], **புரம்** [4], **பட்டினம்** [5], என அழைக்கப்பட்டன. இவர்கள் வாழ்ந்த தெருக்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் சில பின்வருமாறு, **நியாயப் பரிபாலனப் பெருந்தெரு**[6], **உலகுய்ய வந்த பாண்டியப் பெருந்தெரு** [7], **அரசநாராயணப் பெருந்தெரு** [8], **ஐந்நூற்றுவப் பெருந்தெரு** [9], **செயங்கொண்ட சோழப் பெருந்தெரு** [10] முதலியன.

---

1. ஏ.ஆர். இ. 1960 – 61, எண், 337
2. ஏ.ஆர். இ. 1960 – 61, பக், 23.
3. ஏ.ஆர். இ. 1929 – 30, எண், 350.
4. ஏ.ஆர். இ. 1940 – 41, எண், 237.
5. ஏ.ஆர். இ. 1926, எண் 613, பத்தி – 41.
6. ஏ.ஆர். இ. 1962 – 63, எண், 731.
7. ஏ.ஆர். இ. 1916, எண், 571
8. பி.எஸ். ஐ. எண், 363.
9. ஏ.ஆர். இ. 1935 – 36, எண், 125
10. ஏ.ஆர். இ. எண், 155.

பாண்டியப் பெருவேந்தர் காலத்து வணிகர்கள் தங்கள் புதல்வர்களுக்கு நாயன்மார்களின் பெயர்களைச் சூட்டி இருக்கிறார்கள். சேது நாராயணபுரத்து வியாபாரி ஒருவர் ஞானசம்பந்தர் என்ற பெயர் பெற்றிருந்தார்.[1] பாளைநல்லூர் வியாபாரி ஒருவர் சுந்தரர் என்ற பெயர் பெற்றிருந்தார். இப் பெயர்களிலிருந்து வணிகர்களின் பக்தியும், இவர்கள் சைவ நாயன் மார்களின் மீது கொண்டிருந்த மரியாதையும் தெரிய வருகிறது.

சோழ மார்த்தாண்ட சதுர்வேதி மங்கலத்தில் இருந்த சிவன் கோயில் **ஆயிரத்து ஐந்நூற்றீச்சுவரம் உடையார் கோயில்** என அழைக்கப்பட்டது. பெருவாயில் நாட்டில் திருவேங்கவாயிலில் இருந்த விஷ்ணு கோயில் **நாற்பத்தெண்ணாயிர விண்ணகரம்** என அழைக்கப்பட்டது. இந்த கோயில்கள் வணிகர்களின் குழுப் பெயரால் அமைந்துள்ளமையினால் இவற்றை வணிகர்களே கட்டியிருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். வணிகர்களில் பெரும்பாலோர் சைவ, வைணவப் பிரிவினர்களாக இருந்தனர். சிலர் சமண மதத்தைப் பின்பற்றியிருக்கிறார்கள்.[2] வணிகர்கள் செய்த சமயத்தொண்டுகள் அளவற்றவை.

இராமநாதபுரம் மாவட்டம் தீத்தாண்டதானபுரம் என்ற ஊரில் காணப்படும் சடையவர்மன் வீரபாண்டியனின் (கி.பி.1253) கல்வெட்டு வணிகர்கள் தாங்கள் விற்பனை செய்யும் பொருட்களின் மீது ஒரு சிறிய வரியை விதித்து அதன் மூலம் கிடைத்த பணத்தை மேற்படி ஊரின் சிவன் கோயில் திருப்பணிக்குப் பயன்படுத்தினர் எனக் குறிப்பிடுகிறது. இந்த வரியைக் கொடுப்பதற்கு **வளஞ்சியர், அஞ்சுவண்ணம், மணிக்கிராமம்** ஆகிய வணிகப் பிரிவுகள் ஒப்புக் கொண்டதாகவும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.[3]

சடையவர்மன் வீரபாண்டியனின் மற்றொரு கல்வெட்டு காமரசவல்லி சதுர்வேதி மங்கலத்திலிருந்த சிவன்கோயில் திருப்பணிக்கு வணிகர்கள் பணம் சேர்த்துக் கொடுத்ததுப் பற்றிச் சொல்கிறது. பெண்கள் ஆடைப் பொதி ஒன்றுக்குக் கால் பணமும், மிளகுப் பொதி ஒன்றுக்குக் கால்பணமும், ஒரு பொன்கட்டிக்குக் கால்பணமும், ஒரு பொதி அரிசிக்கு இரண்டு காசும், ஒருபொதி நெல்லுக்கு ஒரு காசும் வரி விதித்துக் கிடைத்த பணத்தை இக்கோயில் திருப்பணிக்குப் பயன் படுத்தனர் எனச் சொல்கிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு கல்வெட்டுகளிலிருந்து வணிகர்கள் ஒன்றாகச் சேர்ந்து முயற்சி எடுத்துக் கோயில் திருப்பணிகள் செய்தார்கள் என்பது தெளிவாகிறது.

---

1. பிஎஸ். ஐ. எண், 302.
2. எஸ். ஐ. ஐ. தொகுதி 8, எண், 442.
3. ஏ.ஆர். இ. 1926, எண் 598, 1927, பத்திகள் 46 – 48 .

வணிகர்கள் பாண்டிய நாட்டிலிருந்த பல கோயில்களில் கடவுள் திருவுருவங்களைப் பிரதிட்டை செய்துள்ளார்கள்.[1] மேலும் இவர்கள் மடங்களை ஏற்படுத்தி அவற்றில் துறவிகளுக்கும் பக்தர்களுக்கும் திருவிழாக்காலங்களில் இலவச உணவு வழங்கியிருக்கிறார்கள்.[2] இவர்கள் கோயிலுக்கு நன்கொடையாகக் கிடைத்த நிலங்களைப் பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாகக் கோயில் கடவுள் சிலைகளுக்குத் தேவையான பரிவட்டங்களை வழங்கியிருக்கிறார்கள்.[3]

அறிஞர்களுக்கு ஆதரவு

வணிகர்கள் கல்வியில் சிறந்த பிராமணர்களுக்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். சடையவர்மன் வீரபாண்டியனின் (கி.பி. 1253) இரண்டு கல்வெட்டுக்கள் மலை மண்டலத்தைச் சார்ந்த துப்ப நாயக்கன் என்ற குதிரை வியாபாரி திருவரங்கத்தில் ஓர் அக்ரகாரத்தை ஏற்படுத்தி அதில் பிராமணர்களைக் குடியேற்றினான் எனச் சொல்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் தேவதானம் என்ற ஊரில் கிடைத்த கல்வெட்டு குலசேகரபுரத்து நகரத்தார்கள் திருவுடையதேவன் என்பவருக்குப் **'புலமை விருத்தி'** யாக நிலத்தானம் செய்ததைக் குறிப்பிடுகிறது.[4] அறிஞர்களுக்கு அவர்களின் அறிவுத் திறத்தைப் பாராட்டிக் கொடுக்கப்படும் தானம் 'புலமைவிருத்தி' ஆகும்.[5]

வணிகர்களிடையே ஏற்பட்ட தகராறு

சேலம் மாவட்டம் ஆறகளூரில் கிடைத்த மூன்றாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் (கி.பி.1303) கல்வெட்டு வாணிய நகரத்தார்களுக்கும், செட்டிகளுக்கும் இடையே நடந்த தகராறு பற்றிக் குறிப்பிடுகிறது.[6] ஆறகளூர் காமேசுவரன் கோயிலில் திருவிழாக்கள் நடத்தும் உரிமை அவ்வூரைச் சார்ந்த செட்டிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தச் செட்டிகள் திருவிழாக்கள் நடத்துவதைக் குறைகூறி அவர்களோடு வாணிய நகரத்தார் தகராறுகள் செய்தனர். இதனால் அக்கோயில் நிருவாகத்தினர் அத்திருவிழாக்கள் நடத்தும் உரிமையைச் செட்டிகளிடமிருந்து வாணிய நகரத்தார்க்கு மாற்றிக் கொடுத்தனர். சில ஆண்டுகளே வாணிய நகரத்தார் அவ் விழாக்களை முறைப்படி நடத்தினர். பின்னர் அவர்கள்

1. ஏ.ஆர். இ. 1959 – 60, எண் 389,1914, எண் 407, 1916, எண் 586.
2. ஏ.ஆர். இ. 1040 – 41, எண் 255.
3. ஏ.ஆர். இ. 1961 – 62, எண் 255.
4. ஏ.ஆர். இ. 1936 – 37, எண் 42.
5. ஏ.ஆர். இ. 1940 – 41, எண் 242.
6. ஏ.ஆர். இ. 1913, எண் 432.

அத்திருவிழாக்கள் நடத்துவதை நிறுத்திவிட்டனர். உடனே செட்டிகள் வாணிய நகரத்தாரின் இந்தப் போக்கைக் கடுமையாகக் கண்டித்தனர். மேலும் அவர்கள் இத்திருவிழாக்கள் நடத்தும் உரிமை தங்களுக்கே மீண்டும் கொடுக்கப்பட வேண்டும் என வாதாடினர். ஆகவே கோயில் நிருவாகம் செட்டிகளுக்கே அந்த உரிமையை வாங்கிக் கொடுத்தது. அவர்கள் திருவிழாக்களை சிறப்பாக எதிர்காலத்தில் நடத்த **'தலைவாய்'** என்ற கிராமத்தையும் தானமாக அளித்தது.[1]

நீதி நிருவாகத்தில் வணிகர்கள்

நீதி நிருவாகத்திலும் வணிகர்கள் முக்கியப்பங்கு வகித்தனர். எடுத்துக்காட்டாக இரண்டாயிரவேலிப்பற்று என்ற நகரத்தைச் சார்ந்த பிராமணர்கள் தங்களது கடமையைச் செய்யாதபோது, இது பற்றிய வழக்கை விசாரித்து அவரகளுக்குத் தண்டனை கொடுத்த நீதிக்குழுவில் வணிகர்களும் இடம் பெற்றிருந்தனர்.[2] இவ்வாறு வணிகர்கள் பாண்டியப் பெருவேந்தர் காலத்தில் பொருளாதாரத் துறையில் மட்டுமின்றி நீதித்துறையிலும் முக்கியப் பங்கு ஏற்றிருந்தனர்.

வாணிகப் பொருள்களும் வரியும்

இக்கல்வெட்டு மேலும் பல சிறப்புடையது. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர் வணிகர்கள் என்ன என்ன பொருள்களில் வாணிகம் புரிந்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டாக இக்கல்வெட்டு விளங்குகிறது. இவ்விலைப் பொருள்கள் வகைப்படுத்தப்பட்டுள்ள முறையையும், வியாபாரம் எவ்வளவு சீராக அமைந்திருந்தது என்பதையும் எடுத்தியம்புகிறது. உப்பு, அரிசி, நெல், பயறு, அவரை, துவரை, ஆமணக்கு, பாக்கு, மிளகு, மஞ்சள், சுக்கு, வெங்காயம், கடுகு, சீரகம், இரும்பு, பருத்தி, நூல், புடவை, மெழுகு, தேன், சந்தனம், அகில், பன்னீர், சவரி மயிர், கற்பூரத்தைலம், சாந்து, புனுகு, சவ்வாது, செமாடு, குதிரை, யானை முதலிய வாணிகப் பண்டங்கள் குறிக்கப்படுகின்றன.

இப்பொருள்கள் ஒவ்வொன்றும் தலைச்சுமை, பாக்கம், பொதி, வண்டி என அளவுகளால் பிரிக்கப்பட்டு ஒவ்வொன் றுக்கும் எவ்வளவு காசு வரி அளிக்கப்படல் வேண்டும் என்றும் கல்வெட்டுக் கூறுகிறது. தேன், பனிநீர் முதலிய திரவப் பொருள்கள் குடம் என்னும் கொள்அளவைக் கொண்டு நிச்சயிக்கப்பட்டன. சாந்து, புனுகு, சவ்வாது ஆகிய வாசனைப் பொருள்கள் 'கொம்பு' என்னும் அளவைகளால் நிச்சயிக்கப்பட்டன.

---

1. ஏ.ஆர். இ. 1914, பத்தி 23.

2. ஏ.ஆர். இ. 1909, எண் 315.

பொருள்களுக்கு இடப்பட்ட வரியும் அன்றைய நிலவரத்தைத் தெரிவிக்கின்றன. உப்புக்கும் நெல்லுக்கும் வரி ஒரே அளவாக இருந்தது. நெல்லைப் போல் இருமடங்கு அரிசிக்கு இடப்பட்டது, பருத்தியைப் போல் இருமடங்கு நூல்களுக்கு இடப்பட்டது. நூலுக்கும் இரும்புக்கும் ஒரே வரி. வாசனைப் பொருள்களாகிய சந்தனம், அகில், பன்னீர், சவரிமயிர் முதலியவற்றிற்குத்தான் மிகவும் அதிகமாக வரி காணப்படுகிறது.

நகரத்தார் தங்கள் பொருள்களை வைத்து விற்கும் இடங்களை **மடிகை** என்று அழைத்தனர். சாரிகைக் கோட்டை என்னும் சுங்கக் கோட்டைகளும் இருந்தன. மன்னார்குடியில் இரண்டு மடிகைகள் இருந்தன. **புவனேகவீரன் மடிகை, விக்ரம பாண்டியன் மடிகை** என அவை பெயர் பெற்றிருந்தன. இவை சாரிகைக் கோட்டையில் இருந்தன. அந்நகரத்தார் சாரிகைக் கோட்டையில் புகும் பாக்குப் பொதி ஒன்றுக்கு உழக்குப் பாக்கு கொண்டு அதை முதலாகக் கொண்டு அவ்வூரில் இருந்த ஜயங்கொண்ட சோழீச்சுரமுடையாற்கு திருவமுதுக்கு வைத்தனர் (40/6). இதே போன்று சாரிகை கோட்டையில் புகும் மிளகு பொதி ஒன்றுக்கு உழக்கு மிளகும், புடவை கட்டு ஒன்றுக்குப் பணம் மாகாணியும் கொண்டு கறியமுதுக்கு வைத்தனர் (41/6). கோட்டைக்குள் வராமல் புறத்தே சென்றாலும், இவ்வாறே கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தனர் என்ற செய்தியைப் பாண்டிய நாட்டுக் கல்வெட்டுக் கூறுகிறது.[1]

தமிழ் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியருள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்களுக்கே உரியது. **“பாண்டிய நின் நாட்டுடைத்து நல்ல தமிழ்’** என்ற சொற்றொடரும் பாண்டி நாட்டிற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைச் சுட்டுகிறது. மேலும் இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையிலும், சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்திலும், கம்பர் தமது நூலின் நாடவிட்ட படலத்திலும் பாண்டி நாட்டையே செந்தமிழ் நாடெனச் சிறப்பித்துள்ளனர். அப்பாண்டியர்களால் ஆளப்பெற்ற பாண்டிய நாட்டின் ஒரு பகுதியே செட்டிநாடு.

சோழநாட்டில் சீரும், சிறப்புமாக வாழ்ந்து வந்த நகரத்தார் பாண்டிய மன்னனின் அழைப்புக்கேற்பவே பாண்டியநாடு வந்தனர். சத்திரியர் நாட்டைக்காக்கும் பொறுப்பு ஏற்றுப் படை வைத்துக் கொள்வர். அதுபோல வைசியர் தங்களுடைய வாணிகத்தைக் காக்கப் படை வைத்துக் கொள்வர். நாட்டிற்கு அபாயம் நேரிடும்

1. இரா. நாகசாமி, யாவரும் கேளிர், புக் வென்சர், சென்னை, ஜூன், 1973.

போது இரு படைகளும் ஒன்று சேர்ந்து நாட்டைக் காக்கப் போரிட வேண்டும்.

பாண்டிய நாட்டிற்குப் பெரும்புகழ் தந்த வணிகர்களின் ஏழகப்படை செட்டிநாட்டிலுள்ள கழனிவாசல் எனும் ஊரில் இருந்தது. (இவ்வூர் காரைக்குடிக்கு அருகே உள்ளது) ஏழகப்படையின் கோட்டைக்குக் கீழ்ப்புறம் மக்கள் வாழ்ந்த ஊரே இன்றைய **கோட்டையூர்.** இந்த ஏழகப்படைதான் மூன்றாம் குலோத்துங்கனுக்கும், குலசேகரபாண்டியனுக்கும் சதுர்வேதமங்கலம் என இன்று அழைக்கப்படும் மட்டியூருக்கு அருகில் நடந்த யுத்தத்தில் போரிட்டுப் பாண்டியனுக்கு வெற்றியைத் தேடித் தந்தது. கழனிவாசல் குடியார் என்ற பிரிவு செட்டியார்களுள் இளையாத்தங்குடிக் கோயில் புள்ளிகளில் இருந்து வருகிறது.

எனவே தான் **கழனிவாசல் மக்கள் ஏழகத்தார்** என்றும், இப்பகுதி **ஏழகப்பெருந்தெரு** என்றும், கழனிவாசல்குடிப் பிரிவினரின் ஆட்சியில் இளையாத்தங்குடியில் உள்ள இங்குள்ள பெருமாள் கோயில் **ஏழகப்பெருமாள் விண்ணகரம்** என்றும் அழைக்கப்பட்டது.

⌘ ⌘ ⌘

13. இன்றைய இலக்கியச் சான்று

கீழச்சிவல்பட்டி பாடுவார் முத்தப்ப செட்டியார் கவிதைகளில் இன்றைய இலக்கியச் சான்றுகள் கிடைக்கின்றன. இவர் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். இவரது நூல்களில், குறிப்பாக **'திருமுகவிலாசம்'** இவ்வினத்தின் இன்றைய சரித்திரத்தை மட்டும் அல்லாமல் நகரத்தாரின் சமுதாய, சமய நம்பிக்கைகள், வழக்கங்கள் பற்றியும் குறிப்பிடுகிறது.

தமிழகத்தில் 17-ஆம் நூற்றாண்டு வரை ஓரிடத்திலிருந்து மற்றொரு பகுதிக்கு மொத்தமாகக் குடிபெயர்ந்து இப்பொழுது செட்டிநாடு எனப்படும் பகுதியில் குடியேறும் வரையுள்ள நகரத்தார் செய்திகளைப் பற்றிப் பல பழங்கதைகளைப் பேசுகின்றன.

நகரத்தார்களின் பூர்வீகம் காஞ்சிபுரம் அல்லது காவிரிப்பூம் பட்டினமாயிருக்கலாம். காஞ்சிபுரத்திலிருந்த அதிக அநீதி, வரிகள், தண்டனைகளால் (காரணம் சரியாகத் தெரியவில்லை) செட்டியார் கள் சோழநாடு புகுந்தனர். ஒரு கதைப்படி அக்கால நீதிதவறாத **மனுநீதி சோழன்** தன் நாட்டிற்கு ஒட்டுமொத்தமாக இவர்கள் குடி பெயர்ந்ததற்குக் காரணம் விசாரித்தான். இவர்கள் புராதனப் பெருமையையும், காஞ்சிபுரத்தில் அடைந்த துன்பங்களையும் கேட்டு மனமிரங்கித் தன் நாட்டில் வாழ அனுமதித்தான். அவர்களுக்குச் சில அரச மரியாதைகளையும் வழங்கினான். **"நாம் உங்களைப் பிரதான வைசியர்களாகக் கருதுகிறோம். உங்களுக்கு அரசு பதவி ஏற்கும் இளவரசனுக்கு முடிசூட்டும் கௌரவத்தை அளிக்கிறோம். அதன் படி நீங்கள் மகுட வைசியர்கள் என அழைக்கப்படுவீர்கள்"** என்றும் தெரிவித்தான்.

மன்னன் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் கிழக்கு, மேற்கு, தெற்குத் திசைகளில் பொறாமை ஏற்படுத்தக் கூடிய வசிப்பிடங்களைக் கொடுத்தான். தலைநகரின் வடதிசை சாதாரண வைசியர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கலாம். நகரத்தார்களுக்கு ஒரு சிங்கக் கொடி கொடுக்கப்பட்டது.

"ஏழுநீள் நிலைகொள் மாடத்து இரவியின் புரவி யேழும்
தாழுவ இருபத்தேழு மாதருந் தானுந் தாண்டி
வீழுவன் இந்து இந்த விதமுயர் மனையில் நன்கு
வாழுவர் வணிகர் வீதி வளஞ்சொல வல்லார் யாரே"

என்பதற்கிணங்க இல்லத்தில் **தங்கக்கலசம்** வைக்கவும் அனுமதிக்கப் பட்டது. சமய போதனைகளைச் **சிதம்பரத்து ஈசான்ய சிவாச்சாரியார்** வழங்கினார்.

இப்படிச் சுமார் 8000 குடும்பங்கள் தலைநகரில் வாழ்ந்தனர். இவ்வாறு மேன்மை பொருந்திய பெருந்தெருவில்,

"செம்பொனி லுருக்கி வார்த்த சிறுகட்டி அடுப்புக்கூட்டி
நம்பிய குளியல் போந்த குடச்சங்கு நடுவிலேற்றிப்
பம்புதேன் உலைநீர் பெய்து பவளத்தீ விறகு மூட்டி
அம்பொனின் மகளிர் வெண்முத் தரிசிச்சோறு" ஆக்க வாரால்

எனச் செல்வச்செழிப்பு - சிறப்புடன் தொழிலை நடத்தி அரசனுக்கு உண்மையாக நடந்து கொண்டனர். இதனால் மேலும் பதவிகள் கிடைத்தன. நகரத்தார் **'ரத்னதன மகுட வைசியர்'** எனப்பட்டு சோழ இளவரசர்களுக்கு முடி சூட்டுபவர்களாகத் திகழ்ந்தனர். நகரத்தார்கள் விசுவாசமுடனும், சட்டத்திற்குக் கீழ்ப் படிபவர்களாக வும் இருந்ததோடு கொடைகளுக்கும் பெயர் பெற்றனர். வெற்றி அளிக்கும் விநாயகரைத் தொழுது, சைவ சமயத்தைப் பின்பற்றிக் கோயில், குளம், பொதுக்கிணறுகள் ஆகியவற்றை நிறுவினர்.

சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு இவ்வைசியர்களுக்குத் தவிர்க்க முடியாத துன்பம் நேர்ந்தது. என்ன நேர்ந்தது என்பதற்குப் பல கதைகள் உண்டு. ஆனால் பொதுவாகக் கூறப்படுவது, அரசன் **பூவந்திச்சோழன்** ஓர் இளம் வைசிய நங்கையைத் தீண்ட முயல, அவள் மறுக்க, அரசன் எல்லா வைசியப் பெண்களையும் சிறைப்படுத்தினான். இதில் சிறைப் பிடித்த பெண்களை எல்லாம் அரசன் கொன்று விட்டானா அல்லது விடுதலை செய்தானா என்று தெரியவில்லை. ஆனால் கௌரவம் காரணமாக வைசிய ஆண்கள் எல்லாப் பெண்களையும் கொன்று விட்டதாகக் கூறப்படுகிறது. இந்தத் துயர நிகழ்ச்சிக்குப் பிறகு வைசிய ஆண்களும் மொத்தமாகத் தற்கொலை செய்துகொண்டனர். இதில் இள வைசியர்களே தப்பினர்.

காலவெள்ளத்தில் பூவந்திச் சோழன் தன் மகனான **ராசபூஷண சோழனுக்கு** முடிசூட்ட விரும்பினான். நாட்டு வழக்கப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வைசியனே முடிசூட்ட வேண்டும் என்பதை அரசன் மறக்கவில்லை. ஒரு சமய ஆச்சாரியரால் அழைத்து வரப்பட்ட வைசிய இளைஞர்கள் அரசனை நோக்கி, **"மன்னா! உன் அநீதியால் எங்கள் பெரியோர்கள் உயிர் துறந்தனர். எங்களுக்குத் தாய்-தந்தை இல்லை. எங்கள் இனத்தில் மணம் புரிய பெண்கள் இல்லை. மணமாகாத சிறுவர்களான நாங்கள் இளவரசனுக்கு முடிசூட்டும் தகுதி உள்ளதா?"** எனக் கேட்டனர்.

அதன் பின்னர் அரசன் தன் அவையில் ஆச்சாரியர்களையும், முதியவர்களையும் கலந்து ஆலோசிக்க, வைசியர்கள் வேளாள இனச் சிறு பெண்களை மணக்கலாம் எனப்பட்டது. ஆனால் வைசிய இளைஞர்களோ வேளாள இனப் பெண்களை மணக்க சம்மதித்தும், ஆனால் தங்கள் பிற்கால மகள்களை வேளாள ஆண்களுக்கு மணம் செய்ய ஒப்பவில்லை. இது **இந்து சாஸ்திர அனுலோம, பிரதிலோம விவாகப் பழக்கம்**. பின்னர் அரசன் ஆதரவில் வைசிய ஆண்களுக்கும், வேளாள இனப் பெண்களுக்கும் பெரிய அளவில் திருமணம் நடத்தப்பட்டது. இந்த மண உறவிற்குப் பிறகு செட்டியார் இனத்திற்குப் புதிய பெயர்கள் ஏற்பட்டன. **உபய குல பூபால வைசியர், ரத்ன தன மகுட பூபால வைசியர், சந்திர கங்கா குல வைசியர்** என அழைக்கப்பட்டனர்.

மீண்டும் ஒரு குடிப்பெயர்வு

இதன் பின்னர் மீண்டும் ஒரு குடிப்பெயர்வு ஏற்பட்டது. இதுவே இன்றைய செட்டிநாட்டில் (பாண்டிய நாடு) இறுதியாய்க் குடியேறிய குடிப்பெயர்வு. பாண்டிய மன்னனான **சௌந்தர பாண்டியன்** இராசபூஷண சோழ இளவரசனை நோக்கி "எங்கள் நாடு பெரிய வெள்ளத்தில் சிலகாலம் மூழ்கியது. இதனால் நிலம், கால்நடை, மக்கள் யாவரும் துன்பமடைந்தனர். சிலர் இறந்தனர். பலர் வெளியேறினர். இப்பொழுது நாடு சகஜ நிலைக்குத் திரும்புகிறது. செழிப்புத் தொலைவில் இல்லை. எனவே அன்பு கூர்ந்து எங்கள் நாட்டில் வசிக்க சில மக்களையும், வைசிய வணிகர்களையும் அனுப்புங்கள்" என வேண்டினான். இது நியாயமாகப்பட சோழ மன்னன் சில வைசிய வணிகர்களை அந்நாட்டில் குடியேற அனுமதித்தான். வைசியர்களுக்கும் இது விருப்பமே ஆயினும், "சிலர் இங்கேயும் சிலர் அங்கேயும் இருப்பதில் அர்த்தமில்லை. ஒரே இடத்தில் ஒற்றுமையாக இணைந்திருக்க விரும்புகிறோம்" என்றனர். அதன்படி சோழமன்னன் அவர்கள் அனைவரையும் பாண்டிய நாட்டுக்கு மொத்தமாகச் செல்ல அனுமதித்தான். இவ்வாறு இவர்கள் சோழநாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்குக் குடியேறினர்.

தான் வாக்களித்தபடி மன்னன் சௌந்தர பாண்டியன் குடியேறியவர்களுக்குக் **கடலுக்கு மேற்கு, வைகைநதிக்கு வடக்கு, பிரான் மலைக்குக் கிழக்கு, வெள்ளாற்றுக்குத் தெற்கு** எனத் தன் நாட்டின் எல்லைகளை நிர்மாணித்து அளித்தான். இங்கே தான் இவர்கள் தங்கள் முதல் குடியேற்றப் பகுதியான **இளையாத்தங்குடி** நகரத்தை ஸ்தாபித்து வாழ்ந்து வந்தனர். இந்த மத்திய நகரத்தில் தங்கினவர் இவர்கள் **'நகரத்தார்'** எனப்பட்டனர். பிறகு முதல் சிவன் கோயிலை எழுப்பி, அதன் பிறகு எட்டுக் கோயிலை நிர்மாணித்தனர்.

பின்பு வைசியர்கள் தாங்கள் மூன்று வகுப்பாயுள்ள வேளாளர் குலத்தில் மணம் புரிந்து கொண்டிருப்பதால் எப்போதும் ஒற்றுமையாக இருப்பது இயலாது என முடிவு செய்தனர். அதன்படி மேற்குத்தெரு கார்காத்த வேளாளப் பெண்களை மணந்த ஆறு வழியாருக்கு **அரியூர் நகரம், பிரான் மலைக் கோயில்** என்றும், தெற்குத்தெரு காணியாள வேளாளப் பெண்களை மணந்த நான்கு வழியாருக்கு **சுந்தரபட்டணமும், அவ்வூர் கோயில்** என்றும், கிழக்குத்தெரு சோழிய வேளாளப் பெண்களை மணந்த ஏழு வழியாருக்கும் **இளையாத்தங்குடி நகரம், அவ்வூர் கோயில்** என்றும் பிரித்துக் கொண்டு வாழ்ந்தனர்.

இவர்கள் நாக நாட்டில் வாழ்ந்த போது **கோமதீஸ்வர சுவாமி தரிசனமும், சதாசிவ குரு பீடத்தில் தீட்சாகிரியையும்** பெற்று வந்துள்ளனர். பின்னர்த் தொண்டை நாட்டிற்குக் குடியேறிய போது **சத்தியபுரீசுவரர் தரிசனமும், அருணகிரி சிவசங்கராச் சாரியரிடம் தீட்சாகிரியையும்,** சோழ நாட்டிற்குக் குடியேறிய போது **ருத்ரபசுபதீசுவரர் தரிசனமும், ஈசான்ய சிவாச்சாரி யாரிடம் தீட்சாகிரியையும்** பெற்றனர். பின்னர் வேளாளக் குலப் பெண்களைத் திருமணம் புரிந்த பின் ஆண்களுக்கும், பெண் களுக்கும் தனித்தனியாகக் குருஸ்தானம் ஏற்பட்டது. கார்காத்த வேளாளர் பெண்களுக்குத் **திருவாரூர் - திருநாவுக்கரசு குருக்களும்,** காணியாள வேளாளப் பெண்களுக்குக் **கும்பகோணம் - சிவஞான குருக்களும்,** சோழிய வேளாளப் பெண்களுக்கு **ஸ்ரீவாஞ்சியம் - நிரம்பவழகிய குருக்களும்** தீட்சை அளித்தனர்.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இப்பகுதிக்கு மதுரை நாயக்க மன்னர்கள் வரும்வரை பாண்டிய நாட்டுப் பகுதியாகவே விளங்கியது இன்றைய செட்டிநாடு. கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இராமநாதபுர அரசன் **ரகுநாத சேதுபதி** (1674-1710) 1702-இல் நாயக்க அரசி **மங்கம்மாளைத்** தோற்கடித்துத் தன் சிறிய நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றான். கி.பி. 14-16 ஆம் நூற்றாண்டு களிலேயே வடக்கு, தெற்கிலிருந்து முகலிம் இனத்தவர்களின் ஊடுருவலும், இராமநாதபுரம், சிவகங்கைச் சீமைகளுக்குள் சிறு கலகங்களும் நேர்ந்துகொண்டே இருந்தன. இந்த நிலையற்ற வாழ்வு, செட்டியார்களின் வளர்ச்சி இரண்டும் இவர்கள் அண்மைக் கிராமங்களுக்குப் புக வழிகோல **96 கிராமங்கள்** நகரத்தார் இன இருப்பாகியது.

பின்னர்க் கி.பி. 1800-இல் தென்னிந்தியாவில் பிரிட்டிஷார் ஆட்சி அமைத்து, சென்னை மாகாணத்தை ஏற்படுத்தி அமைதியை ஏற்படுத்தினர். நகரத்தார்கள் மீண்டும் தொலைவில் இருந்த கிராமங்களை விட்டு அவர்கள் இன மையக் குடியிருப்புக்கு நகர நகரத்தார் கிராமங்கள் 96 லிருந்து இன்றைய 78 ஆகக் குறைந்தது.

சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்னால் நகரத்தார் குடிபெயர்வு குறித்து **எட்கர் தர்ஸ்டன்** எழுதிய நூலில் கூறும் கருத்தும் இங்குக் குறிப்பிடத்தக்கது.[1]

"ஓர் அரசால் துன்புறுத்தப்பட்டு சந்திரகுல வைசியர்கள் தாங்கள் வாழ்ந்த நாகநாட்டு சாந்தியாபுரியிலிருந்து ஒட்டு மொத்தமாகத் தொண்டை மண்டல காஞ்சிபுரத்திற்குக் குடி பெயர்ந்தனர். இது கலியுக 204-ஆவது ஆண்டு. காஞ்சி அரசன் இவர்களுக்குத் தங்க அனுமதியளித்து நிலப்பட்டா, கோயில்கள், மடங்கள் யாவும் அளித்தான். இங்கு இவர்கள் வெகுகாலம் தங்கி இருந்தனர். ஆனால் அதிக வரி, தண்டம் இவைகளைத் தாளாமல் கலியுக 2312-ஆம் ஆண்டில் சோழ நாட்டிற்குச் சென்றனர். இவர்கள் பால் மதிப்புக் கொண்ட சோழ அரசன், அரசர்களுக்கு முடி சூட்டும் உரிமையை இவர்களுக்களித்தான். அக்காலத்தில் காவிரிப்பூம் பட்டினம் செல்வத்தில் செழித்திருந்தது. அதில் வடக்குத்தெரு பிறநாட்டு வைசியர்களால் நிரம்பியிருந்தது. அவர்களைக் கலைக்க விரும்பாமல் அரசன் புதிய குடிகளைக் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய தெருக்களில் குடியமர்த்தினான். கௌரவச் சின்னமாக **சிம்மக்கொடி, வீட்டில் தங்கக் கலசம்** வைத்துக் கொள்ள அனுமதியளிக்கப்பட்டது. அரசன் விருப்பப்படி இவர்கள் பதஞ்சலி க்ஷேத்திர (சிதம்பரம்) ஈசான்ய சிவாச்சாரியாரின் சீடர்களானார்கள்.

சுமார் 3775-கலியுக ஆண்டில் **பூவந்தி சோழன்** வைசியப் பெண்களைச் சிறையில் தள்ள, 8000 வைசியர் குடிகளும் தங்கள் ஆண்குழந்தைகளைச் **சமயாச்சாரியார் ஆத்மநாதாச்சாரியார்** வசம் ஒப்புவித்து, தங்களை மாய்த்துக் கொண்டனர். பின்னர்ப் பிணியில் வீழ்ந்த பூவந்தி சோழன் வைசிய இளைஞர்களை அழைத்து மகன் **இராசபூஷண சோழனுக்கு** முடிசூட்டச் சொன்னான். அவர்களோ தாங்கள் மணமாகாதவர்கள் முடிசூட்ட இயலாது என்றனர். அதனால் அரசன் வேளாளப் பெண்களை மணக்கச் செய்தான். கிழக்குத் தெருவினர் சோழியப் பெண்களையும், மேற்குத் தெருவினர் கார்காத்த இனப் பெண்களையும் தெற்குத் தெருவினர் காணியாளப் பெண்களையும் திருமணம் புரிந்துகொண்டனர். பின்பு சுந்தர பாண்டியன் என்பவன் தன் நாட்டில் சில வைசியர்களைக் குடியேற்றும்படி சோழ மன்னனைக் கேட்டுக் கொண்டான். அதன்படி மீண்டும் மொத்தமாகப் புறப்பட்டு வெள்ளிக் கிழமை ஓங்காரக்குடி (காரைக்குடி) என்ற கிராமம் அடைந்தனர். வைகை நதிக்கு வடக்கு, பிரான்மலைக்குக் கிழக்கு, வெள்ளாற்றுக்குத் தெற்கு எல்லைகளாக உள்ள பகுதியில் தங்க அனுமதிக்கப்பட்டனர் என்று ஏறக்குறைய இதே கதைதான் உள்ளது.

⌘ ⌘ ⌘

1. Edgar Thurston, Castes and Tribes in Southern India, (Madras Government Press, 1909), Vol-V, Page 158.

14. நகரத்தார்களின் ஒன்பது கோயில்களும் - பணிகளும்

நகரத்தாரின் ஒரு முக்கிய தனிப்பட்ட சமூக சமய விஷயம் இவர்கள் செட்டி நாட்டு ஒன்பது கோயில்களுடன் வாழ்நாள் முழுவதும் பிணைப்புக் கொண்டிருப்பதே ஆகும். நகரத்தார் வாழ்க்கையில் கோயில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நகரத்தாரின் பல நூற்றாண்டுப் பழமொழியே **"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"** என்பதே. ஒரு குறிப்பிட்ட கோயிலைச் சார்ந்தவர் களாகத் தான் நகரத்தார்கள் பிரிக்கப்படுகிறார்கள். ஏனெனில் **ஒவ்வொரு நகரத்தாரும் பிறப்பால் தகப்பன் வழியில் ஒரு கோயில் வட்டத்தைச் சார்ந்தவர்களாகின்றனர். அதாவது கோயில் வட்டத்தில் எல்லா அங்கத்தினர்களும் ஒரு பொதுப்படை மூதாதையர் வழி வந்தவர்கள்.**[1]

ஒன்பது கோயில்கள் - தோற்றமும் வளர்ச்சியும்

இளையாத்தங்குடி, மாத்தூர், வயிரவன்பட்டி, நேமம், இலுப்பைக் குடி, சூரக்குடி, வேலங்குடி, பிள்ளையார்பட்டி, இரணியூர் என்பவைகளே நகரத்தாரின் ஒன்பது கோயில்கள். காரைக்குடி நகரிலிருந்து சுமார் 30கி.மீ. தொலைவிற்குள் இவை உள்ளன. முதல் மூன்றும் பெரிய கோயில்கள். இவைகளுக்கு முறையே 7,7,3 என மொத்தம் 17 உட்பிரிவுகள் உள்ளன. ஏனைய ஆறு கோயில்களுக்கும் உட்பிரிவுகள் இல்லை. ஆக மொத்தம் 23 உட்பிரிவுகள் உள்ளன.[2]

கீழே உள்ள அட்டவணை நகரத்தார் இக்கோயிலைக் கட்டியோ அல்லது எடுத்துக்கொண்ட ஆண்டையோ காட்டுகிறது. கோயில் ஆவணங்களில் உள்ள மக்கள் தொகையையும் காட்டுகிறது.

	கோயில் - இனப்பெயர் -	ஆண்டு -	மக்கள்தொகை (மணமானவர் மட்டும்) 1949-1950	1999-2000
1.	இளையாத்தங்குடி -	707	5, 994	6539
2.	மாத்தூர் -	712	7,134	6810

1. மா.சந்திரமூர்த்தி, வயிரவன் கோயில், இரண்டாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003, பக் – 36.

2. S. Chandrasekhar, The Nagarathars of South India, The Macmillan company of India Ltd.,Madras, 1980, p 44 - 45.

3.	வைரவன்பட்டி	- 712	5,484	5467
4.	நேமம்	- 714	1,504	2742
5.	இலுப்பைக்குடி	- 714	2,900	1390
6.	சூரக்குடி	- 718	1,286	1757
7.	வேலங்குடி	- 718	44	46
8.	பிள்ளையார் பட்டி	- 714	3,428	3504
9.	இரணியூர்	- 714	2,578.	3057

(ஆதாரம்: கோயில் நிருவாகிகள். இவை கோயிலாரால் அளிக்கப்பட்டவை)

எல்லா நகரத்தார்களின் **திருமணம்,** தத்து எடுத்தல் போன்றவை தேவையான கோத்திரம் மற்றும் உட்பிரிவைச் சார்ந்தவர்களிடையே நடக்கும். ஆனால் ஒரே கோ ந்திரத்தில் மணம் புரியக்கூடாது. அதாவது ஒரு கோயிலைச் சார்ந்த நகரத்தார் ஆண், அதே கோயிலைச் சார்ந்த இனப்பெண்ணை மணக்கக்கூடாது. ஆனாலும் நகரத்தார் தன் கோயில் இனத்தைச் சார்ந்த ஒருவனைத் தத்து எடுக்கலாம். ஒரே கோயிலைச் சார்ந்த எல்லா இனங்களும் **பெரும் பங்காளிகள்** எனப்படுகின்றனர். கோயிலின் உட்பிரிவைச் சேர்ந்தவர்கள் **பங்காளிகள்** ஆவர். எனவே பங்காளிகளுக்குள் மணம் புரியலாகாது. தத்து எடுக்கலாம். நகரத்தார்கள் கி.பி. 707-இல் இளையாத்தங்குடியில் முதல் கோயிலைத் தொடங்கினார்கள்.

பின்னர் அவர்களுக்குள் ஒற்றுமைக் குறைவு ஏற்பட இவர்களின் ஏழு பிரிவுகள் நாளடைவில் ஒன்பது பிரிவுகளாக மாறின. ஒரு பிரிவினைரைத் தவிர மற்றைய எட்டுப் பிரிவினரும் பாண்டிய அரசனிடம் தங்களுக்குத் தனித்தனிக் கோயில்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதன்படி அரசன் அளித்த கோயில்களும், அதில் வாழும் நகரத்தார் பிரிவுகளும், கோயிலின் சிறப்பு மற்றும் கட்டடக் கலையும். பின்வருமாறு காணலாம்.

1. இளையாத்தங்குடிக் கோயில்

கலியுகம் 3808 இல் கொடுக்கப்பெற்றது. (கி.பி. 707)

இறைவன் - கைலாசநாதர்

இறைவி - நித்திய கல்யாணி

இத்திருக்கோயில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக் குடியிலிருந்து 25கி.மீ தொலைவில் குன்றக்குடி, நேமம், கீழச்சிவல் பட்டி வழியாக ஆவினிப்பட்டி செல்லும் சாலையில் உள்ளது. அசுரர்களால் வருந்திய தேவர்களின் இளைப்பை ஆற்றியதால் இளையாற்றங்குடி என்று வழங்குவதாகத் தலபுராணம் கூறுகிறது.

பிரிவுகள்

(1) கல்வாசனாட்டில் இளையாத்தன் குடியான, குலசேகர புரத்தில், ஒக்கூருடையார்.

(2) கல்வாசனாட்டில் இளையாத்தன் குடியான, குலசேகர புரத்தில், அரும்பாற்கிளையாரான, பட்டணசாமியார்.

(3) கல்வாசனாட்டில் இளையாத்தன் குடியான, குலசேகர புரத்தில், பெருமருதூருடையார்.

(4) கல்வாசனாட்டில் இளையாத்தன் குடியான, குலசேகர புரத்தில், கழனிவாசற் குடியார்.

(5) கல்வாசனாட்டில் இளையாத்தன் குடியான, குலசேகர புரத்தில், கிங்கிணிக் கூருடையார்.

(6) கல்வாசனாட்டில் இளையாத்தன் குடியான, குலசேகர புரத்தில், பேரசெந்தூருடையார்.

(7) கல்வாச்னாட்டில் இளையாத்தன் குடியான, குலசேகர புரத்தில், சிறுசேத்தூருடையார்.[1]

கட்டடமும் கலையும்

சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒன்பது நகரக் கோயில்களில் இளையாத்தங்குடி தலைமைக் கோயிலாகும். இத்தலத்தைச் **சிவபுரம், பூகைலாயம், காமபிரபூரணபுரம், சித்தபுரம், புராதன வனம், நித்திய கல்யாணிபுரம், சிரமாபநோதன புரம்** என்ற பல பெயர்களை இளசைப் புராணம் குறிக்கிறது.[2]

பாண்டிய மன்னர்களில் மாறவர்ம குலசேகர பாண்டியனின் ஆட்சிக்காலத்தில் இவ்வூர் சிறப்புற விளங்கி வந்துள்ளது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி வரை **குலசேகரபுரம்** என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளது. பாண்டியர் கல்வெட்டுகள் சிவன் கோயிலைக் **'கல்வாயில் ஆண்ட நாயனார் கோயில்'** என்றும், இறைவனை **'ஸ்ரீ கைலாசமுடைய நாயனார்'** என்றும், இறைவியைத் **'திருக்காமக் கோட்ட நாச்சியார்'** என்றும், பழைய பழுதுபட்ட பெருமாள் கோயிலை **'விண்ணகர் எம்பெருமாள் கோயில்'** என்றும் குறிப்பிடுகின்றன.

இளையாத்தங்குடியில் சைவசமயம் மட்டுமின்றி, **வைணவம், பௌத்தம், சமணம்** ஆகிய சமயங்களும் தழைத்திருந்தன. இத்தலத்தின் மற்றுமொரு சிறப்பு காஞ்சி காமகோடி பீடத்திற்கும் இவ்வூருக்கும் உள்ள தொடர்பாகும். காஞ்சி மடத்தில் 1851 முதல்1890 வரை அருளாட்சி செலுத்திய, 65-ஆவது ஆச்சார்யராக விளங்கிய

1. சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், தன வைசியராகிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம், இரண்டாம் பதிப்பு, 1904, பக், 25 – 26.
2. இளையாற்றங்குடி மான்மியம், இளையாத்தங்குடி தேவஸ்தானம் வெளியீடு, இரண்டாம் பதிப்பு, 1998, பக் – 9.

ஸ்ரீமஹாதேவேந்திர சரசுவதி சுவாமிகள் அவர்கள் இளையாத்தங்குடியில் முக்தி அடைந்திருக்கிறார்கள். மேலும் நகரத்தாரின் ஒன்பது ஊர்களில் இத்தலத்தில் மட்டுமே இக்கோயில் ஏழு பிரிவினர் தங்களுக்குத் தனித்தனியாக ஏழு விநாயகர் கோயில் களையும் ஏழு ஊருணிகளையும் அமைத்துள்ளனர். இதில் கிண்கிணிக்கூருடையார் அமைத்த விநாயகர் கோயில் மட்டுமே சுந்தரவிநாயகர் என விளங்குகிறது. ஏனைய ஆறு விநாயகரும் கைலாச விநாயகர் என்றே அழைக்கப்படுகின்றன. இவ்வாறு ஊருணிகளைப் பரந்து விரிந்த நிலையில் அமைத்த இளையாத்தங் குடி நகரத்தார் மூன்று ஊருணிகளின் நாற்புறமும் இரண்டிரண்டாக அஷ்ட திக்கஜங்களான ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீகம் எனப்படும் எட்டு யானைகளை அமைத்துள்ளனர்.[1] ஒவ்வொன்றும் அழகிலும் கம்பீரத்திலும் சிறந்து விளங்குவதாக அமைத்திருந்தாலும், செம்மாந்த நிலையில் விளங்கும் சிம்மங்களையும் கிண்கிணிக் கூருடையார் மணிக்குளத்தில் அமைத்து மகிழ்ந்துள்ளனர்.

மேலும் நகரத்தாரின் ஒன்பது கோயில்களின் கொடுங்கைகளில் மிக இயற்கையாகக் குரங்குக் குடும்பங்களையும், கூரை, அதிட்டானப் பகுதிகளில் உடும்பையும் வடித்துள்ளனர். இறைவனது சன்னிதியில் மனத்தைக் குரங்கு போல் அலைய விடாமல், உடும்பு போல் இறைவனைப் பற்றவேண்டுவதற்காக அமைத் திருக்கலாம். அவ்வாறே கைலாச நாதர் சன்னிதி மற்றும் அம்மன் சன்னிதி கொடுங்கைகளில் குரங்குக் கூட்டத்தையும், அம்மன் சன்னிதி கிழக்குக் கூரையில் உடும்பு ஒன்றையும் சிற்பிகள் வடித்துள்ளனர்.

இவர்களின் சிற்பத் திறமைக்குச் சான்றாகத் தட்சிணாமூர்த்தி மண்டபத்தைத் தாங்கும் இரு தூண்களில் ஒன்றில் சிறிய அளவில் வடிக்கப்பட்டுள்ள இணைமான்களைக் கூறலாம். இதன் வலப்பக்க உடலை மறைத்துப் பார்த்தால் கலை மானாகவும், இடப்பக்க உடலை மறைத்துப் பார்த்தால் பிணை மானாகவும் செதுக்கியுள்ள சிற்பியின் ஆற்றலை எத்தனை போற்றினாலும் தகும். இவ்வாறு ஆண்மானையும், பெண்மானையும் ஒரு தலையும் ஈருடலும் கொண்டு 7 செ.மீ. உயரமும், 15 செ.மீ. அகலமும் உள்ள இடத்தில் படைத்துள்ள நகரத்தாரின் சிற்பக்கலையை எண்ணி வியக்கலாம்.[2] மாத்தூர் கோயில் தூணில் ரிஷபத்தையும், யானையையும் ஒருதலை-இரு உடலாகக் கொண்டு[3] வடித்துள்ள ரிஷப-குஞ்சர சிற்பத்தைப் போன்றே இதுவும் சிற்பியின் கூர்மையான கைத்திறனுக்கு எடுத்துக் காட்டாய் இன்றும் விளங்குவது நேரில் காணத்தக்கது.

1. மா.சந்திரமூர்த்தி, இளையாத்தங்குடிக் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004, பக் – 26.
2. மா.சந்திரமூர்த்தி, மேலது, பக் – 71.
3. மா.சந்திரமூர்த்தி, மாத்தூர் கோயில், 1988, பக், 14 – 85.

கைலாசநாதர் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், நடராஜர் சபை, முக மண்டபம், கொலு மண்டபம், பைரவர் சன்னிதி, பள்ளியறை, அம்மன் சன்னிதி, மேல்சுற்றுப் பிரகாரம், பரிவார சன்னிதிகள், சோமாஸ்கந்தர் சன்னிதி, திருச்சுற்று, மாளிகைப் பத்தி, அம்மன் கோபுரம், இரண்டாம் குடைவரை, நந்தி மண்டபம், பலி பீடம், கொடி மரம், இரு விநாயகர் சன்னிதி, அரச மங்களேசுவரர் சன்னிதி, வாகன அறை, மடைப்பள்ளி, வியஞ்சன அறை, கோயில் கிணறு, நிருவாக அறை, இராஜ கோபுரம், வெளி மண்டபம் ஆகிய பகுதிளை முறையாகப் பெற்று விளங்குகிறது.

முதல் சுற்றில் கோஷ்ட தெய்வங்களான நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், நான்முகன், துர்க்கை ஆகியவை காட்சியளிக்கின்றன. அதனை அடுத்த மேல் சுற்றுப்பிரகாரத்தில் கன்னிமூலை கணபதி, சோமாஸ்கந்தர், நாகர், விசுவநாதர், விசாலாட்சி, பிச்சாடனர், சுந்தரர், சுப்பிரமணியர், துர்க்கை, திருமால், திருமகள், கெஜலட்சுமி சண்டிகேசுவரர் ஆகிய சிற்பங்கள் சிலாவடிவில் காட்சியளிக்கின்றன. முக மண்டபத்தில் பைரவர், பள்ளியறை, அம்மன் சன்னிதி அமைந்துள்ளன. அம்மன் சன்னிதியை அடுத்து நவக்கிரக மேடை, சுதை வடிவிலான காமாட்சி அம்மன் ஆகியவை உள்ளன. அதன் பிறகு இரண்டாம் குடை வரையை அடுத்து நந்தி மண்டபம் உள்ளது.

இக்கோயிலின் மகா மண்டபம் மேல்சுற்றுப்பிரகாரம், முக மண்டபம், கொலு மண்டபம், நந்தி மண்டபம் யாவும் எளிமையான சித்திரக்கால் தூண்கள் தாங்கி நிற்கின்றன. பிற நகரக் கோயில்கள் போன்று மூலைப் பகுதிகளில் பெரும் கர்ணக்கால் தூண்களோ, முகப்பு வரிசையில் அணியொட்டித் தூண்களோ காணப்படாமை குறிப்பிடத்தக்கது. இச்சித்திரக்கால் தூண்கள் ஒவ்வொன்றும் மேலும் கீழும் நடுவிலும் சதுரமான பட்டைகள் வெட்டப்பட்டு இடைப்பகுதி எட்டு மற்றும் பதினாறு கோண வடிவில் செதுக்கி அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மேல் இருதலை மற்றும் முத்தலைப் போதிகைகள் அலங்கரிக்கின்றன. இவை பெரும்பாலும் பக்கங்களில் வரைந்தை வெட்டப்பட்ட வெட்டுப் போதிகையாகவும், புஷ்பபோதிகை களாகவும் காட்சியளிக்கின்றன. இப்போதிகைகள் மதளை, நாணுதல், பூமுனை, மொட்டு ஆகிய பல்வேறு உறுப்புகளுடன் பாங்குறச் செதுக்கப்பட்டுள்ளன. இதன் நாணுதல்பகுதி வாழைத் தாரை ஒத்து வளைந்து வனப்பூட்டுகிறது. பூமுனையிலுள்ள மொட்டுகள் எடுத்துத் திருகும் நிலையில் இல்லாமல் நாணுதலோடு ஒட்டி அமைக்கப்பட்டுள்ளது.

மேல்சுற்றுப்பிரகாரத் தூண்கள்

இத்தூண்களில் கட்டடக்கலைவளம் சிறந்தும், சிற்ப வடிவங்கள் குறைந்தும் காணப்படுகின்றன. இத்தூண்களின் சதுரப் பட்டைகளில் விலங்கு மற்றும் பறவைகள், இலைக் கருக்குகள் மற்றும் கொடிக்கருக்குகள், பன்னீர் சொம்பு, பூக்கள், பூங்கொடி கள், கும்பகலசம், பூர்ணகும்பம், பூந்தளிர், விரிந்த மலர்கள், விருட்சம் ஆகியவை புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் தெய்வ வடிவங்களாகப் புள்வாய் கிழிக்கும் கண்ணன், காளிங்க நர்த்தனன், குழந்தைக் கண்ணன், தாடக முத்திரை காட்டும் அனுமன், அம்பும் - வில்லும் ஏந்தும் கோதண்டராமன், அபய - வரதம் அளிக்கும் திருமால், உருத்திராட்சம் அணிந்த இலிங்கவடிவம், நாகங்கள் அர்ச்சிக்கும் லிங்கம், லிங்கத்திற்குப் பால் சொரியும் பசு, கையில் தண்டத்துடன் தோன்றும் தண்டாயுதபாணி, கருட வாகனத்தில் திருமால், காக்கும் தெய்வங்களான ஸ்ரீ தண்டி - ஸ்ரீ முண்டி, பைரவர் ஆகியவை காட்சியளிக்கின்றன. இங்குச் சைவ சமயச் சிற்பங்களை விட வைணவச் சிற்பங்களே அதிகம் உள்ளன.

மானிட வடிவங்களாக ஆயர்குல இடையன், கழைக்கூத்துக் கலைஞர்கள், வீணை ஏந்தி நிற்கும் வனிதை, குறுவாளுடன் வேட்டைக்குச் செல்லும் வேடன், வேட்டுவப்பெண், நாட்டிய நங்கை, ஒயிலாகத் தோன்றும் அழகி, பூக்குடலை ஏந்திய ஆயர்குல அணங்கு, பறவையைப் பற்றி நிற்கும் அழகிய பெண்ணும், பறவைகளில் தோகையுடன் தோன்றும் வண்ணமயில், அழகிய அன்னம், நீண்ட அலகால் மீனைப் பற்றி நிற்கும் நாரை ஆகியவையும், மரத்தை முறிக்கும் மதங்கொண்ட யானை, இளம் துளிரைப் பற்றும் கலை மான், மரக்கிளையைப் பற்றி நிற்கும் குரங்கு, வாலைச் சுருட்டி பாயும் நாய், திராட்சைக் கொடியை ஏக்கத்துடன் பார்க்கும் நரி, விரைந்து செல்லும் குதிரை, வாயில் இலைக் கருக்கைப் பற்றி நிற்கும் யாளி, குந்து சிம்மம் என பல்வகை விலங்கினங்களும் தூண்களை அலங்கரிக்கின்றன.

கொலு மண்டபம்

சுவாமி சன்னிதி மகா மண்டபத்தின் முன்புறம் கொலு மண்டபம் அமைந்துள்ளது. இஃது அம்மன் சன்னிதி முக மண்டபமாகவும் திகழ்கிறது. இம்மண்டபத்தை 5 வரிசைகளில் 20 தூண்கள் தாங்கியுள்ளன. இத்தூண்களில் சுவாமி சன்னிதி எதிரிலுள்ள ஏழுதூண்களில் முதல் தூணில் நகரத்தார்களின் தீட்சாகுருவான பாதரக்குடி மடத்தின் தலைவர் சேனாபதி சுவாமிகள் மற்றும் கலால்பேட்டை, இளையாத்தங்குடி ஜமீன்தார்களின் உருவங்கள் பெரிய அளவில் அமைந்துள்ளன.[1]

1. மா.சந்திரமூர்த்தி, இளையாத்தங்குடிக் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004, பக் – 26.

ஏனைய தூண்களின் சதுரப்பட்டைகளில் ஆழியும் - சங்கமும் பற்றி அருள்பாலிக்கும் திருமால், தாமரை மலர் ஏந்திய ஸ்ரீதேவி, கத்தி - கதாயுதம் பற்றி நிற்கும் காளி, தாமரை மலரை வலக்கையில் ஏந்திவரும் அனுமன், வில்லும் அம்பும் பற்றி நிற்கும் இராமபிரான், கையில் மலர் ஏந்தி நிற்கும் சீதாபிராட்டி, ஒரு கையில் அரிவாளும் - மறு கையில் கதாயுதமும் ஏந்தியுள்ள மதுரை வீரன், உருத்திராட்சம் அணிந்து நிற்கும் தண்டாயுதபாணி, உடுக்கை - பாசம் - திரிசூலம் - கபாலம் கொண்டு விளங்கும் மாரியம்மன், இடம்புரி விநாயகர், மதம் கொண்டு மரத்தை உடைக்கும் யானை, லிங்கத்திற்குப் பால் சொரியும் பசு, வாயில் கொடிக் கருக்கைப் பற்றி நிற்கும் யாளி, அஸ்திரதேவரை முதுகில் சுமந்து வரும் அன்னம், எதிரெதிரே சீறிப் பாயும் துதியாளிகள், இரைதேடும் நாரைகள், வாட்போர் புரியும் வீரர்கள் மற்றும் விரிந்த தாமரை, பூந்தளிர்கள், இலைகள், கொடிகள், வட்டங்கள் போன்றவை அர்த்த சித்திரமாகச் செதுக்கப் பட்டுள்ளன.

நந்தி மண்டபம்

கைலாச நாதர் கோயிலின் இரண்டாம் குடைவரையை அடுத்து நந்தி மண்டபம் அமைந்துள்ளன. மண்டபத்தின் நடுவே நந்தி, பலி பீடம், கொடிமரம் அமைந்துள்ளன. சதுர வடிவ இம்மண்டபத்தை 6 வரிசைகளில் 42 தூண்கள் தாங்கி நிற்கின்றன. சித்திரக்கால் வகையைச் சார்ந்த இத்தூண்கள் எளிய பாதத்தின் மேல் எளிய கட்டமைப்புடன் ஒரே கல்லில் வடிக்கப்பட்டுள்ளன. தூண்களின் சதுரப்பட்டைகளில் அர்த்த சித்திரமாக அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

தெய்வ வடிவங்கள்

இத்தூண்களில் எச்சரிக்கும் முத்திரை காட்டி வாயிலைக் காத்து நிற்கும் துவாரபாலகர், சுயம்புலிங்கத்தை நாவால் நீவும் பசு, சஞ்சீவி மலையைத் தூக்கிவரும் அனுமன், வலக்கையில் தண்டம் பற்றி கௌபீனம் தரித்து நிற்கும் தண்டாயுதபாணி, தலமரத்தின் கீழ் இலிங்கம், இலிங்கத்திற்குப் பால் சொரியும் பசு, குழலூதும் வேணு கோபாலன், விமானத்துடன் கூடிய இலிங்கம், அனுமனுடன் சுக்கிரீவனும், காளிங்க நர்த்தனன், ராஜ அலங்காரத்துடன் தண்டாயுத பாணி, நர்த்தன விநாயகர், முருகப்பெருமான், சங்கு ஊதும் நந்தி கணம் போன்ற இறை வடிவங்களைக் கண்டு களிக்கலாம்.

மானிட வடிவங்கள்: ஒயிலாக நின்று வீணை இசைக்கும் வனிதை, ஆடும் ஆடல் மகள், தலையில் குடத்தைச் சுமந்து வரும் அணங்கு, தலை மீது மோர்ப் பானை ஏந்திவரும் மடந்தை, கோலூன்றி நிற்கும் கோகுலத்து இடையன், சிவாச்சாரியார், இசைக்

கருவி வாசிக்கும் கோமாளி, கைத்தாளம் வாசிக்கும் கலைஞன், நாணி நிற்கும் நங்கை, அழகிய அணங்கைக் கண்டு காமுறும் ஆடவன், அஞ்சலித்து நிற்கும் அடியார், பாம்பாட்டி, கொடிப்பெண் ஆகியவை தவிர தாமரை, வட்டம், விருட்சம், பன்னீர்ச் சொம்பு, கும்பகலசம், பூர்ண கும்பம், பூந்தளிர், இலை, கொடிக் கருக்குகள் செடி, கொடி போன்றவை அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.

வண்ண ஓவியங்கள்

இத்தூண்களின் அழகை மேலும் மிகைப்படுத்தும் வகையில் கொலு மண்டபம், மேற்சுற்றுப் பிரகாரம், நந்தி மண்டபம், வெளி மண்டபம் விதானங்களில் அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. பரிவார தெய்வங்களின் சன்னிதி எதிரே அந்தப் பரிவார தெய்வங்களின் ஓவியங்களும், எட்டு நாகங்கள், வரிப்புலி, பூக்கள், வட்டங்கள், தேவதைகள், கந்தர்வர்கள் போன்றவையும் மேற்சுற்றுப் பிரகாரம் முழுதும் திட்டப்பட்டுள்ளன. சுவாமி, இறைவி சன்னிதி எதிரேயுள்ள முக மண்டப விதானத்தில் சிவபெருமான் - உமையுடன் தோன்றுவது, கல்யானைக்குக் கரும்பு கொடுப்பது, கிராதார்ஜீனர், இறைவி நித்திய கல்யாணி, காமாட்சி, கலைமகள், திருமகள், மலைமகள் ஆகியவை அழகாகத் தீட்டப்பட்டுள்ளன.

அடுத்து நந்தி மண்டபத்தில் சிவபெருமான் - உமை, ரிஷபாரூடர், அன்னபூரணி, முருகன் - வள்ளி, கோயில் புராணம் திருமகள் - கலைமகள் போன்றவையும், வெளிமண்டபத்தில், நடராஜர் - சிவகாமி, மீனாட்சி பிறப்பு - திருமணம் - திக்விஜயம், பகீரதனுக்காக சிவபெருமான் கங்கையை வரவழைத்தல் போன்றவை யாவும் தூரிகையின் துடிப்புடன் காணப்படுகின்றன.

ஆதிகேசவப் பெருமாள்

இளையாத்தங்குடி கைலாசநாதர் கோயிலின் பின்புறம் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது கழனி வாசல்குடி பிரிவினருக்கு உரிமையுடைய ஆதிகேசவப் பெருமாள் கோயில். இக்கோயிலும் நகரத்தார்களின் கட்டடக் கலைக்கும் சிற்பக் கலைக்கும் சீரிய சான்றாகத் திகழ்கிறது. கைலாச நாதர் கோயில் தூண்கள் போல அல்லாமல் **சித்திரக் கால்கள், அணி ஒட்டிக் கால்கள், கர்ணக்கால்கள், பிள்ளைக்கால்கள்** எனப் பல வகைத் தூண்களைக் கொண்ட உயர்ந்த திருச்சுற்றுப் பிரகாரம்.

முன் மண்டபத்தை அலங்கரிக்கும் அணி ஒட்டிக் கால்தூண்களின் முன்பு ஒரே கல்லால் செதுக்கி வைக்கப்பட்டுள்ள **தசாவதாரச் சிற்பங்கள்** சிற்பக் கலைக்குக் கட்டியம் கூறுவன. இக்கோயிலின் முக மண்டபத்தை அலங்கரிக்கும் அணி ஒட்டித் தூண்கள் ஒவ்வொன்றும் கீழிருந்து போதிகை மட்டம்வரை சுமார்

8 மீ. உயரமுடையவை. கீழ்ப்பகுதி செவ்வக வடிவிலும், இடைப் பகுதி 16 பட்டை தீட்டப்பட்டு, நடுவே எளிய இடைவார் இணைக்கப் பட்டு மேலும், கீழும், நடுவிலும் சதுரமாகச் செதுக்கப்பட்ட தாய்த்தூணும், அதன் முன்புறம் 8 பட்டை வடிவில் பிள்ளைத் தூணும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. தாய்த்தூணுடன் பிள்ளைத்தூண்களை ஒரே கல்லில் காண்பது குலைதள்ளிய வாழை மரத்தை இளம் கன்றுடன் காண்பதை ஒத்துள்ளது.

தாய்த்தூணின் இரு பக்கங்களிலும் புஷ்ப போதிகைகள் வளைந்து வனப்பூட்டுகின்றன. இத்தூண்களின் மேல் சீறிப்பாயும் சிம்மங்களின் உருவங்கள் அச்சம் தரும் வகையில் படைக்கப் பட்டுள்ளன. இவ்வாறு தூண்கள் மீது சிங்கங்களை அமைக்கும் பாணி நாயக்கர் காலத்தில் தொடங்கியது. இச்சிங்கங்கள் தம் தலை மீது நாடக சட்டத்தைத் தாங்கியவாறு அமர்ந்துள்ளன. இந்நாடகச் சட்டத்தின் மீது காண்போரை வியக்க வைக்கும் பெரிய புஷ்ப போதிகைகள் அலங்கரிக்கின்றன. இப்போதிகையின் கீழ் முட்டிப்பந்தம் வாழைகுலை தள்ளுவதை ஒத்த அமைப்பினைப் பெற்று விளங்குகிறது. அதன் மேல் முனைகள் மதளை, வளைந்து வனப்பூட்டும் நாணுதல், பூமுனை ஆகிய உறுப்புகளைப் பெற்றுக் காட்சியளிக்கிறது. முட்டி பந்தத்தின் மேல் பூதகணங்கள் நாணுதலைத் தலையில் தாங்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளன. புஷ்ப போதிகையின் மீதுள்ள உத்திரப்பகுதி மகாமண்டப விதானத்தோடு இணைகிறது.

இவ்வாறு அணி ஒட்டிக் கால்களை உடைய தூண்களை மகா மண்டபத்தின் இரு புறமும் மிக அற்புதமாக நேர் கோட்டில் அமைத்துள்ள பாங்கும், தூண் பாதங்களை மண்டபத்தில் துளையிடாமல் சமதரையில் நிறுத்தியுள்ள பாங்கும் அக்கால நகரத்தார் கட்டடக்கலை முறைக்குக் கட்டியம் கூறுகிறது. இத்தூண்களில் வடிக்கப்பட்டுள்ள திருமாலின் தசாவதாரங்களும் இதன் மற்றொரு சிறப்பாகும். தூண்களை இணைத்துள்ள பட்டிகையிலும் சிற்பிகள் புதுமை செய்துள்ளனர். தேசத்தந்தை மகாத்மா காந்தியின் உருவமும், திருவள்ளுவரின் உருவமும் தூண் பட்டிகைகளில் காணமுடிகிறது. இதனால் இவர்களின் தேசப் பற்றையும், தமிழ் பற்றையும் அறிய சான்றாகிறது.[1]

இளையாத்தங்குடி கைலாச நாதர் கோயிலுக்கு நான்கு முறை குடமுழுக்கு நடந்துள்ளது. முதல் திருப்பணி கி.பி. 1939-இல், இரண்டாம் திருப்பணி கி.பி. 1958-இல், மூன்றாம் திருப்பணி கி.பி. 1985-இல் மற்றும் நான்காம் திருப்பணி கி.பி. 2004ஆம் ஆண்டிலும் நடைபெற்றுள்ளது.

1. மா.சந்திரமூர்த்தி, இளையாத்தங்குடி கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004, பக், 265 – 266.

2. மாத்தூர் கோயில்

கலியுகம் 3813 இல் கொடுக்கப் பெற்றது. (கி.பி. 712)

இறைவன் - ஐந்நூற்றீசுவரர்

இறைவி - பெரியநாயகி.

இத்திருக்கோயில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக் குடியிலிருந்து இலுப்பைக்குடி செல்லும் சாலையில் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பதினெண் சித்தர்களில் ஒருவரான கொங்கணர் இரசவாதத்திற் சிறந்தவர்.[1] கொங்கண சித்தர் தாம் இரசவாதத்தால் உருவாக்கிய தங்கத்தை மாற்று உரைத்துப் பார்த்தமையால் இவ்வூர் மாற்றூர் என வழங்கப்படுவதாகத் தலபுராணம் கூறுகிறது. அவர்தம் சித்த வன்மையால் செம்பொன் செய்து ஐந்நூறு மாற்றுக் கண்டனர். அதனால்தான் இந்த மூல லிங்கப் பெருமானுக்கு "ஐந்நூற்றீசுவரர்" என்னும் பெயர் அமைந்தது என்பர்.[2] இங்கு தல விருட்சம் மகிழ மரமாகும்.

பிரிவுகள்

(1) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில், மாற்றூரான வீரபாண்டியபுரத்தில், உறையூருடையார்.

(2) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில், மாற்றூரான வீரபாண்டியபுரத்தில், அரும்பாக்கூருடையார்.

(3) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில், மாற்றூரான வீரபாண்டியபுரத்தில், மணலூருடையார்.

(4) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில், மாற்றூரான வீரபாண்டியபுரத்தில், கண்ணூருடையார்.

(5) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில், மாற்றூரான வீரபாண்டியபுரத்தில், கருப்பூருடையார்.

(6) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில், மாற்றூரான வீரபாண்டியபுரத்தில், குளத்தூருடையார்.

இளையாத்தங்குடி நகரத்தார்களைப் போன்றே இவர்களும் சமூக உறவில் ஒவ்வொரு உட்பிரிவும் ஒரு தனிக்கோயில் போலவே நடந்து கொள்வர். இக்கோயிலைச் சார்ந்த நகரத்தார்கள் 55 ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். மொத்தம் 6810 புள்ளிகள் ஆவர்.

கட்டடமும் கலையும்

நகரச் சிவன் கோயில்களில் ஒன்று மாத்தூர்.

---

1. கா.சுப்பிரமணிய பிள்ளை, இலக்கிய வரலாறு (இரண்டாம் பகுதி) மறுபதிப்பு, சென்னை, 1958, பக். 340.
2. வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, இரண்டாம் பதிப்பு, 2003, பக், 49.

மாத்தூர் என்பது இன்றைய வழக்குப் பெயராக இருப்பினும் பண்டைய நாளில் **வீரபாண்டியபுரம்** என அழைக்கப் பட்டுள்ளது. மாத்தூர் ஏறத்தாழ 1500 ஆண்டுகள் தொன்மை மிக்கதாகும்.

ஐந்நூற்றீசுவரர் கோயிலில் பாண்டியர் காலப் பைரவர், நந்தி முதலிய சிற்பங்கள் உள்ளன. இவ்வூரின் புறப்பகுதியில் பரிவார தெய்வமான பாண்டியர் கால ஆறுமுகன் உருவமும், திருமாலின் தேவியான திருமகளின் சிற்பம் ஒன்றும் கிடைத்துள்ளன.

இதனால் பிற்காலப் பாண்டியர் ஆட்சியில் இப்பகுதியில் சிவன் கோயிலும், திருமால் கோயிலும், கிராம தேவதையான மாகாளி கோயிலும் இருந்தவை புலனாகிறது. கொங்கண சித்தர் 500 மாற்றுப் பொன்னை உருவாக்கியதால் இறைவன் **ஐந்நூற்றீசுவரர்** என அழைக்கப்படுவதாகக் கூறப்பட்டாலும், பாண்டியர் காலத்தில் இருந்த **ஐந்நூற்றுவர்** எனும் வணிகர் குழுவினர் தோற்றுவித்ததால் இச்சிவத்தலம் **ஐந்நூற்றீசுவரர்** என வழங்கலாயிற்று என்பதே வரலாறு கூறும் உண்மை.[1]

சிதைந்த பாண்டியர் காலக் கோயிலின் அடித்தளத்தில் எழுப்பப்பெற்ற இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், அம்மன் சன்னிதி, நந்தி மண்டபம், கொடிமரம், திருச்சுற்று மாளிகை, பரிவார ஆலயங்கள், இராஜ கோபுரம், விழா மண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இக்கோயிலின் கட்டடக்கலையும், சிற்பக்கலையும், நேர்த்தியான சிற்பவேலைப்பாடுகளும் கலையழகு கொண்டவை.

சிற்பங்கள் இல்லாமலேயே ஓங்கி உயர்ந்து நிற்கும் ஐந்து நிலை இராஜ கோபுரத்தின் மாட்சியும், செங்கல்லைக் கொண்டே சிறப்பாகக் கட்டப்பட்டுள்ள கட்டடக் கலையின் நுணுக்கமும், கோபுர நிலைகளை அடைய அமைக்கப்பட்டிருக்கும் ஒரே கல்லாலான கற்படிகளும் இதனைப் பிற கோபுரங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.

அடுத்து மேல்சுற்றுப் பிரகாரத்தில் கட்டப்பட்டுள்ள **சண்டிகேசுவரர் கோயில்** நகரத்தார் காலக் கட்டடக் கலைக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு. அடிமுதல் கலசம் வரை வெள்ளைக் கல்லால் எழுப்பபட்டுள்ள இக்கோயிலின் கலசத்திற்கு மேலுள்ள விதானப்பகுதியைக் கவிழ்ந்த குடை போன்று குடைந்து அதன் நடுவில் துளையிட்டுள்ளனர். மழைக்காலங்களில் இத்துவாரத்தின் வழியே ஓடி வரும் மழைநீர் உள் இறங்கிக் கலசத்தையும், விமானத்தையும் தூய்மைப்படுத்தும் காட்சி நகரத்தாரின் கட்டடக் கலையின் மாட்சிக்குக் கட்டியம் கூறுகிறது.[2]

1. மா.சந்திரமூர்த்தி, மாத்தூர் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988, பக், 4 – 5.
2. மா.சந்திரமூர்த்தி, மேலது, பக்,44 – 45

மேலும் சிற்பக்கலைக்குச் சான்றாகத் திகழும் தட்சிணாமூர்த்தி மண்டபத்தைத் தாங்கும் சிங்கத் தூண்களையும், கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஆகிய பகுதிகளில் கபோதகத்தின் மேலும், கூடுகளிலும், இடையிடையேயும் உள்ள சிறிய புடைப்புச் சிற்பங்களைக் கூறலாம்.

தட்சிணாமூர்த்தி மண்டபத்தைத் தாங்கும் சீறிப்பாயும் சிங்கங்களின் திறந்த வாயினுள் பெரிய கல் குண்டுகளைச் சிற்பி, சுழலும் வகையில் செதுக்கியுள்ள பாங்கு வியந்து போற்றத்தக்கது. சிங்கத்தின் திறந்த வாய் சுமார் 6 செ.மீ அகலமுடைது. ஆனால் சிங்கத்தின் வாயினுள் உள்ள சுழலும் கல்குண்டுகளோ 30 செ.மீ சுற்றளவுடையது. இத்தகைய பெரிய குண்டுகளைச் சிறிய வாயினுள் அமைத்தது வியப்பிற்குரியது. சிங்கத்தின் வாயினுள் உள்ள கல்லைக் கொண்டே உளியால் உருட்டி செதுக்கி மிக நேர்த்தியாக அமைத்துள்ள பாங்கு வியக்கத்தக்கது.

ஐந்நூற்றீசுவரர் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மற்றும் மகா மண்டபத்தை வலம் வருவோமானால் கோஷ்டமாடங்களை அலங்கரிக்கும் கோஷ்டபஞ்சரம், அகாரைப் பகுதியிலுள்ள கும்ப பஞ்சரத்தின் அழகைக் காணலாம். அவற்றின் கபோதகக் கூடுகளிலும் பல அழகிய புடைப்புச் சிற்பங்களைக் கண்டு களிக்கலாம்.

கரிய கஞ்சுகனான பைரவர், மூஷிகத்தின் மீது ஒருகாலை வைத்து மறுகாலைத் தரைமீது ஊன்றி நர்த்தனமாடும் விநாயகர், ஆடை அணியா அழகரான பிச்சாடனர், அவரின் பேரழகில் மயங்கிய தாருகாவனப் பத்தினிகள், பத்துக் கரங்களில் ஆயுதம் தாங்கித் தக்கனை அழிக்கும் வீரபத்திரர், யானைத் தோலை உரித்துப் போர்த்தியாடும் கஜ சம்ஹார மூர்த்தி, ஆடவல்ல பெருமான், வேடன் கண்ணப்பன், ஏகபாத மூர்த்தி, குதிரை மீது சவாரி செய்யும் வீரன், அரசகுமாரியைத் தோளில் சுமந்து வாளோடு தோன்றும் வீரன், இரண்ய சம்ஹார நரசிம்மர், குழலூதும் வேணுகோபாலன், அவனது இசையில் மயங்கி நிற்கும் ஆநிரைகள், தண்டத்தைப் பிடித்து நிற்கும் தண்டாயுத பாணி, காளிங்க நர்த்தனர், யானைக்கு அருளிய கஜேந்திர மோட்சம், ரிஷபத்தின் மீது சாய்ந்து நிற்கும் ஏறு ஊரும் பெருமான், திரிவிக்கிரமன், நிகும்பசூதனி, காட்டு விலங்கை வேட்டையாடும் நரிக்குறவன், ஓலைப் பெட்டியுடன் நரிக்குறத்தி, ஊர்த்துவ தாண்டவப் பெருமான், வீணை இசைக்கும் வனிதை, பூதகியிடம் பாலருந்தும் கண்ணன் ஆகியோரின் அழகிய சிற்ப வடிவங்களைக் கபோதகக் கூடுகளில் காணலாம்.

இச்சிற்பக் காட்சியில் சில குறிப்பிடத்தக்க அழகுடன் விளங்குகின்றன. ஏறு ஊரும் பெருமானான ரிஷப வாகன தேவர் காளையின் மீது சாய்ந்து அக்காளைக்குத் துளிர் கொடுக்கும் காட்சி பாண்டியர், விஜயநகரர், நாயக்கர் காலச் சிற்பங்களில் காண்பதரிது.

அடுத்து மகாபலி சக்கரவர்த்தியிடமிருந்து யாசித்து வாமனன் தானம் பெறுதலும், திருமால் திருவடியை மேலே தூக்கி ஓங்கி உலகளந்தானாகத் தோன்றும் காட்சியும், திருமால் தன் திருவடியை மகாபலியின் மீது வைத்து அழிக்கும் காட்சியும் சீரிய முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து நான்முகன் தாளம் போட, திருமால் மத்தளம் வாசிக்க, ஆறுமுகன் கைத்தாளம் போட, நந்தி மத்தளம் முழங்க, நடுவே சிவபெருமான் எழிலுருவாய்த் தோன்றி வலது காலை மேலே உயர்த்தி **ஊர்த்துவ தாண்டவம்** ஆடும் காட்சி சிற்பக் காவியமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் மேலிரு கரங்களில் மழுவும், மானும் பற்றியும், கீழிரு கரங்களை வலது காலுக்குக் கீழே கொண்டு தமருகம் இசைக்கிறார். பாண்டிய நாட்டில் பாண்டியர், விஜயநகரர், நாயக்கர் காலத் தூண்களில் காட்டப்பட்டுவந்த இந்நிகழ்ச்சி நகரத்தார் காலத்திலும் தொடரப்பட்டிருக்கிறது.

இங்குள்ள கொடுங்கைகளிலும், கூடுகளிலும் மகாவிஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களில் சில காட்சிகளைக் காண்கிறோம். இங்குத் **திருமால் மீனாக, ஆமையாக, பன்றியாக, சிங்கமாக, வாமனனாக, இராமனாக, கிருஷ்ணனாகத்** தோன்றும் காட்சிகள் நேர்த்தியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் கிருஷ்ணனைத் தவழும் கண்ணனாக, காளிங்க நர்த்தனனாக, வெண்ணெய்க் கண்ணனாக, நர்த்தன கிருஷ்ணனாக, குழலூதும் வேணு கோபாலனாக, அரக்கியின் மார்பில் பால் குடிக்கும் பாலகனாக, புள் வாய்க் கீண்ட வீரனாக, ஆடையைக் கவர்ந்து நிற்கும் அழகனாக, திருமகளும்-புவிமகளும் சூழ்ந்த திருமாலாக, பெரிய திருவடி - சிறிய திருவடி ஆகியோர் முன் தோன்றும் இறைவஃ.ாகச் சித்திரித்துள்ளனர். இவை எல்லாவற்றையும்விட முனிவர்களின் ஆணவத்தை அழிக்க மோகினியாகப் **பரந்தாமன்** தோன்றும் காட்சி வனப்புடையது.


மகா மண்டபத்தின் கூரைகளிலும், கொடுங்கைகளிலும் உள்ள கூடுகளில் உமாசகித சந்திரசேகரமூர்த்தி, உமையுடன் காளைமீது தோன்றும் ரிஷபாரூடர், ஆடும் பெருமான், மானுக்குத் துளிர் கொடுக்கும் பிச்சாடனர், சிவகணங்கள், கால சம்ஹார மூர்த்தி, மணக்கோலத்தில் கல்யாண சுந்தரமூர்த்தி, மணப்பந்தலில் திருமால் தாரை வார்த்தல், பத்துக் கரங்களுடன் நடனமாடும் கரி உரித்த பெருமான், ஆனந்தத் தாண்டவமாடும் அண்ணல், தக்கனை அழிக்கும் வீரபத்திரர், இடபவாகன தேவர், ஏகபாத மூர்த்தி, லிங்கோத்பவர், சந்திரசேகரமூர்த்தி ஆகிய சிவனது 25 வடிவங்கள் அலங்கரிக்கின்றன.

சுவாமி சன்னிதி புறச்சுவரின் கோஷ்ட பஞ்சரம், அகாரைப் பகுதியிலுள்ள கும்பபஞ்சரம் மேலுள்ள கபோதகக் கூடுகளிலும் பல அழகிய சிற்பங்கள் உள்ளன. அவை, காமதேனு, வெண்ணெய் தின்னும் கண்ணன், மிருகத்தை வேட்டையாடும் குறவன், நாட்டியமாடும் குறத்தி, அல்லி மலரேந்திய அன்னை, இராமன் - இலக்குவன், இராமனைப் பணிந்து நிற்கும் அனுமன், நாட்டியமாடும் காளி, சந்திரசேகரர், கருப்பண்ண சுவாமி போன்றவை.


அவ்வாறே மகா மண்டப கோஷ்ட பஞ்சரங்களில் குழலூதும் கண்ணன், நவநீத கிருஷ்ணன், கூத்தபிரான், சிவகாமி, இராமன் முன்பு தத்துவம் கற்கும் அனுமன், சதுர்புஜ உமை ஆகியவை காணப்படுகின்றன.

அதேபோல அம்மன் சன்னிதி கருவறைக் கூரைப் பகுதியில் கொடுங்கையிலும், நாசிக் கூடுகளிலும் பல்வேறு சிற்பங்கள் காணப்படுகின்றன. யோக நரசிம்மர், ஆதிசேஷன் மீதமர்ந்த வைகுண்டப்பெருமாள், காளிங்க நர்த்தன கண்ணன், யானைக்கு மோட்சமளித்த ஆதிமூலன், மகாபலியின் முடி மீது திருவடி வைக்கும் திருமால், வேணுகோபாலன், இரண்ய சம்ஹார மூர்த்தி, இரண்ய யுத்தம் புரியும் நரசிம்மம், தாருகாவன முனிவர்களை மயக்க வந்த மோகினியான திருமால், மகிழமரத்து முனி, நிசும்பசூதனி, நடனமிடும் எண்தோள் ஆலங்காட்டுக் காளி, ஊர்த்துவ தாண்டவம் புரியும் ஈசன், மகிஷனைச் சம்கரிக்கும் மகிஷமர்த்தினி, யானை வடிவில் வந்த கயாசுரனைக் கிழித்தாடும் பெருமான், தக்கனை அழிக்கும் வீரபத்திரர், அபய-வரதம் அளிக்கும் அன்னை, ஆடும் அரவத்தை அடக்கும் பிடாரன் ஆகிய சிற்பங்களைக் காணலாம்.

அடுத்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் உமாபரமேசுவரி, நாட்டியமகள், குறவன், குறத்தி, பிச்சாடன மூர்த்தி, அவரின் பேரழகில் மனத்தை இழந்த பத்தினிப் பெண்டிர், இடையில் ஆடை நெகிழக் கையில் கரண்டியோடு தன்னை மறந்து நிற்கும் ரிஷிபத்தினி, வில்லும் - வேலும் ஏந்திய வேலவன், மூஷிக வாகனத்தில் தோன்றும் விநாயகப் பெருமான், அல்லி மலர் ஏந்திய அன்னை, இரு வடுக வாகனங்களோடு தோன்றும் எண்தோள் பைரவர், சனகாதி முனிவர்களுக்குத் தத்துவம் கற்பிக்கும் தென்திசைச் செல்வன், மயில் வாகனத்தில் முருகபிரான், வாகனத்தில் தோன்றும் விநாயகர், காளத்தி நாதருக்குத் தம் கண்ணை அர்ப்பணிக்கும் கண்ணப்பர், அவரைத் தடுத்தாட் கொள்ளும் காளத்திநாதர், அருகில் அன்னை சிவகாமி காண ஆனந்தத் தாண்டவம் ஆடும் பெருமான் ஆகிய சிற்பங்கள் யாவும் கருத்தோடும், கவனத்தோடும் செதுக்கப் பட்டுள்ளன. இவை சிறிய சிற்பங்களாயினும் சீரிய அழகோடு வடிக்கப்பட்டுள்ளன.




செட்டிநாடு கிராமம்
ஒரு பறவைப் பார்வை




காரைக்குடி நகரம்
ஒரு பறவைப் பார்வை



செப்புப்பட்டயம்
நகரத்தார் ஆவணம்




பனை ஓலை
நகரத்தார் ஆவணம்



கைலாசநாதர் கோயில்
இளையாத்தங்குடி



இளையாத்தங்குடி நகரக்கோயிலும்
பிரளய ஊருணியும்



ஐநூற்றீசுவரர் கோயில்
மாத்தூர்



மாத்தூர் நகரக்கோயிலும்
கமலாலயத் திருக்குளமும்



தான்தோன்றீசுவரர் கோயில்
இலுப்பைக்குடி.




வளரொளிநாதர் கோயில்
வைரவன்பட்டி.



வைரவன்பட்டி நகரக்கோயிலும்
ஊருணியும்.



ஜெயங்கொண்ட சோழீசுவரர் கோயில்
நேமம்



நேமம் நகரக்கோயிலும்-சோழகுல ஊருணியும்.



தேசிகநாதர் கோயில்-சூரக்குடி



கண்டீசுவரர் கோயில்
வேலங்குடி.



ஆட்கொண்டநாதர் கோயில்
இரணியூர்



மேல்சுற்றுப் பிரகாரம் - நகரக்கோயில்
இளையாத்தங்குடி



மருதீசர் கோயில்-பிள்ளையார்பட்டி



யாளிமுக உள்வாய் - ஊருணி
இளையாத்தங்குடி



கருவறைப் புறத்தோற்றம்
நகரத்தார் கலை - இலுப்பைக்குடி




அணிஒட்டித் தூண்கள் - இரணியூர்க்கோயில்
நகரத்தார் கலை



பள்ளப்பத்தி பிரகாரம் - வயிரவன்பட்டி
நகரத்தார் கலை.



பாயும் யாளி - இரணியூர்க்கோயில்
நகரத்தார் கலை.



முன் மண்டபத் தூண்கள்
மாத்தூர்க் கோயில்



ஆலங்காட்டுக் காளி-நேமம் கோயில்



நடனமாடும் காளி-சூரக்குடிக் கோயில்




காலசம்ஹார மூர்த்தி-இரணியூர்க் கோயில்



இராஜகோபுரம் ஆத்தங்குடி



கண்ணாத்தாள் கோயில்-நாட்டரசன்கோட்டை



கவின்மிகு தூண்கள் - நகரத்தார் கலை
கண்ணாத்தாள் கோயில்



கொற்றவாளீசுவரர் கோயில்
கோவிலூர்



நகரச் சிவன் கோயிலும் - ஊருணியும்
கோவிலூர்

அம்மன் சன்னிதி கோஷ்டங்களின் மேலும் யோக நரசிம்மர், அருள் பாலிக்கும் அம்மன், அன்னை மகேசுவரி, வேணுகானம் இசையில் மயங்கிய அரவமும் - ஆநிரையும், காளிங்க நர்த்தனன், மயிலேறும் பெருமான், மூஷிக வாகனன், அன்னை பராசக்தி ஆகிய தெய்வச் சிலைகளைக் காணலாம்.

சுவாமி கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகிய புறச்சுவர்களின் அரைத் தூண்களின் கால்பட்டையில் சில சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அர்த்தமண்டபத்தைச் சுற்றி அயோத்தி அண்ணலை வணங்கும் அனுமன், அனுமனை நோக்கும் இராமபிரான், பணிந்து வணங்கும் தவமுனிவர், நீலோற்பலம் ஏந்திய அன்னை, கொடிக்கருக்கைப் பற்றி நிற்கும் யாளி, நீலமேனி நெடியோன், வில்லேந்தி வணங்கும் இலக்குவன், வேணுகோபாலன் ஆகியவை உள்ளன.

கருவறை அரைத் தூண்களில் இடம்புரி விநாயகர், நவநீதகிருஷ்ணன், திருமால், கண்ணப்பன், ரிஷபாரூடர், தண்டாயுத பாணி, ரிஷபவாகனதேவர், வாமனன், திரிவிக்ரமன், பரசுராமர், இராமபிரான், காளிங்க நர்த்தனன், மச்சாவதார மூர்த்தி, கஜேந்திர மூர்த்தி, ஆடையற்ற அணங்கு, சிவகணம், கருடாழ்வார், திரிபங்கத்தில் தோன்றும் தேவி, மயிலேறும் முருகன், மலரேந்திய வள்ளி, தண்டாயுத பாணி ஆகியவை இடம் பெற்றுள்ளன.

மகா மண்டபத்தின் புறச்சுவர் முழுவதும் அரைத்தூண்களில் அழகிய அணங்கு, சீறிப் பாயும் யாளி, ஒயிலாக நிற்கும் பேரழகி, இலிங்கத்தைத் தூக்கி வரும் அடியார், அமர்ந்துள்ள சிம்மம், இராமன் - இலக்குவன், அனுமன், மிதிலைச் செல்வி, உத்குடி ஆசனத்தில் இராமபிரான், அனுமன், இரண்ய சம்ஹாரமூர்த்தி, காளிய கண்ணன், வேணு கோபாலன், ஆடும் பெருமான், சிவகாமசுந்தரி, கால்மாறி ஆடும் கற்பகம், ஒற்றைக் காலில் தவம் புரியும் முனிவன், தாருகாவனப் பத்தினி, பிச்சாடனர், நர்த்தன விநாயகர், தாமரை மலரேந்திய சூரியன், கூத்தாடும் பெருமான், உமை, மணிவாசகப் பெருமான், அச்சம் தரும் பைரவமூர்த்தி, தவம் புரியும் மாமுனிவர், அல்லி மலரேந்திய அணங்கு, மயில்வாகனர் ஆகிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

அவ்வாறே அம்மன் சன்னிதி அரைத்தூண்களிலும் அங்குசமேந்தி நிற்கும் அன்னை, ஒற்றைக் காலில் தவம் புரியும் மாமுனிவர், ஒயிலாகத் தோன்றும் அணங்கு, காளிய கண்ணன், துவார சக்தி, கமண்டலம் ஏந்திய மாமுனிவன், வில் உடைக்கும் அயோத்தி ராமன், காவல் தெய்வமான ஜெயை, விஜயை ஆகியவை அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலின் மற்றுமொரு சிற்பச் சிறப்பாக நந்தி பீடத்தைக் கூறலாம். முக மண்டபத்தின் முன்புறம் நடுவில் நான்கு திசை நோக்கி

நான்கு சிம்மங்கள் அமர்ந்திருக்க, அதன் தலைமீது கல்பீடம் அமைக்கப்பட்டு அதன்மேல் நந்தியம்பெருமான் அமர்ந்திருக்கிறார். இவ்வாறு நான்கு சிம்மங்கள் தாங்கும் நந்தியை தமிழகத்தில் வேறு எங்கும் காண்பது அரிது. எழிலார்ந்த இக்கோயிலை உருவாக்கியவர்கள் தேவகோட்டை ஸ்தபதி வயி. மகிஷவனம் ஆச்சாரி, செல்லக்கண்ணு ஆச்சாரி, ம.வைத்தியநாத ஆச்சாரி ஆவர்.

இக்கோயிலின் முதல் திருப்பணி கி.பி. 1800-1850 இடைப்பட்ட காலத்தில் நடந்திருக்கலாம். 1949-இல் இரண்டாம் திருப்பணி நடந்துள்ளது. மூன்றாம் திருப்பணி 1974 - இல், நான்காம் திருப்பணி 1988 - இல் நடந்துள்ளது. இக்கோயில் கொங்கண சித்தரோடு தொடர்பு கொண்டது என்பதால் இராஜகோபுர நிலைவாயில் பக்கங்களை **18 சித்தர்கள்** அழகு செய்கின்றனர். நகரத்தார்கள் சித்தர்களோடு இராமகிருஷ்ண **பரமஹம்சர், விவேகானந்தர், ரமணர்** ஆகியோர்களுடைய உயர்ந்த நிலையை உணர்ந்து அவர்களையும் இங்கே செதுக்கியுள்ள பாங்கு பாராட்டத்தக்கது.[1]

3. வயிரவன் கோயில்:

கலியுகம் 3813 இல் கொடுக்கப் பெற்றது (கி.பி. 712)

இறைவன் - வளரொளி நாதர்

இறைவி - வடிவுடை அம்மை.

இத்திருக்கோயில் சிவகங்கை மாவட்டத்தில், காரைக் குடியிலிருந்து குன்றக்குடி வழியாக மதுரை செல்லும் சாலையில் 15கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அசுரர்களை அழித்த சிவ பெருமான் வைரவக் கோலம் பூண்டு இருந்த இடம் எனத் தல புராணம் கூறுகிறது.[2] எனவே இங்கு அம்மன் சன்னிதி அமைய வேண்டிய இடத்தில் வயிரவருக்குத் தனிச்சன்னிதி அமைக்கப்பட்டு சிறப்பாகத் திகழ்கிறது.

இத்தலத்தில வயிரவ மூர்த்தி சிறப்புடன் வழிபடப் பெறுகிறார். இவருக்கு இங்கு மூலவர் திருவடிவமும், உற்சவர் திருவடிவமும் உள்ளன. மூலவருக்குத் தனிக் கருவறை உள்ளது. இவரை **மார்த்தாண்ட வயிரவர்** என்றும் **வடுக வயிரவர்** என்றும் புராணம் கூறும். கல்வெட்டுக்கள் **திருமயான தேவர்** என்றும் **கபால வயிரவர்** என்றும், **வயிரவ சாமியார்** என்றும் குறிக்கக் காண்கிறோம். வயிரவன் கோயிலைக் குலமரபுக் கோயிலாகக் கொண்டுள்ள நகரத்தார்கள் வாழும் ஊர்களின் எண்ணிக்கை 58 ஆகும். இவ்வூர்களில் இக்கோயில் பிரிவுகளைச் சார்ந்த நகரப்புள்ளிகள் சுமார் 5500 க்கும் மேலாக

1. மா.சந்திரமூர்த்தி, மாத்தூர் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988, பக், 63 – 64.
2. விநடராச கவிராயர், வயிரவன் கோயிற் புராணம், ஊ.புஷ்பரத செட்டி அண்டு கம்பெனி, சென்னை, 1895.

வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இத்தலத்தில் உறையும் சிவ பெருமானைத் தங்கள் குலமுதல்வனாக உடையவர்கள்.

வயிரவமூர்த்தி மீது மாறாத பற்றும் பக்தியும் உடையவர்கள். எனவே இவ்வூர் **வயிரவன் பட்டி** என்றும், இக்கோயில் **வயிரவன்கோயில்** என்றும், ஊருணி **வயிரவ தீர்த்தம்** என்றும் அழைக்கப்படுகிறது. இறைவி வடிவுடையம்மை மீது பிள்ளைத் தமிழ் பாடப்பெற்றுள்ளது.[1] இக்கோயில் மூன்று உட்பிரிவுகளை உடையது.

பிரிவுகள்

(1) கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்திருவான வீரபாண்டியபுரத்தில், சிறுகுளத்தூருடையார். இதில் உட்பிரிவுகள் பெரிய வகுப்பு, தெய்யனார் வகுப்பு (தெய்வ நாயகர் வகுப்பு), பிள்ளையார் வகுப்பு,

(2) கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்திருவான வீரபாண்டியபுரத்தில், கழனிவாசலுடையார்.

(3) கேரளசிங்க வளநாடாகிய ஏழகப் பெருந்திருவான வீரபாண்டிய புரத்தில், மருதேந்திரபுரமுடையார்.

கட்டடமும் கலையும்:

இத்தலம் வயிரவரின் மகிமைப் பெற்றத்தலம். பொதுவாகச் சிவாலயங்களில் அட்ட பரிவார தெய்வங்களின் ஒன்றான பைரவர் இத்தலத்தில் சிறப்புப்பெற்று விளங்குவதால் **வடுகநாதபுரி, வடுக நாதபுரம், வடுகன்மூதூர், வயிரவன்நகர், வயிரவமாபுரம்** என்றெல்லாம் அழைக்கப்பட்டதை வயிரவன் கோயில் புராணம் கூறுகிறது. பாண்டி நாட்டிலுள்ள **அஷ்ட பைரவர்** தலத்தில் இத்தலம் **இதயஸ்தானமாக** விளங்குகிறது. எனவே இத்தலத்தில் அம்மன் சன்னிதி அமைய வேண்டிய இடத்தில் வயிரவர் சன்னிதி அமைந் துள்ளது. இத்தலத்திற்குரிய தீர்த்தமும் பைரவர் பெயரால் **வயிரவத் தீர்த்தம்** என அழைக்கப்படுகிறது. **ரூப மண்டனம்** என்னும் நூல் இவரை செபித்து மகிழ்வுடன் எல்லா விருப்பங்களையும் நிரம்ப பெறலாம் எனக் கூறுகிறது.[2]

தேவர்கள் வேண்டுகோளின்படி பைரவர் தம் சூலத்தால் ஊன்றி இத்தீர்த்தத்தை ஏற்படுத்தியதாகப் புராணம் கூறுகிறது. இத்தீர்த் தத்தின் முக்கியச் சிறப்பு **இதில் நீராடியவர்கள் மகப்பேற்றை அடைவார்** என்பதே. இக்கோயில் பைரவர், கல்வெட்டுகளில்

1. வி.நடராச கவிராயர், வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ் கலாரத்நாகரம், சென்னை, 1894.
2. எஸ். நாராயணசுவாமி, படிமத்திருக்கோலங்கள், (பிரதிமா லட்சணம்) திருவாவடுதுறை ஆதினம், 1998, பக், 66.

திருமயானதேவர் எனக் குறிக்கப்படுகிறார். இக் கோயிலின் மற்றுமொரு சிறப்பு இக்கோயிலின் தலத்தரு **அழிஞ்சில்** மரமாகும். இம்மரத்தின் விதைகள் மரத்திலிருந்து தரையில் உதிர்ந்ததும் மீண்டும் மரத்திடமே சென்று ஒட்டிக் கொள்ளும். நகர ஒன்பது கோயில்களிலும் இத்தலத்தில் மட்டுமே **தீர்த்தமும்**, **மரமும்** சிறப்புப் பெற்று உள்ளது. **மூர்த்தி, தலம், தீர்த்தம்** மூன்றாலும் சிறப்புப் பெற்றது வயிரவன் கோயில்.

இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், நடராஜர்சபை, முன்மண்டபம், வயிரவர் சன்னிதி, பள்ளியறை, அம்மன் சன்னிதி, நந்தி மண்டபம், பலிபீடம், கொடிமரம், மேல் சுற்றுப் பிரகாரம், திருச்சுற்றுமாளிகை, பரிவார ஆலயங்கள், யாகசாலை, வெஞ்சன அறை, கோயிற்கிணறு, மடைப்பள்ளி, திருமாலைக் கட்டும் மேடை, இராஜகோபுரம், திருச்சுற்றுமதில், இரண்டாம் திருச்சுற்று, வயிரவர் பீடம், வாகன அறை, அலங்கார மண்டபம், முகப்பு மண்டபம், வெளிப்பிள்ளையார் சன்னிதி, முப்பலி கருப்பர் சன்னிதி, கோயில் ஊருணி, வயிரவத்தீர்த்தம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது.

கோயிலினுள் விநாயகர், சுப்பிரமணியர், மகாலட்சுமி, சண்டி கேசுவரர், பைரவர், சூரியன், சந்திரன் ஆகிய பரிவார தெய்வங்களுக் குரிய சிற்றாலயங்களும், கருவறை - அர்த்தமண்டப தேவ கோட்டங் களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை ஆகிய கோட்ட தெய்வங்களும் முறையாக அமைக்கப் பட்டுள்ளன.

மகாமண்டப வடதிசையில் நடராஜர் சபை தெற்கு நோக்கி அமைந்துள்ளது. முகமண்டபத்தின் வடபுறம் வயிரவர் சன்னிதி, பள்ளியறை, அம்மன் சன்னிதி ஆகியவை தனித்தனியாகத் தென்திசை நோக்கி அமைக்கப்பட்டுள்ளன. கருவறையின் வடபுறம் உள்ள சண்டிகேசுவரர் சிற்றாலயம் தனிச் சிறப்புடையது. இது மகாபலிபுரத்தல் உள்ளது போல் ஒற்றைக் கற்றளியாகும். இவ்வூருக்கு அருகே உள்ள வயிரவன்பட்டி மலையிலிருந்து ஏறத்தாழ 20 டன் எடையுள்ள பெருங்கல்லை வெட்டி எடுத்து வந்து அதனை குடைந்து சிற்றாலயம் எழுப்பியுள்ளனர். அந்தக் கல் எடுக்கப்பட்ட பள்ளம் இன்றும் **சண்டிகேசுவரர் பள்ளம்** என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகிறது.[1] அருகில் இக்கோயிலின் தலமரமான அழிஞ்சில்[2] கல்லிலே வடிக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் திருச்சுற்று மாளிகைப் பத்தியில் அறுபத்து மூன்று நாயன்மார்கள், தொகையடியார் ஒன்பதின்மர், கன்னி மூலை

1. மா.சந்திரமூர்த்தி, வயிரவன் கோயில், இரண்டாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003, பக் – 36.
2. தே. சொக்கலிங்கம், வயிரவன் கோயில் அழிஞ்சில், குட நீராட்டு விழாமலர், 1996.

கணபதி, பழைய தட்சிணாமூர்த்தி, காசி விசுவநாதர், விசாலாட்சி, ஆறுமுகன், வள்ளி, தெய்வயானை, சரசுவதி, பழைய வடிவுடை அம்மன், வயிரவமூர்த்தி, நவக்கிரக மேடை ஆகிய சிற்பவடிவங்கள் அமைந்து விளங்குகின்றன.

இரண்டாம் திருச்சுற்று பிரகாரத்தில் தென்புறம் வயிரவர் பீடமும், மேற்கே வாகன அறையும், வடகிழக்குப் பகுதியில் அலங்கார மண்டபமும் உள்ளன. வெளி மதிலின் வாயில் வடக்கே வெளிப்பிள்ளையார் கோயிலும், தெற்கே முப்பலிக் கருப்பர் கோயிலும் உள்ளன. முப்பலிக் கருப்பர் முன்புறம் அவர் வாசம் செய்யும் இலுப்பை மரமும், கருப்பர் பீடமும் உள்ளன.

இராஜகோபுரத்திற்கு எதிரே மிகவும் விசாலமாகக் கோயில் ஊருணி அமைந்துள்ளது. கோயிலின் வெளியே தென்கிழக்குப் பகுதியில் வயிரவ தீர்த்தம் அமைந்துள்ளது.

ஏனைய நகரக் கோயில்கள் போன்றே இங்கும் கருவறைப் புறச்சுவர் மற்றும் கபோதகக் கூடுகளில் சைவ-வைணவ சிற்பங்கள் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. அவ்வாறே கோட்ட தெய்வங்களும், பரவார தெய்வங்களும், செப்புத்திருமேனிகளும் உரிய ஆடை அணிகலன்கள், முத்திரைகள், கோலங்கள் அமையப் பெற்று அழகுடன் திகழ்கின்றன. **வேறு தலங்களில் காணமுடியாத சிறப்பாக இத்தலத்தில் வயிரவருக்கும் உற்சவ படிமம் உள்ளது.** ஐப்பசி மாதத்தில் நடைபெறும் **சம்பா சஷ்டி** விழாவின் போது **மணிகாசுரன் - மல்லாசுரன்** ஆகிய இரு அசுரர்களை அழிக்க வயிரவர் நந்தியின் மேல் எழுந்தருள்வார். சம்பா சஷ்டி விழா திருக்கார்த்திகையன்று தொடங்கி 21 நாட்கள் சிறப்பாக நடைபெறும். விழா நிறைவுநாள் நகரத்தார்களுக்கே உரிய பிள்ளையார்நோன்பு திருநாள் ஆகும். அன்று இக்கோயில் நகர விடுதியில் வரும் நகரத்தார் அனைவருக்கும் இழையெடுத்துக் கொடுத்து விருந்தளிப்பது வழக்கம். நகரக்கோயில்களில் பிள்ளையார் நோன்பு இங்கு மட்டுமே சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது![1]

மேலும் அர்த்தமண்டபத்தின் வாயிலில் தென்திசையில் துவார கணபதி பத்ம பீடத்தின் மேல் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கிறார். வடதிசையில் **ஆகாசபைரவர்** உருவமின்றி மேடை மீது பீடமாகக் காட்டப்பட்டுள்ளார். உருவமற்ற இப்பீடத்தை ஆகாச பைரவராக வழிபடுகின்றனர். பொதுவாக இவ்விடம் துவார சுப்பிரமணியருக்கு உரியது. இத்தலத்தின் சிறப்புக் கருதி இங்கு ஆகாச பைரவரைப் பிரதிஷ்டை செய்துள்ளனர்.

மகாமண்டபத்தின் புறச் சுவர்களை அலங்கரிக்கும் அரைத் தூண்களின் இடையிடையே காணப்படும் சிற்பங்களில் தாடக

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 415.

முத்திரையுடன் தோன்றும் **விஸ்வரூப அனுமனின் சிற்பமும்,** வணங்கி நிற்கும் நிலையில் **இராமனின் சிற்பமும்** குறிப்பிடத்தக்க வகையில் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஒன்பது நகரக் கோயில்களில் இங்கு மட்டுமே இத்தகைய விஸ்வரூப அனுமனின் சிற்பவடிவினையும், வணங்கும் இராமனையும் காண்கிறோம். மற்றும் குறிக்கத்தக்க சிற்பமாக நர்த்தன வயிரவரைக் கூறலாம். இவ்வுருவம் இரு கால்களையும் அசுரன் மீது ஊன்றி மிதித்த வண்ணம் பத்துக் கைகளில் உடுக்கை, அனல், அங்குசம், பாசம், அம்பு, வில், கத்தி, கேடயம், திரிசூலம், கபாலம் ஆகிய கொடிய ஆயுதங்களைப்பற்றி வீசியாடும் நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. இவரது தலையில் சடைமகுடமும், அனல் மகுடமும் இணைந்து நிற்க பக்கங்களில் விரிசடையினைக் காண்கிறோம். இவ்வயிரவ மூர்த்தி வலது முன் கையால் சூலத்தைப் பற்றி ஓங்கிய கரத்தோடு அசுரனை அழிக்கும் பாவனையில் சீற்றம் தொனிக்கும் முகப் பொலிவோடு விளங்கக் காண்கிறோம். இவரின் இரு பக்கங்களிலும் இரு முனிவர் பணிந்து போற்றும் நிலையில் காட்டப் பட்டுள்ளனர்.

வயிரவன்பட்டி கோயிலின் சிற்பங்களையும், செப்புத்திரு மேனிகளையும் அடுத்து நாம் காணவேண்டிய கலைச் செல்வங்களாக இக் கோயிலுக்குரிய மரவாகனங்களைக் குறிப்பிடலாம். இக்கோயிலில் பெரிதும் சிறிதுமாக 11 வாகனங்கள் உள்ளன. மரத்தில் அழகிய சிற்பவேலைப்பாடுகளும், சித்திர நுணுக்கங்களும் கொண்டு இவை செய்யப்பட்டுள்ளன.

சிறிப்பாயும் சிம்ம வாகனமும், செம்மாந்து நிற்கும் காளை வாகனமும், கம்பீரமான யானை வாகனமும், காண்போர் வியக்கும் இராவண - கைலையங்கிரி வாகனமும், காண்பதற்கரிய கற்பக விருட்ச வாகனமும், கவின்மிகு காமதேனு வாகனமும், அழகு நடையயிலும் அன்ன வாகனமும், தோகை விரித்த மயில் வாகனமும், உருவில் சிறிய மூஷிக வாகனமும் பாங்குற அமைந்து காண்போரைக் களிப்பில் ஆழ்த்துகின்றன. இவை நகரத்தார் காலத்திய மரச்சிற்பங்களுக்குச் சீரிய சான்றாகத் திகழ்கின்றன. இதைத்தவிர சம்பா சஷ்டியின் போது பங்கு கொள்ளும் அசுரனது உருவும், அசுரனை சம்கரிக்க எழுந்தருளும் நந்தீஸ்வரர் வாகனமும் நேரில் காணத்தக்கது. பள்ளியறையிலுள்ள கேடக ஊஞ்சலும், பல்லக்கும் மரவேலைப்பாடும், சித்திர வேலைப்பாடும் மிக்கதாகத் திகழ்கின்றன.

காமதேனு வாகனம்

இது இக்கோயிலில் உள்ள அரிய வாகனங்களில் ஒன்று. இது பசுவின் கொம்பையும், பெண்ணின் முகத்தையும், பின்னிய நீண்ட சடையையும் கொண்டு பறவையின் இறக்கையுடன் கூடிய மேலுடலையும், மயிலின் தோகையையும், பசுவின் கீழுடலையும் ஒருருவில் கொண்டு வனப்புடன் காட்சியளிக்கிறது. சிவப்பு, மஞ்சள்,

கருப்பு, கருநீலம் ஆகிய வர்ணங்கள் தீட்டப்பட்டு கழுத்திலும், மார்பிலும் கண்ணாடிக்கற்கள் பதித்த அட்டிகையும், காசு மாலையும் அலங்கரிக்கக் காதுகளில் கர்ணபத்திரமும், ஒன்னப்பூவும், மூக்கில் புல்லாக்கும், நெற்றிப்பட்டமும், தலையில் சூரிய - சந்திரப் பிறைகளும், பின்சடையில் திருகுப்பூ ஆகியவை காமதேனுவைக் கவினுற அலங்கரிக்கின்றன. இக்கோயில் விதானத்தில் தீட்டப்பட்டுள்ள காமதேனுவின் ஓவியங்களுடன் இது ஒப்பிடத் தக்கது.[1]

சிம்ம வாகனம்

இக்கோயிலில் உள்ள சிம்ம வாகனம் கால்நகங்களைப் பீடத்தில் ஊன்றிப் பற்றிய நிலையில் வலுவான கால்களும், சிங்கப் பற்களோடு திறந்த வாயும், புடைத்த நாசியும், கற்கள் பதித்த புருவமும் தலையைச் சுற்றிலும் அடர்ந்த பிடரிமுடியும், நீண்ட உடல்வாகும், மேல்நோக்கிச் சுருண்ட வாலும் கொண்ட ஆண் சிம்மத்தின் கம்பீர உருவம் இது. கார்த்திகை மாதம் சம்பாசஷ்டி உற்சவத்தில் அம்மனை இவ்வாகனத்தில் எழுந்தருளிவிப்பது வழக்கம்.

கைலையங்கிரி வாகனம்

பண்டைய நாளில் நடந்த பிரம்மோற்சவத்தின் போது இதில் சிவபெருமானை எழுந்தருளச் செய்வர். இக்கைலையங்கிரி வாகனம் மூன்று அடுக்காகக் காட்சியளிக்கிறது. முதல் அடுக்கின் நான்கு திசைகளிலும் சிவபெருமான், கஜலட்சுமி, குழல் ஊதும் வேணுகோபாலன், வீணை மீட்டும் கலைவாணி, அக்கமாலை - கெண்டி பற்றி நிற்கும் நான்முகன், உடுக்கையும் - திரிசூலமும் பற்றி நிற்கும் வயிரவமூர்த்தி, ஆறு தலைகளும் பன்னிரு தோள்களும் உடைய ஆறுமுகப் பெருமான், யோகாசனத்திலும் வீராசனத்திலும் அமர்ந்துள்ள முனிவர்கள் ஆகியோர்களின் சிற்பங்கள் 10 செ.மீ உயரத்தில் நுட்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது அடுக்கில் மரத்தின் முன்நின்று தவம் புரியும் முனிவர், இரு தேவியர் சூழ முருகப்பெருமான், புள்ளிமானை வேட்டையாடும் பெண், மான் வேட்டையாடும் கானவர், ஆகிய சிற்பங்கள் 12 செ.மீ உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது அடுக்கில் தேவலோக விருட்சம், மரத்தின் மீது ஒற்றைக் காலில் தவம் புரியும் முனிவர், முனிவரை விரட்டும் புலி, அப் புலியை ஈட்டியால் குத்தும் வீரன் ஆகிய வடிவங்கள் 15 செ.மீ. உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கலையங்கிரியின் நாற்புறமும் எட்டு முனிவர்களும், எட்டு நாகங்களும், எட்டு யானைகளும்,

1. மா.சந்திரமூர்த்தி, வயிரவன் கோயில், இரண்டாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003, பக் – 145.

எண்திசைக் காவலர்களும், நான்கு சிம்மங்களும் கைலையங் கிரியைத் தாங்கி நிற்கின்றன. இவற்றின்கீழ் பெரிய ஆமை வடிவில் **கூர்மபீடம்** காட்டப் பட்டுள்ளது.

இக்கைலையங் கிரியை இலங்கை வேந்தன் இராவணேசுவரன் இருகைகளையும் உயர்த்திக் கம்பீரமான தோற்றத்துடன் மண்டியிட்டுத் தூக்க முயலும் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. 10 தலைகளும், 20 கைகளும் கொண்டு முரட்டு மீசையும், கோரப் பற்களும், பருத்த விழிகளும் கொண்டு வீரச்சுவை பொலியக் காட்சியளிக்கிறான். சாமகானம் இசைக்கும் வீணையை இவனது முன்னிரு கரங்கள் ஏந்தியுள்ளன. ஏனைய 18 கைகளில் அம்பு-வில், வாள்-கேடயம், அங்குசம்-அக்கமாலை, கதாயுதம்-ஊதும் கொம்பு ஆகியவற்றைப் பற்றி ஏனைய கரங்களால் கைலையை ஏந்தியுள்ளான். காதுகளில் குண்டலம், கழுத்தில் சிம்ம முகப்புடைய கண்டிகையும், அட்டிகையும், தோள்களில் தோள்வளையும், கால்களில் வீரக்கழல், தண்டையும், சிலம்பும் அலங்கரிக்க, முகத்தில் திருநீறு பொலிய சிவபக்தனாகக் காட்சியளிக்கிறான். மிகச்சிறந்த மரவேலைப்பாடு மிக்க இக்கைலையங்கிரி வாகனத்தைச் செட்டிநாட்டுப் பிற பகுதியில் காண்பதரிது. சம்பா சஷ்டி விழாவின் போது ஆறுநாள் கைலாச வாகனத்தில் வயிரவரை எழுந்தருளச் செய்து தீர்த்தம் வழங்குதல் வழக்கம்.

காளை வாகனம்

இக்கோயிலில் பெரிதும் சிறிதுமாக மூன்று காளை வாகனங்கள் உள்ளன. பெரிய காளை வாகனம் இரண்டும் எடுப்பான தோற்றத்தோடு கழுத்தைச் சற்று திருப்பிய வண்ணம் காணப்படுகிறது. கொம்பின் மீது குப்பியும், மூக்கணாங்கயிறும், கழுத்தில் இரட்டை வடக்கயிறும், சதங்கையும், முதுகில் விரிப்பும் காலில் சதங்கையும் அலங்கரிக்கின்றன. இவற்றில் பெரிய ரிஷபம் இறைவனுக்கும், அடுத்த வாகனம் இறைவிக்கும் விழாக்காலங்களில் திருவீதி உலா வர பயன்படுகிறது. மூன்றாவதான சிறிய ரிஷபம் ஆடிப்பூரத்தில் அம்மனை எழுந்தருளச் செய்யப் பயன்படுகிறது.

யானை வாகனம்

இங்குள்ள வாகனங்களில் கம்பீரமாகக் காட்சியளிப்பது யானை வாகனம். கூர்மையான இரு தந்தங்களையும், பெருத்த மத்தகத்தையும், பக்கங்களில் விரிந்த காதுகளையும், வலிய உடலையும் பெற்றுத் திகழும் இம்மத யானை தன் துதிக்கையால் பாகனை வளைத்துக் கீழே கிடத்திய நிலையில் காட்டப்பட்டுள்ளது. யானையின் கூர்மையான கண்களும், அதன் வேகத்தைக் காட்டும் கால்களின் அசைவும், கீழே மண்டியிட்டு, கையில் அங்குசத்தோடு செயலற்றுக் கிடக்கும் பாகனும் மிக இயற்கையாக இச்சிற்பத்தில் காண்கிறோம்.

மயில் வாகனம்

உடல் முழுவதும் பச்சை வண்ணத்திலும், மென்மையான இறகுகள் வெண்மை நிறத்திலும், பக்க இறக்கைகள் சிவப்பு, பச்சை, வெள்ளை, தங்கநிறம் ஆகியவை கொண்டு காட்சியளிக்கிறது. இதன் கால்கள் கொடிய நாகத்தை மிதித்த வண்ணம் காணப்படுகிறது. உலாவின் போது இதன்மேல் சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை ஆகிய உற்சவ மூர்த்தங்கள் எழுந்தருள்வது வழக்கம்.

நந்தீஸ்வரர் வாகனம்

சம்பா சஷ்டியின் போது அசுரர்களை அழிக்க எழுந்தருள்வார். வலது காலை மண்டியிட்டு இடதுகாலை ஊன்றி எண்தோள்களில் ஆயுதம் ஏந்திப் போர்க்கோலத்தில் காட்சியளிக்கிறார். ரிஷபத்தின் முகமும், மானிட உடலும் பெற்று முன்னிரு கரங்களில் அம்பும் வில்லும் ஏந்தியுள்ள நந்தியம் பெருமானின் உடல் முழுவதும் தங்க வர்ணம் பூசப்பட்டு, ஆங்காங்கே வெள்ளை, சிவப்புக் கற்கள் கொண்டு பதிக்கப்பட்டு அழகுடன் காட்சியளிக்கிறது.

மூஷிக வாகனம்

விநாயகரின் வாகனமான மூஷிகம் நீண்ட உடல்வாகும், நீண்ட வாலும் கொண்டு தலையை உயர்த்தி நிற்கிறது. கழுத்தைச் சுற்றிலும் சலங்கைவார் அலங்கரிக்க, மேலுடலில் வேலைப்பாடு மிக்க விரிப்பும், கால்களில் காப்பும் அணிந்து மூஷிகம் காணப்படுகிறது. இங்குள்ள வாகனங்களில் உருவில் சிறியது இதுவே. இவ்வாகனங்கள் அனைத்தும் கிபி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் செய்யப்பட்டுள்ளது. வயிரவன் பட்டி நகரத்தாரால் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாகனங்களின் பீடங்களில் வயி. வ. என்ற முக விலாசங்கள் எழுதப்பட்டுள்ளன.

இக்கோயில் சுவர் ஓவியங்கள் நகரக்கோயில்களில் தனிச் சிறப்பு மிக்கவை. தலபுராணம் முழுவதும் கோயில் விதானங்களில் 37 தொடர் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. தேவேந்திரன் வயிரவன் பட்டிக்கு வந்தது, இலிங்கத்தை வழிபட்டது, வயிரவரின் தோற்றம், அசுரனுடன் நடந்த போரில் வயிரவர் கும்பனை வென்றது முதலிய தலபுராண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. சுரதபதி என்னும் தேவரடியாள் பற்றிய கிளைக்கதையும் ஓவியமாக வரையப்பட்டுள்ளது.[1] தென்மேற்குக் கூரையில் இராமன் பிறப்பு முதல் அனுமன் சீதையைக் காண்பது வரையான 43 இராமாயணக் காட்சிகள் தொடர் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. சமயம் சார்ந்த ஓவியங்கள் மட்டுமின்றி வாழ்வியல் ஓவியங்களும் இங்கு உள்ளது குறிப்பிடத்தக்கது. இவை கி.பி. 19 - ஆம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியைச் சார்ந்தவை.

1. டாக்டர். வ. தேனப்பன், ஒன்பது நகரக்கோயில்கள், தேன்வள்ளியம்மை பதிப்பகம், தேவகோட்டை, 1990, பக் – 141.

மேலும் நகர விடுதியின் மைய மண்டபத்தில்மேல் மாடங்களில் தசாவதாரக் காட்சிகளும், மகாபாரதக் காட்சிகளும் அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பெற்றுள்ளன. இவை கி.பி. 19 - ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியைச் சார்ந்தவை.[1]

இக்கோயில் கி.பி. 1894, 1928, 1959, 1982 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்குக் கண்டுள்ளது. அடுத்து 1996 - ஆம் ஆண்டு இராஜ கோபுரம், சுவாமி, அம்மன், வயிரவர் விமானங்கள், மற்றும் கோயிலின் உட்புறம் பழுது பார்க்கப்பட்டுத் திருப்பணி நடை பெற்றுள்ளது.

4. இரணியூர்க் கோயில்

கலியுகம் 3815-இல் கொடுக்கப் பெற்றது. (கி.பி. 714)

இறைவன் - ஆட்கொண்ட நாதர்

இறைவி - சிவபுரந்தேவி

இத்திருக்கோயில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக் குடியிலிருந்து பிள்ளையார்பட்டி, வயிரவன் பட்டி வழியாக விராமதி செல்லும் சாலையின் இடப்புறம் பிரியும் கிளைச் சாலையில் 24 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நரசிம்ம அவதாரத்தில் இரணியனைக் கொன்ற பாவம் நீங்க திருமால் வழிபட்ட தலம் எனத் தலப்புராணம் கூறுகிறது.

இக்கோயிலைச் சார்ந்த நகரத்தார்கள் 35 ஊர்களில் வாழ்ந்து வருகிறார்கள். மொத்த புள்ளிகள் 3057. இளையாத்தகுடிக் கோயிலைச் சார்ந்த திருவேட்பூருடையார் என்னும் பிரிவினரான சகோதரர்களில் மூத்தவர் வழியினர் இரணியூர்க் கோயிலைத் தமக்குரிய தனிக் கோயிலாகக் கொண்டு வாழலாயினர். இளையவர் வழியினர் பிள்ளையார்பட்டிக் கோயிலைத் தமக்குரிய தனிக் கோயிலாகக் கொண்டு வாழலாயினர். எனவே இவ்விரு கோயிலாரும் தமக்குள் திருமண சம்பந்தம் செய்துக் கொள்வதில்லை. இவர்கள் எழுதும் இசைவுப் பிடிமானத்திலும் கீழ்க்கண்டவாறே பிரிவு எழுதப்படுவதைக் காண்கிறோம்.

பிரிவுகள்

(1) கல்வாசனாட்டில் இளையாத்தன் குடியான குலசேகர புரத்தில், இரணியூர் மருதங்குடியான இராசநாராயணபுரத்தில், இரணியூர்த் திருவேட்பூருடையார்.

1. மா.சந்திரமூர்த்தி, வயிரவன் கோயில், இரண்டாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003, பக் – 154 – 155.

கட்டடமும் கலையும்

நகரத்தார்களின் குலமரபுக் கோயில்கள் ஒன்பதில் இரணியூர் ஒன்றாகும். இரணியூர் என்பது இன்றைய வழக்குப் பெயராக இருப்பினும் பண்டையநாளில் **இரணி, இரணியம், மருதங்குடி, இராச நாராயணபுரம்** என்ற பல பெயர்களில் இவ்வூர் அழைக்கப்பட்டு வந்துள்ளது.

இரணியூர் 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மை வாய்ந்த ஊராகும். கி.பி. 4-5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தொன்மையான முதுமக்கள் தாழிகள் இங்குக் கிடைத்துள்ளன. கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய அரசை ஆட்சி புரிந்தவன் **ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன்** எனும் பாண்டிய மன்னன். புகழ் பெற்ற சித்தன்ன வாசல் ஓவியங்கள் இம்மன்னன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவை. இம்மன்னன் மட்டுமின்றிக் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டின் பாண்டிய மன்னர்களான சுந்தர பாண்டியன், குலசேகர பாண்டியன், வீரபாண்டியன் ஆகியோரது வரலாற்றுத் தொடர்பினையும் இவ்வூர் பெற்று விளங்குகிறது. பின்னர் கி.பி.17-ஆம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்கள் ஆளுகையிலும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சிவகங்கை மன்னர்கள் ஆளுகையிலும் இரணியூர் இருந்து வந்துள்ளது.[1] இம்மன்னர்கள் கோயிலுக்கு அளித்த நிவந்தங்களைப் பற்றிய 10 கல்வெட்டுகள் இரணியூரிலிருந்து அரசால் படியெடுக்கப்பட்டுள்ளன. (இன்று கல்வெட்டுகள் கோயிலில் இல்லை). பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் இவ்வூர் இறைவன் **ஆட்கொண்டஈசுவரமுடைய நாயனார்** என்றும், **ஆட்கொண்ட ஈசுவரமுடையார்** என்றும் குறிக்கப்பட்டுள்ளார். செப்பேடுகளில் **ஆட்கொண்ட நாதர் கோயில்** என்று பொறிக்கப்பட்டுள்ளது.[2]

இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், அம்மன் சன்னிதி, பைரவர் சன்னிதி, நந்தி, பலிபீடம், கொடிமரம், திருச்சுற்று, திருச்சுற்று மாளிகைப்பத்தி, பரிவார சிற்றாலயங்கள், வாகன அறை, உற்சவ மண்டபம், பள்ளியறை, கருவூலம், யாகசாலை, வியஞ்சன அறை, மடைப்பள்ளி, அலங்கார மண்டபம், லட்சுமி மண்டபம், இராஜகோபுரம் என்ற அமைப்பினைக் கொண்டு விளங்குகிறது.

தேவகோட்டத்தில் புதுமை

ஆட்கொண்டநாதர் கோயிலில் 1944-ஆம் ஆண்டு நடந்த நகரத்தார் திருப்பணியின் போது சுவாமி கருவறை பளபளப்பான

1. மா.சந்திரமூர்த்தி, இரணியூர்க் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990, பக், 4 – 5.
2. மா.சந்திரமூர்த்தி, மேலது, பக், 13.

கறுப்புக் கல்லால் நூதனமாக அமைக்கப்பட்டது. அதனால் புறச் சுவர்கள் சிற்பங்களின்றி எளிமையான கட்டட வேலைப்பாடுகள் கொண்டு விளங்குகின்றன. எனவே தேவகோட்டங்களில் கற்சிலைகளைப் பொருத்தாமல் உலோகச் சிலைகளை வைத்துவிட்டுத் தேவகோட்ட கற்சிற்பங்களைத் திருச்சுற்றுப் பத்தியில் வைத்துள்ளனர். தமிழகத்தில் வேறு எங்கும் காண இயலாத அளவிற்கு இங்கு மட்டுமே விநாயகர், சனகாதி முனிவர்களுடன் தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை ஆகிய உலோக வடிவங்களைத் தேவ கோட்டத்தில் அமைத்துப் புதுமை செய்து புகழ் பெற்றிருக்கின்றனர்.[1] இதைத் தவிர இரு துவாரபாலகர், இரு துவாரபாலகி செப்புத் திருமேனி களையும் இவ்வாலயத்தில் காணலாம்.

கலைப்பாணியில் புதிய முறை

புதிய முறைகளைச் செப்புத் திருமேனியில் மட்டுமின்றிக் கட்டடக் கலையிலும் இவர்கள் காட்டியுள்ளனர். பிற்காலப் பாண்டியர் தமது கட்டடக் கலைப்பாணியில் அதிட்டானத்தில் காட்டிய புதுமையை, நாயக்கர்களுக்குப் பிறகு நகரத்தார்கள் தொடர்ந்து பின்பற்றி வந்துள்ளனர் என்பதற்கு இக்கோயில் அதிட்டானத்தைக் கூறலாம். இங்குப் பத்ம வரியில் உள்ள இதழ்கள் மடித்த நிலையில் நீர்த்தாரையை ஒத்து அமைக்கப்பட்டுள்ளது. இதனை அதிட்டானத்தின் கட்டட அமைப்பில் தனிச் சிறப்பாகக் கூறலாம்.

சாளர அமைப்பும் பகுப்பும்

இங்கு இறை உருவங்களுக்கு அபிஷேகம் செய்யும் நீர், அபிஷேகத் தொட்டியில் சேர்ந்து ஒரு துளை வழியே வெளிப்பட்டுச் சாளரத்தில் விழுந்து வெளியேறிச் சுற்று மதிலுக்கு வெளியே உள்ள பெரிய தொட்டியில் விழுந்து மீண்டும் வெளியேறி இரணிக் கண்மாயை அடைகிறது. இவ்வமைப்பு நகரத்தாரின் திட்டமிட்ட கட்டடக் கலைக்குச் சான்றாகும். ஒன்பது நகரக் கோயில்களிலுமே இம்முறை பின்பற்றப்பட்டிருக்கிறது.

கல் குழாய்கள்

இதே போன்று கோயில் மேல் மட்டத்தில் பெய்யும் மழைநீர் அனைத்தும் கீழே வர சிமெண்ட் (அ) இரும்புக் குழாய் அமைக்கப்படாமல் வெள்ளைக் கல்லாலான கல்குழாய்களை நடுவே துளையிட்டு வைத்துள்ளனர். கல்லாலான இக்குழாய்கள் 4 மீ. உயரமும்; 1.20மீ. சுற்றளவும் உடையது. கல்லாலான

1. மா.சந்திரமூர்த்தி, இரணியூர்க் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990, பக் – 108.

தூண்போன்ற இக்குழாய்கள் பண்டைய சிற்ப வல்லுநரின் திறமைக்குச் சான்றாகும்.[1] இத்தகைய அமைப்பில் இக்கோயிலில் மூன்று கல்குழாய்கள் உள்ளன.

கட்டடக்கலை, வார்ப்புக்கலை மட்டுமின்றி ஆட்கொண்ட நாதர் கோயில் நகரத்தார் கலைப்பாணியில் சிற்பச் செழுமையும் நிறைந்ததாக உள்ளது. இதற்கு உதாரணமாக லட்சுமி மண்டபச் சிற்பங்கள், நவதுர்க்கை மண்டபச் சிற்பங்கள், ராஜகோபுர சிற்பங்கள் ஆகியவற்றைக் கூறலாம்.

அட்டலட்சுமி மண்டபம்

இரணியூர் ஆட்கொண்டநாதர் கோயில் ராஜகோபுரத்தின் முன் புறம் சிறப்புமிக்க **அட்டலட்சுமி மண்டபம்** உள்ளது. இங்குள்ள எட்டுத் தூண்களின் முன்புறம் எட்டுவகை இலட்சுமிகளின் சிற்ப வடிவத்தைக் காணலாம். இவற்றில் சில நான்கு கைகளோடும், சில எட்டுக் கைகளோடும், இன்னும் சில பத்துக் கைகளோடும் காட்டப் பட்டுள்ளன. இச்சிற்பங்களின் தன்மைக்கு ஏற்ப முகப்பொலிவு, கைகளின் எண்ணிக்கை, அதில் உள்ள ஆயுதங்கள், முத்திரைகள் யாவும் உருவத்திற்கு உருவம் மாறுபட்டுத் திகழ்கிறது. இங்குள்ள சிற்ப வடிவங்களையும், ஆடை அணிகளின் தன்மையையும் கூர்ந்து நோக்கினால் செட்டிநாட்டு சிற்பக்கலையை நன்கு அறியலாம். குறிப்பாக அட்டலட்சுமிகளின் இடது மூக்கில் நத்து எனும் மூக்கு அணி காணப்படுகிறது. இது வரிசையாகக் கல் பதிக்கப்பட்ட அமைப்பில் வட்டமாகத் திகழ்கிறது. பொதுவாகப் பண்டைய சிற்பங்களில் பெண்கள் அணியும் மூக்கு அணியைக் காண்பதரிது. விஜயநகரர் காலத்தில் தோன்றிய இம்மரபு செட்டி நாட்டுச் சிற்பங்களில் மிகுந்திருக்கக் காண்கிறோம். பொதுவாகக் கோயிலின் முன்புறம் கோபுர வாயிலை விரிவுபடுத்தும் நோக்கோடு அட்டசக்தி மண்டபத்தை எழுப்புவது விஜயநகரர் - நாயக்கர் கால மரபாகும். இவ்வித அட்டசக்தி மண்டபத்தை மதுரையிலும்,[2] திருப்பரங் குன்றத்திலும்[3] காணலாம். மண்டபத் தூண்களில் தேவியின் எட்டு விதமான திருக்கோலத்தை வடிப்பர். அதே மரபை அடியொற்றி நகரத்தார் எட்டு லட்சுமிகளின் உருவங்களைப் பின்வருமாறு வடித்துள்ளனர்.

1. ஆதிலட்சுமி

மண்டபத்தின் வடதிசைத் தூணில் தென்திசை நோக்கிய முதற் சிற்பமாகக் காணப்படுகிறது. ஆதிலட்சுமியின் நான்கு கரங்களில்

1. மா.சந்திரமூர்த்தி, இரணியூர் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990, பக் – 22.
2. Dr.Miss. Devakunjari, Madurai through the Ages, SAHER, 1979.
3. நாகப்பா. நாச்சியப்பன், திருப்பரங்குன்றம் கோயில், வேற்கோட்டம், 1989.

மேலிரு கரங்கள் தாமரை மலரைப் பிடித்த வண்ணமும், கீழிரு கரங்கள் அபய வரத முத்திரையிலும் விளங்குகின்றன. நின்ற திருக்கோலம்.

2. கஜலட்சுமி

தென்திசை முதல் தூணில் வடதிசையை நோக்கிய வண்ணம் நின்ற திருக்கோலம். நான்கு திருக்கரங்கள். மேலிருகரங்கள் மலர்ந்த தாமரையை ஏந்தியும், கீழிரு கரங்கள் அபய - வரதமளித்தும் அருள்புரிகின்றன.

3. தனலட்சுமி

இவ்வுருவம் வடதிசை இரண்டாவது தூணில் எண் கரங்களோடு நின்ற நிலையில் காட்சியளிக்கிறது. எண் கரங்களில் ஆறு கரங்கள் வில், அம்பு, கத்தி, கேடயம், திரிசூலம், கபாலம் ஆகிய ஆயுதங்களை ஏந்தியுள்ளன. கீழிருகரங்கள் அபய-வரத முத்திரையில் விளங்குகின்றன. வலுவான வில்லைப் பற்றி நிற்கும் இடக்கரத்தில் புறங்கையில் புடைத்து நிற்கும் நரம்பையும், கபாலம் ஏந்திய இடக் கையின் கட்டை விரலின் தசை மடிப்புகளைச் சிற்பி செதுக்கியுள்ள பாங்கு போற்றத்தக்கது.

4. விஜயலட்சுமி

இத்தேவியின் வடிவம் தென்திசையின் இரண்டாவது தூணை அலங்கரிக்கிறது. இவ்வுருவம் எண் கரங்களோடு நின்ற கோலத்தில் திகழ்கிறது. எண் கரங்களில் மேலிரு கரங்கள் ஆழியும்-சங்கமும் கொண்டும், இரண்டாவது கரங்கள் மழுவும்-அங்குசமும் தாங்கியும், மூன்றாவது கரங்கள் கத்தியும் - கைமணியும் பற்றியும், கீழிரு கரங்கள் அபய-வரதமளித்தும் காட்சியளிக்கின்றன.

5. சௌபாக்கியலட்சுமி

வடதிசையின் மூன்றாவது தூணில் இவ்வுருவம் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. இத்தேவி பத்துக் கரங்கள் கொண்டு பாங்குடன் திகழ்கிறாள். இத்தேவியின் வலக்கரங்கள் முறையே அம்பு, சக்கரம், செல்வம் கொழிக்கும் பணப்பை, இலைத்துளிர் ஆகியவற்றை ஏந்தியும், இடக்கரங்கள் வில், சங்கு, தாமரை மொட்டு, கெண்டி ஆகியவை கொண்டு விளங்குகின்றன. கீழிரு கரங்கள் அபய-வரதமளிக்கின்றன.

6. சந்தானலட்சுமி

வடதிசையின் மூன்றாவது தூணை அலங்கரிக்கும் இத்தேவி நான்கு கரங்கள் கொண்டு நின்ற நிலையில் காட்சியளிக்கிறாள். தேவியின் மேலிரு கரங்களில் சந்தானத்திற்கு அடையாளமான இரு

பூர்ண கும்பங்கள் காட்டப்பட்டுள்ளன. கீழ் வலக்கரம் அபய முத்திரையிலும், இடக்கரம் வரத முத்திரையிலும் அமைந்துள்ளன.

7. வீரலட்சுமி

இம்மண்டபத்தின் வடதிசை நான்காவது தூணில் கம்பீரமாக முகத்தில் சீற்றம் தெறிக்க எண்கரங்களில் ஆயுதங்கள் தாங்கி அமைந்துள்ளாள் வீரலட்சுமி. முன்னிரு கரங்கள் மட்டும் அபய, வரதமளிக்க ஏனைய ஆறுகரங்களில் அம்பு, வில், மலர்ச்சரம், அக்னி, தாமரை முதலியன காணப்படுகின்றன.

8. தான்யலட்சுமி

தென்திசை நான்காவது தூணில் வடதிசை நோக்கிய வண்ணம் நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் வடிக்கப்பட்டுள்ளது. மேலிரு கரங்களில் வலக்கரம் தான்ய செல்வத்தை அடையாளம் காட்டும் பொருளையும், இடக்கரம் சூலத்தையும், கீழிரு கரங்களில் அபய - வரதமளித்தும் அருள் பாலிக்கிறது.

தேவியர் எண்மரும் இடையில் அணிந்துள்ள இடைக்கச்சை அலை அலையான மடிப்புகளோடும், இடையைச் சுற்றி இடைக் கட்டும், இடைமணி, மலர்கள் கோத்த இடைவார், தொடைமாலை, ஆடையின் முன்புறம் தொங்கும் குஞ்சம் மற்றும் பொட்டுமணி, கண்டிகை, முத்தாரம், சரப்பளி, சவடி ஆகிய கழுத்தணிகளை இச்சிற்பங்களில் மிகுதியாகக் காணமுடிகின்றன. இவற்றில் செட்டி நாட்டுக்கே உரிய மலர் பதக்கங்களும், அன்ன பட்சி கோத்த பதக்கமும் சிற்பத்தில் இடம் பெற்றுள்ளன. நகரத்தார் கலைப் பாணிக்குச் சான்றாக விளங்கும் அட்டலட்சுமி மண்டபமும், அதில் இடம் பெற்றுள்ள சீர்மிகுச் சிற்பங்களும், வண்ண ஓவியங்களும், சமய வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. மதுரை, கிருஷ்ணாபுரம், பேரூர், தாரமங்கலம், தாடிக்கொம்பு சிற்பங்கள் போலச் செட்டி நாட்டின் சிற்பக்களஞ்சியமாக இரணியூர் கோயில் திகழ்கிறது.

துர்க்கை மண்டபச் சிற்பங்கள்

இரணியூர் சிவபுரத்தேவியின் சன்னிதி எதிரே கீழ்த்திசையிலும், மேல்திசையிலுமாக இரு பக்கங்களிலும் எழுப்பப்பட்டுள்ள கர்ணக்கால் மற்றும் அணியொட்டிக்கால் தூண்களில் இச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வகை அமைப்பு விசயநகர நாயக்கர் கலைப்பாணியிலும், தஞ்சை, மதுரை நாயக்கர் கலைப்பாணியிலும் இடம் பெறுகின்றன.1 நகரத்தார்களும் இவ்வகை அமைப்பு முறையைப் பின்பற்றியுள்ளனர்.

1. டாக்டர் . இராசு பவுன்துரை, தமிழகக் கோயிற் கட்டடக்கலை மரபுத் தூண்கள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2005, பக், 96

1. ருத்திர துர்க்கை

அம்மன் சன்னிதி இடப்புறம் கீழ்வரிசையின் முதலாவது தூணில் நின்ற நிலையில் இவ்வடிவத்தைக் காணலாம். எண் கரங்களில் மேற்கைகள் திரிசூலமும் - கபாலமும் ஏந்தியுள்ளன. இரண்டாவது கைகள் சக்கரத்தையும் - சங்கினையும் பற்றியுள்ளன. மூன்றாவது கைகள் வில்லையும் - அம்பையும் பிடித்துள்ளன. நான்காவதாக முன்னிருகைகள் வாளையும் - கேடயத்தையும் கொண்டு போர்க் கோலத்தோடு தேவியின் வடிவம் படைக்கப் பட்டுள்ளது.

2. ஸ்தூல துர்க்கை

இத்தேவி இடப்புற இரண்டாவது தூணில் திரிபங்கியாக நின்ற கோலத்தில் படைக்கப்பட்டுள்ளாள். இத்தேவி நான்கு கரங்கள் கொண்டு திகழ்கிறாள். மேலிரு கரங்கள் அங்குசத்தையும், பாசத்தையும் தாங்கியுள்ளன. கீழ் வலக்கை மலர்மாலை ஏந்தியும், இடக்கை யாளி முகப்புடைய வீணையை மீட்டும் நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. இத்தேவியின் முகத்தில் இசை மீட்டுவதற்கேற்ப ஒருவித அமைதி காணப்படுகிறது.

3. மகிடசம்காரி

இவ்வுருவம் இடப்புற மூன்றாவது தூணில் எண்கரங்களில் கொடிய ஆயுதந்தாங்கித் திரிபங்கியாக நின்ற வண்ணம் காட்சியளிக்கிறது. கரங்களில் அம்பு, வில், சக்கரம், சங்கு, கத்தி, கேடயம், திரிசூலம், கபாலம் ஆகிய ஆயுதங்கள் காட்டப்பட்டுள்ளன. இடக்கரம் கொண்டுள்ள வில் நாணேற்றிய பாவனையில் வளைத்தும், வில்லை தனியாகத் தெரியுமாறு இடைவெளி கொடுத்து சிற்பி செதுக்கியுள்ள பாங்கும் போற்றத்தக்கது.

4. விஷ்ணு துர்க்கை

இத்தேவி அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்த கோலத்தில் நான்கு கரங்களோடு நான்காவது தூணில் காட்டப்பட்டுள்ளாள். மேற்கரங்கள் சுடருடன் கூடிய சக்கரத்தையும், சங்கினையும் பிடித்துள்ளன. கீழிரு கரங்கள் அபய - வரத முத்திரை காட்டி அருள் பாலிக்கின்றன.

5. பிரம்ம துர்க்கை

இவ்வுருவம் மேல் வரிசையிலுள்ள மஹாதுர்க்கையை அடுத்துள்ளது. தாமரைப் பீடத்தின் மீது அர்த்தபத்மாசனத்தில் நான்கு கரங்களுடன் அமர்ந்த நிலையில் இத்தேவி காட்சியளிக்கிறாள். மேலிரு கரங்கள் அக்கமாலையும், கெண்டியும்

கொண்டுள்ளன. கீழிரு கரங்களை மடி மீது படிய வைத்துத் தியான முத்திரையில் கொண்டு விளங்குகிறாள்.

6. மஹாதுர்க்கை

இவ்வுருவம் பிரம்மதுர்க்கையை அடுத்துள்ளது. இவ்வுருவம் ஆறு கரங்களிலும் ஆயுதங்கள் தாங்கி நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. ஆறுகரங்களில் வாள்-கேடயம், அம்பு-வில், சக்கரம்-மழு ஆகியவற்றை ஏந்தியுள்ளது. இத்தேவியின் மகுடத்தின் இடப்புறம் பிறைச்சந்திரன் காணப்படுகிறது. எனவே சிவபெருமானின் சந்திரனும் - மழுவும், விஷ்ணுவின் சக்கரமும், சக்தியின் வாள் - கேடயம் ஏந்தியுள்ளதால் இத்தேவி **மஹாதுர்க்கை** எனப் போற்றப்படுகிறாள்.

7. ஜலதுர்க்கை

இத்தேவி திரிபங்கியாக நான்கு திருக்கரங்களுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். மேல் வலக்கை அம்பையும், இடக்கை வில்லையும், கீழ் வலக்கை முத்தலைச் சூலத்தையும், இடக்கை வேலைப்பாடு மிக்க சங்கினையும் ஏந்தியுள்ளன.

8. சூலினி துர்க்கை

இத்துர்க்கை மேல் வரிசையின் முதல் தூணில் பீடத்தின் மீது இடதுகாலை மடித்து வலதுகாலைத் தொங்கவிட்டு சுகாசனத்தில் அமர்ந்துள்ளாள். தேவியின் வலக்கரங்கள் அம்பு, அங்குசம், வாள், சூலம் ஆகியவற்றைப் பிடித்தும், இடக்கரங்கள் வில், பாசம், கேடயம், கபாலம் ஆகியவை கொண்டும் விளங்குகின்றன.

9. நவதுர்க்கை

பீடத்தில் நின்ற நிலையில் எண்கரங்களில் ஆயுதங்களோடு வடிக்கப்பட்டுள்ள இத்துர்க்கை திரிபங்கியாகக் காட்சியளிக்கிறாள். எண்கரங்களில் முறையே சக்கரம், சங்கு, கலப்பை, துடி, தாரை, அங்குசம், கெண்டி ஆகிய ஆயுதங்களை ஏந்தியுள்ளாள். முன் வலக்கரம் மட்டும் வழங்கும் கரமாக வரதமுத்திரை காட்டுகிறது.

நவதுர்க்கை சிற்பத்திற்கு உரிய அணிகள் தலை முதல் பாதம் வரை அமைந்து அலங்கரிக்கின்றன. இங்கு ஏனைய துர்க்கைகளின் கழுத்தை அட்டிகை அலங்கரிக்க நவதுர்க்கையின் கழுத்தில் மட்டும் காசுமாலை காட்டப்பட்டுள்ளது.

இராஜகோபுரச் சிற்பங்கள்

இரணியூர் ஆட்கொண்ட நாதர் இராஜகோபுரம் கட்டடக் கலைத்திறனும், சிற்பச் செழுமையும் ஒருங்கே கொண்டது. இக்கோபுரத்தைச் சுற்றிலும் சுவர் பகுதிகளில் சிற்பங்களைச்

சிறந்தமுறையில் செட்டிநாட்டுச் சிற்பிகள் தோற்றுவித்துள்ளனர். இவ்வாறு கோபுரச் சுவர்ப் பகுதியில் சிற்பங்களைத் தோற்றுவிக்கும் பழக்கம் சோழர் காலம் முதல் தமிழகத்தில் இருந்து வந்துள்ளது. முற்றிலும் வெள்ளைக் கல்லைக் கொண்டு எழுப்பப்பட்ட இக்கோபுரம் 75 அடி உயரம் கொண்டு கவினுறக் காட்சியளிக்கிறது.

கோபுரத்தின் வெளிப்புறம் உள்ள வலப்புறச் சுவரில் துவார பாலகர், மயில் மீது அமர்ந்த கோலத்தில் மயில் வாகனர், திரு வாதவூரில் தோன்றி, திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர், ஐராவதத்தின் மீது அமர்ந்த இந்திரன், முப்புரம் எரித்த விரிசடைக் கடவுள், தக்கயாகப் பரணியின் தலைவனான வீரபத்திரர், காளை மீதமர்ந்த எண்திசைக் காவலருள் ஒருவனான ஈசானன், சிவ பெருமானின் தேவியான கௌரி, அசுரனை அழிக்கும் சிவபெரு மானின் அகோரமூர்த்தி ரூபம், பிரம்மன் ஆகிய சிற்பங்கள் உள்ளன.

இராஜ கோபுரத்தின் வெளிப்புறம் உள்ள இடப்புறச் சுவரில் துவாரபாலகர், நர்த்தன விநாயகர், சப்தரிஷிகளில் ஒருவரான துர்வாசர், எண்திசைக் காவலர்களுள் ஒருவனான அக்கினி ஆட்டுக்கடாமீது அமர்ந்தும், நீலமேனி நெடியோனான திருமால், மாதொரு பாகனான அர்த்த நாரீசுவரர், எண் கரங்களில் ஆயுதம் ஏந்தி அசுரனை அழிக்கும் எண்தோள் காளி, சிவபெருமானின் ரூப பேதமான பைரவர், எண்திசைக் காவலருள் ஒருவனான எமதர்மன் எருமை வாகனத்தின் மீதும், அறம் உரைக்கும் அண்ணலான தட்சிணாமூர்த்தி ஆகிய சிற்பங்களைக் காண்கிறோம்.

இராஜ கோபுரத்தின் உட்புறமுள்ள இடப்புறச் சுவரில் குதிரைமீது அமர்ந்த நிலையில் எண்திசைக் காவலருள் ஒருவனான குபேரன், மதுரைவீரன், எருமைத்தலை அசுரனை அழிக்கும் மகிஷாசுரமர்த்தினி, ஊர்த்துவதாண்டவர், காளிதேவி காலடியில் அசுரன், எண்திசைக் காவலர்களில் ஒருவனான வாயு பகவான் தனது வாகனமாகிய பாயும் மான் மீதும், அழகே உருவான ரதி, காதல் தெய்வமான மன்மதன், இக்கோயிலின் தலபுராண அடிப்படையில் அமைந்த இரண்ய - நரசிம்ம மல்யுத்தம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

கோபுரத்தின் வெளிப்புறமுள்ள வலப்புறச் சுவரில் 'எங்கும் உள்ளான் நாராயணன்' என்ற பிரகலாதன் வாக்குப்படி தூணைப் பிளந்து வந்த நரசிம்மம், இரண்ய சம்காரம், இரண்ய சம்காரம் முடித்த நரசிம்மத்தை அடக்க சிவபெருமான் எடுத்த சரபமூர்த்தி வடிவம், அங்கயற் கண்ணியை மணக்கும் ஆலவாய் அண்ணல், பெரிய திருவடி, சிறிய திருவடியுடன் திருமால், எண்திசைக் காவலர்களுள் ஒருவனான வருணன் தன் வாகனமான யாளியுடனும், எண்திசைக் காவலர்களுள் ஒருவனான நிருதி தன் வாகனமான வீரனின் தோள் மீதும், காமதேவனான மன்மதன், அவனது

இணையான ரதி, ரிஷபத்தின் மீது தோன்றும் ரிஷபாரூடர் ஆகிய எழில் மிகு சிற்பங்கள் அனைத்தும் நாட்டுக்கோட்டை நகரத்தாரின் சிற்பக்கலையை வெளிப்படுத்துவன.[1]

இக்கோயில் கருவறை அமைப்பு, கருவறை கோட்ட மாடங்களில் இடம் பெற்றுள்ள செப்புத் திருமேனிகள், பிற கோயில்களில் காணப்படாத நிலவறையின் அமைப்பு (Under ground room), கருங்கல்லினைக் குடைந்து செய்யப்பெற்ற கற்சாளரமும் கற்குழாய்களும் இங்கு மட்டுமே காணப்படுபவை.

இக் கோயிலுக்கு 1928, 1944, 1990 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இக்கோயில் சுதந்திர போராட்டக் காலமான 1944-இல் திருப்பணி செய்யப் பெற்றதால் பாரதமாதா, தேசியக்கொடி, ராட்டை, காந்தி சிற்பங்கள் இக் கோயிலில் இடம் பெற்றுள்ளன. செட்டி நாட்டின் சிற்பக் களஞ்சியமாக இரணியூர் கோயில் திகழ்கிறது.

5. பிள்ளையார் பட்டி

கலியுகம் 3815-இல் கொடுக்கப் பெற்றது. (கி.பி. 714)

இறைவன் - திருவீசர், மருதீசர்.

இறைவி - சிவகாமவல்லி, வாடாமலர் மங்கை.

இத் திருக்கோயில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக் குடியிலிருந்து குன்றக்குடி, மதுரை செல்லும் சாலையில் 14 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. வயிரவ கோலத்தோடு அசுரரை அழிக்கச் சென்ற சிவபெருமானுடன் சென்ற விநாயகப் பெருமான் வச்சிர தமிஷ்டன் என்ற அசுரனால் எறியப்பட்ட மலையையே இருப்பிடமாகக் கொண்டு அமர்ந்தார் எனத் தலபுராணம் கூறுகிறது. இத்தலத்தில் சிவபெருமானின் இரு மூல சன்னிதிகள் தவிர்த்துக் கற்பக விநாயகரும் மூல தெய்வமாகத் தனிச்சன்னிதியில் வீற்றிருக்கிறார். இளையாத்தங்குடியைச் சேர்ந்த திருவேட் பூருடையார் என்ற சகோதரர்களில் இளையவர் வழியினர் இக்கோயிலைத் தங்களுக்குரிய தனிக்கோயிலாக ஏற்படுத்திக் கொண்டனர். இக்கோயிலார் இசைப்பிடிமானத்தில் தம்மை கீழ்கண்டவாறு குறிப்பிடுவர்.

பிரிவுகள்

(1) கல்வாசனாட்டில் இளையாத்தன் குடியான குலசேகர புரத்தில், இரணியூர் மருதங்குடியான இராசநாராயண புரத்தில், பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார். இக்கோயில் நகரத்தார்கள் 41 ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். மொத்தம் 3504 புள்ளிகள் ஆவர்.

1. மா.சந்திரமூர்த்தி, இரணியூர்க் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003, பக், 49 – 81.

கட்டடமும் கலையும்

பிள்ளையார்பட்டி ஒன்பது நகரக் கோயில்களுள் ஒன்று என்பது மட்டுமன்று. காலத்தால் மிகவும் தொன்மையும் புகழும் மிக்கது. ஸ்ரீ கற்பக விநாயகர் வீற்றிருக்கும் குடைவரை கோயில் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை இங்குள்ள கல்வெட்டுகளும், புடைப்புச் சிற்பங்களும் புலப்படுத்துகின்றன. முற்காலப் பாண்டியர் காலத்தைச் சார்ந்த இக்கோயில் கி.பி. 5 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.[1]

பிள்ளையார் பட்டி என்பது இன்றைய வழக்குப் பெயராக இருப்பினும் **எருக்காட்டூர் (அ) எக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைக்குடி, திருவீங்கைச்வரம், இராசநாராயணபுரம்** போன்றவை பண்டைய பெயர்களாக விளங்கி வந்துள்ளன. இத்தலத்தின் விநாயகப் பெருமானின் சிறப்புக் கருதி பிள்ளையார்பட்டி என இன்று வழங்குகிறது.

இக்குடைவரைக் கோயில் தமிழகக் கலை வரலாற்றில் மிகவும் இன்றியமையாததாகும். பொதுவாகக் குடைவரைக் கோயில்கள் முகப்புத்தூண்களையும், அரைத்தூண்களையும் கொண்டதாகவும், அதன் இரு புரைகளிலும் புடைப்புச் சிற்பங்களுடனும் காணப்படும். ஆனால் பிள்ளையார்பட்டி குடைவரையின் உட்புறம் **விநாயகரின் திருக்கோலம்** நேரே காணுமாறு வடதிசை நோக்கி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. விநாயகப் பெருமானின் கருவறையின் மேற்குப் பகுதியில் குடைவரையாக அமைக்கப்பட்ட மற்றொரு கருவறை காணப்படுகிறது. கருவறையின் உட்பகுதி தூங்கானை (கஜபிருஷ்டம்) மாட வடிவில் குடையப்பட்டுள்ளது. கருவறை நடுவில் பாறையிலேயே செதுக்கப்பட்டுள்ள இலிங்கம் **திருவீசர்** என்றும் **திருவீங்கைக்குடி மகாதேவர்** என்றும் வழங்கப்படுகிறது.

முக்கிய சன்னிதியில் அமர்ந்த கோலத்தில் அர்த்த சித்திரமாய் வடிக்கப்பட்டுள்ள விநாயகப் பெருமானின் திருக்கோலம் வேறெங்கும் காண முடியாது. இரு கைகளில் வலக்கை சிறிய இலிங்கத்தை ஏந்தியுள்ளது. இடக்கை இளம் தொந்தியைச் சுற்றியுள்ள வயிற்றுக் கச்சை மீது கொண்டுள்ளது. துதிக்கை வலம்புரியாக வளைந்து வனப்பூட்டுகிறது. இச்சிற்பமும் குடைவரையும் உருவான சரியான காலத்தை அறிந்து கொள்ளக் கோயிலின் உட்புறம் பொறிக்கப்பட்டுள்ள பழைமையான கல்வெட்டே மூலச் சான்றாக அமைகிறது. **எக்காட்டூர் எனும்**

1. மா.சந்திரமூர்த்தி, பிள்ளையார்பட்டி, இரண்டாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1995, பக் – 15.

ஊரைச் சார்ந்த தலைமைச் சிற்பியால் இக்குடைவரையும், சிற்பமும் செதுக்கப்பட்டது என்பது கல்வெட்டுக் கூறும் செய்தியாகும். இதன் மூலம் இச்சிற்பம், கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாதாபியிலிருந்து சிறுத்தொண்டர் கொண்டு வந்த விநாயகருக்கும் முற்பட்டது என அறிய முடிகிறது. எனவே தமிழகத்தில் கிடைத்துள்ள விநாயகர் சிற்பங்களுள் மிகத் தொன்மையானது இச்சிற்பமே எனலாம்.[2]

இக்குடைவரை இடை அங்கணத்தின் தென்சுவரில் அழகிய ஹரிஹரன் சிற்பம் ஒன்று காணப்படுகிறது. இச்சிற்பத்தின் தலையின் ஒருபுறம் சடைமகுடமும், மறுபுறம் மணி மகுடமும் அலங் கரிக்கின்றன. வலக்கை வரத முத்திரையிலும், இடக்கை இடுப்பிலும் ஊன்றியிருக்கின்றன. சிற்பத்தில் தலைக்கோலமும், குழையும், ஆடையும், அணியும் மாறியிருப்பதே இது சங்கரநாராயணர் எனத் தெளிவுபடுத்துகிறது. இதன் இரு புறமும் இரு உருவங்கள் கைகட்டி நிற்கின்றன. சிவனது பக்கவாட்டில் சண்டியும், திருமாலின் பக்கவாட்டில் கருடனின் உருவமும் காணப்படுவதால் இச்சிற்பம் மாலொருபாகனான ஹரிஹரன் என்பது உறுதிப்படுகிறது. இதுவரை தமிழகத்தில் காணப்படும் ஹரிஹரன் சிற்பங்களில் மிகவும் பழைமையானது இதுவே. ஹரிஹரனின் தொன்மையான சிற்ப வளர்ச்சி நிலையை இவ்வுருவம் பெற்று விளங்குகிறது.

மேலும் தமிழ்நாட்டில் இலிங்கோத்பவர் சிற்பவடிவத்தின் வளர்ச்சியை அறிந்துகொள்வதற்கும் பிள்ளையார்பட்டி சிற்பமே முன்னோடியாக விளங்குகிறது. பொதுவாக சிவன் கோயில் கருவறையின் மேற்புறக் கோட்டத்தை அலங்கரிக்கும் இவ்வடிவம் மாறுபட்டுக் கருவறையின் வடபுறம் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. இங்கு இலிங்கோத்பவரின் இடுப்பிற்குக் கீழே உருவம் ஏதும் செதுக்கப்படாமல் தட்டையான தூணையொத்துக் காணப்படுகிறது. சிவபெருமானின் இரு கரங்களில் வலக்கரம் வரதமுத்திரையிலும், இடக்கரம் இடுப்பில் அமைந்து கட்ய வலம்பித முத்திரையிலும் காணப்படுகிறது. தலையைச் சடாமகுடம் அலங்கரிக்கிறது. இங்குச் சிவபெருமானின் இருபுறமும் நான்முகனும் - திருமாலும் காட்டப்படவில்லை. அவர்களுக்குப் பதிலாகச் செதுக்கப்படும் அன்னமும், வராகமும்கூடக் காட்டப்படவில்லை. சிவபெருமானே முழு முதல் தெய்வம் என்பதாக இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம், நடராஜர் சபை, முக மண்டபம், அம்மன் சன்னிதி, மேல்சுற்றுப்பத்தி,

1. மா.சந்திரமூர்த்தி, பிள்ளையார்பட்டி, இரண்டாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1995, பக்,14 – 16.

நந்தி மண்டபம், திருமறை மண்டபம், திருமுறை மண்டபம், திருச்சுற்று மாளிகை, உற்சவ மண்டபம், வியஞ்சன அறை, மடைப்பள்ளி, நாகர் சுனை, மலர்பணி மாடம், ராஜ கோபுரம், திருக்குளம் ஆகிய பகுதிகளுடன் விளங்குகிறது.

கருவறையைச் சுற்றிப் பஞ்ச கோட்டங்கள் முறையாக அமைக்கப் பெற்று விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், நான்முகன், விஷ்ணு துர்க்கை ஆகிய வடிவங்கள் உரிய ஆடை, அணிகலன்கள், ஆயுதங்களுடன் அமைந்து விளங்குகின்றன.

விநாயகர், சுப்பிரமணியர், மகாலட்சுமி, சண்டிகேசுவரர், சப்தமாதர், பைரவர், சூரியன், சந்திரன் ஆகிய உரிய எட்டுப் பரிவார தெய்வங்களும் சிற்றாலயங்களில் முறையாக அமைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர திருச்சுற்று மாளிகையில் நால்வர், அகோரமூர்த்தி, காட்சி விநாயகர், சோமாஸ்கந்தர், தனி அம்மன், பிரகார விநாயகர், செஞ்சடேசுவரர், சௌந்தரநாயகி, ஆறுமுகர், வள்ளி, தெய்வயானை, ஐந்து தலை நாகர், பசுபதேசுவரர், தண்டாயுதபாணி, துர்க்கை - சரசுவதி - லஷ்மி ஆகிய தெய்வங்களும் சிற்றாலயம் மற்றும் உரிய மேடைகளின் மீது அமைக்கப்பட்டுள்ளன.

திருச்சுற்று மாளிகையின் வடதிசையில் கார்த்தியாயனி தேவி, சிவகாமி, பைரவர், நவக்கிரகம் ஆகிய தெய்வங்களும் பள்ளியறை, வாகன அறை ஆகியவையும் விளங்குகின்றன.

இக் கோயில் அழகு மிக்க கட்டடக்கலை, சிற்பக்கலை மட்டுமின்றிப் பிற்காலப் பாண்டியரின் வார்ப்புக் கலைக்கும் அடையாளமாகத் திகழ்கிறது. இக்கோயிலில் உள்ள 30 செப்புத்திருமேனிகளில் 14 திருமேனிகள் பிற்காலப் பாண்டியர் காலத்தவை. அவை, ஆடும் பெருமான், சிவகாமி, சந்திர சேகரர், சந்திரசேகர அம்மன், சோமாஸ்கந்தர், தனி அம்மன், உமையாள், பெரிய சிவகாமி, நர்த்தன ஞான சம்பந்தர், திருஞான சம்பந்தர், அஸ்திரதேவர், உமாசகித சந்திர சேகரர், திரிபுராந்தகர், பெரிய தனியம்மன் ஆகியவை. ஏனைய விநாயகர், தெய்வயானை, சண்டீசர், பள்ளியறை சொக்கர், பள்ளியறை அம்மன், கண்ணாடி, பலிபீடம், பிரதோஷநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், அஸ்திர தேவர், அங்குச தேவர், நந்தி ஆகிய 16 திருமேனிகள் நகரத்தார் காலத்தில் செய்தளிக்கப்பட்டன.[1]

ஆடும் பெருமான்

பீடத்தின் மீது வீழ்ந்து கிடக்கும் முயலகன் மீது வலது திருவடியை ஊன்றி, இடது திருவடி தூக்கிய நிலையில் நான்கு

1. மா.சந்திரமூர்த்தி, பிள்ளையார்பட்டி, இரண்டாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1995, பக்,73 – 90.

கரங்களுடன் காட்டப்பட்டுள்ளது. மேல் வலக்கை தமருக முத்திரையில் உடுக்கை ஏந்த, மேல் இடக்கை அர்த்த சந்திர முத்திரையில் அனலை ஏந்தியுள்ளது. கீழ் வலக்கை அபயம் காட்ட, இடக்கை மார்புக்குக் குறுக்கே நீண்டு வேழமுத்திரை காட்டுகிறது. விரிசடையின்றி, கொக்கிறகின்றி, நீள் சடைமுடியும், முதுகில் தாழ்சடையும் வனப்போடு விளங்க, மகுடத்தின் இடப்புறம் இளம்பிறை அணி செய்ய எழிலுடன் விளங்குகிறது. அபயம் காட்டும் வலது முன் கையைச் சுற்றியுள்ள ஆடும் நாகத்தை இப்படிமத்தில் காணத்தக்கது.

சிவகாமி

இப்படிமம் இடையை இடப்புறமாக ஒடித்துத் திரிபங்கியாக இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது. வலக்கை நீலோற்பலம் கொண்டும், இடக்கை லோல முத்திரையில் தாழ் கரமாகவும் விளங்குகிறது. தலையை உயர்ந்த கரண்ட மகுடம், காதுகளை மகரக்குழைகள், கழுத்தை மங்கலநாண், முத்தாரம், சரப்பளி, இடையிலிருந்து ஆடை, இரு கால்களுக்கிடையே வனப்போடு தொங்கும் முத்துகள் கோத்த குஞ்சம், கால்களில் அடுக்குக் காப்பு, பாதசரம் ஆகிய அணிகளுடன் தேவி எழிலுடன் காட்சியளிக்கிறாள்.

சந்திரசேகரர்

ஆகம நூல்கள் கூறுவதைப்போல் முக்கண்ணும், மழுவும் - மானும் தாங்கிய மேலிரு கைகளும், அபயமளிக்கும் வலக்கையும், சிம்மகர்ண முத்திரை காட்டும் இடக்கையும் கொண்டு உயர்ந்த சடைமுடியின் இடப்பாகம் சந்திரனைச் சூடி நேராக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். சிவனது தோள்களில் சுருண்ட தாழ்சடைகள் வனப்போடு வீழ்ந்துள்ளன.

சந்திரசேகர அம்மன்

பத்ம பீடத்தில் இடக் காலை ஊன்றி வலக்காலைச் சற்றுமுன் வைத்து இடையை இடப்புறம் ஒடித்துத் திரிபங்கியாக நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது. இரு கரங்களில் வலக்கை நீலோற் பலம் ஏந்தியும், இடக்கை தாழ்கரமாகவும் அமைந்துள்ளது.

சோமாஸ்கந்தர்

நீண்ட பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் சிவன்-ஸ்கந்தன்-உமை தோன்றும் படிமம். இதில் சிவனது உருவம் சுகாசனத்தில் அமர்ந்து மேற்கரங்களில் மழுவும் -மானும் பற்றியும், கீழ் வலக்கை அபயமளிக்க இடக்கை சிம்மகர்ண முத்திரை காட்டுகிறது. சிவனது தலையை அலங்கரிக்கும் சடை மகுடம்

வலப்புறம் கங்கையையும் ஆடும் பாம்பையும், இடப்புறம் இளம் பிறையையும் கொண்டுள்ளது. அத்தனுக்கும் அன்னைக்கும் இடையே உள்ள ஸ்கந்தர் இடையில் ஆடையின்றி, இரு கைகளிலும் தாமரை ஏந்தி இளம் குழந்தையாகக் காட்டப்பட்டுள்ளார். இடப்புறம் உமை பிரியாவிடையாக வலக்காலை வளைத்து இடக்காலைத் தொங்கவிட்டு இரு கைகளுடன் வனப்போடு காட்சியளிக்கிறாள். வலக்கரம் நீலோற்பலம் பற்ற இடக்கரம் சிம்ஹகர்ண முத்திரையில் அமைந்துள்ளது.

தனி அம்மன்

சோமாஸ்கந்தர் சன்னிதியிலிலுள்ள இப்படிமம் பத்மபீடத்தின் மீது திரிபங்கியாக நின்ற கோலத்தில் இரு கரங்களுடன் வார்க்கப்பட்டுள்ளது. உமையின் வலக்கை கடக முத்திரையிலும், இடக்கை லோல முத்திரையிலும் அமைந்துள்ளது. தலையை உயர்ந்த கேசபந்தம் அலங்கரிக்கிறது.

உமையாள்

எழில் உருவாய்த் தோன்றும் உமையின் இப்படிமம் இக்கோயிலில் பாதுகாக்கப்பட்டு வரும் பழைமையான படிமத் தொகுப்புகளுள் ஒன்றாகும். உமை தாமரைப் பீடத்தில் வலக்காலை ஊன்றி, இடக்காலைச் சற்று முன்வைத்துத் திரிபங்கியாகக் காட்சியளிக்கிறாள். வலக்கை மெலிந்த நீலோற்பலம் கொண்டும் இடக்கை தாழ்கரமாகவும் உள்ளன. தலையில் உயர்ந்த கரண்ட மகுடமும், மகுடத்தின் நாற்புறமும் புஷ்ப பூரிமங்களும் அழகு செய்கின்றன. எண்ணிக்கை மிகுந்த எழில் மிகு அணிகள் தேவியை அலங்கரிக்கின்றன.

சிவகாமி

நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ள இப்படிமத்தின் வலக்கை மலர் ஏந்தும் பாவனையில் கடக முத்திரையிலும், இடக்கை லோலமுத்திரையிலும் அமைந்துள்ளன. உரிய ஆடை, அணிகலன்கள் சிவகாமியை முடி முதல் பாதம் வரை அலங்கரிக்கின்றன.

நர்த்தன ஞானசம்பந்தர்

தாமரை இருக்கையில் வலக்காலைப் பக்கமாக ஊன்றி, இடக்காலை மெல்லத்தூக்கி இரு கைகளுடன் அழகாக ஆடும் நிலையில் வார்க்கப்பட்டுள்ளது. ஆளுடைய பிள்ளையின் மடித்த வலக்கை முன்புறம் நீண்டு சுட்டு விரலை மேலே உயர்த்தி சூசி முத்திரை காட்டுகிறது. இடக்கை பக்கங்களில் வீசி ஆடும் எழில் கையாகக் காட்சியளிக்கிறது.

ஞானசம்பந்தர்

தாமரை இருக்கையில் நின்ற கோலத்தில் இளம் பிள்ளையாகத் தோன்றும் இப்படிமம் வலக்கரம் சூசி முத்திரையிலும், இடக்கரம் பொற்கிண்ணத்தை ஏந்திய நிலையிலும் காணப்படுகிறது. தலையின் முன்புறம் குடுமி காட்டப்பட்டுள்ளது.

அஸ்திரதேவர்

உலோகத் தகட்டின் மீதுள்ள தாமரை இருக்கையில் உலோகத் தூணை நிறுத்தி அதன் பலகைமீது முத்தலைச் சூலத்தினை அமைத்துள்ளனர்.

உமாசகித சந்திரசேகரர்

செவ்வகப் பீடத்தின் மேல் தாமரை இருக்கையில் சிவனும்-உமையும் தனித்தனியாக நின்ற கோலத்தில் வார்ப்பில் வடிக்கப்பட்டுள்ளது. சிவனது மேற்கரங்கள் மழுவும் - மானும் ஏந்தி, கீழ்கரங்கள் அபய முத்திரை, சிம்மகர்ண முத்திரை காட்டுகின்றன. வலக்காதில் மகரக் குழையும், இடக்காதில் வட்டமான ஒலைக்குழையும் அணி செய்கின்றன. இடப்புறம் உமை எழிலாக இரு கரங்களுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள்.

திரிபுராந்தகர்

இக் கோயிலின் பாதுகாப்பிலுள்ள பழைமையான படிமத் தொகுப்பில் இதுவும் ஒன்று. சிவனது 25 மூர்த்தங்களுள் ஒன்றான இப்படிமம் தாமரை இருக்கைமீது நான்கு கரங்களுடன் நின்ற நிலையில் வார்க்கப்பட்டுள்ளது. சிவனது மேற்கரங்கள் மழு-மான் ஏந்தியுள்ளன. கீழிருகரங்கள் வில்லையும் அம்பையும் பற்றும் பாவனையில் முத்திரை காட்டுகிறது.

தனி அம்மன்

இவ்வாலயத்தின் பாதுகாப்பிலுள்ள படிமங்களில் இதுவும் ஒன்று. திரிபங்கியாக விளங்கும் தேவியின் வலக்கரம் உடைந்துள்ளது. மலர் ஏந்தும் பாவனையில் இருந்திருக்கும் உடைந்த வலக்கரத்தின் அழகைத் தொங்கும் இடக்கரம் ஈடு செய்கிறது. இங்குள்ள பழைய படிமத் தொகுப்புகளுள் இதுவே உயரமானது.

பிரதோஷ நாயகர்

செவ்வகப் பீடத் தாமரை இருக்கையில் சிவனும் - உமையும் தனித்தனியாக நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளனர். உமாசகித சந்திரசேகரர் படிமத்தின் அமைப்புப் போன்ற முத்திரைகள் இதிலும் விளங்குகின்றன.

விநாயகர்

சதுரமான பீடத்தின் மேல் தாமரை இருக்கையில் நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளார். மேற்கரங்கள் அங்குசத்தையும், பாசத்தையும் பிடித்துள்ளன. கீழ்க் கரங்கள் ஒடிந்த தந்தத்தையும், மாம்பழத்தையும் பற்றியுள்ளன. விநாயகப் பெருமானின் துதிக்கை இடம்புரியாக வளைந்து பழத்தைப் பற்றுகிறது.

சுப்பிரமணியர்

தாமரை இருக்கை மீது நான்கு கரங்களுடன் நேராக நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளார். நான்கு கரங்களும் சக்தி-வஜ்ஜிரம், அபயம்-வரதம் காட்டுகின்றன. கரண்ட மகுடம், கண்டிகை, பூணூல், உதரபந்தம், கைவளை, தோள்வளை, கழல்கள் யாவும் இத் திருமேனிக்கு வனப்பூட்டுகின்றன.

அருகில் இவர்தம் தேவியான வள்ளி இரு கரங்களுடன் வார்க்கப்பட்டுள்ளாள். வள்ளியின் வலக்கை லோல முத்திரையிலும், இடக்கை தாமரை மலரைப் பிடித்தும் உள்ளது. கரண்ட மகுடம், காதுகளில் ஓலைக்குழைகள், கச்சையணிந்த மேலுடல், கழுத்தில் பொட்டுமணி அலங்கரிக்க பூலோகப் பெண்ணாக இத்தேவியைச் செம்பிலே வடித்துள்ளனர். மற்றொரு தேவியான தெய்வயானை வலக்கை நீலோற்பல மலரைப் பற்றியும் இடக்கை லோலமுத்திரையிலும் அமைந்து விளக்குகிறாள். கரண்டமகுடம், மகரக்குழைகள் கச்சையில்லா மேலுடல், உரிய அணிகலன்களுடன் தேவலோகப் பெண்ணாக வார்ப்பிலே வடிக்கப்பட்டிருக்கிறாள்.

சண்டேசர்

தாமரை இருக்கை மீது வலக்காலை ஊன்றி இடக்காலை முன்வைத்து வணங்கும் நிலையில் நின்ற கோலமாக வடிக்கப்பட்டுள்ளது. பழைய படிமங்களில் தோளோடு ஒட்டிக் காட்டப்படும் மழு இப்படிமத்தில் தனியாகச் செய்து பொருந்தும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது நகரத்தார் கலைப்பாணியின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பள்ளியறை சொக்கர் - அம்மன்

தாமரை இருக்கைமீது நான்கு கரங்களுடன் சுகாசனத்தில் அமர்ந்த கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது. மேற்கரங்கள் மழுவும்-மானும் பற்றியுள்ளன. கீழ்கரங்கள் அபயவரதமளித்து அருள் பாலிக்கின்றன. தலையைச் சடாமகுடமும், காதுகளை மகரக்குழையும், ஓலைக் குழையும் அலங்கரிக்கின்றன. இவரின் தேவியான பள்ளியறை அம்மன் தாமரை இருக்கை மீது நான்கு கரங்களுடன்

அமர்ந்த கோலமாய்க் காட்சியளிக்கிறாள். மேற்கரங்கள் நீலோற்பலமும், தாமரையும் பற்றியிருக்கக் கீழ்க்கரங்களால் அபய வரதமளித்து அருள் பாலிக்கிறாள்.

அங்குச தேவர்

பத்ர பீடத்தின் மேலுள்ள தாமரைப் பீடத்தில் உருளை வடிவான அங்குசம் செங்குத்தாக அமைந்துள்ளது. அங்குசத்தின் தலைப்பாகத்தைச் சுற்றிலும் அரைவட்ட வடிவில் இலைக்கருக்கும், உச்சியில் தாமரைப் பொகுட்டும் அலங்கரிக்கின்றன.

நந்தி - கண்ணாடி

பீடத்தின் மீது அமர்ந்து மருதீசரை நோக்கும் நந்தியின் உடல் வாகும், பருத்த திமிலும், பக்கங்களில் விரிந்த காதும், நீண்ட முகமும், தாமரை மொட்டை ஒத்த கொம்புகளும், வலுவான கால்களும், நீண்ட வாலும் செட்டி நாட்டுச் சிற்பிகள் வாகனங்களை வார்ப்பதில் கூட கொண்டுள்ள கவனத்திற்குச் சான்றாக அமைகிறது. நந்தியின் பின்புறம் இருபுறமும் குவிந்த உலோகத்தாலான கண்ணாடி அமைந்துள்ளது.

சமயக்குரவர்

இதில் சுந்தரர் உருவம் அரச உடையில் கூப்பிய கரங்களுடன் இறைவனைப் பணிந்து வணங்கும் நிலையிலுள்ளது. கையில் ஊன்றுகோல் ஊன்றிய நிலையில் இவ்வுருவம் காணப்படுகிறது. மாணிக்கவாசகர் வடிவம் நின்ற கோலத்தில் கரங்களில் சின்முத்திரை - சுவடியுடன் வடிக்கப்பட்டுள்ளது. இவரின் தலை, கழுத்து, மார்பு கைகளில் அக்கமாலை அணி செய்கிறது. அப்பர் பெருமான் இடது தோளில் உழவாரப் படையுடன் இரு கைகளையும் கூப்பி வணங்கிய வண்ணம் நிற்கிறார். இவருடைய அங்கங்களையும் அக்கமாலை அழகு செய்கிறது.

இவ்வாறு வனப்பில் சிறந்த வார்ப்புக்கலை தவிர ஓவியக்கலையும் நகரத்தார் கை வண்ணத்தில் இங்கு மிளிர்கிறது. அலங்கார மண்டபத்தின் விதானம் மற்றும் சுவர்களில் தீட்டப்பட்டுள்ள அறுபத்துமூவர் மற்றும் தொகையடியார் ஒன்பதின்மர் ஓவியம் நேரில் காணத்தக்கது. இங்குள்ள பிள்ளையார் ஓவியமும் புகழ் பெற்றது. எந்த கோணத்திலிருந்து பார்ப்பினும் நம்மையே பார்ப்பது போன்றுள்ளது தனிச்சிறப்பு!

இக்கோயில் இதுவரை ஏழுமுறை மகாகும்பாபிஷேகம் கண்டிருக்கிறது. கி.பி. 1899, 1928, 1933, 1951, 1976, 1992, 2004 ஆகிய

1. மா.சந்திரமூர்த்தி – ஆர். வசந்த கல்யாணி, ஓவியமும் காவியமும்,(தொகுப்பாசிரியர்) நடன. காசிநாதன், தமிழர் நாகரிகம், முதற்பதிப்பு, சென்னை, 1994 – 96 பக் – 44.

ஆண்டுகளில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடை பெற்றுள்ளது. ஆகமமுறைப்படி பூசைகள் நடைபெறும் இக்கோயிலில் நகரத்தார் மேற்பார்வையில் அவல், பொரி உருண்டை, பால், வெற்றிலை பாக்குடன் தொடங்கும் காலை வழிபாடு முதல் அப்பம், வடை, மோதகம், சாம்பார் சாதம் என இரவு வழிபாடு வரை சீராக நடைபெறுவதைக் காணலாம்.

இக்கோயிலின் முக்கியத்திருவிழா ஆவணி சதுர்த்தி விழாவாகும். பத்துநாள்கள் நடைபெறும் இவ்விழாவின் சிறப்பு முக்குருணி மோதக நைவேத்தியம். பதினெட்டுப்படி அரிசியால் செய்யப்பட்ட மோதகம் எட்டாம் நாள் அடுப்பிலேற்றி வேக வைக்கப்பட்டுப் பத்தாம் நாள் கற்பக விநாயகருக்கு நிவேதனம் செய்யப்படுகிறது. இதில் முதல் எட்டு நாள்கள் காலையும் - இரவும் விநாயகப் பெருமான் பல்வேறு வாகனங்களில் பவனி வருகிறார். ஒன்பதாம் நாள் மாலை தேரிலும், இரவு யானை வாகனத்திலும் வருகிறார். இந்த நாளில் மூலவருக்கு சந்தன அலங்காரம் நடைபெறும். வருடத்தில் ஒருநாள் மட்டுமே காணக்கூடிய அலங்காரம் இது. பத்தாம் நாள் தீர்த்த வாரியுடன் விழா முடிகிறது.

6. நேமம் கோயில்

கலியுகம் 3815-இல் கொடுக்கப் பெற்றது. (கி.பி. 714)

இறைவன் - செயங்கொண்ட சோழீசுவரர்

இறைவி - சௌந்தர நாயகி.

இத்திருக்கோயில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக் குடியிலிருந்து குன்றக்குடி, கீழச்சிவல்பட்டி செல்லும் சாலையில் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. திரிபுரம் எரிக்கச் சென்ற சிவபெருமான் தம் புன்சிரிப்பின் மூலம் திரிபுரங்களை எரித்து வெற்றி கொண்டதால் இப்பெயர் பெற்றார் எனத் தலப்புராணம் கூறுகிறது. இத்தலத்து இறைவன் பற்றி பாடுவார் முத்தப்பர் பாடிய 100 பாடல்களைக் கொண்ட ஜெயங்கொண்டார் சதகம் என்னும் நூல் உள்ளது.[1] இது நேமம் சோழீசுவரரைப் போற்றி உரைக்கும் நூலாகும்.

பிரிவுகள்

(1) கேரளசிங்க வளநாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில், தேனாறுபாயும், இளநலமுடையார். நேமம் கோயில் நகரத்தார் 20 ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். மொத்த புள்ளிகள் 1757.

1. முத்தப்ப செட்டியார், ஜெயங்கொண்டார் சதகமும், தேவி கோத்திரமும், மன்னவன் வெளியீடு, கீழச்சிவல்பட்டி, 1950.

கட்டடமும் கலையும்

நகரத்தார்களின் குலமரபுக் கோயில்களில் நேமம் செயங்கொண்ட சோழீசுவரர் கோயிலும் ஒன்றாகும். பழைமையும், பெருமையும் மிக்க இத்தலம் பண்டைய நாளில் **நியமம்** என்ற பெயரிலே அழைக்கப்பட்டு வந்துள்ளது. நியமம் என்ற சொல்லுக்கு கோயில் என்ற பொருள் உண்டு.[1] இப்பெயரே தற்போது மருவி **நேமம்** என வழங்கப்படுகிறது. இத்தலத்திற்கு **நந்திபுரம், மதுநதிபுரம், மதுவனத்தலம்**[2] **செயங்கொண்ட சோழபுரம், குலசேகரபுரம்** என வேறு பெயர்களும் உண்டு.

நேமம் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மைச் சிறப்புப்பெற்ற ஊராகும். ஏனெனில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்தைச் சார்ந்த **தமிழ் பிராமி கல்வெட்டு** ஒன்றில் **'வெள்ளறை நிகமது'** என்று வெள்ளறையைச் சார்ந்த வணிகக் குழுவைக் குறிப்பிடுகிறது. **மாங்குளம் கல்வெட்டிலும்**[3] **'நிகமம்'** என்ற சொல் **வணிகக்குழு** என்ற பொருளில் எடுத்தாளப்பட்டு இருப்பதை அறிகிறோம். எனவே வணிகக்குழு ஒன்று இப்பகுதியில் இருந்து செயல்பட்ட காரணம் குறித்து இவ்வூர் **'நியமம்'** எனப் பெயர் பெற்றது எனலாம்.

பாண்டியர் காலக் கல்வெட்டுக்கள் இக்கோயிலை **'செயங்கொண்ட சோழீசுவரமுடைய நாயனார் கோயில்'** என்றும், இறைவனைக் **'கேரள சிங்க வளநாட்டு அதளையூர் நாட்டுத் தேனாற்றுப் போக்கு உடையார் செயங்கொண்ட சோழீசுவரர்'** என்றும், இறைவியை **'திருக்காமக்கோட்ட நாச்சியார்'** என்றும் குறிப்பிடுகின்றன.

செயங்கொண்ட சோழன் என்பது இராசராச சோழனின் பட்டப்பெயர்களுள் ஒன்று. அவன் ஆதரவில் 10 - ஆம் நூற்றாண்டில் இக்கோயில் கட்டப்பெற்றிருக்கிறது என்பர்.[4] சோழர்களுக்குப் பிறகு இப்பகுதி பாண்டியர்களால் ஆட்சி செய்யப்பட்டுள்ளது என்பதற்குச் சான்றாக நேமம் கோயிலில் **விக்கிரம பாண்டியன், சுந்தரபாண்டியன், குலசேகரபாண்டியன்** ஆகிய மன்னர்களின் **கல்வெட்டுகள்** இருந்திருக்கின்றன. ஆனால் திருப்பணி காலத்தில் அவை இடம் மாறி இருக்கின்றன. **நேமத்தில்**

1. சா.கணேசன் முதலியோர்., (ப.ஆ), கையேடு, கலைக்காட்சிக்குழு, இரண்டாவது உலகத் தமிழ் கருத்தரங்கு மாநாடு, சென்னை, 1968
2. நடராசன் செட்டியார், நாராயணன், நேமம் கோயில் வரலாறு, நா.அ. அண்ணாமலை செட்டியார் நினைவு வெளியீடு, கீழச் சிவல் பட்டி, 1961.
3. I.Mahadevan, Corpus of the Tamil - Brahmi Inscriptions, Seminar on Inscription (Ed) R.Nagaswamy, Madras, 1966, p 60.
4. டாக்டர் வ.தேனப்பன், ஒன்பது நகரக்கோயில்கள், தேவக்கோட்டை, 1990, பக், 247

வரலாற்றுச் சிறப்புடைய செப்பேடு ஒன்றும் கிடைத்துள்ளது. இது கிபி. 1758-ஆம் ஆண்டு மதுரை நாயக்கர் பேரரசு காலத்தது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க, இயற்கையான சூழலில் அமைந்துள்ள நேமம் செயங்கொண்ட சோழீசுவரர் கோயில் கருவறை, இடைநாழி, அர்த்த மண்டபம், மகாமண்டபம், முன் மண்டபம், திருச்சுற்று, பரிவார ஆலயங்கள், மாளிகைப்பத்தி, நடராஜர் சபை, பள்ளியறை, அம்மன் சன்னிதி, நந்திபீடம், கொடிமரம், வியஞ்சன அறை, வாகன அறை, சுவாமி கோபுரம், அம்மன் கோபுரம், ராஜகோபுரம் ஆகிய பகுதிகளை முறையாகக் கொண்டு விளங்குகிறது.

செட்டிநாட்டுப் பகுதியில் நேமம் கோயில் சிற்பங்கள் புகழ்பெற்றவை. இச்சிற்பங்களை செயங்கொண்ட சோழீசுவரர் கோயிலின் முன் மண்டபத்திலும், திருச்சுற்று மாளிகைப் பத்தியிலும் காணலாம். இவை யாவும் ஒரே கல்லாலான கர்ணக்கால் மற்றும் அணிஒட்டிக்கால் போன்ற தூண்களின் முன்புறம் மற்றும் பக்க வாட்டிலும் பார்ப்போர் வியக்கும் வகையில் செதுக்கப்பட்டுள்ளன.

நம்மை ஆட்கொள்ளும் சிவபெருமானின் வடிவங்கள் மூன்று வகையின. முதலாவதான தேவியுடன் இணைந்த போகவடிவமான உமாமகேசுவரர், ரிஷபாரூடர், சோமாஸ்கந்தர் போன்றவை. அடுத்து தட்சிணாமூர்த்தி யோக வடிவம். காலசம்ஹாரர், ஊர்த்துவ தாண்டவர், வீரபத்திரர் போன்ற வேக வடிவான மூன்று வகை வடிவங்களையும் நேமம் கோயிலில் காணலாம்.

வல்லபை கணபதி

திருச்சுற்று மாளிகைப்பத்தியின் முதல் தூணில் வல்லபை கணபதி வடிக்கப்பட்டுள்ளது. தாமரை இருக்கை மீது மூஷிக வாகனத்தில் கணபதி வல்லபையுடன் காட்சி தருகிறார். பத்துக் கரங்களில் வலது கரங்கள் சக்கரம், அம்பு, தந்தம், அங்குசம், மாதுளம்பழம் ஆகியவை கொண்டும், இடது கரங்கள் தாமரை, வில், அல்லிமலர், மோதகம் கொண்டும் காணப்படுகிறது. ஒரு கரம் இடது தொடையில் அமர்ந்துள்ள வல்லபையைத் தழுவியவாறு உள்ளது. வல்லபையின் இடதுகரம் மலரைப் பிடித்தும், வலதுகரம் விநாயகப் பெருமானின் இடையைப் பற்றியும் உள்ளது. விநாயகப் பெருமானும், அவர்தம் தேவியும் உரிய அணிகலன்களுடன் வடிக்கப் பட்டுள்ளனர்.

ஆறுமுக செவ்வேள்

திருச்சுற்று மாளிகைப் பத்தியின் வடதிசை கர்ணக்கால் தூணில் இவ்வுருவம் வடிக்கப்பட்டுள்ளது. பன்னிரு கரங்களிலும் ஆயுதங்கள் ஏந்தி மயில் வாகனத்தின் மீது வனப்புடன் வீற்றிருக்கும் முருகப்பெருமான் இடது காலை மடித்து வலதுகாலைத்

தொங்கவிட்டு எழிலுடன் காட்சியளிக்கிறார். பன்னிரு கரங்களில் பெருவில் - அம்பு, சக்தி - வச்சிரம், கேடயம் - குறுவாள், பாசம் - அங்குசம், சக்கரம் - தாமரைப்பூத் தண்டு, அபயம் - வரதம் கொண்டு காணப்படுகிறார். முருகப் பெருமானின் மூன்று முகங்களை மட்டும் காட்டிப் பின் முகங்களை இங்கு மறை பொருளாக்கியுள்ளனர். இவரது தலைமுதல் பாதம் வரை உரிய அணிகள் அழகூட்டுகின்றன.

திரிபுர சம்காரர்

ஆறுமுகப் பெருமானின் இடப்புறம் சிவபெருமான் நான்கு கரங்களிலும் ஆயுதம் ஏந்திப் போர்க்கோலம் கொள்ளும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் தன் மேலிரு கைகளில் மழுவும் - மானும் ஏந்தி நிற்கிறார். கீழிரு கரங்களில் இடக்கை நீண்ட வில்லைப் பற்றியும், வலக்கை அம்பைப் பற்றியும் காணப்படுகிறது. தலையை நீள்சடை முடியும், காதுகளை மகரக்குழையும் - ஓலைக்குழையும் அலங்கரிக்க, கழுத்தில் கழுத்தணிகள் பூண்டு, இடையில் அரைக்கச்சை, தொடைமீது தொடை மாலை, கால்களில் வீரக்கழல்கள் ஆகியவை போர்க்கோலப் பெருமானை அழகு செய்கின்றன.

திரிபுர சுந்தரி

சிவபெருமானின் எதிரே உள்ள தூணில் பார்வதிதேவி போர்கருவிகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். மேல் வலக்கை அங்குசத்தையும், இடக்கை பாசத்தையும் பிடித்துள்ளது. கீழ் வலக்கையில் அம்பும், இடக்கையில் நீண்ட வில்லும் பற்றி இடதுகாலை ஊன்றி, வலதுகாலை முன் வைத்துப் போர் தொடங்கும் நிலையில் திரிபங்கியாக அழகுடன் காட்சிதருகிறாள்.

ஊர்த்துவ தாண்டவமூர்த்தி

ஆடும் பெருமான் இடதுகாலை முயலகன் மீது வைத்து, வலது காலை மேலே உயர்த்தி, பத்துக்கரங்கள் அதிர வீசியாடுகிறார். எண் கரங்க்ளில் வலது கைகளில் முறையே உடுக்கை, மழு, கத்தி, திரிசூலம் ஆகிய ஆயுதங்கள் காட்டப்பட்டுள்ளன. இடது கைகளில் அனல், பாயும் மான், கேடயம், ரிஷபக்கொடி ஆகியவை உள்ளன. கீழ் முன் வலக்கை அபயமளிக்க, இடக்கை மார்புக்குக் குறுக்கே நீண்டு வேழ முத்திரை காட்டுகிறது. மேலே தூக்கிய வலக்கால் முன்னிரு கைகளின் இடையே அமைந்து உயர்ந்து நிற்கிறது. தலையை நீள் சடைமுடி அலங்கரிக்கிறது. பெண்மை தன் தோல்வியை ஒப்புக் கொள்ளச் செய்த பெருமிதத்தைச் சிவனது முகத்தில் காணலாம்.

ஆலங்காட்டுக் காளி

ஊர்த்துவ தாண்டவமாடும் சிவபெருமான் எதிரே உமை ஆலங்காட்டுக் காளியாக எதிர்த்து நடனமாடும் உருவம்

வடிக்கப்பட்டுள்ளது. எண்கரங்களோடு காணப்படும் இத்தேவி அனல் விட்டு எரியும் ஜுவாலா மகுடம் அணிந்து, அம்பு-வில், சக்கரம்-சங்கு, கேடயம்-வாள், திரிசூலம்-கபாலம் ஆகிய ஆயுதங்களை ஏந்தியுள்ளாள். கபாலம் ஏந்திய கையின் கீழ் சிற்றத்துடன் படமெடுத்தாடும் பாம்பு ஒன்று காட்டப்பட்டுள்ளது. முகத்தில் ஒருவித சிற்றமும், சினமும் தெரிந்தாலும் தன் பெண்மையின் தோல்வியை ஒப்புக்கொண்ட நாணத்தின் சாயலும் இத்தேவியின் முகத்தில் காணப்படுகிறது.

ரிஷபாரூடர்

ஊர்த்துவ தாண்டவரின் இடப்புறம் இவ்வடிவம் காணப்படுகிறது. நந்தி வாகனத்தின் மீது நீண்ட இருக்கையில் சிவனும் - உமையும் உமாசகிதராக அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கின்றனர். இருவரும் இடது காலை மடித்து, வலதுகாலைத் தொங்கவிட்டு சுகாசனத்தில் அமர்ந்துள்ளனர். சிவனது மேற்கரங்கள் மழுவும்-மானும் பற்றியும், கீழ்க்கரங்கள் அபயம் - வரதம் அளித்தும் காட்சியளிக்கின்றன. உமையின் வலக்கரம் நீலோற்பலமலரைப் பற்றியும், இடக்கரம் தொடை மீதும் அமைந்துள்ளது.

ரிஷபாரூட மூர்த்தியின் பீடத்தில் நான்முகன் பறக்கும் இரு குதிரைகள் பூட்டியதேரை ஓட்டி வருகிறான். நான்முகனின் பின்னிரு கரங்களில் அக்கமாலையும், கெண்டியும் உள்ளன. கீழிரு கரங்களால் சாட்டையைப் பிடித்துப் புரவியை அடக்கித் தேரை ஓட்டுகிறான். இச்சிற்பத்தின் முன் நிற்கும்போது விண்ணிலே தோன்றிய ரிஷபாரூட மூர்த்தியைப் பிரம்மன் தன் தேரிலே ஏற்றி வருவது போன்ற தோற்றத்தை இயற்கையாக ஏற்படுத்துகிறது.

மீனாட்சி கல்யாணம்

இச்சிற்பம் தென்திசைத் தூணில் ஆடும் காளியை அடுத்து வலப்புறம் அமைந்துள்ளது. ஆலவாய் அழகரான சுந்தரேசப் பெருமான் அங்கயற்கண்ணியைக் கைத்தலம் பற்றும் மணக்கோலம் இங்குச் சிற்பக் காவியமாக வடிக்கப்பட்டுள்ளது. வலப்புறம் திருமால் மேலிரு கரங்களில் ஆழியும்-சங்கமும் பற்றித் தம் தங்கையான மீனாட்சியை சுந்தரேசருக்குத் தாரை வார்த்து ஒப்படைக்கிறார். இடப்புறம் அழகே உருவான சுந்தரேசர் மேலிரு கரங்களில் மழுவும்-மானும் பற்றிக் கீழ் வலக்கரத்தால் அம்மையின் கைத்தலம் பற்றுகிறார். இடக்கரம் அடியவர்களுக்கு ஆசி வழங்கும் கரமாக அமைந்துள்ளது.

கள்ளழகருக்கும், ஆலவாய் அழகருக்கும் இடையே முழுநிலவாய்த் தோன்றும் தேவி அண்ணலை மணக்கும் ஆனந்த பரவசத்தால் மலர்ந்த முகமும், முறுவலிக்கும் இதழும் கொண்டு, நாணத்தால் தன்னை மறந்த நிலையில் உடலை ஒயிலாக ஒடித்துத்

தன்னை பெருமானிடம் ஒப்புவிக்கும் மணக்கோலக்காட்சி திருக்கோலமாக விளங்குகிறது. இச்சிற்பத் தொகுதியின் பீடத்தில் மணவேள்வி வளர்க்கும் நான்முகன் காட்டப்பட்டுள்ளார். இச்சிற்பம் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கம்பத்தடி மண்டபத்தில் உள்ள ஏழு கோயில் நகரத்தார் பணியான (கி.பி. 1877) மீனாட்சி திருமணத்தை ஒத்த அமைப்புடையது.[1]

சக்தி

முகமண்டபத்தின் முன்புறம் திருச்சுற்று மாளிகையில் உள்ள தூண்களில் வல்லபை கணபதியை அடுத்து இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. ஒயிலாக ஆபங்கத்தில் நிற்கும் அன்னை தன் எதிரே எண்கரங்களில் ஆயுதம் பூண்டு, நீண்ட வீணையை இசைக்கும் அண்ணலின் கோலத்தை நின்று காணும் வகையில் ஆறு கரங்களுடன் அமைந்துள்ளது. ஆறு கரங்களில் சங்கு, சக்கரம், நீலோற்பலம், விரிந்த பத்மம், கத்தி, தாமரைப் பொகுட்டு ஆகியவை உள்ளன. அன்னையின் இடக்கரத்தில் அமர்ந்து தாமரைப் பொகுட்டினை அலகால் கவ்வுகின்ற கிளி ஒன்றும் காட்டப்பட்டுள்ளது.

வீணையேந்திய பெருமான்

மீனாட்சி திருமணத்தை அடுத்துள்ள தென்திசைத் தூணில் சக்தியின் எதிரே சிவபெருமானின் இவ்வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் எண் தோள்களில் மழு, மான், கத்தி, உடுக்கை, அக்கமாலை, சுவடி, இசைக்கோல், வீணை ஆகியவற்றை ஏந்தி ஆடும் பெருமானாக உள்ள கோலத்தை இங்கு காணலாம். வீணையை செங்குத்தாகப் பிடித்து மென்மையாக மீட்டும் ஆடும் பெருமானின் பின்புறம் உள்ள தூணிலிருந்து வெளிப்படும் பெரும்பாம்பு ஒன்று வீணையின் கீழ்ப் பகுதியைத் தன் மகுடத்தால் தாங்கி நிற்பது நேரில் காணத்தக்கது.

உக்கிரமூர்த்தி

முகமண்டப முன்வரிசையில் தென்கிழக்கு மூலையில் உள்ள தூணில் இச்சிற்பம் அமைந்து உள்ளது. எண்கரங்களுடன் கொடிய ஆயுதங்கள் பற்றிச் சீற்றத்துடன் தோன்றும் நிலையில் இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இரு கரங்களிலுமாக சக்திப்படை, வாள், கோடரி, திரிசூலம், மழு, கேடயம், ஒலிக்கும் மணி, ஆடும் அரவம் ஆகியன காட்டப்பட்டுள்ளன. பெருமானின் இடக்கரத்திலுள்ள அரவத்தின் படம் உக்கிரமூர்த்தியின் முகத்தின் பக்கவாட்டிலும், வால் தரையைத் தொடுமளவும் நீண்டுள்ளது. உக்கிரமூர்த்தியின் கையிலுள்ள கொடிய ஆயுதங்கள் தவிர்த்து கழுத்தில் மாலையாக

1. கி.பழனியப்பன், கோயில் மாநகர், (மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் வரலாறு) மதுரை, 1963, பக், 168 – 170.

ஒரு கொடிய நாகமும், இரு மேல் தொடைகளின் மேலும் இரு கொடிய நாகங்கள் படமெடுத்துச் சீறி நிற்கின்றன. மகா உக்கிரமான இப்பெருமானின் தலையை நீண்ட சடாமுடி அலங்கரிக்க இரு புறமும் அக்னிஜுவாலை சுடர்வீசும் அனல் மகுடம் காட்சியளிக்கிறது.

உக்கிரசக்தி

உக்கிர மூர்த்திக்கு எதிரே இவ்வுருவம் அமைந்துள்ளது. ஆறு கரங்களிலும் கொடிய ஆயுதம் ஏந்திச் சீற்றத்தோடு தோன்றும் இப்பெண் தெய்வம் வலதுகாலைத் தரையில் ஊன்றி இடது காலை முன்நிறுத்தி உடலை மூன்றாக ஒடித்து நிற்கிறது. இத்தேவியின் பின்னிரு கரங்கள் சக்கரமும் - சங்கும் தாங்கியுள்ளன. நடு இரு கரங்கள் ஏர்கலப்பையும் - மண்வெட்டியும் கொண்டுள்ளன. கீழிரு கரங்கள் ஓங்கிய வாளையும் - கேடயத்தையும் ஏந்திய வண்ணம் போர்க்கோலம் கொண்டுள்ளன. முழங்கால் எலும்புகளிலும், கால் நரம்புகளிலும், அங்கங்களின் அசைவினிலும், ஆயுதங்களின் வீச்சுகளிலும் இத்தேவியின் சீற்றம் தொனிக்கிறது.

அக்னி வீரபத்திரர்

இவ்வுருவம் முக மண்டபத்தின் எதிரேயுள்ள திருச்சுற்று மாளிகைப் பத்தியின் நான்காவது தூணில் அமைந்துள்ளது. எண் தோள்களில் பல்வகை ஆயுதங்களேந்தி உக்கிரமாக நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளது. இதன் வலது கைகளில் சூலம், அரவம் சுற்றிய உடுக்கை, மழு, போர்வாள் ஆகிய ஆயுதங்கள் உள்ளன. இடது கைகளில் கபாலம், பாசம், பாயும் மான், கேடயம் ஆகிய ஆயுதங்கள் உள்ளன. இதன் நெற்றியில் மூன்றாவது கண் செங்குத்தாகக் காட்டப் பட்டுள்ளது. இச்சிற்ப வடிவம் பேரூர் சிற்பத்தை நினைவூட்டுகிறது.[1]

எண்தோள் காளி

தென்திசையில் வீரபத்திரரை அடுத்து காளியின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. வீரபத்திரரின் தேவியான இவள் எண் கரங்களில் நாகம் சுற்றிய உடுக்கை, குறுவாள், அசுரன்தலை, திரிசூலம், பாசம், கேடயம், ரிஷபக்கொடி, கபாலம் ஆகிய கொடிய ஆயுதங்கள் காணப்படுகின்றன. தலையின் பின்புறம் விரிந்த அனல் மகுடம் காட்சியளிக்கிறது. ஆவேசத்தோடு ஆடும் காளியின் கால்களின் அசைவிலும், கரங்களின் வீச்சிலும் ஒரு நயத்தையும், கலையையும் காணமுடிகிறது.

காலசம்ஹார மூர்த்தி

இச் சிற்பத்தொகுதியில் சிவலிங்கம், இலிங்கத்தைப் பூசை செய்யும் மார்க்கண்டேயன், அவனது உயிரைக் கவர்ந்து செல்ல

1. நா. மகாலிங்கம், கொங்குத் திருக்கோயில்கள், கோவை, 2000, பக், 44.

எருமை மீது வரும் காலன், அக் காலனைத் தன் காலால் உதைத்து அழிக்க விரையும் சிவபெருமான் ஆகியோரின் உருவங்களைக் காணலாம். காலனைக் கடிந்துகக்கும் பெருமானைச் சீற்றத்தோடும், அவர் முன்பு செயலற்று வீழ்ந்து கிடக்கும் காலனை உயிருக்கு மன்றாடும் நிலையிலும், பயத்தோடும் ஆழ்ந்த பக்தியை உணர்த்தும் தெய்வீக உணர்வோடு மார்க்கண்டேயனையும், அவன் பூசிக்கும் இலிங்கத்தைத் தலையில் கடமையுணர்வோடு தாங்கி நிற்கும் சிவகணத்தையும் அளவோடும், அழகோடும் ஒரே கல்லில் வடித்துள்ள இச்சிற்பத்தொகுதி இங்குள்ள சிற்பங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போன்று அணி செய்கிறது. இலிங்கத்தையும், மார்க்கண்டேயனையும், சிவனது இடது காலையும் சுற்றிவரும் பாசக் கயிற்றினைக் கல்லா அல்லது கயிறா என வியக்குமளவு செதுக்கியுள்ள சிற்பிகளின் திறன் போற்றத்தக்கது.[1]

வீணை மீட்டும் பெண் தெய்வம்

காலசம்ஹார மூர்த்தியின் மேல்புறம் உள்ள தூணில் ஆறு கைகளுடன் உடலைத் திரிபங்கத்தில் கொண்டு வீணை வாசிக்கும் பெண் தெய்வத்தின் உருவம் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. கரங்கள் தாமரை பொகுட்டு, விரிந்த பத்மம், நீண்ட மலர்ச்சரம், நீலோற்பலம், ஒலிக்கும் மணி ஆகிய மங்கலப் பொருள்களைப் பிடித்துள்ளது. இடது முன்கை நீண்ட வீணையைச் செங்குத்தாகக் கையிலேந்தி மீட்டும் நிலையிலும், வீணை மீட்டுகின்ற நாதத்தால் தன்னை மறந்து இலயித்த நிலையில் தேவியின் முகப்பொலிவு, மென்மையான விரல்கள் யாவும் அழகாக வடிக்கப்பட்டுள்ளன.

தக்கயாக சம்ஹார மூர்த்தி

இவ்வுருவம் முக மண்டபத்தின் தென்திசையில் ரிஷபாரூட மூர்த்தியை அடுத்துள்ள தூணில் அமைந்துள்ளது. வலதுகாலை வளைத்து ஊன்றி, இடதுகாலை முன்புறம் நீட்டி ஆடும் நிலையில் சக்திப்படை, வச்சிரப்படை, கதாயுதம், பாசம், போர்வாள், மழு, அங்குசம், சூலம், சக்கரம், விரிந்த பத்மம் ஆகியவை பத்துக் கரங்களில் கொண்டு விளங்கும் இச்சிற்பம் சிவபெருமானுக்குரிய அணிகலன்கள், நெற்றியில் மூன்றாவது கண் ஆகியவை கொண்டு காட்சியளிக்கிறது.

உக்கிர காளி

இக்காளியின் சிற்பம் ஆறுமுகச் செவ்வேளினை அடுத்த தூணில் அமைந்துள்ளது. இத்தேவியின் கரங்களிலுள்ள ஆயுதங்களும், ஊர்த்துவ தாண்டவரின் எதிரேயுள்ள காளியின் கரங்களிலுள்ள ஆயுதங்களும் ஒத்துள்ளன. அனல் கக்கும்

1. மா.சந்திரமூர்த்தி, நேமம் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1991, பக், 102 – 106, படம் – 4.

ஆவேசத்தோடு ஆடும் அன்னையின் தலையில் ஜடாமகுடமும் அனல் மகுடமும் அழகு செய்கின்றன. கரங்களில் சக்கரம், அம்பு, திரிசூலம், போர்வாள், சங்கு, வில், கபாலம், கேடயம் ஆகிய ஆயுதங்கள் காணப்படுகின்றன.

வில்லேந்திய அம்மன்

தென்புறத் திருச்சுற்று மாளிகையில் இவ்வுருவம் அமைந்துள்ளது. சக்தியின் அம்சங்களில் ஒன்றான தேவி இடது கையிலுள்ள வில்லைத் தரையில் ஊன்றி அசையும் நிலையும், இடையை இடப்புறமாக ஒடித்து நிற்கும் அழகிலும், மலர்ந்த கண்களிலும், கலையழகு வெளிப்படுகிறது. திரிபங்கத்தில் தோன்றும் சக்தியின் ஏனைய கரங்களில் தீப்பந்தம், கத்தி, குறுவாள், ஆடும் அரவம், சிறிய கேடயம் ஆகியவை உள்ளன.

வீதித்தும்ஸர்

வடதிசை திருச்சுற்று மாளிகையின் இரண்டாவது தூணில் அமைந்துள்ள கடைசிச் சிற்பமாகும். எண் கரங்களில் கொடிய ஆயுதம் பற்றி, கண்களிலே அனல் கக்கும் ஆவேசத்தோடு இவ்வுருவம் படைக்கப்பட்டுள்ளது. 'இதன் வலது கரங்களில் அங்குசம், அம்பு, அரவம் சுற்றிய உடுக்கை, வெட்டும் வாள், இடது கரங்களில் கபாலம், வில், கேடயம், அசுரன் தலை ஆகியவற்றை ஏந்திச் சிற்றத்துடன் தோன்றும் இத்தெய்வத்தால் வெட்டுண்ட அசுரன் உடலை முண்டமாகப் பக்கத்தூணில் காணலாம்.

பொதுவாக விஜயநகரக் காலத் தூண் சிற்பங்களுக்கு ஸ்ரீரங்கமும், வேலூரும் புகழடைந்தது. நாயக்கர் காலச் சிற்பங் களுக்கு மதுரையும், தஞ்சையும், தாடிக்கொம்பும் சிறப்படைந்தது. இதுபோல் நகரத்தார் காலத் தூண் சிற்பங்களுக்கு நேமம் புகழ் வாய்ந்ததாகக் கருதலாம். இங்குள்ள ஒவ்வொரு சிற்பமும் நிற்கும் நிலையிலும், அசைவிலும், ஆடும் வீச்சிலும், முகப்பொலிவிலும் கலைநயத்தோடு காட்டப்பட்டுள்ளன[1]

உதாரணமாகத் திரிபுரசுந்தரராக சிவபெருமான் வில்லேந்தி நிற்கும்போது முகத்திலே உள்ள பெருமிதமான முகப் பொலிவு, எதிரேயுள்ள தூணில் அவரது தேவியான பார்வதி போர்க்கோலம் கொண்டும் எதிரே நிற்கும். அண்ணலின் பேரழகைக் கண்டு வியந்து நிற்கும் நிலையில் வடிக்கப்பட்டுள்ளாள். இதே சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவம் ஆடும்போது தன் பெண்மையின் தோல்வியால் முகத்தில் சிற்றம் தொனிக்கிறது. அடுத்து வீரபத்திரரான இறைவனுக்கு இணையாக தட்சயாகத்தில் தட்ச உக்கிரக் காளியாகி முகத்தில் கோபக்கனல் வீசக் காட்சியளிக்கிறாள்.

1. மா.சந்திரமூர்த்தி, நேமம் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1991, பக், 111.

இத்தேவியே ஆலவாய் அழகர் கைத்தலம் பற்றும் போது முகத்தில் பெண்மையின் நாணமும், மலர்ந்த முறுவலுடன் தலை குனிந்து காணப்படுகிறாள். இப்படி வெவ்வேறு உணர்வுக் கலவைகளாக தேவியின் வடிவங்கள் படைக்கப் பட்டுள்ளது வியப்பிற்குரியது. நேரில் காணத்தக்கது. இத்திருக்கோயிலின் இரண்டாம் பிரகாரத் திருமதிலின் பின்புறம் சக்தி பீட வடிவில் நேமங்காளி வீற்றிருக்கிறாள். இக்காளி இப்பகுதியில் மிகவும் சீற்றமான தெய்வமாகக் கருதப்படுகிறது. இக்கோயிலின் தென்திசையில் சோழகுல ஊருணியும் வடதிசையில் சோழகுல விநாயகர் கோயிலும் உள்ளன. இக்கோயிலுக்கு 1907, 1961 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில் குடமுழுக்கு விழா நடந்துள்ளது.

7. இலுப்பைக்குடிக் கோயில்

கலியுகம் 3815 இல் கொடுக்கப் பெற்றது. (கி.பி. 714)

இறைவன் - தான் தோன்றீசுவரர்

இறைவி - சௌந்தர நாயகி.

இத்திருக்கோயில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக் குடியிலிருந்து மாத்தூர் செல்லும் சாலையில் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. பிரம்மன், இந்திரன், திருமால் இவர்களின் விருப்பத்திற்கேற்ப சிவபெருமான் கும்பாண்டகன் என்ற அசுரனை அழிக்கத் தோன்றியதாகத் தலபுராணம் கூறுகிறது.[1] ஒன்பது நகரக் கோயில்களில் இங்கு மட்டுமே ஆண்டு தோறும் சித்திரை மாதம் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது.

பிரிவுகள்

(1) கேரளசிங்க வளநாடாகிய பிரம்பூர் நாட்டில், இலுப்பைக் குடியான புகழிடங்கொடுத்த பட்டணத்தில், சூடாமணி புரமுடையார். இக்கோயிலைச் சார்ந்த நகரத்தார்கள் செட்டி நாட்டில் 31 ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை 2472.

கட்டடமும் கலையும்

நகர சிவன் கோயில்களில் இலுப்பைக்குடியும் ஒன்று. **இலுப்பை மரங்கள்** அடர்ந்த காடாக ஒரு காலத்தில் இருந்ததால் **இலுப்பைக்குடி** என அழைக்கப்பட்டது. எனினும் கோயிலின் தலமரமாக வில்வம் திகழ்கிறது. இலுப்பைக்குடி என்று இன்று அழைக்கப்பட்டாலும் பண்டைய நாளில் **அதிவீரபாண்டியபுரம், இலுப்பைநகர், இலுப்பையூர், மதுகபுரம், வில்வவனம்** எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டது.

1. சுப்பிரமணிய ஐயர், இலுப்பைக்குடி தல புராணம், தெய்வம் அச்சகம்,தேவகோட்டை, 1987.

தமிழகக் கோயில்களில் வளர்ந்த சிற்பக்கலை, படிமக்கலை, ஓவியக் கலை போன்ற கோயிற் கலைகளைப் பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகரர், நாயக்கர், மராட்டியர் ஆகிய மன்னர் வம்சத்தவர் காலம் தோறும் வளர்ந்து வந்தனர். அரசமரபினருக்குப் பின்னர்க் கோயிற்கலைகளை வளர்த்த பெருமை நகரத்தார்களுக்கே உரியது. 18-ஆம் நூற்றாண்டு முதல் செட்டிநாட்டுப் பகுதியில் நகரத்தார் வளர்த்த கோயிற்கலையை நகரத்தார் கலை என்றே கூறலாம்.

இக்கோயிலின் சிற்பக்கலை, கட்டடக்கலை, ஓவியக்கலை மூன்றும் மனத்தைக் கவர்ந்திழுக்கும் தன்மை வாய்ந்தவை. தான்தோன்றீசுவரர் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், முக மண்டபம், அம்மன் சன்னிதி, பரிவார ஆலயங்கள், பைரவர் சன்னிதி, இராஜ கோபுரம், திருச்சுற்று மாளிகை ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது.

இந்திர விமானம்

தான்தோன்றீசுவரர் கருவறையை எட்டு யானைகள் தாங்கி நிற்கின்றன. மதுரை சொக்கரின் இந்திர விமானத்தைத் தாங்கும் வெள்ளை யானைகளைவிட உருவத்தில் சிறுத்தும், நுட்பமான வேலைப்பாட்டில் தனித்தும் விளங்குவது இச்சிற்பத்தின் தனிச்சிறப்பாகும்.

பல்லியின் சிற்பம்

இக்கோயில் குமுதப்படையில் சிறிய பல்லி ஒன்று தன் கால்களால் தரையைப் பற்றிக் கொண்டு தன்முன் உள்ள பூச்சியை இரையாக அடைய கவனமாகப் பிடிக்கச் செல்லும் நிலையில் உள்ள சிறிய சிற்பம் அக்காலச் சிற்பியின் நுட்பமான கைத்திறனுக்குச் சான்றாகும். இப்பல்லியின் சிறிய கண்களும், கூரிய நகங்களும், நீண்ட வாலும் கூட மிகக் கவனத்துடன் சித்திரிக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 11 செ.மீ. என்றால் சிற்றுளியின் ஆற்றலை எண்ணி வியக்காமல் இருக்க முடியுமா![1]

கல்லில் விரிந்த தாமரை

இவர்களின் கைத்திறனுக்கு மற்றுமொரு சான்றாக தட்சிணாமூர்த்தி மண்டபத் தூண்களின் மேலுள்ள குடத்திற்கும் பலகைக்கும் நடுவே உள்ள கல்லிலே விரிந்த தாமரை திகழ்கிறது. 48 பூவிதழ்களைக் கல்லிலே மிக இயற்கையாகப் படைத்து தட்டினால் மென்மையான ஒலி கேட்கும் அளவில் இதழ்களைத் தோற்றுவித்துள்ள பாங்கு போற்றத்தக்கது.

1. மா.சந்திரமூர்த்தி, இலுப்பைக்குடிக் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988, பக் – 29.

பைரவர் வடிவங்கள்

நடராஜர் சன்னிதி முன்பு காணப்படும் ஒரு அங்குல உயரமுடைய விநாயகரின் சிற்பமும் சிற்பிகளின் சீரிய திறனுக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு. மேலும் கோயில் புறச்சுவரின் கபோதகக் கூடுகளை அழகிய சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. பைரவர் சன்னிதி கபோதகப்பகுதியின் கூடுகளில் மட்டும் பதினைந்து வகையான பைரவரின் திருக்கோலங்கள் காட்டப்பட்டுள்ளது இச்சன்னிதியின் சிறப்பு அம்சமாகும்.

கொங்கண சித்தர்

கொங்கண சித்தரோடு மிகுந்த தொடர்புடையது இத்தலம். இவர் கொங்கு நாட்டிலுள்ள ஊதியூர் மலையில் வசித்தவர்[1]. கொங்கண சித்தர் தாமிரத்தைத் தங்கமாக்கும் இரசவாதத்தைக் கற்றிருந்தார். இரும்பு முதலிய நவஉலோகங்களையும், சூதம், இலிங்கம், அரிதாரம் முதலிய இரசவாதத்திற்குரிய பொருள்களோடு தாமிரத்தைச் சேர்த்து இவர் உருவாக்கிய முதல் முயற்சியில் 16 மாற்று தங்கம் கிடைத்தது. பின்னர் மேலும் முயன்று 500 மாற்று வரை தாமிரத்தைத் தங்கமாக்கினார். சிவபெருமானை வேண்டி சித்தர் காட்டில் தங்கி விளாரி என்ற பச்சிலைச் சாற்றுடன் உலோகங்களைப் போட்டுக் காய்ச்ச மேலும் 500 மாற்றுப் பொன் கிடைக்க மகிழ்ந்தார். இன்னும் ஆசை அதிகரிக்க, மாற்றுப் பெருக்க மூலிகைகளைத் தேடிக் காட்டில் அலைந்த போது ஒரு முனிவர் அவர்முன் தோன்றி மதுகபுரம் செல்லுமாறு பணித்தார். சித்தர் ஆவலுடன் மதுகபுரமாகிய இன்றைய இலுப்பைக்குடியை அடைந்து நீராடி இறைவனை வழிபட்டார். அப்போது இறைவன் 1000 மாற்றுத் தங்கத்தை விட அதிகமான ஒளிவீசிக் கொண்டு சுயம் பிரகாசராக வில்வ மரத்தடியில் தோன்றினார். இறைவனைக் கண்ட அளவில் சித்தரின் ஆசையும் விடுபட்டது. இதன் அடிப்படையில் சித்தர் இறைவனை வில்வமரத்தடியில் வழிபடும் சிற்பம் ஒன்று நாகர் மண்டபத்தில் காணப்படுகிறது. இதன் தலமரமான வில்வம் கற்சிற்ப வடிவில் இங்கு வழிபாட்டிலுள்ளது.[2]

சித்தரின் செப்புத்திருமேனி

மேலும் தமிழகத்தில் வேறு எங்கும் காண முடியாத அளவில் கொங்கண சித்தரின் செப்புத்திருமேனி ஒன்று இக்கோயிலில் உள்ளது. நின்றகோலத்தில் இரு கரங்களுடன் வார்க்கப்பட்டுள்ள

1. கா.சுப்பிரமணிய பிள்ளை, இலக்கிய வரலாறு, இரண்டாம் பகுதி, சென்னை, 1958, பக், 340 – 41
2. மா.சந்திரமூர்த்தி, இலுப்பைக்குடிக் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988, பக், 63 – 64.

இத்திருமேனி நகரத்தார் கலையாகும். இருகரங்களில் வலக்கரம் அக்கமாலையும், இடக்கரம் ஓடு ஏந்தியும் காணப்படுகிறது. தலையில் தலைப்பாகை அணிந்து, கழுத்தில் அட்சமாலை அழகு செய்ய எளிமையான தோற்றத்துடன் இச்சிலை வடிக்கப்பட் டுள்ளது. **தமிழகக் கோயில்களில் இலுப்பைக்குடியில் மட்டும் தான் கொங்கண சித்தருக்குப் படிமம் உள்ளது என்பது தனிச்சிறப்பாகும்.**[1] இக்கோயிலிலுள்ள நடராஜர், சிவகாமி, ஸ்ரீ பலிநாயகர், சோமாஸ்கந்தர், வீணாதரமூர்த்தி. போகசக்தி, பிடாரி அம்மன், அஸ்திர தேவர், விநாயகர், சண்டேசுவரர், சுந்தரமூர்த்தி நாயனார், பரவை நாச்சியார், நர்த்தன ஞானசம்பந்தர் ஆகிய படிமங்கள் பாண்டியர் காலத்தைச் சார்ந்தவை. இவற்றில் ஆடவல்லானின் உருவம் குறிப்பிடத்தக்கது. இதன் விரிசடை மேல் நோக்கிப் பறக்கிறது. கைகளிலும், கால்களிலும் உள்ள அணி கலன்கள் வேலைப்பாடு மிக்கவை. இதன் திருவாசி வனப்புடையது. ஆடவல்லானின் தேவி அனுபவம் மிகுந்த பாண்டிய நாட்டுக் கலைஞனின் கைவினையை வெளிப்படுத்தும் சிறந்தத் திருமேனி.[2] ஏனைய செப்புத் திருமேனிகள் நகரத்தார்களின் திருப்பணியின் போது செய்தளிக்கப்பட்டவை.

திருவிளையாடற் புராண ஓவியங்கள்

தான் தோன்றீசுவரர் கோயிலின் சிறப்பிற்கு மற்றுமொரு சான்றாக ஓவியங்களைக் கூறலாம். நகரக் கோயில்கள் ஒன்பதில் இலுப்பைக்குடியில் மட்டும்தான் **திருவிளையாடற்புராணம்** முழுவதுமாக ஓவியமாக்கப்பட்டுள்ளது.

சிவபெருமான் நிகழ்த்திய மதுரையோடு தொடர்பு கொண்ட 64 திருவிளையாடல்களை இப்புராணம் பேசுகிறது. இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களை ஓவியமாக்குவதில் முனைந்திருந்த நாயக்க மன்னர்கள் பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணத்தையும் ஓவியமாக்கி மகிழ்ந்தனர். மதுரை மீனாட்சி அம்மன் கோயில் பொற்றாமரைக் குளத்தைச் சுற்றிலுமுள்ள சுவர் முழுவதும் ஆலவாய் அண்ணலின் 64 திருவிளையாடல்களையும் ஓவியமாக்கியுள்ளனர்.

மதுரை நாயக்கர்களைத் தொடர்ந்து வந்த தஞ்சை மராட்டியர்களும், இராமநாதபுரம் சேதுபதிகளும், சிவகங்கை மன்னர்களும் தாம் எடுப்பித்த கோயில்களில் திருவிளையாடற் புராணக் காட்சிகளை ஓவியமாகத் தீட்டியும் சிற்பக் காவியமாகச்

1. மா.சந்திரமூர்த்தி, இலுப்பைக்குடிக் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988, பக், 64, படம் – 11.
2. மா. சந்திரமூர்த்தி – வெ. வேதாசலம், பராக்கிரம பாண்டியபுரம், கலைத்தாய் பதிப்பகம், சென்னை, 2002, பக், 205 – 208

செதுக்கியும் உள்ளனர். இவ்வரச மரபினரை அடுத்து இளங்கோவடிகளால் **'மன்னர் பின்னோர்'** எனப் புகழப்பட்டு, தமிழகக் கோயில்களைத் திருப்பணி செய்தும், சைவ சமயத்தை வளர்த்தும் வரும் நகரத்தார்கள் தாம் எடுப்பித்த கோயில்களிலும் ஓவியக்கலையைப் போற்றி வளர்த்து வந்துள்ளனர்.

ஓவியக் காப்பு

இவ்வோவியங்கள் தான்தோன்றீசுவரர் கோயிலின் திருச்சுற்று மாளிகையின் கீழ்த்திசைத் தூண்களின் மேலுள்ள சுவரில் தீட்டப்பட்டுள்ளன. இதில் முதலில் ஓவியக் காப்பாகப் பன்னிரு கைகளுடன் யானைமுகக் கடவுள் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்க ஓவியம் தொடங்குகிறது.

இந்திரன் பழிதீர்த்தது

இதில் இந்திரன் - இந்திராணியுடன் சபையில் சிங்கம் சுமந்த மெல்லணை மேல் தோன்ற, அவர்கள் முன்பு மங்கை ஒருத்தி நடனமாடுகிறாள். அடுத்து அங்கே எழுந்தருளிய வியாழ பகவானான குருவிற்கு தேவேந்திரன் செய்யவேண்டிய சிறப்பைச் செய்யாததால் சாபத்திற்கு ஆட்பட்டு இந்திர பதவியை இழக்கிறான். அடுத்த ஓவியத்தில் நகுடன் புதிய இந்திரப் பதவியை எய்துகிறான். அவன் இந்திராணியைச் சேரவேண்டும் என்ற ஆவலில் முனிவர்களை விரட்ட அகத்தியரின் சாபத்திற்கு ஆளாகிறான்.

அடுத்த காட்சியில் இந்திரன் விருத்திராசுரனைக் கொல்ல ததீசி முனிவரின் முதுகெலும்பை வேண்ட, முனிவர் தமது முதுகெலும்பையே நல்கி யாக்கை நிலையாமையை எடுத்துரைக்கும் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்திரன் கடம்ப மரத்தினடியில் தோன்றிய சிவலிங்கத்தைக் கண்டு மகிழ்ந்து துதிக்கும் காட்சியும், வெள்ளையானை சாபம் தீர்த்தது, பின்னர்த் திருநகரம் கண்டது, தடாதகை பிராட்டி திரு அவதாரப் படலம் ஆகிய ஓவியங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

மீனாட்சி திருமணம்

தொடர்ந்து இந்திரன் முதல் ஈசானன் வரையுள்ள எண்திசைக் காவலர்களுடன் மீனாட்சி போர் தொடுக்கும் அட்டதிக் விஜயக் காட்சிகளைக் காணலாம். இறுதியில் மீனாட்சி ஈசான்ய திசையின் அதிபதியான சிவபெருமானுடன் குதிரை பூட்டிய தேரில் ஏறி வில்வளைத்து அம்பு தொடுக்கும் காட்சியும், சிவபெருமான் தரிசனத்தால் மூன்றாவது தனம் மறையும் காட்சியும் அழகாக விளக்கப்பட்டுள்ளன.

அடுத்து நான் மறைகள் சூழ, தூரியம் - சங்கம் ஒலிக்க, நான்முகன் வேள்வித்தீ வளர்க்க, திருமால் நீர் வார்த்துக் கொடுக்க

ஆலவாய் அழகர் அங்கயற்கண்ணியைக் கைத்தலம் பற்றும் மணக்கோல வைபவம் அழகிய ஓவியமாக எழுதப்பட்டுள்ளது. திருமணத்தைக் காணும் விண்ணுலக மகளிர், தேவர்கள், இந்திரன், எண்திசைக் காவலர்கள், அரசர்கள், அமைச்சர்கள், முனிவர்கள் ஆகியோர் வணங்கி நிற்கின்றனர்.

வெள்ளியம்பலக் கூத்து

அடுத்து பதஞ்சலியும், வியாக்ரபாதரும் இருபக்கங்களிலும் நின்று பணிந்து தொழ வெள்ளி அம்பலத்தில் கூத்தாடும் பிரானின் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. அருகில் மங்கையற்கரசியார் நடனத்தைக் கண்டு வணங்கி நிற்கிறார். மேலே **'வெள்ளியம் பலத்தில் நடனம் செய்தது'** என எழுதப்பட்டுள்ளது.

குண்டோதரனுக்கு அன்னமிட்டது

அடுத்து குண்டோதரனுக்கு அன்னமிட்ட காட்சி மிக இயற்கையாகத் தீட்டப்பட்டுள்ளது. இதில் பல்வகை உணவு வகைகளும், பழக் குவியல்களும் குண்டோதரன் முன் படைக்கப் பட்டிருக்கின்றன. அவன் முன் அன்னம் மலை போல் குவிக்கப்பட் டுள்ளது. அன்னமலை தவிர கன்னல், கரும்பு, தேங்காய், நவதான் யங்கள் ஆகியவையும் வைக்கப்பட்டுள்ளது. திருவிளையாடற் புராணம் கூறுவது போல் ஓவியக் கலைஞன் குண்டோதரனை அற்புதமாகத் திட்டியுள்ளான்.

அன்னக் குழியும் வைகையும் அழைத்தது

அத்தனை உணவையும் உண்ட குண்டோதரன் உடம்பு எல்லாம் வயிறாய் வீங்க மலையெனக் கீழே வீழ்ந்து புரண்டு நீர் வேட்கை எடுத்து, ஆங்காங்கே நீர்நிலை தேடுவானாக எழுந்து வாவியும், ஓடையும், குளங்களும், கிணறுகளும் வறண்டுபோகுமாறு வாய் வைத்து நீரைக் குடிக்கும் காட்சி மிகச் சிறப்பாகக் காட்டப் பட்டுள்ளது.

ஏழுகடல் அழைத்தது

அடுத்து தடாதகை பிராட்டியின் மொழிகேட்டுத் தென்னவராம் சிவபெருமான் ஏழு கடலினைத் தருவித்தது வனப்புடன் வரையப்பட்டுள்ளது.

கீழே நான்மாடக் கூடலில் சிவனும் உமையும் தோன்றும் காட்சியும், கடல் வற்ற வேல் விட்ட படலமும் ஓவியமாக்கப் பட்டுள்ளது. அலைகடலின் நடுவே தோன்றும் மீன், நண்டு, ஆமை, சங்கு ஆகிய கடல்வாழினங்கள்கூட மிக அழகாகத் தீட்டப் பட்டுள்ளன. இதில் **'வருணன் விட்ட கடலை சுவாமி வற்றச் செய்தது'** என எழுதப்பட்டுள்ளது.

இந்திரன் முடி தகர்த்தது

மிகச் சிறப்பாக உள்ள ஓவியங்களில் இந்திரன் முடிமேல் வளை எறிந்த படலமும் ஒன்றாகும். உக்கிரவழுதி குதிரை மேலும், இந்திரன் யானை மேலும் வந்து எதிரெதிராகத் தோன்ற உக்கிரவழுதி கைவளையைச் சுழற்றி வீச அது இந்திரன் முடியை வீழ்த்துகிறது. அடுத்து அமரர் கோன் மகுடமிழந்து நிராயுதபாணியாகச் செல்கிறான்.

இதனை அடுத்து மேருவைச் செண்டால் அடித்த படலமும், மறைபொருள் உணர்த்திய படலமும், மாணிக்கம் விற்ற படலமும் சிறப்பாக ஓவியமாக்கப்பட்டுள்ளன.

வளையல் விற்றது

சிவபெருமான் தானே வளையல்காரனாகத் தோன்றி உமையவள் கைப்பிடித்து வளைப்பூட்டும் காட்சி அழகிய ஓவியமாக்கப்பட்டுள்ளது. அருகே உமையவளின் பணிப்பெண் ஒருத்தி காட்டப்பட்டுள்ளாள். அவள் முகம் அன்றலர்ந்த தாமரை போல் இருப்பதைக் காணலாம்.

மறைபொருள் உணர்த்தியது

தென்முகக் கடவுள் அட்டமா சித்தி செய்த நிகழ்ச்சியில் இறைவன் அழகிய பெண்களுக்கு அறம் உரைக்கும் காட்சி ஆன்மிக அமைதி தவழும் நிலையில் எழுதப்பெற்றுள்ளது.

பத்தினிப் பெண்டிர் மயங்கியது

இதனைத் தொடர்ந்து ஆடையில்லாத் திருவுருவுடன் இறைவன் பிச்சாடனராகத் தாருகாவன வீதிகளில் பிச்சை உகக்கப் புகுவதும், அண்ணலின் பேரழகைக் கண்டு காமுற்ற முனிபெண்டிர் தங்கள் ஆடைகள் நழுவ, அங்கங்கள் வெளிப்பட கற்பினை இழந்த நிகழ்ச்சி அதற்கேற்ற முறையில் தீட்டப்பட்டுள்ளது.

பிட்டுக்கு மண் சுமந்தது

திருவாசகம் அருளிய மணிவாசகர் மதுரையை ஆண்ட அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக இருந்தவர். இவருக் காகவே சோமசுந்தரகடவுள் நரிகளைப் பரிகளாக மாற்றியும், பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டார் என்றும் புராணங்கள் கூறும் செய்தி இங்கு ஓவியமாக்கப்பட்டுள்ளது.

பிட்டுக்கு மண் சுமந்த காட்சியில் சிவபெருமான் வைகையாற்றை அடைக்க மண் வெட்டியுடன் வந்தபோது வந்தி மூதாட்டியிடம் பிட்டு வாங்குவதும், மறுபுறத்தில் பாண்டியன்

இறைவன் மேனியில் பிரம்பால் அடிப்பதும் காண்போரை மெய்சிலிர்க்க வைக்கும் ஓவியங்களாகும்.

அடுத்து சமணர்கள் ஞான சம்பந்தப் பெருமானிடம் அனல்வாதம் - புனல்வாதம் புரிந்து சுவடிகளை அனலிலும், புனலிலும் விட்ட காட்சி ஓவியமாக நம் கண் முன் நிற்கிறது.

பாண்டியன் சுரம் தணித்தது

கூன் பாண்டியன் கட்டிலில் படுத்திருக்க அவன்முன் கைகளில் மயிற்பீலியுடன் சமணர்கள் தோன்றி மந்திரம் ஓதுகின்றனர். பின்புறம் ஞானசம்பந்தர் அமர்ந்து பாண்டியன் சுரம் தணித்த நிகழ்ச்சி மிகவும் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

சமணரைக் கழுவில் ஏற்றியது:

மறுபுறம் சமணர்கள் நால்வர் கழுமரத்தில் ஏற்றப்பட்டு உயிர்விடும் காட்சியில் அவர்கள் உயிர் பிரியும் நிலையைக் கண்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இறந்த சமணர்களின் உடல்களை ஏழு காகங்கள் பறந்து வந்து கொத்துகின்றன. கீழே நான்கு நரிகள் அவ்வுடல்களைக் கடிக்கின்றன. இவ்விதம் சமணரைக் கழுவில் ஏற்றிய படலம் ஓவியமாக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கிணறும், வன்னிமரமும், சிவலிங்கமும் சாட்சியாகக் காட்டிய ஓவியம் காணப்படுகிறது.

ஓவியக் குறிப்புகள்

இந்த அழகிய ஓவியங்களின் மேலே தேவேந்திரன், வெள்ளியம்பலத்தில் நடனம் ஆடியது, ஏழு கடலை அழைத்தது, வருணன் விட்ட கடலினை இறைவன் வற்றச் செய்தது, இந்திரன் முடி தகர்த்தது, மகாமேருவைச் செண்டால் அடித்தது, சிவ பெருமான் மாணிக்கம் விற்றது, வயிற்றுக்குப் பொருமினது, சுவாமி வளையல் விற்றது, அஷ்டமாசித்தி சாபமிட்டது, கங்காதரனாக வந்து ரிஷிபத்தினிகளை மயக்கியது, தட்சிணா மூர்த்தியாக அருள் பாலித்தது, இரச வாதம் செய்தது, சிவலிங்கத்தைப் பூசை செய்தது, வன்னிக் கிணறு - சிவலிங்கம் காட்டியது, சமணரைக் கழுவில் ஏற்றியது, ஓலைகளை அக்கினியில் போட்டது, வெந்ததை வைகையில் போட்டது, கூன் பாண்டியனின் சுரம் நீக்கியது, பிட்டுக்கு மண் சுமந்தது, பாண்டியன் பிரம்பால் அடித்தது என்று முறையாக எழுதப் பட்டுள்ளன.

ஓவியக் கலைப்பாணி

நகரத்தாரின் மகத்தான ஓவியக் கலைப்பாணி மலர்வதற்கு இலுப்பைக்குடி ஓவியங்கள் ஒரு முன்னோடியாக அமைந்து விட்டன. மதுரையில் காணப்படும் திருவிளையாடற் புராண

ஓவியத்தின் நயம் இந்த அழகிய ஓவிய வரிசையில் தொடரப் பெற்றிருக்கிறது.[1]

இக்கோயிலுக்கு முறையே 1842, 1882, 1901, 1959 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றுள்ளது. 1985 ஆம் ஆண்டு புதிய ஐந்து நிலை இராஜகோபுரம் அமைக்கப்பெற்றுத் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றுள்ளது.

1833 - ஆம் ஆண்டு முதல் தேவகோட்டை அரு. லெ. குடும்பத்தார் தொடர்ந்து அறங்காவலர்களாக இருந்து வந்தனர். 1954 -ஆம் ஆண்டு சென்னை உயர்நீதி மன்றத் திட்டப்படி அரு. லெ. குடும்பத்தார் ஒருவர் பரம்பரை அறங்காவலராகவும், பிற ஊர் இலுப்பைக்குடி நகரத்தார் இருவர் அரசாங்க நியமன அறங்காவலர்களாகவும் இருந்து இக்கோயிலை நிருவாகம் செய்து வருகின்றனர்.

8. சூரக்குடிக் கோயில்

கலியுகம் 3819 இல் கொடுக்கப் பெற்றது. (கி.பி. 718)

இறைவன் - தேசிக நாதர்

இறைவி - ஆவுடை நாயகி.

இத்திருக்கோயில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக் குடியிலிருந்து கழனிவாசல், நேமத்தான்பட்டி செல்லும் சாலையில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. ஒன்பது நகரக் கோயில்களில் இங்கு மட்டுமே இறைவி நான்கு திருக்கரங்களுடனும், மூன்று கண்களுடனும் காட்சியளிக்கிறாள். சூரை மரங்கள் நிறைந்திருந்ததால் இவ்வூர் இப்பெயர் பெற்றது.

பிரிவுகள்

(1) கேரளசிங்க வளநாட்டில், சூரைக்குடியான தேசிக நாராயணபுரத்தில், புகழ்வேண்டிய பாக்கமுடையார். இக்கோயில் நகரத்தார்கள் செட்டிநாட்டில் 25 ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர் மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை 1390.

கட்டடமும் கலையும்

நகரத்தாரின் குலமரபுக் கோயில்களுள் சூரக்குடி தேசிகநாதர் கோயிலும் ஒன்று. சூரை, சூரைக்குடி, சூரைமாநகர், இலந்தை வனம், விசயாலயபுரம் என்ற பல பெயர்களால் வழங்கப்பட்ட சூரக்குடி எனும் பண்டைய ஊர் இன்று வன்னியன் சூரக்குடி, நகரசூரக்குடி என்ற இரு பிரிவுகளாக விளங்குகிறது.[2]

1. மா.சந்திரமூர்த்தி, இலுப்பைக்குடிக் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988, பக், 67 – 80.

2. மா.சந்திரமூர்த்தி, சூரக்குடிக் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1994.

தொன்மைச் சிறப்பு வாய்ந்த இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நடராசர் சன்னிதி, அம்மன் சன்னிதி, பைரவர் சன்னிதி, நந்திபீடம், கொடிமரம், திருச்சுற்று, மேல்சுற்றுப் பிரகாரம், திருச்சுற்று மாளிகைப்பத்தி, பள்ளியறை, பரிவார ஆலயங்கள், உட்கோபுரம், இரண்டாம் திருச்சுற்று, மடைப்பள்ளி, வியஞ்சனஅறை, கோயிற்கிணறு, இராஜகோபுரம், பதினாறுகால் மண்டபம், திருக்குளம் ஆகிய பகுதிகளுடன் விளங்குகிறது.

கருவறைப் புறச்சுவர்கள் சிற்பங்கள் ஏதுமின்றி எளிமை யாகவும், அதிட்டான உறுப்புகள் நேர்த்தியான வேலைப்பாட் டுடனும் திகழ்கின்றன. இங்கு ஏனைய கோயில்கள் போன்றே கருவறையும் அர்த்த மண்டபமும் காணப்பட்டும், மகாமண்டபம் மட்டும் வேறுபட்டும் கட்டப்பட்டுள்ளன. பொதுவாக மகாமண்டபம் கருவறைபோல் இருமடங்கு விரிவு கொண்டு சுற்றுச் சுவருடன் காணப்படும். ஆனால் சூரக்குடிக் கோயில் மகாமண்டபம் சுற்றுச்சுவரின்றிப் பல சித்திரக்கால்கள் தாங்கி நிற்க பரந்து விரிந்து விசாலமாகக் காணப்படுகிறது. இதன் வடபுறம் மேலிருந்து கீழாக நடராசர், ஆவுடைநாயகி, பைரவர் சன்னிதிகள் தெற்கு நோக்கி அமைந்துள்ளன. இதை இக்கோயிலின் கட்டடக்கலையின் ஒரு சிறப்பம்சமாகக் கருதலாம்.

அரிய பைரவர் வடிவம்

சிற்பங்களிலும் கோட்டச் சிற்பங்கள், பரிவார சிற்பங்கள் உரிய முறையில் அமைக்கப்பட்டு இருக்க **பைரவர் சிற்பம்** தனித்து விளங்குகிறது. பொதுவாகப் பைரவரின் நான்கு கரங்களில் மேற் கரங்கள் உடுக்கையும், நாகமும், கீழ்க்கரங்கள் திரிசூலம், கபாலம் ஏந்தி இருக்கும். ஆனால் சூரக்குடி **பைரவரின் மேற்கரங்கள் உரிய ஆயுதங்களோடும், கீழ்க்கரங்களில் கதாயுதம், கபாலம் காணப்படுகின்றன.** இங்குள்ள நந்திபீடமும் மாத்தூர் கோயில் போன்று சிம்மங்கள் தாங்கும் பீடத்தின் மீது அமர்ந்த நந்தி காணப் படுகிறது. இக்கோயில் தட்சிணாமூர்த்தி சிற்பமும், பிற கோயில்களில் இருந்து வேறுபட்டு உள்ளது. பொதுவாகத் தட்சிணாமூர்த்தியின் முதுகுப்பகுதியும், ஆலமரத்தின் தண்டுப் பகுதியும் சேர்ந்தே அமைந்து இருக்கும். ஆனால் இங்கு மட்டும் இவ்விரண்டும் தனித் தனியே தோன்றும் வண்ணம் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. நந்தி சிற்பத்திற்கு மேல் ஐந்து வளையங்களோடு கூடிய கல் சங்கிலியையும் இக்கோயிலில் காணலாம்.

பத்து விமானங்கள்

சூரக்குடிக் கோயிலில் பெரிதும் சிறிதுமாக 10 விமானங்களும், இரண்டு கோபுரங்களும் அமைந்துள்ளன. அவை, முறையே சுவாமி

சன்னிதி, அம்மன் சன்னிதி, நடராஜர் சன்னிதி, பைரவர் சன்னிதி, சோமாஸ்கந்தர் சன்னிதி, விநாயகர் சன்னிதி, சுப்பிரமணியர் சன்னிதி, மகாலட்சுமி சன்னிதி, சண்டிகேஸ்வரர் சன்னிதி, பள்ளியறை சன்னிதி ஆகியவற்றை அலங்கரிக்கின்றன.

முதல் சுற்று மதிலை ஒட்டிக் கட்டைக் கோபுரம் ஒன்றும், இரண்டாம் திருச்சுற்றில் இராஜகோபுரம் ஒன்றும் எனச் சிறிதும் பெரிதுமாக இரண்டு கோபுரங்கள் உள்ளன. இவை சுதைச் சிற்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றில் சுவாமி சன்னிதி விமானமும் இராஜகோபுரமும் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் உள்ள சுதை உருவங்கள் வேலைப்பாடு மிக்கவை. செட்டிநாட்டுச் சுதைச் சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவை. நாட்டுக்கோட்டை நகரத்தார் கலையை வெளிப்படுத்துபவை. அவற்றின் சிறப்பினை இங்குக் காணலாம்.

விமானச் சிற்பங்கள்

தேசிக நாதர் சுவாமி கோயில் கருவறைக்கு மேல் உள்ள இரு தளவிமானம் கர்ண கூடங்களும் சாலைகளும் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. சாலைகளுக்கும், கூடங்களுக்கும் இடையே பெருத்த இடைவெளியோடு செங்கல்லால் செதுக்கி அமைத்த பஞ்சரங்கள் கவினுறக் காட்சியளிக்கின்றன. **சாலைகள், கர்ண கூடங்கள், பஞ்சரங்கள்** ஆகிய கட்டட உறுப்புகளின் முன்புறம் அழகிய சுதைச் சிற்பங்களை அமைத்துள்ளனர். இது அக்கால மண்ணீட்டாளர்கள் மற்றும் சுதை வினைஞர்களின் நுட்பமான சிற்பத்திறனை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

சுதைச் சிற்பங்கள்

முதல் தளத்தில் உள்ள விமானக் கோட்டத்தின் சாலையின் முன்புறம் நந்தியின் மீது சிவனும் உமையும் அமர்ந்து காட்சிதரும் சிற்பத்தைக் காணலாம். தெற்குக் கோட்டத்தில் ஆலின் கீழ் அமர்ந்து **அறம் உரைக்கும் அண்ணல்** வீராசனத்தில் அமர்ந்து காட்சியளிக்கிறார். சிவனின் பக்கங்களின் இரு சனகாதி முனிவர்கள் காட்டப்பட்டுள்ளனர்.

இவர்களது பக்கங்களில் உள்ள பஞ்சரக் கால்களின் முன்புறம் அசுரனை அழிக்கும் எண்தோள் காளியும், ஆலவாய் அண்ணலை அங்கயற்கண்ணி அம்மை மணக்கும் காட்சியும், நீலமேனி நெடியோனான திருமால் நீர்வார்த்து அட்டிக்கொடுக்கும் காட்சியும் வண்ணச் சுதை வடிவில் அமைந்து வனப்பூட்டுகின்றன.

அதன் பக்கங்களில் உள்ள கர்ண கூடுகளின் முன்புறம் **பிச்சாடனமூர்த்தி** பேரழகோடு தோன்றிச் சூலம், உடுக்கை, கபாலம்

ஆகிய ஆயுதங்களை ஏந்தி நின்று அருகே துள்ளிக் குதிக்கும் மானுக்குத் துளிர் கொடுக்கிறார். இச்சிற்பம் தென்திசையில் உள்ள கர்ண கூடத்தின் முன்புறம் காணப்படுகிறது.

மற்றொரு கூடத்தின் முன்புறம் **பைரவமூர்த்தி** தலையில் அழகிய அனல் மகுடம் அணிந்து அரவத்தையும், அனலையும், சூலத்தையும், கபாலத்தையும் கைகளில் ஏந்தி வடுக வாகனத்தோடு தோன்றிக் காட்சியளிக்கிறார்.

மேல்திசையில் உள்ள சாலையின் முன்புறம் **திருமால் நிலமகளும், பூமகளும்** சூழ அமர்ந்த கோலத்தில் காட்டப்பட்டுள்ளார். இச்சிற்பத்தின் வலப்புறமும் இடப்புறமும் இந்திரனும் நரசிங்க பெருமானும் நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளனர். இதன் பக்கங்களில் உள்ள கர்ண கூடங்களின் முன்புறம் திசைக் காவலரும், ஆடையற்ற அணங்கும் அழகிய சிற்ப வடிவங்களில் காட்சியளிக்கின்றனர்.

வடதிசையிலுள்ள சாலையின் முன்பு **நான்முகன், சரசுவதி, சாவித்திரி** ஆகிய இரு தேவியர் சூழ இருந்த கோலத்தில் வீற்றிருக்கிறார். இவரது வலப்புறம் மழுவும் - மானும் ஏந்தி, அபய-வரதம் அளிக்கும் சடைமுடி அண்ணலின் நின்ற கோலச் சிற்பத்தைக் காணலாம். பிரம்மனின் இடப்புறம் மழுவும் மானும் ஏந்தி ஏறுஊரும் பெருமானின் எழிற்கோலத்தைக் கண்டுகளிக்கலாம். இவ்விரு சிற்பங்களும் பஞ்சரங்கள் முன்பு அமைந்துள்ளன.

எண்திசைக் காவலர்கள்

இவற்றின் வலப்புறத்திலும், இடப்புறத்திலுமாக **எண்திசைக் காவலர்கள்** காட்டப்பட்டுள்ளனர். கர்ண கூடங்களைச் சுற்றிலும் **இந்திரன், ஈசானன், அக்கினி, எமன், குபேரன் வாயு, வருணன், நிருதி** போன்ற எண்திசைக் காவலர்களின் உருவங்கள் சுதைச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் அவற்றிற்கு உரிய வாகனங்களோடு காட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் தளத்தில் கிழ்த்திசையில் மழுவும், மானும் ஏந்திய சிவன் மலைமகளோடும் கங்காதேவியோடும் காட்டப்பட்டுள்ளார். அவரது பக்கங்களில் வடக்கே மயில் வாகனனும், தெற்கே மூசிகவாகனனும் காட்டப்பட்டுள்ளனர். அவரது பக்கங்களில் இரு சிவனடியார்கள் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கின்றனர்.

இரண்டாம் தளத்தின் மேல் திசையில் சாலையின் முன்புறம் ஆழியும், - சங்கமும் ஏந்தி அருள் பாலிக்கும் திருமாலைக் காண்கிறோம். அவரது அருகில் திருமகளும், நிலமகளும் அல்லியும் தாமரையும் ஏந்தி அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கின்றனர்.

இரதியும் மன்மதனும்

இவ்வுருவங்களின் வடக்கிலும் தெற்கிலும் தவக் கோலத்தில் வீற்றிருக்கும் சிவனும், இறைவனது யோகத்தைக் கலைக்கும் மன்மதனும், இரதியும் காட்டப்பட்டுள்ளனர். அழகே உருவான மன்மதன் கிளிவாகனத்தில் அமர்ந்தவாறு கரும்புவில்லைக் கையில் ஏந்தி அம்பு தொடுக்கிறான். அவன் முன்பு யோகி சிவன் காட்டப்பட்டுள்ளார்.

தென் புறத்தில் அழகிய அன்னப்பறவை மீது ஒயிலாக வீற்றிருக்கும் இரதிதேவி, மலர்க் கணையால் அம்பு தொடுக்கும் காட்சி சுதைச் சிற்பமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. திருமாலின் இடப்புறமுள்ள பஞ்சரக் கால்களின் முன்புறம் ஐந்து தலை அரவத்தின் மேல் அமர்ந்து அருள் பாலிக்கும் வைகுண்டப் பெருமாளைக் காண்கிறோம்.

தென்திசையில் உள்ள சாலையின் முன்புறம் வீராசனத்தில் வீற்றிருக்கும் தட்சிணா மூர்த்தியின் உருவத்தையும், அவரது இருமருங்கிலும் சடைமுடியும், தாடியும் தரித்துத் தத்துவம் கற்கும் முனிவர்களையும் காணலாம். இவற்றின் மேற்கிலும், கிழக்கிலும் திருநீறு பூசிய சிவனடியார்கள் இருவரின் சுதை உருவங்களைக் கண்டுகளிக்கலாம்.

பிரம்மதேவன் சிற்பம்

இரண்டாம் தளத்தின் வடதிசையில் உள்ள சாலையின் முன்புறம் தாமரை இருக்கையில் அமர்ந்து அக்கமாலையும், கெண்டியும் மேற்கரங்களில் ஏந்தித் தேவியருடன் அருள்பாலிக்கும் பிரம்ம தேவனின் சுதை உருவம் காணப்படுகிறது. அவரது இருமருங்கிலும் தலையில் சடைமுடி தரித்து வீற்றிருக்கும் சிவபெருமானின் உருவங்கள் அருள்பாலிக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளன. அவரது முன்புறம் சடைமுடி தரித்த முனிவரும், திருநீறு பூசிய சிவனடியாரும் காட்டப்பட்டுள்ளனர்.

முதல் தளத்திலும், இரண்டாம் தளத்திலும் கூரையைத் தோளில் தாங்கும் நிலையில் கம்பீரமான விமானந் தாங்கிகளின் சிற்ப உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முனிவர்கள் எழுவர்

இருதளங்களையும் அலங்கரிக்கும் கர்ண கூடங்களின் முன்புறம் திசைக் காவலர்களும் கர்ண கூடங்களின் கோடிப் பகுதியில் அத்திரி, குச்சன், கௌதமன், பிருகு, காசிபன், அங்கிரா, வசிட்டன் ஆகிய முனிவர்கள் எழுவரும் அஞ்சலித்த நிலையில் நின்ற கோலச் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளனர்.

விமான தளத்தின் மேல் உள்ள கிரீவ கோட்டங்களின் கிழக்கே சிவனும், மேற்கே திருமாலும் தேவியருடன் காட்டப்பட்டுள்ளனர். தென்திசைக் கோட்டத்தில் வியாக்யான தட்சிணாமூர்த்தி காட்டப்பட்டுள்ளார். வடதிசைக் கோட்டத்தில் இரு தேவியருடன் திசைமுகன் காட்டப்பட்டுள்ளார்.

சிவகணங்கள் நால்வர்

கிரீவத்தின் வேதிப்படைகளின் நான்கு மூலைகளிலும் சிவகணங்கள் நால்வர் வணங்கிய நிலையிலும், அதன் பக்கங்களில் நந்தியின் உருவங்களும் காட்டப்படுவது வழக்கம். ஆனால் சூரக்குடி விமானத்தில் வேதிப்படைகளில் சிவகணங்களுக்குப் பதில் கர்ண கூடுகளும், அதன் பக்கங்களில் இரட்டை நந்தியின் உருவங்களும், வேதிப்படையின் மூலையில் குந்து சிம்மங்களும் காட்டப் பட்டுள்ளமை சிறப்புடையது.

அம்மன் கோயில் விமானம்

அம்மன் கருவறையின் மேல் இருதளத்தை உடைய விமானம் அமைந்துள்ளது. இது சாலைகளாலும், கூடங்களாலும் அலங்கரிக் கப்பட்டுள்ளன. இவற்றின் இடை இடையே பஞ்சரக் கால்கள் அமைந்து அணி செய்கின்றன. இவற்றை அலங்கரிக்கும் தூண்கள் சுவாமி சன்னிதியைப் போன்ற அமைப்புடையவை. இத்தூண்கள் யாவும் பெருத்த இடைவெளியோடு தனித்தனியாக அமைக்கப் பட்டுள்ளன. இச்சாலைகளும், கர்ண கூடங்களும் பஞ்சரங்களும் கட்டடக் கலை நுணுக்கம் மிகுந்ததாகக் காணப்படுகின்றன. நேர்த்தியான வேலைப்பாடுமிக்க இவ்வழகிய பகுதிகளின் முன்புறம் எழில் மிகு சுதை உருவங்களைக் காணலாம்.

அம்மன் கோயில் முதல் தளத்தின் சாலையின் முன்புறம் அங்குசம், பாசம் ஏந்தி அபய, வரதம் அளிக்கும் அம்மனின் அமர்ந்த கோலச் சிற்பம் காணப்படுகிறது. அதன் பக்கங்களில் நான்கு கரங்களோடும், இரண்டு கரங்களோடும் தாமரை மலரையும் நீலோற்பலத்தையும் ஏந்தி நிற்கும் அம்மனின் நின்ற கோலச் சிற்பங்களைச் சுதை வடிவில் காணலாம். இவ்வாறு இத்தளத்தின் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளிலும் அம்மனின் சுதை உருவங்கள் வண்ணங்கள் புனைந்து வனப்போடு காட்சியளிக்கின்றன.

சப்தமாதர் எழுவர்

இவ்வாறே முதல் தளத்தைப் போன்று இரண்டாம் தளத்திலும் அம்மனின் அமர்ந்த கோலச் சிற்பங்களும், நின்ற கோலச் சிற்பங்களும் கவினுறக் காட்சியளிக்கின்றன. ஒவ்வொரு தளத்தையும் தோளில் தாங்கும் நிலையில் விமானந் தாங்கிகளின் பெண் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கர்ண கூடங்களின்

முன்புறம் திசைப் பெண்கள் என்னும் திக் தேவதைகள் எண்மரும் காட்டப்பட்டுள்ளனர். தளங்களை அலங்கரிக்கும் பஞ்சரக் கால்களின் முன்புறம் பிராமி, மாகேஸ்வரி, இந்திராணி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, சாமுண்டி முதலிய சப்தமாதர் எழுவரும் நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றனர்.

நந்தி வாகனங்கள்

இவ்விமானத்தின் கிரீவம் எண்பட்டை வடிவுடையது. கிரீவத்தை அழகிய கூடுகளோடு கூடிய கிரீவ கோஷ்டங்கள் அலங்கரிக்கின்றன. நால்திசைகளிலும் நான்கு கரங்களோடு வீற்றிருக்கும் அம்மனின் அழகிய உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. வேதிப்படையின் மூலையில் ஓங்கிய அரிவாளோடு திசை நோக்கிக் காத்திருக்கும் பெண் பூதகணங்கள் சுதை வடிவில் அலங்கரிக்கின்றன. அவற்றின் பக்கங்களில் இரட்டை நந்திகள் கால்களை மடக்கிப் படுத்த நிலையில் காணப்படுகின்றன. இவ்வாறு வேதிப்படையின் நான்கு கோடிகளிலும் எட்டு நந்தி வாகனங்கள் காணப்படுகின்றன.

பத்து அவதாரங்கள்

இராஜகோபுரத்தில் சிவபெருமானின் பல்வேறு வடிவங்களும், மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன், கல்கி ஆகிய திருமாலின் பத்து அவதாரங்களும் வனப்புமிகு வாகனங்களோடு எண்திசைக் காவலர்களும், முனிவர்கள் எழுவரும், விநாயகப் பெருமான், சுப்பிரமணியர், மயில் வாகனர், ஆறுமுகன், தண்டாயுதபாணி போன்ற சைவ உருவங்களும் பெரிதும் சிறிதுமான துவார பாலகர்களும் கோபுரந் தாங்கிகளும் இவ்விமான நிலைகளின் இடையிடையே அமைந்து காட்சியளிக்கின்றனர்.

இக்கோயில் புள்ளிகள் அதிகமாக வாழும் பத்து ஊர்களைப் பட்டியலிட்டு ஒரு பிரிவுக்கு இரண்டு ஊர்வீதம் ஐந்து பிரிவுகளாக அமைத்துள்ளனர். அப்பிரிவுகள் முறையே 1. கீழச்சிவல்பட்டி, காரைக்குடி. 2. கண்டனூர், வேகுப்பட்டி 3. நாட்டரசன் கோட்டை, கண்டரமாணிக்கம், 4. பள்ளத்தூர், செவ்வூர், 5. புதுவயல், அரண்மனைச் சிறுவயல்.

ஒவ்வொரு பிரிவிலும் ஊருக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப் பெற்று ஒராண்டுக்கு ஒரு பிரிவு எனும் அடிப்படையில் இருவர் வீதம் கோயில் நிருவாகத்தைக் கவனித்து வருகின்றனர்.

நகர சூரக்குடிக் கோயில் நகரத்தார்களால் நான்கு முறை குடமுழுக்கு கண்டுள்ளது. கி.பி. 1898, 1943, 1952, 1973, 1994 ஆகிய ஆண்டுகளில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடந்துள்ளது.

9. வேலங்குடிக் கோயில்

கலியுகம் 3819-இல் கொடுக்கப் பெற்றது (கி.பி. 718)

இறைவன் - கண்டீசுவரர்

இறைவி - காமாட்சி

இத்திருக்கோயில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மடத்து குருவின் சாபத்தால் இக்கோயில் புள்ளிகள் குறைவாக இருப்பதால், அச்சாபத்திலிருந்து விடுபட தனியாக தட்சிணாமூர்த்திக்குக் கோயில் எழுப்பியதாக கர்ண பரம்பரைக் கதை இங்கு நிலவுகிறது. வேலமரங்கள் மிகுதியாக இருந்ததனால் இப்பெயர் பெற்றது. இக்கோயிலைச் சார்ந்த நகரத்தார் கருங்குளம், காரைக்குடி, தேவகோட்டை, பட்டமங்கலம், ஆகிய ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். மொத்தம் 46 புள்ளிகளே இவர்கள்.

பிரிவுகள்

(1) கேரளசிங்க வளநாடாகிய பாலையூர் நாட்டில், வேலங்குடியான தேசிக நாராயணபுரத்தில், கழனி நல்லூருடையார்.

கட்டடமும் கலையும்

இவ்வூர்ப் பகுதி பண்டைய நாளில் கேரள சிங்க வளநாட்டுப் பாலையூர் நாட்டில் இருந்து வந்துள்ளது. இங்குள்ள ஊருணி கல்வெட்டு ஒன்று **'பாலைய நாட்டைச் சேர்ந்த வேலங்குடி'** என்றும்[1] வேலங்குடி ஓலை ஆவணம் **'பாலை நாட்டாறும் வேலங்குடி ஊராரும்'**[2] என்றும் இவ்வூரைக் குறிப்பிடுகிறது. காரைச் செடிகள் மிகுந்திருந்த பகுதி காரைக்குடி என அழைக்கப்பட்டது போல வேல மரங்கள் நிறைந்த பகுதி வேலங்குடி என அழைக்கப் பட்டது. இவ்வூர் வேலங்குடி என்றும், தேசி நாராயணபுரம் என்றும் குறிக்கப்படுகிறது. ஐந்நூற்றுவர் எனும் வணிகக் குழுவினர் மாத்தூர் கோயிலோடு தொடர்புப் பெற்றது. போல நானாதேசிகள் எனும் வணிகக் குழுவினரோடு வேலங்குடி தொடர்பு கொண்டுள்ளது ஏனெனில் இன்றும் வேலங்குடியில் உள்ள பெருமாள் கோயில் தேசி நாராயணப் பெருமாள் கோயில் என்றும் **'தேசி நாராயண விண்ணகர்'** என்றும் அழைக்கப்படுவது குறிக்கத்தக்கது. அவ்வாறே பிள்ளையார் பட்டியிலுள்ள கற்பக விநாயகரையும் தேசி விநாயகர் என்று சொல்வது மரபாக உள்ளது!

1. டாக்டர் சு. இராசகோபால், வேலங்குடிக் கல்வெட்டு, ஆவணம் இதழ் – 13, சூலை, 2002.
2. டாக்டர் சு. இராசகோபால், வேலங்குடி ஊரணி ஆவணங்கள், ஆவணம் இதழ் – 9, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 1998.

இவ்வூர் கண்டீசுவரர் கோயில் பண்டைய நாளில் இவ்வூரின் புறப்பகுதியில் இருந்தது எனச் செவிவழிச் செய்தி கூறுகிறது. மிகப் பழைமை வாய்ந்த இப்பாண்டியர் காலக் கோயிலைப் பிரித்து இப்போது இருக்கும் இடத்தில் வேலங்குடி நகரத்தாரால் கட்டப் பட்டுள்ளது.

இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம், நடராஜர் சபை, முகமண்டபம், அம்மன் சன்னிதி, பள்ளியறை, பைரவர் சன்னிதி, நந்தி, பலிபீடம், கொடிமரம், மேல் சுற்றுப் பிரகாரம், தட்சிணாமூர்த்தி சன்னிதி, திருச்சுற்று, திருச்சுற்று மாளிகை, சோமாஸ்கந்தர் சன்னிதி, வியஞ்சன அறை, மடைப்பள்ளி, கோயில் கிணறு, இராஜகோபுர வாயில், தெற்கு வாயில் முகப்பு மண்டபம், திருக்குளம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது.

கருவறைப் புறச்சுவர்

இக்கோயில் கருவறையைச் சுற்றியுள்ள புறச்சுவர்கள் சிற்பங்களின்றி நுட்பமான கட்டடக் கலை வேலைப்பாடுகளைக் கொண்டு எளிமையாகத் திகழ்கிறது. கருவறை அதிட்டானத்தி லுள்ள ஜகதி, குமுதம், கண்டம், பட்டிகை, வேதிகை போன்ற உறுப்புகள் நேர்த்தியான வேலைப்பாடு மிக்கவை. கோயில் அதிட்டானம் சுமார் 63 செ.மீ. உயரமுள்ள உபபீடத்தின்மேல் எழுப்பப்பட்டுள்ளது. இவ்வதிட்டானம் முறையே உபானம், விரிந்த பத்மம், ஜகதி, குமுதம், கண்டம், பட்டிகை, வேதிகை ஆகிய பல பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. உபானத்தின் மேலுள்ள பத்மவரி விரிந்த பத்மமாகவும், தேவகோட்டங்களின் முன்புறம் கபோதகக் கட்டாகவும் அமைந்து காணப்படுகிறது. இவ்வாறே தேவகோட்ட மாடங்களுக்குக் கீழுள்ள ஜகதிப்படை வரியில் மட்டும் மலர்ந்த பத்மங்களும், பக்கங்களில் உள்ள ஜகதிப்படை எளிமையாகவும் காட்டப்பட்டுள்ளது. ஜகதிப்படை மீது அமைந்துள்ள குமுதப்படை தேவகோட்டத்தின் முன்புறம் சிலம்புக் குமுதமாகவும், பக்கங்களில் பதினாறு பட்டை வடிவுடனும் மாறிமாறி அமைக்கப்பட்டுள்ளன.

கண்டத்தின் மீதுள்ள பட்டிகைப் பகுதி பக்கங்களில் எளிமையாகவும், தேவகோட்டங்களின் கீழ்ப்பகுதியில் மட்டும் போதகம் வியாளமட்டத்துடன் காணப்படுகிறது. பட்டிகை மேலுள்ள வேதிகைப்பகுதி தேவகோட்டங்களின் முன்புறம் எளிமை யாகவும், பக்கங்களில் பத்மவரியுடனும் மாறிமாறி அமைக்கப்பட்டு அதிட்டானம் வர்க்கபேதத்துடன் அமைந்து காணப்படுகிறது.

அதிட்டானத்தின் மேலுள்ள பகுதி சுவர் (அ) கால் என்று அழைக்கப்படும். இப்பகுதி ஆங்காங்கே அரைத்தூண்களையும், தேவகோட்ட மாடங்களையும், கோஷ்ட பஞ்சரங்களையும், கும்ப பஞ்சரங்களையும் பெற்று விளங்குகிறது.

பஞ்ச கோட்டம்

கருவறை மற்றும் அர்த்த மண்டபத்தின் புறச்சுவரில் **பஞ்ச கோட்டங்கள்** எனும் ஐந்து தேவகோட்ட மாடங்கள் உரிய தெய்வச் சிலைகளுடன் இடம்பெற்றுள்ளன. மாடத்தின் இருபுறமும் சுவரையொட்டி இரு அரைத்தூண்கள் எழுப்பப்பட்டுள்ளன. இத்தூண்கள் மீது சாலை வடிவான சிகரத்தின் அமைப்பு வேலைப்பாடு செறிந்ததாய் விளங்குகிறது. இந்த அரைத்தூண்களின் பாதம், கால், இடை, தாமம், கலசம், தாடி, குடம், பத்மம் யாவும் வட்ட வடிவுடையவை. தூணின் மேலேயுள்ள தாமரை இதழ்மீது பலகை அமைந்து, அது உத்திரத்துடன் இணைக்கப்பட்டு மேலுள்ள கூரையைத் தாங்கி நிற்கிறது.

தட்சிணாமூர்த்தி மண்டபம்

இதில் தென்திசையிலுள்ள தட்சிணாமூர்த்தி மண்டபத்தை உபபீடம் முதல் கூரைவரை செட்டிநாட்டுச் சிற்பிகள் மிகுந்த கவனத்துடன் சிற்பவேலை செய்துள்ளனர். ஒன்பது நகரக் கோயில்களிலுமே செம்மையான அமைப்புடன் தட்சிணாமூர்த்தி மண்டபம் விளங்கக் காண்கிறோம். இங்கு உபபீடம் எனும் துணைப்பீடத்தின் உறுப்புகளான உபானம், கண்டம், கபோதகம் யாவும் எளிமையாக அமைந்து காணப்படுகின்றன. இவ்வுறுப்புகளைத் தனித்தனியாகச் செதுக்காமல் ஒரே கல்லில் செய்து இணைத்துள்ள முறை நகரத்தார்காலக் கட்டுமானக் கலைக்குச் சிறந்த சான்று பகர்கிறது.[1]

அதிட்டானம்

உபபீடத்தின் மீது அதிட்டானம் எனும் பீடப்பகுதி சற்று உள்ளடங்கிய நிலையில் அமைந்து காணப்படுகிறது. இதன் உபானத்தின் மீதுள்ள கபோதவரி நுட்பமான வேலைப்பாடு கொண்டது. இதன் கண்டப் பகுதியை அழகிய கல்மணிகள் வரிசையாக அமைந்து அலங்கரிக்கின்றன. இதன் மேல் கபோதகத்தின் இடையிடையே எளிய கீர்த்தி முக நாசிக்கூடுகள் செதுக்கப்பட்டுள்ளன. இவ்விதம் அமைந்துள்ள உபானத்தின் மேல் பகுதியில் பத்மஜகதி விரிந்து பெரிய அளவில் மலர்ந்த பத்மமாக அமைந்து வனப்பூட்டுகிறது.

அதிட்டானத்தில் எழில்மிகு வேலைப்பாடு கொண்ட சிலம்புக் குமுத வரியினைக் காணலாம். இச்சிலம்புக் குமுதத்தின் மேல் இதழ்வரியும், அதன் மேல் எளிய கண்டமும் அமைந்துள்ளது. கண்டத்தின் இடையிடையே உள்ள கண்டப் படைகள் சிற்பங்களின்றி எளிமையாகச் செதுக்கப்பட்டுள்ளன. கண்டத்தின் மேல் அமைந்துள்ள வேதிப்படை கூரைவடிவில் அமைந்து

1. மா.சந்திரமூர்த்தி, வேலங்குடிக் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003, பக், 77– 84.

காணப்படுகிறது. இக்கூரையின் நான்கு மூலைகளிலும் கோடிப் பாளையுடன் கூடிய கொடுங்கைகள் காணப்படுகின்றன.

வட்டத் தூண்கள்

தட்சிணாமூர்த்தி மண்டப அதிட்டான முன் வரிசையை இரு அழகிய வட்டத் தூண்கள் அழகுபடுத்துகின்றன. இத்தூண்கள் ஒவ்வொன்றும் கால், உடல், இடை, கலசம், தாடி, குடம், கண்டம், விரிந்த பத்மம், வீரகண்டம், புஷ்பபோதிகை, உத்திரம் ஆகிய உறுப்புகளைப் பெற்று விளங்குகிறது. இத்தூண்கள் மரத்தைக் குடைந்தது போன்று உருளை வடிவுடையதாய்த் திகழ்கின்றது. தூண்களின் மேலுள்ள விரிந்த தாமரை அக்காலச் சிற்பிகளின் படைப்பிற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது.

கற்காவியம்

உத்திரத்திற்கு மேலுள்ள கூரை தேக்கு மரத்தால் நுட்பமாகச் செதுக்கிய மரச் சாத்துகளைப் போன்று ஆங்காங்கே இடைவெளியும், இடுக்குகளும் விட்டு இடையிடையே கல்கம்பிகள் இணைக்கப்பட்டுப் பொருத்தமான இடத்தில் குமிழ் ஆணிகளை அறைந்தது போன்று கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. கூரையின் உட்புறம் உள்ள எழுதகப் பகுதியும் சிறந்த வேலைப்பாடு மிக்கதாய்க் காட்சியளிக்கிறது. மூன்று திசைகளிலும் அழகிய மலர்ந்த மலர்களையொத்த மதளைகள் வரிசையாக அமைந்துள்ளன. இவற்றின் இடையே உள்ள இடைவெளியைக் கல்லிலே குடைந்து கவினுற அமைத்துள்ளனர். இம்மதளைகளின் கீழுள்ள கம்பும், அதன் கீழ் அமர்ந்த ஆலமர் செல்வனும், தூண்களின் உத்திர முகப்பில் சனகாதி முனிவர்களும் காட்டப்பட்டுள்ளனர். யோக நிலையிலுள்ள இறைவனுடன் தொடர்புடைய இரதியும்-மன்மதனும் தூண்களின் உட்புறத்தில் சிறிய சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளனர்.

கோஷ்ட பஞ்சரம்

தேவகோஷ்டங்களின் பக்கங்களில் முகபத்திரசாலையின் இருபுறமும் வேலைப்பாடுமிக்க இரண்டு தாரை வடிவத் தூண்கள் செங்குத்தாக வெட்டப்பட்டுக் காணப்படுகின்றன. இத்தூண்கள் போதிகை மற்றும் உத்திரத்துடன் இணைந்து கருவறைக் கூரையுடன் இணைகின்றன.

தேவகோஷ்டத்தின் இரு பக்கங்களிலும் இரு அரைத்தூண்களைக் கொண்ட கோஷ்ட பஞ்சரம் அலங்கரிக்கின்றன. இதன் தூண்கள் யாவும் எண்கோண வடிவில் செதுக்கப்பட்டுள்ளன. கால்களின் மேல் மூலைகளில் நாகபந்தக் கட்டுகள் காணப்படு கின்றன. தூணின் கால் முதல் பத்மவரி வரை செங்குத்தாக எண்பட்டைகள் செதுக்கப்பட்டு, அதன் மீது எளிய பலகைகள் காட்டப்பட்டுள்ளன.

பலகைகளின் மேல் கூரையைத் தாங்கும் வண்ணம் பாயும் சிம்மங்கள் உள்ளன.

கும்ப பஞ்சரம்

கருவறைக்கும் அர்த்தமண்டபத்திற்கும் இடையே உள்ள அகாரைப் பகுதியில் கும்பபஞ்சரம் வேலைப்பாடு மிக்கதாக அமைந்து காணப்படுகிறது. இதன் கீழே கும்பத்தை ஒத்துக் காணப்படும் பகுதியில் பட்டைகள் வரிவரியாக வெட்டப்பட்டுப் பாங்குற அமைந்துள்ளன. கும்பத்திலிருந்து வெளிப்பட்டுள்ள எண்பட்டைத்தூண் பாதம், கால், இடை, கலசம், தாடி, குடம், பத்மம், பலகை, உத்திரம் ஆகிய பகுதிகளுடன் செங்குத்தாக எழுந்து கூரையின் உட்புறம் சென்று இணைகிறது. கூரையின் மேலுள்ள விமானக் கோட்டமும், அதன் அருகிலுள்ள பஞ்சரமும், நுட்பமான வேலைப்பாட்டுடன் கூடிய அதன் கால்களும் நேரில் கண்டு களிக்கத் தக்கவை. அதன் மீது உள்ள வேதிப்படையில் விமானச் சிகரம் அமைந்து காணப்படுகிறது. விமானச் சிகரம் எண்பட்டை வடிவில் திராவிட சிகரமாக அமைந்துள்ளது.

கூரை

சுவரின் மேல்வரும் பிரஸ்தரம் எனும் கூரையே கருவறையை மூடும் அங்கமாகும். இது எழுதகம், கபோதகம், வியாளம் எனும் மூன்று உறுப்புகளைக் கொண்டுள்ளது. பொதுவாக எழுதகப் பகுதியில் காணப்படும் பூதகணங்கள் இங்குக் காட்டப்படவில்லை. மாறாகப் பூக்கள் விரிந்ததையொத்த மதளைகள் வரிசையாக அணி செய்கின்றன. தேவகோட்ட மேற்பகுதியை மட்டும் மதளைகள் அணி செய்ய, பக்கங்களில் இதழ்வரி உள்ளது. அதன் மேலுள்ள கபோதகம் கீர்த்தி முக நாசிக்கூடுகளோடு பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளது. கபோதகங்களின் மூலைப்பகுதியில் கோடிப் பாளையுடன் கூடிய கொடுங்கைகளும் அதன் மீது எளிய வியாளவரியும் காணப்படுகின்றன. இவ்விதம் பிரஸ்தரம் எனும் கூரை அழகுடன் அமைந்து விளங்குகிறது.

துவிதள விமானம்

தேவகோட்டத்தின் தலைப்பாகம் விமானத்தின் கீழ்த்தளக் கொடுங்கையில் உள்ள கபோதகக் கூரைக்குள் உட்புறம் செருகப்பட்டது போன்று காணப்படுகிறது. கருவறைக்கு மேல் இருதளங்கள் உடைய **துவிதள விமானம்** அமைக்கப்பட்டுள்ளது. இருதளங்களும் நீண்ட சாலைகளாகவும், கர்ணகூடங்களாகவும் மாறிமாறி அலங்கரிக்கப்பட்டுள்ளன. சாலைகளுக்கும், கர்ணகூடங்களுக்கும் இடையே பஞ்சரங்கள் எனும் கல் சன்னல்கள்

அணிசெய்கின்றன. இடையிடையே அகாரை எனும் இடைவெளிப்பகுதி அமைந்து காணப்படுகிறது. சாலைகள் மற்றும் கர்ணகூடங்களின் கால்கள் செங்கல் கொண்டு (அந்தரக்கால்) தனித்தனியாகச் செதுக்கப்பட்டுள்ளது. இது அக்காலக் கட்டடக் கலையின் நுட்பமான வேலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இவ்விமானத் தளங்களின் நான்கு திசைகளிலும் தெய்வ உருவங்கள், திசைத் தெய்வங்கள், கந்தர்வர்கள், முனிவர்கள், விமானம் தாங்கிகள், பூதகணங்கள், மானிடர், காளை வாகனங்கள் ஆகியவை உரிய முறையில் வடிக்கப்பட்டுள்ளன.

அர்த்த மண்டபம்

கருவறை முன்புள்ள அர்த்தமண்டபம் நீள் சதுர வடிவுடையது. இதன் நிலைக்கால்கள் வேலைப்பாடு மிக்கதாகச் செதுக்கப்பட்டுள்ளன. நிலைக் காலின் பக்கமுனைகளில் பூவிதழ்கள் வரிசையாக வெட்டப்பட்டுள்ளன. பூவிதழ்களின் கீழ் நாகபந்தக் கட்டுகள் காணப்படுகின்றன. இதழ்வரிகளின் இடையே பொதுவாகக் காட்டப்படும் கல்மணி வரிசை இங்குக் காட்டப்படாமல் கண்ணாடிச் சட்டங்கள் செங்குத்தாக அமைந்து அலங்கரிக்கின்றன. நிலைக்காலின் மேற்புறம் வட்டமான தாமரை மலரும், கீழ்ப்புறம் பூங்கொடிகளைப் பற்றிய நிலையில் கொடிப் பெண்களும் காட்டப்பட்டுள்ளனர்.

அரைத் தூண்கள்

திருநிலைக்காலின் பக்கச் சுவரில் செதுக்கப்பட்டுள்ள அரைத்தூண்கள் கவனத்தோடு செதுக்கப்பட்டுள்ளன. இவை வட்டவடிவுடன் கூடிய எளிய சட்டத்தலைகளைக் கொண்டுள்ளன. சட்டத்தலைகளின் மேல் விரிந்த மதளைகளும், அதன்மேல் பலகைகளும், பலகைமேல் அமர்ந்த சிம்மமும் காணப்படுகின்றன. கூரையின் கீழுள்ள உத்திரப்பகுதியில் இரு யானைகளுடன் கூடிய அமர்ந்த கோலத் திருமகளின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

பஞ்சரக் கால்கள்

அர்த்தமண்டப நிலைவாயிலின் பக்கச் சுவர்களின் இருபுறமும் இரு ஒற்றைக்கால் பஞ்சரங்கள் அலங்கரிக்கின்றன. இது கருவறை வாயிலை அலங்கரிக்கும் சதுரவடிவ பஞ்சரக்கால் போலல்லாது உருளை வடிவுடன் திகழ்கிறது. இது அசுவபாதம், கால், உடல், கலசம், தாடி, இதழ்வரியோடு கூடிய குடம், விரிந்த பத்மம், பலகை, உத்திரம், ஆகிய உறுப்புகளோடு அமைந்து பிரஸ்தரம் எனும் கூரையின் உட்புறம் செருகப்பட்டுள்ளது. கூரையின் முகப்பை எளிய சிம்ம முக நாசிக்கூடுகள் அலங்கரிக்கின்றன. இக்கூரையின் மேற்பகுதியைத் தளமும், விமானக் கோட்ட மாடங்களும், பஞ்சரக் கால்களும் அலங்கரிக்கின்றன. அதன் மேல் வேதிப்படை சதுரமான

சிகரத்துடனும், கல்தூபியுடனும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விதம் இப்பஞ்சரக் கால்கள் அடி முதல் ஸ்தூபி வரை எழில் மிக்கதாய் விளங்குகிறது. அர்த்தமண்டபப் புறச்சுவர் கருவறைப் புறச்சுவரை ஒத்த வேலைப்பாடு கொண்டது.

சித்திரக் கால்கள்

கண்டீசுவரர் சுவாமி சன்னிதியின் முன்புள்ள அர்த்தமண்டபத்தை அடுத்து மகா மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபம் சதுரவடிவுடையது. இம்மண்டபம் கிழக்குத் திசையில் பிரதான வாயிலையும், தென்திசையில் நடராஜர் சபைக்குரிய வாயிலையும் பெற்று விளங்குகிறது. இம்மண்டபத்தை இரு வரிசைகளில் நான்கு சித்திரக்கால் தூண்கள் தாங்கி நிற்கின்றன. தூணின் கால்கள் ஒவ்வொன்றும் அழகிய அதிட்டான பீடத்தின் மேல் எழுப்பப்பட்டுள்ளது. தூணின் நான்கு மேல் மூலைகளிலும் விரிந்த நாகபந்தக் கட்டுகள் அலங்கரிக்கின்றன. இத்தூணின் தலைப்பகுதியை இருதலைப் புஷ்ப போதிகைகள் அணி செய்கின்றன. இப்புஷ்ப போதிகை மதளை, நாணுதல், பூமுனை ஆகிய உறுப்புகளைப் பெற்று வனப்போடு விளங்குகிறது. மகாமண்டபத்தை அலங்கரிக்கும் இத்தூண்களின் போதிகையின் பூமுனை வாழைமொட்டைப் போன்று கூர்மையாக இல்லாமல் பருத்தி மொட்டைப்போன்று பாங்குற அமைந்து விளங்குகின்றது. இது பிற்காலச் சோழர்களின் கட்டடக்கலைப் பாணியாக இருப்பினும் நகரத்தார் காலத்திலும் எடுத்தாளப்பட்டு இருப்பதைக் காணமுடிகிறது.

மகா மண்டபப் புறச்சுவர்

மகாமண்டபப் புறச்சுவர் கருவறை, அர்த்தமண்டபப் புறச்சுவரோடு மாறுபட்ட நிலையில் சற்று வேறுபட்ட கட்டடக் கலைப்பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறை, அர்த்தமண்டப அதிட்டானங்கள் வர்க்க பேதங்களுடன் அமைய, மகா மண்டப அதிட்டானம் வர்க்க பேதமின்றி ஒரே சீராக அமைக்கப்பட்டுள்ளது. இப்புறச்சுவர் உபபீடம், அதிட்டானம், சுவர், பிரஸ்தரம் எனும் நான்கு அங்கங்களோடு அமைந்துள்ளது.

மகா மண்டபத்தின் முன்புறம் முகமண்டபம் பரந்து விரிந்து காட்சியளிக்கிறது. இவ்விதம் கண்டீசுவரர் கோயில் முழுவதும் நகரத்தார் கலைப்பாங்கில் எழிலுடன் திகழ்கிறது. இக்கோயிலுக்கு கி.பி. 1937-ஆம் ஆண்டில் குடமுழுக்குச் செய்யப்பட்டுள்ளது. இக்கோயிலுக்குத் தென்புறம் ஊருணியும், ஊருணியின் மேற்கரையில் தேசிநாராயண பெருமாள் கோயிலும், தட்சிணா மூர்த்தி கோயிலும் அமைந்துள்ளன. விஷ்ணு கோயில்

'நானாதேசிகள்' எனும் வணிகக் குழுவினரால் **'தேசி நாராயண விண்ணகரம்'** என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

கோயிலின் சமுதாயக் கோணம்

இந்நகரத்தார்களின் உட்பிரிவு அல்லது ஒன்பது பிரிவுகள் இக்கோயில்களுக்குள் ஒன்றைச் சொந்தமாகக் கொண்டவர்கள். இதுவே இந்த இனத்தவர் லௌகீக, சமய நெறிகள் கூடி விவாதிக்கப்படும் இடம்.

இந்த ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு கோயிலும் சமய, சமுதாய நெறிகளில் உயர் ஆதிக்கம் உடையது. இவ்விஷயங்கள் பற்றிய நடவடிக்கைகள் ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு நிருவாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு அனுப்பப்படும் விஷயங்களைத் தீர்மானிக்கிறார்கள். உதாரணமாக உயில் எழுதாது காலமாகி விட்டவரின் மகன்-மகள்களுக்குச் சொத்து பாகப் பிரிவினை செய்வது போன்றவை. இந்தக் கோயில் குழுவின் முக்கிய செயல், பலதரப்பட்ட கோயில் இனத்தார்களுக்குத் திருமணம் முடித்து வைப்பது. ஏனெனில் ஒரே கோயில் அங்கத்தினர்களுக்குள் திருமணம் செய்யக்கூடாது. இந்த ஒன்பது கோயிலின் குழுக்களும் ஆண்டு தோறும் ஒரு மய்ய இடத்தில் கூடிப் பொது விஷயங்களை விவாதிப்பார்கள்.

நகரத்தார்கள் தங்களுக்குள் விவகாரம் ஏற்பட்டால் கூட்டம் போட்டு ஒற்றுமையாகத் தீர்வு காண்பவர்கள். பிறர் உதவியின்றித் தாங்களாகவே முடித்துக் கொள்கின்றனர். இத்தகைய கூட்டம் ஐந்து வகையாக நடத்தப்படுகிறது.

1. நகரக் கூட்டம் என்பது ஓர் ஊரிலுள்ள நகரத்தார்கள் கூடும் கூட்டம்.
2. வகுப்புக்கூட்டம் என்பது ஒரு கோயில் பிரிவைச் சார்ந்தவர்கள் கூடும் கூட்டம்.
3. மடத்து வாயிற் கூட்டம் என்பது தீட்சாகுரு வசிக்கும் மடத்தில் அங்குத் தீட்சை பெற்றுக் கொள்கிற நகரத்தார்கள் கூடும் கூட்டம்.
4. வட்டகைக் கூட்டம் என்பது ஒரு வட்டகையாகப் பிரித்திருக்கும் ஊர்களிலுள்ளவர்கள் கூடும் கூட்டம்.
5. நகரத்தார் கூட்டம் என்பது ஒன்பது கோயிலைச் சார்ந்த அனைவரும் கூடும் கூட்டம்.

நகரத்தார்களால் கட்டப்பட்ட கோயில்களை இரு விதமாகக் கூறலாம். இந்தியாவிலும், பிற பாகங்களிலும் கட்டிய சிவாலயங்கள். இக்கோயிலின் தினப்பூசை, விழாக்கள் மற்றும் பராமரிப்புக்காக நிலமாகவும், பணமாகவும் நகரத்தார் அளித்த கொடைகள் உள்ளன. மற்றொரு விதம் தாங்கள் குடியேறிய வெளிநாடுகளில் இவர்கள் கட்டிய கோயில்கள். இவை தண்டாயுதபாணி அல்லது

சுப்பிரமணியருக்காகக் கட்டப்பட்டவை. இவற்றை இரங்கூன், கொழும்பு, சிங்கப்பூர், கோலாலம்பூர், சைகோன், ஜகார்த்தா போன்ற தொலைவான இடங்களில் காணலாம்.

கோயில் காரியங்கள்

கோயில் காரியங்களில் நகரத்தார் பங்கு தனிப்பட்டது. ஒரு கோயிலின் எதிர்பார்ப்பே தனிநபர் மற்றும் கூட்டு வணக்கத்திற்குத் தான். இன்றும் ஒரு நகரத்தாரின் தினசரி வாழ்க்கை கோயிலை மய்யமாகக் கொண்டது. நகரத்தார் சமூக, பொருளாதார காரியங்கள் எதையும் முதலில் கோயிலில் வணங்காமல் தொடங்குவதில்லை. இவர்களின் சமயாபிமானம் மிகப் பெரியது.

காரியக்காரர்

நகரத்தார்களுக்குக் கோயில் வணங்கும் இடம் மட்டுமல்ல. ஒவ்வொரு கோயிலிலும் மூத்த குழு ஒன்று உண்டு. இவர்கள் ஒரு காரியக்காரனை நியமிக்கின்றனர். இவர் அன்றாட அலுவல்களுக்குப் பொறுப்பு. தவிர காரியக்காரர் பஞ்சாயத்தாராக வும் செயல்படுகிறார். ஒவ்வொரு கோயிலுக்கும் வைராவி என்ற உதவியாளன், தண்டல்காரன் என்ற வேலைக்காரன் உண்டு. பராமரிப்புக்காகக் கோயில் அங்கத்தினர்களிடமிருந்து ஒரு வகை வரி வசூலிப்பது இவன் கடமை.

நியாய சபை

முன்பே கூறியது போல் இக்குழு சில சமயம் நியாயசபை யாகவும் செயல்படுகிறது. இது நகரத்தாரின் பொது நன்மை பற்றிப் பல விஷயங்களை விவாதிக்கும். திருமண ஒப்பந்தம், பணச்சண்டை, கொடுக்கல் வாங்கலில் தகராறு இப்படிச் சில. இக்கோயில் குழு இந்தியாவிலோ, வெளிநாட்டிலோ இனத்தின் நற்பெயர் காப்பதில் அக்கறை கொண்டது.

எழுதப்படாத தீர்ப்பு

தகராறு தீர்ப்பது எளிய செயல். சாதாரணமாக வாதி கோயில் மேலாளருக்கு ஒரு பிராது அனுப்புகிறான். அதை அவர் கோயில் சம்பந்தப்பட்ட குழுவிற்கு அனுப்புகிறார். வாதி, பிரதிவாதி இருவரும் குழுக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு மேலாளர் சாட்சிகளைப் பதிவு செய்கிறார். இரு திறத்தாரின் வாதங்களைக் கேட்டு, சாட்சிகளை ஆராய்ந்து நியாயம் கூறப்படுகிறது. அவை எழுதப்படுவதில்லை. ஆனால் சில பெருத்த காரியங்களில் தீர்ப்பு முடிந்து வாதி-பிரதிவாதி இருவரும் ஒப்புக்கொண்ட பிறகு அவர்கள் கையெழுத்துத் தீர்ப்பில் பெறப்படுகிறது. தீர்ப்பு ஒப்புக் கொள்ளப்படாதபோது குழு தன் ஆணையை வற்புறுத்துகிறது.

எப்படி? மணக்காலங்களில் பூமாலை மறுப்பது, (திருமணம் எப்படி நிகழும்) இனத்திலிருந்து ஜாதி பிரஷ்டம் செய்துவிடுவது போன்ற வகைகளில் அனாவசிய, செலவுமிக்க, காலம் கழிக்கும் சண்டைகளைத் தீர்க்கும் குழுத் தலைவர்களின் செல்வாக்கு மதிப்புப் பெற்றது. இதனால் இக்காலத்தே நகரத்தார்களிடம் சச்சரவே இல்லை என்பது அர்த்தமில்லை. ஆனால் அதன் தீவிரம் குழுத்தலைவர்களின் நல்ல ஈடுபாட்டால் குறைக்கப்படுகிறது.

பஞ்சாயத்துகள்

இப்படிக் கோயிற்குழு நியாய பரிபாலனம் செய்வதற்கு ஒரு காரணம் உண்டு. பழைய நாள்களில் நகரத்தார்களுள் **மடத்து வாசல் மறியல், கோயில் வாசல் மறியல்** என்ற இரு பஞ்சாயத்துகள் உண்டு. ஒரே கோயிலைச் சார்ந்த இனத்தார் தம் சச்சரவுகளைக் கோயில் எதிரிலும், மடத்து எதிரிலும் மறியல் செய்து வெளிப்படுத்தலாம். வாதி கோயிலுக்கெதிரில் தன் சாட்சியோடு குற்றப்பத்திரிகையை நீட்டுவார். இவர் குற்றத்தைக் கூறியதும் கோயிலுக்குள் சென்று அதை எழுதிக் கொடுக்க வேண்டும். இதைக் கோயிலார் பிரதிவாதிக்கு அனுப்புவர். அவர் தன் பதிலை அன்றைய முடிவுக்குள் கோயிலுக்குக் கொண்டு வர வேண்டும். கோயில் குழுவினர் ஒரு பஞ்சாயத்துக் குழுவை நியமனம் செய்து அல்லது ஒரு நியாயாதிபதியை அழைத்துக் குற்றத்தை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கக் கோருவர். தீர்ப்பு வரும்வரை பிரதிவாதி நகரத்தார் சத்திரத்தில் இருக்கவோ, உண்ணவோ கூடாது[1]

⌘ ⌘ ⌘

1. S. Chandrasekhar, The Nagarathars of South India, The Macmillan company of India Ltd.,Madras, 1980, p 45 - 48.

15. நகரச் சிவன் கோயில்கள்

சங்ககாலத்தில் இயற்கையை மட்டுமே வழிபட்ட மனிதன் பஞ்சபூதங்களை வணங்கினான். பின்னர் ஐவகை நிலங்களுக்கும் உரிய ஐந்து தெய்வங்களை மட்டுமே மக்கள் வழிபட்டு வந்தனர். குறிஞ்சி நிலத்திற்கு முருகனையும், முல்லை நிலத்திற்கு விஷ்ணுவையும், பாலை நிலத்திற்குக் கொற்றவையையும், மருத நிலத்திற்கு இந்திரனையும், நெய்தல் நிலத்திற்கு வருணனையும் வழிபட்டனர். உருவ வழிபாடு விரிவடைந்த பிறகு வழிவழியாகத் தமிழ்நாட்டை ஆண்ட அரசர்கள் கோயில்களை விரிவுபடுத்தியும் வழிபாட்டு முறைகளை வகுத்தும் செம்மைப்படுத்தினர். தமிழகத்திற்கு முதலில் வந்த பல்லவர்கள்கூட இங்குள்ள வழிபாட்டு முறைகளைக் கண்டு வியந்து பின்னர் அவற்றை ஏற்றுக் கொண்டனர். அதன் அடிப்படையில் ஒற்றைக் கற்றளிகள், குடைவரைக் கோயில்கள், கட்டடக் கோயில்கள் போன்ற புதிய கோயில்களைக் கட்டியும் பழைய கோயில்களைப் புதுப்பித்தும் இறைப்பணியை வளர்த்தனர். [1]

இவர்களுக்குப் பின் வந்த சோழர்கள் நான்கு வேதங்களையும் நன்கு பயின்ற பிராமணர்களுக்கு சதுர்வேதி மங்கலங்கள் எனப் பல கிராமங்களை வழங்கி ஊக்குவித்தனர். அதேசமயம் ஆதிசைவர் என்ற சிவாச்சாரியார்களின் உரிமைகளையும் மாற்றாமல் பாதுகாத்தனர். காலம் காலமாக சிவாச்சாரியார்களே கோயில் பொறுப்பில் இருந்ததற்கான சான்றுகள் பழைய கல்வெட்டு களிலும் செப்பேடுகளிலும் காணப்படுகின்றன.

இவர்களுக்குப் பின் வந்த பாண்டியர்களும் இவர்களைப் போன்று முகப்பு வாயிலின் மீது வானுயர கோபுரங்களை எழுப்பிக் கோயில் கலைப்பாணியில் புதிய முறையைப் புகுத்தினர். மதுரை,[2] சிதம்பரம், திருவானைக்கா,[3] திருவரங்கம்[4] ஆகிய இடங்களில் உள்ள

1. இரா. நாகசாமி – மா.சந்திரமூர்த்தி, தமிழகக் கோயிற்கலைகள், தொல்லியல் துறை வெளியீடு, சென்னை – 1973, பக் 49 – 50.
2. Dr. (Miss) Devakunjari, Madurai though the Ages, 1979. pp 222.
3. James C. Harle, Temple gateways in South India, 1963,pp 77.
4. Dr. A.J. Thinakaran, The Second Pandian Empire, (A.D. 1190 - 1312) Madurai, 1987, 99 pp 202 - 203.

கோபுரங்களைக் கூறலாம். அதற்குப் பிறகு வந்த விஜயநகரர், நாயக்கர், சேதுபதிகள் ஆகியோர் இவர்கள் கட்டிய கோயில்களின் பகுதிகளைப் பலவாறு விரிவாக்கம் செய்தனர்.

இவர்களுக்குப் பிறகு இளங்கோவடிகளால் மன்னர் பின்னோர் எனப் புகழப்பட்ட நகரத்தார்கள் சோழர்கள், பாண்டியர்கள் கட்டிய கோயில்களைப் பழைமை மாறாமல் பிரித்துக் கட்டித் திருப்பணி செய்வதைப் பணியாகக் கொண்டனர். தொடர்ந்து ஒரு சில நூற்றாண்டுகளாக இப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதால் கோயில் கட்டடக் கலையில் புதிய மரபு ஒன்று மலர்ந்தது. இதனைத் தமிழகக் கட்டடக்கலைக்குப் புதிய வரவு எனலாம்.

செட்டிநாட்டு ஊர்கள் எழுபத்து எட்டில் நாற்பத்து மூன்று ஊர்களில் நகரத்தார் பொதுவில் 43 சிவன் கோயில்கள் கட்டியுள்ளார்கள். பத்து ஊர்களில் தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்கள் அல்லது பங்காளிகள் 11 சிவன் கோயில்களைக் கட்டியிருக்கிறார்கள். மூன்று ஊர்களில் நகரத்தார் பொதுவிலும் பதினைந்து ஊர்களில் தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்கள் - பங்காளிகளுமாக மொத்தம் 20 பெருமாள் கோயில்களைக் கட்டியுள்ளார்கள். ஐந்து ஊர்களில் நகரத்தார் பொதுவில் 5 அம்மன் கோயில்களைக் கட்டியுள்ளனர். இவைதவிர, இருபது ஊர்களில் நகரத்தார் பொதுவில் சுப்பிரமணிய சுவாமி கோயில் அல்லது பிள்ளையார் கோயில்களைக் கட்டியுள்ளனர்.[1] பெரும்பாலான ஊர்களில் தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்கள் அல்லது பங்காளிகள் பிள்ளையார் கோயில்களைப் பெருமளவில் கட்டியுள்ளார்கள்.

1. அமராவதி புதூர்

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடி யிலிருந்து 7கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குள்ள அமராவதி கண்மாயை வைத்தே அமராவதி புதூர் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

வந்தருளீசுவரர் – வாழவந்த நாயகி

இவ்வூரில் மிகப் பழைமையாயிருந்த சிவன் கோயிலை வயி. ராம.வயி., வயிநாகரம் குடும்பத்தாரால் ரூபாய் தொண்ணூறாயிரம் (90,000) செலவு செய்து புதுப்பித்து, கீலக ஆண்டு ஆனி மாதம் 13-நாள் (26-6-1908)-யில் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றுள்ளது. அடுத்து 1940-இல் இரண்டாவது கும்பாபிஷேகம் நடை பெற்றுள்ளது. இவ்வூரில் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 246 – 48.

2. அரண்மனைச் சிறுவயல்

தெற்கு வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 26கிமீ தொலைவில் அமைந்துள்ளது.

சிவகங்கைச் சீமையை ஆண்ட மருதுபாண்டியர்கள் இவ்வூரில் அரண்மனை கட்டி இதனையே தங்கள் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். சிவகங்கை சரித்திரக் கும்மியும், அம்மானையும் மருது பாண்டியர் இங்கே அரண்மனை கட்டியதை விளக்குகின்றன. (சிதைந்த அரண்மனைப் பகுதிகளை இவ்வூரில் இன்றும் காண முடிகிறது) எனவே இவ்வூர் **அரண்மனைச் சிறுவயல்** என்ற பெயரைப் பெற்றது. இவ்வூர் பேச்சுவழக்கில் **அ. சிறுவயல்** என்று வழங்கப்படுகிறது.

செருவயல் என்பது போர்க்களத்தைக் குறிக்கும். மருது சகோதரர்கள் காலத்தில் இங்குப் போர் நிகழ்ந்ததாக சரித்திரம் கூறுகிறது. எனவே **செருவயல்** என்பது காலப்போக்கில் மருவி **அரண்மனைச் சிறுவயல்** என ஆகியிருக்கலாம்.[1] இவ்வூர் புலிக்குத்தி அம்மன் கோயில் புகழ்பெற்றது.

மும்முடீசுவரர் – கருணாகடாட்சி அம்மன்

இவ்வூர் நகரத்தார்கள் பொதுவில், ரூபாய் ஏழாயிரம் (7,000) செலவில் சிவாலயத் திருப்பணியும், மேலும் 1780 மற்றும் 1948 ஆண்டுகளில் இரு கும்பாபிஷேகங்களும் நடைபெற்றுள்ளன. ரூபாய் ஐயாயிரம் (5,000) செலவில் பெருமாள் கோயில் திருப்பணியும் செய்யப் பெற்றுள்ளது.

இவ்வூரில் இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, நேமம், சூரக்குடி ஆகிய ஐந்து கோயில்களைச் சேர்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

3. அரிமழம்

கிழப்பத்தூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 44 கிமீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் **ஜெயவிளங்கியம்மன்** கோயிலில் அரும்பழம் பழுக்கும் **ஏறழிஞ்சில்** மரம் உள்ளது. ஏறழிஞ்சில் மரத்தின் கனி தரையில் விழுந்ததும் தானே மீண்டும் மரத்தில் ஒட்டிக்கொள்ளும் தனித்தன்மை உடையது. எனவே **அரும்பழம்** என்ற பெயர் **அரிமழம்** என மருவியதாகக் கூறுகின்றனர். தொல்காப்பியம் பாயிரவிருத்தி, அரிமழம் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அரிமழத் தலபுராணம் ஆகியவை இங்குத் தோன்றிய நூல்கள்.

அரி என்பது சிங்கம், **மழம்** என்பது இளமை. எனவே இப்பகுதியில் இளம்சிங்கம் போன்ற மறவர்கள் வாழ்ந்ததால் இப்பெயர் வந்திருக்கக்கூடும்.

---

1. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், முதற்பதிப்பு, 1986, பக், 59 – 60.

சுந்தரேசர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்கள், கட்டையன் செட்டியார் குடும்பத்தார்களிடம் கோயிலுக்குப் போதுமான இடம் வாங்கி, நகரப் பொதுவில் ரூபாய் ஐந்து இலட்சம் செலவில் (5,00,000) திருப்பணி செய்து, பிரமோதூத ஆண்டு (1870) முதற் கும்பாபிஷேகமும், இதற்கு அடுத்து 1903, 1944, 1958, 1975, 1991 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு விழாக்களும் நடைபெற்றுள்ளன.

இவ்வூரில் இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, இலுப்பைக்குடி, நேமம், இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய ஏழு கோயில்களைச் சேர்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

4. அரியக்குடி

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 6கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

செட்டிநாட்டின் ஒரே வைணவத் திருப்பதியான அரியக்குடி 'தென் திருப்பதி' எனப் போற்றப்படுகிறது. திருப்பதியிலிருந்து சடாரியும், திருமயத்திலிருந்து அக்கினியும், ஸ்ரீரங்கத்திலிருந்து பூக்குடலை மூலம் ஸ்ரீனிவாசப் பெருமாள் விக்கிரகமும் கொண்டு வரப்பட்டு இக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. மூலகருடன் சக்தி வாய்ந்தது. பெரும்பாலும் காணிக்கைகள் எல்லாம் மூல கருடனுக்கே செலுத்தப்படுகிறது. விஷ்ணுவின் இருப்பிடம் என்று பொருள்படும் ஹரிகுடியே அரியக்குடி என மருவியிருக்கலாம்.[1]

இரத்தினபுரீசர் – சுந்தரபரமேச்சுவரி

இவ்வூர் நகரத்தார்கள் பொதுவில், ரூபாய் முப்பதாயிரம் (30,000) செலவிட்டு, சிவன் கோயில் திருப்பணியும், ரக்தாக்ஷி ஆண்டு ஆவணி 31-ஆம் தேதி (15-9-1924)யில் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

சின்னச் சேவுகன் செட்டியார், திருமலை வேங்கடேசர் திருவருளால் திருவரங்கத்திலிருந்து சீனிவாசப் பெருமாள் உற்சவ மூர்த்தியைக் கொணர்ந்து, நகரத்தார் பலரால் சன்னிதிகளும், கோபுரங்களும் ரூபாய் நான்கு இலட்சம் (4,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று வெகுதானிய வைகாசி 28-ஆம் தேதி (10-6-1818)-யில் முதல் கும்பாபிஷேகமும், பின் கானாடுகாத்தான், க.வெ. சிதம்பரஞ் செட்டியார் முயற்சியால் உட்பிரகாரமும், மண்டபமும், வெளித்திருமதிலும், பெரிய இராசகோபுரமும், ரூபாய் ஐந்து இலட்சம் (5,00,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று, சுபகிருது ஆண்டு சித்திரை 9-ஆம் தேதி (21-4-1902)-ல் இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றுள்ளன.

1. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், முதற்பதிப்பு, 1986, பக், 18.

பெருமாள் கோயிலுக்கு நகரத்தார் பலரால் ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்திரண்டாயிரம் (1,32,000) செலவில் பல வாகனங்களும், ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரம் (1,42,000) செலவில் திருவாபரணங்களும் செய்யப் பெற்றுள்ளன. உள்ளூர், வெளியூர் நகரத்தார்களால் கோயிலுக்கென வாங்கி விடப் பெற்ற நிலங்கள், ரூபாய் இரண்டு இலட்சத்து எண்பத்தொன் பதாயிரம் (2,89,000) மதிப்புடையன.

இவ்வூரில் இளையாத்தங்குடி, வைரவன்பட்டி ஆகிய இரண்டு கோயில்களைச் சேர்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். அரியக்குடி அரங்கநாதன் செட்டியாரும், இராமநாதன் செட்டியார் இருவரும் பெருமாள் மீது நூல்கள் இயற்றியுள்ளனர். நாடறிந்த இசை மேதை இராமானுஜ அய்யங்கார் இவ்வூரில் பிறந்தவரே.

5. அலவாக் கோட்டை

தெற்கு வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 35கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரின் அலவைக் கண்மாய், காரக்கண்மாய் மூலம் நிலவளம் பெருகித் தான்யங்களைக் கோட்டை போல் குவித்து வாழ்ந்ததன் காரணமாக அலவாக் கோட்டை ஆகியிருக்கக் கூடும். அலைவாய்க் கொட்டை என்ற பெயரே பிற்காலத்தில் அலவாக்கோட்டை என ஆயிற்று என்பர். சோழபுரத்தில் உள்ள அம்மனுக்கு அணிகளுக்கும் ஆபரணங்களுக்கும் மானியமாக விடப்பட்ட இவ்வூர் 'ஆபரண நல்லூர்' என முன்னர் வழங்கப் பட்டதாகக் கூறுவர்.[1]

சொக்கலிங்கமூர்த்தி – மீனாட்சியம்மை

சி.அரு. சின்னான் செட்டியாரால் ரூபாய் நாற்பத்தையாயிரம் (45,000) செலவில், சிவன் கோயில் திருப்பணி செய்யப் பெற்று இரக்தாக்ஷி ஆண்டுஆவணி 20-ஆம் தேதி (4-9-1924)ல் கும்பாபிஷேகம் நிறைவெய்தியது. மற்றும் 1927, 1950, 1982 ஆகிய ஆண்டுகளில் குடநீராட்டு நடந்துள்ளது.

பி.நா. குடும்பத்தினர் ரூபாய் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் (1,10,000) செலவிட்டு, சீனிவாசப் பெருமாள் கோயில் திருப்பணியும், கீலக ஆண்டு தை 19-ஆம் தேதி (1909)-இல் முதற் கும்பாபிஷேகமும், விக்கிரம ஆண்டு தை 27-ஆம் தேதி (9-2-1941)-இல் இரண்டாவது கும்பாபிஷேகமும் செய்துள்ளனர்.

மாத்தூர், வைரவன்பட்டி, இலுப்பைக்குடி, பிள்ளையார் பட்டி ஆகிய நான்கு நகரக்கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

1. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், முதற்பதிப்பு, 1986, பக், 59 – 60.

6. க. அழகாபுரி

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 10கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சிவன் கோயில் இல்லை.

நகரத்தாருக்குப் பொதுவாக இவ்வூரில் அழகு விநாயகர் கோயில் அமைந்துள்ளது. சிவகங்கை அரசகுடும்ப அறநிலையத் திற்குச் சொந்தமான அழகிய நாச்சியம்மன் கோயிலும் இவ்வூரில் உள்ளது. இவ்வூரில் அருளாட்சி செய்கின்ற அழகிய நாச்சியம்மன் பெயராலேயே இவ்வூர் அழகாபுரி என அழைக்கப்படுகிறது.

இவ்வூர் கண்டனூருக்கும் கோட்டையூருக்கும் இடையே அமைந்துள்ளதால் க. அழகாபுரி, கோ. அழகாபுரி எனச் சுருக்கமாக வழங்கப்படுகிறது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய ஐந்து கோயில்களைச் சேர்ந்த புள்ளிகள் இவ்வூரில் உள்ளனர்.

7. கொ. அழகாபுரி

தெற்கு வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 42கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் கொல்லங்குடி அழகாபுரி, நாட்டரசன் கோட்டை அழகாபுரி என்ற பெயர்களாலும், கொ. அழகாபுரி, நா. அழகாபுரி என்று சுருக்கமாகவும் வழங்கப்படுகிறது.

சிவன் கோயில் இல்லை.

நகரத்தாருக்குப் பொதுவான சித்தி விநாயகர் கோயில் உள்ளது. இவ்வூரை அடுத்து கொல்லங்குடியில் புகழ்பெற்ற **வெட்டுடையா காளியம்மன் கோயில்** அமைந்துள்ளது. இங்குக் கொல்லர்கள் அதிகமாக வாழ்ந்ததால் கொல்லங்குடி எனப் பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும். கோயிலூர் மடாலய ஆதீனம் ஒருவரால் இவ்வூரும் அழகாபுரி என அழைக்கப்பட்டது.

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் நாற்பத்தையாயிரம் (45,000) செலவில் விநாயகர் கோயில் திருப்பணியும், பிரபவ ஆண்டு வைகாசி 27-ஆம் தேதி (9-6-1927)-இல் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. இவ்வூரில் இளையாத்தங்குடி கிண்கிணிக் கூருடையார்ப் பிரிவைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.[1]

---

1. வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2003,பக், 56 – 60.

8. ஆத்தங்குடி

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 12கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

ஆவணங்களில் 'அரண்மனைப்பட்டி ஆத்தங்குடி' என்றும், பழைய ஓலைச்சுவடிகளில் 'அரண்மனைப்பட்டி என்ற ஆதித்தன் குடி' என்றே குறிப்பிடப்படுகிறது. ஆத்தன் - கடவுள். 'சீதவளம் தரும் ஆத்தன் திருநகரம்' எனப் பாடி இருப்பதிலிருந்து ஆத்தன் - கடவுள் என்ற பொருள் உறைவதால் ஆத்தன்குடி, ஆத்தங்குடி என மருவியது என்பர். இப்பகுதியில் இருந்து மறைந்த ஆற்றின் அடிப்படையில் 'ஆற்றங்குடி' எனப்பெயர் வந்திருக்கக் கூடும் என சிலரும் கருதுவர்.[1] சிலர் ஆதன் வாழ்ந்த குடி ஆதன் குடி ஆகிப் பின்னர் மருவி ஆத்தங்குடி ஆயிற்று என்பர்.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் பத்து இலட்சம் (10,00,000) செலவில் சிவாலயத் திருப்பணியும், விபவ ஆண்டு சித்திரை 14-ஆம் தேதி (26-4-1928)யில் கும்பாபிஷேகமும், ரூபாய் எழுபதினாயிரம் (70,000) செலவில் இராசகோபுரத் திருப்பணியும், ஸ்ரீமுக ஆண்டு வைகாசி 23-ஆம் தேதி (5-5-1933)யில் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன. இரு கும்பாபிஷேகச் செலவு ரூபாய் எண்பத்தையாயிரம் (85,000). மூன்றாவது கும்பாபிஷேகம் 1992-இல் நடைபெற்றது.

இவ்வூரில் இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, பிள்ளையார்பட்டி ஆகிய நான்கு கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வசித்து வருகின்றனர்.

9. ஆத்திக்காடு தெற்கூர்

மேலவட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 36 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

ஆத்தி மரங்கள் அடர்ந்த காட்டின் தெற்குப் பகுதியை அழித்து நிலமாக்கி நகரத்தார்கள் வீடுகள் கட்டி இவ்வூரை அமைத்ததனால் ஆத்திக்காடு தெற்கூர் என்ற பெயர் ஏற்பட்டது என்பர்.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில் இக்கோயிலுக்கு ரூபாய் மூன்று இலட்சம் (3,00,000) செலவில் சிவாலயத் திருப்பணியும் விக்ரம ஆண்டு தை 28-ஆம் தேதி 1941 மற்றும் 1971, 1982, 1996லும்

---

1. ஏ.ஆர்.மணி, ஆத்தன்குடியும் – நகரத்தார் சிவன் கோயிலும், ஆத்தன்குடி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாமலர், 3.2.2006.

கும்பாபிஷேகம் செய்யப் பெற்றன. இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, இரணியூர் ஆகிய நான்கு கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

10. ஆவினிப்பட்டி

மேலவட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

முனீசுவரர் எனும் கடவுள் எங்கும் உலாவிக் கொண்டு இருந்ததால் ஆ-முனிப்பட்டி என்பது ஆவினிப்பட்டி என மருவியது என்று செவிவழிச் செய்தி கூறுகிறது. பசுக்கூட்டங்கள் நிறைந்த இப்பகுதி ஆநிரைப்பட்டி என்றாகிப் பின்னர் நாளடைவில் ஆவினிப்பட்டி என அழைக்கப்பட்டிருக்கலாம்.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரப் பொதுவில், சிவாலயத்துக்குப் பாலாலயம் செய்யச் செலவு ரூபாய் (15,000) பதினைந்தாயிரமாயிற்று. இக்கோயிலுக்கு 1909-ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. இவ்வூரில் இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்கோயில், சூரக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய 5 கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

11. உ. சிறுவயல்

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இப்பகுதி சிறுசிறு வயல்களால் சூழப்பட்டும், **உய்யக் கொண்டான்** எனும் அரசன் வந்து தங்கி இருந்ததாலும் உய்யக் கொண்டான் சிறுவயல் என அழைக்கப்படுவதாகக் கூறுகின்றனர்.

ஐராவதீச்சுரர் – சவுந்தர நாயகி

சா.ராம. பழநியப்ப செட்டியார் குடும்பத்தினரால் ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் (1,50,000) செலவில், சிவாலயத் திருப்பணியும், துன்மதி ஆண்டு வைகாசி 5-ஆம் தேதி (16-5-1861), அக்ஷய ஆண்டு (1867) துன்மதி ஆண்டு (1921), அக்ஷய ஆண்டு ஆனி மாதம் 14-ஆம் தேதி (28-6-1926) ஆக நான்கு கும்பாபிஷேகங்களும் செய்யப்பெற்றன. இவ்வூரில் நகரத்தார்களின் பொதுக் கோயிலாகப் பொன்னழகியம்மன் கோயில் அமைந்துள்ளது.

இவ்வூரில் இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, இலுப்பைக்குடி ஆகிய நான்கு கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

12. உலகம்பட்டி

மேலவட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 54 கிமீ. தொலைவில் அமைந்துள்ளது.

செட்டிநாட்டின் எல்லையில் இவ்வூர் அமைந்துள்ளதால் **"ஊருக்குக் கடைசி உலகம்பட்டி"** என்னும் பழமொழி வழங்கி வருகிறது.

இங்கு வலைய இனத்தவர்கள் வாழ்கின்ற காரணத்தால் வலையன் பட்டி என அழைக்கப்பட்டு இதுவே காலப்போக்கில் உலகன்பட்டி என திரிந்திருக்கலாம். இவ்வூரில் உறைகின்ற இறைவன் உலகநாதர் - இறைவி உலகநாயகி பெயராலேயே இவ்வூருக்கு 'உலகன்பட்டி' என்ற பெயர் ஏற்பட்டுப் பின்னர் மருவி 'உலகம்பட்டி' என ஆயிற்று என்பர்.

உலகநாதர் – உலகநாயகி

இவ்வூர் நகரத்தார்கள் பொதுவில், ரூபாய் தொண்ணூறாயிரம் (90,000) செலவில், சிவாலயத் திருப்பணியும், விபவ ஆண்டு தை 4-ஆம் தேதி (16-1-1929) கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றுள்ளன. பின்னர் 30-8-1959, 30-8-1976, 28-1-1991 ஆகிய நாள்களில் கும்பாபிஷேகங்கள் நடந்துள்ளன. இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, நேமம், இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்கின்றனர்.

13. ஒக்கூர்

தெற்கு வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 36கிமீ. தொலைவில் அமைந்துள்ளது.

சிவன் கோயில் இல்லை.

சங்ககாலப் புலவர் ஒக்கூர் மாசாத்தியார் பிறந்த ஊர். இவருக்காக ஒரு நினைவுச் சின்னத்தை இங்குத் தமிழக அரசு அமைத்துள்ளது. இவரது **"கெடுக சிந்தை"** எனும் புறப்பாட்டுக் கல்வெட்டாகத் திருப்புத்தூர் - சிவகங்கைச் சாலையில் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

திருக்குறளின் மிகச்சிறந்த உரையாசிரியர்களுள் ஒருவரான பரிமேலழகரும் இவ்வூரினரே, பழம்பாடல் ஒன்றில் பரிமேலழகர் **'ஒக்கைக் காவலன்'** எனக் குறிக்கப்படுவதே இதற்குச் சான்றாகும்.

ஒக்கல் என்ற சொல்லுக்கு உறவினர் என்பது பொருள். எனவே வாணிகத்திற்காகக் கடல் கடந்து செல்லும் நகரத்தாரை வழியனுப்பவும், வரவேற்கவும் சுற்றத்தார் காணவரும் ஒக்கல் **ஊர்** மருவி **ஒக்கூர்** என அழைக்கப்பட்டிருக்கலாம் என்பர்.

---

1. பழ.அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், பாரி நிலையம்,1994, பக், 38.

நகரத்தாருக்குப் பொதுவான 'சசிவர்ண விநாயகர்' கோயில் உள்ளது. இவ்வூர் சி.கரு.சி., சி.கருஆ. இவ்விரண்டு குடும்பத்தினரும், சோழபுரத்திலும், காளையார்கோயிலிலும், பாதாளேசுவரத்திலும், ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் இலட்சக் கணக்கில் திருப்பணி செய்திருத்த லால் இவ்வூரில் வேறு சிவாலயம் நிறுவப்படவில்லை. ஏழைகாத்த அம்மன் கோயில் ஒன்றும், ஐயனார் கோயில் ஒன்றும் உள்ளன. இளையாத்தங்குடி, வைரவன்பட்டி, இலுப்பைக்குடி ஆகிய மூன்று கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்கின்றனர்.

14. கடியாபட்டி (இராமச்சந்திரபுரம்)

கீழப்பத்தூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 24கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

கடிகை என்பது நாழிகையைக் குறிக்கும். கடிகைக்காரர் எனப்படும் நாழிகை குறித்துக் கொடுக்கும் கடிகாரப் புலவர்கள் இவ்வூரில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். எனவே **கடிகாரநல்லூர்** என ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட இவ்வூர் இன்று **கடியாபட்டி** எனப்படுகிறது.[1]

பூமீசுவரர் – பிரமவித்யா நாயகி

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் நான்கு இலட்சம் (4,00,000) செலவிட்டு, சிவாலயத் திருப்பணி செய்து, வெள்ளி வாகனங்கள், நவரத்தின ஆபரணங்கள், செய்து வைத்து, விசய ஆண்டு ஆவணி 3-ஆம் தேதி (17-8-1893) இல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. இதற்குப்ள பின்னர் 1934, 1945, 1963, 1978, 1997 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு விழா நடந்துள்ளது. இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, இலுப்பைக்குடி, இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

15. கண்டரமாணிக்கம்

தெற்கு வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 18கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

நகரத்தார்கள் இவ்வூரில் ஊருணி வெட்டும்போது அழகிய அம்மன் சிலை ஒன்றைக் கண்டெடுத்தனர். அவ்வம்மனை மாணிக்க நாச்சியம்மை எனப் பெயரிட்டு வழிபட்டனர். இந்த மாணிக்கத்தினைக் கண்ட இடம் **கண்ட மாணிக்கம்** என அழைத்து இப்போது கண்டரமாணிக்கம் என ஆயிற்று எனக் கூறுகின்றனர்.

கைலாசநாதர் – ஏலவார்குழலி

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் ஐம்பதினாயிரம் (50,000) செலவில், சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

1. பழ.அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், பாரி நிலையம்,1994, பக், 39.

இச்சிவாலயத்திற்கு 1835, 1976 ஆகிய ஆண்டுகளில் நன்னீராட்டு விழா நடந்துள்ளது.

பொதுவில் ரூபாய் எழுபத்தையாயிரம் (75,000) செலவில், மாணிக்கநாச்சியம்மை கோயில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது. இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, இலுப்பைக்குடி, சூரக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு நகரக் கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

16. கண்டவராயன்பட்டி

மேலவட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

'வராயன்' என்ற வீரன் வம்சத்திற்கு, அரசன் ஒருவரால் செப்புப் பட்டயம் அளிக்கப்பட்டிருக்கிறது என இவ்வூரின் பழ.கிரு. ஊருணிக்கரை கல்வெட்டுக் கூறுகிறது. எனவே வராயன் என்ற வீரனைக் கண்டதால் இது **கண்டவராயன் பட்டி** எனப் பெயர் பெற்றதாகக் கூறுகின்றனர். இப்பகுதியில் வாழ்ந்த வீரன் ஒருவனது விருது பெயரால் இவ்வூர் அழைக்கப்பட்டிருக்கவேண்டும்.

சொக்கலிங்கமூர்த்தி – மீனாட்சியம்மை

நகரத்தாரால் பொதுவில் ரூபாய் பத்தாயிரம் (10,000) செலவில், இவ்வூர் கோயிலுக்குத் திருப்பணி செய்யப்பெற்று, சோபகிருது வருடம் (1904) கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேலும் 1922, 1948, 1972, 1991 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழா நடந்துள்ளது.

இவ்வூரில் பல திருவிழாக்கள் நிகழ்ந்தாலும் வைகாசி மாதம் கிணற்றடிக் காளியம்மன் கோயிலில் நடைபெறும் **பூத்திரு விழாவும்,** ஆனி மாதம் வல்லநாட்டுக் கருப்பர், காடப்பிள்ளை ஐயனார் கோயிலில் நடைபெறும் **புரவிஎடுப்புத் திருவிழாவும்** சிறப்பானவை. இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, பிள்ளையார்பட்டி ஆகிய நான்கு கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

17. கண்டனூர்

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

கண்டன் என்பவன் அமைத்த சிற்றூரே கண்டனூர் என மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பாடிய **வீரவன புராணம்** குறிக்கிறது.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்கள் பொதுவில், ரூபாய் எட்டு இலட்சம் (8,00,000) செலவில், சிவாலயத் திருப்பணியும், கர ஆண்டு தை 26-

ஆம் நாள் (7-2-1892), விபவ ஆண்டு வைகாசி 10-ஆம் நாள் (23-5-1928), ஸ்ரீமுக ஆண்டு தை 16-ஆம் நாள் (29-1-1934) பிரமாதி ஆண்டு வைகாசி 24-ஆம் நாள் (7-6-1937) ஆகிய இந்நாள்களில் முறையே கும்பாபிஷேகங்களும் செய்யப் பெற்றன. தொடர்ந்து 1952, 1978, 1992 ஆகிய ஆண்டுகளிலும் குடமுழுக்கு நடந்துள்ளது. ஒன்பது நகரக் கோயில்களில் ஏழு நகரக் கோயில் அறங்காவலர் குழுவில் இடம் பெறும் பரம்பரை உறுப்பினர்கள் கண்டனூரில் உள்ளனர் என்பது இவ்வூரின் சிறப்பு[1]

சி.நெ.வீர. குடும்பத்தாரால் ரூபாய் நான்கு இலட்சம் (4,00,000) செலவில் பெருமாள் கோயில் திருப்பணி செய்யப் பெற்று வெகு தானிய வருடம் தை மாதத்தில் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, நேமம், இலுப்பைக்குடி, சூரக்குடி, இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய எட்டுக் கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

18. கருங்குளம்

தெற்கு வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 27 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரின் சக்திபெற்ற தெய்வமான **பரநாச்சியம்மை** இங்குக் கருமருது மரத்தடியில் வீற்றிருந்த காரணத்தால் **கருமருது** என முன்பு அழைக்கப்பட்டு இப்போது **கருங்குளம்** என அழைக்கப் படுகிறது. 'கருங்குளத்தார் வீட்டார்' இவ்வூரை உருவாக்கியதாகக் கூறுவர்.

சொக்கநாதர் – மீனாட்சியம்மை

இவ்வூரில் நகரத்தார் செல்வ விநாயகர் ஆலயத் திருப்பணி செய்துள்ளனர்.

இந்நகருக்குச் சற்று வடக்கே ஒரு வேலி அடைப்பில் வீற்றிருக்கும் **'பரநாச்சியம்மை'**க்கு மூன்று ஆண்டுகட்கு ஒரு முறை சித்திரை மாதந்தோறும் பெருந் திருவிழா நடைபெறும். இந்த அம்மனுக்கு ஏராளமான திருவாபரணங்கள் உள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் குழுமி வழிபடுவர். இது நகரத்தார் மேற்பார்வையிலும் பொறுப்பிலுமிருந்து வருகின்றது. இவ்வூரில் இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, வேலங்குடி, இரணியூர் ஆகிய ஐந்து நகரக் கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

---

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 98.

19. கல்லல்

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 22 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இங்குள்ளோர் பெரும்பான்மையானவர் கள்ளர் இனத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதால் கள்ளர் என்ற சொல்லே காலப்போக்கில் கல்லல் என ஆயிற்று. கல் போன்ற இல்லங்களையுடைய ஊர் கல்லில் (கல்+இல்) ஆகிப் பின்னர்ப் பேச்சு வழக்கில் கல்லல் என அழைக்கப்பட்டதாகக் கூறுவர்.

சோமசுந்தரர் – சவுந்தரநாயகி

சிவகங்கை அரசகுடும்ப அறநிலைய நிருவாகத்தில் உள்ள மிகப் பழைமையான இவ்வூர் சிவாலயம் மெ.ராம. வெள்ளையப் பய்யாவால் ரூபாய் நாற்பதாயிரம் (40,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, ருத்திரோத்காரி ஆண்டு வைகாசி 31-ஆம் தேதி (12-6-1863)யில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

பின்னர் அத்திருப்பணியைப் பிரித்து, மெ.ராம.வெ., ஆ.மு., கரு.பெரி., பெரி.சுப., ராமமு.ராம. இராமன் செட்டியார் முதலியோர் ரூபாய் எட்டு இலட்சம் செலவில் (8,00,000) திருப்பணி செய்து முடித்து, நள ஆண்டு தை 21-ஆம் தேதி (2-1-1917)யில் கும்பாபிஷேகம் செய்தனர். இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, நேமம், சூரக்குடி, பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு நகரக் கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

20. கல்லுப்பட்டி

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரின் தெய்வமான சுப்பிரமணியர் பெயரால் இவ்வூர் **சுப்பிரமணியபுரம்** என்றே அழைக்கப்பட்டுள்ளது. பழைய ஆவணங்களிலும் **சுப்பிரமணியபுரமாகிய கல்லுப்பட்டி** எனக் குறிக்கப்பட்டுள்ளது.

கைலாசநாதர் – நித்தியகல்யாணி

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் ஐம்பதினாயிரம் (50,000) செலவில், சிவாலயத் திருப்பணியும், முருகன் கோயில் திருப்பணியும் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன. இளையாத்தங்குடி, மாத்தூர், பிள்ளையார்பட்டி ஆகிய மூன்று நகரக் கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

21. காரைக்குடி

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் திருச்சி - இராமேசுவரம் நெடுஞ்சாலையில்

அமைந்துள்ளது. காரைச்செடிகள் அடர்ந்த காட்டுப்பகுதியாக விளங்கியதால் **காரைக்குடி** எனப்பட்டது. மேலும் வணிகர்கள் முதன்முதலாகக் குடியேறிய ஓங்காரக்குடியே காரைக்குடி என்றும் கூறப்படுகிறது. **'காரிகுடி'** என்னும் பழைய பெயர் மருவி **காரைக்குடி** எனப்பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

காரைக்குடி பரப்பளவாலும், பல்வேறு துறை வளர்ச்சியாலும் பெரிய நகரமாக விளங்குகிறது. நகரத்தார்கள் வாழ்ந்து வரும் 78 ஊர்களில் கா்ரைக்குடியும், தேவகோட்டையும் மட்டுமே நகராட்சி மன்றங்கள் உள்ளனவாக இருக்கின்றன. ஏனைய பேரூராட்சி அல்லது ஊராட்சி உள்ளனவாக இருக்கும் சிற்றூர்களே.

நகரத்தார்கள் வாழும் ஊர்களில் காரைக்குடி நடுநாயமாகத் திகழ்கிறது. நகரத்தார்களின் ஒன்பது கோயில்களும் காரைக்குடியை மையமாகக் கொண்டால் 30 கி.மீ. தூரத்திலேயே அமைந்துள்ளன என்பது குறிக்கத்தக்கது. மேலும் பாரதியாரால் பாராட்டப்பெற்ற **'இந்து மதாபிமான சங்கம்', 'கம்பன் புகழ் பாடி கன்னித்தமிழ் வளர்க்கும் கம்பன் கழகம்', தமிழ்த்தாய் கோயில்' 'கம்பன் மணிமண்டபம்', 'வள்ளல் அழகப்பர் சிலை', 'தமிழ்க்கடல் இராய.சொ. சிலை', 'கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம்'** போன்றவையும் காரைக்குடியில் அமைந்துள்ளன. இதனால் காரைக்குடி செட்டி நாட்டின் அறிவிக்கப்படாத தலைநகரமாக விளங்குகிறது எனலாம்.[1]

சோமசுந்தரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் ஐந்து இலட்சம் (5,00,000) செலவில், மீனாட்சி சுந்தரேசுவரர் என்னும் நகர சிவாலயத் திருப்பணியும், ஆங்கீரச ஆண்டு சித்திரை 11-ஆம் தேதி (21-4-1872)யில் கும்பாபிஷேகமும், திருவாபரணம், வாகனங்கள் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) மதிப்பில் பலராலும் செய்யப் பெற்றுள்ளன.

ராய. நாகப்ப செட்டியாரால், நாகநாதபுரம் புதூரில், நாக நாத சுவாமி, நாகநாயகியம்மை, நாகலிங்க விநாயகர், கிருஷ்ணமூர்த்திப் பெருமாள், செண்பகவல்லித் தாயார் கோயில் திருப்பணிகளும், பசுமடம், நந்தவனம், ஊருணி, விடுதி முதலியனவும், ரூபாய் இரண்டு இலட்சம் (2,00,000) செலவில் அமைக்கப் பெற்றுள்ளன. 1833-ஆம் வருடம் நாகநாத சுவாமி கோயிலின் முதல் கும்பாபிஷேகமும் நிறைவேறிற்று.

"பொய் சொல்லா மெய்யர்" என்ற ஐயனார்கோயில் திருப்பணி ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் (2,00,000) நகரத்தார்களால் செய்யப் பெற்றுள்ளது.

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 127 – 130.

கொப்புடையம்மன் கோயில் திருப்பணி தொடக்க காலத்தில் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் நகரத்தார்களால் செய்யப் பெற்றுள்ளது. கொப்புடையம்மனின் மூலவிக்கிரகம் காரைக்குடிக்குத் தென்மேற்கே காட்டம்மன் என்ற பெயரில் இன்றும் உள்ளது. தவிர **108 பிள்ளையார் சிலைகள்** ஒரே இடத்தில் இருக்கும் பிள்ளையார் கோயில் ஒன்றும் உள்ளது. ஒன்பது கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வரும் ஊர் காரைக்குடி ஒன்று மட்டும் தான். இங்கு 3000க்கும் மேற்பட்ட புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர். எண்ணிக்கையில் தேவ கோட்டை முதல் இடத்தைப் பெற காரைக்குடி இரண்டாவது இடத்தில் உள்ளது. முன்னர் நகரத்தார் ஊர் பட்டியலில் தனியாக இடம் பெற்ற **ஜெயங்கொண்ட சோழபுரம்** என்னும் **செக்காலை** இன்று காரைக்குடியின் ஒரு பகுதியாகவே ஆகிவிட்டது. இங்கு வாழும் நகரத்தார்களும் காரைக்குடி நகர சிவன் கோயிலுக்குப் புள்ளி வரி செலுத்துகின்றனர்.

22. காளையார் மங்கலம்

தெற்கு வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

மருதுபாண்டியர் சிவகங்கைச் சீமையை ஆண்ட காலத்தில் முக்கிய பங்கு வகித்த இவ்வூர் காளையார் கோயில் பகுதியைச் சார்ந்ததால் **காளையார் மங்கலம்** எனப் பெற்றிருக்கலாம்.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவிட்டு, புராதனமான சிவாலயத் திருப்பணியும், ரௌத்ரி ஆண்டு வைகாசி 24-ஆம் தேதி (6-6-1920)யில் ரூபாய் ஐயாயிரம் (5,000) செலவில் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன. பின்னர் மேலும் பல கும்பாபிஷேகங்களும், அண்மையில் 1994-ஆம் ஆண்டில் ஒரு கும்பாபிஷேகமும் நடந்துள்ளது.

சித்திரைத் திங்கள் கடைசி வெள்ளி அன்று நகரத்தார் பொங்கல் இடும் விழாவும், தைத்திங்கள் கடைசி வெள்ளி அன்று நாட்டாரும் நகரத்தாரும் சேர்ந்து **பூமாலை அம்மன்** கோயிலில் நடத்தும் பூச்சொரிதல் விழாவும் இங்குச் சிறப்பாக நடத்தப்படு கின்றன. இவ்வூரில் இளையாத்தங்குடி, வைரவன்பட்டி, சூரக்குடி ஆகிய மூன்று நகரக் கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

23. கானாடுகாத்தான்

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

வெள்ளாற்றின் தென்திசையில் உள்ள நிலப்பரப்புக்குக் **'கானாடு'** எனப் பெயர் உண்டு.[1] இதனைக் காக்கின்றவன் என்ற பொருளிலும் **'கானாடு காத்தான்'** என அழைக்கப்பட்டிருக்கலாம்.

சிவலோகநாதர் – ஒப்பிலாம்பிகை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் ஐம்பதினாயிரம் (50,000) செலவிட்டு, சிதம்பரமூர்த்தி விநாயகர் கோயில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

இவ்வூரில் பெரிய கோயில் எனப்படும் சிவன் கோயில் உள்ளது.[2] க.வெ.ராம. வெங்கடாசலம் செட்டியார் முயற்சியினால், பெரிய கோயிலில் உள்ள 'ஒப்பிலாம்பிகை உடனாய கைலாச நாதர், கோயில் திருப்பணியைக் கானாடு காத்தான் மற்றும் நேமத்தான் பட்டி நகரத்தார்கள் சேர்ந்து, ரூபாய் பத்து இலட்சம் (10,00,000) செலவில் 30-4-31 இல் கும்பாபிஷேகம் செய்வித்தனர்.

சா. ராம. மு. அ. அண்ணாமலைச் செட்டியாரால், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் (1,00,000) செட்டிநாடு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் திருப்பணி செய்யப் பெற்று, விகுருதி ஆண்டு தை 29- ஆம் தேதி (11-2-51) கும்பாபிஷேகம் நிறைவெய்தியது.

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, நேமம், இரணியூர் ஆகிய ஐந்து கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

24. கீழச்சிவல்பட்டி, பி. அழகாபுரி

மேலவட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 24 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சிவத்தலம் என்ற பொருளில் சிவப்பட்டி என்றே பெயர் இருந்தது. பின்னர்ச் சிவப்பட்டி, சிவல்பட்டி என்றும் திசைகளைக் குறிக்க கீழச்சிவல்பட்டி எனவும் பெயர் பெற்றது என்பர்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட ஸ்ரீமாற சீவல்லபன் என்னும் பாண்டிய மன்னன் பெயரில் இவ்வூர் **சீவல்லபபுரம்** என்று அழைக்கப்பட்டுப் பின்னர் மருவிச் **சிவல்பட்டி, செவல்பட்டி** என்று வழங்கப்படுவதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பர்.[3] இவ்வூருக்கு அருகில் உள்ள பி. அழகாபுரி பண்டைநாளில் செழிய நாராயணபுரம் என்று அழைக்கப் பட்டது.

---

1. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 19, 135.
2. மா. சந்திரமூர்த்தி, கானாடு காத்தான் பெரிய கோயில், கல்வெட்டு காலாண்டிதழ், எண் 20, தொல்லியல்துறை வெளியீடு, பக், 11 – 15.
3. மா.சந்திரமூர்த்தி, இளையாத்தங்குடி கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004, பக் – 20.

இக்கோயில் சிறப்பால் இவ்வூர் **சிறுமதுரை** என அழைக்கப் படுகிறது. இலட்சுமியை நகரத்தார் குடும்பங்களில் **'அன்றைக்கு வந்திட்ட அம்மா இலட்சுமியே என்றைக்கும் நீங்கா திரு'** எனப் பாடிய - காலத்தால் அழியாத புலவரான **பாடுவார் முத்தப்பர்** பிறந்த ஊர். இவ்வூரிலேயே இவருக்குக் கோட்டம் ஒன்றும் அமைந்துள்ளது.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில் ரூபாய் பத்து இலட்சம் செலவிட்டு (10,00,000) சிவாலயத் திருப்பணியும் சாதாரண ஆண்டு ஐப்பசி 8-ஆம் தேதி (24-10-1910)யில் கும்பாபிஷேகமும் செய்யப் பட்டது. மேலும், 21-10-1877, 24-10-1910, 20-4-1970, 8-9-1994 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. வெகருக. கருப்பன் செட்டியார் மற்றும் பலர் பொருளுதவி கொண்டு ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் கூடலழகிய பெருமாள் கோயில் திருப்பணி செய்யப்பட்டு ராக்ஷஸ ஆண்டு சித்திரை 9-ந் தேதி (21-4-1915) கும்பாபிஷேகம் நடந்தேறியது. இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, நேமம், சூரக்குடி, இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய ஏழு நகரக் கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

25. குருவிகொண்டான் பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 33 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

மறவன் ஒருவன் மாற்றானை வென்று அவன் குருதியைக் கொண்டு வந்து இங்கு வெற்றிவிழா எடுத்ததால் இவ்வூர் **குருதி கொண்டான்பட்டி** என்றாகிப் பின்னர்க் **குருவி கொண்டான் பட்டி** ஆயிற்று என்பர்.[1]

இவ்வூருக்கு அருகிலுள்ள குடகுமலையில் குருவிக்காரன் இனத்தவர் வாழ்ந்து வருவதால் இவ்வூர் **குருவிக்காரன் பட்டி** என்றாகியது. இவ்வூர் காலப்போக்கில் குருவிகொண்டான் பட்டி என்று வழங்கப்படுகிறது.

சொக்கலிங்கமூர்த்தி – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில் ரூபாய் நான்கு இலட்சத்து முப்பதாயிரம் (4,30,000) செலவிட்டு, சிவாலயத் திருப்பணியும், பிரசோற்பத்தி ஆண்டு தை 29-ஆம் தேதி (11-2-1932)யில் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றன. இவ்வூருக்கு அருகிலுள்ள **கீரணிப்பட்டி முத்துமாரியம்மன்** கோயிலும், இவ்வம்மனுக்குச் சித்திரையில் எடுக்கப்படும் திருவிழாவும் இப்பகுதியில் புகழ்பெற்ற

1. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், முதற்பதிப்பு, 1986, பக், 51.

பெரிய திருவிழாவாகும். இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் பட்டி, சூரக்குடி, இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு கோயில் நகரப் புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

26. குழிப்பிறை

மேலப்பத்தூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 45 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் நிலப்பகுதி மேடும் பள்ளமுமாக அமைந்துள்ளதால் (குழி - பள்ளம், வரை - மேடு) **குழிவரை** என்பதே மருவி **குழிபிறை** என ஆகியிருக்கலாம். இவ்வூரிலுள்ள கி.பி. 15 - ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று இவ்வூரை **கூளிபிறை** எனக் குறிக்கிறது. கல்வெட்டு வாசகம் **'பொன்னமராபதி னாட்டு வடபற்றுக் கூளிபிறை'** என்பதாகும்.[1]

சொக்கலிங்கமூர்த்தி – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்கள் பொதுவில் ரூபாய் மூன்று இலட்சம் (3,00,000) செலவிட்டுச் சிவாலயத் திருப்பணியும், விசுவாவசு ஆண்டு வைகாசி 30-ஆம் தேதி (12-6-1905)யில் மற்றும் 1976, 1994-ஆம் ஆண்டுகளிலும் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றன. இளை யாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி, இலுப்பைக்குடி, இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய ஆறு நகரக் கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்துவருகின்றனர்.

27. கொத்தமங்கலம்

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. **கொற்றவன் மங்கலம்** என்பது நாளடைவில் **கொத்தமங்கலம்** என்றாகியது என்பர்.

அழகிய சிற்றம்பலக் கவிராயருக்குக் கொடையாக அளிக்கப் பட்ட ஊர் ஆகும்.

மாங்காட்டீசர் – சவுந்தரநாயகி

சிவகங்கை அரச குடும்பத்திற்குரிய இக்கோயிலுக்கு இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் மூன்று இலட்சம் (3,00,000) செலவில் சிவாலயத் திருப்பணியும், சௌமிய ஆண்டு ஆவணி 14-ஆம் தேதி (29-8-1909)யில் முதற் கும்பாபிஷேகமும், அட்சய ஆண்டு சித்திரை 16-ஆம் தேதி (28-4-1926)யில் இரண்டாவது கும்பாபி ஷேகமும், விரோதி ஆண்டு ஆவணி 20-ஆம் தேதி மூன்றாம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

1. கரு. இராசேந்திரன், புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள், ஆவணம் இதழ் – 17, ஜூலை, 2006, பக், 103.

புதுக்கோட்டை அரச குடும்பத்திற்குரிய **'ஆவுடைநாயகி உடனாகிய திருவீசர்'** கோயிலுக்கு மாத்தூர் அரும்பாக்கூர் நகரத்தாரால் பொதுவில் ரூபாய் இரண்டு இலட்சம் (2,00,000) செலவில் திருப்பணியும், பிரமோதூத ஆண்டு ஆனி 27-ஆம் நாள் (11-7-1930) கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றுள்ளன. மாத்தூர், வைரவன்பட்டி, இலுப்பைக்குடி, இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய ஐந்து நகரக்கோயில் புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

28. கொப்பனாப்பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 55கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரின் கொப்பனான் கண்மாயை வைத்தே இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பர். இவ்வூர் பண்டை நாளில் கொன்றையூர் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்துள்ளது.

விசுவேசுவரர் – விசாலாட்சி

இவ்வூர் நகரப் பொதுவில், ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் **கொன்றையூர் முத்துமாரியம்மை** கோயில் திருப்பணியும், பவ ஆண்டு ஆவணி 1-ஆம் தேதி (17-8-1934)யில் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன. நகரப் பொதுவான முத்து விநாயகர் கோயிலில் 1934-இல் முதல் பின்னர் 1955-இல் இரண்டாம், 1985-இல் மூன்றாம் கும்பாபிஷேகங்கள் நடை பெற்றுள்ளன. இளையாத்தங்குடி, வைரவன்பட்டி, இரணியூர் ஆகிய மூன்று நகரக் கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

29. கோட்டையூர்

பதினாறூர் வட்டகையைச் சார்ந்த இவ்வூர் கான்ரக் குடியிலிருந்து 7 கிமீ. தொலைவில் அமைந்துள்ளது.[1]

வணிகர்களின் ஏழகப்படை இருந்த கோட்டையின் கீழ்ப்பால் மக்கள் வாழ்ந்த ஊரே கோட்டையூர்.

கோட்டையூரின் ரோஜா முத்தையா செட்டியார் தமது வீட்டையே ஒரு மாபெரும் நூலகமாக உருவாக்கினார். உலகத்தின் பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்தும் ஆராய்ச்சியாளர்கள் கோட்டையூருக்கு வந்து இவரது நூலகத்தைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். நகரத்தார் தொடர்பான மூன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட நூல்கள், ஆவணங்கள், அரிய செய்திகள் அடங்கிய இதழ்கள் இவரது நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. இதற்காக இவரைச் சிறப்பித்துத் தமிழக அரசு **'ரெங்கநாதன் பரிசை'**

1. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், முதற்பதிப்பு, 1986, பக், 40.

வழங்கியது. தமக்குப் பின்னரும் தமது நூல்கள் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்ற இவரது குறிக்கோள்படி இவரது அரிய நூலகத்தை அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகம் வாங்கி, சென்னை முகப்பேரில் புதிய கட்டடத்தில் 'ரோஜா முத்தையா நினைவு ஆராய்ச்சி நூலகம்' என அமைத்துப் போற்றிப் பாதுகாத்து வருகிறது.

சொக்கலிங்க மூர்த்தி – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்கள் பொதுவில் ரூபாய் பதினெட்டு இலட்சம் (18,00,000) செலவில், சிவாலயத் திருப்பணியும், பிரமோதூத ஆண்டு ஆவணி (1870 ஜூன்)யிலும், பிரமாதி ஆண்டு தை 8-ஆம் தேதி (21-1-1940)யிலும் இரு கும்பாபிஷேகங்களும் செய்யப் பெற்றன. இதனைத் தொடர்ந்து 1962, 1980, 1996 ஆகிய ஆண்டுகளில் மூன்று கும்பாபிஷேகங்கள் நடந்துள்ளன. இளையாத்தங்குடி, மாத்தூர், நேமம், இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய ஐந்து நகரக் கோயில்களைச் சார்ந்த புள்ளிகள் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர்.

30. கோனாப்பட்டு

நீண்டகரைப் பிரிவைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. புதுக்கோட்டை மன்னர் வேட்டைக்கு வருகின்ற ஊர்களில் கோனாப்பட்டும் ஒன்றாக இருந்திருக்கிறது. இவ்வூர் ஆயர்கள் இருந்த இடமாக இருக்கலாம். **கோனார் பற்று** காலப்போக்கில் மருவி **கோனாப்பட்டு** என ஆகியிருக்கலாம். மிதிலைப் பட்டியில் வாழ்ந்த சிற்றம்பல கவிராயருக்குக் கொடையாக அளிக்கப்பட்ட கிராமப்பட்டிகளில் 'கோனாடுபட்டி' என்பதும் ஒன்றென **'சுசீல வள்ளல் அம்மானை'** எனும் சுவடி நூல் மூலம் அறிகிறோம்.

இவ்வூர் கோயிலில் பட்டினத்தார் வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிற்பங்கள் அமைந்திருப்பது சிறப்பாகும்.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்கள் பொதுவில், தாரண ஆண்டு தை மாதம் (1887 ஜனவரி) சிவலிங்கப் பிரதிட்டை செய்து, ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில், ஆலயத் திருப்பணியும், சர்வதாரி ஆண்டு வைகாசி 6-ஆம் தேதி (17-5-1888)யிலும், விளம்பி ஆண்டு ஆவணி 19-ஆம் தேதி (2-8-1898)யிலும், நள ஆண்டு ஆனி 27-ஆம் தேதி (10-7-1916)யிலும், பிரஜோற்பத்தி ஆண்டு சித்திரை 18-ஆம் தேதி (30-4-1931)யிலும், முறையே நான்கு கும்பாபிஷேகங்களும் செய்யப் பெற்றன. பின்னர் ராஜகோபுரம் கட்டப் பெற்று வெகுதான்ய ஆண்டு ஆவணி மாதத்தில் 5-ஆவது கும்பாபிஷேகம்

செய்யப் பெற்றது. இவ்வூரில் இரணியூர், இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, பிள்ளையார்பட்டி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 6 ஊர் நகரக் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

31. சக்கந்தி

தெற்கு வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 56 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

போர் வீரர்கள் தங்கும் இடத்திற்குப் பாளையம் என்பது பெயர். நாயக்கர் காலத்தில் சக்கந்தியும் படமாத்தூரும் பாளையங்களாகக் கருதப்பட்டு வந்ததால், ஏறத்தாழ 600 ஆண்டுகள் முன்பிருந்தே இப்பெயர் விளங்கியிருப்பதாக அறிய முடிகிறது. இவ்வூருக்குப் **'படைகொண்டான் ஏந்தல்'** என்ற பெயரும் முன்பு இருந்துள்ளது.[1]

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

உல.க.கண. சோமசுந்தரம் செட்டியார் தாது ஆண்டு புரட்டாசி 19-ம் நாள் (4-10-1936) விநாயகர் ஆலயத்தைப் புதிதாகக் கல்திருப்பணி செய்தும், ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில் சிவாலயத்தைக் கட்டி முடித்தும் தாது ஆண்டு ஐப்பசி 12-ஆம் நாள் (28-10-1938) கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றது. இவ்வூரில் இளையாத்தங்குடி கோயிலைச் சார்ந்த பேரசெந்தூருடையார் பிரிவு புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

32. சண்முகநாதபுரம்

கீழ வட்டகையைச் சார்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வெளியேறிய நகரத்தார்கள் பல கிராமங்களில் குடியேறித் தங்கள் வசதிக்கேற்ப ஊர்களை உருவாக்கி வாழ்ந்தனர். அவ்வாறு சேந்தணி கிராம நகரத்தார் 1840-50 ஆண்டுகளில் குன்றக்குடி ஆதீனத்தில் மனை வாங்கி ஊர் அமைத்து இறைவன் பெயராலே சண்முகநாதபுரம் என அழைத்தனர். பேச்சு வழக்கில் ஆறாவயல் என்ற பெயரும் இவ்வூருக்கு உண்டு.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் பத்தாயிரம் (10,000) செலவில், சிவாலயத் திருப்பணியும், பிரமாதி ஆண்டு வைகாசியில் (1879, மே) கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன. இதற்குப் பிறகு பல கும்பாபிஷேகங்கள் நடத்தப்பட்டு அண்மையில் 1989-இல் குடமுழுக்கு நடந்துள்ளது. இவ்வூரில் இளையாத்தங்குடி, சூரக்குடி, நேமம், பிள்ளையார்பட்டி, மாத்தூர்

1. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், முதற்பதிப்பு, 1986, பக், 74.

ஆகிய 5 ஊர் நகரக் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

33. சிறாவயல்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து வடமேற்கே சுமார் 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

மருதுபாண்டியர் காலத்தில் அவர்களுக்குச் சிகை மழிக்கும் நாவிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட இடம் **சிரைவயல்**. இதுவே காலப்போக்கில் மருவி **சிறாவயல்** ஆனது என்பர். செட்டி நாட்டுப் பகுதியில் சிறாவயல் மஞ்சு விரட்டு புகழ்பெற்றது.

"கற்புள்ள ஒரு கன்னியை மணம் முடிக்கும் வாய்ப்பு செல்வர்களைப் போல ஏழைகளுக்கும் எளிதாக இருக்க வேண்டும். மணமக்களின் ஒன்றுபட்ட அன்பும் ஒழுக்கமும் முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டும். பலர் முன் தம் ஆடம்பரங்களைக் காட்டுவது செல்வமுடைமைக்குச் சிறப்பாகாது. இச்செலவுகளை நிறுத்துவதன் மூலமாகத்தான் நீங்கள் செட்டிநாட்டைத் தேவ உலகமாக மாற்றமுடியும்" எனக் கூறிய **மகாத்மா காந்தியடிகள்** தமிழகத்திற்கு வந்தபோது இவ்வூருக்கு இருமுறை வருகை புரிந்துள்ளார்கள்.

தியாகராஜர் – திரிலோகநாயகி

க.மு.நா. மெய்யப்ப செட்டியார், பெரி. மு. முத்தையா செட்டியார் ஆகிய இருவரின் முயற்சியால், சௌமிய ஆண்டு வைகாசி 31-ஆம் நாள் (13-6-1909) பாலாலயப் பிரதிட்டை செய்யப் பெற்று, பின் ரூபாய் ஐம்பதாயிரம் (50,000) செலவில் கோயில் திருப்பணியும், விரோதி கிருது ஆண்டு தை 19-ஆம் நாள் (1-1-1912) கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. இக்கோயில் பிரபவ ஆண்டு ஆவணி 1-ஆம் தேதி (17-8-1927) முதல் நகரத்தார்களிடம் ஒப்புவிக்கப் பெற்று நடைபெற்று வருகின்றது.[1] அதன் பின்னர் நகரத்தார்களால் 1927, 1960, 1979, 1988 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு விழா நடந்துள்ளது. இவ்வூரில் இலுப்பைக்குடி, பிள்ளையார்பட்டி, வைரவன்பட்டி ஆகிய 3 ஊர் நகரக் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

34. சிறுகூடற் பட்டி

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து வடமேற்கே 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

மருதுபாண்டியர்கள் காலத்தில் நாயக்கர்களுக்காக விட்டுக் கொடுக்கப்பட்ட குமாரப்பேட்டை, அதன் அருகிலுள்ள செந்நெல்

---

1. வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, 2003, பக், 84.

குடி இரண்டு ஊர்களும் ஒன்று கூடும் இடம் இது. மூன்று சிறு ஊர்களும் கூடுவதால் சிறுகூடல்பட்டி என்றானது. நாமக்கல் கவிஞருக்குப் பிறகு தமிழக அரசவை கவிஞராக விளங்கிய **கவியரசர் கண்ணதாசன்** பிறந்த ஊர். இவ்வூர் மலையரசி அம்மன் கோயில் புகழ் பெற்றது.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில் ரூபாய் முப்பதினாயிரம் (30,000) செலவில் சிவாலயத் திருப்பணியும், ஜய வருடம் தை மாதம் (1895 ஜனவரி) கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. இவ்வூரில் இளையாத்தங்குடி, பிள்ளையார்பட்டி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 4 ஊர் நகரக் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

35. செம்பனூர்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 27 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரின் மண்வளம் செம்மண் பூமியாக இருப்பதால் **'செம்மண்ணூரே'** காலப்போக்கில் மருவி **'செம்பனூர்'** ஆனது என்பர். செம்பொன்னூர் மருவி செம்பனூர் ஆயிற்று எனலாம்.

கண்டீசுவரர் – நித்தியகல்யாணி

சிவகங்கை அரச குடும்பத்திற்குரிய இச்சிவாலயம் கு.ம.நா. நாச்சியப்ப செட்டியார், அவர் தம்பி சுப்பிரமணியன் செட்டியார் இருவராலும் விளம்பி வருடம் (1899) ரூபாய் முப்பத்தையாயிரம் செலவில் திருப்பணி செய்யப்பட்டு சுபகிருது ஆண்டு சித்திரை 15ஆம் நாள் (27-4-1902) கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இவ்வூர் நகரத்தாராலும், தேவகோட்டை மெ.லெ.மெ. இராமநாதன் செட்டியாரால், பிங்கள ஆண்டு சித்திரை (1917 ஏப்பிரல்)யில் சுந்தரராஜப் பெருமாள் கோயில் திருப்பணி தொடங்கப் பெற்று ரூபாய் ஐயாயிரம் (5,000) செலவில் சுற்றுத் திருமதில், கோயில் முதலியன கட்டி முடிக்கப் பெற்றுள்ளன. இவ்வூரில் நேமம் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் மட்டும் வாழ்ந்து வருகின்றனர்.

36. செயங்கொண்டபுரம் (செக்காலை)

காரைக்குடியின் ஒரு பகுதியாகவே இவ்வூர் விளங்குகிறது.

சிவன் கோயில் இல்லை.

நாட்டார் வயல் சோமசுந்தரம் செட்டியாரால் ரூபாய் இருபத்தையாயிரம் (25,000) செலவில் கல்கட்டுக் குளமும், விநாயகர் கோயிலும், விடுதியும், வாரியப்பட்டி சுப்பிரமணியன்

செட்டியாரால் ரூபாய் பன்னிரண்டாயிரம் (12,000) செலவில் ஒரு குளமும், பிள்ளையார் கோயிலும் அமைக்கப் பெற்றுள்ளன. இவ்வூரில் நேமம் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் மட்டும் வாழ்ந்து வருகின்றனர்.

37. செவ்வூர்

மேல வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

செம்மண் பூமியாகிய இப்பகுதிக்கு நீர்வளம் தருகின்ற **'செவல் கண்மாய்'** இவ்வூரில் இருப்பதால் **செவல் ஊர், 'செவ்வூர்'** என அழைக்கப்பட்டது. இவ்வூர் வெண்பாப் புலிக் கவிராயர் இல்லத்திலிருந்து தான் டாக்டர். உ.வே. சாமிநாத ஐயர் அவர்களுக்கு சீவக சிந்தாமணிக் காவியத்தின் ஓலைச் சுவடிகள் கிடைத்ததாக அவரது சுயசரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.[1]

சொக்கலிங்கமூர்த்தி – மீனாட்சியம்மை

நகரத்தார்களாலும், செ.ராம. சொக்கலிங்கம் செட்டியாராலும், ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் சிவாலயத் திருப்பணி முடிக்கப்பெற்று, ஆங்கீரச ஆண்டு சித்திரை 9-ஆம் நாள் (21-4-1932) ரூபாய் பதினையாயிரம் (15,000) செலவில், நகரத்தார்களால் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. பின்னர் 31-5-1964, 11-11-1984 ஆகிய நாள்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வூரில் இரணியூர், சூரக்குடி ஆகிய இரண்டு ஊர் நகரக் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

38. சொக்கநாதபுரம்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சொக்கநாதப் பெருமானைத் தியானித்து வந்த அகத்தியரின் சிலை இவ்வூர் சிவாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இவ்வூர்க் கோயிலுக்கு இஃது ஒரு சிறப்பு. சிவபெருமான் பெயராலேயே **சொக்கநாதபுரம்** எனப்பட்டது.

திருக்கண்டீசுவரர் – சிறு தேன்மொழியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவிட்டு, சிவாலயத் திருப்பணியும், சாதாரண ஆண்டு ஆனி 13-ஆம் நாள் (26-6-1910) கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. இவ்வூரில் இளையாத்தங்குடி, பிள்ளையார்பட்டி, மாத்தூர் ஆகிய 3 நகரக் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

---

1. டாக்டர். உ.வேசாமிநாதையர், என் சரித்திரம், டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம், முதற்பதிப்பு, சென்னை.

39. சொக்கலிங்கபுரம் (மதகுபட்டி)

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரின் மேற்கே உள்ள பெரிய ஏரியின் கீழ்ப்புறத்தில் உள்ள நீர் பாயும் மடையில் பெரியதொரு மதகும், பலகை அடைப்பும் காணப்படுவதால் மதகுபட்டி எனப் பெயர் வந்ததாகக் கூறுகின்றனர்.

சொக்கலிங்கமூர்த்தி – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில் ரூபாய் இரண்டரை இலட்சம் (2,50,000) செலவிட்டு, சிவாலயத் திருப்பணியும், பவ ஆண்டு தை 26-ஆம் நாள் (8-2-1935) மற்றும் 1995-இல் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. சுந்தரேசுவரர் தவிர ஸ்ரீநிவாசப் பெருமாள் மாணிக்க விநாயகர், தளுதாளைக் காளி ஆகிய தெய்வங்களின் கோயில்களும் உள்ளன. இவ்வூரில் இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 3 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

40. சொக்கலிங்கம்புதூர் (சொக்கனேந்தல்)

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

மயூரகிரி என வழங்கும் குன்றக்குடி முருகப் பெருமானுக்குப் பால் அபிஷேகம் செய்வதற்கென்றே சிவகங்கை ஜமீன்தாரிணி காத்தம்மா நாச்சியாரால் தொத்தம் சேர்வை என்பவருக்கு இனாமாக அளிக்கப்பட்ட ஊர் சொக்கனேந்தல். நகரத்தார்களின் குடியேற்றத்திற்குப் பிறகு சொக்கலிங்கம் புதூர் என மாறியது.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில் ரூபாய் எழுபதினாயிரம் (70,000) செலவில் சிவாலயத்திருப்பணியும், காளயுக்தி ஆண்டு ஆனி 7-ஆம் நாள் (20-6-1918) கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

நகரத்தார்களால் ரூபாய் பதினெட்டாயிரம் (18,000) செலவில், ஊருணியும் பிள்ளையார் கோயிலும் கட்டப் பெற்று 20-6-1918-இல் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. இவ்வூரில் மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய நகரக் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

41. சோழபுரம்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

கவியோகி சுத்தானந்த பாரதியார் தவக்குடில் கட்டி வாழ்ந்த ஊர். அவர் கூறிய "நீர்நிலைகள் நிரம்பிய சோலைகள் அடர்ந்த

சோலை புரமே" மருவி சோழபுரம் ஆகியிருக்கக் கூடும் என்பார். சோழ அரசனுடைய பெயரால் ஏற்பட்ட சோழன்புரம் என்னும் ஊர் நாளடைவில் மருவி **சோழபுரம்** ஆயிற்று. **விஜயபுரம்** என்ற மற்றொரு பெயரும் இவ்வூருக்கு உண்டு.

அருள்மொழிநாதர் – அறம் வளர்த்த ஈசுவரி

ஒக்கூர் ச.கரு.சி. பொதுக் குடும்பத்தாரால், ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்தையாயிரம் (2,75,000) செலவில் சிவாலயத் திருப்பணியும், பிலவங்க வருடம் வைகாசி மாதத்தில் கும்பாபி ஷேகமும் செய்யப் பெற்றன. பின்னர், சி.கரு.சி.கரு. குடும்பத்தாரால் ரூபாய் ஒன்றே கால் இலட்சம் (1,25,000) செலவில், இராஜகோபுரம் முன் மண்டபம் முதலிய திருப்பணிகள் செய்யப் பெற்று, ஸ்ரீமுக வருடம் ஆனி மாதம் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. இவ்வூரில் பிள்ளையார்பட்டி, மாத்தூர் ஆகிய 2 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

42. சொர்ணநாதபுரம் (தாணிச்சாவூருணி)

கீழவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சிவன் கோயில் இல்லை.

இவ்வூர் கண்டதேவிக் கோயிலுக்கு அருகில் இருப்பதால், அதையே தங்களுக்குச் சிவாலயமாகப் பாவித்து, பிள்ளையார் பட்டிக் கோயில் வகுப்பார் 1824-ஆம் ஆண்டில் ரூபாய் முப்பத்திரண்டாயிரம் (32,000) செலவில் கற்பகமுத்து விநாயகர் கோயிலும், தாணிச்சாவூருணியும் நிறுவியுள்ளனர். இக்கோயிலுக்கு ரூபாய் இருபத்தையாயிரம் (25,000) மதிப்புள்ள **"போரி வயல்"** என்ற கிராமம் மானியமாக அக்காலத்திலேயே விடப் பெற்றுள்ளது. இவ்வூரில் தற்போது பிள்ளையார்பட்டி கோயிலைச் சார்ந்த புள்ளிகள் மட்டும் வாழ்ந்து வருகின்றனர்.

43. தேவகோட்டை

கீழவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

தேவியின் கோட்டை என்பதே தேவிகோட்டையாகி இப்போது தேவகோட்டை என மருவி வழங்கப்படுவதாகவும், சிலர் **தேவர் கோட்டை** என்பதே நாளடைவில் **தேவகோட்டை** ஆனது என்றும் கூறுகின்றனர். நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் வாழ்ந்து வருகின்ற சிறப்பான ஊர்.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் ஏழு இலட்சம் (7,00,000) செலவிட்டு, சிவாலயத் திருப்பணியும், சர்வதாரி ஆண்டு

வைகாசி 24 (4-6-1888) குரோதன ஆண்டு ஆவணி 20 (4-8-1925) இந்நாள்களில் இரண்டு கும்பாபிஷேகங்களும், இதற்குப் பிறகு பல கும்பாபிஷேகங்களும், அண்மையில் 10-2-1989இல் குடமுழுக்கு விழாவும் நடந்தேறியுள்ளன. இக்கோயிலில் சேக்கிழார் பெருமான் பிறந்த குன்றத்தூரில் இருந்து கொண்டு வரப்பட்ட கல்லால் சேக்கிழாரின் உருவம் வடிக்கப்பட்டுத் தனிக் கருவறையில் அமைத்திருப்பது சிறப்பு ஆகும். இவ்வூரில் இரணியூர், இலுப்பைக் குடி, இளையாத்தங்குடி, நேமம், பிள்ளையார்பட்டி, மாத்தூர், வைரவன்பட்டி, வேலங்குடி ஆகிய 8 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

44. தேனிபட்டி

கிழப்பத்தூரைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 27 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் நகரத்தார் முதன் முதலில் இக்கிராமத்தில் குடியேறி இவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் கழனியுடையார் ஐயனார் பெயரால் இவ்வூருக்குக் **கழனியின் வாசல்** என்ற பெயரை ஏற்படுத்தினர். இதுவே காலப்போக்கில் **கழனிவாசல்** ஆயிற்று.

அகத்தீசுவரர் – அகிலாண்டேசுவரி

தாம் முன் குடியிருந்த தேனிப்பட்டியில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப் பெற்று மிகப் பழைமையுற்றிருந்த சிவாலயத்தைப் புதுப்பித்து ரூபாய் எண்பதினாயிரம் (80,000) வரை செலவிட்டு திருப்பணி செய்து 1939, 1971ஆம் ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடத்தியுள்ளனர். இவ்வூரில் இரணியூர், இளையாத்தங்குடி, சூரக்குடி, வைரவன்பட்டி ஆகிய 4 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

45. நடராசபுரம்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சிவகங்கை ஜமீன்தாரரிடம் வரிகட்டி நகரத்தார்கள் ஐவரால் பொதுவில் கிரயம் பெற்று மனைகள் வாங்கி 1905-இல் இவ்வூர் உருவாகியது. பின்னர் இவ்வூருக்கு நடராசபுரம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவ்வூருக்கு நகரத்தார்கள் பனங்குடியில் இருந்து வந்ததாகக் கூறுவர்.

இராமநாதர் – பருவதவர்த்தனி

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் பதினையாயிரம் (15,000) செலவிட்டு, துன்மதி ஆண்டு சித்திரை (1921 மே)யில் சிவாலயத் திருப்பணி தொடங்கி, துந்துபி ஆண்டு வைகாசி (14-6-1922) ரூபாய் எட்டாயிரம் (8,000) செலவில் கும்பாபிஷேகம்

செய்யப்பெற்றது. இவ்வூரில் இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, சூரக்குடி, வைரவன்பட்டி ஆகிய 4 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

46. நற்சாந்துபட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

திருமயத்தில் விஜயரகுநாத சேதுபதி மன்னரால் ஏழு சுவர்களும், ஓர் அகழியும் உடைய ஒரு கோட்டை 1687-இல் கட்டப்பட்டது. இக்கோட்டை கட்டுவதற்குரிய நல்ல சுண்ணாம்புக் கல் கலவை சாந்து இவ்வூரிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டதால் 'நற்சாந்துப்பட்டி' என அழைக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். பேச்சு வழக்கில் 'நச்சாந்துபட்டி' என அழைப்பர். இவ்வூருக்கு 'திருமலை சமுத்திரம்' என்ற வேறு பெயரும் உண்டு. கி.பி. 1880 ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று 'நச்சாந்துப்பட்டி என்று விளங்கிய திருமலைச் சமுத்திரம்' எனக் குறிக்கிறது.[1]

சிதம்பரேசர் – சிவகாமியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் ஆறு இலட்சம் (6,00,000) செலவிட்டு, சிவாலயத் திருப்பணியும், விபவ ஆண்டு வைகாசி 19-ஆம் தேதி (23-5-1928)யில் மற்றும், 1972, 1991 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. இவ்வூரில் இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, பிள்ளையார்பட்டி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 5 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

47. நாச்சியாபுரம்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடி யிலிருந்து 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மருது சகோதரர்களால் தோற்றுவிக்கப்பட்ட காட்டு நாச்சியம்மன் கோயில் இருப்பதால் அந்த அம்மன் பெயராலேயே நாச்சியாபுரம், நாச்சியார்புரம் என அழைக்கின்றனர்.

உமாமகேசுவரர் – உமாமகேசுவரி

சுப. ராம. இராமன் செட்டியார், ரூபாய் எழுபத்தையாயிரம் (75,000) செலவில், சிவாலயமும் ஊருணியும் நிறுவி, பிரபவ ஆண்டு ஆனி 26-ஆம் நாள் (9-7-1906) கும்பாபிஷேகம் செய்வித்தனர்.

1. இரா.பாஸ்கரன், கரு.இராஜேந்திரன், புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள், ஆவணம் இதழ் – 14, சூலை, 2003.

நகரப்பொதுவில், "நாச்சியாரம்மன் கோயில்" கட்டப்பெற்று, கும்பாபிஷேகம் நிறைவெய்தியது. அண்மையில் 24.6.1991இல் குடமுழுக்கு விழா நடைபெற்றது.

தண்டாயுதபாணி கோயில், ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில் கட்டப்பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. இவ்வூரில் இளையாத்தங்குடி, இலுப்பைக்குடி, பிள்ளையார் பட்டி, வைரவன்பட்டி ஆகிய 4 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

48. நாட்டரசன் கோட்டை

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. காவிரிப்பூம்பட்டினத் திலிருந்து இவ்வூரில் குடியேறிய ஒரு பகுதி நகரத்தார்கள் இங்குக் கோட்டை போன்ற வீடுகட்டி வாழ்ந்ததாகக் கூறுவர்.

களவழி நாடு என்று முன்பு இப்பகுதி பெயர் பெற்றிருந்தது. இவ்வூர் திருவிழாவில் கள்ளர் வகுப்பினருக்கு **நாட்டரசன்** என்ற பெயர் காரணம் கூறி திருநீறு வழங்கப்படுகிறது. இன்றும் இங்கு நாட்டரசன் என்ற குடும்பம் உண்டு. விழாக் காலங்களில் இக் குடும்பத் தார்க்குச் சிறப்பான பங்கு உண்டு. இக்காரணத்தால் நாட்டரசன் கோட்டை என அழைக்கப்பட்டிருக்கலாம்.[1] இவ்வூர் முன்பு **முடி கொண்ட பாண்டியபுரம்** என அழைக்கப்பட்டது. கவிச் சக்கரவர்த்தி கம்பர் தம் வாழ்நாளின் இறுதிக்காலத்தில் செட்டி நாட்டில் தான் வாழ்ந்தார் என்றும், அவர் உயிர் நீத்தது நாட்டரசன் கோட்டையில் தான் என்றும் நம்பப்படுகிறது. இதனை உறுதி செய்யும் பல சான்றுகள் இங்குக் காணப்படுகின்றன. இங்குள்ள கண்ணுடைய அம்மன் கோயில் புகழ் பெற்றது. இவ்வம்மன் மக்களால் கண்ணாத்தாள் என்றே அழைக்கப் படுகிறாள். கண்ணகியே இக்கண்ணாத்தாள் என்றும் கூறுகின்றனர்.[2] இவ்வூர் தேசி விநாயகர் பண்டைய வாணிகக் குழுவான நானா தேசிகளோடு தொடர்புடை யது.

கம்பன் சமாதி தவிர இவ்வூரில் கம்பன் பற்றிய நடுகல், கம்பன் செய், கம்பன் குளம், கம்பன் ஊருணி ஆகியவையும் அமைந் துள்ளன. மேலும் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்தே, கம்பன் சமாதி அமைந்துள்ள இடத்தை ஒட்டிய இடங்கள் பதிவு செய்யும் போது **'கம்பன் செய் கழிவு'** என்ற வார்த்தை பயன்படுத்தப்பட் டுள்ளது. இச்சமாதி அமைந்திருக்கும் இடத்தின் உரிமையான நகரத்தார் குடும்பத்தினரால் 200 ஆண்டுகளாகக் கம்பனுக்கு பூசை நடத்தப்படுகிறது.

---

1. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், முதற்பதிப்பு, 1986, பக், 34.
2. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002. பக். 314.

கரிகால சோழீச்சுவரர் – சிவகாமியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் மூன்று இலட்சம் (3,00,000) செலவிட்டு, மிகப் புராதனமான சிவாலயத் திருப்பணியும், சித்தார்த்தி ஆண்டு, சித்திரை 4-ஆம் நாள் (15-4-1859), அட்சய ஆண்டு ஆவணி 6-ஆம் நாள் (22-8-1926) ஆகிய நாள்களில் இரண்டு கும்பாபிஷேகங்களும் செய்யப்பெற்றன. நகரத்தார்களால், ரூபாய் மூன்று இலட்சம் செலவில் (3,00,000) ஸ்ரீநிவாசப் பெருமாள், ஆண்டாள் நாச்சியார் கோயில் திருப்பணி செய்யப்பெற்று, விசுவாவசு ஆண்டு வைகாசி 30-ஆம் நாளில் (12-6-1903) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. இவ்வூரில் பெருமாள் கோயிலும், கருப்பண்ணசுவாமி கோயிலும், ஊர்காவலன் என்ற ஐயனார் கோயிலும் உள்ளன.

கண்ணுடைய நாயகியம்மை கோயில் கொடிமரம், அணியொட்டிக் கால் மண்டபம், திருமதில், இராஜ கோபுரம் முதலிய எல்லாத் திருப்பணிகளும், நகரத்தார்களால் ரூபாய் நான்கு இலட்சம் (4,00,000) செலவில் அமைக்கப் பெற்று, ஈசுவர வருடம் ஆவணி மாதத்தில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. அம்மன் கோயிலுக்கு முன்னர், வெ.க.சு. வகையறாவால் ரூபாய் ஐம்பதினாயிரம் (50,000) செலவில், தெப்பக்குளம் கல் திருப்பணியாகக் கட்டி முடிக்கப் பெற்று 1874-ஆம் ஆண்டில் தடாகப் பிரதிஷ்டை செய்யப்பெற்றது. இவ்வம்மனுக்கு, நகரத்தார்களால் ரூபாய் ஐம்பதினாயிரம் (50,000) செலவில் 18-5-1930-இல் "வெள்ளி ரதம்" செய்யப் பெற்றுள்ளது. இவ்வூரில் இரணியூர், இளையாத்தங்குடி, சூரக்குடி, பிள்ளையார் பட்டி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 6 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

49. நெற்குப்பை

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

நாயக்கர் காலத்தில் இவ்வூர் நெற்களஞ்சியமாக இருந்திருக் கிறது. குப்பை என்பது குவியலைக் குறிக்கும். நெற்குவியல்கள் அதிகமாக இருந்த காரணத்தால் நெற்குப்பை என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். ஏறத்தாழ 16 ஆயிரம் கலம் நெல் கொள்ளக் கூடிய கிடங்குகள் இங்கு இருந்து இருக்கிறது![1] நகரத்தார் வரலாற்றில் இவ்வூர் தனிச்சிறப்புப் பெற்றது. **பழனிக்கோயில் பட்டயங்கள் அனைத்திலும் முதல் மரியாதைக்குரியவராகக் குறிப்பிடப்படும் நேமங்கோவில் குப்பாபிச்சஞ்செட்டி குமாரன் குமரப்பன் இவ்வூரைச் சார்ந்தவர் ஆவார்.**

1. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், முதற்பதிப்பு, 1986, பக், 74 – 75.

மனமொத்த கண்டீசர் – நித்திய கல்யாணி

இக்கோயில் வெங்களப்ப நாயக்கர் கால வரலாற்றுத் தொடர்புடையது.

கோயில் சிவகங்கை அரச குடும்ப அறநிலையத்திற்குரியது.

தெ.பெரி. பெரியண்ணன் செட்டியாரால், ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில், சுவாமி கோயில் புதிதாகத் திருப்பணி செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

ராம. சா. பழ.சா. சாத்தப்ப செட்டியாரால் ரூபாய் நாற்பதினாயிரம் (40,000) செலவில் அம்மன் கோயில் திருப்பணி முடிக்கப்பெற்று, பிரமோதூத ஆண்டு ஆனி 29-ஆம் தேதி (13-7-1930) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

இவ்வூர் நகரத்தார்கள், ரூபாய் நாற்பதினாயிரம் (40,000) செலவில் சுப்பிரமணிய சுவாமி கோயில் திருப்பணி முடித்து, விசுவாவசு ஆண்டு ஆனி 26-ஆம் நாள் (9-7-1905) கும்பாபிஷேகம் செய்வித்தனர். பின்னர், இராஜகோபுரம் ரூபாய் பத்தாயிரம் (10,000) செலவில் புதுப்பித்து, பவ ஆண்டு தை 26-ஆம் நாள் (8-1-1933) நூதனமாக ஸ்தூபி வைத்துக் கும்பாபிஷேகம் செய்வித்தனர். இவ்வூரில் இரணியூர், இளையாத்தங்குடி, சூரக்குடி, நேமம், பிள்ளையார்பட்டி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 7 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

50. நே. முத்துப்பட்டி

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடி யிலிருந்து 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

நகரத்தார்கள் இவ்வூருக்கு குடியேறிய பிறகு ஊர் உருவானதற் கான வரவு செலவு கணக்குகளைப் பார்ப்பதற்காக நியமம் என்ற ஊரி லிருந்து அந்தணர் ஒருவரை நியமித்தனர். இதனால் **'நியமித்தான் பட்டி'** என்று அழைக்கப்பட்ட ஊர் காலப்போக்கில் மருவி **'நேமத்தான் பட்டி'** எனப்பட்டதாகக் கூறுகின்றனர். நிகமம் என்ற வணிகக்குழு இவ்வூரில் இருந்ததாலேயே இவ்வூர் இவ்வாறு அழைக்கப்பட்டதாக ஆய்வாளர் கூறுகின்றனர்.

சிவன் கோயில் இல்லை.

மெ.மு.பழ.செட்டியாரால், துன்மதி கார்த்திகை 29-ஆம் நாள் (21-12-1921) சத்திரம் கட்டத் தொடங்கி ரூபாய் ஒன்றரை இலட்சம் (1,50,000) செலவில் முடிக்கப்பெற்று, குரோதன ஆண்டு தை 12-ஆம் நாள் (25-1-26) முருகன் கோயில் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. இவ்வூரில் இரணியூர், இலுப்பைக்குடி,

இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன் பட்டி ஆகிய 5 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

51. பட்டமங்கலம்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 24 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரின் ஒருபுறமுள்ள ஆலமரத்தின் கீழ், கார்த்திகை மகளிர் அறுவர்க்கு, அட்டமா சித்திகளின் இயல்பினை, இறைவன் ஆசிரியனாக எழுந்தருளி வந்து உபதேசித்தனர் என்பது புராண வரலாறு. இதனால் அறவுரை, **'பெற்ற மங்கலம்'** என்பதே காலப்போக்கில் **'பட்டமங்கலம்'** என்றானது. முன்பு இவ்வூருக்குப் **'பட்டமங்கை'** என்ற பெயரும் வழங்கியுள்ளது. மாணிக்கவாசகர் இப்பதி பற்றிக் குறிப்பிடுவார். இக்கோயிலிலும் ஏறழிஞ்சில் மரம் உள்ளது. இம்மரத்தின் பழம் பழுத்துக் கீழே விழுந்தவுடன் தானாகவே சென்று மீண்டும் மரத்தில் ஒட்டிக்கொள்ளும் தன்மையுடையது. செட்டிநாட்டில் இங்கும், அரிமழத்திலுமே இம்மரம் காணப்படுகிறது.

சோமசுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இறைவன் திருவிளையாடல் நிகழ்ந்த இத்தலத்தில், சோமசுந்தரேசுவரருக்கும், மீனாட்சியம்மைக்கும், அட்டமாசித்தி உபதேசித்தருளிய தட்சணாமூர்த்திப் பெருமானுக்கும் அற்புதத் திருக்கோயில் அமைந்துள்ளது. திருப்பணிகள் துன்மதி யாண்டு சித்திரைத் திங்களில் வீர.அ. அடைக்கப்ப செட்டியாரால் தொடங்கப் பெற்று மிகுந்த பொருட் செலவில், சிவாகம விதிப்படி, பிரமோதூத ஆண்டு வைகாசி 6-ஆம் நாள் (19-5-1930) சிறப்புறக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. திருப்பணிகள், வெள்ளி வாகனங்கள், கும்பாபிஷேகச் செலவு உள்பட ரூபாய் பத்து லட்சம் (10,00,000) வரை செலவிடப்பட்டிருக்கிறது. அடுத்து 1942, 1954, 1996, 1983 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு நடந்துள்ளது. இவ்வூரில் இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, சூரக்குடி, பிள்ளையார்பட்டி, மாத்தூர், வேலங்குடி ஆகிய 6 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

52. பலவான்குடி

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடி யிலிருந்து 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

முருகப்பெருமான் சூரக்குடியில் சூரனை வென்று, திருவேலங்குடியில் அமர்ந்து, மாலையிட்டான் பட்டியில் மாலை சூடிக்கொண்டு, ஆலத்திப்பட்டியில் ஆலத்தி எடுத்துக்கொண்டு,

பலவான் குடியில் பலவாணர்கள் தொழுத பின், குன்றக்குடி ஏகினான் என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை எழுதிய **'சூரைப்பாணர் புராணத்தில்'** குறிப்பிடப்படுகிறது. பலவாணர்கள் வாழ்ந்த ஊரே **'பலவாணர் குடி'** யாகி இன்று **'பலவான் குடி'**யான தாகக் கூறுவர். **'புலவன்குடி'** என்ற ஊரே பின்நாளில் **'பலவான்குடி'** என வழங்குவதாக ஆய்வாளர் கூறுவர்.

சொக்கலிங்க மூர்த்தி – மீனாட்சியம்மை

நகரத்தார்களால் ரூபாய் இருபத்தையாயிரம் (25,000) செலவில் சிவாலயத் திருப்பணியும், 1895-ஆம் ஆண்டு கும்பாபிஷேகமும் செய்வித்தனர். மீண்டும் இக்கோயிலுக்கு 1940, 1958, 1975, 1990 ஆகிய ஆண்டுகளில் நன்னீராட்டு விழா நடந்துள்ளது. இவ்வூரில் இரணியூர், இளையாத்தங்குடி, நேமம், மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 5 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

53. பள்ளத்தூர்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடி யிலிருந்து 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் வடக்கே ஏற்றமும், தெற்கே இறக்கமுமாக அமைந் திருப்பதால் மழைக் காலங்களில் மழைநீர் தெற்கே உள்ள ஊருணியில் பாய்ந்து நிறைந்து நிற்கும். எனவே, பள்ளமான இடத்தில் இவ்வூர் அமைந்திருப்பதால் **பள்ளத்தூர்** எனப்பட்டது.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில் ரூபாய் ஏழு இலட்சம் (7,00,000) செலவிட்டு, சிவாலயத் திருப்பணியும், பிரமாதீச ஆண்டு ஆனி 27-ஆம் நாள் (10-7-1913) கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. இதற்குப் பிறகு 1931, 1939, 1956, 1973, 1990 ஆகிய ஆண்டுகளில் நன்னீராட்டு விழாச் சிறப்பாக நடந்துள்ளது. இவ்வூரில் இரணியூர், இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, சூரக்குடி, நேமம், மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 7 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

54. பறியாமருதுபட்டி

பறியாமருதீசர் – பரஞ்சோதியம்மை

சிவகங்கை ஜமீனைச் சேர்ந்த புராதனமான இவ்வூர் ஆலயத்தை, நெற்குப்பை முரு. பழ. பொதுக் குடும்பத்தார், ரூபாய் மூன்று இலட்சம் (3,00,000) செலவில் திருப்பணி செய்து, விமானக் கோபுரங்கள், திருமதில்கள் எடுப்பித்து, ரூபாய் பத்தாயிரம் (10,000) செலவில் பிரசோற்பத்தி ஆண்டு தை 30-ஆம் நாள் (12-2-1932)

கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். இந்த ஆலயத்தில் உள்ள சிவலிங்கம் வழக்கத்திற்கு மாறாக நீண்ட சதுரவடிவில் இருப்பது ஒரு தனித்தன்மையைக் காட்டுகிறது. இவ்வூரில் சூரக்குடி, வைரவன் பட்டி ஆகிய கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

55. பனங்குடி

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

பனை மரங்கள் அடர்ந்த பகுதிகள் பனங்காடு[1], பனைத்துறை [2] என்னும் பெயர்களில் வழங்கப்பட்டதை 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைய தமிழ் கல்வெட்டுகள் குறிக்கின்றன. செட்டி நாட்டில் நகரத்தார்கள் குடியேறி வாழத் தொடங்கியபோது இவ்வூர் **பனைக்குடி** என அழைக்கப்பட்டுள்ளது. இந்தப் பனைக்குடியே நாளடைவில் மருவி '**பனங்குடி**' என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

சிவன் கோயில் இல்லை.

கண்டரமாணிக்கம் மு.கரு. கருப்பன் செட்டியார் ரூபாய் ஐந்நூறு (500) செலவு செய்து பிள்ளையார் கோயில் கட்டி, 1913-ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்வித்தார்.

ரூபாய் இருபதாயிரம் (20,000) செலவில் பெரியநாயகியம்மை கோயில் திருப்பணியும், பெரி.மு.அரு. கண்ணப்ப செட்டியாரால் ரூபாய் மூவாயிரம் (3,000) செலவில் மண்டபமும் கட்டப் பெற்றுள்ளன. இவ்வூரில் இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, வைரவன்பட்டி, சூரக்குடி ஆகிய 4 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

56. பனையப்பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 43 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் மேலப்பனையூர் எனும் கிராமத்தின் துணைக் கிராமமாகும். மேலப்பனையூரில் சிலப்பதிகாரம் குறிக்கும் '**புறம் பனையான் வாழ் கோட்டம்**' என்ற ஐயனார் உள்ளது. இதன் அடிப்படையிலேயே **மேலப்பனையூர்** என்றும், இதன் அருகில் அமைந்த குடியிருப்பு '**பனையப்பட்டி**' என்றும் அழைக்கப்பட்டதாகக் கூறுகின்றனர்.[3] காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து நகரத்தார்கள் வந்து குடியேறிய ஊர்களில் இதுவும் ஒன்று.

1. இரா.நாகசாமி – நடன. காசிநாதன், கல்வெட்டியல், இரண்டாம் பதிப்பு, தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை 1980, பக், 46 – 47.
2. மா.சந்திரமூர்த்தி, ஐயர்மலை தமிழிக் கல்வெட்டு, கொங்கு திங்கழிதழ், 1973.
3. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் – பேரும், முதற்பதிப்பு, 1986, பக், 54 – 55.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில் ரூபாய் நாற்பதாயிரம் (40,000) செலவிட்டு, சிவாலயத் திருப்பணியும், கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. மீண்டும் 1977, 1991 ஆண்டுகளில் குடமுழுக்கு நடந்துள்ளது. இவ்வூரில் இரணியூர், இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, சூரக்குடி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 6 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

57. பாகநேரி

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

காடுகள் அடர்ந்த இவ்வூரில் மதம் பிடித்த யானை ஒன்றினை அடக்கப் பாகன் யானையின் மீது ஏறி அடக்கியதால் 'பாகன் ஏறி' என ஆனது. இதுவே நாளடைவில் பாகனேரி ஆனது என்றும், உமையொரு பாகனாகிய சிவனது திருப்பணிகளுக்கு மானியமாக விடப்பட்ட ஏரி என்ற பொருளில் பாகனேரி என்றும் அழைக்கப் பட்டதாகவும் சிலர் கூறுகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கிழவலவு கல்வெட்டு பாகனூர் (பாகன் + ஊர்) என்னும் ஊரைக் குறிப்பிடுகிறது. கல்வெட்டு உள்ள கீலவலவு கிராமமும் சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. எனவே பாகனேரி என்னும் பெயரின் தொன்மையை அறியலாம். மேலும் பாகன் என்பவன் பெயரால் ஏற்பட்ட ஊர் 'பாகனூர்' என்றும், அவன் பெயரால் ஏற்பட்ட ஏரி பாகனேரி என்று அழைக்கப்பட்டது எனவும் கருதலாம்.

நீலகண்டீசுவரர் – கருணாகடாட்சியம்மை

சிவகங்கை அரச குடும்பத்திற்குரிய இவ்வூர் சிவாலயம், பாண்டியர் காலத்தில் கட்டப் பெற்ற பழைமையான கோயில். இக் கோயிலில் முன் மண்டபமும், அம்மை கோயிலும் கு.ப. ராம. செட்டியாரால் ரூபாய் பதினையாயிரம் (15,000) செலவில் கட்டப் பெற்றுள்ளன.

நாட்டார், நகரத்தார் இவர்களின் பொருளுதவியால், சோழீசர் கோயில், ரூபாய் மூவாயிரம் (3,000) செலவில், 1927-ஆம் ஆண்டில் புதுப்பித்துச் செம்மை செய்யப்பெற்றது.

இவ்வூரில் விண்ண வண்ணப் பெருமாள் கோயிலும், புல்வ நாயகி அம்மன் கோயிலும் உள்ளன. இவ்வூர் நகரத்தார்கள், ரூபாய் எண்பதினாயிரம் (80,000) செலவு செய்து, பெருமாள் கோ்யில் திருப்பணி முடித்து, யுவ ஆண்டு, வைகாசி 23-ஆம் நாள் (5-6-1935) கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். புல்வ நாயகி அம்மன் கோயில் தேர் திருவிழாவினை ஒட்டி நடைபெறும் மஞ்சு விரட்டும் புகழ்



தூண்கள் நிறைந்த எழில்மிகு உட்கூடம்
கோவிலூர் மடம்



மலையாண்டிக் கோயில்
வலையப்பட்டி



மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்
வேந்தன்பட்டி



பிள்ளையார் கோயில்
கானாடுகாத்தான்



முகப்பிற்கு முன்பு உள்ள நடைபாதை



வளவு - காரைக்குடி



வளவு - உட்புறத் தோற்றம்
நகரத்தார் கலை



வளவு - பள்ளத்தூர்



இல்லம் - உட்புறத்தோற்றம்
பள்ளத்தூர்



ராஜா முத்தையா செட்டியார் வீடு
செட்டிநாடு அரண்மனை



ஹால் - உட்புறத் தோற்றம்
செட்டிநாடு அரண்மனை



மாளிகை போன்ற இல்லம்
செட்டிநாடு அரண்மனை - கானாடுகாத்தான்




பெரிய வீடு - ஆத்தங்குடி
நகரத்தார் கட்டடக்கலை



மரவேலைப்பாடுகள் நிறைந்த முற்றம்
செட்டியார் வீடு - செட்டிநாடு



செட்டியார் வீடு - பக்கத் தோற்றம்
அரிமளம்



செட்டியார் வீடு - முன்புறத்தோற்றம்
இராயவரம்

பெற்றது.[1] கோயில் மாடுகளுக்குப் பாக்கு வைத்து அழைத்து அவற்றிற்குச் சிறப்பாக மரியாதை செய்வது வழக்கம். இந்த பந்தயங்களில்பிடிகாரர்கள் கோயில் மாட்டைப் பிடிப்பது கிடையாது.[2] இவ்வூரில் இளையாத்தங்குடி, சூரக்குடி, பிள்ளையார் பட்டி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 5 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

58. பிள்ளையார்பட்டி

இவ்வூர் காரைக்குடியிலிருந்து 14 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

எக்காட்டூர், திருவீங்கைக்குடி, திருவீங்கைச்வரம், மருதங்குடி, இராசநாராயணபுரம் என்பவை இவ்வூரின் பழைய பெயர்கள். குன்றில் குடையப் பட்ட குடைவரைக் கோயிலில் அமர்ந்து அருள் செய்யும் கற்பகப் பிள்ளையார் வழிபாடு இங்குச் சிறப்புற்றதால் இது பிள்ளையார் பட்டி என வழங்கப்படுகிறது.[3]

மருதீசர் – வாடாமலர் மங்கை

நகரக் கோயில்கள் ஒன்பதுள் ஒன்று. கற்பக விநாயகர், திருவீசர், சிவகாமவல்லி, மருதீசர், வாடாமலர் மங்கை ஆகிய சன்னிதிகளின் திருப்பணிகள் ரூபாய் ஒன்பது இலட்சம் (9,00,000) செலவில் செய்யப்பட்டு ரூபாய் முப்பதாயிரம் (30,000) செலவில் விளம்பி ஆண்டு தை 10ஆம் தேதி (22-1-1899) முதல் கும்பாபிஷேகமும், ரூபாய் இரண்டரை இலட்சம் (2,50,000) செலவில் இராசகோபுரத் திருப்பணியும் ஸ்ரீமுக ஆண்டு வைகாசி 30ஆம் தேதி (12-6-1933) இரண்டாம் கும்பாபிஷேகமும், விகுருதி ஆண்டு தை 28-ஆம் தேதி (11-2-1951) மூன்றாம் கும்பாபிஷேகமும் மற்றும் 1976, 1992, 2004 ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்கு விழாக்கள் செய்யப் பெற்றுள்ளன.

59. புதுப்பட்டி (பொன்னமராவதி)

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடி யிலிருந்து 44 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

சில ஊர்களின் பெயர்களே அதன் பழைமையையும், புகழையும் குறிப்பதாக அமையப் பெற்றிருக்கின்றன. அவ்வகையில் புதுப்பட்டி புதிதாகத் தோன்றிய ஊரைக் குறிப்பதாக உள்ளது. பொன்னமராவதி என்ற ஊரினை ஒட்டிப் புதிய ஊர் அமைந்ததால் இதனைப் பொன் 'புதுப்பட்டி' என்றும் அழைப்பர்.

1. மா.சந்திரமூர்த்தி, தமிழர் வீரவிளையாட்டுக்கள், தினமலர் 5 – வது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர், மதுரை, 1982.
2. சோமலெ, தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், நேஷனல் புக் டிரஸ்ட், புதுடில்லி.
3. மா.சந்திரமூர்த்தி, பிள்ளையார்பட்டி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1995, பக் 11 – 12

பூலோகநாதர் – புவனேசுவரியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவிட்டுச் சிவாலயத் திருப்பணியும், விக்ருதி ஆண்டு தை 29-ம் நாள் (11-2-51) கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. இக்கோயிலுக்கு மீண்டும் 5-2-1968, 29-4-1982 அன்றும் குட முழுக்கு நடந்துள்ளது. இவ்வூரில் இலுப்பைக்குடி, இளையாத்தங் குடி, வைரவன்பட்டி ஆகிய 3 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

60. புதுவயல்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடி யிலிருந்து 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

வீரை எனும் மரங்கள் அடர்ந்த காடு வீரவனம். இந்த வீரவனம் வில்வ ஆரண்யம், வீரஆரண்யம், வீரை, வீரையூர், அளகைச் சாக்கோட்டை, சாக்கனூர், சாக்கை என அழைக்கப்பட்டது. இந்த **சாக்கை கோட்டையே** நாளடைவில் மருவி சாக்கோட்டை எனப்பட்டது. இச்சாக்கோட்டைக்கு முன்புறம் புதிதாகத் தோன்றிய வயல்களை உடைய பகுதியே **புதுவயல்.**

வீரசேகரர் – உமையாம்பிகை

நகரப் பொதுவில், ரூபாய் நாற்பதினாயிரம் (40,000) செலவில், கைலாச விநாயகர் கோயில் திருப்பணி பெரிதாகச் செய்யப் பெற்றுள்ளது. இக்கோயிலுக்கு அண்மையில் 31-8-1995இல் குடமுழுக்கு நடந்தேறியுள்ளது. இவ்வூரில் இரணியூர், இலுப்பைக் குடி, இளையாத்தங்குடி, சூரக்குடி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 6 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

61. கீழப் பூங்குடி

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 40 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. கண்டாசுரனோடு போரிட்டு வெற்றி கண்ட தேவியைப் பூமாரி பொழிந்து தேவர் வாழ்த்திய இடம் **'பூங்குடி'** என்றும் குளத்தில் பூக்கள் நிறைந்து குடிகொண்ட காரணம் கருதி **'பூங்குடி'** எனப் பெயர் பெற்றதாகவும் கூறுவர். இவ்வூருக்குக் **'கடம்பாரண்யம்' 'பூமன் நகர்', 'பூவை மாநகர்'** என்ற பெயர்களும் உண்டு. இவ்வூரை அடுத்த திருமலையில் பண்டைய பாறை ஓவியங்களும், எழுத்தும், குடைவரைக் கோயிலும் உள்ளன. குடைவரைக் கோயில் முற்காலப் பாண்டியர் காலத்தியது.[1]

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

கூராண்டான் செட்டியார், தீர்த்தப்ப செட்டியார் வகையினரால், ரூபாய் ஒன்றரை இலட்சம் (1,50,000) செலவில்

1. தி. இராசமாணிக்கம், தமிழகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, முதற்பதிப்பு, சென்னை, 1984, பக், 106 – 108.

சிவாலயத் திருப்பணியும், பிரமோதூத ஆண்டு சித்திரை (1870 ஏப்பிரல்)யிலும் ஆங்கீரச ஆண்டு ஆவணி (1932 ஆகஸ்டு)யிலும், 3-7-1977 ஆகிய நாள்களிலும் மூன்று கும்பாபிஷேகங்களும் செய்யப்பெற்றன. இவ்வூரில் இலுப்பைக் குடி, இளையாத்தங்குடி, மாத்தூர் ஆகிய 3 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

62. பூலாங்குறிச்சி

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 42 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

காட்டில் புல்வகையைச் சார்ந்த பூலான் செடிகளை அகற்றி இவ்வூர் உருவாக்கப் பெற்றதால் பூலான்குறிச்சி என ஆயிற்று. இப்படிச் செடிகளை அகழ்ந்து அகற்றியபோது கிடைத்த அம்மன் சிலையே இவ்வூர் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்ப தாகவும் கூறுகின்றனர். தமிழகத்தின் இருண்டகாலம் எனக் கூறப்படுகின்ற களப்பிரர்களின் கல்வெட்டுகள் இங்குக் கிடைத் துள்ளது, தமிழக வரலாற்றை அறிய உதவுகிறது. இவ்வூரைச் சார்ந்த மலைக்குன்று ஒன்றில் சமணத் தீர்த்தங்கரர் சிலை செதுக்கப்பட் டுள்ளது. இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

எரிக்கீசுவரர் – பூலோகநாயகி

ராம.ப.வ. பொதுக்குடும்பத்தார் சண்முக விநாயகர் கோயிலும், **'சண்முக நதி'** என்ற ஊருணியும் ரூபாய் முப்பதாயிரம் (30,000) செலவில் கட்டி, விரோதிகிருது ஆண்டு வைகாசி 28-ஆம் நாளிலும் (4-6-1889) விபவ ஆண்டு ஐப்பசி 10-ஆம் நாளிலும் 26-10-1928 மற்றும் 1960 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகங்கள் செய்திருக்கின்றார்கள். இவ்வூரில் இரணியூர், இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, சூரக்குடி, பிள்ளையார்பட்டி, வைரவன்பட்டி ஆகிய 6 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்துவருகின்றனர்.

63. பொன்னமராவதி

இவ்வூர் அழகிய நாச்சியம்மன் மீது பாடப்பெற்றுள்ள பாடல்களில் இருந்து **பொன்னன் - அமரன்** என்ற இரு அரசர்களால் உருவாக்கப்பட்ட ஊரே **பொன்னமராவதி** எனத் தெரிகிறது. பொன்னன் அமரன் என்ற அரசர்களில் ஒருவனாகிய அமரன் பெயரால் அமைந்த **அமர கண்டான் ஊருணியும்** இங்கு இருக்கிறது. கல்வெட்டுகளில் இவ்வூர் **'புறமலைநாட்டுப் பொன்ன மராபதி'**[1] எனக் குறிக்கப்பெறுகிறது. செப்பேடுகளில் ஒன்று இவ்வூரை **'பிறமலைசூள்ந்த பொன்னமராவதி'**[2] என அழைக்கிறது.

1. வெ.வேதாசலம் – பொ.இராசேந்திரன் – சொ. சாந்தலிங்கம், நெற்குப்பை சிவன் கோயில் கல்வெட்டுக்கள், ஆவணம் இதழ் – 14, சூலை, 2003.
2. கரு. இராசேந்திரன், பொன்னமராவதி செப்பேடு, பக், 111 – 112, ஆவணம் இதழ் – 14, சூலை, 2003.

இவ்வூர் சிவாலயம் பிற்காலச் சோழ மன்னரால் கட்டப்பட்டு நகரத்தாரால் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வூரிலுள்ள வைணவக் கோயிலுக்கு (அழகப்பெருமாள் விண்ணகர எம்பெருமான் கோயில்) கி.பி. 1527-ஆம் ஆண்டு பொன்னம்பலநாத தொண்டைமான் வீர நரசிங்கராயர் பெயரால் நிலங்கள் கொடையாக வழங்கப்பட்ட செய்தியும் தெரிகிறது. 12-ஆம் நூற்றாண்டில் இங்குப் பாண்டியர் - சிங்களவர் போர் நடைபெற்றுள்ளது. கி.பி 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மூன்றாம் இராசராசனை மாறவர்ம சுந்தரபாண்டியன் (கி.பி. 1216 - 1244) வெற்றி கண்டு **"பூங்கமல வாவிசூழ்"** பொன்னமராவதி அரண்மனைக்கு அழைத்து வந்து மீண்டும் சோழநாட்டை வழங்கிய ஊர்.[1] 17-ஆம் நூற்றாண்டில் இவ்வூர் மருங்காபுரிச் சிற்றரசர்கள் ஆட்சியில் இருந்து கிபி 1730-இல் சேதுபதிகள் வசம் மாறியிருக்கிறது.

ப.அ. அண்ணாமலைச் செட்டியார் ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவிட்டு, பெருமாள் கோயிலைப் புதுப்பித்து, நளவருடம் ஆவணி மாதத்தில் (1916 ஆகஸ்டு) கும்பாபிஷேகம் செய்வித்துள்ளார். இவ்வூரில் இளையாத்தங்குடிக் கோயிலைச் சார்ந்த புள்ளிகள் மட்டும் வாழ்ந்துவருகின்றனர்.

64. மகிபாலன்பட்டி

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 36 கிமீ. தொலைவில் அமைந்துள்ளது.

சோழ அரசர்களில் ஒருவனாகிய மகிபாலன் என்பவன் ஆண்ட காரணத்தால் **மகிபாலன்பட்டி** எனப் பெயர் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். இதன் பழைமையான பெயர் **பூங்குன்றம்.** இவ்வூரில் சிவபெருமானுக்காக எடுக்கப்பட்ட பாண்டியர் காலக் குடைவரைக் கோயில் ஒன்றுள்ளது. இங்குள்ள மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு பூங்குன்ற நாட்டின் தலைநகர் பூங்குன்றம் எனக் குறிக்கிறது.[2] இப்பூங்குன்றநாடு 24½ கிராமங்களைக் கொண்டது. எனினும் சோழர் காலத்தில் மகிபாலன் பட்டி எனப் பெயர் மாற்றம் அடைந்துள்ளது. **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** எனப் பாடிய சங்ககாலப் புலவரான கணியன் பூங்குன்றனார் பிறந்த ஊர் இவ்வூர்.

சிவன் கோயில் இல்லை.

இவ்வூரைச் சுற்றிப் பல சிவலிங்கமூர்த்திகள் இருப்பதால், இது முற்காலத்தில் பெரிய நகராக இருந்திருக்க வேண்டும். இந்நகருக்கு

1. புதுக்கோட்டை கல்வெட்டுகள் எண் 250, 256, 986, தென்னிந்திய சாசனம், தொகுதி, 4, எண் – 372.
2. கு. இராசவேல் – அகி.சேஷாத்திரி, தமிழ்நாட்டுக் குடைவரைக்கோயில்கள், சென்னை, 2000, பக்164 – 165.

மேற்புறம் "குடகுமலை" என்று வழங்கும் ஒரு சிறு குன்றில் கருவறை குடைந்தமைத்து, அதன் நடுவே ஓர் அழகான சிவலிங்கமும், வடபுறத்தில் ஒரு வலம்புரி விநாயகரும்' முந்தைய பாண்டியர் காலத்தே பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளது.

இந்நகரில் ஒரு ஐயனார் கோயிலும், ஒரு துர்க்கை கோயிலும் உண்டு. இது பூங்குன்ற நாட்டுத் தலைநகராதலின், ஐயனாருக்குப் **'பூங்குன்ற ஐயனார்'** என்றும், கொற்றவைக்குப், **'பூங்குன்ற நாயகி'** என்றும் பெயர் வழங்கப் பெறுகின்றது. இவ்வூரில் இளையாத்தங் குடி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 3 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

65. மானகிரி

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடி யிலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

தளக்காவூர், கம்பனூர் ஆகிய பகுதிகளிலிருந்து நகரத்தார்கள் குடியேறுவதற்காக உருவாக்கிய ஊர். மலையும் மலை சார்ந்த இடமாக இருப்பதால் 'கிரி' என்ற முடிவுச் சொல்லுடன் **மானகிரி** என அழைக்கப்பட்டிருக்கிறது.

கண்டீசுவரர் – கண்டவன நாயகி

இவ்வூர்க் கோயில், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளைக் கற்களால் திருப்பணி செய்யப்பெற்றது.

நகரத்தார்களால் "பிடாரியம்மன் கோயில்" திருப்பணி செய்யப்பெற்று, 1924-ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. இக்கோயிலுக்கு மானியமாக ஒரு கிராமம் விடப் பெற்றிருக்கிறது. இவ்வூர் நகரத்தாருக்குப் பொதுவான சுப்பிரமணிய சுவாமி கோயில் உள்ளது. **இக்கோயிலில் நவக்கிரகங்களும் தம் தேவியருடன் திருமணக் கோலத்தில் காட்சி தருவது சிறப்பாகும்.** இவ்வாறு தேவியர்களுடன் கோள்களைச் சில இடங்களில் மட்டுமே காணமுடிகிறது. இவ்வூரில் இரணியூர், இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 5 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வந்துள்ளனர். தற்போது இரணியூர் புள்ளிகள் யாரும் இல்லை.

66. மிதிலைப்பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக் குடியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

1. மா.சந்திரமூர்த்தி, முற்காலப் பாண்டியர் சிற்பங்கள், தமிழ் நாட்டு வரலாறு, பல்லவ பாண்டியர் காலம், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.

இராமாயணக் காவியத்தின் மீதுள்ள பற்றினால் காவியத்தின் தொடர்புள்ள பெயர்களால் பல ஊர்கள் அழைக்கப்பட்டு வந்துள்ளன. அவ்வாறே இராமன் மணந்த மிதிலைச் செல்வியின் பெயரைத் தாங்கியிருக்கும் இவ்வூரும் **மிதிலைப்பட்டி** என அழைக்கப்பட்டிருக்கலாம்.[1] இது மட்டுமின்றிச் செட்டிநாட்டின் கண்டரமாணிக்கத்திற்கு அருகிலுள்ள **கொங்கரத்தி**, இலக்குவணன் சூர்ப்பணகையின் தனங்களை அறுத்த இடமாகவும், தேவ கோட்டைக்கு அருகிலுள்ள **கண்டதேவி**, கண்டேன் சீதையை என அனுமன் இராபிரானிடம் கூறிய இடமாகவும், **இறகுசேரி** ஜடாயுவின் இறகுகளை இராவணன் வெட்டிய இடமாகவும் கூறப்படுகிறது. இதுபோலவே அனுமனின் பெயரால் **அனுமந்தப் பட்டி, அஞ்சனமங்கலம்** போன்ற ஊர்களும் இருக்கின்றன.[2]

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் மணிமேகலை பதிப்பிற்கு மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பல கவிராயர் அவர்களிடம் கிடைத்த ஓலைச்சுவடிகளின் மூலப்பிரதியே பெரிதும் உதவியுள்ளது. இதுபற்றி டாக்டர் உ.வே.சா. அவர்கள் குறிப்பிடும் போது **'தமிழ்நாட்டில் எத்தனையோ சிவஸ்தலங்களும், விஷ்ணு ஸ்தலங்களும், சுப்பிரமணிய ஸ்தலங்களும் உள்ளன. அவற்றைப் போலத் தமிழ்தெய்வம், கோயில் கொண்டுள்ள ஸ்தலங்களுள் ஒன்றாகவே மிதிலைப்பட்டியைக் கருதியிருப்பதாகக்'** கூறுகிறார்.

ஆவுடைநாதர் – சிவயோகவல்லி

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் மூன்று இலட்சம் (3,00,000) செலவில், சிவாலயத் திருப்பணியும், பிரமாதி ஆண்டு, தை 16-ஆம் நாள் (29-1-40) கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. பின்னர் 17-3-1957, 2-2-1984 ஆகிய நாள்களில் குடமுழுக்கு விழா நடந்துள்ளது.

பழ.சுப. சுப்பிரமணியன் செட்டியாரால், ரூபாய் நாற்பதாயிரம் (40,000) செலவில், வரதராசப் பெருமாள் கோயில் திருப்பணி செய்யப் பெற்று 1930-ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. இவ்வூரில் இரணியூர், இளையாத்தங்குடி, சூரக்குடி, பிள்ளையார்பட்டி, மாத்தூர் ஆகிய 5 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

67. ஆ. முத்துப்பட்டணம்

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடி யிலிருந்து 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

1. பழ. அண்ணாமலை, செட்டிநாடு ஊரும் பேரும், முதற்பதிப்பு, 1986, பக், 56 – 57
2. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், பாரிநிலையம், முதற்பதிப்பு, 1994,பக் 58 – 59.

ஆத்தங்குடிக்குப் பக்கத்தில் புதிதாக ஏற்பட்ட ஊர். ஒரே ஒரு சிறு கால்வாய்தான் ஆத்தங்குடியையும், முத்துப்பட்டணத்தையும் பிரிக்கிறது.

சிவன் கோயில் இல்லை.

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் இருபத்தை யாயிரம் (25,000) செலவிட்டு "உலகநாயகியம்மை" கோயில் திருப்பணியும், விக்ருதி ஆண்டு சித்திரை 20-ஆம் நாள் (1-5-1890) கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன. இவ்வூரில் இளையாத்தங்குடி, பிள்ளையார்பட்டி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 4 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்துவருகின்றனர்.

68. மேலைச்சிவபுரி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடி யிலிருந்து 44 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

நகரத்தார்கள் சைவமதத்தைச் சார்ந்தவர்கள். ஆதலால் இதுவும் **சிவப்பட்டி** என்றும், மேற்குத்திசையில் இருப்பதால் **மேலைச் சிவப்பட்டி** என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டிருக்கிறது. காலப்போக்கில் மேலைச்சிவப்பட்டி, **மேலைச்சிவபுரி** ஆகியிருக்க வேண்டும் என்பர். வரலாற்று ஆய்வாளர்கள் பாண்டியன் சீவல்லபன் பெயரில் ஏற்பட்ட **சீவல்லபபுரி** நாளடைவில் **சிவல்புரி** என்றாகிப் பின் **சிவபுரி** ஆயிற்று என்பர்.

சொக்கலிங்கமூர்த்தி – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்கள் பொதுவில், ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில், சிவாலயத் திருப்பணியும், துந்துபி ஆண்டு வைகாசி (14-6-1922) கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. பின்னர் 27-1-1947, 9-7-1962, 19-8-1994 ஆகிய ஆண்டுகளில் திருப்பணி நடத்தப் பெற்றுக் குடமுழுக்கு விழா நடைபெற்றது. இவ்வூரில் இளையாத்தங்குடி, நேமம், பிள்ளையார்பட்டி, வைரவன்பட்டி ஆகிய 4 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்துவருகின்றனர்.

69. இராங்கியம்

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியி லிருந்து 36 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரின் பழைய பெயர் **இராஜசிங்க மங்கலம்** என்பதாகும்.[1] இவ்வூர் இராஜசிம்மன் என்ற மன்னன் பெயரால் வழங்கப் பட்டிருக்க வேண்டும் அல்லது இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராஜசிங்க மங்கலத்து மறவர்கள் இவ்வூரில் குடியேறிப் பழைய பெயரையே சூட்டியிருக்கலாம். மிகப் பழைமையான இச்சிவன்

1. புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள், கல்வெட்டு எண் 801,

கோயிலில் கிபி. 13 - 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டில் **'பொன்னமராபதி நாட்டு இராசசிங்க மங்கலத்து உடையார் திருப்பூமீஸ்வரமுடைய நாயனார் திருக்கோயில்'** என ஊரும், இறைவனும் குறிக்கப்படுகிறார்.[1]

பூமிநாதர் – சிவகாமியம்மை

வ.நா. குடும்பத்தாரால், ரூபாய் நாற்பதினாயிரம் வரை (40,000) செலவிடப் பெற்று, சிதம்பர விநாயகர் கோயில் திருப்பணியும், தாது வருடத்தில் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. இவ்வூரில் இரணியூர், இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, நேமம், ஆகிய 4 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்துவருகின்றனர்.

70. ராயவரம்

கீழப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 26 கிமீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் முதலில் **இராஜமாநகர்** என்றே அழைக்கப் பட்டுள்ளது. ஒரு காலத்தில் புலமை மிக்க கவிராயர்கள் பலர் இங்கு வாழ்ந்திருக்க வேண்டும். எனவே **'இராயர்புரம்'** மருவி இராயவரமாயிருக்க வேண்டும்.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

வெ.மு. வேலன் செட்டியாரால், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் (1,00,000) சிவாலயத் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது. சுக்கில ஆண்டு தை 26 (6-2-1870) மற்றும் 5-6-1914, விகுருதி ஆண்டு தை 29 (11-2-1951), 9-2-1981, 28-4-1994 ஆகிய ஆண்டுகளிலும் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. இவ்வூரில் இரணியூர், இளையாத்தங்குடி, பிள்ளையார்பட்டி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய ஐந்து கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

71. கொ. இலெட்சுமிபுரம் (கொத்தமங்கலம்)

பதினாறூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 16 கிமீ. தொலைவில் அமைந்துள்ளது.

இங்குள்ள நகரத்தார்கள் பெரும் செல்வச் செழிப்புடன் விளங்கியதால் செல்வத்திற்கு அதிபதியான திருமகளின் பெயரையே இதற்கும் சூட்டினர். கொத்தமங்கலத்திற்கு அண்மையில் இருப்பதால் கொ. இலட்சுமிபுரம் என அழைக்கப்பட்டது.

சொக்கலிங்க மூர்த்தி – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் நாற்பதினாயிரம் (40,000) செலவிட்டு, சிவாலயத் திருப்பணியும், பிலவங்க ஆண்டு, தை மாதத்தில் (1908 ஜனவரி) மற்றும் 1936, 1957 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

1. புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள், கல்வெட்டு எண் 814.

ந.சொ.அரு. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் பத்தாயிரம் (10,000) செலவில் பெரிய கோயில் சிவாலயத்துக்கு 5-7-1924இல் வெள்ளிக் கைலாச வாகனம் அமைக்கப்பெற்றுள்ளது. இவ்வூரில் பிள்ளையார்பட்டி, மாத்தூர், இரணியூர் ஆகிய கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

72. நெ. இலெட்சுமிபுரம் (நெய்க்குணம்)

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரும் இலட்சுமியின் திருவருளை நினைத்து அப்பெயராலேயே அழைக்கப்படுகிறது. நெய்க்குணம் என்ற ஊருக்கு அருகில் இருப்பதால் நெ. இலெட்சுமிபுரம் என அழைக்கப்படுகிறது.

சுந்தரேசுவரர் – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் இருபத்தையாயிரம் (25,000) செலவில் சிவாலயத் திருப்பணியும், துன்மதி ஆண்டு, ஐப்பசி 28-ஆம் நாள் (13-11-1921), 29-1-1993 ஆண்டுகளில் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. இவ்வூரில் இலுப்பைக்குடி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 3 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

73. வலையபட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 48 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரில் வலையர் இனத்தவர் அதிகமாக வாழ்ந்த காரணத்தால் இப்பெயர் பெற்றதாகக் கூறுவர். தற்போது **'வலம்புரி' 'வலையமாநகர்'** என்றும் கூறுகிறார்கள்.[1]

மலையாண்டி சுவாமி கோயில் இவ்வூர் நகரத்தார்களின் பொதுக் கோயிலாகும். பொதுவாக முருகப்பெருமானையே மலையாண்டி என அழைப்பது உண்டு. ஆனால், இக்கோயிலில் விநாயகப் பெருமானே மலையாண்டியாக விளங்குகிறார்.

வலம்புரிநாதர் – வடுவகிர் விழியாள்

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் ஒரு இலட்சம் செலவிட்டு, சிவாலயத் திருப்பணியும் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன. மற்றும் 1892, 1916, 1941, 1978, 1993 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. இவ்வூரில் இரணியூர், இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, நேமம், பிள்ளையார்பட்டி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 7 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

---

1. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், பாரி நிலையம், முதற்பதிப்பு, 1994, பக், 60 – 61

74. விராமதி

மேலவட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 24 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

குறுநில மன்னர்களாகிய ஜமீன்தார்களுள் ஒருவரால் இவ்வூர் உருவாகி இருக்கக் கூடும் என்றும், இவ்வூர் முதலில் **மராமலி** என்றே இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். நாளடைவில் **மராமலி, மராமதி** என மருவி இன்று **விராமதி** ஆகியிருக்கலாம்.

சிவன் கோயில் இல்லை.

இளையாத்தங்குடிக் கோயில் கிராமங்களில் இதுவும் ஒன்று. நகரப் பொதுவில் பிள்ளையார் கோயில் ஒன்று கட்டப் பெற்றுள்ளது. இவ்வூரில் இளையாத்தங்குடி, வைரவன்பட்டி ஆகிய கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்துவருகின்றனர்.

75. விரையாச்சிலை

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 40 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரில் உள்ள லிங்கம் சுயம்பு. ஆதலால் **'வரையாச்சிலை'** என்பதே மருவி விராச்சிலை என வழங்கலாயிற்று என்பர். இவ்வூரின் பொதுத் தெய்வமான அடைக்கலம் காத்த அம்மன் வராகியின் அம்சமாகவும், அதனால் **'வராகிசிலை'** விராச்சிலை என ஆயிற்று என்றும் சிலர் கூறுகின்றனர். கல்வெட்டுகளில் **'விரையாச்சிலை'** என்றே குறிக்கப்பட்டுள்ளது.[1]

வில்வவனநாதர் – ரக்ஷாவதாரியம்மை

அ.ராம. இராமநாதன் செட்டியார், இவ்வூரில் பழைமையாயிருந்த சிவாலயத்தைப் புதுப்பித்து, ரூபாய் இரண்டு இலட்சம் (2,00,000) செலவில் திருப்பணி செய்து, ஈசுவர ஆண்டு ஆவணி 4-ஆம் நாள் கும்பாபிஷேகம் செய்வித்தனர். இவ்வூரில் இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, சூரக்குடி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 5 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்துவருகின்றனர்.

76. வெற்றியூர்

தெற்கு வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

புகழ்பெற்ற மருது சகோதரர்கள் பகைவர்களை வென்று வெற்றி கண்டதால் வெற்றியூர் எனப் பெயர் வழங்கிற்று. இவர்கள் மாலை சூட்டிக் கொண்ட இடமான **'மாலை கொண்டான்'** என்ற சிற்றூரும் அருகில் உள்ளது.

1. கரு. இராஜேந்திரன், புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுக்கள், ஆவணம், இதழ் – 16, சூலை, 2006, பக், 27.

அருந்ததீசுவரர் – சவுந்தர நாயகி

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் ஐயாயிரம் (5,000) செலவில் சிவாலயத் திருப்பணியும், நந்தன ஆண்டு, ஆவணி மாதம் (1892 ஆகஸ்டு) கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன. இவ்வூரில் இளையாத்தங்குடி, மாத்தூர், வைரவன்பட்டி ஆகிய 3 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்துவருகின்றனர்.

77. வேகுப்பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 45கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரில் உள்ள வேகுக் கண்மாய் பெயராலேயே வேகுப்பட்டி என்ற பெயர் வந்திருப்பதாகக் கூறுகின்றனர். மேலும் புதுக்கோட்டை மன்னர் தம் மகளை இராங்கியர் வகையறாவில் திருமணம் செய்து கொடுக்கும்போது 'வேவு'க்காக வரிசையாகக் கொடுக்கப்பட்ட கிராமமான **'வேவுப்பட்டி'** பெயரே மருவி **வேகுப்பட்டி**யாக மாறியதாகவும் கூறப்படுகிறது.[1]

சிவலோகநாதர் – சிவகாமசுந்தரி

இவ்வூர் சி.இராம. பொதுக் குடும்பத்தாரால் இச்சிவன் கோயில் கல் திருப்பணி செய்யப்பட்டு 1924-இல் முதல் கும்பாபிஷேகமும், 1976, 1991 ஆகிய ஆண்டுகளில் திருக்குட நன்னீராட்டு விழாவும் நடந்துள்ளது. **பன்னிரு திருமுறைகளுக்கும் தனிச்சன்னிதி அமைக்கப்பட்டிருப்பது இக்கோயிலின் தனிச்சிறப்பு.** இவ்வூரில் இளையாத்தங்குடி, சூரக்குடி, பிள்ளையார்பட்டி, மாத்தூர் ஆகிய 4 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்துவருகின்றனர்.

78. வேந்தன்பட்டி

மேலப்பத்தூர் வட்டகையைச் சேர்ந்த இவ்வூர் காரைக்குடியிலிருந்து 46 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

பாரி ஆண்ட பறம்பு நாட்டின் 300 ஊர்களில் மிகப் பழமையானது. இவ்வூரில் வாழ்ந்த **வேந்தனம்பலம்** என்பவரின் மூலமாகவே நகரத்தார்கள் இங்குக் குடியேறினர். அந்நன்றிக்கு அடையாளமாக அவர் பெயராலேயே **வேந்தன்பட்டி** என அழைக்கலாயினர்.

வேந்தன்பட்டிக்குத் தனிச்சிறப்புச் சேர்ப்பது நகரச்சிவன் கோயிலிலுள்ள **நெய் நந்தியாகும்**. இங்கு நந்தியெம்பெருமானுக்கு அபிஷேகிக்கப்படும் நெய்யை எத்தனை நாள்கள் ஆனாலும் ஈ,

1. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், பாரி நிலையம், முதற்பதிப்பு, 1994, பக், 62.

எறும்பு உண்பதில்லை. பல்வேறு பிரார்த்தனைகளை நிறைவேற்றும் நந்தியை வழிபடப் பல ஊர்களிலிருந்து மக்கள் வருகின்றனர். இந்நந்தியும், இலிங்கமும் கொடும்பாளூரில் இருந்து கொண்டு வரப்பட்டதாகக் கூறுகின்றனர்.[1]

சொக்கலிங்கமூர்த்தி – மீனாட்சியம்மை

இவ்வூர் நகரத்தார்களால் பொதுவில், ரூபாய் முப்பதினாயிரம் *(30,000)* செலவில் சிவாலயத் திருப்பணியும், *12-11-1911, 14-6-1922, 25-1-1931, 14-11-1948, 12-9-1973, 18-5-1983, 26-1-1996* ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. இவ்வூரில் இரணியூர், இலுப்பைக்குடி, இளையாத்தங்குடி, நேமம், மாத்தூர், வைரவன் பட்டி ஆகிய 6 கோயிலைச் சார்ந்த புள்ளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

⌘ ⌘ ⌘

---

1. சோமலெ, இராமநாதபுரம் மாவட்டம், பாரி நிலையம், பிராட்வே, சென்னை, 1972.

16. செட்டிநாட்டு ஊருணிகள்

நீரின்றி அமையாது உலகு, எனவேதான் வள்ளுவப் பெருந்தகை மழைநீரை அமிழ்தம் எனப் போற்றுகிறார். "வான்மழை போற்றுதும்" என்று சிலப்பதிகாரமும் குறிக்கிறது. பயிர்கள் செழிக்கவும், மக்கள் வாழவும் இன்றியமையாதது நீர். பண்டைக் காலங்களில் மழையை வரவழைக்க மழைக்கு அதிபதியான இந்திரனை மகிழ்விக்க வேண்டி காவிரிப்பூம் பட்டினத்திலும், மதுரையிலும் இந்திரவிழாக் கொண்டாடப்பட்டது. மழையை வேண்டி கிராமங்களில் மக்கள்,

"வாகை மரத்துப் புஞ்சை
வட்டர சோளப் புஞ்சை
தங்கம் விளையும் புஞ்சை
தரிசா கிடக்குதடி
காட்டை உழுது போட்டேன்
கடலை போட பதம் பார்த்தேன்
வந்த மழை போகுதில்லே
வருணனே உனது செயல்?" என வருந்திப் பாடுகின்றனர்.

மேலும் மழை வேண்டி ஐயனாருக்குப் புரவி எடுத்தல் என்னும் வழக்கம் பாண்டிய நாட்டில், குறிப்பாகச் செட்டி நாட்டுக் கிராமங்களில் பெருவழக்காகக் காணப்படுகிறது. இங்குக் கிராமங்களின் கண்மாய்க்கரையில் உள்ள ஐயனார் முன்புதான் மழை வழிபாடு நடத்தப்படுகிறது.

மழைக்காக ஐயனார் வாகனமாகிய குதிரையை உருவாரமாகச் செய்து வைத்துத் தாரை தப்பட்டை முழங்க எடுப்பர். இச்சடங்கைக் 'குதிரை எடுப்பு', 'புரவி எடுத்தல்', 'பாரி எடுத்தல்' என்று அழைப்பர்.

இந்நிகழ்ச்சியில் பெண்கள் பங்கேற்று, குலவையிட்டு,

'ஆனையொரு ஆனை ஐயனாரு தந்தஆனை
குட்டி மதவானை கொம்புரெண்டும் – பொன்னானை
ஆனைகளைப் பார்த்தா மேகங்களைப் போல
ஆனைக்குட்டிகளைப் பார்த்தா தாழமடல் போல
ஆனை வந்திறங்கவே ஆயிரக்கால் நாட்டவே
தேரு வந்திறங்கவே நம்ப மாத்தூரு செல்வம் பொழியவே' என்று

மழைவேண்டிப் பாடுவர்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு கிராமங்களில் மழை பெய்கிறது.[1] நஞ்சையும் புஞ்சையும் செழிக்கிறது. எஞ்சி நிற்கும் மழைநீர் ஊருணிகளிலும், ஏரிகளிலும், கண்மாய்களிலும் நிறைந்து ஆறுகள் மூலம் கடலில் சேர்கின்றன.

இதனால் தமிழரின் தொன்மையான துறைமுகங்கள் ஆறுகளின் முகத்துவாரங்களில் அமைக்கப்பட்டன. காவிரிக்கரையில் காவிரிப்பூம்பட்டினம், பாலாற்றில் வசுவசமுத்திரம், கடிலத்தில் கடலூர், பெண்ணையாற்றின் கரையில் புதுவை, தேவநதிக் கரையில் நாகப்பட்டினம், தாமிரபரணி கரையில் கொற்கை ஆகியவை ஆறுகள் கடலுடன் கலக்கும் இடத்திலேயே துறைமுகங்கள் அமைந்ததற்குச் சான்றாக உள்ளன. மேலும், பாண்டிய நாட்டில் சில துறைமுகங்கள் குறிப்பிடத்தக்கவை. அவை தொண்டி, பெரியபட்டினம், தேவிபட்டினம், சாலியூர் என்னும் அழகன் குளம், இராமேசுவரம், குலசேகரபட்டினம், தூத்துக்குடி மற்றும் காயல்பட்டினம் என்பனவாகும்.

இவற்றில் ஏரிகள், குளங்கள், குட்டைகள் போன்றவை மக்களால் வெட்டப்பட்டு மழைநீர் சேமிக்க உதவுகின்றன. ஏரிகள் அல்லது கண்மாய்கள் நீர்பாசனத்திற்கு மட்டும் பயன்படுகின்றன. குளங்கள் குடிக்கும் நீராகப் பயன்படுகிறது. செட்டிநாட்டில் ஊருணிகள் என்ற பெயரில் பெரும் நீர்நிலைகள், குளங்கள் உள்ளன. இவை ஊராரால் உண்ணப்படும் குடிநீரை வழங்குவதால் ஊருணி என்று பெயர் பெற்றன. செட்டிநாட்டின் 78 ஊர்களிலும் நகரத்தார்களால் ஊருணிகள் வெட்டப்பட்டுள்ளன. இவை இவர்களின் மிகப்பெரிய அறச்செயலாகும்.

"ஊருணிகள் கூபமிவை உண்டுபண்ணி மிக்கதர்மம்
தாரணியில் செய்திட்ட சத்புருஷர்"

(கூபம் - கிணறு) என நகரத்தார்களின் அறப்பணியைத் தமது திருமுக விலாசத்தில் பாடுவார் முத்தப்பர் பாராட்டுகிறார்.

இவ்வாறு நகரத்தார்கள் வெட்டிய ஊருணிகளின் கட்டடக்கலை மிகவும் சிறப்பு வாய்ந்தது. இவர்கள் தங்களின் குலக்கோயில்களின் கட்டடக் கலையின் நேர்த்தியில் கவனம் செலுத்தியது போன்றே ஊருணிகள் உருவாக்கத்திலும், கவனம் செலுத்தியிருப்பது பாராட்டத்தக்கது. பூம்புகாரில் ஏற்பட்ட கடல்கோள் காரணமாக நீர் வளமில்லாத மேட்டுப் பகுதிகளுக்குக் குடியேறினாலும் நகரத்தார் தமது நுட்பமான திறமையால்

1. மா.சந்திரமூர்த்தி, மாத்தூர் கோயில், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1998 , பக் – 160 – 161..

மழைநீரைப் பருவக்காலங்களில் ஊருணியில் சேரும் வகையில் திட்டமிட்டுக் கட்டி நீர்வளம் பெற்றுள்ளனர். மழை நீரை சேகரிக்க ஊருணியை ஒட்டி பல ஏக்கர் உவரி நிலங்களைத் தரிசாக விட்டு வைத்தனர். சான்றாக நாட்டரசன்கோட்டை, பிள்ளையார்பட்டி[1] போன்ற நகரச் சிவன் கோயில் ஊருணிகளைக் கூறலாம். இவற்றை நகரத்தாரும், கோயில் நிருவாகமும் பராமரித்து வருகிறது. இவ்வூருணி நீரை ஊரார் குடிநீராகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இளையாத்தங்குடி ஊருணிகள்

நகரத்தார்களின் முதல் குலக் கோயிலான இளையாத்தங் குடியில் வாழும் ஏழு பிரிவினரும் தமக்கென ஒரு விநாயகர் கோயிலையும் ஊருணியையும் ஏற்படுத்தி உள்ளனர். அதன்படி இவ்வூரில் மட்டும் ஏழு ஊருணிகள் **பிரளய ஊருணி, மணிக்குளம், செங்குளம், கல்யாணதீர்த்தம் எனும் மண்குளம், பட்டணசாமி ஊருணி, பிடாரிகுளம், கருவேலம்பள்ளம்** என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

இதில் இளையாத்தங்குடி கைலாசநாதர் கோயில் அருகிலுள்ள குடிநீர்க் குளமான **பிரளய ஊருணி** ஆறு படித்துறைகளுடன், படித்துறையைச் சுற்றி 4 மீ உயரத்தில் சுற்றுச் சுவருடன் கட்டப்பட் டுள்ளது. இதன் ஆறு படித்துறைகளின் இருபுறமும் பாகனுடன் கூடிய இரு கல் யானைகள் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஊருணியின் உட்புறம் பெரிதும் சிறிதுமாக ஐந்து அலங்கங்கள் நீள் சதுர வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் அலங்கத்தையும் அடைய படிகள் கட்டப்பட்டுள்ளன. மழைக்காலங்களில் இந்த ஊருணி முழுவதும் நிறைந்து பெரிய குளமாகக் காட்சியளிக்கிறது. நீர்வரத்து குறையும் போது ஊருணியின் ஒவ்வொரு அலங்கமாக நீர் குறைந்து வருவது அலங்கங்களின் அழகையும், கட்டமைப்பையும் வெளிப்படுத்து கின்றன. எனினும் இதன் ஐந்தாவது அலங்கத்தில் உள்ள நீர் ஊற்றுக் காரணமாகக் கோடையிலும் குறைந்தது ஒரு அலங்கமாவது வற்றாமல் இருந்துவருகிறது.

ஊருணியின் கிழக்குத்திசையில் யாளியின் வாய்ப்பகுதி போன்று அமைக்கப்பட்டிருக்கும் உள்வாய்ப் பகுதியே ஊருணியைச் சுற்றியுள்ள பூமியின் மீது விழும் மழைநீரை ஊருணியில் சேர்க்கிறது. இதன் அமைப்பும், பகுப்பும் நகரத்தாரின் திட்டமிட்ட கட்டடக் கலைக்குச் சான்றாகும். இவ்விதம் ஒவ்வோர் ஊருணியிலும் மழைநீரை ஊருணிக்குக் கொண்டு வரும் உள்வாய் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே அதிகமான நீரை வெளியேற்றவும், சாளரம் அமைக்கப்பட்டுள்ளது.

---

1. Sacred Tanks of South India, Published by C.P.R. Environmental Education Center, Chennai, 2002, pp 231 - 234.

ஊருணியின் மதிற்சுவரைச் சுற்றிலும் ஆலவட்டப் பாதை எனும் ஆலோடி அமைந்துள்ளது. சுற்று மதிற்சுவரில் கார்த்திகையின் போது தீபங்கள் ஏற்றிவைக்க அழகிய விளக்கு மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அருகில் நடராசர், தண்டாயுதபாணி போன்ற தெய்வங்களும் சிறிய மாடங்களில் பொருத்தப்பட்டுள்ளன. முற்றிலும் வெள்ளைக் கல்லால் கட்டப்பட்டுள்ள இவ்வூருணி ஒக்கூர் பிரிவினரால் வெட்டப்பட்டு 12-6-1927 அன்று முறைப்படி தடாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.[1]

பட்டணசாமி ஊருணி

இவ்வூரிலேயே மிகப் பழைமையான ஊருணியாகப் பட்டணசாமி ஊருணியைக் குறிப்பிடலாம். இவ்வூருணி கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பழைய பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டில் **மகா மண்டலேசுவரன் ஸ்ரீமது வீரநரசிங்க ராம நாயக்கர் குமாரர் கிட்டிணராயர் காலத்திய, சகம் 1444** என்று (கி.பி.1522 ஆண்டு) **'பட்டணசுவாமி ஊறணி'** குறிப்பிடப்படுகிறது.[2] மிகப் பழைமையான ஊருணி ஆதலால், யானைகள், விளக்கு மாடங்கள், அலங்கங்கள், ஆலவட்டப் பாதை, தெய்வ உருவங்கள் ஏதுமின்றி, மிக எளிமையாக உள்வாய் அமைக்கப்பட்டு இயற்கையான மணற்பரப்பில் காணப்படுகிறது. இதன் மேற்பரப்பு சுற்று வெளிமதில் சுவர்கள் மட்டும் வெள்ளைக் கல்லால் கட்டப்பட்டுள்ளது. மேலும் மண்குளம், செங்குளம், மணிக்குளம் ஆகியவை மட்டுமே காணும் நிலையில் உள்ளன.

மாத்தூர் ஊருணி

நகரத்தாரின் குலக் கோயில்களுள் ஒன்றான மாத்தூரில் ஐந்நூற்றீசுவரர் பெரிய நாயகி அம்மன் கோயில் முன்புறம் அமைந்துள்ள **கமலாலயம் திருக்குளம்** நகரத்தாரால் வெட்டப்பட்டது. முற்றிலும் செம்புராங்கல்லால் செம்பை உருக்கி வார்த்தது போல் கட்டப்பட்டிருக்கும் இத்திருக்குளம் இயற்கையான சூழலில் அமைந்துள்ளது. பண்டைய விழா நாள்களின்போது இதில் தெப்போற்சவம் நடந்துள்ளது. தற்போது பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

சூரக்குடி ஊருணி

சூரக்குடியில் தேசிகநாதர் கோயில் இராஜகோபுரத்திற்குக் கீழ்த்திசையில் பதினாறுகால் மண்டபத்தை அடுத்துக் கோயில்

1. மா.சந்திரமூர்த்தி, இளையாத்தங்குடிக் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004, பக் – 216 – 18.

2. கல்வெட்டு ஆண்டறிக்கை எண் 29 / 1926.

ஊருணி காட்சியளிக்கிறது. இத்திருக்குளமும் வலிமையான செம்புராங் கல்லைக் கொண்டு நான்கு படித்துறைகளுடன் கட்டப்பட்டுள்ளது. திருப்பணிக் காலத்தில் இக்குளமும் முறைப்படி தடாகபிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இங்கும் ஆலவட்டப் பாதை, அலங்கங்கள், விளக்கு மாடங்கள் அமைந்துள்ளன. இந்த ஊருணிக்குத் தேவையான நீர் பூவாண்டிப்பட்டிக் கண்மாய் மடையிலிருந்து ஊருணியின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள உள்வாய் மூலம் வந்து சேர்கிறது. அவ்வாறே அதிக நீரை வெளியேற்றும் பாதை வடகிழக்குப் பகுதியில் அமைக்கப் பட்டுள்ளது திராவிடக் கட்டடக் கலையை வெளிக்காட்டுகிறது. [1]

நேமம் ஊருணி

நேமம் ஜெயம்கொண்ட சோழீச்சுவரர் கோயிலின் தென்திசையில் உள்ள **சோழகுல ஊருணி** திராவிடக் கட்டடக் கலைப்பாணியை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. சோழ மன்னர்களால் கட்டப்பட்ட இவ்வூருணி நகரத்தார் காலத்தில் முழுமையாக விரிவுபடுத்தப்பட்டுப் படித்துறைகளும், மதிற்சுவர் களும் கட்டப்பட்டுள்ளன. நேமம் ஊர் கண்மாயிலிருந்து தண்ணீரை ஊருணிக்குக் கொண்டு வரும் உள்வாய் தென் மேற்குப் பகுதியில் சாளரத்தோடு அமைக்கப்பட்டுள்ளது. **'செம்பு இயன்றன்ன செவ்வுறு நெடுஞ்சுவர்'** என நெடுநல்வாடை கூறும் வரிகளுக்கேற்ப இந்த ஊருணியும் செம்பை உருக்கி வார்த்தது போல செம்புராங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. ஊருணியைச் சுற்றிலும் மேற்புறத்திலும், உட்புறத்திலும் ஆலவட்டப் பாதையும், மதிற்சுவரில் விளக்கு மாடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலுக்கு எதிரே விடுதிக்குக் கீழ்ப்புறம் உள்ள ஊருணி செட்டி ஊருணி என அழைக்கப்படுகிறது. செம்புராங்கல்லால் கட்டப் பட்ட இவ்வூருணியே நேமம் கிராமத்திற்குக் குடிநீராகப் பயன்படுகிறது. தற்போது ஊர் பஞ்சாயத்தாரால் இது பராமரிக்கப் படுகிறது. காரைக்குடி அரு. அ. குடும்பத்தாரால் நிறுவப்பட்டதால் இது செட்டி ஊருணி என அழைக்கப்படுகிறது. [2]

வைரவன்கோயில் ஊருணி

வயிரவன்பட்டி வளரொளீசுவரர் கோயில் இராஜகோபுரத்தின் எதிரே பரந்து விரிந்து வைரவன் கோயில் ஊருணி அமைந்துள்ளது. இது குடிநீர் ஊருணியாகும். இந்த ஊருணியின் சுற்று உள்சுவர்கள்

1. மா.சந்திரமூர்த்தி, சூரக்குடிக் கோயில், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003, பக் – 36.
2. மா.சந்திரமூர்த்தி, நேமம் கோயில், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்,. 1991, பக், 149 – 151.

செம்புராங்கல்லைக் கொண்டும், வெளி மதில்சுவர் வெள்ளைக் கல்லைக் கொண்டும் கட்டப்பட்டுள்ளது. ஊருணியின் மையப் பகுதியில் சதுரக்கேணி ஒன்றும் அதனைச் சுற்றி மூன்று அலங்கங்களும் உள்ளன. ஊருணியின் கிழ்த்திசையில் புதுப்பட்டி ஊர் கண்மாய் மடையிலிருந்து நீரை ஊருணிக்குக் கொண்டுவர நந்திமுக உள்வாய் அமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக மற்ற ஊருணிகளில் பெரும்பாலும் யாளிமுக உள்வாயே காணப்படுகிறது. இங்கு மட்டுமே நந்திமுக உள்வாய் உள்ளது.[1] அவ்வாறே அதிக நீர்வரத்துக் காலங்களில் ஊருணி நீரை வெளியேற்ற வடபுற உள்மதிலின் கிழ் சாளரம் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கும் சுற்றிலும் ஆலவட்டப் பாதை, விளக்கு மாடங்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இரணியூர் ஊருணி

நகரத்தாரின் குலக் கோயில்களுள் ஒன்றான இரணியூரில் கிழ்த்திசையில் ஆட்கொண்ட நாதர் கோயிலுக்கான **கல்லூருணியும்**, வடதிசையில் பத்ரகாளி அம்மன் கோயிலுக்கான **அம்மன் சேங்கை என்ற திருவேட்பூருடையார் ஊருணியும்**, மேல் திசையில் **பெருமாள் கோயில் ஊருணியும்** அமைந்துள்ளன. இந்த ஊருணிகளில் திருவேட்பூருடையார் ஊருணிக்கு இவ்வூர் வடக்கு புஞ்சைக் காட்டிலிருந்தும், கல்லூருணி, பெருமாள் கோயில் ஊருணிக்கு வழனிக் கண்மாயிலிருந்தும் நீர்வரத்து வருகிறது. இந்த ஊருணிகளும் நீரின் நிறம் மாறாமல், தன்மை கெடாமல், பாசி படியாமல் இருக்க செம்புராங்கல் கொண்டே கட்டப்பட்டுள்ளன. ஒன்பது நகரக்கோயில் ஊருணிகளில் இரணியூர் திருவேட்பூருடையார் ஊருணியும், இளையாத்தங்குடி பட்டணசாமி ஊருணியும் பழைமையானவை. எனவே செட்டிநாட்டுப் பகுதியில் நகரத்தாரால் ஊருணி தோற்றுவிக்கப்படும் மரபு 16 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது எனலாம். கல்வாசல் நாட்டைச் சார்ந்த இளையாத்தங்குடியான குலசேகரபுரத்துத் திருவேட்பூருடையார் என்னும் நகரப்பிரிவினரால் கி.பி. 1501ஆம் ஆண்டு இவ்வூருணி உருவாக்கப்பட்டது என்பதை இரணியூர் சாசனம் குறிக்கிறது.[2] எனவே இவ்வூருணி **"திருவேட்பூருடையார் ஊருணி"** எனப் பண்டைய நாளில் அழைக்கப்பட்டது. இவ்வூருணி பத்திரகாளி அம்மன் கோயில் அருகில் இருப்பதால் **'அம்மன் சேங்கை'** என அழைக்கப்படுகிறது.

1. மா.சந்திரமூர்த்தி, வயிரவன் கோயில், இரண்டாம் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003, பக், 156 – 157.
2. மா.சந்திரமூர்த்தி, இரணியூர்க் கோயில், 1990, பக் – 218.

இது போன்றே இலுப்பைக்குடி தான்தோன்றீசுவரர் கோயில், பிள்ளையார்பட்டி திருவீசர் மற்றும் கற்பக விநாயகர் கோயில் எதிரே பரந்து விரிந்த திருக்குளங்களைக் காண்கிறோம்.

வேலங்குடி ஊருணி

வேலங்குடியில் கண்டீசுவரர் கோயில் தென்திசையில் சிவன் கோயில் ஊருணியும், வயல்நாச்சியம்மன் கோயில் பின்புறம் ஒரு ஊருணியும் உள்ளது. இதில் சிவன் கோயில் ஊருணி 4மீ உயரமுடைய சுற்றுச் சுவர்களுடன் செம்புராங் கல்லால் கட்டப்பட்டுள்ளது. இது ஐந்து படித்துறைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. வேலங்குடி ஊர் கண்மாயிலிருந்தும், சுற்றுப்புறங்களிலிருந்தும் ஊருணிக்கு மழைநீரைக் கொண்டுவர மேற்குப்புறம் சாளரத்தோடு உள்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஊருணிகள் அனைத்துமே நீர்வரத்து நிறைந்த காலங்களில் பெரிய தடாகத்தை ஒத்தும், நீர் இருப்பு இல்லாத கோடைக்காலத்தில் அலங்கங்களின் அமைப்பு கிரேக்க நாட்டுப் பெரிய விளையாட்டு மைதானத்தை ஒத்தும் காட்சியளிப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

வயல் நாச்சியம்மன் ஊருணி

இது கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியைச் சேர்ந்ததாகும். இங்கு வடக்குப் படித்துறையின் மேல் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. இக்கல்வெட்டு 'ஆத்தங்குடி பெரிய அழகப்ப செட்டியார் மகன் சின்னான் செட்டியார் பாலைய நாட்டைச் சேர்ந்த வேலங்குடி பெரிய நாயகியம்மன் ஊரணி வெட்டி கல்கட்டு கட்டியதைக் குறிக்கிறது.' [1] இந்நிகழ்வு சாலியவாகன சகாப்தம் 1799, தமிழ் தாது வருடம், தை மாதம் 10-ஆம் தேதியில் (21-1-1877) நடந்துள்ளது. இதைக் கட்டியவர் மாத்தூர் அரும்பாக்கூர் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

"சாலிய வாகன சகாப்தம் 1799
யிங்கிலீசு 1877 ஞ செனவரி
மீ" 21 உ , சரியான தமிள் தாது
ஞ தையி மீ" 10 ந்தேதி பாலையநாட்டைச் சேர்ந்த
வேலங்குடி பெரியநாயகி அம்மன்
கோயில் ஊரணி வெட்டிக் கல்கட்டினது
கேறள சிங்கவளனாடாகிய பிறம்பூற்
நாட்டில் மாத்தூரான வீறபாண்டிய
புறத்தில் அரும்பாக்கூருடையான் ஆத்தங்குடி
பெரிய அளகப்ப செட்டியார் மகன் சின்னான்ஞ்
செட்டியார் செயித தற்மம்."

1. மா.சந்திரமூர்த்தி, வேலங்குடிக் கோயில், முதற்பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003, பக் – 177.

இந்த ஊருணிக்கரையில் ஒரு விடுதியும், சவுக்கை எனும் ஓய்வுக்கூடமும், விநாயகர் கோயில் ஒன்றும், வயல் நாச்சியம்மன் கோயிலும் அமைந்துள்ளன.

இந்த ஊருணியுடன் தொடர்புடைய இரு ஓலை ஆவணங்களும் உண்டு. இதில் இவ்வூருணிக்கு மஞ்சள் மடை வழியாகத் தண்ணீர் விடப்பட்டதும், ஊருணியைச் சுற்றித் தென்னை மரங்கள் வளர்த்து அதன் வருவாயைக் கோயிலுக்குச் செலவிடவும், ஊருணி மீன் வருவாயை ஊருணி பராமரிப்புக்காகச் செலவிடுவதையும், தண்ணீர்ப் பற்றாக்காலத்தில் ஊருணி நீரை விவசாயத்திற்கு நாட்டார் பயன்படுத்தாமல் இருக்கவும் நாட்டாரும் நகரத்தாரும் செய்து கொண்ட உடன்படிக்கையை ஓர் ஓலை ஆவணம் குறிக்கிறது.[1] மற்றொரு ஓலை ஆவணம் இவ்வூருணிக்கு இடம் போதாமல் (ரூபாய்) 'நஜற்' ரூ. 700-க்கு மீண்டும் நிலம் வாங்கி சேர்க்கப்பட்டதைக் குறிக்கிறது. இந்த ஆவணம் 12-1-1916ஆம் தேதியில் எழுதப்பட்டுள்ளது. இவ்வூருணிக்கு வரி விதித்த செய்தியை மற்றொரு காகித ஆவணம் கூறுகிறது. ஊருணி வரியாக நிலவரி, சாலைவரி, தொடர்வண்டிவரி ஆகியவை உட்படப் பசலி ஆண்டுக்கு 8 ரூபாய், 1அணா, 5பைசா வீதம் நிர்ணயிக்கப்பட்டு இருந்ததை இந்த ஆவணம் கூறுகிறது. வேலங்குடி காகித ஆவணம் இக்குத்தகை உடன்படிக்கையைக் கவுல் எனக் குறிப்பிடுகிறது.

இவ்வூருணிகள் கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் அகழ்வாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பெரிய நீர்நிலைகளை ஒத்துக் காணப்படுகின்றன. சிந்துவெளி நாகரிகத்தின் சிறந்த அம்சமாகக் கருதப்படும் இந்நீர்நிலைகள் திராவிடர் மற்றும் திராவிடர்க்கு முந்தைய கட்டடக் கலைக்குச் சீரிய எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. செட்டிநாட்டுப் பகுதியில் காணப்படும் இந்த ஊருணிகளுள் பெரும்பாலானவற்றின் அமைப்பும், பகுப்பும், தோற்றமும் திராவிடக் கட்டடக்கலைப் பாணியை நினைவூட்டுகின்றன. நகரத்தாரின் தொன்மை கி.மு. நூற்றாண்டுகளிலேயே கூறப்படுவதால் சிந்துவெளி நாகரிகத்தைப் போன்று பெரும் நாகரிகத்தைத் தென்பகுதியில் பெற்றவர்களாக இவர்களைக் கருதமுடிகிறது. சிந்துவெளி மக்களுக்கும் நகரத்தார் மக்களுக்கும் உள்ள ஒற்றுமைக் கூறுகளை ஒப்பு நோக்கி விரிவாக ஆய்வு செய்வோமானால் நகரத்தாரின் தொன்மையான நாகரிக மேம்பாட்டை அறிய வாய்ப்பு உள்ளது.

---

1. மா.சந்திரமூர்த்தி, வேலங்குடிக் கோயில், முதற்பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003, பக் – 178.

ஊர்தோறும் ஊருணிகள்

இவ்வாறு **'கோயில் சார்ந்த ஊருணி - ஊருணி சார்ந்த கோயில்'** என்பது முன்னோர் சமுதாயச் சிந்தனையின் அடிப்படையில் எழுந்தவையாகும். ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டு மழைநீரைச் சேமித்து மக்களுக்கு அடிப்படையான தண்ணீர் முன்னோர்களால் இந்த ஊருணிகள் மூலம் தரப்பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது. தமிழகத்தில் வேறு மாவட்டங்களுக்கு இல்லாத சிறப்பு இம்மாவட்டத்திற்கு உண்டு எனில் அது நகரத்தார் ஊர்தோறும் அமைந்துள்ள ஊருணிகளே.

அமராவதி புதூர் : இவ்வூரில் **குளுந்தூருணி** என்ற குடிநீர் ஊருணி பொதுவிலுள்ளது.

அரிமழம் : இவ்வூரில் மாத்தூர் கோயிலாரின் **செட்டிஊருணி, எட்டாம் மண்டகப்படி ஊருணி** - பிள்ளையார்பட்டி வகையினரின் **சிவன் கோயில் ஊருணி** - நேமம் கோயில் நகரத்தாரால் வெட்டப்பட்ட **பிள்ளையார் கோயில் ஊருணி, சிறிய பொற்குடையான் ஊருணி** - வைரவன் கோயில் காடப்ப செட்டியார், சடையப்ப செட்டியாரால் **வெட்டப்பட்ட பெரிய பொற்குடையான் ஊருணி** மற்றும் **புது அரிமழம் ஊருணி, செல்வ விநாயகர் கோயில் ஊருணி, கீழ்ப்பனையூர் பிள்ளையார் கோயில் ஊருணி** போன்றவையும் உள்ளன. இவற்றில் பெரிய பொற் குடையான் ஊருணியில் தெப்பத்திருவிழா சித்திரையில் நடக்கிறது. இந்த ஊருணியும், புது அரிமழம் ஊருணியும் குடிநீர் ஊருணிகளாகும்.

அரியக்குடி : இவ்வூரில் **சிவன்கோயில் ஊருணி, ஆதியா ஊருணி,** வைரவன் கோயிலாரின் **பெரிய பிள்ளையார் கோயில் ஊருணி** ஆகியவை உள்ளன.

பி. அளகாபுரி : இவ்வூரில் **புது ஊருணியும்,** குடிநீர்க் குளமாகக் **கமலாலய ஊருணியும்** நகரத்தாரால் வெட்டப் பட்டுள்ளன.

ஆ. தெற்கூர் : இவ்வூரில் நா.பழ. பழனியப்ப செட்டியார் குடும்பத்தாரால் **புது ஊருணியும்,** குடிநீர் ஊருணியான **செட்டி ஊருணி** நா.பழ.சு. பழனியப்ப செட்டியார் குடும்பத்தாராலும், கரு. முத்து. அழ. கல்யாண சுந்தரம் செட்டியாரால் **ரங்கநாதர் கோயில் ஊருணியும்** அமைக்கப்பட்டுள்ளன.

ஆவினிப்பட்டி : இவ்வூரில் **செல்வ விநாயகர் கோயில் ஊருணி** பொதுவாக விளங்குகிறது. .

இராயவரம் : இவ்வூரில் **புது ஊருணி** நகரப் பொதுவிலும், மாத்தூர் அரும்பாக்கூர் பிரிவினரால் **பழைய ஊருணி,**

பொன்னாட்சி ஊருணி, சிவன் கோயில் ஊருணி ஆகியவை வெட்டப்பட்டுள்ளன. மாத்தூர் கண்ணூர் பிரிவினரால் **நாராயணன் செட்டி ஊருணியும்** - வைரவன் கோயில் தெய்வநாயகர் வகுப்பினரால் **நல்லான் செட்டி ஊருணியும், உலகம் காத்தாள் ஊருணியும்** அமைந்துள்ளது.

கொ. இலட்சுமிபுரம் : இவ்வூரில் குடிநீர் குளமான **சிவன் கோயில் ஊருணியும் மற்றும் முனீசுவரர் கோயில் ஊருணி, சிதம்பர விநாயகர் கோயில் ஊருணி** ஆகியவை உள்ளன.

உலகம்பட்டி : இவ்வூரின் குடிநீர்க் குளமான **தம்பையா கோயில் சேங்கை** என்ற ஊருணியும், **ஞானியார் மடம் ஊருணியும்** கருபழ. கருப்பன் செட்டியாராலும், கி.வே. வேலாயுதம் செட்டியாரால் **சிவன் கோயில் ஊருணியும்** வெட்டப்பட்டுள்ளது. இது 1926-இல் வெட்டப்பட்ட பழைய ஊருணியாகும்.

கடியாபட்டி : இவ்வூர் நகரத்தாரால் **சிவன் கோயில் ஊருணி, கும்பளாங்குண்டு ஊருணி, கூட்டப்புளி ஊருணி** ஆகியவை வெட்டப்பட்டுள்ளன.

கண்டனூர் : இவ்வூரில் மாத்தூர் உறையூர்ப் பிரிவு குடும்பத்தார் ஒருவரால் குடிநீர்க் குளமாகிய **பெருமாள் கோயில் ஊருணியும்** - சூரக்குடிக் கோயில் குடும்பத்தார் ஒருவரால் **நெல்லி மரத்து ஊருணியும்** - பிள்ளையார்பட்டி நகரத்தாரால் **சிவன் கோயில் ஊருணியும்** அமைக்கப்பட்டுள்ளன.

கானாடு காத்தான் : இவ்வூரில் **மாட்டா ஊருணி, வைரவன் செட்டி ஊருணி, செட்டியா ஊருணி** ஆகிய குடிநீர் ஊருணிகளும், **செட்டிநாடு கோயில் ஊருணி, பெரிய கோயில் ஊருணி, சுந்தரமூர்த்தி ஊருணி, அழகப்ப ஊருணி, கொறட்டியார் ஊருணி** ஆகியவை உள்ளன.

கீழச்சிவல்பட்டி : இவ்வூரில் **கல்லுக்கட்டி ஊருணி, சிவகங்கை ஊருணி, சந்தப்பேட்டை ஊருணி** மூன்றும் பொதுவிலுள்ளன.

குருவி கொண்டான்பட்டி : இவ்வூரின் இரண்டு ஊருணி களுள் **ஆனை விழுந்தான் ஊருணி** குடிநீர்க் குளமாகும்.

கொப்பனாபட்டி : இவ்வூரில் **புது ஊருணியும், அம்மன் சேங்கை ஊருணியும்,** குடிநீர் குளங்களாக **அழகி ஆச்சி ஊருணியும், நல்லூருணியும்** அமைந்துள்ளன.

கோனாபட்டு : இவ்வூரில் பிள்ளையார்பட்டிக் கோயில் நகரத்தாரின் **அழகப்பெருமாள் ஊருணியும்** - இளையாத்தங்குடிக் கோயில் நகரத்தாரின் **அம்மன் சேங்கை ஊருணியும்** - இலுப்பைக் குடிக் கோயில் நகரத்தாரின் **புது ஊருணியும்** உள்ளன. இதில் அழகப்பெருமாள் ஊருணி குடிநீர் குளமாகும். கோனாபட்டில்

உள்ள அழகப்பெருமாள் ஊருணி இதுவரை அறிந்த ஊருணிகளில் நகரத்தாரால் வெட்டப்பட்ட பழைய ஊருணியாகும். இங்குள்ள கல்வெட்டு புதுக்கோட்டை சமஸ்தானக் கல்வெட்டுத் தொகுதியில் வெளியாகியுள்ளது. 16 வரிகள் கொண்ட இக்கல்வெட்டு சகாப்தம் 1517இல் அதாவது கிபி. 1595இல் வெட்டப்பட்டது. 400 ஆண்டுகள் ஆகப்போகிறது. கல்வெட்டு வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

> "ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1517 செல்லாநின்ற மன்மத
> ஆடி மீ 14 அதிராப்புலி விசையாலைய தேவர்
> தெற்றாவடிக்கொல்லை வளையச் சுற்றுத் தன்மமாகக் கட்டளை
> யிட்டபடி
> இணையாத்தங்குடியான குலசேகரபுரத்துத் திருவேட்பூருடையான்
> அழகபரிபாலர் சோலையார் ஏகப்பெருமாள் சேவகப்பெருமாள்
> புத்திரன் அழகன் செட்டியார் அழகப்பெருமாள் ஊரணி நவம...த்
> தன்மம் உண்டாக்கி திருக்கோவிலுங்கட்டிவிச்சுக் கற்பக
> வினாயகனும் மண்டபத்திலே யெழுந்தருளப் பண்ணினபடியாலே
> பூசைக்கு வெங்களப்ப நாயக்கர் தன்மமாகப் பூசைக்கு
> நல்லமீட்டான், சேமனிப்பட்டு வயலில் எருவை கொள்ள
> ..... தடி உ நிலமும் இந்த தற்மம் யாதொருத்தர்
> சந்திராதித்தவரைக்கும் பரிபாலனம் பண்ணினார்கள் கயிலாசபதி
> யாக இருக்கவும். அறஞ்செய்தான் அறங்காத்தான் பாதந்
> திறம்பாமல் சென்னி மேல் வைத்து".

இதனில் குறிக்கப்படும் விசையாலயதேவன் சூரைக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட சூரைக்குடி அரசு என்ற சிற்றரசுவழியினன். வெங்களப்ப நாயக்கன், மதுரை அல்லது தஞ்சை நாயக்கர் அரசில் ஓர் அதிகாரியாக இருந்திருக்க வேண்டும். இக்கல்வெட்டில் அறத்தைக் காப்பவர்கள் கைலாசபதிகள் என்றும் அவர்களடி என்முடிமேல் என்றும் அழகன் செட்டியார் கும்பிடுவதை மனத்தில் கொள்ளலாம்.

இவ்வூருணியின் சிறப்பு அம்சமாக அக்காலத்திலேயே மூடப்பட்ட கற்குழாய் மூலம் பாதுகாப்பட்ட குடிநீரை ஒரு கிலோமீட்டர் தூரம் கொண்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சண்முகநாதபுரம் : இவ்வூரில் பொதுவில் **சிவன் கோயில் ஊருணியும்**, இளையாத்தங்குடிப் பட்டணசாமி பிரிவினரின் **சிதம்பர விநாயகர் ஊருணியும், ஆறாவயல் ஊருணியும்** அமைந்துள்ளன. ஆறாவயல் ஊருணி வங்காளத்தார் வகையாருக்குரியது.

உ. சிறுவயல் : இவ்வூரில் இலுப்பைக்குடி நகரத்தாரின் **சிவன் கோயில் ஊருணியும்**, வைரவன் கோயில் நகரத்தாரின் **அம்மன் கோயில் ஊருணியும்** அமைந்துள்ளது.

சொக்கலிங்கம் புதூர் : இவ்வூரின் குடிநீர்த் தேவைக்கு முனீசுவரன் கோயில் ஊருணியும், மற்றும் சிவகங்கைத் தீர்த்தம் என்ற ஊருணியும் உள்ளன.

தாணிச்சாவூருணி : இவ்வூரின் பெயராலேயே பிள்ளையார் பட்டிப் பங்காளிகளால் தாணிச்சாவூருணி அமைக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 1824 - ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது.

தேவகோட்டை : இவ்வூரில் இளையாத்தங்குடி ஒக்கூர் பிரிவைச் சேர்ந்தவர்களால் கட்டப்பட்ட நித்திய கல்யாணி கைலாசநாதர் கோயில் - இலுப்பைக்குடிக் கோயிலாரால் கட்டப்பட்ட இரவுச்சேரி மும்முடிநாதர் கோயில் - மாத்தூர் உறையூர் பிரிவினரின் சிலம்பணி விநாயகர் கோயில் - இளையாத்தங்குடி கழனிவாசல் பிரிவினரின் கருதாவூருணி விநாயகர் கோயில் - பெருமருதூருடையார் பிரிவு, மாத்தூர் மணலூர் பிரிவு, உறையூர் பிரிவு இவர்களால் கட்டப்பட்ட விநாயகர் கோயில்களும், நகரத்தாரால் கட்டப்பட்ட பெருமாள் கோயில்களும், காளியம்மன் கோயில்களும் உள்ளன. இக்கோயில் களைச் சார்ந்தே பத்து ஊருணிகளும் உள்ளன.

தேனிப்பட்டி : இவ்வூரின் குடிநீர்க் குளமான சேங்கைப் பள்ளம் ஊருணி நகரத்தாராலும், வைரவன் கோயிலாரால் வடக்கு ஊருணியும், பொதுவில் சிவன் கோயில் ஊருணியும் உள்ளன.

நாட்டரசன்கோட்டை : இவ்வூரில்[1] புது ஊருணி, மாணிக்கவல்லி ஊருணி, செங்கமலத்தான் ஊருணி, தீர்த்தார் குளம் ஊருணி, வீரகண்டான் ஊருணி, கம்பன் ஊருணி, நாயன்மார் குளம் ஆகியவை உள்ளன.

நேமத்தான் பட்டி : இவ்வூரிலுள்ள புது ஊருணி, விசாலாட்சி ஊருணி இரண்டுமே குடிநீர் ஊருணிகளாகும்.

பட்டமங்கலம் : இவ்வூரில் குடிநீருக்கான தெப்பக்குளமும், பொற்றாமரைக் குளமும், பிள்ளையார்பட்டி கோயிலாரின் செட்டி ஊருணியும் - சூரக்குடிக் கோயிலாரின் தலையான் ஊருணியும் உள்ளன.

பலவான்குடி : இவ்வூரில் இரணியூர் கோயிலாரின் புது ஊருணியும் - வைரவன் கோயிலாரின் செட்டியார் ஊருணி எனும் குடிநீர்க் குளமும் மற்றும் இராயர் ஊருணி, சேங்கைத் திருக்குளம் ஆகியவையும் அமைந்துள்ளன.

பாகனேரி : இவ்வூரிலுள்ள நீலகண்டீசுவரர் கோயில், விண்ண வண்ணப் பெருமாள் கோயில், புல்வ நாயகி அம்மன் கோயில்,

1. Dr. Nanditha Krishna, Sacred Tanks of South India, Published by C.P.R. Environmental Education Centre, Chennai, 2002, pp 231 - 234.

பாண்டி விநாயகர் கோயில், முத்து விநாயகர் கோயில், செல்வ விநாயகர் கோயில் என இவற்றைச் சார்ந்தே ஊருணிகள் அமைக்கப்பட்டுள்ளன.

புதுப்பட்டி : இவ்வூரில் மலையா ஊருணி, வீரன்செட்டி ஊருணி, மாம்பழத்தான் ஊருணி, சேங்கை ஊருணி, மெய்யன் செட்டி ஊருணி ஆகியவை அமைந்துள்ளன. இவற்றில் குடிநீர் குளமான மெய்யன் செட்டி ஊருணி 100 ஆண்டுகளுக்கும் முற்பட்டது.

மகிபாலன்பட்டி : இவ்வூரில் ஒக்கூர் நகரத்தார் வெட்டிய ஐயர் ஊருணி என்ற குடிநீர்க் குளமும், அம்மன் கோயில் சேங்கை ஊருணியும் உள்ளன.

மானகிரி : இவ்வூரில் சி.நா.நா. குடும்பத்தாரால் குடிநீரான சக்தி விநாயகர் ஊருணி மற்றும் கலு.வயி.வயி., நாச்சியாபுரம் சி.வி.நா.நா. குடும்பத்தாரால் தளக்காவூர் பிள்ளையார் ஊருணி இரண்டும் தனிப்பட்ட நகரத்தார் குடும்பங்களால் அமைக்கப்பட்டுள்ளன.

மிதிலைப்பட்டி : இவ்வூரில் இரணியூர் கோயில் வெ.மு. குடும்பத்தாரால் சிந்தாமணி பிள்ளையார் ஊருணியும், மாத்தூர் கோயில் க.எ.அ. குடும்பத்தாரால் சித்தி விநாயகர் ஊருணியும், நா.பழ. சித.மு. குடும்பத்தரால் ஆவுடையார் ஊருணியும், இளையாத்தங்குடி பழ.சுப.சு. குடும்பத்தாரால் வரதராசபெருமாள் ஊருணியும் வெட்டப்பட்டுள்ளன.

ஆ. முத்துப்பட்டணம் : இவ்வூரில் அம்மன் கோயில் ஊருணி குடிநீர்க் குளமாகவும், மேலும் இளையாத்தங்குடி நகரத்தாரால் உடையான் செட்டி ஊருணியும் அமைந்துள்ளது.

வலையபட்டி : இவ்வூரில் சு.சா. அண்ணாமலைச் செட்டியாரால் இலட்சுமி விநாயகர் ஊருணியும், அ.மு. நாகப்ப செட்டியாரால் சித்தி விநாயகர் ஊருணியும், வடு. குடும்பத்தாரால் வையாபுரி ஊருணியும், ந.இராம. குடும்பத்தார்ால் அடைக்கன் ஊருணியும் வெட்டப்பட்டுள்ளன. இவற்றில் வையாபுரி ஊருணி குடிநீர்க்குப் பயன்படுகிறது.

விரையாச்சிலை : இவ்வூரில் வயி.லெ.இல. செட்டியாரால் சிவன் கோயில் ஊருணியும், மற்றும் செட்டி ஊருணி, பூசைக் குண்டு ஊருணிகளும் உள்ளன.

வேகுப்பட்டி : இவ்வூர் நகரத்தார்களால் நகரத்தார் ஊருணியும், புதுப்பட்டி நகரத்தாரால் மெய்யன் செட்டி ஊருணியும் வெட்டப்பட்டுள்ளது.

வேந்தன்பட்டி : இவ்வூரில் இலுப்பைக்குடி நகரத்தாரால் மாப்படைத்தான் ஊருணியும், பொது ஊருணியாகப் பழைய ஊருணியும் மற்றும் ஆறுமுகசெட்டி ஊருணி, துர்க்கைச் செட்டி ஊருணி ஆகியவையும் அமைந்துள்ளன.[1]

இவை தவிர,

அலவாக் கோட்டையில் 3 ஊருணிகளும் - க. அளகாபுரியில் 5 ஊருணிகளும் - நா. அளகாபுரியில் 2 ஊருணிகளும் - ஆத்தங்குடியில் 3 ஊருணிகளும் - கண்டரமாணிக்கத்தில் 2 ஊருணிகளும் - கண்டவராயன் பட்டியில் 10 ஊருணிகளும் - கல்லலில் 10 க்கும் மேற்பட்ட ஊருணிகளும் - கல்லுப்பட்டியில் 3 ஊருணிகளும் - காரைக்குடியில் 20 க்கும் மேற்பட்ட ஊருணிகளும் - காளையார் மங்கலத்தில் 2 ஊருணிகளும், கீழப்பூங்குடியில் 1 ஊருணியும் வெட்டப்பட்டுள்ளன.

குழிப்பிறையில் 3 ஊருணிகளும் - கொத்தமங்கலத்தில் 6 ஊருணிகளும் - கோட்டையூரில் 3 ஊருணிகளும் - சிறாவயலில் 1 ஊருணியும் - சிறுகூடற்பட்டியில் 3 ஊருணிகளும் - செம்பனூரில் 1 ஊருணியும் - செவ்வூரில் 1 ஊருணியும் - சொக்கநாதபுரத்தில் 1 ஊருணியும் - நடராசபுரத்தில் 4 ஊருணிகளும் - நற்சாந்துப் பட்டியில் 3 ஊருணிகளும் - பள்ளத்தூரில் 5 ஊருணிகளும் - புதுவயலில் 1 ஊருணியும் - பூலாங்குறிச்சியில் 2 ஊருணிகளும் - மேலைச்சிவபுரியில் 3 ஊருணிகளும் - விராமதியில் 3 ஊருணி களும் - வெற்றியூரில் 1 ஊருணியும் பொதுவில் அமைந்துள்ளன.

"காடுவெட்டிப் போட்டு கடிய நிலந் திருத்தி
வீடு கட்டிக் கொண்டு"

வாழத் தொடங்கியதால் சமயச் சார்பு அடிப்படையில் ஆகம பூஜைக்காக வேதபாட சாலைகள், நாவாரத் துதிக்க வேத பாடசாலைகளும் - நிலம், நீர் அடிப்படையில் திருமஞ்சனத்திற் காகக் குளங்கள், தனிமனித அடிப்படையில் மக்களின் பசிப்பிணி நீக்க மடங்கள், சத்திரங்கள், உடற்பிணி தீர்க்க மருத்துவ மனைகள் திசைவழி அடிப்படையில், செல்லும் திசைதோறும் ஆலயத் திருப்பணிகள் ஆகியவற்றைச் செய்துவந்துள்ளனர். மேலும், உயிர்காக்கும் ஊருணிகள், தாகம் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தல்கள், தம் மரபினர் தங்க விடுதிகள் ஆகியவற்றையும் அமைத்துள்ளனர். இவற்றில் உயிர் வாழ உதவும் ஊருணிகளை அமைத்தது முன்னோர்களின் உயர் மாண்பு ஆகும்.

⌘ ⌘ ⌘

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 408.

17. நகரத்தார் குலதெய்வங்கள்

நாட்டுக்கோட்டை நகரத்தார் ஒவ்வொரு குடும்பத்தாரும் தலைமுறை தலைமுறையாக ஒரு குறிப்பிட்ட தெய்வத்தைக் குலதெய்வமாகக் கொண்டாடி வருகின்றனர். பிறந்த குழந்தை களுக்குப் பெயரிடுதல், காதுகுத்துதல், தொட்டில் கட்டுதல், முதல் முடி இறக்குதல் போன்ற சடங்குகளைச் குலதெய்வக் கோயில்களில் தவறாது செய்து வருகின்றனர். அவ்வாறே நகரத்தார் திருமணக் காலத்தில் குலதெய்வ கோயிலிலிருந்து மாலையும், விபூதி பிரசாதமும் வர ஏற்பாடு செய்வர்.

திருமணத்திற்குப் பின் திருமணமான மணமக்களை முதன் முதலில் குலதெய்வ கோயிலுக்குத்தான் அழைத்துச் செல்லுதல் வழக்கம். பழனி, குன்றக்குடி போன்ற கோயில்களுக்குக் காவடி எடுப்பவர்கள் மற்றும் பழனி, வைத்தீசுவரன் கோயில் ஆகிய தலங்களுக்குப் பாதயாத்திரை செல்பவர்கள் அதற்கு முன் குலதெய்வ கோயிலுக்குச் சென்று வழிபட்டு வருதல் மரபாகும். பொதுவாக நகரத்தார் குடும்பங்களில் நடைபெறும் வீட்டுப்படைப்பு அல்லது பங்காளிகளின் பொதுப் படைப்பின்போது குலதெய்வ கோயிலிலிருந்து தீர்த்தம் எடுத்து வருதல் தொன்று தொட்டு வழக்கமாக இருந்துவருகிறது.

இவர்கள் அடிப்படையில் சிவபெருமானை வழிபடும் சைவர்களே ஆவர். எனினும், குன்றக்குடி ஆறுமுகப் பெருமானையும், சிலர் அரியக்குடி ஸ்ரீனிவாசப் பெருமாளையும் குலதெய்வங்களாக வழிபடுகின்றனர். பெரும்பாலும் காவல் தெய்வங்களான **ஐயனார், கருப்பர், எல்லைப் புறப் பெண் தெய்வங்கள்** ஆகியவற்றையே நகரத்தார்கள் குலதெய்வங்களாகப் போற்றிவருகின்றனர்.

ஐயனார் வழிபாடு

அஞ்சாத பெருமாள் ஐயனார், அழகிய மெய்ய ஐயனார், ஆதினமிளகி ஐயனார், ஆரடி சாத்த ஐயனார், ஆலத்தி ஐயனார், உசிலுடை ஐயனார், ஓமக்காட்டு ஐயனார், கக்கூருடைய ஐயனார், கடவுள் ஐயனார், கண்ணப்ப ஐயனார், கரியமலை சாத்த ஐயனார், கருங்கமுடைய ஐயனார், கருமுகிலுடைய ஐயனார், கருவி ஐயனார், கரைமேல் அழகர் ஐயனார், கலியுக மெய்ய ஐயனார், கல்லுக்காடு

ஐயனார், களத்திருடைய ஐயனார், கள்ளணன் பிள்ளை பெருமாள் ஐயனார், காடப்ப ஐயனார், குருந்துடைய ஐயனார், சந்தி வீரப்பர், செவிட்டு ஐயனார், சேத்து மேல் செல்ல ஐயனார், சேவாத்தாள் ஐயனார், சேவுகப் பெருமாள் ஐயனார், சோலையாண்டவர், தருமசாத்த ஐயனார், தலைக்காவுடை ஐயனார், திட்டாணி ஐயனார், திருப்பேரையூர் நாகலிங்க தர்ம சாஸ்தா, நெல்லியாண்டவர் ஐயனார், பகச்சால மூர்த்தி ஐயனார், பஞ்சாட்சரமுடைய ஐயனார், பணிச்சாருடைய ஐயனார், பனக்குடி சாத்த ஐயனார், பனந்தமுடைய ஐயனார், பனையுடை ஐயனார், பாலை விளைத்த ஐயனார், புலிக்குட்டி ஐயனார், பூசாரி உடைய ஐயனார், பொய் சொல்லா மெய்ய ஐயனார், மக்கமடை ஐயனார், மங்களக்காட்டு ஐயனார், மருதுடைய ஐயனார், மருதூருடைய ஐயனார், முத்து வெள்ளை சாத்த ஐயனார், மேலக்காட்டு ஐயனார், வல்லடிக்கார சுவாமி ஐயனார், வள்ளி லிங்க ஐயனார், வெட்டுடைய ஐயனார், வேங்கை ஐயனார், வையகளத்து ஐயனார் ஆகிய பல பெயர்களில் அழைத்து வணங்கப்படும் ஐயனார் இவர்களின் குலதெய்வமாக விளங்குகிறது. இவை பொதுவாக எல்லைப் புறங்களிலும், குளம், கண்மாய், ஏரிக்கரை, ஆற்றங்கரை ஓரங்களிலும் அடர்ந்த காடுகள் மற்றும் சோலைகளிலும் அமைந்து காணப்படுவதுண்டு.

ஐயனார் மூல தெய்வமாக அமையும் இடங்களில் மூலவரைச் சுற்றிலும் பதினெட்டு வகை பரிவார தேவதைகளும் காணப்படுவதுண்டு. இன்னும் சில இடங்களில் சோணை, சின்ன கருப்பு, சிவன், வீரிய பெரிய கருப்பு, லாட சன்னாசி, இயக்கி,பேச்சி, சந்தனக் கருப்பு, வீரிய பெருமாள், மதயானைக்கருப்பு, ராக்காயி, பத்திரகாளி உட்பட 21 பரிவார தெய்வங்களும் உண்டு.[1]

சப்பாணி, இருளான், ராக்கு பாண்டி, முன்னடியான், மாவடியன், முனிசாமி போன்றவைகளும் இவ்வரிசையில் இடம் பெறுவதுண்டு. [2] இவற்றிற்கு ஆடு, கோழி போன்ற உயிர்ப்பலிகள் கொடுக்கப்படுகின்றன.[3]

நகரத்தாரின் குலமரபு தெய்வங்களில் ஒன்றான ஐயனார் தனி உருவங்களாகவும், பூரணி - புஷ்கலை ஆகிய இரு தேவியரோடும் காணப்படுவதுண்டு. இந்நிலையில் இருதேவியரின் நடுவே ஐயனார் வலதுகாலை மடித்து அல்லது தொங்கவிட்டு இடது காலைக்

1. கோவி. இராஜேந்திரன், ஆலயங்களும் அபூர்வ தகவல்களும், பக் – 43
2. மா.சந்திரமூர்த்தி – வெவேதாசலம், பராக்கிரம பாண்டியபுரம், கலைத்தாய் பதிப்பகம், சென்னை,2002, பக் 116 – 121.
3. மா. சந்திரமூர்த்தி, செட்டிநாட்டுப் பகுதி நாட்டுப்புறத் தெய்வங்கள், விழாக்கள், சடங்குகள் – கருத்தரங்கு, கலை பண்பாட்டியல் துறை, உலகத் தமிழாராய்சி நிறுவனம், சென்னை, 27.12.1991.

குத்திட்டு எழிலாக இருகரங்களுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படும். மானிடவடிவில் தோன்றும் ஐயனாரின் வலக்கரம் வளைந்த சாட்டை, செண்டு அல்லது செங்கோல் போன்ற ஆயுதத்தைக் கடகமுத்திரையில் பற்றி இருக்கும்.[1] இடக்கரம் இடது முழங்கால் மீது நீண்ட நிலையில் அமைந்து காணப்படும். ஐயனாரின் தலையை ஜடாபாரம் எனும் வட்டமாகச் சுருண்டு விரிந்த முடி மகுடமாக அலங்கரிக்கும். காதுகளில் பத்ர குண்டலங்கள் எனும் வட்டமான ஓலைக் குழைகள் அழகு செய்யும். இடையில் தொடைவரை இடைக்கச்சை காணப்படும். இடுப்பையும் இடது முழங்காலையும் இணைக்கும் வகையில் இடைவார் என்னும் யோகப்பட்டம் அமைந்து காணப்படும். கைகளில் காப்பும், கால்களில் கழல்களும் அலங்கரிக்கக் காணப்படுவார். பூரணி - புஷ்கலை இருவரும் ஐயனாரின் இரு புறமும் இருகரங்களோடு அமர்ந்த கோலத்தில் காணப்படுவர். இருவரது கரங்களில் ஒருவர் கரத்தில் தாமரை மலரும், மற்றொருவர் கரத்தில் அல்லி மலரும் காணப்படும். ஏனைய கரங்கள் தொடை மீதோ, பீடத்திலோ அமைவதுண்டு. ஒரு தேவியின் காதில் மகரகுண்டலமும், மற்றொரு தேவியின் காதில் பத்ரகுண்டலமும் (ஓலைக்குழை) அணிசெய்யும். ஒரு தேவிக்கு மட்டும் மார்புக் கச்சையும், மற்றொரு தேவி கச்சையின்றியும் காட்டப்படுவர். அவ்வாறே ஒரு தேவி மார்பினை பூணூலும், மற்றொரு தேவியின் மார்பினை சன்னவீரம் எனும் வீரச்சங்கிலியும் அலங்கரிக்கும்.[2] பாண்டிநாட்டில் குறிப்பாக செட்டிநாட்டுப் பகுதியில் ஐயனாரின் வடிவங்கள் கி.பி. 8-9ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை காணக் கிடைக்கின்றன. இவற்றைச் செட்டிநாட்டு எல்லைகள் உள்ளிட்ட சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் அதிகமாகக் காணலாம்.

கோயிற் கருவறையில் பெரும்பாலும் சுதைச்சிற்பங்களாக ஐயனார் சிலைகள் உள்ளன. சில இடங்களில் கல்லாலான சிலைகளும் உள்ளன. பலகைக் கல்லில் ஐயனார் திருவுருவம் புடைப்புச் சிற்பமாக இருப்பதும் உண்டு. ஐயனார் முன்னர் பெரிய அளவிலான யானைகளும், குதிரைகளும், வீரர்களுமாக சுதை வடிவங்கள் வண்ணம் பூசப்பட்டு காட்சியளிக்கும். சுட்ட செம்மண் குதிரைச் சிலைகளையும் காணலாம்.[3] இப்படி செய்து வைப்பது ஒருவகை பிராத்தனை முறை. பழங்காலப்போர்களில் வெற்றிபெற குதிரைகளே உதவின. ஆகையால் குதிரைகளை வழிபடும் பழக்கம்

1. டாக்டர் அ. விசுவநாதன், ஐயனார் வழிபாடு, நேமம் ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் குடமுழுக்கு விழாமலர், 1991, பக் – 164.
2. மா.சந்திரமூர்த்தி, கலைப்படைப்பில் ஐயனார், திங்கள் பொழிவு, தொல்லியல் துறை, சென்னை.
3. செ. வைத்தியலிங்கன், சிற்பக்கலை, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2003, பக், 341 – 342

பரவியிருக்கலாம். குதிரைப் படைத் தளபதியின் பிரதிநிதியாக ஐயனார் கருதப்படுகிறார்![1] நகரத்தார் உட்பட பல இனத்தவரும் ஐயனார் கோயில்களைக் கட்டவும், திருவிழாக்களை நடத்தவும் பல உதவிகள் செய்து வருகின்றனர். ஐயனாருக்குப் பூசை நடத்தினால் மழை வரும் என்ற நம்பிக்கையும் இருந்து வருகிறது.

கருப்பர் வழிபாடு

நகரத்தார் குலதெய்வங்களில் காவல் தெய்வங்களில் ஒன்றான கருப்பர் குறிப்பிடத்தக்கது. இவற்றை செட்டிநாட்டு எல்லையிலும், பிற ஊர்களிலும் காணலாம். காடுகளிலும், எல்லைப் புறங்களிலும், தோட்டங்களிலும், தேரடிகளிலும், கோட்டை மேடுகளிலும் கருப்பரைக் காணலாம். இக்கருப்பர் உறங்காப்புளிக் கருப்பர், கட்டுச்சோற்றுக் கருப்பர், காட்டுக் கருப்பர், கொத்தங் கருப்பர், கோட்டைக் கருப்பர், சந்தனக் கருப்பர், சாக்கோட்டைக் கருப்பர், செட்டிக் கருப்பர், திருமேனிக் கருப்பர், தேரடிக் கருப்பர், நைனாத்தான் கருப்பர், பதினெட்டாம்படி கருப்பர், பெரிய கருப்பர், மஞ்சனத்தி கருப்பர், மந்திக் கருப்பர், மாசங் கருப்பர், முப்பலிக் கருப்பர், முன்னோடிக் கருப்பர், வெற்றியூர் கருப்பர் வேலங்குடிக் கருப்பர், வைகைக் கருப்பர் எனப் பலப் பெயர்களால் வணங்கப்படுகிறார்.[2]

இக்கருப்பர் கோயில்களைச் செட்டிநாட்டின் கிராமங்களான இராங்கியம், இளையாத்தங்குடி, ஆலத்திப்பட்டி, எண்ணெயாட்டுப் பாறை, கோட்டையூர், திருப்புத்தூர், காளையார் மங்கலம், சாக்கோட்டை, அம்மாபட்டி, சிறாவயல் புதூர், கண்ட தேவி, வடவன்பட்டி, அழகர் கோயில், ஐயா பட்டி, நாட்டரசன்கோட்டை, கொறட்டி, கோட்டூர், கொப்பனாபட்டி, வைரவன்பட்டி,[3] செங்கீரை, வெற்றியூர், வேலங்குடி, கண்டனூர் ஆகிய இடங்களில் காணலாம். கருப்பண்ண சுவாமி கோயில்களில் மூலதெய்வமாகவும், சில இடங்களில் கோயிலில் பரிவாரமாகவும் இருப்பதுண்டு. சில குலதெய்வக் கோயில்களில் தங்கள் குடியில் பிறந்த முன்னோரையும் பரிவார தெய்வமாக்கி வழிபடுகின்றனர். பெரும்பாலும் பெண்களே இவ்வாறு வழிபடப்படுகின்றனர். அத்தெய்வங்கள் தொடர்பான கதைகளும், நாட்டுப்புறப் பாடல்களும் கூறப்படுகின்றன. கருப்பர் நின்ற கோலத்தில் தலையில் உருமால் அல்லது தலைப்பாகை, காதுகளில் கடுக்கன், இடையில் கச்சை அணிந்து இரு கரங்களுடன்

1. சோமலெ, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், 1975, பக், 58 – 59.
2. எஸ்ஸாரெம்., நகரத்தார்களின் குல தெய்வங்கள்,கோலாலம்பூர், அக்டோ, 1997.
3. திரமா, பெருந்தெய்வக்கோயில்களில் சிறு தெய்வ வழிபாடு, மாத்தூர் ஐந்நூற்றீஸ்வர திருக்குட நன்னீராட்டு பெருவிழா சிறப்பு மலர், 2002, பக் 111 – 113.

காணப்படும். வலது கரம் ஓங்கிய வாள் அல்லது அரிவாளோடு காணப்படும். இடது கரம் கதாயுதம் என்னும் நீண்ட உருளைத்தடி ஏந்திக் காணப்படும். தலையில் உருமால் தரித்து, முகத்தில் முறுக்கிய மீசையுடன், சீற்றம் பொங்கும் கண்களோடு செம்மாந்து நிற்கும் வடிவில் இத்தெய்வம் காட்சியளிக்கிறது.

சில இடங்களில் கருப்பரை உருவமின்றி பீடமாகவும், நீண்ட அரிவாளை (முனையில் மணிகள்கட்டி) செங்குத்தாக நிறுத்தி வழிபடுவதும் உண்டு. இக்கருப்பருக்கு வைராவி மற்றும் பண்டாரத்தாரே பூசை, வழிபாடுகள் செய்துவருகின்றனர்.

பெண் தெய்வ வழிபாடு

சிவகங்கை மாவட்டம் செட்டிநாட்டுக் கிராமங்களின் எல்லையைக் காக்கும் தெய்வமான பெண் தெய்வங்கள்,

1. அக்கினியாத்தாள் - பாகனேரி.
2. அங்காள பரமேசுவரி - இளையாத்தங்குடி, தேக்காட்டூர், நாட்டரசன்கோட்டை.
3. அடைக்கலம் காத்த அம்மன் - வாணியங்குடி, விரையாச்சிலை
4. அழகிய நாச்சி அம்மன் - பொன்னமராவதி
5. அன்னபூரணி அம்மன் - வெற்றியூர்
6. உய்ய வந்தாள் - சாக்கோட்டை
7. கண்ணுடைய நாயகி அம்மன் - நாட்டரசன்கோட்டை
8. காஞ்சிரங்குடிக்காளி - கோனாப்பட்டு
9. காடேரி அம்மன் - கோவில்பட்டி
10. கிணற்றடிக் காளியம்மன் - கண்டவராயன்பட்டி
11. கோட்ட நாச்சியார் - கத்தாளம்பட்டு
12. தேனாட்சியம்மன் - சிறாவயல் புதூர்
13. பரநாச்சியம்மன் - கருங்குளம்
14. பெரிய நாயகி அம்மன் - அம்மாபட்டி
15. பொக்கிஷக் கோட்டைக்காளி - கீழக்கோட்டை
16. மதுக்கரை நாச்சியம்மன் - செவலூர்
17. மாகாளி - உஞ்சனை
18. முத்து மாரியம்மன் - கீரணிப்பட்டி
19. வடக்கு வாசல் செல்லாயி அம்மன் - எழுவங்கோட்டை
20. வயல் நாச்சியம்மன் - வேலங்குடி என்ற பெயர்களில் நகரத்தார்களின் குலதெய்வங்களாக விளங்குகின்றன.

இவை ஊர் எல்லைப் புறங்களில் சோலை மற்றும் அடர்ந்த காடுகளின் நடுவே காணப்படும். இவை பெரும்பாலும் எட்டுக் கரங்களுடன் ஒரு காலைத் தொங்கவிட்டு மறுகாலைக் குத்திட்டு அமர்ந்த கோலத்தில் காணப்படும்.

நகரத்தார்களின் புகழ்பெற்ற பெண் தெய்வங்களுள் ஒன்று நாட்டரசன் கோட்டை கண்ணுடையநாயகி அம்மன். இங்குள்ள கண்ணுடைய அம்மன் 'கண்ணாத்தாள்' என்று அழைக்கப் படுகிறாள். கண்ணகியே இத்தெய்வம் என்றும் கூறிவருகின்றனர். கண் தொடர்பான நோய்கள் தீர இவ்வம்மனை வேண்டிக் கண்மலர்கள் செலுத்துவர். தை மாதத்தில் நகரத்தார் அனைவரும் கூடி சிட்டுக் குலுக்கி எடுத்து அதன்படி புள்ளிக்கு ஓர் அடுப்பு அமைத்துச் செவ்வாய்ப் பொங்கலை மிகச் சிறப்பாகக் கொண்டாடு கின்றனர். வைகாசி விசாகத் திருவிழா இங்கு நடைபெறும் பெரிய விழாவாகும். ஊர் கூடி எடுக்கும் விழா களியாட்டத் திருவிழா. இது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும். அப்போது களியாட்ட வீடு என்றே தனி வீடமைத்துக் கண்ணாத்தாள் படம் எழுதி விளக்கேற்றி மதுவடித்து வழிபடுதல் விழாவின் நடைமுறையாகும். கடைசியாக இவ்விழா 1995-ஆம் ஆண்டில் நடைபெற்றது.

கோயில் தழுவிய குடிகளாக வாழும் நகரத்தார்கள் செட்டிநாட்டு எல்லைக்குள் அமைந்துள்ள மேற் சொன்ன ஐயனார், கருப்பர், அம்மன் ஆகிய தெய்வங்களைத் தலைமுறை தலைமுறையாக குலதெய்வமாக வணங்கி வழிபடுகின்றனர். இக்குல தெய்வ கோயில்கள் உள்ள பகுதியிலேயே தொடக்கத்தில் வாழ்ந்த நகரத்தார்கள் பின்னர் சூழ்நிலை காரணமாகப் பல்வேறு ஊர்களுக்குக் குடிபெயர்ந்து இருக்கலாம் என ஒரு கருத்தும் நிலவுகிறது. எனினும் எங்கிருந்தாலும் நகரத்தார்கள் தங்கள் இல்லத்தில் நடக்கும் எந்த விழாவிற்கும் முதன் முதலில் குலதெய்வங்களை வழிபடும் மரபை மறவாமல் பின்பற்றுகின்றனர். ஆச்சிமார் பாடும் தாலாட்டிலும் குல தெய்வங்களை நினைவு கூறுகின்றனனர். சான்றாக,

"ஒற்றைப் பனைமரமாம் – சோணைய்யா
ஊரருகே ஊரணியாம்
தனிப்பனயும் ஊரணியும் – சோணைய்யா
தாவடமும் உள்ளவராம்
பிள்ளைத் தந்தார் – சோணைய்யா
பேரு சொல்லி தாலாட்ட
மஞ்சள் தந்தாள் – ஆச்சி அம்மாள்
வளமை சொல்லி தாலாட்ட"

செவ்வூரில் பாடும் தாலாட்டு ஒன்றைக் கூறலாம்.

⌘ ⌘ ⌘

18. தேவாரத் தலங்களில் அறப்பணிகள்

மன்னர் பின்னோர் என அழைக்கப்பட்ட நகரத்தார்கள், முற்காலத்தில் மன்னர்கள் கட்டிய கோயில்கள் காலத்தால் சிதைவுற்றபோது பெரும் பொருட் செலவில் அக்கோயில்களில் திருப்பணி செய்தும், குடமுழுக்குச் செய்தும் அறப்பணிகளால் அப்பெயரை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்கள். காசி முதல் கன்னியாகுமரி வரை புகழ்பெற்ற திருக்கோயில்கள், நாயன்மார்கள் - ஆழ்வார்களால் பாடப்பெற்ற திருக்கோயில்கள் பெரும் பாலானவற்றில் நகரத்தார்கள் திருப்பணி செய்துள்ளார்கள். இவ்வகையில் திருத்தலங்களில் நகரத்தார் செய்துள்ள அறப்பணிகள் குறித்த விவரமும் அவற்றுக்காகச் செலவிடப்பட்ட பொருள் அளவும் 'நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' நூலில் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியாரால் தொகுத்துப் பதிவு செய்யப் பெற்றுள்ளன.

நகரத்தார்கள் தாம் தோற்றுவித்துக் குடியேறிய 78 ஊர்களில், ஒவ்வோர் ஊரிலும் திருக் கோயில்கள், பசுமடம், ஊருணி, பூங்கா, அந்தணர் உறையுள், வாகனங்கள், ஆபரணங்கள், வெள்ளிப் பாத்திரங்கள் போன்றவற்றை ஏறத்தாழ சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு ரூபாய் நான்கு கோடி செலவு செய்து அமைத்துக் கொடுத்திருக்கின்றனர். இவை தவிர, நகரத்தார்கள் வசிக்கின்ற ஊர்களுக்கு அண்மையில் உள்ள ஊர்களில் ஏறத்தாழ 65,00,000 ரூபாய் செலவில் 35 ஊர்களில் கோயில்கள், குளங்கள் அமைத்தும், இதுவும் போதாது என்று சோழநாட்டில் 78 தலங்களிலும், பாண்டியநாட்டில் 20 தலங்களிலும், கொங்கு நாட்டில் 9 தலங்களிலும், நடு நாடு, தொண்டை நாட்டுத் தலங்கள் ஒவ்வொன்றிலும் 11 இடங்களிலும் ஏறத்தாழ 60,000,000 ரூபாய் செலவில் திருக்கோயில்கள் அமைத்துத் திருப்பணிகள் செய்துள்ளார்கள். இவர்கள் திருப்பணி செய்த மொத்தத்தொகை 1958ஆம் ஆண்டு வரை கணக்கிடப்பட்டுள்ளது. மொத்தம் 10, 64,40,700 ரூபாய் என்று மேற்குறிப்பிட்ட நகரத்தார் வரலாறு என்ற நூலில் காணமுடிகிறது.[1]

1. வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, பக் 204 – 214.

சிதம்பரம்

நடராஜப் பெருமான் – சிவகாமி அம்மை

கோயில் என்றாலே சிதம்பரத்தைக் குறிக்கும். சைவர்களுக்குக் கோயில் சிதம்பரம். இறைவனின் பஞ்சபூதத் தலங்களில் ஆகாயத்தலமாகவும், பஞ்ச சபைகளில் பொற் சபையாகவும் விளங்கும் பதி.✪ இப்பதி மூவர் தேவாரம் பெற்றதோடு திருவாசகத்தால் பெரிதும் சிறப்பிக்கப் பெற்றது.[1] இதன் நான்கு கோபுர வாயில்கள் வழியாக சமயக்குரவர் நால்வரும் வந்து இறைவனை வணங்கி வழிபட்டிருக்கின்றனர். சோழ மன்னர்கள் முடி சூட்டிக் கொள்ளும் நகரங்களுள் ஒன்று. இச்சிவாலயத்தில் சா.ராம. முத்தையா செட்டியார், இவருடைய மகன் திவான் பகதூர் மு. இராமசாமி செட்டியார், சகோதரர் சாராம. சிதம்பரம் செட்டியார் ஆகியோர்கள் மற்றும் நகரத்தார்களின் பொருளுதவியில் புதிதாக முக்குருணி அரிசிப் பிள்ளையார் கோயிலும், சிற்சபையின் பொன் ஓடுகளும், இரண்டாம் பிரகாரத்தில் அணியொட்டிக் கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் புதுப்பித்து, சிவகங்கைத் திருக்குளம், படித்துறைகள், மண்டபம் புதிதாகக் கட்டி, இராஜகோபுரம் புதுப்பித்து, உற்சவ மண்டபம், வாகன மண்டபமும் புதிதாக அமைக்கப்பட்டன. திருமூலட்டானம் சுவாமி கோயில், அம்மன் கோயில், திருக்குளங்கள் ஆகியவை புதுப்பிக்கப்பட்டன. கோயிலுக்குத் தேரும், திருவாபரணங்களும் செய்யப்பட்டன. இவை தவிர மேலும் பல திருப்பணிகள் ரூபாய் முப்பது இலட்சம் (30,00,000) செலவில் செய்து முடிக்கப்பட்டுக் கர ஆண்டு, சித்திரை 4ஆம் தேதி (15-4-1891) கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இராஜா.சர். அண்ணாமலை செட்டியார் அவர்களால் தில்லைக் கோவிந்தராஜ பெருமாள் கோயில் திருப்பணி செய்யப்பட்டுப் பவ ஆண்டு, வைகாசி 11ஆம் நாள் (24-5-1934) கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

திருவேட்களம்

பாசுபதேசுவரர் – நல்ல நாயகி

பார்தனனுக்குப் பாசுபதம் அளித்த தலம். “வேட்கள நன்னகராரே” எனத் திருஞானசம்பந்தரால் புகழப்பெற்றது. நாவுக்கரசர் பாடல் பெற்ற தலம். சிவபெருமானின் வில்லாகிய பினாகம், விஷ்ணுவின்வில்லாகிய சார்ங்கம், அர்சுணனுடைய வில்லாகிய காண்டீபம் இம்மூன்று வில்களும் தோன்றிய தலம்.✪ இவ்வூர்ச் சிவாலயம், கானாடு காத்தான் சா.ராம.மு.

1. ராய.சொ., திருத்தலப்பயணம், சி.வி.சிடி.வி. அறக்கட்டளை, சென்னை, 1966, பக், 3 – 4

இராமசாமி செட்டியார், கா.பெ.அ. பெத்தபெருமாள் செட்டியார் ஆகிய இருவர் நன்முயற்சியால் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் புதிதாய்க் கட்டப்பெற்று, பிங்கள ஆண்டு, வைகாசி 19-ஆம் நாள் (1-6-1917) கும்பாபிஷேகம் நிறைவெய்தியது.

திருநெல்வாயில் (சிவபுரி)

உச்சிநாதேசுவரர் – கனகாம்பிகை

இறைவன் நெல் விளையும் வயலில் தோன்றியவர். ஞான சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪இவ்வூர்ச் சிவாலயம், கோட்டையூர் க.வீ.சொ.வீ. அழகப்ப செட்டியார், க.வீ.மு.ப. கதிரேச செட்டியார், காரைக்குடி முத்து அரு.மு. அருணாசலம் செட்டியார் ஆகிய மூவராலும், ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தேழாயிரத்து ஐந்நூறு (3,27,500) செலவில் திருப்பணி செய்யப்பெற்று விபவ ஆண்டு, வைகாசி 11-ஆம் நாள் (24-5-1928)இல் கும்பாபிஷேகமும், ஆங்கீரச ஆண்டு, வைகாசி 28-இல் இராச கோபுர கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

திருக்கழிப்பாலை

பால்வண்ணநாதர் – வேதநாயகி

கோயில் கிணறு பால்நிறமுள்ளதால் இறைவன் பால்வண்ண நாதர் என அழைக்கப்படுகிறார். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪கடற்கரையை அடுத்திருந்த கழிப்பாலைக் கோயில் சுமார் 100-ஆண்டுகளுக்கு முன் சிவபுரியில் அமைக்கப் பெற்றது. தேவகோட்டை ராம.அரு.அரு. அருணாசலம் செட்டி யாரால் அம்மன் கோயில் முதலிய திருப்பணிகள் ரூபாய் அறுபத் தோராயிரம் (61,000) செலவில் செய்யப்பெற்று, பிலவங்க ஆண்டு, ஆவணி 10-ஆம் நாள் (26-8-1907) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்)

சிவலோகத்தியாகேசர் – நங்கையுமையம்மை

ஞான சம்பந்தப் பெருமான் திருமணக் கோலத்துடன் முக்தி பெற்ற தலம். ஞான சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪ இக் கோயிலுள், காரைக்குடி பெரி.நா. நாராயணன் செட்டியார், ஞானசம்பந்தர் கோயிலும் சில மண்டபங்களும் கட்டி, தளவரி சைகள் முதலான திருப்பணிகளும் ரூபாய் இருபத்தையாயிரம் (25,000) செலவிற் செய்து பிரமாதீச ஆண்டு ஆனி 27-ஆம் நாள் (10-7-1913) கும்பாபிஷேகம் செய்வித்தனர்.

திருமயேந்திரப்பள்ளி

திருமேனியழகர் – வடிவாம்பிகை

தேவர்களும் முனிவர்களும் வழிபட்ட தலம். முனிவர்கள் காண சிவபெருமான் தாண்டவம் ஆடிய தலம். ஞான சம்பந்தர்

பாடல் பெற்ற தலம். ✪ இத்தலச் சிவாலயம், தேவகோட்டை பழ. சோமசுந்தரம் செட்டியாரால் ரூபாய் பதினேழாயிரம் (17,000) செலவில் புதுப்பிக்கப் பெற்று வெகுதானிய ஆண்டு ஆனி 30-ஆம் நாள் (14-7-1938) கும்பாபிஷேகம் நிறைவேறிற்று.

திருப்பல்லவனீச்சரம் (காவிரிப்பூம்பட்டினம்)

பல்லவனேசுவரர் – சவுந்தர நாயகி

இயற்பகை நாயனார், பட்டினத்தடிகள் அவதரித்த தலம். ஞான சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪ பல்லவர் திருப்பணி செய்த பின் பல்லவனீச்சுரம் என்றாயிற்று.[1] இத்தலக் கோயில், வயிநாகரம் குடும்பத்தினரால் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில், புதிதாய்த் திருப்பணி செய்யப் பெற்றுச் சார்வரி ஆண்டு, வைகாசி 8-ஆம் நாள் (10-5-1900) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருவெண்காடு

சுவேதாரண்யேசுவரர் – பிரம்ம வித்தியாநாயகி

இதிகாசமான இராமாயணத்தில் குறிக்கப்பட்டுள்ள ஒரே தலம். இறைவன் அகோர மூர்த்தியாக காட்சியளிக்கிறார். ஞான சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் புதையலில் கிடைத்த அர்த்தநாரி, கல்யாணசுந்தர மூர்த்தி, ஏறுஊரும் பெருமான், பிச்சை தேவர் முதலிய செப்புத் திருமேனிகள் உலகப் புகழ் பெற்றவவை. இத்திருமேனிகள் சோழர் காலக் கல்வெட்டிலேயே குறிக்கப் படுகின்றன.[2] இத்தலத்தில் அம்மன் கோயில், தேவகோட்டை முராம. சுப்பிர மணியன் செட்டியார், அவர் புதல்வர்களால் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று, விக்கிரம ஆண்டு ஆனி 3-ஆம் தேதி (16-6-1940) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

சீர்காழி

பிரமபுரீசுவரர் – திருநிலை நாயகி

ஞான சம்பந்தப்பெருமான் அவதரித்த பெரும் பேறுடைய பதி. அவரின் முதல் பதிகம் பெற்றது. கணநாத நாயனார் முக்தி அடைந்த பதி. சுந்தரர், அப்பர், ஞான சம்பந்தரின் பாடல் பெற்ற தலம். ✪ அம்மன் கோயிலை, அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத் தாரும், தேவகோட்டை ராமஅருஅரு.வும், ரூபாய் எண்பதினாயிரம் (80,000) செலவில் புதிதாய்க் கட்டி, விளம்பி ஆண்டு, வைகாசி 20-

1. வித்துவான் கு. பாலசாரநாதன், திருத்தலங்கள் வரலாறு, டாக்டர்.உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையம், சென்னை, 1990, பக், 236 – 37
2. மா. சந்திரமூர்த்தி, பூம்புகாரைச் சூழ்ந்த கலைச் செல்வங்கள், பூம்புகார், ஆசிரியர் அறுவர், தொல்லியல்துறை வெளியீடு, சென்னை, 1973.

✪ மா. சந்திரமூர்த்தி, தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி – 2, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை,2004.

ஆம் நாள் (1-6-1898) இல் கும்பாபிஷேகம் செய்துள்ளனர். நகரத்தாரால் வேத பாடசாலை, நந்தவனம், குருபூசை மடம் முதலியன நிறுவப்பெற்றுள்ளன.

திருக்கோலக்கா (திருத்தாளமுடையார் கோவில்)

சத்தபுரீசுவரர் – ஓசைகொடுத்த நாயகி

ஆளுடைய பிள்ளையார்க்குப் பொற்றாளம் வழங்கப்பெற்ற பதி. இறைவன் அளித்த தாளத்திற்கு அம்பிகை ஓசை கொடுத்தாள். சுந்தரர், ஞான சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪ இவ்வூர்ச் சிவாலயத் திருப்பணி, தேவகோட்டை ராம.மெ.சித. வயி.ராம. வைரவன் செட்டியாரால் ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் (3,50,000) செலவில் செய்யப்பெற்றுத் துந்துபி ஆண்டு, தை 16-ஆம் நாள் (29-2-1923) அம்மன் கோயில் கும்பாபிஷேகமும், பிரபவ ஆண்டு, தை 23-ஆம் நாள் (5-2-1928) சுவாமி கோயில் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுவரன் கோவில்)

வைத்தியநாதர் – தையல்நாயகி

முருகப்பெருமான், செவ்வாய் கிரகம், சம்பாதி - சடாயு என்னும் இரண்டு பறவைகளும் சிவபெருமானைப் பூசித்தத் தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ கோயிலுக்குள் அமைந்த திருக்குளத்தின் மேல் கரையில் மண்டபமும், வெள்ளித் தேரும் கானாடுகாத்தான் கரு.தூ. வகையினரால் ரூபாய் எழுபத் தையாயிரம் (75,000) செலவில் அமைக்கப்பெற்று, கர ஆண்டு, ஆனி 14-ஆம் தேதி (26-6-1891) முதல் கும்பாபிஷேகமும், ரூபாய் எண்பதாயிரம் (80,000) செலவில், கோயிலுக்குள் சில சீர்திருத்தங்களும், தகரக் கொட்டகையும் அமைத்துப் பிரபவ ஆண்டு, ஆவணி 10-ஆம் தேதி (1-9-1927) இரண்டாம் கும்பாபி ஷேகமும் செய்யப்பெற்றன. நகரத்தாரால் வேதபாடசாலை, பசுமடம், அன்ன சத்திரம், சாதுக்கள் மடம் முதலியன நிறுவப் பெற்றுள்ளன.

திருக்கண்ணார் கோவில்

கண்ணாயிரேசுவரர் – முருகுவளர் கோதையம்மை

அகலிகையால் சாபம் பெற்ற இந்திரன் சாபம் நீங்கி ஆயிரம் கண் பெற்ற தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪ இக்கோயில், கண்டனூர் தெ.அரு.சித. அருணாசலம் செட்டியார் குடும்பத்தார், அசிநாசி. நாச்சியப்ப செட்டியார், சிதம்பரம் செட்டியார் இவர்களால் ரூபாய் மூன்று இலட்சம் (3,00,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று, யுவ ஆண்டு ஆனி 24-ஆம் நாள் (8-7-1935) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருநின்றியூர்

மகாலட்சுமீசுவரர் – உலகநாயகி

திருமகள் பூசித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர்ச் சிவாலயத் திருப்பணி, தேவகோட்டை ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் அறுபதினாயிரம் (60,000) செலவில் புதிதாகச் செய்யப்பெற்று, விகாரி ஆண்டு, ஆனி 6-ஆம் நாள் (19-6-1899) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருப்புன்கூர்

சிவலோகநாதர் – சொக்கநாயகி

திருநாளைப்போவார் நாயனாருக்காக நந்திவிலகிய தலம். ஏயர்கோன் கலிக்காம நாயனார் முக்திப் பெற்ற தலம். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪இவ்வூர்ச் சிவாலயம், கானாடுகாத்தான் கரு.தூ. சிதம்பரம் செட்டியாரால் புதிதாகத் திருப்பணி செய்யப்பெற்றுக் கீலக ஆண்டு, ஆனி 5-ஆம் நாள் (18-6-1908) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருநீடூர்

சோமநாதேசுவரர் – வேயுறு தோளியம்மை

சூரியன், சந்திரன், இந்திரன், காளி ஆகியோருடன் நண்டு பூசித்த தலம். முனையடுவார் நாயனார் முக்தி பெற்ற பதி. சுந்தரர் பாடல் பெற்ற தலம்.✪இவ்வூரில் அரிமளம் அ.அரு. அண்ணா மலைச் செட்டியாரால் ரூபாய் பதினையாயிரம் (15,000) செலவில் திருநந்தவனம் நிறுவப்பெற்றுள்ளது.

திருஅன்னியூர்

ஆபத்சகாயேசுவரர் – பெரிய நாயகி

வருணன் பூசித்த தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪இவ்வூர்ச் சிவாலயத் திருப்பணி, தேவகோட்டை ராம.மெ.சித. வயி. இராமநாதன் செட்டியாரால் ரூபாய் எழுபதி னாயிரம் (70,000) செலவில் செய்யப் பெற்று, சார்வரி ஆண்டு, தை (1901-பிப்பிரவரி) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருநாரையூர் (பொல்லாப் பிள்ளையார்)

சவுந்தரேசுவரர் – திரிபுரசுந்தரி

நாரை வழிபட்ட தலம். தம்மை அர்ச்சித்த நம்பியாண்டார் நம்பிக்கு அருள்புரிந்து, இராஜராஜசோழனுக்கு தேவாரத் திரு முறைகள் இருக்கும் இடத்தைக் காட்டி, தேவாரத் திரு முறைகளை வெளிவரச் செய்தருளிய பதி. நாவுக்கரசர், சம்பந்தர் பாடல்

பெற்ற தலம். ✪ "பொல்லாப் பிள்ளையார்" கோயில், காரைக்குடி ப.ரா.ம. இலக்குமணன் செட்டியார் முயற்சியால் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது. காரைக்குடி பராம.லெராம. இலக்குமணன் செட்டியார் முயற்சியால் ரூபாய் மூவாயிரம் (3,000) செலவில் நகர விடுதியும், நகரத்தார் பொருளுதவியால் ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு (1,500) செலவில் பிள்ளையாருக்கு வெள்ளிக் கவசமும், பெருச்சாளி வாகனமும் அமைக்கப் பெற்றுள்ளன.

திருக்கடம்பூர்

அமிர்தகடேசுவரர் – சோதிமின்னம்மை

அமுதம் வேண்டி பாற்கடலை கடைந்தபோது அமுதக்குடம் கிடைக்க இறைவனை தேவர்கள் பூசித்த தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ தேர் வடிவில் அமைந்திருக்கும் இக்கோயிலுக்குக் கரக்கோயில் என்று பெயர். இத்திருக்கோயில் பழைமையாயிருந்ததைத் தேவ கோட்டை ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியார், அவர் மகன் சோமசுந்தரம் செட்டியார், இவர்களால் ரூபாய் ஐம்பதினாயிரம் (50,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, சோபகிருது ஆண்டு, வைகாசி 5-ஆம் நாள் (18-5-1903) முதல் கும்பாபிஷேகநமும், மீண்டும் இவர்களாலேயே பிரபவ ஆண்டு, சித்திரை 8-ஆம் நாள் (20-4-1927) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

திருக்கஞ்சனூர்

அக்கினீசுவரர் – கற்பகநாயகி

கஞ்சன் என அழைக்கப்படும் பிரம்மனும், அக்கினியும் பூசித்த தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர்ச் சிவாலயம் தேவகோட்டை ராம.அரு.ராம.வெ. வெங்கடாசலம் செட்டியாரால், ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில், திருப்பணி செய்யப்பெற்று யுவ வருடம் கும்பாபிஷேகம் நிறைவெய்தியது.

திருவியலூர்

யோகானந்தேசுவரர் புராதனேசுவரர் – சவுந்தரநாயகி

பிரம்மன் தவம் புரிந்து சிவராத்திரியன்று லிங்க மூர்த்தியில் புகுந்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ மிகப் பழைமை யுற்றிருந்த அம்மன் கோயில், தேவகோட்டை கரு.மெ. கதிரேசச் செட்டியாரால் புதிதாய்த் திருப்பணி செய்யப் பெற்று, சுக்கில ஆண்டு, ஆனி 7-ஆம் நாள் (20-6-1929) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றதுபின்னர், தேவகோட்டை அ.ராம.லெ. அருணாசலம் செட்டியாரால் சுவாமி கோயில் திருப்பணி செய்யப் பெற்று ஸ்ரீமுக ஆண்டு, ஆனி 19-ஆம் நாள் (2-6-1933) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருஇன்னம்பர்

எழுத்தறிநாதர் – சவுந்தரநாயகி

அகத்திய முனிவருக்கு இறைவன் இலக்கணம் உபதேசித்த தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪ இவ்வூர் கோயில், சண்முகநாதபுரம் சேவு. விசுவநாதன் செட்டியார், ராம.அரு. அரு.ராம. அருணாசலம் செட்டியாரால் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

திருவையாறு

பஞ்சநதீசுவரர் – அறம் வளர்த்தநாயகி

சிலாத முனிவரின் மகனாக நந்தியெம்பெருமான் பிறந்த இடம். சூரிய புஷ்கரணி, சந்திர புஷ்கரணி, இறைவனின் சடைக் கங்கை, அம்பிகையின் முலைப்பால், நந்தியின் வாய்நுரை ஐந்தும் நதிகளாக மாறிய பதி. அப்பர் பெருமானுக்கு இறைவன் தென் கயிலாயம் காட்டிய பதி. நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ 'அறம் வளர்த்த நாயகி' கோயில் திருப்பணி, தேவ கோட்டை உ.ராம.மெ.சுப.சேவு. மெய்யப்ப செட்டியார், அவர் சகோதரர்கள் பஞ்சநாதம் செட்டியார், அண்ணாமலை செட்டியார் ஆகிய இவர்களால் ரூபாய் பத்து இலட்சம் (10,00,000) செலவில் செய்யப் பெற்று ரூபாய் நாற்பதாயிரம் (40,000) செலவில் ஈசுவர ஆண்டு, சித்திரை 20-ஆம் நாள் (2-5-1937) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திரு அன்பிலாலந்துறை

ஆலந்துறைநாதர் – சவுந்தரநாயகி

பிரம்மா, விஷ்ணு, இந்திரன், வாகீச முனிவர் பூசித்த பதி. நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪ இவ்வூர்ச் சிவாலயத் திருப்பணி, கோனாப்பட்டு ராமசு.லெ. இலக்குமணன் செட்டியாரால் ரூபாய் இரண்டு இலட்சம் (2,00,000) செலவில் செய்யப்பெற்று, சித்தார்த்தி ஆண்டு, சித்திரை 13-ஆம் நாள் (25-4-1919) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருஆனைக்கா

ஜம்புகேசுவரர் – அகிலாண்டநாயகி

இறைவனின் பஞ்ச பூதத்தலங்களுள் நீர்த்தலம். அம்பிகை, சிலந்தி, யானை பூசித்தபதி. நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்திலுள்ள சிவாலயம், கானாடுகாத்தான் சா.ராம.சித. சிதம்பரம் செட்டியாரின் பெருமுயற்சியால் ரூபாய் பத்து இலட்சம் (10,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, பிலவங்க ஆண்டு, தை 24-ஆம் நாள் (6-2-1908) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

காவிரித் தென்கரைத் தலங்கள்

திருக்கடம்பந்துறை (குளித்தலை)

கடம்பவனநாதேசுவரர் – முற்றிலாமுலையம்மை

இக்கோயில் சுவாமி சன்னிதி வடக்கு நோக்கியது.[1] தம்மை வழிபட்ட தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் இறைவன் கடம்ப மரத்தில் காட்சி அளித்த தலம். சூரனை கொன்ற பாவம் நீங்க முருகப்பெருமானும், வேதங்களை மீட்பதற்காக திருமாலும் பூசித்த தலம். நாவுக்கரசர் பாடல் பெற்ற தலம்.✪ தேவகோட்டை பழ.அ. வெங்கடாசலம் செட்டியாரால், இத்தலக் கோயில் திருப்பணி செய்யப்பெற்று, சுவாமி கோயில் பிரகாரங்கள், மண்டபங்கள் புதிதாகக்கட்டி அவர் மகனால் பிரபவ ஆண்டு, ஆனி 27-ஆம் நாள் (11-6-1927) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருப்பராய்த்துறை

பராய்த்துறைநாதர் – பொன்மயிலாம்பிகை

இந்திரன், குபேரன், சப்தரிஷிகள் ஆகியோர் பூசித்த பதி. நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪ இத்தலத்தில் மிகப் பழைமையாயிருந்த சிவாலயத்தை முற்றும் பிரித்துப் புதிதாய் ரூபாய் எட்டு இலட்சம் (8,00,000) செலவில் கானாடுகாத்தான் வெ.வீர. நாகப்ப செட்டியார் திருப்பணி செய்து, ரூபாய் பன்னிரண்டாயிரம் (12,000) செலவில் 26-6-10-இல் முதல் கும்பாபிஷேகம் செய்வித்தனர்.

பின்னர் நாகப்ப செட்டியார் மகன்களான வீரப்ப செட்டியார், முத்தையா செட்டியார், அருணாசலம் செட்டியார் என்ற மூன்று சகோதரர்களாலும், இராசகோபுரம், வெளிமண்டபம், உற்சவமண்டபம், கொடிமரம், நந்திமண்டபம், விநாயகர், தண்டாயுதபாணி கோயில்கள் முதலியன கல்திருப்பணியாகவும், விமானங்கள், கோபுரங்கள், நூற்றுக்கால் மண்டபம், திருமதில் முதலியன ரூபாய் இரண்டு இலட்சம் (2,00,000) செலவில் புதுப்பிக்கப் பெற்று விக்கிரம ஆண்டு, வைகாசி 13-ஆம் நாள் (26-5-1940) ரூபாய் ஏழாயிரம் (7,000) செலவில் இரண்டாம் கும்பாபிஷேகம் நிறைவெய்தியது.

திருமூக்கீச்சுரம் (உறையூர்)

பஞ்சவர்ணேசுவரர் – காந்திமதியம்மை

உதங்க முனிவருக்கு சிவபெருமான் ஐந்து யாமத்திலும் ஐந்து வர்ணங்களில் காட்சி அருளியபதி. புகழ்சோழ நாயனார்

1. ராய.சொ., திருத்தலப்பயணம், சி.வி.சிடி.வி. அறக்கட்டளை, சென்னை, 1966, பக், 3 – 4

அரசாண்ட பதி. இயற்கைக்கு மாறாக யானை ஒன்று கோழியின் மூக்கால் கொத்தப்பட்டதால் இப்பெயர் பெற்றது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ சோழ மன்னர்களின் பண்டைய தலைநகர். இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவகோட்டை வீர.ராம.சித.முரு. முருகப்ப செட்டியாரின் பெரு முயற்சியால், ரூபாய் நான்கு இலட்சம் (4,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, துந்துபி ஆண்டு, சித்திரை 21-ஆம் நாள் (3-5-22) கும்பாபிஷேகம் நிறைவெய்தியது.

திருச்சிராப்பள்ளி (மலைக்கோட்டை)

தாயுமானேசுவரர் – மட்டுவார்குழலம்மை

கருவுற்றிருந்த பெண் ஒருத்திக்கு இறைவனே தாயாக வந்த தலம். திரிசிரன் என்னும் அசுரன் மற்றும் தேவர்கள் வழிபட்ட தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலச் சிவாலயத்தில் இவ்வூர் செட்டியார் ஒருவரால் பல திருப்பணிகள் செய்யப்பெற்று சர்வதாரி ஆண்டு, தை (1889 ஜனவரி) முதல் கும்பாபிஷேகமும், நாட்டரசன் கோட்டை அரு.சு.வெ.காசி. விசுவநாதன் செட்டியாரால், இராசகோபுரம் திருப்பணி செய்யப் பெற்று, பிரபவ ஆண்டு, வைகாசி 31-ஆம் நாள் (13-6-1927) இரண்டாம் கும்பாபிஷேகமும், சித.முரு.பெரு. அவர்களின் முயற்சியால் பல திருப்பணிகளும் செய்யப்பெற்றுள்ளன.

திருவெறும்பியூர்

எறும்பீசுவரர் – நறுங்குழல்நாயகி

அசுரர்களுக்கு பயந்து தேவர்கள் எறும்பு வடிவம் எடுத்து இறைவனை வழிபட்ட தலம். தூஷணன் என்னும் அசுரனும் வழிபட்ட பதி. நாவுக்கரசர் பாடல் பெற்ற தலம்.✪ கோயில் ஒரு சிறு மலையின் மீது இருக்கிறது. இவ்வூர்ச் சிவாலயம், காரைக்குடி ராம.வீர.மு. வீரப்ப செட்டியா ரால் ரூபாய் ஐயாயிரம் (5,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

திருத்தென்குடித்திட்டை

பசுபதீசுவரர் – உலகநாயகியம்மை

தேவர்கள், வேதங்கள், முனிவர்கள் பூசித்த பதி. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ பலவான்குடி ராம.கு.ராம. இராமசாமிச் செட்டியாரால், ரூபாய் மூன்று இலட்சம் (3,00,000) செலவில் இத்தலத்திலுள்ள சிவாலயத் திருப்பணி மற்றும் திருக்குளங்கள், நந்தவனம், பசுமடம் ஆகியவை ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் செய்யப் பெற்று கர ஆண்டு, சித்திரை 7-ஆம் நாள் (20-4-1951) கும்பாபிஷேகம் ரூபாய் இருபத்தையாயிரம் (25,000) செலவில் செய்யப்பெற்றது.

திருக்குடந்தைக் காரோணம்

காசி விசுவநாதர், சோமநாதர் – காசி விசாலாட்சி, தேனார் மொழியம்மை

அம்பிகை பூசித்த பதி. நவநதிகளும் சப்த கன்னியர்களாக உருவமெடுத்து தங்கள் பாவம் தீர வழிபட்ட தலம். மகாமகப் பெருங்குளத்தின் வடகரையில் அமைந்துள்ள இக்கோயிலில் சப்த கன்னியர்களும் சிற்ப வடிவில் உள்ளனர்.[1] சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்ததலம் தற்போது விசுவநாதர் கோயில் என அழைக்கப் படுகிறது. இக்கோயில் கும்பகோணம் நாட்டுக் கோட்டை நகரத்தார் மகமைப் பணம்கொண்டு, வயிநாகரம் வெ. இராமநாதன் செட்டியார் முயற்சியால், ரூபாய் எண்பத்தையாயிரம் (85,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்றுக் கீலக ஆண்டு, தை 22-ஆம் நாள் (3-2-1909) கும்பாபிஷேகம் நிறைவெய்தியது.

திருநாகேச்சுரம்

நாகநாதேசுவரர் – குன்றமுலை நாயகி

அம்பிகை, விநாயகர், நந்தி, இந்திரன், விஷ்ணு, பிரம்மா, சூரியன், சந்திரன், நாகராசன், நளன், தர்மன் ஆகியோர் வழிபட்ட பதி. நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪ இவ்வூர்ச் சிவாலயத்தில் அரிமழம் அ.அரு. அண்ணாமலைச் செட்டியாரால் ரூபாய் ஐம்பதினாயிரம் (50,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, விபவ ஆண்டு, தை மாதம் (1929 ஜனவரி) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருவிடைமருதூர்

மகாலிங்கேசுவரர் – பெருநலமாமுலை நாயகி

அம்பிகை, பிரம்மா, திருமால், விநாயகர், முருகன், பட்டிணத்தடிகள், பத்ரகிரியார் பூசித்த பதி. நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலச் சிவாலயம் தேவகோட்டை மெ.லெ.மெ. நா. இராமநாதன் செட்டியாரால் ரூபாய் எட்டு இலட்சம் (8,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, விசுவாவசு ஆண்டு, ஐப்பசி 23-ஆம் நாள் (8-11-1905) முதல் கும்பாபிஷேகமும், நள ஆண்டு, ஆனி 27-ஆம் நாள் (8-7-1916) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

திருவைகன் மாடக்கோவில்

வைகனாதேசுவரர் – வைகலாம்பிகை

பிரம்மாவும், சூரியனும், திருமாலும், திருமகளும் மற்றும் தேவர்களும் மட்டுமின்றி ஈசலும், யானையும் பூசித்த பதி

1. நடன. காசிநாதன், மா. சந்திரமூர்த்தி, கும்பகோணமும் – மகாமகப் பெருவிழாவும், தொல்லியல் துறை வெளியீடு, சென்னை, 1992, பக் 41 – 42.

✪ மா. சந்திரமூர்த்தி, தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி – 2, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை,2004.

சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இக் கோயில், தேவகோட்டை ராம.மெ.லெ.ராம. இராமநாதன் செட்டியாரால் திருப்பணி செய்யப் பெற்று, பிலவங்க ஆண்டு, ஆனி 13-ஆம் நாள் (27-6-1907) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருத்துருத்தி (குத்தாலம்)

வேதேசுவரர் – முகிழாம்பிகை

இறைவன் வேதம் உரைத்த தலம். சுந்தரர் உடற்பிணி போக்கியத் தலம். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪இத்தலச் சிவாலயம் தேவகோட்டை இராம.அரு.இராம.வெ. அவர்களால் ரூபாய் இருபத் தையாயிரம் (25,000) செலவில் சீர்திருத்தப் பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருமயிலாடுதுறை (மாயூரம்)

மாயூரநாதேசுவரர் – அபயாம்பிகை

அம்பிகை மயில் உரு கொண்டு பூசித்த தலங்கள் இரண்டு. அதில் தொண்டை நாட்டு மயிலாப்பூர் வடமயிலை என்றும், சோழநாட்டு மயிலாடுதுறை தென்மயிலை என்றும் வழங்கப்படுகிறது.[1] மற்றும் திக் பாலகர்கள் வணங்கிய பதி. நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலச் சிவாலயம், தேவகோட்டை அழ. வீர.பெ.வீர. வெங்கடாசலம் செட்டியாரால் ரூபாய் இருபத்திரண்டாயிரம் (22,000) செலவில் ரௌத்திரி ஆண்டு, சித்திரை 13-ஆம் நாள் (25-4-1920) அம்மன் கோவில் கும்பாபிஷேகமும், அவர் மகன்கள் பெத்த பெருமாள் செட்டியார், வீரப்ப செட்டியார் இருவராலும், ரூபாய் இரண்டு இலட்சம் (2,00,000) செலவில் சில திருப்பணிகள் செய்யப் பெற்று ரூபாய் இலட்சத்துப் பத்தாயிரம் (1,10,000) செலவில் விபவ ஆண்டு, ஆவணி 18-ஆம் நாள். (2-9-1928) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

திருக்கடவூர் வீரட்டம்

அமிர்தகடேசுவரர் – அபிராமியம்மை

சிவபெருமானின் அட்ட வீரட்ட தலங்களில் ஒன்று. மார்க்கண்டேயனுக்காக காலனை உதைத்த தலம். அபிராமி அந்தாதி இத்தல நாயகிக்கு அபிராம பட்டரால் பாடப்பட்டது. சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூரில் ரூபாய் பத்தாயிரம் செலவில் (10,000) கோனாப்பட்டு சுப.கு. சொக்கலிங்கம் செட்டியாரால் நந்தவனம்ள அமைக்கப் பட்டுள்ளது.

1. மா. சந்திரமூர்த்தி, தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி – 2, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை,2004.பக் – 148.

திருவேட்டக்குடி

திருமேனியழகேசுவரர் – சாந்த நாயகி

அர்சுணனின் தவத்தைக் காண இறைவன் கிராத வேடமாக வேடன் வடிவத்தில் தோன்றிய பதி. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪இவ்வூர்ச் சிவாலயம் தேவகோட்டை ராம.மெ. இலக்குமணன் செட்டியாரால் ரூபாய் இரண்டு இலட்சம் (2,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, நந்தன ஆண்டு, ஆனி 22-ஆம் நாள் (4-7-1892) முதல் கும்பாபிஷேகமும், பிரமோதூத ஆண்டு, ஆனி 23-ஆம் நாள் (7-7-1930) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

கோயிற்பத்து (திருத்தெளிச்சேரி)

பார்வதீசுவரர் – சத்தியம்மை

அம்பிகை பூசித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இக்கோயில் தேவகோட்டை சேவு. ராம. சேவுகன் செட்டியார், அருணாசலம் செட்டியார், அ.வயி.அ.நா. சோமசுந்தரம் செட்டியார் இவர்களால் ரூபாய் இரண்டு இலட்சம் (2,00,000) செலவில் புதிதாய்த் திருப்பணி செய்யப் பெற்று, பிங்கள ஆண்டு, வைகாசி 21-ஆம் நாள் (3-6-1917) முதல் கும்பாபிஷேகமும், தாரண ஆண்டு, ஆனி 20-ஆம் நாள் (3-7-1944) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

திருத்தருமபுரம்

யாழ்மூரிநாதேசுவரர் – தேனமிர்தவல்லி

திருக்கடையூரில் செய்த பாவம் நீங்க எமதர்மன் வழிபட்ட பதி. ஞானசம்பந்தப் பெருமானின் யாழ்மூரிப் பதிகம் பெற்ற அற்புதத்தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ சுவாமி, அம்மன் திருக்கோயில்கள், சுற்றுக் கோயில்கள் எல்லாம், ரூபாய் எழுபத்தையாயிரம் (75,000) செலவில், தேவ கோட்டை அருஅரு. சோம. செட்டியாரால் திருப்பணி செய்யப் பெற்று, சாதாரண ஆண்டு, ஆவணி 31-ஆம் நாள் (15-9-1910) கும்பாபிஷேகம் நிறைவெய்தியது.

திரு அம்பர்மாகாளம்

காளகண்டேசுவரர் – பட்ச நாயகி

மகா காளர் பூசித்து சூரபதுமனின் தங்கையான அஜமுகியின் உறுப்புக் குறைத்த தலம். இது கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில்களில் ஒன்று. கோயிலுக்குப் பெருந்திருக்கோயில் என்று பெயர். இத்தலத்தில் உள்ள காட்சி கொடுத்த நாயனார்

திருமேனி சோழர் காலத்திய அபூர்வ படிமமாகும். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத் தலத்தில், அம்மன் கோயில் பள்ளத்தூர் க.ப. குமரப்ப செட்டியாரால் ரூபாய் ஐம்பதினாயிரம் (50,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, பிங்கள ஆண்டு, வைகாசி 21-ஆம் நாள் (3-6-1917) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருத்திலதைப்பதி (மதிமுத்தம்)

முத்தீசுவரர் – பொற்கொடியம்மை

இராம - இலக்குவணர்கள் தசரதன், ஜடாயு இவர்களுக்கு எள் தர்ப்பணம் (திலம் - எள்) செய்து முக்தி கிடைக்கச் செய்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலக் கோயில் தேவகோட்டை ராம.மெ.லெ. இராமநாத செட்டியாரால் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, விரோதிகிருது ஆண்டு, ஆனி மாதம் கும்பா பிஷேகம் செய்யப்பெற்றது.

திருவீழிமிழலை

வீழியழகேசர் – சுந்தரகுசாம்பிகை

திருமால் தாமரை மலருக்குப் பதிலாக தன் தாமரைக் கண்ணையே அர்ப்பணித்து சக்ராயுதம் பெற்ற தலம். அம்பிகை கார்தியாயண முனிவரின் மகளாகப் பிறந்து கார்த்தியாயிணியாக இறைவனைத் திருமணம் செய்த பதி. பஞ்சம் வந்த காலத்தில் இறைவன் தினமும் நாவுக்கரசருக்கும் சம்பந்தருக்கும் படிக்காசு அருளிய தலம்.[1] நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத் திருக்கோயில் தேவகோட்டை ராம.அரு.அரு. சத்திரம் அருணாசலம் செட்டியாரால் திருப்பணி செய்யப் பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திரு அரிசிற்கரைப்புத்தூர்

படிக்காசளித்த ஈசர் – அழகாம்பிகை

புகழ்த்துணை நாயனாருக்குப் பொற்காசு அளித்த இடம். அவர் முக்தி பெற்ற தலமும் இதுவே. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர்ச் சிவாலயம் தேவகோட்டை இராம.மெ.லெ. இராமநாதன் செட்டியார், நேமத்துப்பட்டி மெ.மு. பழ.பழநியப்ப செட்டியார் இவர்களால் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, குரோதன ஆண்டு, ஆனி 25-ஆம் நாள் (8-7-1925) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

---

1. மா. சந்திரமூர்த்தி, தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி – 2, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை,2004. பக் – 183.

திருக்கலயநல்லூர்

அமிர்தகலேசுவரர் – அமிர்தவல்லி

பிரளய காலத்தில் இறைவன் படைப்புக்குரிய பொருள்களை இட்ட கலயம் தங்கிய இடம். அமுதக்குடம் பெற்ற மகிழ்ச்சியில் தேவர்கள் பூசித்த பதி. சுந்தரர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர்ச் சிவாலயம் காரைக்குடி முத்த. வெ. வெள்ளையன் செட்டியாரால் ரூபாய் பதினையாயிரம் (15,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்றுக் குரோதன ஆண்டு, ஆவணி 20-ஆம் நாள் (4-9-1925) கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

திருப்புகலூர்

அக்கினீசுவரர் – கருந்தாள்குழலி

எல்லாப் பொருள்களையும் உண்ட தோஷம் நீங்க அக்கினி வணங்கிய தலம். நாவுக்கரசர் முக்தி பெற்ற தலம். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் காரைக்குடி பெரி.ஆ. அருணாசலம் செட்டியாரால் பசுமடம் நிறுவப்பெற்றுள்ளது.

திருவிற்குடி

வீரட்டானேசுவரர் – மைவார்குழலியம்மை

இறைவனின் அட்ட வீரட்டானங்களுள் ஒன்று. சிவபெருமான் சலந்தாசுரனை அழித்த பதி. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலச் சிவாலயம் பள்ளத்தூர் சொ.மு.அ.மெ. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் ஆறு லட்சம் (6,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, பிரசோற்பத்தி ஆண்டு, சித்திரை 17-ஆம் நாள் (30-4-1931) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருச்செங்காட்டாங்குடி

கணபதீசுவரர் – திருக்குழல் நாயகி

கஜமுகாசுரனைக் கொன்ற பாவம் தீர விநாயகப்பெருமான் வழிபட்ட தலம். பைரவ வடிவத்தில் தோன்றிய சிவ பெருமானுக்காக தன் மகனான சீராளனை அறுத்து, கறி சமைத்து படைத்த சிறுதொண்ட நாயனார் முக்தி பெற்ற தலமும் இதுவே. நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ காரைக்குடி மெ.செ. குடும்பத்தினர் ரூபாய் இருபத்தையாயிரம் (25,000) செலவில் இக் கோயிலில் திருப்பணிகள் செய்து 1897-ஆம் வருடம் கும்பாபிஷேகம் செய்துள்ளனர்.

திருமருகல்

மாணிக்கவண்ணேசுவரர் – வண்டுவார்குழலம்மை

ஞான சம்பந்த பெருமான் பதிகம் பாடி பாம்பு கடித்து இறந்த வணிகனை உயிர்ப் பெறச்செய்த தலம். நாவுக்கரசர், சம்பந்தர்

பாடல் பெற்ற தலம்.✪ இத்தலச் சிவாலயம் தேவகோட்டை ராம.மெ. சித.வயி. இராமநாதன் செட்டியாரால் ரூபாய் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் (1,20,000) செலவில் புதிதாய்த் திருப்பணி செய்யப்பெற்று, மன்மத ஆண்டு, சித்திரை மாதம் (1825 ஏப்பிரல்) முதல் கும்பாபிஷேகமும், அவர் மகன் வைரவன் செட்டியாரால் ரூபாய் பத்தாயிரம் (10,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, குரோதன ஆண்டு, ஆவணி 21-ஆம் நாள் (5-9-1925) இரண்டாம் கும்பாபிஷேகமும், கும.கரு.கரு. வகையினரால் திருக்குளமும், விடந்தீர்த்த விநாயகர் கோயிலும், ரூபாய் பதினையாயிரம் (15,000) செலவில் அமைக்கப் பெற்று, சுபானு ஆண்டு, வைகாசி 30-ஆம் நாள் (13-6-43) மூன்றாம் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

திருச்சாத்தமங்கை

அயவந்தீசுவரர் – மலர்க்கண்ணம்மை

திருநீல நக்க நாயனார் முக்திப் பெற்ற தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலச் சிவாலயம் கடியாபட்டி பி.கு.நா. நாகப்ப செட்டியாரால் ரூபாய் ஏழு இலட்சம் (7,00,000) செலவில் புதிதாய்த் திருப்பணி செய்யப்பெற்று, விபவ ஆண்டு, ஆவணி 3-ஆம் நாள் (26-8-1928) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருநாகைக்காரோணம் (நாகப்பட்டினம்)

காயாரோகணேசுவரர் – நீலாயதாட்சி

சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. புண்டரீக முனிவரை இறைவன் காயத்துடன் (உடலுடன்) ஆலிங்கனம் செய்த பதி. அதிபத்த நாயனார் முக்தி பெற்ற தலம். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்திலுள்ள சிவாலயம் நாகப்பட்டினம் நாட்டுக் கோட்டை நகரத்தார்களால், மிகுந்த பொருட் செலவில் புதுத் திருப்பணிகள் செய்யப்பெற்றுள்ளது.

திருச்சிக்கல்

வெண்ணெயிலிங்கேசுவரர் – வேனெடுங்கண்ணியம்மை

வசிட்டர் காமதேனுவை பெற வேண்டி வெண்ணையால் லிங்கம் அமைத்து வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்✪. இவ்வூர் சிங்கார வடிவேலர் கோயில் ஆ. தெற்கூர் கரு.முத்து. அழகப்ப செட்டியார் குடும்பத்தின் பொது நிதியிலிருந்து இப்பாகத்தினர் ஒருவராகிய அழகப்ப செட்டியாரால் பல திருப்பணிகள் செய்யப்பெற்றும் பல திருவாபரணங்கள், வாகனங்கள் அமைக்கப்பெற்றும் ஸ்ரீமுக ஆண்டு, வைகாசி 23 -ஆம் நாள் (5-6-1933) கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

✪ மா. சந்திரமூர்த்தி, தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி – 2, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை,2004.

திருப்பள்ளியின் முக்கூடல்

முக்கோண நாதர் – மைமேவு கண்ணியம்மை

மூர்க்க ரிஷி வழிபட்ட தலம். நாவுக்கரசர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம் தேவகோட்டை அழ.சுப.சு. சுப்பையா செட்டியாரால் ரூபாய் அறுபதினாயிரம் (60,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று 1903-ஆம் வருடம் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருவாரூர்

வன்மீகநாதர் – அல்லியங்கோதையம்மை

சப்த விடங்கத் தலங்களில் முதன்மைப் பெற்றது. சுந்தரருக்காக இறைவன் தூது சென்று பரவையாரை திருமணம் முடித்தது இத்தலம். விறன்மிண்டர், நமிநந்தி, செருத்துணை, தண்டி, கழற்சிங்கர் முதலிய நாயன்மார்கள் முக்தி பெற்ற தலம். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள கோயில் தேவகோட்டை ராம.அரு.அரு. சத்திரம் அருணாசலம் செட்டியார், அவர் மகன் இராமநாதன் செட்டியார் ஆகியவர்களால் திருப்பணி செய்யப்பெற்று விஜய ஆண்டு, ஆனி (1893 ஜூன்)யில் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது.

திருவிளமர்

பதஞ்சலி மனோகரேசுவரர் – யாழினு மென்மொழியம்மை

பதஞ்சலி முனிவர் பூசித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலக் கோயில் தேவகோட்டை வீர.லெ. சின்னையா செட்டியாரால், திருமதில் உள்பட எல்லாக் கோயில் திருப்பணி களும் புதிதாகச் செய்யப்பெற்று, கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருக்கரவீரம்

கரவீரேசுவரர் – பிரத்தியட்சமின்னம்மை

பிரம்மனும், கௌதம முனிவரும் வழிபட்ட பதி. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள நடராசர் - சிவகாமி திருமேனிகள் புகழ் பெற்றவை. பராந்தக சோழன் காலத்தவை.[1] இத்தலச் சிவாலயம் தேவகோட்டை ராம.அரு.அரு.ராம. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று ஸ்ரீமுக ஆண்டு, ஆவணி 17-ஆம் நாள் (1-9-1938) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

1.R.Nagaswamy, A Nataraja Bronze and inscribed Uma from Karaiviram village, Lalit Kala, No.19, pp 17.

திருச்சேறை

செந்நெறியப்பர் – ஞானவல்லி

தௌமிய முனிவர் பூசித்த பதி. நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலக் கோயில் தேவகோட்டை மெ.வ. விசுவநாதன் செட்டியார், தியாகராசன் செட்டியார், மாணிக்கம் செட்டியார் ஆகியவர்களால், திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

திருப்பெருவேளூர்

பிரியாயீசுவரர் – மின்னனையாளம்மை

மோகினியாக அவதரித்த திருமால் மோகினித் தன்மை நீங்கவும், முருகப்பெருமானும் வழிபட்ட தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪இவ்வூர்ச் சிவாலயம் தேவகோட்டை ராமஅருஅருராம. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, பிரசோற்பத்தி ஆண்டு, ஆனி 17-ஆம் நாள் (1-7-1931) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

சொர்ணபுரீசுவரர் – சிவாம்பிகை

பாண்டிய மன்னன் ஒருவனின் கரடி வடிவம் நீங்கி சாப விமோசனம் பெற்ற தலம். நாவுக்கரசர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர்ச் சிவாலயம் தேவகோட்டை பழ.செ. குடும்பத்தாரால் ரூபாய் மூன்று இலட்சம் (3,00,000) செலவில் புதிதாய்த் திருப்பணி செய்யப்பெற்று, ஆனந்த ஆண்டு, ஆனி 27-ஆம் நாள் (10-7-1914) முதல் கும்பாபிஷேகமும், தாரண ஆண்டு, ஆனி 20-ஆம் நாள் (3-7-44) ரூபாய் பதினேழாயிரம் (17,000) செலவில் இரண்டாம் கும்பா பிஷேகமும் செய்யப்பெற்றன.

திருஇரும்பூளை (ஆலங்குடி)

காசி ஆரணியேசுவரர் – ஏலவார் குழலியம்மை

விசுவாமித்திர மகரிஷி வணங்கிய பதி. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம் தேவகோட்டை பழ.செ. இலக்குமணன் செட்டியர், பழநியப்ப செட்டியார், அ.கண.வீரப்ப செட்டியார், நாட்டரசன்கோட்டை அரு.ஆ. ஆறுமுகம் செட்டியார், தேவகோட்டை ஆ.வி.க. மெய்யப்ப செட்டியார், பெரி.லெ.வெ. குடும்பத்தார், மகிபாலன்பட்டி அழகரு. கருப்பன் செட்டியார், தேவகோட்டை நகரத்தார் சிலர், வேகுப்பட்டி நகரத்தார், பிள்ளையார்பட்டி நகரத்தார், கல்லல் நகரத்தார், கானாடுகாத்தான் இராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார், ஆகிய இவர்களால் ரூபாய் நான்கு இலட்சத்து

எழுபத்தையாயிரம் (4,75,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, பிரமோதூத ஆண்டு, வைகாசி 19-ஆம் நாள் (1-6-1930) கும்பாபிஷேகம் சிறப்புறச் செய்யப்பெற்றது.

திருஅவளிவள்நல்லூர்

சாட்சிநாயகேசுவரர் – சவுந்தரநாயகி

வராக அவதாரத்தில் திருமால் பூசித்த தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪ இத்தலக் கோயில் காரைக்குடி மெ.மெ. மெய்யப்ப செட்டியார், நேமத்தான்பட்டி மு.பெ.காசி செட்டியார், கோட்டையூர் க.வீ.சொ. அழகப்ப ஐயா ஆகியவர்களால் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

திருவெண்ணியூர்

வெண்ணிக்கரும்பர் – அழகியநாயகி

தத்தாத்ரேயர் பூசித்த பதி. இலிங்கம் கரும்புக் கழிகளைக் கட்டி வைத்தது போன்ற தோற்றத்துடன் காணப்படும். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர்க் கோயில் தேவகோட்டை மெ.சித.வயி. இராமநாதன் செட்டியாரால் ரூபாய் எழுபதினாயிரம் (70,000) செலவில் புதிதாகத் திருப்பணி செய்யப்பெற்று, விளம்பி ஆண்டு, தை மாதம் (1899-ஜனவரி) முதல் கும்பாபிஷேகமும், பின்னர் அவர் மகன் வைரவன் செட்டியாரால் திருப்பணி செய்யப் பெற்று ருத்ரோத்காரி ஆண்டு, ஆவணி 8-ஆம் நாள் (24-8-1923) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

திருப்பூவனூர்

புஷ்பவனநாதர் – கற்பகவல்லி

சுகர் முனிவர் பூசித்த தலம்.[1] நாவுக்கரசர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர் காரைக்குடி பனை. மெ.மெ. பழனியப்ப செட்டியாரால் ரூபாய் இருபதாயிரம் (20,000) செலவில் நந்தவனம், பசுமடம், அந்தணர் உறையுள் முதலியன அமைக்கப்பட்டது.

திருப்பாதாளேச்சுரம்

நாகநாதர் – அமிர்தநாயகி

ஆதிசேஷன் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்✪. இத்தலத்தில் உள்ள சிவாலயம் ஒக்கூர் சி.கரு.சி.லெ. இலக்குமணன் செட்டியாரால் ரூபாய் மூன்று இலட்சம் (3,00,000) செலவில் சிறப்புறத் திருப்பணி செய்யப்பெற்று, யுவ ஆண்டு, ஆவணி 30-ஆம் நாள் (15-9-1935) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

---

1. அ.நடராஜன், ஸ்ரீசுகப்பிரம்ம மகரிஷி, வெளியிடப்பெறாத நூல், 2006, பக் – 46.

✪ மா. சந்திரமூர்த்தி, தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி – 2, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை,2004.

திருக்களர்

களர்முளைநாதேசுவரர் – அழகேசுவரியம்மை

துர்வாசர், பராசரர், களர் போன்ற முனிவர்கள் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம் கோவிலூர் வீர சேகரஞான தேசிகர் பெருமுயற்சியால், நகரத்தார் பொருளுதவி கொண்டு ரூபாய் மூன்றரை இலட்சம் (3,50,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, விரோதிகிருது ஆண்டு, சித்திரை 22-ஆம் நாள் (4-5-1911) முதல் கும்பாபிஷேகமும், ஸ்ரீ மகாதேச ஞானதேசிகர், கோட்டையூர் க.வீ.சொ. அழகப்ப செட்டியார் இவர்கள் முயற்சியால் ஸ்ரீமுக ஆண்டு வைகாசி 30-ஆம் நாள் (12-6-1933) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

திருவுசாத்தானம்

மந்திரபுரீசுவரர் – பெரியநாயகியம்மை

இராமபிரான் போருக்கு இலங்கை செல்லும் முன் சிவபெருமானிடம் உசாவிய தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள அம்மன் கோயில் கொத்தமங்கலம் அழ.அரு. காசிச் செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

திருத்தண்டலை நீணெறி

நீணெறிநாதேசுவரர் – ஞானாம்பிகை

திருமாலின் கூர்ம அவதாரத்தின் போது ஆமையின் வேகத்தை அடக்கி அதன் ஓட்டை சிவபெருமான் அணிந்த தலம். அரிவட்டாய நாயனார் முக்தி பெற்ற தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவகோட்டை ராம. அரு. அரு. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, விகாரி ஆண்டு, தை 23-ஆம் நாள் (4-2-1900) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருவெண்டுறை (திருவண்டுதுறை)

வெண்டுறைநாதேசுவரர் – வேனெடுங்கண்ணியம்மை

பிருங்கி முனிவர் வண்டு உருவெடுத்து சிவபெருமானை மட்டும் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்✪. இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவகோட்டை மெ. குடும்பத்தாராலும், ராமஅருஅரு. சோமசுந்தரம் செட்டியாராலும், ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று ஆனந்த ஆண்டு, ஆனி 23-ஆம் நாள் (6-7-1914) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருக்கொள்ளம்புதூர்

வில்வவனேசுவரர் – சவுந்தராம்பிகை

விநாயகர்,பிரம்மன், கங்கை, காவேரி மற்றும் முனிவர்கள், தேவர்கள், சித்தர்கள் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம், நற்சாந்துப்பட்டி பெ.ராம. இராமன் செட்டியாரால் ரூபாய் ஆறு லட்சம் (6,00,000) செலவில் மிக அழகான முறையில் திருப்பணி செய்யப்பெற்று, அவர் மகன்கள் இராமநாதன் செட்டியார், இலக்குமணன் செட்டியார், சிதம்பரம் செட்டியார் ஆகியவர்களால் ஈசுவர ஆண்டு, ஆனி 14-ஆம் நாள் (27-6-1937) ரூபாய் நாற்பதாயிரம் (40,000) செலவில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருப்பேரெயில்

சகதீசுவரர் – சகந்நாயகி

வருணன் பூசித்த தலம். நாவுக்கரசர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலக் கோயில், காரைக்குடி அ.ராம.கதி. இராமசாமி செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்று, ஈசுவர ஆண்டு, பங்குனி 24-ஆம் நாள் (6-4-38) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருக்கொள்ளிக்காடு

அக்கினீசுவரர் – பஞ்சினு மெல்லடியம்மை

அக்கினி பூசித்த தலம். சன்னிதிக்கு எதிரில் மயானம் உள்ளது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர்ச் சிவாலயம் தேவகோட்டை மெ. குடும்பத்தாரால் ரூபாய் ஐம்பதினாயிரம் (50,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று விகுருதி (1890) வருடத்தில் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருத்தெங்கூர்

வெள்ளிமலை நாதேசுவரர் – பெரியநாயகியம்மை

திருமகள், அரிஅரபுத்திரர், நவக்கிரகங்கள் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம் கண்டனூர் பெ.அழ. வீரப்ப செட்டியாரால் ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் (2,50,000) செலவில் புதிதாய்த் திருப்பணி செய்யப்பெற்று, விரோதிகிருது ஆண்டு, வைகாசி 19-ஆம் நாள் (1-6-1911) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருநெல்லிக்கா

நெல்லிவனநாதேசுவரர் – மங்களநாயகியம்மை

சூரியன், பிரம்மன் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற

தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம் தேவகோட்டை வீர.ராம.சு. சொக்கலிங்கம் செட்டியாரால் ரூபாய் எழுபதினாயிரம் (70,000) செலவிலும், அழகாபுரி சு.பெரி.சு. சுப்பிரமணியன் செட்டியாரால் ரூபாய் எட்டாயிரம் (8,000) செலவிலும், அரிமளம் பழ.வ. முத்தடைக்கப்ப செட்டியாரால் ரூபாய் பதினாறாயிரம் (16,000) செலவிலும், திருப்பணி செய்யப்பெற்றுச் சார்வரி (1900) வருடம் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருநாட்டியத்தான்குடி

மாணிக்க வண்ணர் – மலை மங்கை

புகலக முனிவரும், ஏமகண்ட முனிவரும், யானையும் வணங்கிய தலம். கோட்புலி நாயனார் முக்தி பெற்ற தலம். சுந்தரர் பாடல் பெற்ற தலம்.✪இத்தலத்தில் உள்ள சிவாலயம் தேவகோட்டை வெ.தெ. அண்ணாமலைச் செட்டியார், முத்தையாச் செட்டியார், இலக்குமணச் செட்டியார் ஆகியவர்களால் திருப்பணி செய்யப் பெற்றுப் பிலவங்க ஆண்டு, வைகாசி 10-ஆம் நாள் (23-5-1907) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருக்காறாயில் (திருக்காரை வாசல்)

கண்ணாயிரநாதேசுரர் – கைலாய நாயகி

சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று.முசுகுந்தன் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம் தேவகோட்டை முத்து.கரு.அரு., முத்து.க.மா., முத்து க.அ.லெ., குடும்பத்தினரால் திருப்பணி செய்யப் பெற்றுப் பிங்கள ஆண்டு, தை 10-ஆம் நாள் (23-1-1918) முதல் கும்பாபிஷேகமும், விகுருதி ஆண்டு, தை 29-ஆம் நாள் (11-2-1951) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

திருமறைக்காடு (வேதாரண்யம்)

மறைக்காட்டீசுவரர் – யாழைப்பழித்த மொழியம்மை

சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. வேதங்களே இறைவனை இத்தலத்தில் பூசித்தன.வேதங்களால் மூடப்பட்ட இந்த கதவுகளைப் பதிகம் பாடிநாவுக்கரசர் திறக்கவும், ஞானசம்பந்தர் மூடவும் செய்த அற்புதத் தலம்.பிரம்மா வேத மூலமாக தன் படைப்புத் தொழிலை முதன் முதலில் தொடங்கிய இடம். காயத்திரி மந்திரத்தை உலகுக்கு அருளிய விசுவாமித்திரர் பிரம்ம ரிஷி என அழைக்கபட்ட இடம். அகத்தியருக்கு இறைவன் மணக்கோலம் காட்டிய பதி. நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம், ஒக்கூர் வீர.ராம.நா.ராம. இராமநாதன் செட்டியாரால் ரூபாய் எழுபதி னாயிரம் (70,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

திரு அகத்தியான்பள்ளி

அகத்தீசுவரர் – பாகம் பிரியாநாயகி

இறைவனுக்கும் இறைவிக்கும் நடந்த திருமணத்தை அகத்தியருக்கு காட்டிய பதி. மான் பூசித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயத்தில் தேவகோட்டை மெஅருநா. இராமநாதன் செட்டியார், மெஅருஅரு. அருணாசலம் செட்டியார் இவர்களால் ரூபாய் இரண்டு இலட்சம் (2,00,000) செலவில் திருப்பணியும், ராம.அரு.அரு. செட்டியாரால் ரூபாய் ஏழாயிரம், உட்பட பழ.சோம.செட்டியாரால் ரூபாய் முப்பத் தேழாயிரம் (37,000) செலவில், திருப்பணியும் ஸ்ரீமுக ஆண்டு, ஆனி 23-ஆம் நாள் (6-7-1933) முதல் கும்பாபிஷேகமும், ரூபாய் பதினையாயிரம் (15,000) செலவில் பவ ஆண்டு, ஆனி 24-ஆம் நாள் (8-7-1934) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன. சோழ நாட்டுத் திருப்பணிக்கு நகரத்தார் அறசெயல்களின் மொத்த ரூபாய் 2,96,43,500 ஆகும். [1]

பாண்டி நாட்டுத் தலங்கள்

திரு ஆலவாய் (மதுரை)

சொக்கநாதர் – மீனாட்சியம்மை

இறைவனின் பஞ்ச சபைகளில் வெள்ளி அம்பலமாக விளங்கும் சபை. எழுவகை தாண்டவத்தில் சந்தியா தாண்டவ தலமாக விளங்குகிறது. இராஜசேகர பாண்டியனுக்காக இறைவன் கால்மாறி ஆடிய தாண்டவம் இத்தலத்து சிறப்பு. சிவபெருமான் 64 திருவிளையாடல்களை நிகழ்த்திய இடம். ஞான சம்பந்த பெருமான் அனல் வாதம் - புனல்வாதம் செய்து சைவத்தை நிலைநாட்டிய தலம். நின்றசீர் நெடுமாறன், குலச்சிறையார், மங்கையர்கரசியார் ஆகிய நாயன்மார்கள் முக்தி பெற்ற தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்துச் சிவாலயத்தில், அமராவதிப்புதூர் வயிநாகரம் நாகப்பையா, வேங்கடாசல ஐயா, அண்ணாமலைச் செட்டியார், முத்தையா செட்டியார் என்ற சுப்பிரமணியன் செட்டியார் இவர்களால், சுவாமி கோயில் முதல் பிரகாரம், இரண்டாம் பிரகாரம் தளவரிசைகள், ஆடி வீதித் தளவரிசை, சுவாமி - அம்மன் தங்க விமானம், தங்கம், வெள்ளி, வாகனங்கள், திருவாபரணங்கள், பல மண்டபங்கள், அம்மன் தேர் முதலியன அமைக்கப்பெற்றும், மொட்டைக் கோபுரம் முழுக்கோபுரமாக அமைக்கப்பெற்று, ஈசுவர ஆண்டு, தை 26-ஆம் நாள் (6-2-1878), ருத்ரோத்காரி ஆண்டு, ஆனி 17-ஆம் நாள் (1-7-1923) இந்த நாள்களில் கும்பாபிஷேகங்கள் நிகழ்ந்தன.

1. அ. இராமநாதன் செட்டியார், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, பக் – 214.

இக்கோயிலுக்கு வயிநாகரம் குடும்பத்தார் ரூபாய் இருபத்தைந்து இலட்சம் (25,00,000) செலவிட்டிருக்கின்றனர்.

திரு ஆப்பனூர்

ஆப்பனூரீசுவரர் – குரவங்கமழ் குழலம்மை

பாண்டிய மன்னன் ஒருவனுக்காக இறைவன் குதிரைக்கட்டிய ஆப்பு ஒன்றில் தரிசனம் அளித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம், அமராவதிப்புதூர் வயிநாகரம் நாகப்ப ஐயா, வேங்கடாசல ஐயா இவர்களால் ரூபாய் முப்பத் தேழாயிரம் (37,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, விஷு ஆண்டு, ஆவணி 5-ஆம் நாள் (19-8-1881) முதல் கும்பாபிஷேகமும், மேலும், திருப்பணிகள் சில செய்யப்பெற்றுக் காளயுக்தி ஆண்டு, ஆனி 14-ஆம் நாள் (27-6-1918) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப் பெற்றன.

திருப்பரங்குன்றம்

பரங்கிரிநாதர் – ஆவுடைநாயகி

முருகப்பெருமான், திருமால், பிரம்மன், தேவலோக மருத்துவர்களான அசுவினிதேவர்கள், அஷ்ட வசுக்கள், அட்ட திக் பாலகர்கள் வழிபட்ட தலம். சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ தற்போது வழிபாட்டில் உள்ள குடைவரைக்கோயில் கி.பி. 8 - ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆட்சி செய்த மாறன் சடையன் சேனாபதி சாத்தன் கணபதியால் குடைவிக்கப்பட்டது. இது சிவன், திருமால், துர்க்கை, கணபதி, சுப்பிரமணியர் கருவறைகளைக் கொண்ட மிகப்பெரிய கோயில்.[1] இத்தலத்தில் உள்ள சிவாலயம் வயிநாகரம் நாகப்ப ஐயா, வேங்கடாசல ஐயா, இவர்கள் குடும்பத்தினரால் திருப்பணி செய்யப் பெற்று நந்தன ஆண்டு, தை 19-ஆம் நாள் (30-1-1893) கும்பாபிஷேகம் செய்யப்பட்டது

திரு ஏடகம்

ஏடகநாதேசுவரர் – நறுங்குழல் நாயகி ஏலவார்குழலி

ஞானசம்பந்த பெருமான் சமணர்களை வாதில் வெற்றிக் கொள்ள வைகையாற்றில் இட்ட ஏடு நீரை எதிர்த்து கரை ஏறிய இடம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவகோட்டை உ.ராம.மெ.சு. பெரிய சேவுகன் செட்டியார், சின்னச் சேவுகன் செட்டியார், மெய்யப்ப செட்டியார் இவர்களால் ரூபாய் ஏழு இலட்சம் (7,00,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று, பிரமோதூத ஆண்டு, வைகாசி 26-ஆம் நாள் (8-6-1930) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றுள்ளது.

---

1. சு.இராசவேல் – அகி.சேக்ஷாத்திரி, தமிழ்நாட்டுக் குடைவரைக் கோயில்கள், பக் 105

திருப்புத்தூர்

புத்தூரீசுவரர் – சிவகாமியம்மை

சிவபெருமான் கௌரி தாண்டவம் ஆடிய தலம்.[1] கௌரி வணங்கியதால் இத்தலம் கௌரிபுரம் என்றும் வழங்கப்படுகிறது. முற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள் ஸ்ரீதளி, திருத்தளி எனக் குறிக்கின்றன. கி.பி. 9 - ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் 'கொழுவூர் கூற்றத்து மீகுண்டாற்றுப் பிரம்மதேயம் திருப்புத்தூர்' என்று இவ்வூரைக் குறிக்கிறது.[2] திருமகள், சந்திரன் வழிபட்ட தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள அம்மன் கோயில், அமராவதிப்புதூர் வயிநாகரம் குடும்பத்தினர், பள்ளத்தூர் க.ப. குமரப்ப செட்டியார், கண்டவராயன் பட்டி பழ.கரு. குடும்பத்தினர் ஆகியவர்களால் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று, சார்வரி ஆண்டு தை 27-ம் நாள் (8-2-1901) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருப்புனவாயில்

பழம்பதிநாதேசுவரர் – கருணை நாயகியம்மை

வேதங்கள் பூசித்த தலம். இத்தலத்து சிவலிங்கம் மிகப் பெரியது. சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவகோட்டை அழ.சுப.பழ. குடும்பத்தினரால் திருப்பணி செய்யப்பெற்று, சோபகிருது ஆண்டுக் வைகாசி 18-ஆம் நாள் (31-5-1903) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. திருப்பணி, கும்பாபிஷேகச் செலவு ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் (1,60,000) ஆகும்.

திருஇராமேச்சுவரம்

இராமநாதேசுவரர் – பருவதவர்த்தனி

12 ஜோதிர்லிங்க தலங்களில் 11 தலங்கள் வடநாட்டில் அமைந்திருக்க தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் ஒரே தலம். இராவணனைக் கொன்ற பிரம்மஹத்தி தோஷம் நீங்க சீதா பிராட்டியால் ஸ்தாபிக்கப்பட்டு,இராமபிரானால் பூசிக்கப் பெற்ற இலிங்கம். கோயிலுக்குள்ளேயே 22 தீர்த்தங்கள் அமைந்திருக்கும் ஒரே தலம். இதன் மூன்றாம் பிரகாரம் உலகப் புகழ் பெற்றது. நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவகோட்டை அழ.அரு. குடும்பத்தினரால் திருப்பணி செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

---

1. மயிலை சீனி வேங்கடசாமி, இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், (பதி) கே.அண்ணாமலை, மயிலாப்பூர், சென்னை, 1948, பக் – 43.
2. வள்ளி சொக்கலிங்கம், திருப்புத்தூர், தொல்லியல் துறை வெளியீடு, சென்னை, 1981, பக் – 3.

திருவாடானை

ஆதிரத்தினேசுவரர் – சினேகவல்லி

சூரியன், சப்த கன்னியர், வருணனின் மகனான வாருணி வழிப்பட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவகோட்டை இராம. அரு.அரு. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் (2,30,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று, சார்வரி ஆண்டு, வைகாசி 8-ஆம் நாள் (20-5-1900) முதல் கும்பாபிஷேகம், பின்னர் ராம.அரு. அரு.ராம. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் எட்டு இலட்சம் (8,00,000) செலவில் இரண்டாம் திருப்பணி செய்யப் பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருக்கானப்பேர் (காளையார் கோவில்)

காளையீசுவரர், சுந்தரேசுவரர், சோமேசுவரர் – சொர்ணவல்லி, மீனாட்சி, சவுந்தரநாயகி

இந்திரனின் யானையான ஐராவதம் பூசித்த பதி. சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சோமேசர் கோயில் அமராவதி புதூர் வயிநாகரம் வேங்கடாசலம் செட்டியாரால் ரூபாய் ஒரு லட்சம் (1,00,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று, பார்த்திப ஆண்டு தை 13-ம் நாள் (24-1-1886) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

காளையீசுரர் கோயில் தேவகோட்டை ஜமீந்தார் அழ.அரு. இராமசாமிச் செட்டியாரால் ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் (2,50,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்றும், சொர்ணவல்லியம்மை கோயில் தேவகோட்டை தி.ராம.தி., குடும்பத்தினரால் ரூபாய் எழுபத்தையாயிரம் (75,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்றும் விகாரி ஆண்டு, தை 23-ஆம் நாள் (22-1-1900) கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற சவுந்தரநாயகியம்மை கோயில் ஒக்கூர் சி.கரு.ஆ. கண்ணப்ப செட்டியாரால் ரூபாய் ஐம்பதாயிரம் (50,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்றுச் சாதாரண ஆண்டு, ஆனி 14-ஆம் நாள் (27-6-1910) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

தேவகோட்டை அழ.அருராம. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (1,50,000) செலவில் தெப்போற்சவ மண்டபம், சொக்கட்டான் மண்டபம் முதலியன நிறுவப் பெற்றுள்ளன.

திருப்பூவணம்

பூவணநாதேசுவரர் – மின்னனையாளம்மை

அம்பிகையும், தெய்வங்களும், தேவர்களும், முனிவர்களும் வணங்கி வழிப்பட்ட தலம். பொன்னனையாள் என்ற கணிகைக்காக இறைவன் தாமே சித்தராக வந்து இரசவாதம்

செய்தருளிய பதி. நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவகோட்டை உராமஉமு. செட்டியாரால் ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் (4,50,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, விகாரி ஆண்டு, தை 23-ஆம் நாள் (4-2-1900) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருக்கழியல்

திருமேனி நாதர் – துணைமாலை நாயகி

அம்பிகை இறைவனை மணக்க வேண்டி பூசித்த பதி. சுந்தரர் பாடல் பெற்ற தலம்.✪இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவ கோட்டை தி.அ.சு. அண்ணாமலைச் செட்டியாரால் திருப்பணி செய்யப் பெற்றுப் பிங்கள ஆண்டு, தை 10-ஆம் நாள் (23-1-1918) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருக்குற்றாலம்

குற்றால நாதர் – குழல்வாய் மொழியம்மை

சிவபெருமானின் ஐந்து சபைகளில் இது சித்திர சபை. கருணை வடிவமான பராசக்தி பீடமும் இங்குள்ளன. அகத்தியர் பூசித்த தலம். இக்கோயில் பிற கோயில்களைப் போலச் சதுரமாக அமையாமல் சங்கு வடிவமாக அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பு. சங்கு, சதுரம், ஆமை, தாமரை, வட்டம் இவ்வைந்து வடிவமுள்ள கோயில்களில் சிறந்தது சங்குக்கோயில் என்று நூல்கள் கூறும்.[1] சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள அம்மன் கோயில், தேவகோட்டை வி.கரு.சித.சோம., அவர் மகன் கா., பி.ச.அரு. இவர்களால் ரூபாய் இரண்டு இலட்சம் (2,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, ஸ்ரீமுக ஆண்டு, ஆனி 19-ஆம் நாள் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருநெல்வேலி

நெல்லையப்பர் – காந்திமதியம்மை

இறைவனின் பஞ்சசபைகளில் ஒன்றான தாமிரசபை உள்ள பதி. திருவமுதுக்காக காயவைத்த நெல்லை இறைவன் மழையின்று நனையாமல் வேலி கட்டி காத்தமையால் இப்பெயர் பெற்றது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪இத்தலத்தில் கண்டனூர் நா.பெ.செட்டியாரால் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் அன்னசத்திரமும், தேவ கோட்டை வி.கரு.சித. செட்டியாரால் திருநந்தவனம், குருபூசை மடம், துவாதசி மடம், பசுமடம் முதலியனவும் நிறுவப் பெற்றுள்ளன. பாண்டி நாட்டுத் தலங்களில் நகரத்தார் செயல்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ95,44,500 ஆகும்.[2]

1. ஏ.சி. ஷண்முக நயினார் பிள்ளை, திருக்குற்றாலத் தல வரலாறு, மூன்றாம் பதிப்பு, 1946, பக், 17 – 21.

2. அ. இராமநாதன் செட்டியார், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, பக், 212.

கொங்கு நாட்டுத் தலங்கள்

திருப்பாண்டிக் கொடுமுடி

கொடுமுடி நாதர் – பண்மொழி நாயகி

கோயிலுக்குள்ளேயே பிரம்மாவும் விஷ்ணுவும் தனிச் சன்னிதியில் உள்ளனர். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪இத்தலத்தில் உள்ள சிவன் கோயிலும் வீரநாராயண பெருமாள் கோயிலும் தேவகோட்டை அழ.அரு. அருணாசலம் செட்டியார், கானாடுகாத்தான் சா.அ.இராமசாமிச் செட்டியார், க.வெ. சிதம்பரம் செட்டியார், க.வெ.ராம. வேங்கடாசலம் செட்டியார் இவர்களால் ரூபாய் மூன்று இலட்சம் (3,00,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்றுச் சௌமிய ஆண்டு, சித்திரை 4-ஆம் நாள் (16-4-1909) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருக்கருவூர் (கரூர்)

பசுபதீசுவரர் – கிருபா நாயகி, சௌந்தர்ய நாயகி

பிரம்மன் நித்திரை புரியும் காலத்தில் காமதேனு இறைவனைப் பூசித்து படைப்புத் தொழில் செய்த தலம். காமதேனு பூசித்ததால் கோயில் ஆனிலை ஆயிற்று. சுவாமிக்கு பசுபதி என்றும் பெயர் வழங்கலாயிற்று. [1] இரண்டு அம்பிகை சன்னிதிகள் உள்ளன. எறிபத்த நாயனார், புகழ்சோழ நாயனார் முக்திபெற்ற தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ சங்ககாலச் சேரர் தலைநகரம். கல்வெட்டுகள் கருவூர் என்றும் வஞ்சி என்றும் குறிக்கக் காணலாம். இத்தலச் சிவாலயம் கானாடுகாத்தான் சா.ராம. முத்தையா செட்டியார், இவர் மகன் சிதம்பரம் செட்டியார், இராமசாமி செட்டியார், அண்ணாமலைச் செட்டியார், பெத்தாச்சி செட்டியார் ஆகிய இவர்களால் ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் (3,50,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்றுப் பிரபவ ஆண்டு ஆனி, 29-ஆம் நாள் (11-7-1906)ல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருமுருகன் பூண்டி

முருகநாதேசுவரர் – முயங்குபூண் முலையம்மை

முருகப்பெருமான் பூசித்த தலம். சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரருக்குக் கொடுத்த பொருளை தமது பூதகணங்களால் கவர்ந்து வரச் செய்து பின்னர் சுந்தரின் இனிய தமிழ்ப்பதிகம் பெற்று இறைவன் திருப்பி அளித்த அற்புதத் தலம். சுந்தரர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் திருப்பூர்

1 வித்துவான் சு. பாலசாரநாதன், திருத்தலங்கள் வரலாறு, டாக்டர்.உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையம், சென்னை, 1990, பக், 42.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் ரூபாய் ஆறாயிரம் (6000) செலவில் திருநந்தவனம் நிறுவப் பெற்றுள்ளது.

திருநணா

சங்கமுகநாதேசுவரர் – வேதாம்பிகை

குபேரன், விசுவாமித்திரர், பராசரர் பூசித்த பதி. காவிரியும், பவானியும், கண்ணுக்குத் தெரியாமல் அமுதநதியும் கூடும் தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் தேவகோட்டை பழ.ப. தேவராசன் செட்டியாரால் திருநந்தவனம் அமைக்கப்பட்டுள்ளது. கொங்கு நாட்டுத் தலங்களில் நகரத்தார் செய்துள்ள அறச் செயல்களின் மதிப்பீட்டுத் தொகை ரூ.12,41,000 ஆகும்.[1]

நடு நாட்டுத் தலங்கள்

திருநெல்வாயிலரத்துறை

அரத்துறை நாதர் – ஆனந்த நாயகி

ஞானசம்பந்த பெருமானுக்கு இறைவன் முத்துப்பல்லக்கும், பொன் சிவிகையும் அளித்த தலம். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம் தேவ கோட்டை ராமஅரு. அருராம. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் பதினையாயிரம் (15,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

கூடலையாற்றூர்

நர்த்தன வல்லபேசுவரர் – பராசக்தி, ஞானசக்தி

திருமுதுகுன்றம் சென்ற சுந்தரரை இறைவன் வழிமறித்து பதிகம் பெற்ற தலம். சுந்தரர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவகோட்டை ராம அரு.அரு. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் எண்பதாயிரம் (80,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, விகுருதி ஆண்டு, தை 18-ஆம் நாள் (30-1-1891) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருவதிகை

வீரட்டேசுவரர் – திரிபுரசுந்தரி

இறைவனின் அட்ட வீரட்டானத்தில் ஒன்று. சிவபெருமான் திரிபுர சம்காரம் செய்த இடம். நாவுக்கரசு பெருமானும், திலகவதியாரும் உழவாரப்பணி புரிந்த தலம். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயத்தில் தேவகோட்டை மெ. வகையினரால் சில திருப்பணிகளும், ராமஅரு. அரு. அருணாசலம் செட்டியாரால் இராசகோபுரத் திருப் பணிகளும், ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில் செய்யப் பெற்றுள்ளன.

1. அ இராமநாதன் செட்டியார், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, பக். 213.

திருநாவலூர்

திருநாவலேசுவரர் – சுந்தர நாயகி

அம்பிகை, திருமால் சண்டேசுவரர், கருடன் பூசித்தபதி. சுந்தரர் அவதரித்த தலம். அவருடைய பெற்றோர்களான சடையனார் - இசைஞானியார் என மூன்று நாயன்மார்கள் வாழ்ந்த பதி. சுந்தரர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயத்தில், தேவகோட்டை ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் இருபதினாயிரம் (20,000) செலவில், அம்மன் கோயிலும் திருநாள் மண்டபமும் அமைக்கப்பெற்றுள்ளன.

திருமுதுகுன்றம்

பழமலைநாதர் – பெரிய நாயகி

திருமால், பிரம்மன் மற்றும் தேவர்களும், வில்லவன் - வாதாபி இருவரைக் கொன்ற பாவம் நீங்க அகத்தியரும் வழிபட்ட தலம். சுந்தரர் தாம் பெற்ற பொன்னை இத்தலத்து மணிமுத்தா நதியில் இட்டு திருவாரூர் கமலாலயத் திருக்குளத்தில் பெற்றுக் கொண்டார். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்திருத்தலத்தில் உள்ள சிவாலயம், அமராவதி புதூர் வயிநாகரம் வேங்கடாசலம் செட்டியார், அவர் மகன் வே. இராமநாதன் செட்டியார், அ. இராமநாதன் செட்டியார், அவர் தம்பி வேங்கடாசலம் செட்டியார் ஆகியவர்களாலும் நகரத்தார் பொருளுதவிகொண்டும் ரூபாய் ஆறு இலட்சம் (6,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று, விரோதிகிருது ஆண்டு, சித்திரை 22-ஆம் நாள் (4-5-1911) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருக்கோவலூர்

வீரட்டேசுவரர் – சிவானந்தவல்லி

இறைவனின் அட்ட வீரட்டானத்தில் ஒன்று. அந்தகாசுரனை வதம் புரிந்த தலம். மெய்ப்பொருள் நாயனார் முக்தி பெற்ற பதி. நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவகோட்டை மெ.சித.வயி. இராம. சிதம்பரம் செட்டியாரால் ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (1,50,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று அவர் சகோதரர் வைரவன் செட்டியாரால் விரோதிகிருது ஆண்டு, தை 12-ஆம் நாள் (25-1-1912) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருவெண்ணெய் நல்லூர்

கிருபாபதீசுவரர் – மங்களாம்பிகை

அம்பிகை வெண்ணெய்யால் கோட்டை அமைத்து அதனுள் தவம் புரிந்த தலம். வேதங்கள் மூங்கில் வடிவாய் நின்று

இறைவனை வழிபட்ட தலம். தருமதேவதை இறைவனை பூசித்து வாகனமாவும், இடபக்கொடியாகவும் வரம் பெற்ற தலம். இறைவன் கிழ வேதியராய் வந்து சுந்தரரின் திருமணத்தைத் தடுத்து ஆட்கொண்டு முதல் பதிகம் பெற்ற பதி. சுந்தரர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயத்தில், தேவகோட்டை வீரராமஅரு. அருணாசலம் செட்டியாரால் நகரத்தார் பலரிடமிருந்து பொருளுதவி பெற்றுத் திருப்பணி செய்யப் பெற்றும், அம்மன் கோயில் இராமஅருஅரு. குடும்பத்தாரால் ரூபாய் இருபத்தையாயிரம் (25,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்றும், பிரபவ ஆண்டு, ஆனி மாதம் (1906 - ஜூன்) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருத்துறையூர்

பசுபதீசுவரர் – பூங்கோதை

திருமால், சூரியன், நாரதர், அகத்தியர், பீமன் ஆகியோர் வழிபட்ட தலம். சுந்தரர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூரில் உள்ள சிவாலயம், தேவகோட்டை மு.ராம. நடேசன் செட்டியாரால் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

திருப்பாதிரிப்புலியூர்

பாடலேசுவரர் – பெரிய நாயகி

சமணர்களால் கல்லில் பூட்டி கடலில் எறியப்பட்ட நாவுக்கரசரை இறைவன் கரையேற்றிய தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்திருத்தலத்தில் உள்ள சிவாலயம், கடியாபட்டி தீ.சொ. முருகப்ப செட்டியார், தீ.நா. முத்தையா செட்டியார், தீ.அ. சிதம்பரம் செட்டியார் ஆகியவர்களால், ரூபாய் பன்னிரண்டு இலட்சம் (12,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் பிலவங்க ஆண்டு, தை 24-ஆம் நாள் (6-3-1908) முதல் கும்பாபிஷேகமும், பிங்கள ஆண்டு ஆனி 15-ஆம் நாள் (28-6-1917) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

திருவண்ணாமலை

அருணாசலேசுவரர் – உண்ணாமுலையம்மை

மலையின் பெயரால் அழைக்கப்படும் திருத்தலம். புராணங்கள் இந்த அண்ணாமலையைப் பூமியின் மத்திய பாகம் என்று வருணிக்கின்றன.[1] பஞ்சபூதத் தலங்களுள் நெருப்பு தலம். இறைவனது கண்களை மூடிய பாவம் நீங்க தவம் புரிந்துஅம்பிகை

1. வி.நாராயணசாமி, திருவண்ணாமலைத் தலவரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004, பக் 1.

இடப்பாகம் பெற்ற தலம். சிவபெருமான் சோதியுருவாய் தோன்றி திருமால் - பிரம்மன் அகந்தையை அடக்கிய தலம்.மாணிக்க வாசகரின் திருவெம்பாவை பெற்றத்தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயத்தில், கோட்டையூர் அ.க. குடும்பத்தாராலும் நகரத்தார் பொருளுதவி கொண்டும், சுவாமி, அம்மன் கோயில்கள், விநாயகர் முதலிய பரிவார தேவர் கோயில்கள், அணியொட்டிக் கால்கள் அமைந்த பிரகாரங்கள், கொடிமர மண்டபங்கள், துர்க்கையம்மன் கோயில், கொலு மண்டபம் முதலியன ரூபாய் பன்னிரண்டு லட்சத்து முப்பத்தையாயிரம் (12,35,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

கடியாபட்டி தீ.சொ.நா., தீ.அ. குடும்பத்தாரால் ரூபாய் ஐம்பதாயிரம் (50,000) செலவில் இராஜமண்டபமும், கானாடுகாத்தான் இராஜா.ஸர். அண்ணாமலைச் செட்டியாரால் ரூபாய் எழுபத்தையாயிரம் (75,000) செலவில் பிரம்ம தீர்த்தக் குளமும், கோட்டையூர் க.வீ.அழ. குடும்பத்தாரால் ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் (1,75,000) செலவில் சிவகங்கைத் திருக்குளமும், திருநந்தவனமும், கோட்டையூர் அ.க.அ.மெ. குடும்பத்தாரால் ரூபாய் இருபதாயிரம் (20,000) செலவில் பிரகாரத்தளவரிசைகளும், கோட்டையூர் அ.க.அ.சித.வெ. நடேசன் செட்டியாரால் ரூபாய் ஐயாயிரம் (5,000) செலவில் தளவரிசைகளும், கோட்டையூர் ராம.பெ. நாராயணன் செட்டியாரால் ரூபாய் முப்பத்தையாயிரம் (35,000) செலவில் தாமிரத் தகடு வேய்ந்த கல்யாண மண்டபமும் அமைக்கப் பெற்றுள்ளன.

நகரத்தார்களால் விசுவாவசு ஆண்டு, வைகாசி 30-ஆம் நாள் (12-6-1903) கும்பாபிடேகம் செய்யப்பெற்றது.[1]

ரூபாய் நான்கு இலட்சத்துப் பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு (4,12,500) செலவில் கோட்டையூர் பெ.க.அ. சித. வீரப்ப செட்டியார், அவர் சகோதரி வள்ளியம்மை ஆச்சி, காரைக்குடி முத்து.அரு., கோட்டையூர் அ.க.அ.மெ.வ., இராமச்சந்திரபுரம் தீ.சொ.ராம., தீ.நா.மு. தீ.அ.சா., கானாடுகாத்தான் சா.ராம.மு.ராம. இராமசாமிச் செட்டியார், ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார், கோட்டையூர் அ.க.ராம.அரு. அருணாசலம் செட்டியார் ஆகியவர்களால், வெள்ளி இந்திர விமானங்கள், வெள்ளிக் காமதேனு கற்பக விருட்ச வாகனங்கள், வெள்ளி ரிஷப வாகனங்கள், வெள்ளித்தேர், மரத்தேர்கள், முதலியன செய்யப்பெற்றுள்ளன.

✪ மா. சந்திரமூர்த்தி, தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி – 2, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை,2004.

1. சோமலெ, (பதி) அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேகமலர், 1976.

ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்து மூவாயிரம் (2,53,000) செலவில் கோட்டையூர் க.வீ.அழ. குடும்பத்தார், பெக.அசித. வீரப்ப செட்டியார், அ.க.ராம. மெ.சித. சிதம்பரம் செட்டியார், அ.கு.அ.மெ. வேங்கடாசலம் செட்டியார், ராம.அழ. சிதம்பரம் செட்டியார், அக.அ. சிதம்பரம் செட்டியார், அக.அசித.வெ. நடேசன் செட்டியார், கானாடுகாத்தான் வெசா. அண்ணாமலைச் செட்டியார், சா.அ. அண்ணாமலை செட்டியார், வெ.வீர.வெ.அரு. நாகப்பச் செட்டியார், கொத்தமங்கலம் ராமஅரு.வெ. பெத்தாச்சி செட்டியார், சிஅசி. ராம. இராமன் செட்டியார், சிஅசி. அரு வள்ளியம்மை ஆச்சி, அரிமளம் செ.சித. முத்துச் செல்லப்ப செட்டியார், பள்ளத்தூர் ந.பெ. பெத்தபெருமாள் செட்டியார், தேவகோட்டை எ.பெரி.கரு. சித. சிதம்பரம் செட்டியார், நாகஅநா. பழநியப்ப செட்டியார், மகன் கண்ணப்ப செட்டியார், நா.க.அ.பழ., இராமச்சந்திரபுரம் து.நா. முத்தையா செட்டியார், நற்சாந்துபட்டி வீ.மு. வீரப்ப செட்டியார் ஆகியவர்களால், நவமணிகள் இழைக்கப்பெற்ற திருவாபரணங்கள், மணிமுடிகள், தங்கக் கவசங்கள், வெள்ளிக் கவசங்கள், வெள்ளிப் பாத்திரங்கள், வெள்ளியால் உபசாரப் பொருள்கள் முதலியன அமைக்கப் பெற்றுள்ளன.

அணி அண்ணாமலை

இத்தலச் சிவாலயம், கோட்டையூர் அ.கு.அ.மெ. குடும்பத்தார், ராம.பெ., இவர்களால் ரூபாய் ஐயாயிரம் (5,000) செலவில் சுவாமி, அம்மனுக்கு வெள்ளிக் கவசங்களும், ரூபாய் பத்தாயிரம் (10,000) செலவில் அலுவலர் உறையுளும், ரூபாய் ஐம்பதாயிரம் (50,000) மூலதனம் கொண்டு கோயிலுக்கு நித்தியக் கட்டளைகளும் அமைக்கப்பெற்று ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் (3,50,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று, பிங்கள ஆண்டு தை 14-ம் நாள் (27-1-1918) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. நடுநாட்டுத் தலங்களில் நகரத்தார் செய்துள்ள அறப்பணிகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 67,35,000. [1]

தொண்டை நாட்டுத் தலங்கள்

திருக்கழுக்குன்றம்

வேதகிரீசுவரர் – பெண்ணில் நல்லாளம்மை

வேதங்களே மலைகளாக அமைந்து இறைவனைப் பூசித்த தலம். கோடி ருத்திரர்கள், பன்னிரு ஆதித்தர்கள், அஷ்ட வசுக்கள், மற்றும் சடாயு, சம்பாதி, சம்பு, சம்புகுத்தன், பிரசண்டன், மாகுத்தன் போன்ற கழுகுகளும் வணங்கி போற்றிய தலம். அண்மைக் காலம்வரை நண்பகல் நேரத்தில் இரண்டு கழுகுகள் இரை எடுத்துச் சென்ற அற்புதம் நிகழ்ந்த தலம். நாவுக்கரசர்,

1. அ இராமநாதன் செட்டியார், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, பக், 212.

சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்தில் உள்ள சிவாலயம் காரைக்குடி நா.லெ.நா. நாராயணன் செட்டியார், சண்முகநாதபுரம் செ.ராம.ராம. இராமசாமிச் செட்டியார், இவர்களால் ரூபாய் ஒரு இலட்சம் (1,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

திருக்கச்சி ஏகம்பம் (காஞ்சிபுரம்)

ஏகாம்பர நாதர் – காமாக்ஷியம்மை

பஞ்சபூதத் தலங்களில் மண்தலமாக விளங்குவது. வேதங்களே மாமரமாய் நின்று பூசித்த தலம். அம்பிகை மணலால் லிங்கம் அமைத்து வழிபட்ட தலம்.[1] ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சாக்கிய நாயனார், திருக்குறிப்புத் தொண்டர் ஆகியோர் முக்திப் பெற்ற பதி இது. கண்ணிழந்த சுந்தரர் இடக்கண் பெற்ற தலமும் இதுவே. நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪ இச்சிவாலயம் தேவகோட்டை மெ.ராம.அ. முத்தையா செட்டியார் என்ற இராமநாதன் செட்டியார், ராம.மெ. இலக்குமணன் செட்டியார் இவர்களால் ரூபாய் இருபது இலட்சம் (20,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று விகாரி ஆண்டு, தை 23-ஆம் தேதி (4-2-1900)ல் முதல் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

கண்டனூர் வயி.ராம.செட்டியாரால் ரூபாய் எழுபதாயிரம் (70,000) செலவில் சில திருப்பணிகள் செய்யப்பெற்றுத் துந்துபி ஆண்டு, வைகாசி 25-ஆம் தேதி (7-6-1922) இரண்டாவது கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருக்கச்சி நெறிக்காரைக்காடு

காரைத்திருநாதேசுவரர் – காமாட்சியம்மை

இந்திரனும், புதனும் பூசித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலச் சிவாலயம், தேவகோட்டை ராம.மெ. மெய்யப்ப செட்டியாரால் ரூபாய் எழுபதினாயிரம் (70,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்றுச் சித்தார்த்தி ஆண்டு, தை 21-ஆம் நாள் (3-2-1920) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருவோத்தூர்

வேதநாதேசுவரர் – இளமுலைநாயகி

ஆலமர நிழலில் அமர்ந்து இறைவன் வேதத்தை உபதேசித்த தலம். அடியார்களின் வேண்டுகோளின்படி சுந்தரர் பதிகம் பாடி ஆண்பனைகளைப் பெண் பனைகளாக மாற்றிய பதி. சுந்தரர் பாடல் பெற்ற தலம்✪. இவ்வூரில் தேவகோட்டை மெ.அரு.நா. இராமநாதன் செட்டியாரால் ரூபாய் பத்தாயிரம் (10,000) செலவில் குருபூசை மடம் நிறுவப் பெற்றுள்ளது.

1. மா. சந்திரமூர்த்தி, தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி – 1, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை,2003, பக், 89 – 95 .

வன்பார்த்தான் பனங்காட்டூர்

தாளபுரீசர், கிருபாநாதேசுவரர் – அமிர்தவல்லியம்மை, கிருபாநாயகி

கண்ணுவ மகரிஷி இறைவனுக்கு படைக்க எதுவும் கிடைக்காததால் பனம்பழத்தைப் படைக்க இறைவனும் ஏற்றுக் கொண்டு அருள்புரிந்த தலம். சுந்தரர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர்ச் சிவாலயம், தேவகோட்டை பொ.எ.சொ. மாணிக்கம் செட்டியார், பழநியப்ப செட்டியார் இவர்களால் ரூபாய் இரண்டு லட்சம் (2,00,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று, விபவ ஆண்டு, ஆனி 22-ஆம் நாள் (5-7-1928) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருமாற்பேறு

மால்வணங்கீசுவரர் – கருணைநாயகி

சுதர்சன சக்கரத்தைப் பெற விரும்பிய திருமால் இறைவனை தாமரை மலருக்குப் பதிலாக தனது தாமரைக் கண்களையே அகழ்ந்து அர்ப்பணித்து வணங்கிய தலம். நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪இத்தலத்தில் உள்ள சிவாலயம், தேவ கோட்டை அழ.வீர.சித. இலக்குமணன் செட்டியார், வீரப்ப செட்டியார், இராமநாதன் செட்டியார் ஆகியவர்களாலும், நகரத்தார் பொருளுதவி கொண்டும் திருப்பணி செய்யப்பெற்று ஈசுவர ஆண்டு, ஆனி 15-ஆம் நாள் (28-6-1937) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருஇலம்பையங்கோட்டூர்

சந்திரசேகரேசுவரர் – கோடேந்து முலையம்மை

சந்திரனும், அரம்பையரும் பூசித்தது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர்ச் சிவாலயத்தில், தேவகோட்டை நகரத்தார் சிலரால் ரூபாய் பத்தாயிரம் (10,000) செலவில் சில திருப்பணிகள் செய்யப் பெற்றுள்ளன.

திருவிற்கோலம்

திரிபுராந்தகேசுவரர் – திரிபுராந்தகியம்மை

சிவபெருமான் திரிபுரம் எரிக்கச் வில்லேந்திச் சென்றபோது தேரின் ஏர்க்கால் (கூகம்) முரிந்ததால் இப்பெயர் பெற்றது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪இவ்வூர்ச் சிவாலயம், தேவ கோட்டை ராம.பெரி. பிச்சப்ப செட்டியாராலும், நகரத்தார் பொருளுதவி கொண்டும் ரூபாய் இரண்டு இலட்சம் (2,00,000) செலவில் திருப்பணி செய்யப்பெற்று ஆனந்த ஆண்டு, சித்திரை 17-ஆம் நாள் (29-4-1914) முதல் கும்பாபிஷேகமும், பிரபவ ஆண்டு, ஆனி 27-ஆம் நாள் (11-7-1927) இரண்டாம் கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றன.

✪ மா. சந்திரமூர்த்தி, தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி – 2, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை,2004.

திருவாலங்காடு

தேவர் சிங்கப்பெருமான் – வண்டார் குழலியம்மை

இறைவனின் பஞ்ச சபைகளில் இரத்தின சபை. இறைவன் காளிதேவியோடு ஊர்த்துவ தாண்டவம் புரிந்த தலம்.காரைக்கால் அம்மையார் பூசித்த தலம். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலச் சிவாலயத்தில், கோட்டையூர் பெ.மு.அ. செட்டியாரால் சுவாமி கோயில், நடராசர் கோயில் முதலியன புதிதாகக் கட்டப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருவெண்பாக்கம் (திருவுளம்புதூர்)

கண்ணிழந்த சுந்தரருக்கு இறைவன் ஊன்றுகோல் அளித்த தலம். சுந்தரர் காஞ்சி செல்லும் வழியில் இத்தலத்து நாயகி மின்னல்போல் தோன்றி வழி காட்டியதால் இப்பெயர் பெற்றாள். சுந்தரர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர்க் கோயிலில், தேவகோட்டை நகரத்தார்களால் சுவாமி கோயில், அம்மன் கோயில் மண்டபங்கள் எல்லாம் புதிதாகக் கட்டப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப் பெற்றுள்ளன.

திருக்கள்ளில்

சிவானந்தேசுவரர் – ஆனந்தவல்லியம்மை

பிருகு முனிவர் பூசித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இவ்வூர்க் கோயில், தேவகோட்டை ராம.அரு.அரு. சத்திரம் அருணாசலம் செட்டியார் அவர்களிடம் பணியாற்றிய தேனப்ப செட்டியார் முயற்சியால் ரூபாய் பதினையாயிரம் (15,000) செலவில் 1900-ம் ஆண்டில் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது.

திருக்காளத்தி

காளத்தீசுவரர் – ஞானப் பூங்கோதை

இறைவனின் பஞ்சபூதத் தலங்களில் வாயுத்தலம். தம் கண்ணையே அகழ்ந்து இறைவனுக்கு அளித்த வேடன் திண்ணப்பன் கண்ணப்ப நாயனாராகி முக்தி பெற்ற தலம். தெய்வங்கள், தேவர்கள் மட்டுமின்றி சிலந்தி, பாம்பு, யானை வழி பட்ட தலம். நக்கீரர் அந்தாதி பெற்றபதி. சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலத்துச் சிவாலயத்தில், தேவகோட்டை மெ.அரு. நா. இராமநாதன் செட்டியார், மெ.அரு.அரு. அருணாசலம் செட்டியார் ஆகியவர்களால் எல்லாக் கோயில்களும் புதுப்பிக்கப் பெற்றும், அணியொட்டிக் கால்மண்டபம், கொலுமண்டபம், நிறுவப்பெற்றும், ரூபாய் பத்து இலட்சம் (10,00,000) செலவில் செம்மையாகத் திருப்பணி செய்யப்பெற்று, பிரதாப ஆண்டு, சித்திரை 9-ஆம் நாள் (21-4-1912) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருவொற்றியூர்

படம்பக்கநாதர் – வடிவுடையம்மை

ஆதிசேஷன் வழிபட்ட தலம். சுந்தரர் சங்கிலி நாச்சியாரை

இத்தலத்தின் மகிழ மரத்தடியில் இறைவன் சாட்சியாக மணந்து கொண்டார். இன்றும் மாசி மாதத்தில் மகிழடி திருவிழா நடைபெறும் தலம். கலிய நாயனார் தொண்டு புரிந்த தலம். நாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்✪. இத்திருத் தலத்தில் உள்ள சிவாலயம், அமராவதி புதூர் வயிநாகரம் அண்ணா மலைச் செட்டியாரால் திருப்பணி செய்யப் பெற்று, சுக்கில ஆண்டு, தை 3-ஆம் நாள் (14-1-1870) கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

திருவலிதாயம் (பாடி)

வலிதாயநாதர் – தாயம்மை

பிரம்மா, குருபகவான், வலியன் என்னும் பறவை வழிப்பட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். ✪இத்தலத்தில் உள்ள சிவாலயம் தேவகோட்டை பழ.சு.அரு.ச சபாபதி செட்டியாரால் பல திருப்பணிகள் செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருவான்மியூர்

மருந்தீசுவரர் – சொக்கநாயகி

காமதேனுவும், வான்மீகி முனிவரும் பூசித்த தலம். உபய விடங்கத் தலங்களில் இதுவும் ஒன்று. நாவுக்கரசர், சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.✪ இத்தலம் பல்லவர் காலம் தொட்டு வரலாற்றுச் சிறப்புடையது. இச்சிவாலயம், தேவகோட்டை முரு.கி.ராம. இராமன் செட்டியாரால் நகரத்தார் பொருளுதவி கொண்டு திருப்பணி செய்யப்பெற்றுப் பிரமாதீச ஆண்டு, ஆனி 27-ஆம் நாள் (10-6-1913) கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருவிடைச்சுரம்

ஞானபுரீசுவரர் – இமயமடக்கொடியம்மை

கௌதமர் மற்றும் சனத்குமார்கள் பூசித்த பதி. சம்பந்தர் பாடல் பெற்ற தலம். இத்தலத்தில் உள்ள சிவாலயம், வயிநாகரம் நாராயணன் செட்டியார் மற்றும் தேவகோட்டை நகரத்தார் பொருளுதவி கொண்டு, ராம.அரு.அரு. ராம. அருணாசலம் செட்டியாரால் பல திருப்பணிகள் செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. இவ்வாறு தொண்டை நாட்டுத் திருத்தலங்களில் செய்த அறச்செயல்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.3,9,27,000 ஆகும்.

⌘ ⌘ ⌘

---

1. எம்.இராஜகோபாலன், மருந்தீசுவரர் எனும் நல்மருத்துவர், 2003, பக், 51 – 77.

2. அ. இராமநாதன் செட்டியார், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, பக், 212.

✪ மா. சந்திரமூர்த்தி, தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி – 2, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை,2004.

19. அயல்நாடுகளில் அறப்பணிகள்

இவர்கள் கடல் கடந்து வாணிபம் செய்யச் சென்ற இலங்கையிலும், அங்குள்ள ஊர்களிலும், பர்மாவில் இரங்கூன் முதல் டேரியா வரை 59 ஊர்களிலும், சிங்கப்பூர், மலேசியா, கோலாலம்பூர், சன்னாசிமலை, முதலிய ஊர்களிலும், தாய்லாந்து தெற்கு வியட்நாம், இந்தோனேஷியா, மொரீஷியஸ், இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் தண்டாயுத பாணி கோயில்களும், விநாயகர் கோயில், சிவன்கோயில், மாரியம்மன் கோயில், பெருமாள் கோயில் முதலியன உருவாக்கி நாள் தோறும் வழிபட்டு வரும் சிவநெறிச் செல்வர்களாக இருக்கிறார்கள்.

இலங்கை

வெளிநாடுகளில் கட்டப்பட்டுள்ள 'கோயில்களில் நடைபெறும் விழாக்களில் தைப்பூசமும், ஆடிவேலும் மிக முக்கியமானவையாகும். சிங்கப்பூர் பினாங்கு, இரங்கூன், செய்கோன் போன்ற நகரங்களில் தைப்பூசத் திருவிழா பிரசித்தி பெற்றது. கொழும்பு நகரம் ஆடிவேலுக்குப் பெயர் பெற்றது.

விழாக்களின்போது உற்சவ விக்கிரகம் புறப்பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுவது உண்டு. விழாக்களின்போது ஏழை மக்களுக்கு நகரத்தார்கள் அன்னதானம் செய்வார்கள்.

நகரத்தார்கள் கோயில்களில் கூடிப் பெருமக்களை வரவேற்பார்கள். தொழில் சம்பந்தமான பொது முடிவுகளைச் செய்வதற்கும், வட்டி விகிதங்களை நிருணயிப்பதற்கும் கோயிலில் தான் கூட்டம் நடத்துவார்கள்.

இவ்வாறு நடத்தும் கூட்டங்களுக்குத் தலைவர் என்று ஒருவரையேனும் நியமிப்பதில்லை. காரணம் சுப்பிரமணியரை நகரத்தார்கள் 'செட்டி முருகன்" என்று உரிமையோடு அழைப்ப தால் அவன் தலைமையிலேயே கூட்டத்தை நடத்துவதாகக் கருதுவர்.

கொழும்பில் பழைய கதிர் வேலாயுதசாமி கோயில் (1820), புதிய கதிர் வேலாயுதசாமி கோயில் என்று இரண்டு உண்டு (1850). இரண்டு கோயில்களும், இணைந்தும் குழப்பமின்றியும் செயல்பட்டு வருகின்றன.

ஓர் ஆண்டுத் திருவிழாவைப் பழைய கோயிலாரும் அடுத்த ஆண்டுத் திருவிழாவைப் புதிய கோயிலாரும் ஏற்று மாறி மாறிச்

செய்து வருகிறார்கள். பழைய கோயிலுக்கு மரத்தேரும், புதிய கோயிலுக்கு வெள்ளித் தேரும் உண்டு. இரண்டு கோயில்களுக்குமே ஏராளமான நகைகளும், சொத்துகளும் உண்டு.

பெரி.செ.கு. என்ற நகரத்தார் குடும்பத்தார் செட்டியார் தெருவுக்கு அருகேயுள்ள மேட்டுத் தெரு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஏராளமான அறக்கட்டளைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கதிர்காமம் கொழும்பிலிருந்து 320கி.மீ. தொலைவில் இருக்கிறது. கதிர்காமம் ஆண்டவனின் ஆலயம் மாணிக்கக் கங்கையாற்றின் கரையில் எழுப்பப்பட்டுள்ளது. புனிதமான இந்த ஆற்றில் நீராடிய பிறகுதான் கதிர்காம யாத்திரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும். கதிர்காமம் செல்லும் பயணிகள் கதிரமலைக்கும், விபூதிமலைக்கும், செல்வக் கதிர்காமத்திற்கும் சென்று இறைவழிபாடு இயற்றுவார்கள்.

கதிர்காமத் திருத்தலத்தில் நகரமடம் ஒன்று இருக்கிறது. இலங்கையில் முதன் முதலாக ஏற்பட்ட மடம் இதுதான். ஆடிப் பௌர்ணமியன்று கதிர்காமத்து ஐயன் திருவிழா வரும் பொழுது நகர மடத்தின் எதிரில் பூஜை ஆராதனை முதலியன தொன்று தொட்டு நிகழ்ந்தன. 1971 மார்ச் மாதம் இலங்கை அரசு கதிர்காமத்தை ஒரு புனிதத்தலமாக அறிவித்து அங்கு இருந்த கடைகளையும் கட்டிடங்களையும் தரைமட்டமாக்கியது. அதில் நகர மடமும் பாதிக்கப்பட்டது.[1]

இலங்கையில் திருக்கேதீச்சுவரம் துறைமுகம் மூலமாகவே கிரீஸ், ரோம் ஆகிய நாடுகளுடன் வாணிகத் தொடர்பு இருந்தது. 17-ஆம் நூற்றாண்டில் போர்த்துகீசியர் இங்கு இருந்த புராதனக் கோயிலை அழித்தனர். பின்னர் 1893-இல் கோயில் இருந்த இடம் கண்டு பிடிக்கப்பட்டது. கோயிலில் இருந்த கணேச, சிவலிங்க விக்கிரகங்கள் வெளிக் கொணரப்பட்டன.

இந்தியாவில் இராமன் சிவவழிபாடாற்றிய தலம் இராமேச்சுரம். அது போலவே இலங்கையில் இராமன் சிவவழிபாடாற்றிய தலம் திருக்கேதீச்சரம். இலங்கையிலேயே தேவாரப் பாடல்கள் பாடப்பெற்ற தலங்கள் திருக்கேதீச்சுரம் மற்றும் திருக்கோணமலையாகும். சுந்தர மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகத்தில் "பாலாவியின் கரை மேல் திடமாயுறைகின்றான் திருகேதீச்சுரத் தானே" என்ற வரிகள் இடம் பெற்றிருக்கின்றன.

---

1. சோமலே, அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள், முதற் பதிப்பு, சோமு நூலகம், சென்னை, மார்ச், 1979, பக் 33.

திருக்கேதீச்சுரத்தில் புதைந்து சிதைந்து கிடந்த இந்தக் கோயில் இருந்த காட்டுப்பகுதியான 40 ஏக்கர் பரப்பை பகிரங்க ஏலத்தில் எடுத்தவர் திருவாளர் ரா.அரு. **பழனியப்ப செட்டியார்**. பிறகு கோயிலுக்கு நகரத்தார்கள் காசியிலிருந்து சிவலிங்கம் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து குடமுழுக்கு நிகழ்த்தினர் (1903).

நகரத்தார்கள் மேலும் 80 ஏக்கர் பரப்புள்ள நெல்வயல் களையும் கட்டடங்களையும் விலைக்கு வாங்கி இக்கோயிலுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். கோயிலில் பணிசெய்யும் குருக்கள், கணக்குப்பிள்ளை, ஏவலாள் போன்றவர்களின் ஊதியங்களையும் நகரத்தார்களே ஏற்றுக் கொண்டனர். பண்ணையில் பெரியதொரு கிணறு வெட்டி அதிலிருந்து கோயிலுக்குக் குடி தண்ணீர் வசதியும் நகரத்தார்கள் செய்துள்ளனர். 1952 முதல் யாழ்ப்பாணத் தமிழ்ப் பெருமக்கள் ஒரு குழு நியமித்து இக்கோயிலை மேற்பார்வையிட்டு வருகின்றனர்.

நகரத்தார்களுக்கு முதல் மரியாதையும் கோயிலில் கொடுக்கப் பட்டிருக்கிறது. யாத்திரை செல்லும் நகரத்தார்கள் தங்குவதற்கு திருக்கேதீச்வரத்தில் நகரத்தார் மடம் ஒன்றுள்ளது.

மேலும், இலங்கையில் நகரத்தார்கள் அமைத்துள்ள கோயில்கள் **காலி, இரத்தினபுரி, கம்பளை, நாவலப்பட்டி, மாதம்பை, குருநாக்கல், பாடுரா, பூசலா, யாழ்ப்பாணம், முன்னீச்சுரம், கண்டி, திருக்கோணமலை, சிவனடிபாதம்** போன்ற இடங்களில் உள்ளன.[1]

பங்களாதேஷ்

பங்களாதேஷில் உள்ள **"அக்யாப்"** என்ற ஊர் முன்னர் **"அரிக்கன்"** என்று அழைக்கப்பட்டது. பர்மாவின் எல்லையில் உள்ள இந்த ஊரில் நகரத்தார்கள் அரிசி வாணிகம் பெருமளவில் செய்து வந்தார்கள். கொடுக்கல் - வாங்கல் தொழிலும் உண்டு. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செல்வச் செழிப்பில் திளைத்த நகரத்தார்களுக்கு இவ்வூரில் ஒரு கோயில் இருந்தது. மாசி மகம் இங்குப் பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. அரிக்கனி லிருந்து 9 கி.மீட்டர் தூரத்தில் உள்ள **"தமாகே"** என்ற ஊருக்குக் **கதிரேசக் கடவுளின் உருவம்** எடுத்துச் செல்லப்பட்டது. அரிக்கன் நகரத்தார்கள் **சட்டி காமம் (சிட்டகாங்)** என்ற துறைமுக நகரில் ஒருசத்திரமும் கோயிலும் கட்டி அவற்றையும் நிருவகித்து வந்தனர்.

பர்மா

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்னும் முதுமொழிக் கிணங்க நகரத்தார்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்

1. சோமலே, அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள், முதற் பதிப்பு, சோமு நூலகம், சென்னை, மார்ச், 1979, பக் 37 – 43.

கொல்கத்தாவில் இருந்து வியாபாரம் செய்த தொடர்பால் அங்கிருந்து பாய்மரக் கப்பல்களில் பர்மாவுக்குப் போயினர். ஆங்கிலேயர்கள் பர்மாவை முற்றிலும் தங்களின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்த பிறகு பர்மாவில் நிலையாக வாழ்ந்தனர். கீழ் பர்மாவில் உள்ள சதுப்பு நிலங்களை வேளாண்மை செய்ய மூல தனம் கொடுத்து உதவினர்.

1850 முதல் இரண்டாம் உலகப்போர் ஆசியாவிற்குப் பரவிய 1941-வரை நகரத்தார்கள் வேறு எந்த நாட்டையும்விட பர்மாவில்தான் கூடுதலாக முதலீடு செய்தனர். அதன் விளைவாக 62 **ஊர்களில் முருகன் கோயில்களையும், ஒரு பெருமாள் கோயிலையும் நடத்தி வந்தனர்.**

சிவ தலங்களிலெல்லாம் தலைமைத் தலமாக விளங்கும் காசி விசுவநாதர் கோயிலில் திருவனந்தல், உச்சிக்காலம் அர்த்தசாமம் ஆகிய மூன்று முக்கிய வழிபாடுகள் நடைபெறுவதற்குத் தேவையான பெரும் பணத்தைக் கொடுத்தவர்கள் பர்மா வாழ் நகரத்தார்களேயாவர்.

இதற்காக "ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டி" என்ற சபையை 1934-இல் இரங்கூனில் அமைத்தனர். இந்த அமைப்பு 1962 வரை இரங்கூனில் இயங்கிற்று. பிறகு அதன் சொத்துகளும், பொறுப்புகளும் காரைக்குடியில் தலைமை அலுவலகம் வைத்து இயங்கும் குழுவுக்கு மாற்றப்பட்டது.

பர்மா நகரத்தார்கள் ஆண்டுதோறும் தைப்பூச நாளில் மகமை வசூலித்து மேற்கண்ட அமைப்புக்குப் பெரும் பணம் அளித்து வந்தார்கள். இந்தப் பெரும் பொருளைக் கொண்டுதான் காசி போன்ற வட இந்திய சத்திரங்கள் விரிவான நிலையில் நடைபெறத் தொடங்கின.

இரங்கூனில் உள்ள **ஆறறைக் கோயில்** 1890-இல் கட்டப் பட்டதாகத் தெரிகிறது. **ஆறு அறைகள் (வீடுகள்)** கொண்ட ஒரு தொகுப்பான பெரிய கட்டடமாக இருப்பதால் இவ்வாறு பெயர் பெற்றது.

நகரத்தார்கள் பர்மா மண்ணை மிதித்ததும் ஆறறைக் கோயிலில் வழிபடுவதும், தாய் நாட்டுக்குத் திரும்பக் கப்பல் ஏறுவதற்கு முன் ஆறறைக் கோயிலில் வழிபடுவதும் வழக்கம். திதி முதலிய முன்னோர் வழிபாட்டு நிகழ்ச்சிகளை நகரத்தார்கள் இக்கோயிலில் நடத்துகிறார்கள். நகரத்தார்கள் சிறப்பாகக் கடைப்பிடிக்கும் **பிள்ளையார் நோன்பு** இங்குதான் கொண்டாடப்படுகிறது.[1]

1. சோமலே, அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள், முதற் பதிப்பு சோமு நூலகம், சென்னை, மார்ச், 1979, பக் 60.

மோல்மீனில் சுப்பிரமணியரின் வேல் ஊன்றப்பட்ட நகரத்தார் கோயில் உள்ளது.பர்மாவில் கட்டப்பட்டுள்ள நகரத்தார் கோயில்கள் அனைத்தும் திராவிடக் கட்டடக் கலைப்பாணியில் கட்டப்பட் டுள்ளன.

சிங்கப்பூர்

நகரத்தார்கள் பாய்மரக் கப்பலில் 1824-ஆம் ஆண்டு மலேசியாவுக்கும், சிங்கப்பூருக்கும் வாணிகம் செய்ய வந்தனர்.

சிங்கப்பூர் வந்த நகரத்தார்கள் தம் வர்த்தக வளத்திற்கேற்பத் தண்டபாணி கோயில்கள் எடுப்பித்து அக்கோயில்களில் வழிபாடு தடையின்றி நடைபெறுவதற்காக மகமை எழுதி அதன் மூலம் வந்த வருவாய்க்குத் தக்கவாறு சொத்துகளையும் அணிமணிகளையும், ஆபரணங்களையும் சேர்த்து வைத்துள்ளனர். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தமிழகத்தில் ஆலயப் பணிகளும், திருப்பணிகளும் பல செய்துள்ளனர். இம்மரபை ஒட்டியே சிங்கப்பூரிலும் தண்டபாணி கோயிலைக் கட்டி இருக்கிறார்கள். இவ்வாலயத்துள் நுழையும்போது தமிழ்நாட்டுக் கோயில் ஒன்றை வழிபட்டுத் திரும்பியது போன்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் மனத்தில் தோன்றும்.

சிங்கப்பூர் தண்டாயுதபாணி ஆலயத்தின் தைப்பூசத் திருவிழாவின்போது சிங்கப்பூர் தமிழர் மட்டுமின்றி, அங்கு வாழும் சிக்கியரும், சீனர்களும் நேர்த்திக்கடன் செய்வதைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இத்தலத்து முருகனைத் துதித்துப் பாடுவதற்காக வேதாரண்யத்திலிருந்து கணபதி தேசிகரை, சிங்கப்பூருக்கு நகரத்தார் அழைத்துச் சென்றுள்ளார்கள் என்பது அவர்களின் இறைப் பற்றினைக் காட்டுகிறது.

மலேசியா

பினாங்கில் நகரத்தார்களால் தண்டாயுதபாணி கோயில் 1850-ஆம் ஆண்டிலும், தண்ணீர் மலைக்கோயில் 1857-ஆம் ஆண்டிலும் கட்டப்பட்டது. பினாங்கில் உள்ள சிவன் கோயிலும், சிரம்பானில் உள்ள செல்வ விநாயகர் கோயிலும், மலாக்காவில் உள்ள பொய்யாத விநாயகர் கோயிலும் மற்றவர்களால் கட்டப்பட்டு நகரத்தார்களின் நிருவாகத்தில் விடப்பட்டுள்ளன.

நகரத்தார்களின் சமுதாயக் கூட்டங்களும், திருமணங்களும் இங்குக் கோயில்களிலேயே நடைபெறுகின்றன. மலேசியாவில் சைவம் தழைப்பதற்கும், தமிழ்ப் பண்பாட்டின் இருப்பிடமாகவும் நகரத்தார்களின் கோயில்கள் திகழ்கின்றன. மேலும், மலேசியாவில் 15 ஊர்களில் நகரத்தார்கள் எடுப்பித்த தண்டாயுதபாணி கோயில்களும் அங்கு நடைபெறும் சிறப்பான திருவிழாவும் பட்டியலிடப் பட்டுள்ளன.

1.	அலோர்ஸ்டார்	-	மாசிமகம்
2.	கூலிம்	-	தைப்பூசம்
3.	பினாங்கு	-	தைப்பூசம்
4.	வாலப்பூர்	-	வைகாசி விசாகம்
5.	சுங்குரும்பை	-	பங்குனி உத்திரம்
6.	தைப்பிங்	-	ஆடிவேல்
7.	ஈப்போ	-	வைகாசி விசாகம்
8.	தெலுக்கான்சன்	-	சித்திரா பௌர்ணமி
9.	கோலாலம்பூர்	-	பங்குனி உத்திரம்
10.	கிள்ளான்	-	திருக்கார்த்திகை
11.	சாவி	-	சித்திரா பௌர்ணமி
12.	மூவார்	-	திருக்கார்த்திகை
13.	பத்து பகாட்	-	வைகாசி விசாகம்
14.	தாப்பா	-	வைகாசி விசாகம்
15.	சந்நாசி மலை	-	மாசிமகம் [1]

தாய்லாந்து

1860 முதல் நகரத்தார்களுக்கும் தாய்லாந்து (சயாம்) நாட்டுக்கும் தொடர்பு இருந்துவருகிறது. தாய்லாந்தின் தலைநகரம் பாங்காக். பாங்காக்கின் நடுப்பகுதியான சீலம் சாலையில் 1890-ஆம் ஆண்டு கட்டப்பட்ட மாரியம்மன் கோயில் உள்ளது.

நகரத்தார்கள் இந்தக் கோயிலைக் கட்டுவதற்கு வேண்டிய இடத்தை மானியமாக வழங்கும்படி சயாம் நாட்டு மன்னர் சவுலங்கானை வேண்டினர். மன்னர் இடத்தை வழங்கியதோடு இடத்திற்கும் கட்டப்படும் கட்டடத்திற்கும் வரி செலுத்த வேண்டிய தில்லை என்ற சிறப்புச் சலுகையையும் அளித்தார். கோயிலுக்கு இடம் ஒதுக்கப்பட்டப் பகுதி அரண்மனையிலிருந்து வெகு தூரத்தில் இருந்தது. நாளடைவில் பாங்காக் நகரம் விரிவடைந்து இன்று கோயில் இருக்கும் பகுதி மிக அதிகமான விலை பெறும் இடமாகிவிட்டது.

தெற்கு வியட்நாம்

இந்தோ சீனா என்ற பெயரில் பிரெஞ்சு ஆட்சியில் சில நூற்றாண்டுகள் இருந்த நாட்டின் ஒரு பகுதி தெற்கு வியட்நாம் என்ற பெயரில் இப்போது தனிநாடாக உள்ளது. இதுதான் இந்தோசீனாவின் வளமான பகுதி. இதன் தலைநகர் செய்கோன்.

பௌத்த சமயத்தவர் பெரும்பாலாகவும், கிறித்தவர்கள் ஆட்சியில் அமைந்ததுமான இந்த நாட்டில் நகரத்தார்கள் இந்து மதத்தைப் பேணியும் பரப்பியும் வந்தனர்.

1. சோமலே, அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள், முதற் பதிப்பு சோமு நூலகம், சென்னை, மார்ச், 1979, பக் 92.

1880-ஆம் ஆண்டு அளவில் செய்கோனில் நகரத்தார்கள் தண்டாயுதபாணிக்குக் கோயில் கட்டினர். இக்கோயிலுக்கு உள்ள நகைகள், சொத்துகள் போன்றவை 1979-ஆம் ஆண்டு நிலவரப்படி ஆறு கோடிக்கும் அதிகமாகும்.

சொத்தின் வருவாயைக் கொண்டு நாள்தோறும் நான்கு காலப் பூசை நடக்கிறது. மாதத்தில் கார்த்திகையின்போது சிறப்பாக வழிபாடு நடக்கிறது. ஆண்டு விழாவாகத் திருக்கார்த்திகையும், தைப்பூசமும் கொண்டாடப்படுகின்றன.

விழாவின்போது உற்சவமூர்த்தி நகர்வலம் வருவதற்காகச் செட்டிநாட்டில் செய்யப்பட்ட தேர் 1933-ஆம் ஆண்டில் செய்கோனுக்குக் கொண்டு வரப்பட்டது. செய்கோனிலிருந்து செய்து கொண்டு வரப்பெற்ற அரிய விநாயகரின் சிற்பம் சிவகங்கை அருகிலுள்ள சொக்கனாதபுரம் சிவன் கோயிலில் உள்ளது. சைவம் தழைத்தோங்க செய்கோன் நகரத்தார்களால் ஒவ்வொரு திங்கட் கிழமையும் சிவபுராணம் படித்துக் கூட்டுவழிபாடு செய்யப்படுகிறது.[1]

இந்தோனேசியா

நவரத்தின வாணிகத்தில் நகரத்தார்கள் நீண்டகாலத் தொடர்பு உள்ளவர்கள். இந்தோனேசிய நாட்டில் உள்ள மக்கள் **பவளம்**, முத்து என்று தமிழ் வார்த்தைகளாலேயே அந்த மணிகளைக் குறிப்பிட்டு வருகிறார்கள். நகரத்தார்கள் இந்தோனேசிய தலைநகர் **மைடான், தில்லி,** மற்றும் **தஞ்சம்பாலை, கேந்தான், திப்பன்தங்கி** போன்ற ஊர்களிலும் வாணிகம் செய்தனர்.

மைடான் தில்லியில் தமிழ்நாட்டுப் பாணியில் தண்டாயுத பாணிக்கு ஒரு கோயில் கட்டிய பெருமை நகரத்தார்க்கு உரியது. அந்நாட்டில் கருங்கல் இல்லாததால் கோயிலின் மூலப்படிமம் வெள்ளைக்கல்லால் ஆக்கப் பெற்றிருக்கிறது. உலாவரும் உற்சவர் படிமம் மட்டும் செப்புத் திருமேனியாக வார்க்கப்பட்டுள்ளது.

மொரிசியஸ்

இந்தியப் பெருங்கடலில் ஆப்பிரிக்காவின் தென் கோடிக்கு அருகே உள்ள தனித்தீவு **மொரிசியசு**. இது நெடுங்காலம் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து இப்பொழுது சுதந்திர நாடாக உள்ளது. இங்கு வாழும் பெரும்பாலான மக்கள் இந்தியர்களே ஆவர். பிரெஞ்சுப் பண்பாடும் நாகரிகமும் இங்கு ஏற்றம் பெற்றுள்ளன.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தத் தீவின் தலைநகரான **போர்ட் லூயி** என்னும் நகரில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சிலர் சென்று வியாபாரம் செய்தனர். அவர்கள்

1. சோமலே, அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள், சோமு நூலகம், சென்னை, மார்ச், 1979, பக் 115.

அப்போது சொக்கலிங்கம் - மீனாட்சி அம்மன் கோயிலைக் கட்டினர். தைப்பூச விழாவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

இப்போது நகரத்தார் ஒருவர்கூட இத்தீவில் இல்லை. எனினும், கோயில் பூசை மற்றும் வழிபாடு நன்றாக நடைபெற்றுவருகிறது. தைப்பூச விழா மொரிசியசில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகிறது.

இங்கிலாந்து

இலண்டன் மாநகரிலும் முருகன் கோயில் ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள். சிங்கப்பூரிலும், பினாங்கிலும் உள்ள நகரத்தார் கோயில்களிலிருந்து இலண்டன் முருகன் கோயிலுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

காசி மாநகர்

கொல்கத்தாவில் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு கங்கை நதிச் சமவெளியில் விளையும் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாணிகத்தை நகரத்தார்கள் தொடங்கினார்கள்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற அவ்வையின் வாக்கைச் செவ்வையாகக் கடைப்பிடிக்கும் நகரத்தார்கள் கொல்கத்தா மண்ணை மிதித்ததும் சிங்கார முருகேசர் கோயிலைக் கட்டினார்கள்.

இறைபணிக்குக் குறைவின்றிக் கொடை கொடுக்கும் இயல்பினராதலால் 5 விழுக்காடு என்று கப்பல் கட்டணத்தில் ஒதுக்கிய தொகை வளர்ந்து நிறைந்து கங்கை பரவிப் பாயும் காசியில் கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நகரத்தார்கள் இந்துஸ்தானி கோஷாயி சாதுக்கள் மடத்தை விலைக்கு வாங்கி அதைப் புதுப்பித்து 1863-இல் ருத்ரோத்காரி ஆண்டு, ஆவணி 10-ஆம் தேதியில் நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் என்ற பெயரில் தொடங்கினார்கள். அன்று முதல் விசுவேசர், விசாலாட்சி, அன்னபூரணி முதலிய மூர்த்திகளுக்கு நாள்தோறும் பூசைகள் சிறப்பாகச் செய்யப்பெற்று வருகின்றன.

விசுவேசருக்கு அபிஷேகம் செய்ய தூய்மையான பால் குறித்த நேரங்களில் கிடைப்பதற்கான ஓர் ஏற்பாட்டையும் நகரத்தார்கள் செய்திருந்தார்கள். சொந்தமாகவே பசுமடம் தொடங்கினார்கள் .அதற்குரிய இடத்தை நகரச் சத்திரத்திற்கு அருகேயே வாங்கி 15-1-1897-இல் கட்டடம் கட்டி முடித்தனர். இதில் சொந்தமாகப் பசுக்களை வைத்துப் பால் கறந்து அபிஷேகம் நடத்திவந்தனர்.

காசி விசுவேசருக்கு நாளும் நறுமலர்கள் அனுப்ப நந்தவனம் ஒன்றை நடத்திவந்தனர். 1894-ஆம் ஆண்டில் சிக்ரா பகுதியில் பெரியதோர் இடம் வாங்கி நந்தவனம் அமைக்கப்பெற்றது. மீண்டும் 1902 மற்றும் 1905 ஆம் ஆண்டுகளில் புதிதாக இடங்கள் வாங்கி

நந்தவனம் விரிவாக்கப்பெற்றது. இது தவிர பசுமடத்துக்காகவும், நந்தவனத்துக்காகவும் 8-12-1924 - இல் காசிநாத பட்டாச்சாரி என்ற வங்காளியிடம் இடம் வாங்கியிருக்கிறார்கள். இரங்கூன் நகரத்தார்கள் அந்நகரில் நடத்திய நந்தவனத்துக்குரிய நிதியை 1955- இல் காசி நகர சத்திரத்திற்குக் கொடுத்து உதவினர்.[1]

இச்சத்திரம் தொடங்கியது முதல் இச்சத்திரத்தின் சார்பாக நடைபெற்று வரும் மூன்று காலப் பூசைகளுக்கும், உச்சிகாலப் பூசைக்கு ஒரு தடவையும், அர்த்தசாமத்துக்கு ஒரு தடவையும் ஸ்ரீகாசி விசுவேசர் கோயிலுக்குச் சத்திரத்து வேலை ஆள்களும் சாதுக்களும் அபிஷேக ஆராதனைப் பொருள்களை நாதஸ்வர இன்னிசையுடன் **சம்போ சம்போ சங்கர மஹாதேவா** என்று வழி நெடுக சொல்லிக் கொண்டே கோயிலுக்குக் கொண்டு செல்வார்கள். அதனுடன் அன்னபூரணி கோயிலுக்கும் பூசைப் பொருள்கள் கொண்டு செல்வார்கள். விசுவேசர் கோயிலுக்கு அர்த்தசாமப் பூசைப் பொருள்கள் கொண்டு போகும்போதே மறுநாள் அதிகாலையில் நடக்கும் உச்சிகாலப் பூசைக்குரிய பொருள்களையும் சேர்த்துக் கொண்டு போய்க் கொடுப்பார்கள்.

நாள்தோறும் இச்சத்திரத்திலிருந்து அனுப்பப்பெறும் பொருள்களைக் கோயிலிலேயே நைவேத்தியம் தயார் செய்ய வேண்டும் என்பதற்காகக் கோயிலுக்குள்ளேயே மடைப்பள்ளியை நகரத்தார்கள் கட்டிக்கொடுத்திருக்கின்றனர்.

ஸ்ரீவிசுவேசர் கோயிலில் உள்ள கோபுரத்தில் மெர்க்குரி விளக்குப் பொருத்திக் கொடுத்திருக்கின்றனர். பள்ளி அறைக்கு வெள்ளிக் கட்டில், நைவேத்தியம் வைப்பதற்கு உள்ள நாற்காலிகள் முதலியவற்றைக் கொடுத்திருக்கிறார்கள். நைவேத்தியத்துக்கும், தீபத்திற்கும் வேண்டிய பொருள்கள் யாவும் ஒவ்வொரு நாளும் கோயிலுக்கு அனுப்பப்பெறுகின்றன. அபிஷேகத்திற்கு கங்கை நீர் வைப்பதற்கு ஐந்து தாமிர அண்டாக்கள் கொடுக்கப்பெற்றுள்ளன.

ஐப்பசி மாதம் வசந்த பஞ்சமியிலிருந்து மாசிமாதம் சிவராத்திரி வரை குளிர் காலச் சட்டை (மக்-மல்பட்டு) சத்திரத்திலிருந்து அனுப்பப்பட்டு விசுவேசருக்கு அணிவிக்கப்பெறுகிறது.

நகரேசுவரர் கோயில்

சத்திரத்துக்குள்ளே இருக்கிறது. இந்தக் கோயிலில் உள்ள சிவபெருமானுக்கு நகரேசுவரர் என்றும், இறைவிக்கு நகரேசுவரி என்றும் பெயர்.[2] நகரேசுவரர் கோயிலின் வெளிவாசலுக்கு வெளியே

1. அருள்மிகு விசாலாட்சி அம்மன் ஆலய திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பு' மலர்,காரைக்குடி, 1999.
2. சோமலெ, (பதி) காசி விசாலாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு மலர், காசி, 1971.

மேற்குப் பகுதியில் கிழக்குப் பார்த்த முகமாக ஒரு விநாயகர் திருவுருவம் இருக்கிறது. நகரேசுவரருக்குத் திருவாட்சி உண்டு. இது கல்கத்தா தண்டாயுதபாணி கோயிலிலிருந்து கொண்டு வரப்பெற்றது. நகரேசுவரருக்கு எதிரில் நந்தியும் கருவறையின் வாயிலில் பிள்ளையார் தண்டாயுதபாணி திருவுருவங்களும் அமைந்துள்ளன. சுற்றுப் பிரகாரத்தில் கருவறை மதிலில் தட்சிணாமூர்த்தி, அண்ணா மலையார், பிரம்மா திருவுருவங்களும், பிரம்மாவுக்கு எதிரில் சண்டிகேசுவரர் திருவுருவங்களும் காணப்பெறுகின்றன. கருவறை மதிலுக்கு எதிரில் சுற்றுப்பிரகாரத் தில் நந்தியுடன் கூடிய 48 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கின்றன. தென்மேற்கு மூலையில் விநாயகரும் வடமேற்கு மூலையில் வள்ளி தெய்வயானையுடன் கூடிய சுப்பிரமணியரும் காட்சி கொடுக்கின்றனர். இரண்டு வேல், இடும்பன் ஆகியவையும் இருக்கின்றன. கல்கத்தா சின்ன வீட்டுக்காரர்களால் இவை கொண்டு வரப்பெற்றன. சுற்றுப் பிரகாரத்தில் வட பகுதியில் நகரேசுவரிக்கு உட்கோயில் இருக்கிறது. வடகிழக்கு மூலையில் வைரவர் விக்கிரகம் இருக்கிறது. இக்கோயிலில் தினசரிப் பூசைகளோடு சதுர்த்தி, பிரதோஷம், கார்த்திகை, விசாகம், சஷ்டி உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன. 11.2.1962-இல் மூர்த்திகளுக்கு மருந்து சாத்தி அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. கோயிலைப் புதுப்பித்து 29.10.1978-லும், 7.11.1994-லும் கும்பாபிஷேகம் சிறப்பாக நடை பெற்றது.[1]

காசியில் நிலையான அறநிலையம், அமைத்த பின்னர் ஏனைய அருள் தலங்களான **பிரயாகை, கயை, அயோத்தி, தாடகேசுவரம், காளிகாட்** போன்ற இடங்களுக்கும் நிலையான அறக்கொடைகள் ஆலயத் திருப்பணிகள் பலவற்றை நிறைவாகச் செய்திருக்கின்றனர்.

அருள்தலங்கள் அனைத்திலும் மனைகள் வாங்கிக் கட்டடங்கள் கட்டி அறச்செயல்கள் தொடங்கி இன்றளவும் நடை பெறும் வகையில் முன்னேற்பாடாக மூலதனம் வழங்கியுள்ளார்கள்.

பிரயாகை

அலகாபாத்து இரயில் சந்திப்பிலிருந்து 6 கீ.மீ. தொலைவிலும் அலகாபாத்து சிட்டிக்கும் காசிக்கும் இடையே செல்லும் தாராகஞ்சு இரயில் நிலையத்திற்கு அருகிலும் தாராகஞ்சு மோரியில் நகரச் சத்திரம் கட்டப்பெற்றிருக்கிறது. கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய மூன்று ஆறுகளும் கூடும் திருவேணி சங்கமத்துக்கு அண்மையில் இருப்பதால் இந்த இடத்தில் சத்திரம் கட்ட கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நகரத்தார்கள் முடிவு செய்தனர். அதன் பயனாகச்

1. அருள்மிகு விசாலாட்சி அம்மன் ஆலய திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பு மலர், காரைக்குடி, 1999.

சத்திரம் 22.7.1891-இல் தொடங்கப் பெற்றது. 1891, 1901, 1913 ஆகிய ஆண்டுகளில் மூன்று வீடுகளும் அதனைச் சார்ந்த இடங்களும் ரூ5825/-க்கு வாங்கப்பட்டன. அதில் இரண்டு வீடுகளில் வேண்டிய மாற்றங்கள் செய்து கட்டப்பெற்றன. ஒரு வீடு மட்டும் 1960-இல் ரூ5000/-க்கு விற்கப்பெற்றது. சத்திரத்தில் யாத்ரிகர்கள் தங்க சத்திரம், யாத்திரைக் கட்டு ஆகிய இரண்டு கட்டுகள் இருக்கின்றன. சத்திரத்தைச் சேர்ந்த வீடுகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன.

இச்சத்திரத்திற்கு விகாரி ஆண்டு, தைத் திங்கள் முதல் தேதி இரங்கோன் நகரத்தார்களால் வழங்கப்பெற்ற நடராசர், சிவகாமி அம்மன், மாணிக்கவாசகர் படிமங்கள் காசி சத்திரத்தில் இருக்கின்றன.

அயோத்தியா

இராமர் பிறந்த தலமாதலால் அயோத்தி புனிதமாகக் கருதப்படுகிறது. ஆகையால் கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் காசிக்குப் போகும்போது அயோத்திக்கும் சென்று அங்குள்ள சரயுநதியில் தீர்த்தம் ஆடி இராமரையும் தரிசனம் செய்து வர எண்ணினர். அதன் பயனாக சரயுநதிக்குச் செல்லும் பெரிய சாலையில் துளசிதாஸ் பூங்காவுக்கு அருகே இருக்கும் காலி இடத்தை விலைக்கு வாங்கி செட்டிநாட்டி லிருந்து தச்சர், கொல்லர்களை வரவழைத்து ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டினார்கள். எல்லா வேலையும் முடிந்து 2.9.1883-இல் சத்திரம் செயல்படத் தொடங்கியது. சத்திரம் இரயில் நிலையத்திலிருந்து 3.கி.மீ.தொலைவில் இருக்கிறது.

கயா


கயா பீகார் மாகாணத்திலுள்ள புனிதத்தலம். பல்குனி ஆற்றின் கரையில் அமைந்த கோயிலில் விஷ்ணுபாதம் இருக்கிறது. இப் பாதத்தில் முன்னோர்களுக்காகப் பிண்டம் போடுவதை இந்துக்கள் புனிதமான கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். காசிக்கு நகரத்தார்கள் போகத் தொடங்கியது முதலே கயாவுக்கும் போய்த் தலசிராத்தம் செய்து பிண்டம் போட்டு வந்திருக்கிறார்கள். மனிதன் பற்று அற்றவனாக இருக்க வேண்டுமென்ற எண்ணத் தினால் விருப்பமான பழம், காய், இலை முதலிய மூன்றிலும் ஒவ்வொன்றை இனி கை விடுவதாக வடபால விருட்சத்தில் உறுதி செய்து கொடுப்பது இந்தத் தலத்தில் வழக்கமாகும். இங்குப் பல்லாண்டுகள் வாடகைக் கட்டடத்தில் சத்திரம் நடைபெற்று வந்தது. கல்கத்தாவில் தொழில் செய்து வந்த நகரத்தார்கள் 1884-இல் ரூ.2,500-க்கு சந்த் சவுரா என்னும் பகுதியில் வாங்கிய இடத்தில் கட்டடம் கட்டினார்கள். புதிதாய்க் கட்டப்பெற்ற சத்திரம்



வரவேற்பு வளாகம்
நகரத்தார் வீடு



குளத்தின் பின்னணியில் வீட்டின் தோற்றம்
வலையப்பட்டி



நகரத்தார் வீடு - முகப்புத் தோற்றம்
கடியாபட்டி




நகரத்தார் வீடு - பின்புறத் தோற்றம்
கடியாபட்டி



வீட்டின் மேல் கோப்பு - கடியாபட்டி




முகப்புத் தோற்றம் - அரிமளம்




இரண்டாம் கட்டு - உட்புறத் தோற்றம்
நகரத்தார் வீடு




மூன்றாம் கட்டு - உட்புறத் தோற்றம்
நகரத்தார் வீடு




உட்புறத் தோற்றம்-செட்டியார் வீடு



வேலைப்பாடு மிக்க சன்னல்-அரிமளம்



அலங்காரத்துடன் கூடிய மாடம்-கடியாபட்டி



சூரியப்பலகை - வாயில் முகப்பு-நகரத்தார் வீடு



மரவேலைப்பாட்டுச் சிற்பம்-முகப்பு வாயில்



முகப்புத் திண்ணையில் அமர்ந்து
வரவேற்கும் நகரத்தார்கள்



அரசாணிக்கால் கட்டுதல்
திருமண நிகழ்ச்சி



திருப்பூட்டுதல்
நகரத்தார் திருமணம்



மணமக்கள் மாலை மாற்றுதல்
நகரத்தார் திருமண நிகழ்ச்சி



திருமணச் சடங்கு-மங்கல நிகழ்ச்சி



திருமணச் சடங்கு-மங்கல நிகழ்ச்சி



இசைவு பிடிமானம்-திருமண ஒப்பந்தம்




மணமகள் சடங்கு
திருமண நிகழ்வு



நகரத்தார் மணமக்கள்




திருமண நிகழ்வில் ஆச்சிமார்கள்
நகரத்தார் திருமணம்



திருமண விருந்து
நகரத்தார் திருமண நிகழ்வு



மருந்து குடித்தல்
கருவுறும் பெண்ணின் சடங்கு



தங்க - வெள்ளி தகடு
போர்த்திய சங்கு



பாரம்பரியமான முறையில்
மருந்து புகட்டும் ஆச்சி



தொட்டில் கட்டுதல்
பாரம்பரிய சடங்கு




குழந்தைக்கு காது குத்துதல்
நகரத்தார் சடங்கு



குழந்தைக்கு முடி இறக்குதல்
நகரத்தார் சடங்கு



34 உருப்படிகள் கொண்ட கழுத்துரு
மங்கலச் சின்னம்



மணமகள் அணியும் கழுத்துரு
நகரத்தார் மங்கலச் சின்னம்

19.4.1910-இல் செயல்படத் தொடங்கியது. பின்னர் 1911 - இல் ரூ2500க்கு ஒரு இடமும், 1928-இல் ரூ1800 க்கு ஒரு இடமும் வாங்கி விரிவாக்கம் செய்து இருக்கிறார்கள். நகரச்சத்திரம் செட்டி நாட்டுப் பாணியில் நன்றாகக் கட்டப்பெற்றிருக்கிறது. முன் ஓட்டுவாரம், அதற்கு அடுத்தது ஒரு ஹால், அதில் நடராசர் திருவுருவம் வைக்கப் பெற்றிருக்கிறது. அந்த ஹாலை நடராசர் ஹால் என்று அழைக் கிறார்கள். இந்த நடராசருக்குத் தினசரிப் பூசைகள் நடை பெறுகின்றன.[1]

கல்கத்தா நகரத்தார் ஹவுஸ்

நகரத்தார்கள் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்த துறைமுகப்பட்டினங்களுள் கல்கத்தா முக்கியமானது. கல்கத்தா விலிருந்து பர்மாவுக்கும், இலங்கைக்கும் அரிசி, நவதான்யம் முதலியவற்றை ஏற்றுமதி செய்து வந்தார்கள். ஏறத்தாழ 120 கடைகள் இருந்துவந்தன. நகரத்தார்கள் நடத்திய கடைகள் அன்னிய நாட்டு வியாபார சங்கங்களுடனும், ஆங்கிலேய கம்பெனிகளுடனும் வாணிக உறவு கொண்டு அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டனர். எல்லாக் கடைகளிலிருந்தும் ஏற்றுமதி செய்த பொருள்களுக்குக் கப்பல் கட்டணத்துக்குச் செலுத்திய தொகைகளில் 100 ரூபாய்க்கு 5 ரூபாய் வீதம் ஆண்டு இறுதியில் கப்பல் கம்பெனியிலிருந்து திரும்ப வாங்கப்பட்டது. இவ்வாறு கிடைத்த ரிபேட் தொகையைத் தருமப் பொது பண்டு என்று வைத்திருந்தார்கள். இவ்வகையில் ஆண்டு தோறும் ரூ25,000 வரை வருவாய் வந்து கொண்டிருந்தது.

இங்கு 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 120 கடைகள் இருந்தன. ஆனால், அவை படிப்படியாகக் குறைந்தன. 1861-இல் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டதும் பர்மா அரிசிக்கு ஐரோப்பாவில் நிலையான மார்க்கெட் ஏற்பட்டது. அதன் விளைவாகக் கல்கத்தா நகரத்தார்கள் சிலர் அரிக்கனில் நெல் அரைக்கும் இயந்திரங்களை நிறுவினர். சிறிது சிறிதாக இரங்கூனில் நகரத்தார்களின் கடைகள் கூடிக்கொண்டு வந்தன. இவ்வாறு ஏற்பட்டபோது கல்கத்தா நகரத்தார்களும் இரங்கூனில் தொழில் தொடங்கினர். இரங்கூனில் தொழில் இலாபகரமாக நடைபெற்று வந்ததும் கல்கத்தாவில் தொழில் சுருங்கியது. இரங்கூன் தொழிலுக்குக் குறைந்த வட்டிக்குக் கல்கத்தா வங்கிகளிலும், மார்வாரிகளிடமும் பணம் கடன் வாங்கி வியன் வட்டிக்கு இரங்கூனில் அடைப்பதே கல்கத்தா கடைகளின் முக்கியமான தொழிலாக இருந்து வந்தது. கடைகளின் எண்ணிக்கை யும் 120 லிருந்து 43 ஆகக் குறைந்தது. அதன் பிறகு கடைகள் கூடியும் குறைந்தும் வந்தன. 1883-ஆம் ஆண்டிலிருந்து கல்கத்தா நகரத்தார்கள் ஒற்றுமையாக இருந்து கப்பல் கம்பெனிகளிடம்

1. சோமலெ, (பதி) காசி விசாலாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு மலர், காசி, 1971

B-20

ரூ.100- க்கு ஒரு ரூபாய் வீதம் மட்டுமே கமிஷன் வாங்குவதென்றும் யாரும் கூட்டியோ குறைத்தோ கமிஷன் வாங்குவதில்லை என்றும் ஒப்பந்தம் செய்துக்கொண்டதிலிருந்து இந்த விவரம் தெரிகிறது.

கல்கத்தாவில் தொழில் நன்றாய் இருந்தபோது கப்பல் கம்பெனி வாயிலாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.50,000 வரை ரிபேட் தொகை கிடைத்ததால் பல அறச்செயல்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் கல்கத்தா நகரத்தார்களுக்கு ஏற்பட்டது. கல்கத்தாவுக்கு நகரத்தார்கள் வந்தது முதலே தலை சிறந்த தலமாகிய காசிக்குப்போய் விசுவேசுவரரை வழிபட்டு வந்தனர். கல்கத்தாவுக்குக் கப்பலில் வந்தும் சிலர் இராமேசுவரத்திலிருந்து காசிவரை நடந்து சென்றும் வந்தனர். காசியாத்திரை செல்லும் நகரத்தார்கள் தொகை பெருகிற்று. கல்கத்தா நகரத்தார்களிடம் தருமப் பண்டு தொகையும் பெருகிற்று. இந்த நிலையில் நகரத்தார்களுக்கென்று காசியில் ஒரு சத்திரம் கட்டவேண்டுமென்று முடிவு செய்து 1863-இல் கல்கத்தா நகரத்தார்கள் காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தை நிறுவினர்.

தாரகேசுவரம்

தாரகேசுவரம் என்பது ஹவுராவிலிருந்து மின்சார இரயிலில் செல்லக்கூடிய ஊர். இது 55 கி.மீ. தொலைவில் அமைந்தது. இந்த சிவத்தலம் வங்காளிகளால் மிகப் புனிதமாகக் கருதப்படுகிறது. இங்குக் கோயில் கொண்டுள்ள இறைவன் பெயர் தாரகநாதர். இது சுயம்புலிங்கம். காசி யாத்திரையாக வரும் நகரத்தார்கள் தாரகேசுவரத்துக்கும் போய் வந்தனர். அவ்வாறு போய் வருபவர்களின் வசதிக்காக மகந்திடம் இடம் வாங்கிக் கல்கத்தா நகரத்தார்கள் ரூபாய் 15,000 செலவில், 1890-ஆம் ஆண்டு மடம் கட்டி ஆர்ச்சும் அமைத்தனர். பல ஆண்டுகள் இந்தத் தலத்தில் அன்னதானம் செய்யப்பட்டது. 1941 - வரை தாரகநாதருக்கு நகரத்தார்கள் பாலாபிஷேகம் ஒவ்வொரு நாளும் செய்துவந்தார்கள். கல்கத்தா நகரம் சப்பானியர் குண்டு வீச்சுக்கு உள்ளானபோது கல்கத்தா நகரத்தார் சிலர் தாரகேசுவரம் நகர மடத்தில் தங்கினர். யாத்திரைக் காரர்கள் தாரகேசுவரத்துக்குப் போய் வருவதும் அருகிவிட்டது. மடம் இரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் கோயிலுக்கு அண்மையிலும் கடைத்தெருவின் நடுவேயும் உள்ளது. வங்காளிகள் மடத்தைச் செட்டிபாடி என்று குறிப்பிட்டு வருகிறார்கள். மடத்தின் சில பகுதிகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. செட்டியார்கள் வெட்டிய குளம் ஒன்றும் தாரகேசுவரத்தில் இருக்கிறது.[1]

⌘ ⌘ ⌘

1. அருள்மிகு விசாலாட்சி அம்மன் ஆலய திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பு மலர், காரைக்குடி, 1999.

20. நகரத்தார்களின் தமிழ்வளர்ச்சி

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரும் தமிழ் வளர்ப்பதற்குக் கடமைப்பட்டவர்கள் என்றாலும் நகரத்தார் சமூகம் அக் கடமையை நன்கு புரிந்து, தமது பேச்சு வழக்காலும், புலமையாலும், கொடை அளிக்கும் தன்மையாலும், ஆர்வ மிகுதியாலும் இதழியல் துறையில் ஆற்றியிருக்கும் தமிழ் வளர்ச்சிப் பணி காலத்தால் அழியாது இவர்களின் தமிழுக்கான பங்களிப்பை நிலைநிறுத்தும் என்றால் அது மிகையாகாது.

பாரதி நூல்கள் மலர்ந்தது 1907இல். 1917-இல் இரஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து உலகெங்கிலும் மொழி, இலக்கியம், கலை எல்லாவற்றிலும் மலர்ச்சி ஏற்பட்டது. இரண்டாவது உலகப் போருக்குப் பின் 1937-இல் மீண்டும் மலர்ச்சி ஏற்பட்டது. 1947 விடுதலைக்குப் பின் இந்திய மொழிகள் அனைத்திலும் மறுமலர்ச்சி இயக்கம் வீறு கொண்டது.

நகரத்தார்கள் தமிழ் நாட்டில் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் பல நிறுவி கல்வி மறுமலர்ச்சிக்கு வித்திட்டார்கள். பல கோடித் தமிழ் மக்கள் தொகையில் குறைந்த மக்கள் தொகையுள்ள இந்தச் சமூகம் தமிழ் மறுமலர்ச்சிக்குப் பல் வேறு வகைகளில், பல்வேறு நிலைகளில் தன் பங்களிப்பைச் செய்துள்ளது.

கல்வி நிறுவனங்கள், பதிப்பகங்கள், பத்திரிகைகள், இலக்கிய அமைப்புகள், நூலகங்கள் மூலம் துறைதோறும் தமிழ் மறுமலர்ச்சிக்கு வழிவகை செய்துள்ளது.

அண்ணாமலை பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக் கழகம், தியாகராசர் கல்லூரி முதலிய பெரிய நிறுவனங்களை உருவாக்கி, முதல் தரமான பேராசிரியர்களை நியமித்துப் புலமைச் செல்வர்களைப் போற்றி, அறிஞர்களுக்கு ஆதரவு அளித்து மிகச் சிறந்த கல்வித் திட்டங்கள் மூலம் தமிழ்க் கல்வியில் புதிய விழிப்புணர்வு உருவாக்கப்பட்டது.

தமிழ் மறுமலர்ச்சியில் பல்வேறு நிலைகளில், ஆக்கப் பணிகள் செய்தவர்கள், செய்கிறவர்களின் தாயகமாக இந்நிறுவனங்கள் விளங்குகின்றன. இந்தத் தடாகத்தில் மலர்ந்து தமிழ் மணம் பரப்பும் மலர்கள் பல நூறாகும். இந்தச் சுடரொளியில் ஏற்றப்பட்ட சுடர் விளக்குகள் தமிழ் மறுமலர்ச்சியில் ஒளிவிளக்குகளாகச் சுடர் வீசுகின்றன.

பதிப்பகங்கள் வாயிலாக நகரத்தார்கள் தமிழ் மறுமலர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணிகள் பேராய்வுக்கு உரியன. நூல் வெளியீட்டைத் தொழிலாகச் செய்யாமல் தொண்டாகச் செய்து வருகிறார்கள். விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய எழுச்சியை உருவாக்கிய புத்தகங்களை வெளியிட்ட பதிப்பகங்கள் அனைத்தும் நகரத்தார் பதிப்பகங்களே.

ஊதிய நோக்கைக் கருதாமல் உயர்தரமான நூல்களைக் குறைந்த விலையில் வெளியிடும் பதிப்பகங்கள் நூற்றுக்குத் தொண்ணூறு நகரத்தார்களால் நடத்தப்படுபவை. பாரதி வழியில் தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றிய நான்கு கவிஞர்களின் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்ட பதிப்பகங்கள் நகரத்தார் பதிப்பகங்களே.

பாரதியின் தேசியக் கொள்கைகளை நாமக்கல் கவிஞர் பாடினார். சமுதாய விடுதலையைப் புரட்சிக் கவிஞரும், பக்தி நெறியைக் கவியோகி சுத்தானந்த பாரதியும், குழந்தைப் பாடல்களைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் ஏற்று அவர் வழியில் பாடினார்கள். சுத்தானந்தர் நூல்களை அன்பு நிலையமும், பாரதிதாசன், கவிமணி பாடல்களைப் பாரி நிலையமும், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை பாடல்களைத் தமிழ்ப் பண்ணையும் வெளியிட்டு 50 ஆண்டுகளாகத் தமிழ்க் கவிதை நூல்கள் தடையின்றி ஆறாகப் பெருகி ஓட வழிவகை செய்த பதிப்பகங்களாகும்.

பதிப்பகங்கள்

நகரத்தார்கள் எப்பகுதிக்குச் சென்றாலும் தங்கள் நாட்டுப் பண்பையும், தமிழ்ப் பண்பாட்டு மரபையும் விட்டு விலகாதவர்கள்.

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்"

எனும் குறள் நகரத்தார்களுக்கே பொருந்தும். தம் உழைப்பாலும், உயர் பண்புகளாலும் முன்னேறிய நகரத்தார்கள் பதிப்பகத் துறையிலும் சிறந்து விளங்குகின்றனர். தமிழ்மொழியை வளப் படுத்துவதிலும், நூல் வெளியிடுவதிலும் செட்டிநாடே முன்னணியில் இருந்து வருகிறது. தமிழ்ப் புலவர்களை ஆதரித்து அவர்களது படைப்புகளைப் பொருட்பயன் கருதாது நூலாக வெளிவரச் செய்த நகரத்தார்கள் பலராவர். தமிழ்ப் பதிப்பகத் துறையில் அன்று முதல் இன்றுவரை இந்தியச் சுதந்திரக் காலத்தில் இருந்து புத்தக வெளியீட்டில் முன்னணியினராக இருப்பவர் நகரத்தார்களே ஆவர். பதிப்பகத் துறையில் நகரத்தார்கள் பங்கு குறித்து சிறப்பாக **'செட்டிநாடும் செந்தமிழும்'** என்னும் நூலில் சோமலெ விரிவாகக் கூறியுள்ளார். அவற்றின் சுருக்கத்தை இங்குக் காணலாம்.

1. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 612 – 628.

தென் இந்தியச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்(1921)

இது 1920-21இல் தொடங்கப்பட்டது. செட்டி நாட்டில் பலர் பங்குதாரர்களாகச் சேர்ந்து இக்கழகத்திற்கு முதல் பங்கு அளித்து உதவினர். இக்கழகத்தின் வித்தும் வேருமாக விளங்குபவர் பாகனேரி காசிவிசுவநாதன் செட்டியார். பதிப்புலகில் கழகத்தின் சாதனை இமயச் சாதனையாகும். மூல நூல், உரை நூல், விளக்கங்கள், ஆய்வுகள் அனைத்திற்கும் கழகம் தாய்வீடாகும். பழந்தமிழின் காப்பகமாகவும், தமிழ் மீட்சியின் முன்னோடியாகவும் கழகம் திகழ்கிறது.

அன்பு நிலையம்(1937)

செட்டி நாட்டன்பர் சிலரால் 1937-இல் சிங்கப்பூரில் தொடங்கப் பட்டது. நகரத்தார் குடும்பங்களில் நடைபெறும் திருமணம், புதுமை போன்ற குடும்ப விழாக்களின் நிகழ்ச்சிகளை யொட்டி பொருள் பெற்று ஒவ்வொரு நிகழ்ச்சியின் நினைவாகவும் சுத்தானந்த பாரதியாரின் நூல்களை வெளியிட்டு அவர் புகழைப் பரப்பினர். முதன்முதலில் வெளிநாட்டு ஆசிரியர்களான **டாண்டே, விக்டர் ஹ்யூகோ, எமர்சன், வால்ட் விட்மன்** ஆகியோரை அறிமுகப் படுத்தியது அன்பு நிலையம். தமிழ்க் காப்பியங்களை எளிதில் விளங்கும்படி தெளிவான உரைநடையில் தமிழில் தொடங்கியதும் அன்பு நிலையமே. 1947 வரை அன்புநிலையம் சிறந்து விளங்கியது.

நவயுக பிரசுராலயம்(1939)

இது 1939-இல் பரா. மணிக்கொடி சீனிவாசன், டிஎஸ். சொக்க லிங்கம் ஆகிய இருவரால் தொடங்கப்பட்டது. காரைக்குடி மெ.நா.சித. சிதம்பரம் செட்டியார் அவர்களால் இது தொடர்ந்து நடத்தப்பட்டது. **ஜவஹர்லால் நேருவின் 'உலக சரித்திரம்' டாக்டர். இராஜேந்திர பிரசாத்தின் 'பிரிக்கப்பட்ட இந்தியா'** ஆகிய சிறந்த நூல்கள் இவர்கள் வெளியீடு. 250 பக்கங்களுக்கு மேற் பட்ட பிறநாட்டு அரசியல் - இலக்கிய நூல்களை 50 காசு விலையில் வெளியிட்டுத் தமிழகமெங்கும் பரவவிட்ட பெருமை இப்பிரசுரத்திற்கே உரியது.[1]

சக்தி காரியாலயம்(1939)

இது 1939-இல் வை. கோவிந்தன் அவர்களால் தொடங்கப் பட்டது. பாரதியாரின் மனைவி செல்லம்மாள் எழுதிய பாரதியார் வாழ்வு பற்றிய கட்டுரைகளை இவ்விதழ் வெளியிட்டது.

1. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 612 – 613

ஆங்கிலத்தில் வெளிவரும், 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' பாணியில் தமிழின் முதல் இதழ் இது. புதிய உத்திகளோடு தரமான இதழியல் நடத்தும் முயற்சியில் நகரத்தார்க்குக் கிடைத்த வெற்றிக்குச் சான்று, சக்தி.

புதுமலர்ச்சி நூற்பதிப்புக் கழகம்(1939)

செட்டிநாட்டு இளைஞர்கள் சிலரால் 1939-இல் இரங்கூனில் தொடங்கப்பட்டது. டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்களால் தொகுக்கப்பட்ட மகாத்மா காந்தி என்ற நூலையும், தொடர்ந்து அறிஞர். சாமிநாத சர்மா அவர்களின் நூல்களையும் வெளியிட்டனர்.

தமிழ்ப் பண்ணை

திரு. சின்ன அண்ணாமலை, திரு. ட்ரோஜன் அண்ணாமலை செட்டியார் மற்றும் பலர் சேர்ந்து தொடங்கியது. அரசியல் சார்ந்த நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளது.

சிதம்பரநாதன் கம்பெனி(1941)

இது 1941-இல் திரு. காந்தி அண்ணாமலை அவர்களால் இரங்கூனில் தொடங்கப் பெற்றது. உயர்ந்த மனிதர்களின் வாழ்க்கை வரலாறு சிலவற்றை வெளியிட்டது.

பழனியப்பா பிரதர்ஸ்(1941)

இராயவரம் செ.மெ. பழனியப்ப செட்டியார், அவர் தம்பி செல்லப்ப செட்டியார் இருவரால் 1941-ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. புகழ்பெற்ற கோனார் துணைப்பாட நூலையும், பண்டித மணி, டாக்டர். அ. சிம்பரநாதன் செட்டியார் போன்ற பல அறிஞர் களின் இலக்கிய நூல்களையும் வெளியிட்டது. மத்திய மாநில அரசுகளின் பரிசினைப் பெற்ற 'மலரும் உள்ளம்' என்னும்குழந்தைக் கவிஞரின் முதல் நூலை வெளியிட்ட பெருமை இப்பதிப்பகத்திற்கு உண்டு.[1] நாட்டுக்கு உழைத்த நல்லவர் வரிசையில் 60 நூல்களும் அறிவியல் அறிஞர் வரிசையில் 26 நூல்களும் சமயம் வளர்த்த சான்றோர் வரிவையில் 10 நூல்களும் இதுவரை வெளிவந்துள்ளன.[2] அலுவலகம் ராயப் பேட்டை பீட்டர்ஸ் சாலை எண் 25-இல் செயல்பட்டு வருகிறது.

கமலா பிரசுராலயம்(1943)

இது முல்லை முத்தையா, கண்டனூர் நா. இராமநாதன், ஆனந்த விகடன் துணை ஆசிரியர் கே. அருணாசலம் ஆகியோரால் 1943-இல் சென்னையில் தொடங்கப்பட்டது.

1. பி.வி.கிரி, பதிப்பும் மதிப்பும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2005, பக், 29 – 30.

2. எங்கள் வெளியீடுகள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2004, பக் 40.

ஸ்டார் பிரசுரம்(1942)

இது 1942-ஆம் ஆண்டு திருச்சியில் தொடங்கப்பட்டது. இதன் கிளைகள் காரைக்குடி, மதுரையிலும், 1944-ஆம் ஆண்டு சென்னையிலும் தொடங்கப்பட்டது. காரைக்குடியிலிருந்து வி.ஆர்.எம் செட்டியார் கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் எழுதிய நூல்களின் மொழி பெயர்ப்புகளை வெளியிட்டு வந்தார். சென்னை ஸ்டார் பிரசுரத்தார் அறிஞர். சாமி. சிதம்பரனார், புதுமைப்பித்தன், இரகுநாதன், விந்தன் ஆகியோரின் நூல்களை வெளியிட்டுவந்தனர்.

பாரி நிலையம்(1946)

பாரி நிலையம் சென்னையில் அரிமளம் க.அ. செல்லப்பன் அவர்களால் 1946-ஆம் ஆண்டு சென்னை பிராட்வே சாலையில் தொடங்கப்பட்டது. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, ராஜாஜி, பாரதிதாசன், டாக்டர் மு.வரதராசனார், கு. இராஜவேலு, பேராசிரியர் வையாபுரிபிள்ளை, அறிஞர் சி.என். அண்ணாதுரை, கி.ஆ.பெ. விசுவநாதம், சோமு. மயிலை, சீனி. வேங்கடசாமி, டாக்டர். வ.சுப. மாணிக்கம், அறிஞர் சோமலெ ஆகியோர் நூல்களையும் பண்டைய இலக்கியங்களையும் பாரிநிலையம் வெளியிட்டிருக்கிறது. இவர்களது 'உலக நாடுகள் வரிசை' நூல்கள் குறிப்பிடத்தக்கது. 900 நூல்கள் வெளியிட்டுள்ளனர்.[1]

கமர்ஷியல் பிரிண்டிங் அண்டு பப்ளிஷிங் ஹவுஸ்

இது ராஜா சர். அண்ணாமலை செட்டியார் குடும்பத்தாரால் சென்னை அரண்மனைக்காரத் தெரு எண் 46-இல் தொடங்கப் பட்டது. ஆங்கில எழுத்தாளர் டால்ஸ்டாயின் நூல்களின் மொழி பெயர்ப்புகளும், கல்கியின் நாவல்களும் இங்கு வெளியிடப் பட்டன.

சோமு நூலகம்(1978)

அறிஞர் சோமலெ அவர்களின் மகன் லெ. சோமசுந்தரம் அவர்களால் சென்னை சாஸ்திரி நகரில் தொடங்கப்பட்டு, சோமலெ மற்றும் டாக்டர். டி.பி. சித்தலிங்கம் அவர்களின் நூல்களை வெளியிட்டது. 1978-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1982 வரை மட்டுமே நடத்தப்பட்டது.[2]

செல்வ நிலையம் (1977)

தேவகோட்டையைச் சேர்ந்த திரு. முத்துக் கருப்பன் அவர்களால் சென்னையில் தொடங்கப்பட்டது. எனினும் 1977 முதல் 1984 வரையே நடத்தப்பட்டது. 35 நூல்களை வெளியிட்டுள்ளனர்.

---

1. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 616 – 17

2. சோமலெ, மேலது, பக், 617.

தமிழ்ப் புத்தகாலயம்(1946)

இது 1946-இல் திரு. கண. முத்தையா, திரு. ஆ. பழ. சொக்க லிங்கம் இருவரால் ஆரம்பிக்கப்பட்டது. இலக்கிய விமரிசன நூல்கள் இவர்களுடைய சிறப்பு. ஏறத்தாழ 600 நூல்களை வெளியிட்டுள்ளனர்.

இன்ப நிலையம்(1947)

இது தேவகோட்டை சோம. சுவாமிநாதன் அவர்களால் 1947-ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. ம.பொ.சி., நாமக்கல் கவிஞர், இலஷ்மி, பெ.தூரன், சோமலெ ஆகியோரின் நூல்களை வெளியிட்ட இந்நூலகம் 1970 வரை இயங்கியது. கப்பலோட்டிய தமிழன், கட்டபொம்மன் ஆகியவை குறிப்பிடத் தக்க நூல்கள்.

டியூகோ பப்ளிஷிங் ஹவுஸ்(1947)

இது 1947-இல் இராம. சாத்தப்ப செட்டியாரால் பாட நூல்களை வெளியிடுவதற்காக இராமச்சந்திரபுரத்தில் தொடங்கப் பட்டது.

பழனி பிரசுரம்(1948)

இது 1948-இல் இராங்கியம் பெரி. முத்துப் பழநியப்ப செட்டியாரால் புதுக்கோட்டையில் தொடங்கப்பட்டது. இதன் கிளைகள் சென்னையிலும், திருச்சியிலும் உள்ளன. இப்பிரசுரத்தில் அகிலனின் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டனர்.

பிரேமா பிரசுரம்(1950)

இது 1950-இல் 'காதல்' அரு. இராமநாதன் அவர்களால் சென்னையில் தொடங்கப்பட்டது. இப்பிரசுரத்தில் 'சிந்தனையாளர் வரிசை' எனும் தலைப்பில் தொடர் நூல்கள் வெளிவந்துள்ளன. அலுவலகம் கோடம்பாக்கம் ஆற்காடு சாலையில் செயல்பட்டது.

பாரதி பதிப்பகம்(1952)

1952-இல் திரு. பழ. சிதம்பரம் அவர்களால் சென்னையில் தொடங்கப்பட்டது. கல்கி, இராஜாஜி நூல்களையும், கல்கியின் கட்டுரைகளையும், டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி நூல்களையும் இப்பதிப்பகம் வெளியிட்டுள்ளது.[1]

மலர் நிலையம்(1953)

சென்னையில் 1953-இல் கொப்பனாபட்டி ந. பழனியப்பன் அவர்களால் தொடங்கப்பெற்று 1962 வரை நடத்தப்பட்டது. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை, பி.எஸ். இராமையா ஆகியோர் நூல்களை வெளியிட்டுள்ளது.

1. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 620.

வள்ளுவர் பண்ணை(1958)

இதுவும் கொப்பனாபட்டி ந. பழநியப்பன் அவர்களால் 1958-இல் சென்னையில் தொடங்கப்பட்டது. இவர்களின் வெளியீடு களில் சிறுவர்களுக்கான நூல்கள் பலவும் கால்டுவெல் ஒப்பிலக் கணமும் குறிப்பிடத்தக்கது. 300க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது.[1]

தமிழகம்(1957)

முல்லை முத்தையா அவர்களால் 1957-இல் சென்னையில் தொடங்கப்பட்டு 1960 வரை நடத்தப்பட்ட இந்நூலகத்தில் 42 நூல்கள் வெளிவந்துள்ளன. பி.ஸ்ரீ. க.நா.சு, முல்க்ராஜ் ஆனந்த், டாக்டர். வே. இராகவன் ஆகியோர் நூல்களை வெளியிட்டுள்ளனர். அலுவலகம் 59 பிராட்வே சாலையில் இயங்கியது.

செல்விப் பதிப்பகம்

1954-ஆம் ஆண்டு காரைக்குடியில் வீர. சிவராமன் அவர்களால் தொடங்கப்பட்டது. டாக்டர் வ.சுப. மாணிக்கம், டாக்டர் மா. இராசமாணிக்கம், சா. கணேசன், முடியரசன், தமிழண்ணல், ஜனககுமாரி, சுத்தானந்த பாரதியார், வள்ளியப்பா ஆகியோரின் நூல்கள் இப்பதிப்பக வாயிலாக வெளிவந்தன.

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

முறையூர் அரு. சொக்கலிங்கம் அவர்கள் 1905-ஆம் ஆண்டு இப்பிரசுரத்தை இரங்கூனில் தொடங்கினார். தொழில் முறையில் நகரத்தார்கள் தொடங்கிய பதிப்பகங்களுள் காலத்தால் மிகப் பழைமையானது இதுவே. இரண்டாம் உலகப் போருக்குப் பின் இப்பிரசுரம் புதுக்கோட்டைக்கு மாற்றப்பட்டது. அறிஞர். வெ. சாமிநாதசர்மாவின் நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளது.

விஜயா பதிப்பகம்

திரு. மு. வேலாயுதம் அவர்களால் 1976-இல் கோவையில் தொடங்கப்பட்டது. 1978 - ஆம் ஆண்டு கோவை டவுன் ஹாலில் வாசகர் திருவிழாவை முதன் முறையாக நடத்தியது. இது தமிழ்நாட்டிற்கே முற்றிலும் புதியது எனலாம்.[2] சிற்றூர்களிலும், தமிழ்நாட்டுக்கு வெளியேயும் புத்தகக் காட்சி ஏற்பாடு செய்து தமிழ்நூல் விற்பனையில் சாதனை புரிந்து வருகிறது இப்பதிப்பகம்.

பாரி புத்தகப் பண்ணை(1963)

அகிலனின் நூல்களை வெளியிடுவதற்காகவே 1963-இல் திரு. கண. முத்தையா, திருமதி. செ. வள்ளியம்மை ஆச்சி ஆகியோரால் தொடங்கப்பட்டது. வெளியிட்ட நூல்கள் - 100. அலுவலகம் திருவல்லிக்கேணி, பாரதியார் சாலையில் இயங்கியது.

---

1. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 621.
2. பி.வி.கிரி, பதிப்பும் மதிப்பும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2005, பக், 29 – 30.

அருணோதயம்(1953)

1953இல் திரு. லெ. அருணாசலம் என்ற அருணன் அவர்களால் சென்னையில் தொடங்கப்பட்டது. இலக்கியம், நாவல்கள், கட்டுரைகள், சிறுவர் நூல்கள், பொது என ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிட்டுள்ளது.

மணிமேகலைப் பிரசுரம்(1955)

1955இல் சென்னையில் திரு. தமிழ்வாணன் அவர்களால் தொடங்கப்பட்டது. அரசாங்க விதிமுறைகள், சட்டம் பற்றிய நூல்கள், அறிவு வளர்ச்சி நூல்கள், வாழ்க்கையில் வெற்றி பெற உதவும் நூல்கள் எனப் பல தொடர் வரிசைகள் இப்பதிப்பக வெளியீடாகும்.

மீனாட்சி புத்தக நிலையம்

அரிமளம் திரு. செ. செல்லப்பன் அவர்களால் 1960-இல் மதுரையில் தொடங்கப்பட்டது. ஜெயகாந்தன், டாக்டர் தா.ஏ. ஞான மூர்த்தியின் நூல்களை வெளியிட்டுள்ளது.

ஐந்திணைப் பதிப்பகம்(1984)

1984-இல் இராயவரம் குழ. கதிரேசன் அவர்களால் தொடங்கப் பட்டு சென்னையில் இயங்கி வருகிறது. புதுமைப்பித்தன், தொ.மு.சி. ஜெயகாந்தன், தி. ஜானகிராமன், டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன், லாசரா, மது.ச.விமலானந்தம், டாக்டர். ஜான் சாமுவேல், டாக்டர். பொற்கோ ஆகியோரின் நூல்களை வெளியிட்டுள்ளனர்.

பூங்கொடி பதிப்பகம்

கல்லலை அடுத்த கல்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா அவர்களால் 1968-இல் சென்னையில் தொடங்கப்பட்டு 200 க்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிட்டுள்ளது. ம.பொ.சி., மா.இராசமாணிக்கனார், வல்லிக்கண்ணன், மன்னர் மன்னன், இலட்சுமி, சிட்டி ஆகியோர் நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

திருமகள் நிலையம்(1979)

1979-ஆம் ஆண்டு வலையப்பட்டி வ.ரா.அ. இராமநாதன், வலையபட்டி அ.ம. திருப்பதி ஆகியோரால் சென்னையில் தொடங்கப்பட்டது. இவர்களின் வெளியீடுகளில் திருக்குறளார் வி. முனுசாமி அவர்கள் எழுதிய உலகப் பொதுமறை திருக்குறள் உரைவிளக்கம் குறிப்பிடத்தக்கது.

மணிவாசகர் பதிப்பகம்(1961)

பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்களால் 1961இல் சிதம்பரத்தில் தொடங்கப்பட்டது. சென்னை, மதுரை, திருச்சி, கோவையில் இதன் கிளைகள் உள்ளன. தமிழறிஞர்கள் பலரின்

நூல்களை வெளியிட்டு நன்மதிப்பைப் பெற்றுள்ளது. இவர்களின் வெளியீடுகளில் குறிப்பிடத்தக்கது திருக்கோயில் வரிசை. ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது. அறிஞர்கள் நூல்களை வெளியிட்டுப் பரிசுகள் பல பெற்ற பதிப்பகம். இன்று வரை வெளியிட்டுள்ள 1500 நூல்களில் 65 நூல்கள் பரிசு பெற்றுள்ளன. பல்கலைக் கழகங்களில் 65 நூல்கள் பாடநூல்களாக இடம் பெற்றுள்ளன. இப்போது தமிழ் மட்டும் அல்லாது ஆறு மொழிகளில் நூல்கள் வெளியிட்டு வருகிறார்கள். 10 வகை அகராதிகள் வெளியிட்டுள்ளனர்.[1] நகரத்தார் குலக்கோயில்கள் ஒன்பதையும் தனித்தனி நூலாக வெளியிட்டுள்ளது. வெளியீட்டுத் திறனிலும் விற்பனைத் திறனிலும் முத்திரைப் பதித்த பதிப்பகம்.

வானதி பதிப்பகம்(1955)

தேவகோட்டை திரு.ஏ. திருநாவுக்கரசு அவர்களால் 1955-இல் சென்னையில் தொடங்கப்பட்டது. 'கங்கை புத்தக நிலையம்' இதன் துணை நிறுவனமாகும். காஞ்சி பெரியவர்கள், வாரியார் சுவாமிகள், ராஜாஜி, கவியரசர் கண்ணதாசன், சோமெலே, சாண்டில்யன், எம்,எஸ் உதயமூர்த்தி போன்ற ஏராளமான எழுத்தாளர்களின் படைப்புகள் நூல்களாக வெளியிட்டுள்ளது. அறிவியல், ஆன்மிகம், ஆராய்ச்சி, இலக்கியம், கவிதை, சிறுகதை, நாவல் என்ற வகையில் 4000 நூல்கள் வானதி வெளியீடாக வந்துள்ளன. வானதி தமிழ் நூல்களின் ஜீவநதி; புதிய படைப்புகளின் தாளகதி; புதிய கருத்துக்களின் உதிப்பகம் என்பர்.[1]

இதழியல் - களங்கள்

இதழ்கள் வாயிலாகத் தமிழ் மறுமலர்ச்சிக்கு நகரத்தார் சமூகம் பல அடிப்படைப் பணிகளை ஆற்றிய பெருமைக்கு உரியது. தேவகோட்டையிலிருந்து இராமநாதன் செட்டியார் 1915-இல் தொடங்கிய **'வைசியமித்ரன்'** தொடக்க கால இதழ்களின் ஒன்று. தமிழ்க் கடல் ராய. சொக்கலிங்கத்தின் **'ஊழியன்'** வாரஇதழ் (1920 முதல் 1940 வரை)தேசிய இயக்கத்தின் விடிவெள்ளி. 1953 - இல் காரைக்குடி சொ. முருகப்பா **'குமரன்'** என்ற இதழைத் தொடங்கினார். நல்ல இலக்கிய இதழாக இது இருபதாண்டு காலம் நடைபெற்றது. வாரஇதழ் சொ. முருகப்பாவின் **'குமரன்'** (1923 முதல் 1948 வரை) சுய மரியாதைக்குச் சுடரொளி. இவர் **'சண்டமாருதம்'** என்ற நாளிதழை சில காலம் நடத்தி வந்தார்.[2] பின்னாளில் பேரும் புகழும் பெற்ற பெரும்பாலான மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் இவ்விதழ்களில் எழுதிப் பழகியவர்களே. இம்மூன்று இதழ்களும்

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 2581
2. டாக்டர் மா.பா. குருசாமி, இதழியல் கலை, குரு – தேமொழி தாயன்பகம், திண்டுக்கல், ஒன்பதாம் பதிப்பு, 2004, பக், 64.

செட்டிநாட்டில் மட்டுமின்றிச் செந்தமிழ் நாடு முழுவதும் தமிழ் மறுமலர்ச்சி நிலை கொள்ள வழிசெய்தவையாகும். சுப்பிரமணிய பாரதியார் திரு.வி.க., தி.ஜ.ர., வ.ரா. டி.கே.சி., திரிகூடசுந்தரம், சாமிநாத சர்மா, கவிமணி சாமிசிதம்பரனார், ரா.பி. சேதுப்பிள்ளை, புதுமைப்பித்தன், கொத்தமங்கலம் சுப்பு முதலிய புகழ்மிக்க எழுத்தாளர்கள் கலைபயின்ற களங்கள் இவையே.

கலைத்தந்தை கருமுத்து தியாகராசர் 'தமிழ்நாடு' நாளிதழை நல்ல தமிழில், தூய தமிழில், தனித்தமிழில் 20 ஆண்டுகள் நடத்தித் தமிழ் மறுமலர்ச்சியில் ஒரு புரட்சியை உருவாக்கினார்கள். நடுநிலை ஏடாகிய தமிழ்நாடு இதழியலில் செய்த பதிவுகள் மிகப் பலவாகும். இவர் உருவாக்கிய புதிய சொற்கள், புதிய தொடர்கள், புதிய சொல்லாக்கங்கள் இன்று எல்லா இதழ்களிலும் இடம் பெற்றுவிட்டன.

தமிழ் மறுமலர்ச்சியில் 'பொன்னி' இதழுக்குத் தனிச் சிறப்பிடம் உண்டு. இது 1947-இல் புதுக்கோட்டையில் மாத இதழாகத் தொடங்கிப் பின்னர் மாதம் இருமுறையாகச் சென்னையிலிருந்து வெளிவந்தது. கோனாபட்டு முருகு. சுப்பிரமணியன், ஆத்தங்குடி பெரியண்ணன் இருவரும் முற்றிலும் புதியதான 'பொன்னி' இதழைப் புதுமைக்குப் புதுமையாய் நடத்திப் பெருமை பெற்றனர். மற்ற இதழ்கள் தீபாவளி மலர் வெளியிட்டுக் கொண்டிருக்கையில், இவர்கள் பொங்கலுக்கு 'மலர்' வெளியிட்டுப் புதுமை சேர்த்தனர். பொன்னி வெளியிட்ட பொங்கல் மலர்கள் தனித்தமிழ் இயக்கம் வேரூன்ற உதவின.[1]

தமிழர்களின் இனமான எழுச்சிக்கு ஏற்றம் அளித்தனர். பின்னர் எழுந்த திராவிட இயக்க இதழ்கள் அனைத்திற்கும் 'பொன்னி' இதழே முன்னோடி

வை. கோவிந்தன் நடத்திய 'சக்தி' மாதஇதழ் (1939 முதல் 1950 வரை) உலகத் தரத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் சிறந்த ஏடாகத் திகழ்ந்தது. இதழியல் உலகில் 'சக்தி'யின் சாதனை மிகப் பெரியது. இன்றுகூட நல்ல இதழுக்கு எடுத்துக்காட்டாக 'சக்தி'யை உதாரணம் கூறுவர். நாட்டு நலமும் வாசகர் நலமும் மட்டுமே கருத்தில் கொண்டு சக்தி வெளியிடப்பட்டது. இலக்கியம், கல்வெட்டு, அரசியல், பூகோளம், அறிவியல், திரைப்படம் பற்றிய கட்டுரைகளும் சக்தியில் வெளிவந்தன. இப்போது வெளிவரும் மஞ்சரி போன்ற டைஜஸ்டு பத்திரிகைகளுக்கு வழிகாட்டியாக விளங்கியது சக்தி பத்திரிகைதான்.

செட்டிநாட்டு நிகழ்ச்சிகளை வெளியிட காரைக்குடி ஊரினரான (தஞ்சாவூர்) இராமநாதன் செட்டியார் 1930ஆம் ஆண்டு ஜூன் திங்கள் செட்டிநாடு வாரஇதழை தஞ்சையில் தொடங்கினார்.

1. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 347.

இது காரைக்குடியிலிருந்து திரு. வரகூர் அ. சேஷாத்திரி சர்மாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. பண்டிதமணி, பேராசிரியர் லெப.கரு. இராமநாதன் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், நாமக்கல் கவிஞர், கவிமணி, பாவேந்தர், இராபி. சேதுப்பிள்ளை, க. அப்பாதுரையார், மு. வா. ஆகியோர் இவ்விதழில் தங்கள் இலக்கியப் படைப்புகளை வெளியிட்டுள்ளனர்.[1]

'வாரச்செய்தி' என்ற வாரஇதழ் தி. நாராயணன் அவர்கள் ஆசிரியராகவும், கவிஞர் சாமி. பழனியப்பனை துணை ஆசிரியராகக் கொண்டு காரைக்குடியிலிருந்து (1950-1958) வெளிவந்தது.

அடுத்து தமிழில் பெண்களுக்கென்று தனியாக வெளியிடப் பட்ட முதல் இதழ் **'மங்கை'** எனக் குறிப்பிடலாம். மாதர் மறுமணம் எனும் இயக்க ஏடு அமராவதி புதூரிலிருந்து முருகப்பா மரகதவல்லியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது.

'ஆச்சி' என்ற பெயரில் சென்னையிலிருந்து தேவகோட்டை திரு. மீ. பஞ்சநாதன் அவர்களது சீரிய முயற்சியால் 1983 முதல் வெளி வருகிறது. இதன் சிறப்பாசிரியர் பள்ளத்தூர் திரு. பழ. அண்ணாமலை அவர்கள்.

சென்னை கோடம்பாக்கத்தை மையமாகக் கொண்டு 1947இல் தொடங்கப்பட்டது **'காதல்'** இதழாகும். இதன் ஆசிரியர் கண்டனூர் அரு. இராமநாதன் அவர்கள். வரலாறு, இலக்கியப் பின்னணி உள்ள நாவல்கள் சிலவற்றையும் இந்த மாதஇதழ் வெளியிட்டது. **'கலைமணி, மர்மக்கதை'** (1947 முதல் 1952 வரை) என்ற இதழ்கள் இரண்டும் இதே அலுவலகத்திலிருந்து வெளிவந்தன.

குழந்தைகளுக்காக வெளிவந்த பத்திரிகைகளில் வை. கோவிந்தனின் **'அணில்'** என்ற இதழைக் குறிப்பிடலாம். மாதம் இருமுறையாகத் தொடங்கிப் பின்னர் வார இதழாக மாறியது. இந்த இதழ் 20,000 படிகள் வரை விற்பனையாயிற்று[2] 8 பக்கம் கொண்ட வாரஇதழின் அன்றைய விலை ஆறுகாசுகள் மட்டுமே. குழந்தை இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட வை. கோவிந்தன் அப்போது வெளிவந்த **'பாப்பா, பாப்பாமலர், பாலர்மலர், டமாரம், சங்கு'** ஆகிய இதழ்களிலும் புனை பெயரில் எழுதி வந்தது குறிப்பிடத் தக்கது. குழந்தைகள் மட்டுமின்றிப் பெரியவர்களும் அணில் போன்ற இதழை விரும்பிப் படித்தனர். மேலும், **'அனல், இனமுழக்கம், ஜெமினி சினிமா, கதைக்கடல், கண்ணதாசன், காந்திவழி, சிவநேசன், நவமணி, நற்பண்பு, பொருள், தென்றல்'** ஆகிய இதழ்களும் குறிப்பிடத்தக்கவை. 1933 - இல் செட்டிநாட்டில் சமயத்தைப் பரப்பவும் நாத்திகத்தைச்

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 200
2. ச.மெய்யப்பன், மேலது, பக் 3.

சாடவும் **'சுதர்மம்'** என்ற நாளிதழ் வெளிவந்தது. நகரத்தார்களைப் பற்றி வெளிவந்த ஒரு சில இதழ்களும் குறிப்பிடத்தக்கவை. அவற்றில் வேகுப்பட்டி புலவர் நாக. சண்முகத்தை ஆசிரியராகக் கொண்டு **'நகரத்தார்'** எனும் இதழ் சில ஆண்டுகள் சென்னையிலிருந்து வெளிவந்தது. திரு. நா. இளங்கோவன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் சமூக இதழான **'நகரத்தார் மலர்'** குறிப்பிடத்தக்கது. இது 1976 - இல் தொடங்கி இன்றளவும் வெளிவந்து கொண்டிருக்கிறது. இதில் டாக்டர். தமிழண்ணல் போன்ற முதிய எழுத்தாளர்களும், ஏராளமான புதிய எழுத்தாளர் களும் தொடர்ந்து எழுதி வருகின்றனர். அடுத்து 1982 முதல் வெளிவரும் **'நகரத்தார் குரல்'** எனும் மாதஇதழும் குறிப்பிடத்தக்கது. திரு.இராங்கியம் வி.என். சிதம்பரம் (வி.என்.சி) என்பவர் இவ்விதழின் கௌரவ ஆசிரியராக இருந்து வருகிறார்.[1] மதுரை நகரவிடுதி கட்டடத்திலிருந்து இவ்விதழ் வெளிவருகிறது. அடுத்து கீழச்சிவல்பட்டி அழ கருப்பையாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த **'நகர மணம்'** என்னும் இதழும், ஏஎல். அழகப்பனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த **'நமது நகரத்தார்'** மாத இதழும் குறிப்பிடத்தக்கவை.

நகரத்தார் நடத்திய இதழ்களில் தமிழகத்திலுள்ள நாடு - நகரங்களிலும், பட்டி தொட்டிகளிலும், மூலை முடுக்குகளிலும் மக்களைக் கவர்ந்த இதழ்களாக **கல்கண்டையும், குமுதத்தையும்** குறிப்பிடலாம்.[2] கானாடு காத்தான் எஸ்.ஏ.பி. அண்ணாமலை செட்டியார் அவர்கள் குமுதம் இதழைத் தொடங்கி விற்பனையில் மகத்தான வெற்றி கண்டவர் எனலாம். நாடு கடந்து விற்பனையாகும் இவ்விதழ் வாரத்துக்கு 5 இலட்சத்திற்கு மேற்பட்ட பிரதிகள் விற்பனையாகின்றன. பல புதிய உத்திகளைக் கையாண்டு இதழியலில் வெற்றியைத் தேடித் தந்தவர் எஸ்.ஏ.பி. தொடர்ந்து அவரது மகன் எஸ்.ஏ.பி., டாக்டர். ஜவஹர் பழனியப்பன் சிறப்பான முறையில் தொடர்ந்து நிருவகித்து வருகிறார்.

இந்தக் குமுதம் நிறுவனத்திலிருந்து எல்லாத் தரப்பு மக்களையும் மகிழ்விக்கும் வகையில் **குமுதம் சிநேகிதி, குமுதம் ஜங்ஷன், குமுதம் ரிப்போர்ட்டர், குமுதம் ஜோதிடம், குமுதம் பக்தி ஸ்பெஷல்** ஆகியவையும் தற்போது வெளிவருகின்றன.

நாளிதழ்கள் அரசியலையே அரைத்துக் கொண்டு இருப்பதால் பருவ இதழ்கள்- குறிப்பாக வார இதழ்கள் வேகமாக வளர்ந்து கொண்டு வருகின்றன என்பர்.[3]

1. சோமலெ, செட்டிநாடும் – செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 350.
2. சோமலெ, தமிழ் இதழ்கள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1975.
3. அ.மா. சாமி, தமிழ் இதழ்கள், தோற்றம் வளர்ச்சி, நவமணி பதிப்பகம், சென்னை, 1997, பக், 302.

தமிழ்நாட்டு இளைஞர் உள்ளங்களையெல்லாம் கவர்ந்த தமிழ் வாணன் (இராமநாதன்) தொடக்கத்தில் **'ஜில்ஜில்'** பதிப்பகம் நடத்தி, அணில் ஆசிரியராகப் பணியாற்றிய பிறகு 1948இல் குமுதம் அலுவலக வெளியீடான கல்கண்டு இதழின் ஆசிரியரானார். 1950ஆம் ஆண்டுகளில் அதன் விற்பனை 40,000 இதழ்களைத் தாண்டியது. நாடெங்கும் தமிழ்வாணனுக்கு என ஒரு ரசிகர் கூட்டம் ஏற்பட்டது. சிறுசிறு துணுக்குகளை ஏராளமாக வெளியிட்டது. பொது அறிவுப்புதிர் என்ற வினாவிடைப் பகுதியைப் புகுத்தியது. சங்கர்லால் என்ற கற்பனைப் பாத்திரத்தை உருவாக்கி அவரை உயிருள்ள ஒருவராகவே வாசகர் உள்ளங்களில் நடமாடவிட்டவர் தமிழ்வாணன். **"தமிழ்வாணன் பாணி"** என்று தமிழ் இதழ் உலகில் பரவிற்று.[1] அவர் இறக்கும்போது, கல்கண்டு 1½ இலட்சம் பிரதிகளைத் தாண்டியது. அவர் மறைவுக்குப்பின் அவர் மகன் இராம. லெட்சுமணன் கல்கண்டு ஆசிரியராகப் பொறுப்பேற்றார். லேனா தமிழ்வாணன் என்ற பெயரில் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தி வருகிறார். தலைமுறைகளுக்கிடையே இடைவெளி என்பது கல்கண்டு வாசகர்களிடம் கிடையாது.

ஏனைய இதழ்கள்

சிலகாலம் வெளியாகிப் பின்னர் நின்றுவிட்ட இதழ்கள் சிலவற்றைச் சோமலெ அவர்கள் பட்டியலிட்டுக் காட்டுகிறார். இவை செட்டிநாட்டு அன்பர்கள் நடத்தியவை. **கடிதம், ஹனுமான், ஹிந்துஸ்தான், தமிழ் ஹரிஜன், வெள்ளி மணி, சங்கப் பலகை, சந்திரோதயம், முல்லை, நகரசபை, தமிழன் குரல், எழில், நண்பன், இலக்கிய உலகம், நவயுவன், திருமகள், கதம்பம், அணிகலம், இன்பம், மகிழ்ச்சி, பாப்பா, இந்திரா, ஜனமித்திரன், மந்திரி, அருணன்** ஆகியவனாகும்.[2]

நகரத்தார் கலைக்களஞ்சியம் நகரத்தார் ஆசிரியராக அல்லது வெளியீட்டாளராக அல்லது இரு பொறுப்புகளையும் ஏற்றவராக வெளியான தமிழ் இதழ்களின் பட்டியலை தயாரித்துள்ளது. அதில் நூற்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் அகரவரிசையில் இடம் பெற்றுள்ளன.[2] இப்பட்டியலைப் பார்க்கும் போது தமிழ் இதழ் உலகில் நகரத்தாரின் பங்கு மிக கணிசமானது என்பதைத் தெளிவாக உணரலாம். இவற்றில் பல இதழியியல் உலகில் சாதனை படைத்தவை. இவை நகரத்தார் சமூகத்தின் தனிச்சிறப்புக்குச் சான்றாக அமைகிறது.

தமிழிசை மறுமலர்ச்சி

தமிழிசை மறுமலர்ச்சி 1942-இல் அண்ணாமலை அரசர் பெருமுயற்சியால் இயக்கமாக எழுந்தது. கல்கி, டி.கே.சி., ஆர்.கே.

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 226 – 227.
2. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 351 – 52

சண்முகம் முதலியோர் துணையுடன் அண்ணாமலை அரசர் பேரியக்கம் கண்டு தமிழிசைக்குப் பெரும் தொண்டாற்றினார். அண்ணாமலை அரசரின் இப்பணி பின்னர் தமிழிசை இயக்கமாக விரிந்தது![1] 23.3.1944 - இல் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் தன் வாழ்க்கைக் குறிக்கோளை விளக்கித் தன் கைப்பட எழுதிய குறிப்பில் 'தமிழ் நாடெங்கும் தமிழிசை முழங்க வேண்டும் என்பது என்ஆவல்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வழியில் அவருடைய மகன் திரு.முத்தையா செட்டியார் அவர்கள் 1933 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் முதல் மேயரானார். மேயர் பதவிக்குச் சிறப்பை சேர்க்க விரும்பி மேயருக்குரிய தனிஉடை, பொற்பதக்கம், அமர்வதற்குரிய ஆசனம் முதலியவற்றைத் தம் சொந்த பொறுப்பில் உருவாக்கி மாநகராட்சிக்கு வழங்கினார். பின்னர் சென்னை மாநில சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டபோது தம் கடமைகளைப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்றினார். 1936 ஆம் ஆண்டு எர்ஸ்கின் பிரபு தலைமையில் உருவான அமைச்சரவையில் கல்வி, மருத்துவம், சுங்கம், சுகாதாரம் ஆகிய துறைகளின் பொறுப்பேற்று அமைச்சராகப் பணியாற்றினார். மீண்டும் அமைச்சராகும் வாய்ப்பு கிடைத்தபோது உள்நாட்டு நிர்வாகத்துறை, அறநிலையத்துறை தொடர்பான பணிகளைச் செம்மையாக நிறைவேற்றினார். இரண்டாம் உலக்போர் தொடங்கிய போது முத்தையா செட்டியார் இந்தியப் பாதுகாப்புக் குழுவில் உறுப்பினராகித் தம் கடமையாற்றினார்.

சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினராகவும், தென்னிந்திய வணிகச் சங்கத்தின் தலைவராகவும், இந்தியத் தொழிற் கழக உறுப்பினராகவும் அனைத்தின்திய வணிக சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றுச் செயல்பட்டார். 1946 இல் இந்திய பாராளுமன்றத்திற்கும் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பெற்றார்.

பின்னர் 1948 இல் அண்ணாமலைப் பல்கலைக் கழக இணை வேந்தரானதிலிருந்து அதன் வளர்ச்சியில் சிந்தையைச் செலுத்தினார். காலத்திற்கு ஏற்ப கல்வி முறையில் மாற்றங்களைக் கொண்டு வந்தார். 1958 இல் அண்ணாமலை நகரில் முத்தையா பாலிடெக்னிக்கையும், செட்டிநாட்டில் அண்ணாமலை பாலிடெக்னிக்கையும் ஏற்படுத்தினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல் மருத்துவப் படிப்பைத் தொடங்கினார். அது இன்று மருத்துவக் கல்லூரியாக வளர்ந்துள்ளது.

கல்வித்துறை, வேளாண் துறை, நுண்கலைத்துறை, சட்டத்துறை எனப் பல துறைகளைத் தோற்வித்தார். ஆராய்ச்சித் துறைகளை உருவாக்கினார். விளையாட்டுத் துறைகளை ஊக்குவித்தார். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களைப் போல

1. ச.மெய்யப்பன், அண்ணாமலைஅரசர், மணிவாசகர் பதிப்பகம், 2004, பக், 122 – 133.

அனைத்து வசதிகளையும் பெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சிறக்கவேண்டுமெனத் திட்டமிட்டு தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தார். நூலகத்தில் ஆராய்ச்சிகளுக்குப் பயன்படத்தக்க மூன்று இலட்சத்திற்கும் மேலான பல்வேறு நூல்கள் இடம் பெற வழி வகுத்தார். சென்னையில் தமிழ், வடமொழி, இந்திய மொழிகள் ஆகியவற்றின் ஆராய்சி நிறுவனம் ஒன்றையும் உருவாக்கி கட்டிட வசதியும் பொருளுதவியும் அளித்தார். கல்வியைப் பொறுத்த வரை தமிழ்மொழிப் பயிற்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

தவிர 1941 ஆம்ஆண்டில் சர் பட்டமும், சென்னைப் பல்கலைக் கழக 125 வது ஆண்டுவிழாவின் போது கௌரவ டாக்டர் பட்டமும் பெற்றார். நியூயார்க்கிலுள்ள உலகப் பல்கலைக் கழகமும் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது. 1973 இல் இந்திய அரசின் பத்மபூஷன் விருதும் பெற்றார்.

அந்நியரின் ஆதிக்கத்தால் மங்கி மறைந்த தமிழிசைக்கு அண்ணாமலை அரசர் புத்துயிர் அளித்தார். இராஜா சர் முத்தையா தமிழ் பாட்டுக்களைப் பாடுவதற்கும் இயற்றுவதற்கும் இசைவாணர்களை ஊக்கப்படுத்தினார். பண்டைய தமிழிசை பண் குறித்து ஆராய்சி செய்யவழி வகுத்தார். தமிழிசை நிகழ்சிகள் நடைபெற ராஜா அண்ணாமலை மன்றத்தைக் கட்டுவித்தார். அங்கு நடைபெறும் பண் ஆராய்ச்சி கூட்டங்களின் போது பங்கு பெறுவோரை ஊக்குவிக்கும் வகையில் தாமே நன்றி கூறுவதைக் கடமையாகக் கொண்டார். தமிழ் இசையையும் தமிழ் இலக்கியச் செய்திகளையும் அனைத்திந்திய வானொலியில் ஒலி பரப்ப வகை செய்தார். தமிழிசை வளர்ச்சியை மேலும் விரிவு படுத்த மதுரை மாநகரில் 1972 இல் தமிழிசை சங்கத்தை ஏற்படுத்தி ஆண்டு தோறும் இசை விழா நடைபெற ராஜா முத்தையா மன்றம் ஏற்படுத்தினார். தமிழ் நாடகம், நடனம் ஆகிய கலைகளின் வளர்ச்சிக்கு தேவையான உதவிகள் புரிந்தும், அக்கலைஞர்களைப் பாராட்டியும் பெருமை படுத்தினார்.[1]

அவர்களைப் பின்பற்றித் தொழிலதிபர் எம்.ஏ. சிதம்பரம் அவர்களும், எம்.ஏ.எம். இராமசாமி அவர்களும், ஏ.சி. முத்தையா அவர்களும் தமிழ் இசைக்குத் தொடர்ந்து வாழ்வு அளித்துவரும் வள்ளல்களாவர். அருட்செல்வர் மகாலிங்கம் நடத்தும் 'தேவார' மூவர் இசை விழாவும், சேலம் ஜெயலட்சுமி அவர்கள் நடத்தும் 'ஞானசம்பந்தர்' இசை விழாவும் தமிழிசை இயக்கத்தின் விழுதுகளே.

கலைக் களஞ்சியம்

இந்திய மொழிகளிலே முதன் முதல் கலைக் களஞ்சியம் தமிழில் தான் தோன்றியது. அது உருவாவதற்கு 'அழகப்பர்' பெரு நிதியம்

1. பூ.ஜெயராமன், ராஜா சர் முத்தையா செட்டியார், பொதுத்தமிழ் மேல்நிலை முதலாம் ஆண்டு, பகுதி – 1, தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், சென்னை, 1999, பக் 169 – 176.

அளித்தார். அதை உருவாக்கிய தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்குக் கானாடுகாத்தான் ட்ரோஜன் அண்ணாமலை செட்டியார் தலைமைப் பொறுப்பேற்றுப் பொருளாளராய் பெருமை சேர்த்தார்.

கேரளப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையின் தோற்றத்திற்கு நூறு ஆயிரம் வெண்பொற்காசுகள் நல்கி வித்திட்டவர் கல்விக்குக் கோடி கொடுத்த கொடைஞர் வள்ளல் அழகப்பர். புதிய தமிழ் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும், ஆய்வுகளுக்கும் கேரளப் பல்கலைக் கழகம் முன்னோடியாகத் திகழ்வது நாடறிந்த செய்தி ஆகும்.

மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் தனித்தமிழ் இயக்கத்தின் தளபதியாக, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வடிவமைப்புக் குழுவின் தலைவராக, தமிழ்ப்புலவர் குழுவின் தலைவராக, பல்கலைத் தமிழாசிரியர் மன்றத்தின் தலைவராக வீற்றிருந்து பல்வேறு நிலைகளில் தமிழ் மீட்சிக்கும், காப்புக்கும், மலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் வழிவகை கண்ட பேரறிஞர் ஆவார்.

ஏ.வி. மெய்யப்பன், தாம் உரிமை பெற்றிருந்த பாரதியாரின் பாடல்களை நாட்டுடைமையாக்கக் கொடுத்து உதவினார். கம்பன்கழகம் கண்ட சா. கணேசன் கம்பன் புகழ்பாடிக் கடந்த 50 ஆண்டுகளாகத் தமிழ் இலக்கிய உணர்வினை வளர்த்ததோடு தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் 50க்கு மேற்பட்ட கழகங்கள் உருவாவதற்கு வழிவகை செய்தார். கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம் மேல் முறையீடு எனப் பல்வேறு உத்திகளில் தமிழ் மேடையில் மறுமலர்ச்சி கண்டது கம்பன் கழகமே. ஏ.கே. செட்டியாரும், சோமலெயும் பயண இலக்கியத்திற்கும் முன்னோடி களாக வளம் சேர்த்த வகையில் என்றும் நம் நெஞ்சில் நிற்பவர்கள்.

மேலைச் சிவபுரித் தமிழ்க் கல்லூரி தமிழ்க் கல்வியில் தனிச்சிறப்பிடம் பெறுகிறது. பாகனேரி நூலகமும், இராயவரம் நூலகமும், காரைக்குடி இந்துமத அபிமான சங்க நூலகமும், உலகப்புகழ் கொண்ட கோட்டையூர் ரோஜா முத்தையாவின் நூலகமும் தமிழ் நூல்களின் காப்பகங்களாக அமைந்து தமிழ் மறுமலர்ச்சிப் பாதையில் மைல் கற்களாகத் திகழ்கின்றன. பாரதிக்குப் பின், பாவேந்தர் பாரதிதாசனுக்குப் பின், மக்கள் கொண்டாடும் மாபெரும் கவிஞராகக் கண்ணதாசன் மறுமலர்ச்சித் தமிழுக்கு ஆற்றிய பணிகள் நூற்றுக்கணக்கான நூல்களாக விரிந்துள்ளன.

நீண்ட நெடிய வரலாறு உடைய தமிழ் மொழியில் 20-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்குப் பல்வேறு சமூகத்தினர் பல நிலைகளில் பங்களிப்புச் செய்திருந்தாலும், நகரத்தார் ஆற்றிய நற்பணிகள் நாடறிந்தவை. அடிப்படையானவை. ஆற்றல் மிக்கவை.

⌘ ⌘ ⌘

21. நகரத்தார் கட்டடக் கலை

சங்ககாலக் கோயில்கள் மரத்தினாலும், மண்ணினாலும், செங்கற்களினாலுமே அமைக்கப்பட்டு இருந்தன. அவை செங்கற் கட்டடங்களையும், மரவிட்டங்களையும் கொண்டு அமைக்கப் பட்டுச் சுவர்மேல் சுண்ணம் பூசப்பட்டிருந்தன. இவை அவ்வப்போது பழுதுபார்க்காமற்போனதால், அவை சிதைந்தும் அழிந்தும் போயின. கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் சங்கப்புலவர், இடிந்து சிதைந்துபோன செங்கற் கட்டடக் கோயில் ஒன்றைக் கூறுகிறார்.

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து
எழுதணி கடவுள் போகலின் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை" (அகம்: 167, வரி, 13 – 16)

ஆகையால், அக்காலத்தில் அமைந்த கோயில்கள் இன்றுவரை இல்லாது மறைந்துபோயின. பூம்புகார், மதுரை, கரூர், கொற்கை, திருக்காம்புலியூர், உறையூர், காஞ்சி[1] ஆகிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் நடந்த அகழாய்வுகளில் மட்டுமே சிதைந்த அக்காலத்துக் கட்டடங்களின் சுவடுகள் காணக்கிடைக்கின்றன. பல்லவர் காலத்தில் மரம், மண், சுதை, செங்கல், உலோகமின்றிக் குடைவரைக் கோயில்களைத் தோற்றுவிக்கும் மரபு தோன்றியது.[2] மண்டகப்பட்டு, பிள்ளையார்பட்டி குடைவரைக் கோயில்களைத் தொடர்ந்து மலையைக் குடைந்து ஏராளமான குடைவரைக் கோயில்கள் தொண்டை நாட்டிலும்,[3] பாண்டி நாட்டிலும்[4] எடுக்கப்பட்டன. பல்லவர்கள் காலத்தில் குடைவரைக் கோயிலை அடுத்து ஒற்றைக் கற்றளியும், கட்டடக் கோயில்களும் தோன்றலாயின.

கட்டடக் கோயில்களில் விமானங்களைவிட வாயில் கோபுரங்கள் உயரம் குறைவாக அமைந்தன. சான்றாக மாமல்லைக்

1. சா.குருமூர்த்தி, தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும், செனனை, 1974, பக், 34 – 36,38 – 40, படம், 11, 12, 14, 19.
2. இரா.நாகசாமி – மா.சந்திரமூர்த்தி, தமிழகக் கோயிற் கலைகள், தொல்லியல் துறை வெளியீடு, சென்னை, 1973, பக், 49 – 50.1/2
3. K.R.Srinivasan, Cave Temples of the Pallavas, A.S.I. Delhi, 1964.
4. C.Sivaramamurti, Kalugumalai and Early Pandian Rock-cut Shrines, Bombay.

கடற்கரைக் கோயில், காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கூறலாம். சோழர் காலக் கோயில்களில் கருவறை மேல் எழுந்துள்ள விமானங்கள் மிக உயரமாகவும், வாயில் கோபுரங்கள் உயரம் குறைவாகவும் கட்டப்பட்டன. சான்றாகத் தஞ்சைப் பெரிய கோயிலைக் குறிக்கலாம். பாண்டியர் காலக் கோயில்களில் வாயிலை அலங்கரிக்கும் இராஜகோபுரம் மிக உயரமாகவும், கருவறை விமானங்கள் உயரம் குறைவாகவும் அமைந்தன. இக்கோபுரத்தின் இருமருங்கும் சாய்வாக வளைந்தும் உட்குழிவான வடிவம் கொண்டும் காணப்படுகிறது. இக்கோபுரம் உயர்ந்து வானளாவ பரந்து கலையுணர்வைத் தூண்டக்கூடியதாக உள்ளதாக பெர்சி பிரவுன் குறிப்பிட்டுள்ளார்.[1]

பல்லவர், சோழர், பாண்டியர் போன்ற அரச மரபினரால் தோற்றுவிக்கப்பட்ட கலைமரபுகள் பல்லவர் கலைப்பாணி, சோழர் கலைப் பாணி, பாண்டியர் கலைப்பாணி என அழைக்கப்பட்டது.[2] பிற்காலப் பாண்டியரைத் தொடர்ந்து விஜயநகரர், நாயக்கர், சேதுபதிகள், சிவகங்கை மன்னர்கள் போன்றோர் தமிழகத்தின் தென்பகுதியில் கோயில்கள் பலவற்றைத் தோற்றுவித்தனர். விஜயநகரர் காலத்தில் பண்டைக்காலக் கோயில்கள் விரிவாக்கம் பெற்றன. குதிரை மண்டபங்கள், கல்யாண மண்டபங்கள், நூற்றுக்கால் மண்டபங்கள், மற்றும் ஆயிரக்கால் மண்டபங்கள் எனப் பல பகுதியாகக் கோயில்கள் விரிவாக்கம் பெற்றன. இவர்களுக்குப் பின் வந்த நாயக்க மன்னர்கள் பெரும்பாலும் பிற்காலப் பாண்டியர்களது சிற்ப முறையையே தழுவினர். இக்காலக் கோயில் கோபுரங்கள் உயர உயர இரு பக்கங்களும் சற்று வளைந்து குறுகிய நிலையில் எழிலாகத் தோற்றுவிக்கப்பட்டன. கோயில் பிரகாரங்களில் அவற்றை ஒட்டி கல்தூண்கள் தாங்கிய அடுக்கு மண்டபங்களையும் நான்கு பக்கங்களிலும் அமைத்தனர். இவ்வமைப்பைப் பெரும்பாலும் மதுரை, ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிப் புத்தூர், திருநெல்வேலி, தென்காசி ஆலய கோபுரக் கட்டடங் களிலும், பிரகார வரிசைகளிலும் காணலாம்.

நாயக்கர்களுக்குப் பின் வந்த சேதுபதி மன்னர்கள் மதுரை இராமநாதபுரம் சீமையில் பல கோயில்களை எழுப்பினர். இவர்களது கட்டடக்கலைக்கு இராமேசுவரம் கோயிலின் மூன்றாம் பிரகாரத்தைச் சான்றாகக் கூறலாம்.[3] இவ்வாறாக அரச மரபினர் தமிழ்நாட்டில் கி.பி. 7 - ஆம் நூற்றாண்டு முதல் எண்ணற்ற கோயில்

1. Percy Brown. Indian Architecture, Buddhist & Hindu Periods, Sixth Reprint, 1971.
2. பல்லவர் கலைப்பாணி, சோழர் கலைப்பாணி என்பது போல் கோயில் கட்டுவதில், நகரத்தாருக்கெனத் தனிப்பாணி உள்ளமையை நகரத்தார் குலமரபுக் கோயில்கள் ஒன்பதிலும் இந்நூலாசிரியர் நிறுவியுள்ளார்.
3. அ.அறிவொளி, இராமேசுவரம், முதற்பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், 1999, பக், 77.

களைக் கட்டி வந்துள்ளனர். அவை இன்றும் கலைச் சின்னங்களாகவும், பண்பாட்டுத் தடயங்களாகவும் இருந்துவருகின்றன.

அவர்களது காலத்திற்குப் பின் மன்னர் பின் மரபினர் என்று காப்பியம் புகழும் நகரத்தார்கள் அவ்விறைப்பணியை ஏற்றனர். குமரி முதல் வேங்கடம் வரை பாடல் பெற்ற பல திருத்தலங்களில் உள்ள பழம்பெரும் கோயில்களைப் புதுப்பிப்பதிலும் அவ்வாறு புண்ணியத் தலங்களில் பலவற்றைத் திருப்பணி செய்து பராமரிப்பதிலும் இறைப்பணியைத் தம் குலப்பணியாக ஏற்றனர். இந்நகரத்தார்களின் சீரிய பக்தியினால் தமிழகக் கோயில்கள் பலமுறை பழுது பார்க்கப்பட்டுள்ளன. எனவேதான் **"கோயில் பழுதானால் கூப்பிடு செட்டியாரை"** என்பது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வழங்கும் பழமொழியாகும்.

நகரத்தார்கள் பாண்டிய நாட்டில் குடியேறிய கி.பி. 8ஆம் நூற்றாண்டில் இருந்தே கோயில் திருப்பணிகளில் ஈடுபட்டனர் என செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. எனினும் கி.பி. 16ஆம் நூற்றாண்டிலிருந்தே கோயில்கள் திருப்பணி, ஊருணிகள் அமைத்தல் போன்ற சமயப்பணிகளில் ஈடுபட்டதற்கான கல்வெட்டு மற்றும் தொல்லியல் சான்றுகள் ஆங்காங்கே காணக் கிடைக்கின்றன. எனினும் கி.பி.18-20ஆம் நூற்றாண்டுகளில் அவர்கள் செய்த திருப்பணிகள் காலவாரியாக நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு நூலிலும், சுவடி ஆவணங்களிலும் பதிவு செய்யப் பட்டுள்ளன. அரியக்குடியில் அமைந்துள்ள சீனிவாசப் பெருமாள் கோயில்தான் முதன்முதலில் கற்றளியாக எடுக்கப்பட்டது. கி.பி. 1818-ஆம் ஆண்டில் திருப்பணி முடிந்து முதற் குடமுழுக்கு நடந்துள்ளது. இரண்டாவதாக 1820-இல் உ. சிறுவயலில் பொன்னழகியம்மன் கோயில் திருப்பணி நடந்துள்ளது.

நகரத்தார் கோயில்களும், சிற்பங்களும் செட்டிநாட்டுச் சிற்பிகளால் உருவாக்கப்பட்டவை. இவர்கள் பிள்ளையார்பட்டி, அருணாசலபுரம், தேவகோட்டை, எழுவன் கோட்டை, வைரவன்பட்டி போன்ற ஊர்களைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். நகரத்தார் கோயில் சிற்பங்கள் **வாஸ்து சாஸ்திரம், மயமதம், மானசாரம், சகளாதிகாரம், காசியப சிற்ப சாஸ்திரம், சாரஸ்வதீய சித்ர தர்ம சாஸ்திரம், ப்ராஹ்மிய சித்ர கர்ம சாஸ்திரம், ஸ்ரீ தத்துவநிதி** ஆகிய சிற்பநூல்கள் கூறுகின்ற இலக்கணப்படி காணப்படுகின்றன. நகரத்தார்கள் **காமிகாகமம், காரணாகமம்** ஆகிய ஆகம முறைப்படி கோயில் சிற்பங்களை பெரும் சிற்பிகளின் வழித் துணையோடு அமைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

இவற்றில் அகத்திய முனிவரால் எழுதப்பட்டதென வழங்கும் சகளாதிகாரம் தென்னாட்டுச் சிற்ப நூல்களில் மிகப் பழைமையானதாகும். இந்நூலில் மண்ணினாலும், மரத்தினாலுமே உருவங்கள் செய்வதற்கு வகுக்கப்பட்டிருப்பதால் இது கற்கோயில்

வருவதற்கு முன்பே இயற்றப்பட்ட நூலாதல் வேண்டும்.[1] இந்நூல்களைத் தவிர செட்டிநாட்டில் கோயில்களை உருவாக்கிய கோயில் தச்சர்களாகிய சிற்பிகள் தலைமுறை தலைமுறையாக வந்த சிற்ப ஞானத்தையே தியானமாகக் கொண்டு பெரும் கோயில்களை அமைத்து வந்துள்ளனர்.

நகரத்தார்கள் நம்நாட்டில் கங்கைக்கரை வரை பல பகுதிகளையும் வாணிகம் காரணமாகச் சுற்றிப் பார்த்தபோது பல்வேறு வடநாட்டுக் கோயில் அமைப்புகளையும் கூர்ந்து நோக்கியுள்ளனர். பல்லவர் - சோழர், பாண்டியர் - நாயக்கர் காலச் சிற்பக்கலைப் பாணிகளில் குறைகளை விடுத்து நிறைகளை ஏற்றுக்கொண்டு தமக்கெனத் தனிப்பாணியை வகுத்துக்கொண்டு கோயில்களை அமைத்தனர்.[2]

பள்ளப்பத்தி முறை

கோயில் அமைப்பில் **பள்ளப்பத்தி** என்பது நகரத்தார் கட்டடக் கலையின் தனிப்பாணியாகும். கோயில் மண்டபங்களை யும், மூலவர், பரிவார தேவர்களின் சிறிய ஆலயங்களையும் உயர்த்திக் கட்டித் திருச்சுற்றினை மட்டும் பள்ளமாக அமைத்துக் கட்டுவது பள்ளப்பத்தி என்னும் நகரத்தார்பாணிக் கோயில் அமைப்பாகும்.[3]

பள்ளப்பத்தி முறையால் நகரத்தார்கள் கருவறைத் தளத்தை உயர்த்தி நிலைக்கோபுர உயரத்திற்குச் சமமாகக் கருவறை விமானங்களையும் அமைத்தனர். கோயிலுள் நுழைந்ததும் கொடிமரம், நந்திமேடை, பலிபீடம், முகமண்டபம், பள்ளப் பிரகாரம், திருச்சுற்று மாளிகை, மாளிகைப் பத்தி, பரிவார ஆலயங்கள், வாகன அறை, உற்சவர் அறை, கருவூலம், யாகசாலை, வியஞ்சன அறை, மடைப்பள்ளி, மலர் மேடை, கோயில் கிணறு, அலங்கார மண்டபம், மேல் சுற்றுப் பிரகாரத்தில் மகாமண்டபம், அம்மன் சன்னிதி, வைரவர் சன்னிதி, பள்ளியறை, நடராஜர் சபை, அர்த்த மண்டபம், கருவறை என நகரத்தார் கோயில் அமைப்பு அமைந்துள்ளது.

எடுத்துக்கட்டி மண்டபம்

கோயில் மகாமண்டபம், திருச்சுற்று, விழாமண்டபம் ஆகியப் பகுதிகளைக் காற்றும், வெளிச்சமும் வரத்தக்க வகையில் மேலே உயர்த்தி சன்னல்களுடன் அமைத்துள்ள கட்டுமான முறையும் இங்குக் குறிப்பிடத்தக்கது. **'எடுத்துக்கட்டி மண்டபம்'** என

1. வை. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், தொழில் நுட்பக்கல்வி இயக்கம், சென்னை, 1978.
2. மா.சந்திரமூர்த்தி, நகரத்தார் கோயிற் கலைகள், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழக அறக்கட்டளை சொற்பொழிவு,, 1990.
3. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், சென்னை, 2002, பக், 272.

இவ்வட்டாரங்களில் அழைக்கப்படும் இவ்வகை மண்டபமுறை நகரத்தார் காலக் கட்டடக் கலையின் மற்றுமொரு சிறப்பு அம்சமாகக் கருதலாம். இவர்களது வீடுகளிலும், விடுதிகளிலும் கூட இத்தகைய கட்டடக்கலை பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.[1]

இவர்களது கட்டடக் கலைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு மாத்தூர் கோயிலின் மேல்சுற்றுப் பிரகாரத்தில் அமைக்கப் பட்டுள்ள சண்டிகேசுவரர் சிற்றாலய விமான அமைப்பாகும். அடி முதல் கலசம் வரை வெள்ளைக் கல்லால் கட்டப்பட்டுள்ள இக்கோயிலின் கலசத்திற்கு மேலுள்ள விமானப்பகுதியைக் கவிழ்ந்த குடை போன்று குடைந்து அதன் நடுவில் சிறிய துளையிட்டுள்ளனர். மழைக்காலங்களில் இத்துவாரத்தின் இடையே வரும் மழைநீர் கீழே இறங்கிக் கலசத்தையும், விமானத்தையும் தூய்மைப்படுத்தும் காட்சி நகரத்தார் காலக்கட்டடக் கலைக்குக் கட்டியம் கூறும்.[2]

தனிப்பாணி

நகரத்தார் கோயில்களில் மேடைமீது கிழக்கு நோக்கிச் சிவபெருமான் சன்னிதியும் அருகிலேயே தெற்குநோக்கி இறைவியின் சன்னிதியும் அமைந்திருக்கும். சோழர் காலத்திற்கு முன்பு வரை இறைவிக்கெனத் தனிச் சன்னிதி இல்லை. கி.பி. 11-ஆம் நூற்றாண்டி லிருந்துதான் இறைவிக்குக் காமகோட்டம் அமைக்கும் வழக்கு ஏற்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகவே பிற்காலச் சோழர் கோயில்களில் இறைவனுக்கும் இறைவிக்கும் தனித்தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டன. இறைவன் கோயிலுக்கு இடப்புறம் இறைவி கோயில் அமையும். ஆனால், சிவன், சக்தி ஆகிய இருவரையும் ஒரே ஆலயத்துக்குள் பக்கம் பக்கமாக வீற்றிருக்கச் செய்தவர்கள் நகரத்தார்களே எனச் சிற்பக்கலை வல்லுநர் டாக்டர். வை. கணபதி ஸ்தபதி குறிப்பிடுகின்றார். இது நகரத்தார்களின் தனிப்பாணியாகும். ஒன்பது நகரக் கோயில்களிலும் இதே பாணிதான் பின்பற்றப் பட்டுள்ளது. நகரத்தார் வாழும் ஊர்களில் கட்டப்பட்ட நகரச் சிவன் கோயில்களிலும் பெரும்பாலானவை இவ்வமைப்பிலேயே கட்டப்பட்டுள்ளன.

ஆலய அமைப்பு

ஆகமங்களைத் தமிழில் மொழிபெயர்த்து எந்தெந்தத் தெய்வங்களை எங்கெங்கே அமைக்கவேண்டும் என்பதை அறிந்து நகரத்தார்கள் அமைத்துள்ளார்கள். கோயிலின் தென்மேற்கு மூலையில் விநாயகர், சோமாஸ்கந்தர், வடமேற்கு மூலையில்

1. மா.சந்திரமூர்த்தி, மாத்தூர் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1988, பக், 11 – 12.
2. மா. சந்திரமூர்த்தி. மேலது, பக், 44 – 45

முருகப்பெருமான், மகாலட்சுமி சன்னிதியையும் அமைப்பது மரபு. தென்புறம் தட்சிணாமூர்த்திக்குத் தனி மண்டபமும், வடபுறம் சண்டிகேசுவரருக்குச் சிற்றாலயமும் அமைத்திருப்பர். குறிப்பாக வைரவன் பட்டியில், சண்டிகேசுவரருக்குப் பல்லவர் பாணியில் ஒற்றைக் கற்றளியாகப் பாறையைக் குடைந்து கோயில் அமைத் திருப்பது குறிக்கத்தக்கது. நகரத்தார் காலத்தில் கட்டப்பட்ட தட்சிணாமூர்த்தி மண்டபம், நேர்த்தியான கட்டட, சிற்ப வேலைப்பாடுமிக்கது. இதன் கூரை மரங்களை அறுத்துச் செதுக்கியது போன்ற கல்வேலைப்பாடு கொண்டு விளங்குபவை. கொடுங்கை களும் சிறப்பு வாய்ந்தவை. கொடுங்கைகளுக்குப் புகழ் பெற்ற ஆவுடையார் கோயிலைப் பின்பற்றி அமைக்கப் பெற்றிருப்பினும், நகரத்தாரின் கலைப்பாணி ஆங்காங்கே பளிச்சிடுகிறது. இவை நகரத்தார் காலக் கலைக்குக் கட்டியம் கூறுபவை.

கண்ணாடிப் படிமம்

இறைவனுக்குச் செய்யும் சோடச உபசாரங்களுள் கண்ணாடியும் ஒன்று. கண்ணாடி சிவசக்தியிம் அதன்ஒளியில் சிவனும் இருப்பதால் இதனை ஆராதிப்பவர்களும், தரிசிப்பவர்களும் ஞானத்தை அடைவார்கள் என நூல்கள் கூறும்.[1] சுவாமி கருவறையின் முன்பாக அர்த்த மண்டபத்தில் கண்ணாடிப் படிமம் அமைத்துள்ளமை நகரத் தார்களின் தனித் தன்மைகளுள் ஒன்றாகும். கண்ணாடியின் செப்புத் திரு உருவத்தைச் சுற்றிலும் இலைக் கருக்குகள் காணப்படுகின்றன. பீடத்தின் மேல் சுமார் 50 செமீ உள்ள தண்டுப் பகுதியும் அதன்மேல் குவிந்த வட்டக் கண்ணாடி வடிவமும் உள்ளது. நகரத்தாரின் ஒன்பது குலக்கோயில்களிலும் மற்றும் சில நகரச் சிவன் கோயில்களிலும் மட்டுமே இத்தகைய கண்ணாடிப் படிமம் அமைந்துள்ளது. அவ்வாறே கண்ணாடிக்கு முன்பு உள்ள பலிபீடத்தை உலோகத்தால் அமைக்கும் வழக்கம் நாயக்கர் காலத்தில் தொடங்கியது. இம்மரபு நகரத்தார் காலத்திலும் தொடர்ந்துள்ளது. அவ்வாறு நகரத்தார் காலச் சிற்பிகள் நந்தியின் உருவினையும் மிக இயற்கையாக உலோகத்தால் வார்த்து வடித்துள்ளனர்.

சிங்கத் தூண்

தூண் சிற்பங்களிலும் நகரத்தாரின் தனித்தன்மை வெளிப்பட்டுத் தோன்றக் காணலாம். இலுப்பைக்குடிக் கோயிலில் ஒரு தூணில் ஒரு அங்குல சதுரத்திற்குள் செதுக்கப்பட்டுள்ள நுட்பமான **விநாயகர் சிலை** வியப்பிற்குரியதாகும்.[2] கோயிலின் தூண் வகைகளை வைத்தே இது எந்தப் பாணியில் கட்டப்பட்டது

1. சுப்பிரமணிய குருக்கள், ஆகமமும், ஆலய வழிபாடும், வானதி பதிப்பகம், முதற்பதிப்பு சென்னை, 1993, பக் 42
2. மா.சந்திரமூர்த்தி. இலுப்பைக்குடிக் கோயில். மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998. பக். 28 – 29

என்று கூறலாம். [1]கல்தூண் எட்டுப் பகுதிகளைக் கொண்டது. கால், பாதம், கலசம், தாடி, குடம், பத்மம், பலகை, போதிகை என இதன் எட்டுப் பகுதிகளும் பெயர் பெறும். தூணை உத்திரத்துடன் இணைக்கும் பகுதியைப் போதிகை என்பர். இப்போதிகை ஒவ்வொரு மன்னர் காலத்தும் வேறுவேறு மாற்றங்களைப் பெற்று வந்தது என்றாலும், நகரத்தார்கள் கட்டிய கோயில்களில் போதிகையின் கீழ் ஒரு சிங்கத்தின் சிற்பம் கூடுதலாகக் காணப்படுகின்றது.[2] நகரத்தார் சிங்கக் கொடியினை உடையவர்கள். எனவே, சிங்கத்தைத் தூண் போதிகைகளின் கீழ் செதுக்கச் செய்திருக்கலாம். போதிகையில் உள்ள பூமுனை ஒரே கல்லில் செதுக்காமல் தனியாகச் செய்து, காடி கொடுத்துக் கையால் திருகிப் பொருத்துமாறு அமைத்துள்ளமை நகரத்தாரின் கலைப்பாணியைத் தனியாக எடுத்துக் காட்டுகிறது.[3]

சித்திரக்கால், அணியொட்டிக்கால், கர்ணக்கால் என்ற மூன்று வகைத் தூண்களை நகரத்தார்களின் கோயில்களில் காணலாம். இம்மூன்றின் அமைப்பும், நேர்த்தியும் ஏனைய அரச மரபினரின் கலைப்பாணியில் இருந்து வேறுபட்டுத் திகழ்வதைக் காண முடிகிறது. நகரத்தாரின் இரணியூர் கோயில் கட்டடக்கலையில் மற்றொரு சிறப்பாகக் கோயில் மேல் மட்டத்தில் பெய்யும் மழைநீர் அனைத்தும் கீழே கொண்டுவர இரும்பு அல்லது சிமெண்ட் குழாய் அமைக்காமல் வெள்ளைக் கல்லாலான கல்குழாய்களையே பிரகாரத்தில் நிறுத்தி உள்ளனர். 4மீ உயரமுடைய கல்லாலான தூண் போன்ற இக்குழாய்கள் பண்டைய சிற்பவல்லுநரின் திறமைக்குச் சான்றாகத் திகழ்கின்றன.[4]

வைரவர் வழிபாடு

மேலும் வைரவர் வழிபாட்டிற்கு நகரத்தார் கொடுக்கும் இன்றியமையாத் தன்மை சிறப்புடையது. பெரும்பாலும் முன்புற வாயிலின் அருகே கோயிலின் வடகிழக்கு மூலையில், வைரவர் சன்னிதி அமைந்திருக்கும். ஆனால், நகரத்தார் கோயில்களில் எட்டுப் பரிவாரங்களுள் ஒன்றான வைரவரை அம்மன் சன்னிதி அருகிலேயே அமைத்துள்ளனர். நகரத்தார் கோயில்களில் செய்யப்படும் நாளின் முதல் வழிபாடாகிய திருவனந்தலில் வைரவருக்கே முதன்முதல் பூசை நடைபெறும். இரவு அர்த்தஜாமத்தின் போதும் நாளின் இறுதி

1. டாக்டர் இராசு பவுன்துரை, செட்டி நாட்டு நகரத்தார் வீடுகளும் கட்டடக்கலை மரபும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 2005, பக், 62 – 63
2. மா.சந்திரமூர்த்தி, மாத்தூர் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1988, பக், 14 – 15.
3. மா. சந்திரமூர்த்தி, மேலது, பக், 40.
4. மா.சந்திரமூர்த்தி, இரணியூர்க் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990, பக், 22.

வழிபாடாக வைரவருக்குத்தான் பூசை நடைபெறும். அப்பொழுது கோயிலின் சாவிகள் அனைத்தையும் வைரவரிடம் ஒப்படைத்து விடுகின்றனர்.

செப்புத் திருமேனிகள்

ஒன்பது நகரக் கோயில்களிலும் விநாயகர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, நடராசர், சிவகாமி, மாணிக்கவாசகர், காரைக்கால் தாய், அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், சோமாஸ்கந்தர், பிரியாவிடை, தனி அம்மன், சந்திரசேகரர், சந்திர சேகர அம்மன், அஸ்திரதேவர், சண்டிகேசுவரர், பிரதோஷ நாயகர், போக சக்தி, துர்க்கை, பள்ளியறைச் சொக்கர், பள்ளியறை அம்மன் ஆகிய செப்புத்திருமேனிகளைக் காண முடிகிறது.

அரிய திருமேனிகள்

இரணியூரில் தட்சிணாமூர்த்தி, அண்ணாமலையார், பிரம்மா, துர்க்கை, பிச்சாடனர், பசுபதி லிங்கம், பத்ம லிங்கம், முத்துக்கந்தர், வீரபாகு, துவார பாலகர், துவார சக்தி, கண்ணாடி, நந்தி, பலிபீடம் ஆகிய படிமங்கள் உள்ளன. இலுப்பைக்குடியில் சித்தர்களுள் ஒருவரான கொங்கண சித்தருக்குச் செப்புச் சிலை ஒன்று உள்ளது. இவற்றில் சில எங்கும் இல்லாதவை. இன்னும் சில பிற ஆலயங்களில் மிகவும் அரிதாகக் காணப்படுபவை.

நகரக் கோயில்களில் உள்ள இப்படிமங்கள் முழுதும் செப்புக் கலவையால் கனமாகச் செய்தளிக்கப்பட்டுள்ளன. இவை செம்பொன் நிறத்தையுடையவை. நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் படிமக்கலைத் திருப்பணியை வெளிப்படுத்துபவை. சாக்கோட்டை ஸ்தபதிகளின் கலைப்பணியைத் தெரிவிப்பவை. வார்ப்புக் கலையில் அவர்களது அறிவையும், அனுபவத்திறனையும் வெளிப்படுத்துபவை.[1]

ஆடை அணிகள்

இச் செப்புத் திருமேனிகளின் சடை மகுடம், கேச பந்தம், கரண்ட மகுடம், கிரீட மகுடம், அனல் மகுடம் முதலிய தலைக் கோலங்களின் அமைப்பு, இரத்தினப் பட்டம், முத்துப் பட்டம், மகர - பத்திரக் குண்டலங்கள், மலர்க் குழைகள், மங்கல நாண், சரம், சரப்பளி, சரடு, பதக்கம், அட்டிகை, உட்கழுத்து மாலை, தோள் வளை, கடகம், கைவளை, காப்பு, காரை, சூடகம், வங்கி, மோதிரம், உருட்டு, மார்புக் கச்சை, உதரக் கச்சை, இடைக் கச்சை, இடைவார், இடை மணி, அரைப்பட்டிகை, அரைஞாண், மேகலை, கீர்த்திமுகக் கச்சை, குறங்குசெறி, கிண்கிணி, பாடகம், பாதசரம், தண்டை, கால் வங்கி, மெட்டி, மிஞ்சி ஆகிய அணிகளின் அழகுத் தன்மை, கைகளில்

1. மா.சந்திரமூர்த்தி, திங்கள் சொற்பொழிவு, தொல்லியல் துறை, 25.8.1995.

ஏந்தியுள்ள, மழு, மான், அங்குசம், பாசம், வாள், கேடயம், அம்பு, வில், சக்தி, வஜ்ஜிரம், சங்கு, சக்கரம், கதை, கபாலம், குறுவாள், கைமணி ஆகிய ஆயுதங்கள், நீலோத்பலம், தாமரை முதலிய மலர்கள், ஆடை அணிகலன்கள் யாவும் நகரத்தாரின் தனித்தன்மை வாய்ந்த கலைப்பாணியை அடையாளம் காண வகை செய்கின்றன.

செப்புச் சிலைகள்

செட்டிநாட்டிலுள்ள கோயில்களுள் சுமார் 1,500 செப்புத் திருமேனிகள் இருப்பதாகத் தொல்லியல் துறையினரால் அண்மையில் கணக்கிடப்பட்டுள்ளன. இவற்றை,

கி.பி. 1800 முதல் 1850

கி.பி. 1850 முதல் 1900

கி.பி. 1900 முதல் 1950

ஆகிய மூன்று காலகட்டங்களில் பகுத்து அறியலாம். இவற்றை முற்கால நகரத்தார், இடைக்கால நகரத்தார், பிற்கால நகரத்தார் காலக் கலைச் செல்வங்களாகக் கருதலாம்.

இக்கால கட்டத்தில் தமிழகத்தில் வேறு எங்கும் காணமுடியாத அளவிற்குத் தட்சிணாமூர்த்தி, சனகாதி முனிவர்கள், அடிமுடி காணா அண்ணல் எனும் அண்ணாமலையார், நான்முகன், துர்க்கை ஆகிய செப்பு வடிவங்களை முதன்முறையாகச் செய்தளித்து இரணியூர் கோயில் கருவறை தேவகோட்டத்தில் அமைத்துப் புதுமை செய்து புகழ் பெற்றுள்ளனர்.

தட்சிணாமூர்த்தி படிமம்

பொதுவாகத் தட்சிணாமூர்த்தியினது செப்புச் சிலையை மட்டும் தமிழ்நாட்டு ஆலயங்களில் காண்பது அரிது. தஞ்சையை ஆண்ட சோழப் பெருமன்னன் இராசராசன் தான் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலில் தட்சிணாமூர்த்தியின் செப்புத் திருமேனியைச் செய்தளித்ததாகக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. ஆனால், அச்சிலை இன்று நமக்குக் காணக் கிடைக்கவில்லை. இருப்பினும் அவனுக்குப் பின்வந்த மன்னர் மரபினர் காலத்திய தட்சிணாமூர்த்தியின் செப்புத் திருமேனிகளும் இன்று நாம் அதிகமாகக் காணுமாறு இல்லை.

புதிய மரபு

பெரும்பாலும் சிவன் கோயில் கருவறையின் புறச்சுவரில் தேவகோட்ட மாடத்தில் தட்சிணாமூர்த்தியின் சிற்பத்தை அமைக்கும் மரபு இருந்ததே தவிர, அவ்விடத்தில் செப்புத் திரு மேனியைப் பொருத்தும் வழக்கம் இல்லை.

மேலும் கோயிலில் ஆண்டுதோறும் நடக்கும் திருவிழா நாள்களில் தட்சிணாமூர்த்தியை வீதி உலாவாகப் புறப்பாடு செய்யும்

வழக்கமும் தமிழகத்தில் இல்லை. எனவேதான் தட்சிணாமூர்த்தியின் செப்புத் திருமேனிகள் தமிழகத்தில் மிக அரிதாகக் காணப்படு கின்றன.

அவற்றுள் தஞ்சை மாவட்டம், வலங்கைமான் அருகில் உள்ள ஆலங்குடியில் ஒன்றும், நாகை கா.மி. மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்திலுள்ள வள்ளலார் கோயிலில் ஒன்றும், சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டத்திலுள்ள இரணியூர் கோயிலில் ஒன்றும் காணப்படுகின்றன. இவற்றுள் இரணியூர் கோயிலில் மட்டுமே சனகாதி முனிவர்களுடன் தோன்றும் தட்சிணா மூர்த்தியின் படிமக் குழுவைக் காணமுடிகிறது.[1]

இது இரணியூர்க் கோயில் நகரத்தாரின் தனித் தன்மையையும், இறை உருவங்களை வடித்து மகிழ்வதில் அவர்களுக்குள்ள ஆர்வத்தையும், அக்கறையையும், புதுமையைக் காணும் வேட்கை யையும் காட்டுவதாக அமைகிறது.

இக்காலக்கட்டங்களில் விஜய நகர, நாயக்க மன்னர்களுக்குப் பிறகு, கோயில்களில் துவார பாலகர் - துவார சக்திகள் ஆகிய உருவங்களைச் செம்பிலே வார்த்து வைத்துள்ள பெருமையும் நகரத்தார்களுக்கு உரியது.

விலாசம் பொறித்தல்

நகரத்தார் சமூகத்தனர் தம் பெயருக்கு முன் பயன்படுத்தும் நீளமான முன்னெழுத்துக்கள் அல்லது விலாசம் பிற சமூகத்தினரை வியக்க வைக்கும் ஒன்றாகும். இந்த முன்னெழுத்து (விலாசம்) முறையை நகரத் கோயில்களிலும், சத்திரங்களிலும், கோயில் சிலைகளிலும், பாத்திரங்களிலும் காணலாம். நகரத்தார்கள் செய்தளித்த இச்செப்புத் திருமேனிப் பீடங்களில் பொருத்தப் பட்டுள்ள நாராசக் கம்பிகளின் பீடங்களிலும் அச்சிலைக்குரிய முதலெழுத்தை விலாசமாகப் பொறித்துள்ளமை எண்ணி மகிழத்தக்க ஒன்று. எடுத்துக்காட்டாக முத்துஸ்கந்தருக்கு 'மு' என்றும், வயிரவருக்கு 'வ' என்றும், பிட்சாடனருக்கு 'பி' என்றும், வீரபாகுக்கு 'வி' என்றும், குள்ள கணத்திற்கு 'கு' என்றும் முதலெழுத்துப் பொறித்துள்ளனர். இந்நகரத்தார்கள் தங்கள் பேரிலும், பொருளிலும் முதலெழுத்து இடும் வழக்கத்தைத் தங்களால் அளிக்கப் பட்டுள்ள கலைச் செல்வங்களிலும் பொறித்துப் போற்றியுள்ளனர். இது இச்செப்புச் சிலைகளை எளிதில் அடையாளம் காண வகை செய்கிறது.[2]

⌘ ⌘ ⌘

1. M.Chandramurthy, The Icon of Dakshinamurthy and cultural Milieu, paper presented in the Seminar on Socio - Cultural developent, C.P.R. Institute of Indologial Reserch, Chennai, 31.1.1998.
2. மா.சந்திரமூர்த்தி, இரணியூர்க் கோயில், 1990, பக், 108 – 109.

௨௨. நகரத்தார் – தீட்சா மடங்கள்

கோயிலூர்த் திருமடம்

தமிழ்நாட்டில் உள்ள பல மடங்களுள் கோயிலூர்த் திருமடம் தனிப்பெருமை வாய்ந்தது. சைவசித்தாந்தக் கொள்கைகளை விளக்கவும், வைணவக் கொள்கைகளை விளக்கவும் பல மடங்கள் இருந்தபோதிலும் வேதாந்தக் கொள்கைகளுக்கு விளைநிலமாக அமைந்தது கோயிலூர்த் திருமடமே.[1]

சிவகங்கை மாவட்டத்தில், காரைக்குடியிலிருந்து மதுரைச் சாலையில், 2 கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருக்கும் ஒரு சிற்றூர் கோயிலூர். இவ்வூருக்குச் **சமிவனக்ஷேத்திரம், ஸ்ரீவல்லபம்** என்ற வடமொழிப் பெயர்களும், **வன்னிவனம், கழனிவாயில், சாலிவாடி** என்ற தமிழ்ப் பெயர்களும் முன்னர் வழங்கின.

கோயிலூரில் உள்ள லிங்கம் சுயம்பு. இந்த லிங்கத்தின் உதவியால் வீரசேகர பாண்டியன் கொற்றவாள் என்ற அதிசய வாளைப் பெற்றதாகவும், அதனால் இந்த லிங்கத்தைச் சுற்றிக் கோயில் அமைத்து ஊர் உண்டாக்கியதால் இவ்வூருக்குக் கோயிலூர் எனப் பெயர் வந்தது எனவும், செவிவழிச் செய்தியாக அறிய முடிகிறது. இக்கோயிலில் இருந்து அருளாட்சி செய்கின்ற இறைவனின் பெயர் கொற்றவாளீஸ்வரர். இறைவியின் பெயர் திருநெல்லையம்மன். இக்கோயிலில் கி.பி.12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுகள் உள்ளன.

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் இந்த மடம் நகரத்தார்களால் தோற்றுவிக்கப் பெற்றது. இம்மடத்தின் முதற்குருவரான ஆண்டவர் ஓதாது உணர்ந்த பெருஞ்ஞானியாவார். சிக்கல் அருகே உள்ள பொருள் வைத்த சேரியில் உகந்தலிங்க தேசிகரால் ஞானம் கைவரப் பெற்ற அருளாளர்.[2]

ஆண்டவர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டவுடன் கோயிலூரில் ஒரு மடத்தை நிறுவி, அம்மடத்தில் பயில விரும்புவோர்க்கு வேதாந்தம் சொல்லித்தரத் தொடங்கினார்.

---

1. சோமலெ, (பதி) கோவிலூர் திருக்குட நீராட்டு மலர், கோவிலூர், 1978.

2. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும், பழக்க வழக்கங்களும், 1994, பக் 29

இங்கு வேதாந்தம் பயில வரும் மாணாக்கருக்கு **'நாநாஜீவநாதக் கட்டளை'**யில் தொடங்கி **'ஞானவாசிட்டம்'** ஈறாகப் பதினாறு வேதாந்த நூல்களைப் பயில்விப்பது என ஒரு பாடத்திட்டத்தைக் கோயிலூர்த் திருமடம் வரையறை செய்துள்ளது. இவ்வாறான ஓர் ஆதீனத்தையும், திருமடத்தையும் நிறுவிய ஆண்டவர், தம் நீண்டநாள் திட்டமாகிய கோயில் கருங்கல் திருப்பணி, மடத்திற்கு வேண்டிய கட்டடத் திருப்பணிகள் ஆகியவற்றை நகரத்தார் பொருளுதவியோடு 1808 - இல் தொடங்கினார்.

இன்று செட்டிநாடெங்கும் சிவாலயங்கள் காணப் பெற ஆண்டவரே அடிப்படைக் காரணம். ஆண்டவரால் நிறுவப் பெற்ற கோயிலூர் ஆதீனத்தின் தலைமைப் பொறுப்பை நகரத்தார் மரபில் பிறந்த துறவிகளே ஏற்று நடத்துவது மரபாக உள்ளது. இவ்வாறு கோயிலூர் மடாலயம் தோன்றக் காரணமாக இருந்த முத்துராமலிங்க ஆண்டவர் 1848-ஆம் ஆண்டு பங்குனி உத்திரம் அன்று முக்தி அடைந்தார்.

1808-இல் ஆண்டவரால் தொடங்கப் பெற்ற கோயிலூர் திருக்கோயில் மற்றும் திருமடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் அடுத்தடுத்த மடாதிபதிகள் காலத்தில் மெதுவாக வளர்ந்து **வீரசேகர ஞானதேசிகர்** என்ற திருநாமத்துடன் மடத்தின் ஐந்தாவது பட்டமாக அருளாட்சி செய்த **திருக்களர் ஆண்டவர்** காலத்தில் முற்றுப்பெற்றன.

இவரது ஆட்சிக் காலத்தில் திருநெல்லை உடனாய கொற்றவாளீசர் கோயிலுக்கு முதல் திருக்குட நன்னீராட்டு விழா 1908-இல் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாட்டில் வேறு எந்தக் கோயிலிலும் இல்லாத வண்ணம் இக்கோயிலின் திருப்பணிக்கு மூலக்காரணமான **முத்துராமலிங்க ஆண்டவர்** வடிவத்தை, அவர் தரையில் விழுந்து வணங்கும் நிலையில் கொடிமரத்திற்கு அருகே சிலையாக அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.[1]

நகரத்தார் சமூகத்திற்கு இன்றியமையாத திருமடம் கோவிலூர். தங்கள் முன்னேற்றம் கருதியும் வாழ்க்கை முறையில் மாறுதல்கள் குறித்தும் 96 ஊர் நகரக் கூட்டங்களைக் கோவிலூரில் கூட்டுவதே மரபு எனச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

இஃது ஒரு தாய் மடம். இதற்குப் பல சேய் மடங்கள் தமிழகத்தில் உண்டு. வடநாட்டிலும் இதற்குச் சார்பு மடங்கள் உண்டு என்பர். கோவிலூர் மடாலயம், கீழ்க்காணும் மடாலயங் களைக் கிளை மடாலயங்களாகப் பெற்றுள்ளது.

1. பொருள் வைத்தசேரி - கோ.ஆ.பொ. மடாலயம். (தஞ்சாவூர் மாவட்டம்)

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 155 – 156.

2. திருவண்ணாமலை - ஈசான்ய மடாலயம்.
3. திருக்களர் - கோ.ஆ. வீரமடாலயம்.
4. சிதம்பரம் - கோ.சித. மடாலயம் என்ற பொன்னம்பல சுவாமிகள் மடாலயம்.
5. திருப்பூவணம் - வேதாந்த மடாலயம். (சிவகங்கை மாவட்டம்)
6. வளவனூர் - சண்முக சுவாமிகள் மடால்யம் (விழுப்புரம் மாவட்டம்)
7. மேட்டுப்பாளையம் - சபாபதி சுவாமிகள் மடாலயம். (வேலூர் மாவட்டம்)
8. எறும்பூர் - கோ.சித. மடாலயம் என்ற தத்துவராய சுவாமிகள் மடாலயம். (கடலூர் மாவட்டம்)
9. எறும்பூர் - கோ.ஆ. மடாலயம்.
10. திருவண்ணாமலை - பவழக் குன்று மடாலயம் என்ற அழகானந்த சுவாமிகள் மடாலயம்.
11. காரியானூர் - சாந்தி ஆசிரமம். (திருச்சி மாவட்டம்)

தமிழ்ப் பணிகள்

வேதாந்தக் கொள்கை, மிகப் பழைமை வாய்ந்தது. அதனை விளக்கும் நூல்கள் பல வெளிவந்துள்ளன. ஆயினும், தமிழ்நாட்டு வேதாந்தம் எத்தகையது என்பதனைச் சிறப்பாக விளக்க அவை தவறின. அவ்வாறு விளக்க வேண்டுமாயின் கோயிலூர்த் திருமடம் தந்த நூல்களையும், நுட்பம் வாய்ந்த உரைகளையும் படித்துப் பயிலுவதன் மூலமே முடியும்.

வேதாந்த மடங்கள் "யானே எங்குமாம் பிரமம்" என்ற முடிநிலைக் கொள்கையை உயிர்க் கொள்கையாக உடையன. இதனைக் கற்றார்க்கும் மற்றார்க்கும் உணர்த்திக் கடைத் தேற்றம் செய்தற்காகத் தோன்றிய மடமே கோயிலூர் மடம். கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் பட்டனார் என்பார். இவர் வேதாந்த நோக்கில் பகவத் கீதையைத் தமிழில் பாடினார். இதுவே தமிழில் தோன்றிய முதல் வேதாந்த நூல் என்பார் இலக்கிய வரலாற்றாசிரியர் அறிஞர் மு. அருணாசலம். இந்நூலுக்கு உரை வரைந்த பெருமை கோயிலூர் மடத்திற்கு உண்டு.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப் பெறும் தத்துவராய சுவாமிகள், தமிழ்நாட்டு வேதாந்திகளுக்குத் தாய் போன்றவர். இவர் கற்றுத்துறைபோகிய முற்றத் துறந்து வேதாந்த நுட்பமிக்க கருத்துகள், பல அமைய 20 நூல்கள் பாடியவர். இந் நூல்களைக் கோவிலூர்த் துறவிகள், கொள்கை நூல்களாக ஏற்பர்.

வசிட்டர் இராமபிரானுக்கு உபதேசித்தது ஞானவாசிட்டம் என்பர். இந்நூலின் தமிழாக்கத்திற்குக் கோவிலூர் மடம்

நித்தியானந்த சுவாமிகள் உரையெழுதியுள்ளார். இப்பேருரையினை அனைவரும் போற்றுவர். கோயிலூர் மடம், தமிழுக்குச் செய்த தொண்டுகளில் உரைத் தொண்டு மறக்க முடியாதது.

.கோயிலூர்ச் சிதம்பர சுவாமியின் மாணவரும் துறவியுமான இராமசாமி சுவாமி (19ஆம் நூ) நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை ஆராய்ந்து அச்சிட்டுள்ளார். கோயிலூர் மடத்தில் இருந்த பெருவாரியான ஏட்டுச் சுவடிகளை எடுத்து அச்சிட்டவர் இவரே.

தற்போது 5.7.1995 முதல் ஆதீனகர்த்தராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமிகள் ஆவார்.

முத்துராமலிங்க ஆண்டவர், குடும்பத்தைச் சேர்ந்த 6-ஆவது தலைமுறைப் பேரன்தான் நாச்சியப்ப சுவாமிகள். இவர் மழலையர் பள்ளி, திருமுறைக் கல்லூரி, நாதசுர இசைக் கல்லூரி, வேத ஆகமக் கல்லூரி ஆகியவற்றை உள்ளடக்கிய 'சனாதன தர்ம உலகப் பல்கலைக்கழகம்' ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டுக் கோயிலூர் வளாகத்தில் செயற்படுத்திவருகிறார்.

நகரத்தாரால் நிறுவப்பட்டதும், நகரத்தாரே தொடர்ந்து ஆதீனத் தலைமை ஏற்கும் மரபுடையதும், நகரத்தார் வரலாற்றில் சிறப்பிடம் பெறுவதுமான, இருநூற்றாண்டு வரலாறு உடைய ஒரு மடாலயம் கோயிலூர்த் திருமடமாகும்.

துலாவூர் மடம்

நகரத்தார் பெண்கள் குருபீடம் துலாவூர் நிரம்பவழகிய தேசிகர் ஆதீனத் திருமடமாகும். துலாவூர் காரைக்குடியிலிருந்து குன்றக்குடி செல்லும் சாலையில் குன்றக்குடி ஊருக்குள் நுழையும் முன் மேற்கே செல்லும் கிளைச்சாலையில் 2கி.மீ. தொலைவில் உள்ள அழகிய சிற்றூராகும்.

துலாவூர்க் கிராமம் நிரம்ப அழகிய தேசிகருக்குச் சவுந்தர பாண்டிய மன்னனால் கி.பி. 779-இல் அளிக்கப் பெற்றது. காவிரிப் பூம்பட்டினத்தில் நகரத்தார் வாழ்ந்த காலத்தில் வேளாளர் குலப்பெண்களை மணந்துகொள்ள வேண்டிய காலக் கட்டாயம் ஏற்பட்டபொழுது வேளாளர்களுடன் ஏற்பட்ட உடன்பாட்டின் படி வேளாள வம்சப் பெண்களாகிய ஆச்சிகளுக்கும் அவர்கள் வழிவரும் ஆச்சியருக்கும் வேளாளர் குல குருவாகிய ஆதி நிரம்ப அழகிய தேசிகரே உபதேசம் செய்யும் உரிமை பெற்றார். அவரது காலம் கி.பி. 567-627 ஆகும். அவருக்குப் பின் நமசிவாய தேசிகர் சத்திய ஞான தேசிகர், மங்களேசுவர தீட்சிதர், சத்திய ஞானதேசிகர், சிதம்பர தேசிகர், மங்களேசுவர தேசிகர், உதயமூர்த்தி தேசிகர், பொன்னம்பல தேசிகர், ஞானப்பிரகாச தேசிகர் ஆகியோர் குருமூர்த்திகளாக இருந்து பெண்களுக்கு

உபதேசம் செய்தனர். குருவாக இருந்த அனைவருக்கும் நிரம்பவழகிய தேசிகர் என்ற ஆதிகுருவின் பெயர் பட்டப் பெயராக வழங்கி வரலாயிற்று.

துலாவூர் மடத்தை ஞானப்பிரகாச தேசிகர் கி.பி. 913-இல் நிறுவினார். அவர் ஆதிகுருவின் பெயரில் **நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம்** என்றே மடத்துக்குப் பெயரிட்டார். பின்னர் ஆட்சிக்கு வந்த 18 - ஆவது குருவான **சத்திய ஞானதேசிகர்** 1541 முதல் 1597 முடிய 56 ஆண்டுகள் பட்டத்தில் இருந்திருக்கிறார். இவர் நிரம்ப அழகிய தேசிகர் என்ற ஆதிகுருவின் பெயராலேயே பிரபலம் அடைந்த மாபெரும் புலவர் ஆவார்.

நிரம்பவழகிய தேசிகர்

"நிரம்பவழகிய தேசிகர் 16-ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர். தஞ்சாவூர் மாவட்டம் திருமறைக்காட்டில் பிறந்தார். பாண்டிய நாட்டில் துலாவூரில் வாழ்ந்தார். இவர் தமிழிலும் வடமொழியிலும் வல்லவர். இவர் மதுரையிலேயே தங்கி மாணவர்களுக்குச் சைவ சித்தாந்த நூல்களைக் கற்பித்தார். சேதுபதியால் பாராட்டப் பெற்றார். இவர் இயற்றிய **சேதுபுராணம்** இலக்கியச் செறிவுடையது. சொற்சுவை பொருட்சுவை மிக்கது. **திருப்பரங்குன்றப் புராணம், திருவையாற்றுப் புராணம், திருஞானசம்பந்தர் மாலை** என்னும் நூல்களும் இவர் இயற்றினவே என்பர். திருவருட் பயனுக்கும் சிவஞான சித்தியாருக்கும் உரை எழுதியுள்ளார்" என்பது தமிழ்க் கலைக் களஞ்சியம் தெரிவிக்கும் செய்தியாகும். இவர் காலம் முதல் நிரம்பவழகிய தேசிகர் என்ற பெயர் தமிழ் உலகில் புகழ் பெற்றது. டாக்டர் உ.வே. சாமிநாதையரின் தமிழாராய்ச்சிக்கு இம் மடம் ஏராளமான தமிழ்ச்சுவடிகள் அளித்து உதவியது. இன்றும் ஏராளமான தமிழ்ச் சுவடிகள் இத்திருமடத்தில் உள்ளன. இந்த நிரம்பவழகிய தேசிகராகிய பெரும்புலவரின் படம் இன்றும் இம்மடத்தில் காணப்படுகிறது.

இம்மடத்தின் 20-ஆம் குருவாகிய **தாண்டவேசுவர தேசிகர்** காலத்தில் தமிழ்நாட்டில் முஸ்லீம் படையெடுப்புகள் நிகழ்ந்து கோயில்களும் மடங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டன. அக்காலத்தில் நவாபின் நோய் நீக்கி அஞ்ஞான இருளகற்றி இழந்த சொத்துகளை நவாபிடமிருந்து மீண்டும் சாசனமாகப் பெற்ற பெருமை இந்த இருபதாவது குருவையே சேரும். துலாவூர் மடத்தின் சொத்துகளை நவாப் உருதுமொழியில் எழுதிச் சாசனம் செய்து கொடுத்துள்ளார். இச்சானத்தை இன்றும் துலாவூர் மடத்தில் காணலாம். இச்சாசனம் வருமாறு:

ஹிஜிரி 1081 கமரியுலவல் மீ 2உ உசேன் நகரமாகிய சிவகங்கை இலாகா திருப்பத்தூர் சேகரம் துலாவூர் கிராமத்தில் 111 பதக்கு

விரையடியை ஷயூர் நிரம்ப அழகக்குருக்கள் காலக்ஷேபத்துக்காக 1084 பசலி உஜீர் இனாயிரத்து நாமாம் படிக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஷயார் தகுந்த பாக்கியத்துடனே ஷி கிராமத்தில் அகமசியலாயிருக்கிறார்.

உஜீர் சய்தீன் நவாபு சையது முகமது முகர். நீர் 460 சிவகங்கை ஜமீன்தார்சேகரம் திருப்பத்தூர் தாலுகாவில் சேர்ந்த துலாவூர் - அதிகரை உள்கிடை குந்தளி பரயனேந்தல் -க-பட்டமங்கலம் உள் கிடைகாடாங்குடி ஏந்தல் -க-செல்வி புலிவயல் -க-ஆக ஏந்தல் உள்கிடை துலாவூர் மடப்புரம் நெரம்ப அழகர் நகர் ஆபதாரண குருக்கள் (உருது கை எழுத்து) இரவும் பகலும் நாம் நம்முடைய ஞாபகமாகவே இருந்து வருகிறோம். நம்முடைய தர்பாரில் இருந்து எழுதப்பட்டது.

அப்துல்லாஹாம் ஹிஜீரி (10)70

28 - ஆவது குருவாக இருந்து சதாபிஷேகம் செய்து கொண்ட ஸ்ரீபால உதயமூர்த்தி தேசிகர் அவர்கள் செட்டி நாட்டில் பலமுறை பயணம் செய்து பல ஆயிரம் ஆச்சிமார்களுக்கு உபதேசம் செய்து வைத்துள்ளார்கள். இவர்களது சதாபிஷேகத்தின் பொழுது 27.5.1984 இவர்களது தலைமகன் ஆகிய ஞானப்பிரகாச தேசிகர் அவர்கட்கு இளவரசுப் பட்டாபிஷேகமும் செய்விக்கப்பெற்றது.

துலாவூர் மடாதிபதிகள் வரிசை

1.	ஞானப் பிரகாச தேசிகர்	கி.பி. 913-943
2.	சிவஞான தேசிகர்	943-971
3.	சபாபதி தேசிகர்	971-995
4.	பொன்னம்பல தேசிகர்	995-1026
5.	பூரணசுந்தர தேசிகர்	1026-1058
6.	சபாபதி தேசிகர்	1058-1087
7.	பூரணசுந்தர தேசிகர்	1087-1115
8.	மாசிலாமணி தேசிகர்	1115-1167
9.	நடராஜகுரு தேசிகர்	1167-1198
10.	மாசிலாமணி தேசிகர்	1198-1226
11.	உதயமூர்த்தி தேசிகர்	1226-1277
12.	சிதம்பர தேசிகர்	1277-1335
13.	சபாபதி தேசிகர்	1335-1388
14.	வடுகநாத தேசிகர்	1388-1417
15.	உதயமூர்த்தி தேசிகர்	1417-1449

16.	சத்தியஞான தேசிகர்	*1449-1498*
17.	தாண்டவேசுவர தேசிகர்	*1498-1541*
18.	சத்தியஞான தேசிகர்	*1541-1597*
19.	சிதம்பர தேசிகர்	*1597-1629*
20.	தாண்டவேசுவர தேசிகர்	*1629-1684*
21.	சாமிநாத தேசிகர்	*1684-1735*
22.	ஆபதோத்தாரண தேசிகர்	*1735-1768*
23.	வடுகநாத தேசிகர்	*1768-1799*
24.	ஆபதோத்தாரண தேசிகர்	*1799-1828*
25.	சத்தியஞான தேசிகர்	*1828-1860*
26.	உதயமூர்த்தி தேசிகர்	*1860-1880*
27.	ஞானப்பிரகாச தேசிகர்	*1880-1923*
28.	பாலஉதயமூர்த்தி தேசிகர்	*1923-1987*
29.	ஞானப்பிரகாச தேசிகர்	*1987* முதல் [1]

துலாவூர் மடம் சைவமடங்கள் பதினெட்டுள் ஒன்று. துலாவூர் ஆதீனம் பெண்கள் குருபீடம் ஆகையால் இங்குள்ள மடாதிபதிகள் இல்லற நெறியினர். இம்மடத்தில் ஒரு சிறு கோயிலில், **ஸ்ரீ மங்களாம்பிகை சமேத ஸ்ரீ வாஞ்சீஸ்வர சுவாமி** எழுந்தருளியுள்ளார். இத்தெய்வங்கட்கு மடாதிபதியே பூசை செய்வது மரபு. தினந்தோறும் இரண்டு காலப்பூசை நடந்துவருகிறது.

குருபூசையும் கொலுமண்டபமும்

ஆதிநிரம்பவழகிய தேசிகராகிய குருமூர்த்திக்கு ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் பௌர்ணமிக்கு அடுத்த நாள் குருபூசை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தக் குருபூசையின் போது செட்டி நாட்டு ஆச்சிமார்கள் நூற்றுக் கணக்கில் கலந்து கொண்டு **சோற்றுக் காணிக்கை** எழுதிக் குருபூசை உணவு உண்கின்றனர். குரு பூசை அன்று ஆதீனகர்த்தர் கொலுமண்டப சிம்மாசனத்தில் எழுந்தருளி ஆசி கூறுவது வழக்கம். அப்பொழுது பாதகாணிக்கை செலுத்துவது பக்தர்கள் மரபு. குருபூசை தினத்தில் ஆச்சிமார்கள் ஆதீனகர்த்தரிடம் உபதேசம் பெற்று ரூ. 16 குருகாணிக்கை செலுத்துகின்றனர்.

கொலுமண்டபம் 1940 -ஆம் ஆண்டில் கானாடுகாத்தான் சா.ரா.மு. ராம. சிட்டாள் ஆச்சி அவர்களால் திருப்பணி செய்யப் பெற்றது. பிறகு 17.8.1982இல் அவர்களது புதல்வர் திரு. சா. ராம.மு. இராம.ஆர். ராமநாதன் செட்டியார் (Ex.M.P) அவர்களால் கொலு மண்டபமும் சிம்மாசனமும் திருப்பணி செய்யப் பெற்றுள்ளன.

1. காசி ஸ்ரீ அரு. சோமசுந்தரன், துலாவூர் மடம் வரலாறு, ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் குடமுழுக்கு விழாமலர், 1991, பக் 147 – 153.

மடம்

கோயிலை ஒட்டி மடம் உள்ளது. அதில் தான் ஆதீனகர்த்தரின் குடும்பத்தார் வாழ்கின்றனர். வளவு இரண்டாங்கட்டு ஆகியன கோட்டையூர் அ.கு.அழ. சேதுக்கரசி ஆச்சி, கண்டனூர் நா.அ.ராம.கா.ராம. உமையாள் ஆச்சி, காரைக்குடி நா. சீதை ஆச்சி ஆகியோரின் கூட்டு முயற்சியாலும் ஆச்சிமார்களின் நன்கொடையாலும் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

துலாவூரும் குன்றக்குடியும்

துலாவூர் மடத்துக்கும் குன்றக்குடி மடத்துக்கும் ஆதிக் காலத்தில் தொடர்பு இருந்திருக்கிறது. அரியூர் ஆறுவழியினரான நகரத்தார்களின் கோயிலாக கடேரகிரி (பிரான்மலை) திருக்கொடுங் குன்றக் கோயில் கருதப்படுகிறது. ஏறத்தாழ 700 ஆண்டுகளாக அருவியூர் நகரத்தார் சமூகத்தார் இத்திருக்கோயிலை வழிபடு கோயிலாகக் கொண்டு வழிவழியாக வாழ்ந்து வருகின்றனர்.[1] இந்த பிரான்மலை முதலிய ஐந்து கோயில் தேவஸ்தானங்களின் தர்ம கர்த்தாக்களாகத் துலாவூர் ஆதீனகர்த்தர்கள் ஐவர் இருந்துள்ளனர்.

சிலையும் தோரண வாயிலும்

துலாவூர் ஸ்ரீநிரம்பஅழகிய தேசிகர் சிலையைக் காரைக்குடி அழகம்மை ஆச்சி செய்து வைத்துக் கும்பாபிஷேகம் செய்துள்ளார்கள்.

துலாவூர் கிராமப் பட்டயம் ✪

சுவஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 632 கலியப்தம் 3811இல் சாதாரண வருஷம் வைகாசி மீ 9உ சோமவாரமும் பருவ புண்ணிய காலமும் விசாக நட்சத்திரமும் கூடிய சுபகரண சுபயோக தினத்தில் ஸ்ரீ சவுந்தர பாண்டிய ராசா அவர்கள் அனுக்கிரகப் பிரசாதத்தினாலே ஸ்ரீ மயூரகிரித்தலமாகிய குன்றக்குடியில் தெட்சிணவீதி அன்னதான மடமாகிய நகரக் குருக்கள் அடுக்களை தீட்சை நிரம்ப அழகர் பண்டாரத்துக்கு நம்ம நாட்டுச் சேர்க்கை சிராவயல் ஏழூர்ப்பத்து மாகாணத்தில் துலாவூர் தானசாதனம் பண்ணினது துலாவூர் கிராமம் 15 கீழ்ப்பார்க் கெல்கை கொரட்டிப் புரவு சுக்கான் ஊரணிக்கும் பெரியாண்டார் கண்மாய்க்கும் கீழ்க்கடைக் கொம்பு குத்துக் கல்லுக்கும் மேற்கு தென்பார்க் கெல்லை பனைக்குடிக் கண்மாய் நொண்டிக் காஞ்சியலையடிக் கல்லுக்கு, விளாவடி ஏந்தல் தென் கடைக் கொம்புக்கல்லுக்கு, பனையடி ஏந்தல் வீரையடிக் கல்லுக்கு.

---

1. மரு. பரமகுரு, பறம்புமலை திருக்கொடுங்குன்றம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு, 1992, பக், 83 – 88.

✪ காசி ஸ்ரீ அரு. சோமசுந்தரன், துலாவூர் மடம் வரலாறு, நேமம் ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் குடமுழுக்கு விழாமலர், 1991, பக் 147 – 153.

வடக்கு

மேல்பார்க்கெல்கை சிராவயல் புரவு முக்கூட்டுக் கல்லுக்கு, மருதங்குடிப் புரவில் ரெட்டைக் கால்வாய்க்கு வெள்ளைக்கல் பொட்டலுக்கு சந்தைப்பேட்டைக் கால்வாய்க்கு பாலையடிக் கல்லுக்கு கடலாத்திக்குக் கிழக்கு வடபார்க்கெல்கை உலகடி ஊரணி தென்கரைக்கு, வெள்ளைக்கல்லு கசாளைப் பொட்டலுக்கு குடமுவட்டிப் பெரிய கால்வாய் சுட்டிப் பாறைக்கு குருவுடையான் பொட்டலுக்கு, பாறைக்கு காயந்திட்டுக்குத் தெற்கு - ஆக இசைந்த பெருநான்கு எல்லைக்குள்பட்ட நஞ்சை, புஞ்சை, திட்டுத் திடல், மாவடை மரவடை, கீழ்நோக்கிய கிணறு, மேல்நோக்கிய மரமும் சகலமும் செலத்துரு பாசனமும் உள்பட நிரம்ப அழகர் மடத்துக்கு தான சாதனம் உண்டுபண்ணிக் கொடுத்தது. அப்போது தான சாதனம் வாங்கியர் சத்திய ஞான கோத்திரத்தில் நிரம்ப அழகர் ஆதிக்கத்தில் மங்களேஸ்வர பண்டாரத்தின் புத்திரர் சத்திய ஞான பண்டாரம்.

பாதரக்குடி மடம்

நகரத்தார் ஆண்களின் உபதேச குருவில் ஒருவராகத் திருப்புனவாயில் இராமநாத சுவாமி ஏற்றுக் கொள்ளப்பட்ட பொழுது 1566 - இல் பாதரக்குடி மடம் தோற்றுவிக்கப்பெற்றது. அது முதல் கலாமடம் சுவாமிகளும், பாதரக்குடி சுவாமிகளும் நகரத்தார் ஆண்களுக்கு உபதேசம் செய்துவந்தனர். 1975-இல் இந்த இரண்டு குருபீடங்களும் ஒன்றிணைக்கப்பட்டு இப்போது பாதரக்குடி சுவாமிகள் மட்டுமே நகரத்தார் உபதேச குருவாக விளங்குகிறார். பாதரக்குடி மடத்தில் திருப்புனவாசல் பழம்பதிநாதரே வழிபடு தெய்வமாக விளங்குகிறார்.

பாண்டிய நாடு வருகை

சோழநாடு சென்றிருந்த சௌந்தரபாண்டியன் மன்னன் சோழ மன்னனிடம் தனது நாட்டில் திருப்பூவணம் வரை கடல் கொண்டு ஊர்கள் அழிந்துவிட்டபடியால் குடிகள் இல்லாமலிருந்து இப்பொழுது நற்குடிகள் வரவழைக்கப்பெற்று செழிப்பாக இருப்பதாகவும் மேலும் சில நற்குடிகளும் வியாபார வைசியர்களும் கொடுக்க வேண்டும் என்று கேட்க, சோழ மன்னன் நகரத்தார்களை அழைத்துக் கேட்டான். அவர்கள் நாங்கள் மூன்று தெருவாரும் சேர்க்கையாகக் குடியிருக்க இடமும் தேவாலயமும் நாங்கள் உடன் அழைத்து வரும் குருமார்களுக்கு மடாலயமும் மானியங்களும் கொடுப்பதுடன் தாங்கள் நடத்துவது போல் மரியாதையுடன் நடத்துவதானால் செல்கிறோம் என்றார்கள். பாண்டியனும் அவ்வாறே சம்மதிக்க நகரத்தார்கள் அங்கிருந்து புறப்பட்டு ஆண்கள் குரு அகோர சிவாச்சாரியாரையும் பெண்கள் குரு நிரம்பவழகிய தேசிகரையும் உடன் அழைத்துக்கொண்டு கி.பி. 707-இல் பாண்டியநாடு வந்து சேர்ந்தார்கள்.

குரு மடங்களின் தோற்றம்

பாண்டிய நாடு வந்த அகோரசிவாச்சாரியார் தமக்கு வயதாகி விட்டபடியால் தாம் சிதம்பரத்தில் சிவதவமியற்ற விரும்புவதாகவும் தமது நண்பரும் பாண்டிய மன்னனின் குருவுமாகிய ஈசான சிவாச்சாரியாரிடம் தீட்சை பெற்றுக் கொள்ளுமாறும் கூறித் திரு முகமளித்து விட்டுச் சிதம்பரம் சென்றுவிட்டார். எனவே பாண்டிய மன்னன் ஈசான சிவாச்சாரியாருக்கு கிளாமடம் முதலிய ஐந்து கிராமங்களையும் நிரம்பவழகிய தேசிகருக்கு துலாவூர் முதலிய கிராமங்களையும் அளித்து மடம் ஏற்படுத்திக் கொடுத்தான். அது முதல் நகரத்தார் ஆண்களுக்கு நெற்குப்பை அருகிலுள்ள கிளா மடமும் பெண்களுக்குக் குன்றக்குடிக்கருகிலுள்ள துலாவூரும் குரு பீடங்களாக அமைந்தன. இந்த வைசியர்கள் சைவதீட்சை யுடையவர் களாதலால் இவர்களுக்குச் சிகையில்லை என்று கூறப்படுகிறது.

பாதரக்குடி மடம் தோற்றம்

சில காலத்துக்குப் பின் காசியாத்திரை சென்ற கிளாமடம் சுவாமிகள் நீண்ட நாள் திரும்பி வராதபடியால் நகரத்தார்களில் சிலர் திருப்புனல் வாயிலிலிருந்த இராமநாதசுவாமி என்பாரிடம் தீட்சை பெற்றனர். அதன் பிறகு காசி சென்றிருந்த சுவாமிகள் திரும்பி வந்து விடவே நகரத்தார்கள் அவரிடம் சென்று நடந்ததைக் கூறினர். அதைக் கேட்ட சுவாமிகளும் உங்களில் எத்தனை பேர் அவரிடத்தில் தீட்சை பெற்றீர்களோ அத்தனை பேரும் வமிச பரம்பரையாக அவரிடமே தீட்சை பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி அனுமதியளித்து (சாலிவாகன சகாப்தம் 1487 - இல்) கி.பி. 1566-இல் இராமநாதசுவாமிக்குப் பாதரக்குடியில் மடாலயமும் மானியமும் விட்டுக் கொடுத்தார். இல்லஞ்சேரி பட்டினம் என்பது இப்போது பாதரக்குடி என்ற பெயருடன் வழங்கி வருகிறது.[1]

அந்தணர் மரபைச் சேர்ந்த **பிரம்மச்சாரி** ஒருவரே பட்டம் கட்டப்பெற்று இம்மடத்தின் **தலைவராக** வருவது மரபு. அவர் துறவு நெறியையே மேற்கொள்ளுவார். இம்மடாதிபதியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த **சேனாபதி சுவாமிகள்** குன்றக்குடி முருகப்பெருமானுக்கு வெள்ளி மயில்வாகனம் செய்து வைத்துள்ளார். இன்றும் அங்குப் பங்குனி உத்திரத் திருவிழாவில் முதல் மரியாதை பாதரக்குடி ஆதீனத்திற்கே அளிக்கப்படுகின்றது.[2]

⌘ ⌘ ⌘

---

1. ஸ்ரீ ல ஸ்ரீ இரவீந்திர சுவாமிகள், குரு பீடங்களின் வரலாறு, நேமம் ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் குடமுழுக்கு விழாமலர், 1991, பக் 145.
2. அகி.சேஷாத்திரி சர்மா, நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, இரண்டாம் பதிப்பு, வானதி பதிப்பகம், சென்னை, 1999, பக், 120.

23. கோயில்களும் புள்ளி மணமும்

செட்டிநாட்டில் ஒவ்வொரு நகரத்தார் கோயிலும் அவ்வினத் திருமணங்களின் விவரத்தைப் புள்ளி என்ற பெயரில் கணக்கு வைத்துள்ளது. தமிழில் **புள்ளி** என்றால் ஒரு சிறு குறிப்பு என்பது. இரண்டு கோயில் நகரத்தார்களுக்கிடையில் அந்த மணப்பெண் - மாப்பிள்ளை சார்ந்துள்ள கோயிலிலிருந்து திருமண மாலைகள் பெற்றபின்தான் திருமணம் நிகழும். இருவர் மணம் புரியும் போது அதற்கென பிரத்யேகமாக வைக்கப்பட்டுள்ள ஒரு புத்தகத்தில் பதிந்த பின்னரே அத்தம்பதிகள் மாப்பிள்ளை சார்ந்த கோயிலின் முழுப்புள்ளி ஆகின்றனர். இந்த மணமான புள்ளி இவர்கள் இனத்தின் ஒரு சமூக அங்கத்தினராகிறார். இப்படிப்பட்ட அங்கத்தினர்கள் **புள்ளிவரி, ஆஸ்திவரி**களைக் கோயில் பராமரிப்பிற்காகக் கட்டவேண்டும். சுருங்கக் கூறினால் **ஒருவன் திருமணம் ஆனால் தான் புள்ளியாகும் தகுதி பெறுகிறான். அதன் பின்னரே அவன் நகரத்தார் இன உண்மையான அங்கத் தினனாகிறான்.**

இது ஓர் அற்புதமான பழக்கம். ஏனென்றால் அக்காலத்தில் ஆயிரக்கணக்கான இந்துக்களிடம் இந்து திருமணத்தைச் சமய மார்க்கங்களில் பதிவு செய்வது வழக்கத்தில் கிடையாது. இந்து திருமணம் முற்றிலும் ஒரு சமயச் சடங்கு. இந்து புரோகிதர் இவ்விஷயத்தில் கிருஸ்துவ, முஸ்லிம் புரோகிதர் போல அதிகாரம் கொண்டவர் கிடையாது. அறிந்தவரை இந்து மக்களில் சிறுபான்மையினரான **நகரத்தார் மட்டுமே கோயில்கள் மூலம் அவர்கள் இனத் திருமணங்களைப் பதிவு செய்து வைத்திருக்கும் அதிசயம் கொண்டவர்.**

திருமணமாகாத குழந்தைகள், முழுக்குடும்பமும் பெற்றோர் புள்ளியைச் சேர்ந்தவர். குழந்தைகள் திருமணமானதும் **தனிப்புள்ளி** ஆகின்றனர். இதில் இரு நகரத்தார் பிரிவுகளில் நேரும் திருமணம் மட்டுமே புள்ளியில் சேரும். ஒரு நகரத்தாரும், நகரத்தார் அல்லாதவருக்கும் நிகழும் திருமணம் புள்ளி ஆகாது. இது சாதி, உட்சாதி, கலப்பு மணங்களைத் தடுக்கவே ஏற்படுத்தப் பட்டது. இப்புள்ளிகளில் இரு விதம் உண்டு. அவை **முழுப்புள்ளி, அரைப்புள்ளி** என்பது.

முழுப்புள்ளி

1. மணமாகாத குழந்தைகளுடன் உள்ள பெற்றோர்
2. குழந்தைகள் இல்லாத கணவன் - மனைவி.
3. குழந்தைகள் உள்ள கைம்பெண்
4. குழந்தைகளுடனோ, இல்லாமலோ இருக்கும் மனைவியை இழந்தவர்
5. பெற்றோர் அற்ற குழந்தைகள்

அரைப்புள்ளி

1. குழந்தை இல்லாத கைம்பெண்
2. விவாகமான மகன், மகள் உடைய கைம்பெண்.

மேற்சொன்னவைகளின் விளக்கம்

1. விவாகமாகாத குழந்தைகளோடு கூடிய கணவன் - மனைவி ஒரு முழுப்புள்ளி.

2. குழந்தை இல்லாத கணவன் - மனைவியும் முழுப்புள்ளியே. இவர்கள் தங்கள் கோயில் இனத்தாரின் குழந்தைகளைத் தத்து கொள்ளும் உரிமை கொண்டவர்கள். இவர்கள் மூலம் சந்ததி விருத்தியாவதால் இவர்கள் முழுப்புள்ளியே.

3. மனைவியை இழந்தவன் மறுமணம் புரிய வாய்ப்புள்ளதால் இவன் முழுப்புள்ளி. இவன் முதலிலேயே புள்ளி. அதனால் புதுப்புள்ளியாகக் கருதப்படமாட்டான். ஆனால், புதிய திருமணத்தால் ஒரு புதுப்புள்ளியைக் குழந்தைகள் மூலம் ஏற்படுத்துகிறான்.

4. குழந்தைகள் திருமணம் செய்து கொள்ளக் கூடும் என்பதால் குழந்தை உடைய கணவனை இழந்தவரும் ஒருபுள்ளி தான். ஆனால் குழந்தைகள் மணம் புரிந்தபின் இவள் அரைப் புள்ளியாகிறாள். ஏனெனில் இவள் மீண்டும் மணம் புரிய முடியாது. இவளால் புதுப்புள்ளிகளை ஏற்படுத்த முடியாது.

1-2. குழந்தையற்ற கைம்பெண்ணும், மணமான குழந்தைகள் கொண்ட கைம்பெண்ணும் அரைப்புள்ளி, ஏனெனில், கைம்பெண்கள் பெரும்பாலும் மறுமணம் புரிவதில்லை. புதிய புள்ளி ஏற்பட வாய்ப்பு இல்லை.

இப்படிப் புள்ளி பிரிப்பு, ஒரு புள்ளி புதிய புள்ளியை ஏற்படுத்தும் வாய்ப்புடையது. ஒரு புள்ளி இவ்வாய்ப்பு இருந்தால் முழுப்புள்ளியாகும். வாய்ப்பு அற்றால் அரைப்புள்ளியாகும். தம்பதிகள் இறந்து புள்ளி புதுப்புள்ளியை ஏற்படுத்தும் வாய்ப்பு இல்லாவிட்டால் புள்ளி மறைந்து விடுகிறது. இப்புள்ளித் தன்மை

சில நிர்ப்பந்தங்கள் கொண்டது. ஒரு புள்ளிக்கு எவ்வளவு குழந்தைகள் என்பது தெரியாததால் இது இந்த இனத்தின் சரியான மக்கள் தொகையைக் கணக்கிட உதவாது. ஆனால், குடும்ப கோணத்தில் இனப்பெருக்கத்தை வளர்ச்சி - குறைவு என்ற முறையில் கணக்கிட உதவுகிறது. ஒரு குடும்பத்தின் சராசரித் தொகை கொண்டு நகரத்தார் இனத் தொகையைக் கண்டுபிடிக்கலாம்.

மேலும் குடும்பம் என்பது ஒரு தலைவனுடைய வம்சத்தில் பிறந்த அத்தனை ஆண்களும், அவர்களது மனைவியரும், அவர்களது மணமாகாத குழந்தைகளுமேயாவர். இவர்கள் தாம் வாழும் காலத்தில் எந்தப் பாகப்பிரிவினையும் செய்து கொள்ளாமல் இருந்தால் **'அவிபக்த குடும்பம்'** என்றும், பாகப்பிரிவினை செய்து கொண்டால் **'விபக்த குடும்பம்'** என்றும் அழைக்கப்படும்.

தனித்தனியே ஒன்பது நகரக் கோயில்களிலும் உள்ளூர் நகரச் சிவன் கோயில்களிலும் கணக்குப் பதிவேடுகளில் உள்ள விவரங்களைத் திரட்டி மொத்த நகரத்தார் புள்ளிகளின் விவரத்தை வெளியிடும் பணி பலமுறை நடைபெற்றிருக்கிறது. குறிப்பிடத் தக்கவை மூன்று முறைகளாகும். துன்மதி ஆண்டில் (1921 - 22) கணக்கின்படி மொத்தப் புள்ளிகள் 9,666. அடுத்து விரோதி ஆண்டில் (1950 - 51) மொத்தப் புள்ளிகள் 15,176. மூன்றாவதாக, 1966 இல் மொத்தப்புள்ளிகள் 19,724.

அண்மையில் (1996 - 97) இக்கணக்கின்படி மொத்தப் புள்ளிகள் 31,294. இந்த அடிப்படையில் நகரத்தார் மக்கள் தொகையை உத்தேசமாகக் கணக்கிட்டால் 1,25,000 என்று குறிப்பிடலாம்.✪

⌘ ⌘ ⌘

✪ S.Chandrasekhar, 'The Nagarathars: The land, The people and their marriage (and population) Registration system' Population Review, (Annamalai nagar) Vol. 20, Nos.1&2, January - December, 1976.

✪✪ S.Chandrasckhar, 'The Nagarathars or the Chettiars' The Sanday Ststesman (New Delhi) 30, October, 1977.

✪✪✪ S.Chandrasekhar, The Nagarathars of South India, The Macmillon company of India Ltd.,Madras, First Edition p 50 - 52, (1980

✓

24. நகரத்தார் சமூக விழாக்கள்

பிள்ளையார் நோன்பு

தமிழ்நாட்டில் பிள்ளையார் வழிபாடு என்பது முதன் முதலில் செட்டிநாட்டில் பிள்ளையார் பட்டி குடைவரைக் கோயிலில் உள்ள பிள்ளையாரை முதன்மையாகக் கொண்டு தொடங்கியது என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும். அவ்வாறே பிள்ளையார்நோன்பு செட்டிநாட்டில் நகரத்தார் மட்டுமே கொண்டாடுவது என்பது இவ்வழிபாட்டின் தொன்மை யையும், தொடக்கத்தையும் அறிந்துகொள்ள உதவுகிறது

விநாயக வணக்கம் ஒவ்வொரு செயலுக்கும் முன்னிலையாக எல்லோராலும் மேற்கொள்ளப் பெறுவது போல, நகரத்தார் களாலும் மேற்கொள்ளப் பெறுமாயினும், சிறப்பாக ஆண்டுக்கு ஒரு முறை மார்கழி மாதத்துச் சுக்கிலபஷ சஷ்டி நாளில், 'பிள்ளையார் நோன்பு' என்னும் பெயரில் குடும்ப விரதமாக வழிபாட்டை நகரத்தார்கள் நிகழ்த்தி வருகிறார்கள். இவ்வழிபாடு தொன்று தொட்டு நகரத்தார் குடும்பங்களில், வழிவழியாக நிகழ்ந்து வருகிறது. இவ்வழிபாட்டால் இவர்களுக்கு இறைவன் திருவருள் கிடைப்பது மட்டுமின்றி, ஏதாவது காரணம் பற்றிக் குடும்பத்தில் பிணக்குகள் ஏற்பட்டிருந்தால் அப்பிணக்குகள் தீர்ந்து ஒற்றுமை ஆவதற்கும், இது துணையாய் இருந்துவருகிறது. தமிழ் மக்கள் அனைவருக்கும் பொங்கல் விழா எப்படி இன்றியமையாததோ, அப்படியே, நகரத்தார்களுக்குப் பொங்கலும், பிள்ளையார் நோன்பு ஆகிய இரண்டும் இன்றியமையாதனவாய் இருக்கின்றன.

நகரத்தார்கள் கொண்டாடும் பிள்ளையார் நோன்பு அன்று, நோன்பு நாள் மாலையில், விநாயகப் பெருமானது திரு உருவத்தை வீட்டில் புனிதமான இடத்தில் எழுந்தருளிவித்து நிவேதனத்திற்காக எள், நெல் முதலியனவற்றாலான பொரி வகைகளும், எள்ளுருண்டை, கடலை உருண்டை, கருப்பட்டிப் பணியாரம், அப்பம் வகைகளும், வெல்லப்பாகுக் கடலை உருண்டை முதலியனவும் ஆசாரத்துடன் தயாரித்து, நிவேதித்து, ஆவாரம் பூவால் செண்டு கட்டி சுவாமி திருமுன் வைத்து, ஆவாரம் பூவினாலேயே அர்ச்சித்து, வேழமுகத்தானை வழிபட்டுத் தோத்திரம் செய்வர். சில இடத்தில் நெற்கதிர், ஆவாரம் பூ, கண்ணுப்பூளைப்பூ

ஆகியவற்றைச் செண்டாகக் கட்டி வைத்துப் பூசையைத் தொடங்குவதும் உண்டு. வழக்கமாக ஏற்றும் விளக்குகளோடு சிட்டி விளக்கு ஒன்றையும் நெய் ஊற்றிப் பிள்ளையார் விளக்காக ஏற்றுவர். வெல்லம் சேர்த்த அரிசி மாவு, திரட்டுப்பால், வாழைப் பழம் ஆகிய மூன்றில் ஏதேனும் ஒன்றில் நெய் சேர்த்துக் கூம்பு போலச் செய்து இருபத்தொரு நூலிழைகள் கொண்ட திரியைப் பசுநெய் விளக்கில் ஏற்றிச் சுடர் அணையாமல் முதலில் குடும்பத் தலைவரும் பிறகு குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் உட்கொண்டு நோன்பை நிறைவு செய்வது வழக்கமாக இருக்கிறது.இந்த 21 நூலிழைகள் கோடி வேட்டி அல்லது துண்டிலிருந்து எடுக்கப்படுகிறது. நோன்பின் நிறைவாக இழை எடுத்துக் கொள்ளும் போது பெண்கள் மங்கல சங்கு ஊதுவர்.

இவ்வாறு மங்கல நிகழ்வுக்குச் சங்கு ஊதுவது இம்மரபினருக்கு மட்டுமே உரியதாக விளங்குகிறது. நகரத்தார்கள் தைப் பொங்கலன்றும், பெண் சடங்கின்போதும், திருமணத்தின்போதும், இறப்பின் போதும் என வாழ்வு முதல் இறப்பு வரை எல்லா நிகழ்வுகளிலும் சங்கு ஊதுவர். இதை பட்டினத்தாரும் தம் பாடலில்,

'முதற்சங்கு அமுதூட்டும்; மொய்குழலார் ஆசை
நடுச்சங்கு நல்விலங்கு பூட்டும் – கடைச்சங்கு
ஆம் போது அது ஊதும்'

எனக்குறிக்கிறார். இந்த நோன்பு திருக்கார்த்திகை மாதம் அமரபக்ஷம் பிரதமை தொடங்கி, மார்கழி மாதம் பூர்வபக்ஷம் பூர்த்தியாகும் இருபத்தொராவது நாளில் அமையும் சஷ்டிதிதியில் கொண்டாடப் பெறுவதால்[1] இருபத்தொரு நாள்களை நினைவு கூறும் வகையில் அமைந்த ஏற்ற இறக்கம் இல்லாத இருபத்தொரு இதழ்களே உடைய பொன் ஆவாரம் பூவால் அர்ச்சிப்பதும், துன்பத்தை நீங்கச் செய்வதாகிய விநாயகப் பெருமானது அங்குசத்தை, நினைவு படுத்தும் வகையில் பூச்செண்டை அவர் திருமுன் வைப்பதும், விரதநாள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இழை நூலாக இருபத்தொரு இழைகளைத் திரியாக ஒன்று கூட்டித் திருவிளக்கு ஏற்றுவதும் அந்த விளக்குக்கு ஆதாரமாக இனிப்புச் சுவைப் பொருள்களைச் கூட்டித் திருவருட்பிரசாதமாக உட்கொள்ளுவதும் இந்த நோன்புச் செயல்களில் அமைந்த தத்துவங்கள்.தமிழ்நாட்டில் நகரத்தாரால் மட்டுமே பிள்ளையார் நோன்பு கொண்டாடப் படுகிறது. இதனை இச்சமூகத்தின் தனிச் சிறப்புகளுள் ஒன்றாகக் கருதுதல் வேண்டும்.

பட்டினத்தார் விழா

பிள்ளையார் நோன்பைப் போலவே இச்சமூகத்தினர் மட்டும்

1. அ. சேஷாத்திரி சர்மா, நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, 1999, பக், 129.

கொண்டாடும் மற்றொரு விழா பட்டினத்தார் விழாவாகும். காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த வாணிக மரபினரான சிவநேசர் - ஞானகலாம்பிகை அம்மையாருக்கு மகனாகத் தோன்றியவர் பட்டினத்தார். இவரின் இயற்பெயர் திருவெண்காடர். சிறந்த சிவபக்தராக விளங்கிய திருவெண்காடர் தம் மரபின்படியே வாணிகத்தொழில் புரிந்து பெரும் செல்வம் ஈட்டினார்.

அவ்வூரிலேயே வாழ்ந்த சிவசிதம்பரம் செட்டியார் மகளான சிவகலையைத் திருவெண்காடருக்கு மணமுடித்து வைத்தனர். திருவெண்காடருக்குக் குழந்தை இல்லாத குறை பெரிதும் வாட்டியது. இதனால் திருவெண்காடர் சிவபெருமானிடம் வருந்தி முறையிட்டபோது இறைவன் அவரது கனவில் தாமே பூமியில் பிறப்பதாகவும், வெண்காடர் தம்மைச் சுவீகாரம் எடுத்துக் கொள்ளும்படியாகவும் கூறினார். அதன்படி திருவிடை மருதூரில் வாழ்ந்த ஆதிசைவர் ஒருவர் தம் மனைவியுடன் கோயிலுக்குச் சென்று திரும்பும் போது குளத்தருகே ஓர் அழகிய ஆண் குழந்தையைக் கண்டெடுத்தனர். இதைக் கேள்வியுற்ற திரு வெண்காடர் குழந்தையின் எடைக்கு எடை பொன்கொடுத்துச் சுவீகாரம் பெற்றார். அப்பிள்ளைக்கு மருதவாணன் எனப் பெயரிட்டனர்.

குலத்தொழிலாகிய கடல்கடந்து வாணிகம் புரியும் தொழிலுக்கு மருதவாணன் தேர்ச்சியுற்று வாணிகம் மேற் கொண்டான். பிற வணிகர்கள் திரும்பும் போது பொன்னும், மணியும் கொண்டுவர மருதவாணன் வறட்டி, உமி அடங்கிய மூட்டைகளைக் கொண்டு வந்தான். இதனைக் கண்ட திருவெண்காடர் மகனைக் கோபித்து மருதவாணன் கொண்டு வந்ததை நெருப்பில் எறிந்தார். எறிந்த வறட்டி, உமியும் தங்கமாகவும், நவமணிகளாகவும் மாறியது. ஆனால், இதைக் காண தந்தையின் கோபத்தால் வீட்டை விட்டு வெளியேறிய மருதவாணன் இல்லை.

வீட்டிற்குத் திரும்பிய திருவெண்காடர் தம் மனைவியை அழைத்து மகனைக் கேட்க அம்மையார் மருதவாணன் கொடுக்கச் சொல்லியதாக ஒரு சிறு பெட்டியை மட்டும் கொடுத்தார். அப்பெட்டியில் காதற்ற ஓர் ஊசியும் ஓலை ஒன்றும் இருந்தன.. ஓலையில் **"காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே"** என்ற தத்துவ விளக்கம் காணப்பட்டது. அதைப் படித்ததும் ஞானத்தெளிவு அடைந்த திருவெண்காடர் தம் செல்வத்தை எல்லாம் எளியோர்க்கு வழங்கி துறவுபூண்டு பட்டினத்தார் ஆனார். திருவிடை மருதூர் கீழைக்கோபுர, வாயிலிலே தங்கி இடைவிடாத தியானம் மேற்கொண்டார். ஊர்ஊராகச் சென்று சிவபெருமானைப் போற்றிப் பாடிய இவர் இறுதியில் திருவொற்றியூரில் முக்தி அடைந்தார். இறைவன் அருளியபடி பேய்க்கரும்பு தித்தித்தது

திருவொற்றியூரிலே. இறைவனைக் கண்டு அங்கே லிங்க வடிவமாகி நின்று விட்டார். அந்த இடத்தில் சமாதியான அடிகளுக்கு மக்கள் கோயில் எழுப்பி வழிபட்டனர்.[1] இவர் சீர்காழியில் பாடிய 'திருக்கழுமல மும்மணிக் கோவை' தில்லையில் பாடிய 'கோயில் நான்மணி மாலை', காஞ்சியில் பாடிய 'திருவேகம்பர் அந்தாதி' திருவொற்றியூரில் பாடிய 'திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃது' திருவிடைமருதூரில் பாடிய 'திருவிடை மருதூர் மும்மணிக் கோவை' ஐந்தும் பதினோராம் திருமுறையில் உள்ளன.

பட்டினத்தார் பாடல்களில் உள்ள பல சொற்கள். இன்று நகரத்தாரின் வழக்குச் சொற்களாக உள்ளன. தம் குல மரபினரான பட்டினத்தாரின் விழா இன்றும் நகரத்தாரால் காவிரிப் பூம்பட்டினம் பல்லவனீச்சுரத்தில் நகரவிடுதியில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பட்டினத்தார் பிறப்பு முதல் அவரின் சமாதிநிலை வரை பத்து நாள்கள் காப்புக் கட்டி விழாவாக நடத்தப்படுகிறது. இவ்விழா 1924-ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்படுகிறது. பின்னர், பல்லவனீச்சுரத்தில் 1930-ஆம் ஆண்டு நகர விடுதி கட்டப்பட்ட பிறகு விடுதியிலேயே விழா நடத்தப்படுகிறது.

காவிரிப்பூம்பட்டினத்தில் அறியப்படாமல் இருந்த பட்டினத் தாரின் உருவச்சிலை தலைச்சங்காட்டைச் சேர்ந்த சின்மயானந்த சுவாமிகளால் கண்டெடுக்கப்பட்டுப் பல்லவனீச்சரம் கோயிலுக்குள் தனிக்கருவறையில் எழுந்தருளச் செய்துள்ளனர்.

ஆடி மாதம் உத்திர நட்சத்திரத்திற்குப் பத்து நாள்கள் முன்பாக விழா தொடங்குகிறது.

முதலில் திருவெண்காடரின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி பயிலல் போன்றவை நடத்தப்படுகிறது. பின்னர், சிவகலை அம்மையாரோடு திருவெண்காடரின் திருமணம் பேசிமுடித்து நடக்கிறது. இது சமயம் விடுதியில் திருமணத்திற்காகச் சீர்கள் வைக்கப்படுகின்றன. பின்னர்த் திருவெண்காடர் குழந்தைக்காக இறைவனிடம் வேண்டுதல், பின்னர்ப் பிள்ளை கூட்டிக்கொள்ளும் சடங்கு நடைபெறுகிறது. இச்சமயம் கோயிலில் மருதவாணன் விக்கிரகத்தைத் தராசில் இட்டு எடைக்கு எடை பொன் கொடுக்கும் நிகழ்ச்சி நடக்கிறது. இது முடிந்த பிறகு மருதவாணனைப் புதிய வீட்டிற்கு அழைத்து வந்ததாகக் கருதி வெள்ளி ஊஞ்சலில் இட்டு தாலாட்டுகின்றனர். பின் மருதவாணன் கல்வி பயிலல், வியாபாரம் செய்தல் என எல்லா நிகழ்வுகளும் அதற்கேற்ப உருவச் சிலைகளுடன் நடத்தப்படுகின்றன.

1. மா. சந்திரமூர்த்தி, திருவொற்றியூர், தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி – 1, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை,2003, பக் 255 – 256.

பின்னர் வணிகத்திற்கு மருதவாணனை வழி அனுப்புவதற்காக கப்பல் போல அலங்கரித்தும், வாணிகம் முடிந்து வரும் மருதவாணனுக்காகக் கடற்கரையில் வணிக மக்கள் காத்திருப்பதும் நிகழ்கிறது. இந்நிகழ்வில் தங்களை மருதவாணனின் உறவினராக எண்ணிக் காத்திருக்கும் நாட்டுக்கோட்டை நகரத்தாரின் மரபு போற்றத்தக்கது. இதற்குப் பிறகு பட்டினத்தார் துறவு, தாயாரின் இறப்பு, பத்தரகிரியாருக்கு முக்தி அளித்தல் என நிகழ்ச்சி நடைபெறுகிறது. கடைசியில் பத்தாம் நாள் பட்டினத்தாரின் சிவபதவி, குருபூசையுடன் விழா முடிகிறது. இந்த திருவிழாவின் முக்கியமான நிகழ்ச்சி பட்டினத்தார் தாயாரின் தகனம். இந்த நாளில் ஊரார் அனைவரும் திரண்டு வருகின்றனர்.

சிதையில் தாயாரை வைத்துவிட்டு மக்கள் பட்டினத்தாருக்காக காத்திருக்கின்றனர். அப்போது அங்கு எழும் ஒப்பாரி பாடல்

"ஈரல் ஒதுக்கி இடங்கொடுத்த மாதாவுக்கு
கூந்தல் ஒதுக்கி கொள்ளி வைக்க வந்த மகன்"

என்ற கூற்றின்படி அங்கு வந்த பட்டினத்தார் தம் தாயார் சிதையில் அடுக்கப்பட்டிருந்த கட்டைகளை அகற்றச் சொல்லி வாழை மட்டைகளை வைத்து எரித்தார் எனக் கூறப்படுகிறது.

"சீராட்டும் தாய்க்கோ விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்"

எனப் பதறும் பட்டினத்தார் வாழை மட்டைகளை இட்டு,

"முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னை இட்ட தீ அடி வயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே!"

எனப் பாடியதும் தீ மூண்டெழுந்ததாகக் கூறப்படுகிறது.

விழா நடைமுறை

முதல் நாள்	மாலை	பட்டினத்தார் திருஅவதாரம்.
இரண்டாம் நாள்	காலை	திருவெண்காடு செல்லல், உபதேசம் கேட்டல்.
	மாலை	திருவெண்காட்டில் மணம் பேசி முடித்தல்.
மூன்றாம் நாள்	காலை	தண்ணீர் மந்திரம் சொல்லல்.
	மாலை	காவிரிப்பூம்பட்டினம் திரும்புதல் - திருமணம்.
நான்காம் நாள்	காலை	குழந்தைக்காகத் திருவிடைமருதூர் ஈசரிடம் வேண்டுதல்.

	மாலை	எடைக்கு எடை பொன் கொடுத்துக் குழந்தையை வாங்குதல், மருதவாணன் எனப் பெயரிடுதல், காது குத்துதல், தாலாட்டுதல்.
ஐந்தாம் நாள்	காலை	மருதவாணனைப் பள்ளியில் வைத்தல், மருதவாணன் மதிநுட்பம்.
	மாலை	மருதவாணனை வணிகத்திற்குக் கப்பலில் அனுப்புதல், மருதவாணன் திரும்புதல் - பட்டினத்தார் துறவு.
ஆறாம் நாள்	மாலை	பட்டினத்தார் பிச்சையெடுத்தல்.
ஏழாம் நாள்	மாலை	பட்டினத்தார் ஆத்தாள் இறப்பு - ஒப்பாரி - கொள்ளி வைத்தல்.
எட்டாம் நாள்	காலை	திருவாரூர்ப் பிள்ளையை எழுப்புதல்.
	மாலை	பத்திரகிரியார் துறவு.
ஒன்பதாம் நாள்	மாலை	பத்திரகிரியார்க்கும் நாயடியார்க்கும் மோட்சம் கொடுத்தல்.
பத்தாம் நாள்	காலை	பட்டினத்தடிகள் குருபூசை.
	மாலை	சிவசாயுச்சியம், பஞ்சமூர்த்தி புறப்பாடு.

ஆடியில் பல்லவனீச்சுரத்தில் நடைபெறும் இவ்விழா, திருவொற்றியூரில் ஆவணி மாதம் 3 நாள்கள் விழாவாக நகரத்தாரால் நடத்தப்படுகிறது. பட்டினத்தார் செப்புத்திருமேனியின் அரிய வடிவம் திருவொற்றியூர் பட்டினத்தார் கோயிலில் உள்ளது. பட்டினத்தார் திருவிழாவின் பத்து நாட்களிலும் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து செட்டிநாட்டு ஆச்சிகள் சட்டிப் பானைகளை அடுக்கடுக்காக வாங்கிப் பேருந்துகளிலும், தொடர் வண்டிகளிலும் தூக்கிச் செல்லும் காட்சியினைக் காணலாம். இங்கு சட்டிப் பானைக்கு முதன்மை இல்லை. மண்ணுக்குத் தான் முதன்மை. தங்கள் குலத்தாரின் பூர்வீக மண் என்பது ஒன்று. பட்டினத்தார் பிறந்த மண் என்பது மற்றொன்று. அந்தப் பானையில் வடித்தால் சோறு ஒட்டாது என்று செட்டிநாட்டுப் பெண்கள் கூறுவது வழக்கம்.[1]

1. பழ. கருப்பையா, பட்டினத்தார் ஒரு பார்வை, மணிவாசகர் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு,2003, பக் 26 – 27.

சேக்கிழார் விழா

இது தவிர நகரத்தார்களின் சைவப்பற்றிற்கு மற்றுறொரு சான்றாக சேக்கிழார் விழா நடத்தப்படுகிறது. செட்டி நாட்டிலேயே சேக்கிழார் பெருமானுக்கு எனத் தனிக் கருவறையுடன் கூடிய சன்னிதி தேவகோட்டை நகரச் சிவன் கோயிலில்தான் உள்ளது. கோயிலில் உள்ள சேக்கிழாரின் உருவச்சிலை அவரின் பிறந்த இடமான குன்றத்தூர் மலையில் இருந்து கொண்டு வரப்பட்ட கல்லால் வடிக்கப்பட்டுள்ளது.

1947 முதல் நடத்தப்படும் சேக்கிழார் விழா வைகாசி மாதம் திருவாதிரை தொடங்கிப் பூச நாள் வரை மூன்று நாள்களும் நடைபெறும். மூன்று நாள்களும் சமயச் சொற்பொழிவுகள், விரிவுரைகள் நிகழும். சேக்கிழார் பெருமான் முக்தி பெற்ற நாளான பூச நாளில் காலை 63 நாயன்மார்களுக்கும் சிறப்பு பூசையும், இரவு பெரியபுராண திருமுறையுடன் வெள்ளி யானை வாகனத்தில் சேக்கிழார் பெருமான் திருவுலா நடைபெறும். சேக்கிழார் விழா குழுவினரால் இவ்விழா தொடர்ந்து சிறப்பாக நடைபெறுகிறது. இவ்விழா சைவ சமயத்தில் நகரத்தார்கள் கொண்டுள்ள ஆழமான பற்றினைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

⌘ ⌘ ⌘



கௌரி சங்கம்
நகரத்தார் அணியும் அணிகலன்



சஷ்டியப்த பூர்த்தி - கஜபூஜை
60 ஆவது அகவை நிறைவு விழா




நகரத்தார் சதாபிஷேகம் - கலச பூஜை
80 ஆவது அகவை நிறைவு விழா



சதாபிஷேகம் - புனிதநீர் அபிஷேகம்
நகரத்தார் சடங்கு



புரவி எடுப்பு - ஐயனார் கோயில் வழிபாடு
கிராம தெய்வ பூஜை



குதிரை வாகனங்கள்-ஐயனார் கோயில்




நகரத்தார் சதாபிஷேகம் - கலச பூஜை
80 ஆவது அகவை நிறைவு விழா



சதாபிஷேகம் - புனிதநீர் அபிஷேகம்
நகரத்தார் சடங்கு



புரவி எடுப்பு - ஐயனார் கோயில் வழிபாடு
கிராம தெய்வ பூஜை



குதிரை வாகனங்கள்-ஐயனார் கோயில்




குலதெய்வ வழிபாடு-மூலங்குடி




குலதெய்வக் கோயில்-சொ. கத்தப்பட்டு




அம்பு விழா-சிவன்கோயில் - தேவகோட்டை



ரிஷப வாகனம் புறப்பாடு-வேந்தன்பட்டி



மயில் வாகனம் புறப்பாடு-வேந்தன்பட்டி



பிள்ளையார் நோன்பு
நகரத்தாரின் சமூகப் பெருவிழா



செவ்வாய்ப் பொங்கல்
நாட்டரசன்கோட்டை



செவ்வாய்ப் பொங்கல் பொங்குதல்
நகரத்தார் வழிபாட்டு முறை



செவ்வாய்ப் பொங்கல் படைத்தல் - பாகனேரி



பொங்கல் பானை
மஞ்சள் சுற்றி அலங்கரித்தல்

25. வாழ்வியலும் - பழக்க வழக்கங்களும்

பிறப்பும் - புதுமையும் : நகரத்தார்களுக்குக் குழந்தை-குறிப்பாக முதல் குழந்தை-பிறப்பது எந்த வீட்டிலும், குடும்பத்திலும் ஒரு முக்கியமான மகிழ்ச்சி நிறைந்த நிகழ்ச்சியாகும். நகரத்தார்-பிள்ளை பிறந்தபோது கொண்டாடப்படுகிற விழா மகப்பேறு விழாவாகும். இங்ஙனம் தம்முடைய முதல் ஆண் அல்லது பெண் குழந்தை களுக்குக் *'காப்புக்கட்டுப் புதுமை'* என விழா நிகழ்த்தி வந்திருக்கின்றார்கள்.

கார்த்திகைப் புதுமை: பெற்றோர்கள் தங்களுக்குத் திருமண வயதுடைய ஆண் மக்கள் இருக்கின்றனர் என்பதைச் சுற்றத்தார்க்குத் தெரிவிக்கின்ற நிகழ்ச்சியே *'கார்த்திகைப் புதுமை'* என்ற பெயரால் நடைபெற்று வந்துள்ளது. பத்து வயதைத் தாண்டிய ஆண்பிள்ளை களுக்குக் கார்த்திகைப் புதுமை செய்வது வழக்கம். இச்சிறப்பு நிகழ்ச்சியின்போது மகனை மணக்கோலத்தில் அலங்கரித்துக் குதிரை மீதேறி உறவினர், பங்காளிகள் சூழ ஊர்வலமாகச் சிவன் கோயிலுக்கு அழைத்துச் சென்று வழிபட்டுத் திரும்புவர். இது கார்த்திகை நட்சத்திரத்தன்று நடைபெறும். மேலும் சுளுந்து அல்லது சூள் என்பது ஒரு காட்டு மரம். அதில் தீவட்டி போல விளக்கு ஒன்று அமைத்து அதனைக் குதிரை ஏறிச் செல்லும் பிள்ளைக்கு முன்பாகப் பிடித்துச் சென்றதனால் இதற்குச் 'சூப்பிடி' எனப் பெயர் வந்தது என்பர். இதனைச் சூள்பிடி என்பதன் மருவிய வடிவம் என்பர்.

திருவாதிரைப் புதுமை: பெண் திலகமான ஆதிரை என்பவள் மணிமேகலையில் குறிப்பிடப் பெறுகிறாள். இவளும் நகரத்தார் மரபினளே. இந்தத் திருவாதிரை என்பது வயது வந்த பெண் பாலர்க்குத் திருமணமாகு முன்னர் மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் நடைபெறும். அன்று நிகழ்ச்சியின் நாயகியாகப் பெண் மணக் கோலத்தில் ஆடை அணிகள் அலங்கரிக்கப் பெற்றுத் தன்னை யொத்த கன்னிப் பெண்கள் புடைசூழ அருகில் உள்ள வீடுகளுக்குச் சென்று,

"ஆடி ஆடி வாரோம் அவரைக்காய் போடுங்க
பாடிப் பாடி வாரோம் பாடவரங்காய் போடுங்க
கூடிக் கூடி வாரோம் கொத்தவரங்காய் போடுங்க"

என்று பாடித் தம் கரங்களில் ஏந்திச் சென்ற பாத்திரங்களில், உணவுப்

பொருள்களைப் பெற்றுத் திரும்புவது வழக்கம்.[1] திருமணத்திற்கு உரிய பருவம் அடைந்த பெண்கள் அல்லது திருமண வயதில் மணமகள் தங்கள் வீட்டில் இருக்கிறாள் என்ற செய்தியை ஊரில் உள்ள அனைவருக்கும் தெரிவிப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும். இந்நிகழ்ச்சிகள் கடந்த நூற்றாண்டு வரை சிறப்பாக நடந்து வந்துள்ளன. இவை இரண்டிற்கும் 'அரைக் கலியாணம்' என்ற பெயரும் வழங்கியமையால் உறுதியாகிறது.

சடங்கு கழித்தல் : ஒரு பெண் பூப்பெய்துதல் நகரத்தார் சமூக வாழ்க்கையில் ஒரு பெரிய நிகழ்ச்சியாகக் கொண்டாடப்பெறுகிறது. உறவினர்களும், நண்பர்களும் திரளாகக் கூடி அவளுக்கு நீராட்டிப் புத்தாடை அணிவித்து, அணிமணிகள் சூட்டி அவளுக்குச் சுவையும், சத்தும் நிறைந்த உணவும் அளிப்பார்கள். பின்னர் அந்தப் பெண்ணைத் தனி இடத்தில் இருக்கச் செய்வார்கள். 16 நாள்கள் கழிந்ததும் அவளுக்குள்ள தீட்டைக் கழிப்பதற்காக அன்று காலை அவள் குளித்ததும், அவளுடைய தாயாரோ அல்லது தந்தையோ, அவளுடைய தலை, தோள்பட்டை 2, இடுப்பின் இரு பக்கங்கள், கைகள் 2 ஆகிய 7 இடங்களில் வேப்பிலையை வைத்துச் சோத்துமாறு அல்லது ஒரு குச்சியால் தட்டி விடுவார்கள். பின்னர் கண்ணேறு கழிவதற்காக ஆலத்தி எடுத்து மறுபடி குளிக்கச் செய்து புத்தாடை ஆபரணங்கள் அணிவித்து வீட்டுக்குள் அழைத்துக் கொள்வார்கள். இந்த நிகழ்ச்சியே நகரத்தார் சமூகத்தில், சடங்கு கழித்தல் என்று கொண்டாடப் பெறுகிறது.

உபதேசப் புதுமை: பஞ்சாட்சர உபதேசம் பெற்றுக் கொள்வது என்பது தொன்றுதொட்டு நகரத்தார்களிடம் இருந்து வரும் சிறந்த பழக்கமாகும். இதனைத்தான் உபதேசம் என்று சொல்கின்றனர். இதனை முன்னர் உபதேசப் புதுமை என்று 5 நாள்கள் ஒரு விழாவாகக் கொண்டாடி வந்துள்ளதை 96 ஊர் நகரக்கூட்டத் தீர்மானங்களில் இருந்து அறிகிறோம்.

நகரத்தார் திருமண முறை

தொல்காப்பிய உரையில் இளம்பூரணர் காட்டும் எட்டு வகையான திருமணங்கள்,

1. பிரமம்

2. பிரசாபத்தியம்

3. ஆரிடம்

4. தெய்வதம்

5. காந்தர்வம்

1. சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1999.

6. அசுரம்
7. இராக்கதம்
8. பைசாசம்

இவற்றில் 'பிரமம்' என்ற திருமண அமைப்பே சிறந்தது என்று மேலோர் கூறுகிறார்கள். வாழ்நாள் முழுவதும், இன்பம், துன்பம் இரண்டிலும் சரி சமமாகப் பங்கு கொண்டு வாழ்க்கையில் அறநெறியைத் தொடங்கும் முதற்படி திருமணம். பழ.அண்ணாமலை தொகுத்த 'நகரத்தார் திருமண நடைமுறை' (பள்ளத்தூர், 1984) என்ற நூலின் அடிப்படையிலேயே இத்தகவல்கள் அமைந்துள்ளன.

(மணம்) பேசி முடித்தல் : பெண் வீட்டார் பெண்ணைக் கொடுப்பதற்கு இசைந்தவுடன் ஒரு நடுமனிதர் மூலமாக தாம் எந்த வகைகளில் சீர் செய்ய முடியும் என்று மணமகன் வீட்டுக்குச் சொல்லியனுப்புவார்கள். மணமகன் வீட்டிலும் சம்மதம் தெரிவித்த வுடன், (மணம்) பேசி முடித்தல் என்ற நிகழ்ச்சி பெண் வீட்டில் நடைபெறும்.

பிறகு திருமணம் நிச்சயிக்கப்படும். இன்னார் மகளைத் திருமணம் செய்வதாகவும் இன்னின்ன முறைகளில் பெண் வீட்டாரும் பையன் வீட்டாரும் செய்வது என்றும் இரண்டு பிரதிகள் எழுதப்படும். தாம்பாளத்தில் மலர், வெற்றிலை பாக்கு, மஞ்சள் முதலியன வைத்து, ஒப்பந்த நகலையும் வைத்து ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வார்கள்.

பிறகு சிற்றுண்டி நடைபெறும். பையன் வீட்டார் பெண் வீட்டாரிடம் சொல்லிக்கொண்டு செல்லும்பொழுது அவர்களைக் கௌரவிப்பதற்காக வெற்றிலை பாக்கு ரொக்கம் வைத்துக் கொடுப்பார்கள்.

கழுத்துருவிற்குப் பொன் கொடுத்தல் :

"புலிப்பல் கோத்த புலம்பு மணத்தாலி
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகனே"

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகளால் தாலி கட்டும் பழக்கம் நீண்ட நெடு நாளைய வழக்கம் என்று தெரியவருகிறது.

நகரத்தார் மணமகளுக்குச் செய்கின்ற அணிகலன்களில் தலை யாயது கழுத்து உரு என்று சொல்லப் பெறுகின்ற பெரிய தாலிதான்.

கழுத்து உரு மொத்தம் 34 உருப்படிகள் கொண்டதாக இருக்கும். இது இரட்டை வடமாக அமைக்கப்பட்டிருக்கும். நடுவில் செல்வச் செழிப்பிற்கும், மங்கல வாழ்விற்கும் உரிய தெய்வ மாகிய மகாலெட்சுமியின் உருவம் பொறித்த திருமாங்கல்யம் இருக்கும்.

புலிப்பாதங்கள் போன்ற ஐந்து உருப்படிகள் கழுத்துருவில் உண்டு. இவற்றை ஏத்தனம் அல்லது ஏனாதி என்று அழைப்பார்கள்.

கழுத்துருவை அழகான முறையில் கோத்து அலங்கரிப்பதற்காகச் சரிமணியும் இடம் பெறும்.

கழுத்துருவின் உருப்படிகள் உருவி வந்துவிடாமல் இருப்பதற்காகக் கடைமணி கழுத்துருவின் இறுதியில் இடம் பெறும்.

இப்படி 31 உருப்படிகளைக் கோத்துத் திருமணத்தன்று அணிவார்கள்.

திருமணம் முடிந்த மறுநாள் அல்லது மணமகளுடைய கன்னித்தன்மை கழிந்த பிறகு மணமகன் வீட்டில் நல்ல நாளாகப் பார்த்து இந்தக் குச்சி, தும்பு, துவாளை ஆகிய மூன்று உருப்படிகளையும் மணமகன் வீட்டுப் பெரியவர்கள் கழுத்துருவில் கோத்து வைப்பார்கள்.

முகூர்த்தக்கால் ஊன்றுதல் : ஒரு நல்லநாளில், நல்ல நேரத்தில் கொட்டகை போடுபவர் ஒருவர் வந்து வீட்டின் நடுவாசலில் ஈசானிய மூலையில் மஞ்சள் தடவிய ஒரு மூங்கில் கழியின் முனையில் மாவிலைக் கட்டி ஊன்றிவைப்பார். பிறகு அதற்குத் தேங்காய் உடைத்துக் கற்பூர தீபம் காட்டுவர்.

ஈசானிய மூலைக்கு உரிய தெய்வம் ஈஸ்வரன் ஆகும். ஆகவே, மணவாழ்வு சிறக்கவேண்டி ஈஸ்வரனை வேண்டிக் கொள்ளும் குறிப்பாக இது அமைந்துள்ளது.

மணம் சொல்லுதல் : மணமக்களின் தாய் தந்தை ஆகியவர்கள் தங்களுடைய பெற்றோர்களைத் திருமணத்திற்கு அழைப்பதுதான் இந்த நிகழ்ச்சியாகும். பெற்றோர்களுக்குத் தரவேண்டிய மரியாதையை இந்த நிகழ்ச்சி வலியுறுத்துகிறது.

வீட்டில் கோலம் போட்டுத் தடுக்குப் போட்டு வைத்திருப்பார்கள். மணமக்களின் தாய்தந்தையர் அந்தத் தடுக்கில் அமர்ந்து தன் குழந்தைக்கு இந்த நாளில் திருமணம் என்று சொல்லி, "கல்யாணம் சொல்ல வேண்டும்" என்று தங்கள் தங்கள் பெற்றோர்களை அழைப்பார்கள். அவர்களுடைய பெற்றோர்களும் இதனை ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாக வெற்றிலை பாக்கும் ரூபாயும் அளிப்பார்கள். இதற்கு 'பாக்குப் பணம்' என்று பெயர்.

இதுபோலவே மணமகளின் சகோதரி வீட்டிற்கும் தாயாருடைய தாயார் வீட்டிற்கும் சென்று இரண்டு தேங்காய் வெற்றிலைபாக்கு ரூபாய் முதலியவற்றை ஓலைக் கொட்டானில் போட்டுக்கொடுத்து "கல்யாணம் சொல்ல வேண்டும்" என்று அழைப்பார்கள். அவர்களும் பாக்கு பணம் கொடுப்பார்கள். இந்த நிகழ்ச்சி போலவே மணமகளின் அத்தை வீட்டிலும், ஆயாள் வீட்டிலும் நடக்கும். பிறகுதான் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் திருமண அழைப்பிதழ்களை அனுப்பி வைப்பார்கள். இதனைச் சிலப்பதிகாரத்தின் சீர்மிகு வரிகள் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன.

"யானை எருத்தத்து அணியிழையார் மேல்இரீஇ
மாநகர்க்கு ஈந்தார் மணம்"

முளைப்பாலிகை : மணமகன் வீட்டில் முளைக்கும் திறனுள்ள நெல், உளுந்து, கடலை, கொள்ளு, எள், சாமை, தினை, துவரை, பயிறு ஆகிய ஒன்பது வகைத் தானியங்களை மணநாளுக்கு மூன்று நாள்களுக்கு முன்பாக ஊறவைத்து, நீரை வடித்துச் சிவப்புத் துணியில் கட்டி வைத்துவிடுவார்கள். அது மணநாள் அன்று நன்றாக முளைவிட்டு வளரும் நிலையில் இருக்கும். இதன் நோக்கம் மணமக்கள் வாழ்வு முளைவிட்டு வளரும் நிலையில் இருக்கும் நவ தானியங்களைப்போலப் பல்கிப் பெருக வேண்டும் என்பதேயாகும்.[1]

மணமகன் கால்விரல்களுக்கு வெள்ளி மோதிரம் அணிவித்தல்

திருமணத்திற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்பாக மணமகனின் கால்விரல்களில் (இரண்டாவது விரல்கள்) வெள்ளியிலான மோதிரம் அணிவிப்பார்கள். இல்லற வாழ்வில் ஈடுபடும் முன்னர் இளமை வாழ்வில் இருப்பவன் அணிமணிகள் அணிவதில்லை. மணமகனுக்கு அன்று அணிவிக்கப் பெறும் மோதிரம் திருமண வாழ்வில் அவனுக்குள்ள பொறுப்புகளை நினைவுறுத்துகிறது.

திருமணத்தைக் கோயிலில் பதிவு செய்தல் : செட்டி நாட்டில் உள்ள நகரக்கோயில்களில் நகரத்தார்களின் திருமண பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகிறது. அவ்வினத் திருமணங்களின் விவரத்தைப் புள்ளி என்ற பெயரில் கணக்கு வைத்துள்ளது.[2] திருமணத்திற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் இரு வீட்டாரும் அவரவர்கள் சார்ந்திருக்கின்ற கோயில்களுக்குத் தங்கள் பங்காளிகளில் ஒருவரை அனுப்பி மணமகள்/மணமகன், கோயில், பிரிவு, ஊர், முகவரி, திருமணம் நடைபெறுகின்ற நாள், நேரம், இடம் முதலிய விவரங்களைக் கோயிலில் உள்ள பதிவேட்டில் குறித்து அதற்குரிய காணிக்கையைச் செலுத்திவர வேண்டும்.

இத்திருமணத்தை ஒப்புக்கொண்டு, கோயில் புள்ளியாகச் சேர்த்துக் கொண்டதற்கு அறிகுறியாகத் திருமணத்திற்கு முதல்நாள் இரண்டு கோயில்களிலிருந்தும் அந்தந்தக் கோயில்களின் வைராவிகள் (பணியாள்கள்) மூலம், மாலை, விபூதி, பிரசாதம் முதலியன மண வீட்டாரிடம் கொண்டுவந்து தருவார்கள்.

இவ்வாறு நகரக் கோயில்களிலிருந்து மாலை வந்தால்தான் அந்தத் திருமணம் நகரத்தார் சமூகத்தில் செல்லுபடியாகும்.

1. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், 1994, பக் – 74.
2. S. Chandrasekhar, The Nagarathars of South India, The Macmillan company of India Ltd.,Madras, 1980, p 50.

மணை போடுதல் : மங்கலப் பெண்டிர்கள் சிலர் சேர்ந்து கொத்தனார் உதவியுடன் செங்கல்லைக் கொண்டு ஒரு மேடை அமைப்பார்கள். வீட்டில் உள்ள மணைகளை அதன்மேல் வைப்பார்கள். இந்த மணைகளில் அமர்ந்துதான் மணமக்கள் திருமண நிகழ்ச்சிகளைச் செய்து முடிப்பார்கள்.

அரசன் ஆணைக்கால் நடுதல் : "அரசாணிக்கால்" என்று இன்று மருவி வழங்குகிறது. ஒரு மூங்கில் கழியில் எளிதில் கிளை விட்டு வளரும் கிளுவை, எல்லாப் பருவங்களிலும் உலராமல் பால் சுரக்கும் பாலைக்குச்சி, மங்கலம் சேர்க்கும் மாவிலை, நீண்டு நிலைத்திருக்கும் 'அரச இலை' எனப் பலகருத்துகளை நினைவு படுத்தும் வகையில் அரசன் ஆணைக்கால் உருவாக்கப்படும். ஒரு மேடையில் உள்ள பள்ளத்தில் பால்விட்டுப் பவளத்தைப் போட்டு இந்தக் காலை ஊன்றி வைப்பார்கள். இந்நிகழ்ச்சிக்கு முன்னர்ச் சங்கு ஊதப்படும். இருவீட்டிலும் அவரவர் பங்காளி வீட்டு ஆண்கள் இலைகளைக் கட்டுவர். திருமணம் முடிந்ததும் அரசாணிக் காலுக்குப் பொங்கல் இட்டுப் படைப்பர். பெண் அழைப்பு முடிந்த பின்னரே அரசாணிக்காலை அவிழ்ப்பர்.

மாற்றுக் கட்டுதல் : மணமேடைக்கு மேலே சலவைத் தொழிலாளி தூய துணிகளால் இன்று விதானம் கட்டிச் செல்வதைக் குறிக்கும்.

"நீல விதானத்து நித்திலப் பூம்பந்தற்கீழ்"

என்று சிலப்பதிகாரம் - கோவலன் கண்ணகி திருமணம் நடைபெற்ற எழில் விதானத்தை விவரிக்கிறது. இந்நாளில் பங்காளிகளே கட்டிவிடுகின்றனர்.

பூரம் கழித்தல் : இது நாள் வரை இருந்த கன்னித் தன்மையை நீக்கி இல்லறத்திற்குரிய மங்கையாக மந்திரம் மூலம் ஆக்குவதாகும்.

மணப்பெண்ணை வைகறையில் நீராடச் செய்வார்கள். பிறகு சர மாலையை மணப்பெண்ணின் தாய் மணமகளின் கழுத்தில் அணிவிப்பார். வேப்பிலையை மணமகளின் உடலில் ஏழு உறுப்புகளில் வைப்பார்கள் (தலை, இருதோள்கள் இடுப்பின் இரண்டு பக்கங்கள், இரு பாதங்கள்) பிறகு ஒரு மரக்குச்சியினால் வேப்பிலையைத் தட்டிவிடுவார்கள். பிறகு புரோகிதர், விநாயகர் பூஜை செய்து, வர்ணகும்ப பூஜை செய்து பூரம் கழிப்பார்.

தும்பு பிடித்தல் : மணம் நிகழவிருக்கும் நடு வீட்டில் மங்கள விளக்கேற்றி எட்டுக் கயிறுகளைக் கோலக் கூட்டில் நனைத்துக் கோபுர உருவில் அறையின் வெளிச்சுவர், உள் வீட்டுச் சுவர், கதவு போன்றவற்றில் வரைவார்கள். இது இறைவனை நடு வீட்டில் எழுந்தருளச் செய்யும் சடங்காகும்.

மாப்பிள்ளை அழைப்பு : மணமகள் வீட்டார் ஒரு பெரிய தட்டில் மணமகனுக்கு அணிவிக்கின்ற உடைகள், மாலைகள்,

நகைகள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு மணமகன் தங்கி இருக்கும் இடத்திற்கு மேளம் முழங்கிச் சங்கம் ஒலிக்கச் செல்வர். மணமகள் வீட்டு உறவினர்கள் ஊர்வலமாகப் பின் வருவார்கள்.

பிறகு மணமகனுக்கு ஆடை அணிகளை அணிவித்து அருகில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு அழைத்துச் செல்வர். மணமகனை அழைத்து வரும்பொழுது அவனுடைய தாயார் ஒரு தாம்பாளத்தில் மணமகளுக்கு உள்ள ஆடை, மாலை, கழுத்துரு, சிறு தாலி முதலியவற்றை எடுத்து வருவார்கள்.

பகவத்யானம் : திருமண வாழ்வு சிறக்க இறைவனை எண்ணி வழிபடுதலே பகவத்யானம்.

மணமகனுக்கு முதலிலும், பிறகு மணமகளுக்கும் தனித் தனியே புரோகிதர் சங்கல்பம் செய்துவைத்துக் கணபதி பூசை செய்வார்.

காப்புக் கட்டுதல் : புரோகிதர் தாய்மாமனைக் கொண்டு வலது மணிக்கட்டில் ஒரு சிறு வெள்ளி நாணயத்தைச் சிவப்புத் துணியில் முடிந்து விரலி மஞ்சளையும் சேர்த்துக் கட்டிவிடச் செய்வார்.

அரிமணமிடுதல் : "நெல்லொடு தூஉய்" என அகநானூறும், "மங்கைக்கு அறுகிட வந்திருந்தார் மணப்பந்தலில்" என ஔவை கூறியது போல, மணமக்களை நெல்லும், அறுகம் பூவும் எடுத்து நீரில் நனைத்து, பெரியவர்கள் வாழ்த்துதலை **'அரிமணமிடுதல்'** என்று கூறுவர்.

திருப்பூட்டுதல் : மணமகளுக்கு மணமகனின் தாயார் கொண்டுவந்த ஆடைகளை அணிவித்து மணமேடை மீது கிழக்கு முகமாக நிற்கச் செய்வார்கள். பின்னர் மணமகனை அழைத்து வந்து மணமகளுக்கு எதிரே நிற்கச் செய்வார்கள்.

மணமகளின் கைகள் இரண்டையும் ஏந்தச் செய்து அதில் பச்சரிசி, தேங்காய் முதலியவற்றைக் கொடுப்பார்கள்.

மணமகன் திருவருளை நினைவில் நிறுத்திக் கோயிலிலிருந்து வந்துள்ள திருநீற்றைத் தான் பூசிக்கொண்டு, மணமகள் நெற்றியிலும் பூசவேண்டும். பிறகு கோயில் மாலையை மணமகள் கழுத்தில் அணிவிக்க வேண்டும்.

பெரியவர் ஒருவர் எடுத்துத் தருகின்ற கழுத்துருவை மணமகளின் கழுத்தில் அணிவித்து மூன்று முடிச்சுகள் போட வேண்டும். அப்பொழுது கெட்டி மேளம் வாசிப்பார்கள். பிறகு சிறு தாலியை அணிவிக்க வேண்டும்.

அதன் பின்னர்த் திருமாங்கல்யத்திலும், மூன்று முடிச்சுகளின் மேலும், சிறு தாலியிலும் மஞ்சள் தொட்டு வைத்துக் குங்குமம் இடவேண்டும்.

அதன் பிறகு மணமக்கள் இருவரும் மூன்று முறை மாலை மாற்றிக் கொள்ளவேண்டும்.

இசைவுப் பிடிமானம் : திருமங்கல நாண் பூட்டியதும் மணமக்களின் தந்தையார் இருவரும் நடு வீட்டில் அமர்ந்து இசைவுப் பிடிமானப் பத்திரத்தில் கையொப்பமிடுவர்.

திருமாங்கல்யம் கட்டினால் மட்டும் கூட நகரத்தார் திருமணம் சட்டப்படியோ அல்லது சாஸ்திரப்படியோ முழுமை அடைவ தில்லை. இந்த இசைவுப் பிடிமானத்தில் கையொப்பமிட்ட பின்னர் தான் நகரத்தார் திருமணம் செல்லுபடி ஆகும். இந்தப் பத்திரம் திருமணத்திற்கு முதல் நாளே தயார், செய்துவைத்து இருப்பார்கள்.

இதில் மணமகன் பெயர், மணமகன் தந்தை பெயர், மணமகள் பெயர், மணமகள் தந்தை பெயர் ஆகியவைகள் உரிய இடத்தில் குறிப்பிடும் வகையில் அச்சிடப்பட்ட படிவமாக இருக்கும்.

மேலும் நாடு, கோயில், கோத்திரப் பிரிவு போன்றவையும் சரியான இடத்தில் குறிக்கப்படும். கொடுக்கப்படும் நகைகள், பாத்திரங்களும் தவறாமல் குறிக்கப்பட்டிருக்கும்.

உ

சிவமயம்

.... ஆண்டு.................................... மாதம் ....

தேதி...

....

....

பாணிக்கிரஹணம் பண்ணிக் கொண்டமைக்கு இவர்/அவர் பூஷணம் பூட்டும் பொன் ஒன்பது,[1] ஆறு கல்லெடை பொன் பதிமுக்கழஞ்சு[2] இவர்/அவர் சீதனங் கொடுக்கும் பொன் இம்மாறு[3] இவ்வெடை பொன் ஆறு கழஞ்சு, வெண்கலம் தராப்பலம்[4] அறுபத்தொன்று, வெள்ளாட்டிக்குப்[5] பணம் முப்பது, சீராட்டுச் சக்கரம் அறுபத்தொன்று இவ்வகைப்படி செய்வோம். இவர்/அவர் நன்கொடை கொடுக்கும் பொன் ஐம்பது, மோதிரம் விராகனிடை மூன்று. இவர்/அவர் உகந்துடைமையாகக் கொடுக்கும் பொன் வளையல் ஏழு கழஞ்சு, இவ்வகைப்படி செய்வோம். இந்த நாள் இவரிடும்/ அவரிடும் பொன் இவர் / அவர் சொற்படி தெரிசனை பதின்முக்கழஞ்சு இவ்வகைப்படி செய்வோம்.

---

1. ஒன்பது மாற்றுள்ள ஆறு கல்லெடை கொண்ட பொன் (நாணயம்) பொன் – 10 பணம். பணம் என்பது இரண்டு அணா.
2. 1/6 அவுன்ஸ் 5/12 தோலா அல்லது ஒன்றேகாலே வீசம் வராகனெடை. பல்லவர் காலத்தில் செலாவணியில் இருந்தது.
3. இவ்விதம் அல்லது இங்ஙனம்.
4. எட்டுப் பங்கு செம்பு, ஐந்து பங்கு ஈயம் கொண்ட கலப்பு உலோகம்.
5. பணிப்பெண் அல்லது வேலைக்காரி.

இந்த இசை குடிமானத்தில் எழுதினேன் ....

....

....

கையெழுத்து____________________________

கையெழுத்து____________________________

இதே மாதிரி அவரவர்கள் வழக்கப்படி, தங்கள் கோயில், பிரிவு, பெயர் முதலியவற்றைக் கோடிட்ட இடத்தில் எழுதி முழுமை செய்வார்கள். இந்தச் சீர் முறைகள் இன்றைய நடை முறைக்கு ஒவ்வாததாக இருப்பினும் இதுவே நகரத்தார் தொன்று தொட்டு எழுதி வருகிற பத்திரத்தின் வாசகம். மணமகன் வீட்டுப் பத்திரத்தில் அவனுடைய தகப்பனார் முதலிலும், மணமகள் வீட்டுப் பத்திரத்தில் அவளுடைய தகப்பனார் முதலிலும் கையொப்ப மிடுவர். இந்த இரண்டு கையொப்பமிட்ட பத்திரங்களும் மணமகள் தந்தையாரிடமே பாதுகாப்பாக இருந்துவந்திருக்கிறது. இப்போது சில வீடுகளில் இப்படியும், சில இடங்களில் வீட்டுக்கொரு பத்திரமாகவும் வைத்துக் கொள்கின்றனர்.[1]

இது திருமணத்திற்கு இரு வீட்டாரும் இசைந்து உடன்பட்டதற்கு ஆதாரமாக (பிடிமானமாக) அமைவதால் இசைவு/ இசைப்பிடிமானம் எனப்பட்டது. மாப்பிள்ளை திருப்பூட்டிய பின்னர்ச் சம்பந்திகள் இருவரும் விளக்கேற்றி வைத்திருக்கும் கல்யாண வீட்டிற்குள் சென்று இந்த ஒப்பந்தப் பத்திரத்தைப் படித்துப் பங்காளி வீட்டுப் பெரியவர் முன்னிலையில் கையெழுத்து இடுவர். இந்த ஒப்பந்தம் முன்னர்ப் பனையோலையில் மஞ்சள் தடவி எழுத்தாணி கொண்டு எழுதப்படுவது வழக்கம்.

திருப்பூட்டிய சடங்கு : திருப்பூட்டி முடிந்ததும் தொடர்ந்து திருப்பூட்டிய சடங்கு நடைபெறும்.

ஒரு சடங்குத் தட்டில் ஏழு கிண்ணங்கள் இருக்கும். ஒன்றில் பிள்ளையாரும்,, வெற்றிலைபாக்கும் இருக்கும். மற்ற ஆறு கிண்ணங்களில் முறையே மஞ்சள், விபூதி, பச்சரிசி, உப்பு, புளி, பஞ்சு போன்றவை இருக்கும்.

ஒருபடி நிறைய நெல்நிரப்பி அதன்மேல் ஒரு கத்தரிக்காயை வைத்திருப்பார்கள். இதை நிறைநாழி என்று அழைப்பார்கள். ஒரு கொண்டிச் சொம்பில் நீர்நிறைத்து வைத்திருப்பார்கள்.

மணமகளை மணையின்மீது கிழக்கு முகமாக நிற்கவைத்துச் சடங்கு செய்பவர் பனைஓலைத் தடுக்குப்போட்டு நின்று கொள்வார். சடங்குத் தட்டில் உள்ள விபூதியை எடுத்துத் தானும் பூசிக்கொண்டு

1. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், 1994, பக், 81 – 84.

பிறகு மணமகளுக்கும் பூசிவிடுவார். இவ்வாறு ஒவ்வொரு கிண்ணத்தையும் மூன்று மூன்று முறைகள் தொட்டு மொத்தம் 21 முறைகள் விபூதி பூசிக் கொண்டு மணமகளுக்கும் பூசி விடுவார்.

பிறகு நீர்நிறைந்த கொண்டிச் சொம்பை வலது கரத்தில் எடுத்துக்கொண்டு மணமகள் கையில் வெற்றிலையைக் கொடுத்துத் தண்ணீரை அதன்மேல் சிறிது சிறிதாக ஊற்றி அந்த நீர் மணமகளின் பாதங்களில் விழுமாறு பார்த்துக் கொள்வார்கள். பிறகு மணமகள் இரு கைகளாலும் அந்த வெற்றிலையை நெற்றியில் வைத்து வணங்கச் சொல்வார்கள்.

வேவு : மணமகள் வாழப் புகுந்த இடத்தில் வளத்துடன் வாழவும், தன் தாய் வீட்டிலிருந்து பொருள்கள் வரவில்லையே என்ற குறையினைப் போக்கவும் அனைத்து உணவுப் பொருள்களையும் தாங்களாகவே விரும்பித் தலைச்சுமையாகவே கொண்டுவந்து கொடுப்பதுதான் வேவு. ஆடி வேவு, கார்த்திகை வேவு,முதல் வருடவேவு, விளையாட்டுப்பெட்டி வேவு என்று பல திறத்தனவாகும்.

தலைச்சீலையில் முடிதல் : மணமகளின் தந்தை தன் மகளை மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது வழிச் செலவுக்குக் கொடுக்கின்ற முதல் பணப் பரிசுதான் ***"தலைச் சீலையில் முடிதல்"***. மணமளின் தந்தை ஒரு தொகையை மணமகனின் தலைப்பாகை மீது வைப்பார். அதனை மாமன்காரரர் எடுத்து மணமகன் தந்தையிடம் கொடுத்துவிடுவார். பின்னர் இந்தத் தொகை மணமகளுக்குக் கொடுக்கின்ற சீதனப் பணத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும். மாப்பிள்ளைக்குத் தலைச் செலவிற்காகக் கொடுத்தல் என்பது தலைச்சிலையில் முடிதல் என்று மருவி வந்ததாகக் கூறுவர்.

மாமப்பட்டு : ஒரு பாத்திரத்தில் மஞ்சள், அரிசி, தேங்காய் போன்றவற்றைப் போட்டுப் பட்டுத் துணியால் மூடி மணமக்களின் மாமன் முறையினர் பிடித்திருப்பார்கள்.

மணமக்கள் அதை ஒருவருக்கொருவர் மூன்று முறை மாற்றிக்கொள்வர். இந்த நேரத்தில் மணமகளின் தந்தை மணமகனுக்கு மோதிரம் அணிவிப்பார். இதற்குப் பிறகு மொய் எழுதும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல் : மணமக்கள் நடுவாசலில் வந்து நின்றுகொண்டு பெற்றோர், உற்றோர், உறவினர் மற்றும் சான்றோர்களை விழுந்து வணங்கி வாழ்த்துப் பெறுவார்கள்.

சீராட்டுக் கொடுத்தல் : மகளுக்குத் தகப்பனாரும், அவருடைய சகோதரர்களும் தருகின்ற பணம்தான் ***'சீராட்டு'*** எனப்படும்.

மஞ்சள் நீராடுதல்: நகரச் சிவன்கோயில் வயிராவி ஒருவர் மணமகனுக்கு எண்ணெய் தேய்த்துவிடுவார். மணமகனின் உறவினப்

பெண் ஒருவர் மணமகளுக்கு எண்ணெய் தேய்த்து விடுவார். பிறகு மணமக்கள் நீராடி வந்ததும், மணமகனுக்கு மாமனார் புதுத்துணி கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொல்வார், இது போலவே மணமகளுக்கு மாமியார் புதுத்துணி கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொல்வார்.

பிறகு தண்ணீரில் மஞ்சளைக் கரைத்து மணமக்களின் தந்தையார், தாயார், சகோதரர் தங்கள் ஆடைகளின் நுனியை நனைத்துக் கொள்வார்கள்.

காப்புக் கழற்றிக் கால்மோதிரம் அணிதல் : மணமகனின் தாயார் மணமகளுக்குத் தன் கையில் அணிந்திருக்கும் காப்பைக் கழற்றி அணிவித்துக் கால்விரல்களில் **'வெள்ளி மோதிரம்'** அணிவிப்பார்கள். இதனை **'மிஞ்சி'** என்றும் அழைப்பதுண்டு.

பகவத்யானத்தின் போது மணமக்கள் கைகளில் கட்டிய மஞ்சள் காப்பை இப்போது அவிழ்த்துவிடுவார்கள்.

நாணாளைச் சடங்கு : திருமணம் முடிந்து புகுந்த வீட்டுக்கு வருகின்ற மணமகள் எல்லாப் பேறுகளும் பெற்று மகிழ்வோடு வாழவேண்டும் என மாமியார் வாழ்த்துவதே இந்தச் சடங்கின் உட்பொருளாகும்.

பிள்ளை எடுக்கிக் கொடுத்தல் : வெள்ளியினால் செய்த ஒரு குழவியை ஒரு சிறுபட்டுத் துணியில் வைத்து மணமகள் **"தான்மகப் பேறு பெற்றுவிட்டதாகவும், அதனை வாழ்த்த வேண்டும்"** என்றும் தாயார், தந்தையார் மற்றும் பெரியவர்கள் கால்களில் விழுந்து வணங்கி ஆசி பெறுவதாகும்.

பெண் சொல்லிக் கொள்ளுதல் - குடி அழைப்பு : திருமணத்தன்று மாலையில் ஒரு நல்ல நாழிகையில் மணமகள் நடுவீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பத்தியில் விரித்திருக்கும் பாய் ஒன்றில் கிழக்கு முகமாகக் கையில் வெற்றிலை பாக்குடன் வந்து நிற்கவேண்டும்.

மணமகளின் பெற்றோர், சுற்றத்தார் ஒவ்வொருவராக வந்து அந்தப் பாயின்மீது நிற்க அவர்களிடம் வெற்றிலை பாக்கைக் கொடுத்து அவர்களின் காலில் விழுந்து வணங்கிச் **'சென்று வருகிறேன்'** என்று சொல்லி வாங்கிக் கொள்ள வேண்டும்.

உண்டியல் : மணமகளின் தந்தை தன் மகளுக்குத் தருகின்ற சீதனப் பணத்திற்கு உண்டியல் எழுதி உடனே செல்வைத்துப் பணத்தைக் கொடுப்பதாகும். **உண்டியல்** என்பது பணம் கொடுக்கல் வாங்கலுக்காக ஏற்பட்ட **அத்தாட்சி** ஆகும்.[1]

1. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், 1994, பக் – 88.

உ

சிவமயம்

__________ ஆண்டு __________ மாதம் __________ தேதி (சரியான ஆங்கிலத் தேதி) __________ (இன்ன ஊர்) __________ (இன்னார் மகன்) __________ (இன்னார்) பற்று __________ (இன்ன ஊர்) __________ (இன்னார் மகன் (அதாவது மணமகன்)க்கும் அவர் மனைவி __________ (மணமகள்) வரவு நாளது தேதியில் திருமணம் செய்து கொண்டபோது நாலு நாள் கணக்குப் பார்த்து ஸ்ரீதனமாகக் கொடுத்தது ரூபாய் ..../- (ரூபாய் எழுத்தால்)யும் தலைச்சீலையில் முடிந்தது ரூபாய் __________ /-ம் பாக்குச் சுருளில் வைத்தது ரூபாய் __________/- ஈடு பொன்னுக்காக* தந்தது ரூபாய் __________/-ம் ஆக ரூபாய் __________ /- (எழுத்தால்)யும் வருடம் ஒன்றுக்கு வட்டி ரூபாய்__________/-ம் சேர்த்துக் கூடிய அசலும் வட்டியும் தந்து இதைச் செல்லுடன் வாபஸ் பெற்றுக் கொள்வேனாகவும்.

மணமகளின் தந்தையின் கையொப்பம்

நீச்சோறு : இப்படி உண்டியல் எழுதி, செல்வைத்து, அந்த உண்டியலையும் அதற்குண்டான ரொக்கத்தையும் ஒரு தாம்பாளத்தில் மலர், மஞ்சள், எலுமிச்சம் பழம் முதலியவற்றுடன் வைத்து, மணமக்களின் தந்தையார், பெரியவர்கள் முதலியவர் களிடம் மணமகன் கொடுத்து வணங்கிப் பெற்றுக்கொள்ள வேண்டும். பிறகு எல்லோரும் விருந்தளித்தபின், மணமகள் வீட்டார் எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு செல்வார்கள். அப்படிச் செல்லும்போது மணமக்களை நீச்சோறு (நீர்ச் சோறு என்பது தான் நீச்சோறாக மருவிவிட்டது) சாப்பிட அதாவது முதல் வெளிக்கு மாமனார் வீட்டிற்கு முதன்முறையாக அழைத்துச் செல்வார்கள்.

காய்ச்சி ஊற்றுதல் : காய்ச்சியூற்றிக் கொள்ளுதல் என்பது, ஒரு குடும்பத்தில் சிறப்பான நிகழ்ச்சி ஒன்று நிறைவேறியதை முன்னிட்டு இரு குடும்பத்தாரையும் பாராட்டி அவரவர்களுடைய தாய்வழிப் பாட்டன் அல்லது மாமன் கொடுக்கின்ற விருந்துதான்.

இதுவரை சடங்குகளின் விளக்கங்களைக் கூறியிருந்த போதிலும் ஒரு திருமண நிகழ்ச்சியை வரிசைப்படுத்திக் கீழே தரப்பட்டிருக்கின்றது.

பேசி முடித்துக் கொள்ளுதல், கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல், முகூர்த்தக் கால் ஊன்றுதல், கல்யாணம் சொல்லுதல்,

* ஈடு பொன் என்பது மணமகன் வீட்டார் திருமாங்கல்யத்திற்காகத் தருகின்ற பணம்.

கோயிலில் பாக்கு வைத்தல், மணை போடுதல், மாப்பிள்ளைக்கு மிஞ்சி போடுதல், முதல்சீர் வைத்தல், மறுசீர் வைத்தலும் கலியாண வேவும், அரசாணிக்கால் ஊன்றுதல், கோலமிடுதல் - தும்பு பிடித்தல், மாற்றுக் கட்டுதல், பூரங்கழித்தல், மாப்பிள்ளை அழைப்பு, பகவத் தியானம், மணமக்களுக்குக் காப்புக் கட்டுதல், திருப்பூட்டுதல், திருப்பூட்டுகிற சடங்கு, கல்யாண வேவு, மணவறை, கும்பிட்டுக் கட்டிக்கொள்ளுதல், சீராட்டுக் கொடுத்தல், மொய் எழுதுதல், மஞ்சள் நீராடுதல், காப்புக் கழற்றிக் கால்மோதிரம் இடுதல், நாணாளைச் சடங்கு, பால்பழம் சாப்பிடுதல், பெண் சொல்லிக் கொள்ளுதல், குடி அழைப்பு, பெண் அழைப்பு, பால்பானை வேவு, ஸ்ரீதன உண்டியல் கொடுத்தல், நீச்சோறு சாப்பிடச் சென்று வருதல், மணமகள் வீட்டிற்கு இரண்டாம் வெளி மூன்றாம் வெளி சென்று வருதல், மணமக்களின் தாய் மாமன் வீடுகளுக்குச் சென்று காய்ச்சி ஊற்றிக் கொண்டு வருதல் என்று நடத்தப்படுகின்றன.

வேறு வைத்தல் : தன் மகனுக்குத் திருமணம் முடிந்து ஓரிரண்டு ஆண்டுகளில் அவனுடைய பெற்றோர்கள் ஒரு நல்ல நாள் பார்த்து, அவனையும் அவன் மனைவியையும் தனிக் குடித்தனம் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுப்பதே ‘வேறு வைத்தல்’ என்பதாகும்.

மருந்து அல்லது தீர்த்தம் குடித்தல் : முக்கியமாக எந்த இல்லத்திலும் முதல் குழந்தை பிறப்பது மிக்க மகிழ்ச்சிகரமான ஒன்று. கருவுற்ற பெண்கள் கடுமையான வெப்பத்தால் உடல் நலம் பாதிக்கப் பெறுவதைத் தவிர்ப்பதற்காக வாரத்தில் இரண்டு நாள்கள் எண்ணெய் நீராடுவர்.

பெண் கருவுற்ற ஐந்தாவது மாதத்தில் அவரவர் வீட்டு வழக்கப் படி மருந்து குடித்தல் அல்லது தீர்த்தம் குடித்தல் என்ற விழா நடைபெறும்.[1] ஒரு நல்ல நாளில் உறவினர்கள் எல்லோரும் கூடி

தலைசுருட்டி இலை
கோழியவரை இலை
வெடுகிளாச்சி இலை
பருத்தி இலை
அஞ்சலம்பிச்சி இலை.

இந்த ஐந்து பச்சை இலைகளையும் கொண்டுவந்து, சுத்தமாக ஆய்ந்து கழுவி இதனுடன் சிறு வெங்காயம், சீரகம் இரண்டும் சேர்த்து நீராகாரத்தில் கலந்து கருவுற்ற பெண்களைக் குடிக்கச்

1. Muthiah, S. Meenakshi Meyappan - Visalakshmi Ramasamy, The Chettiar Heritage, Chennai, 2002. See plates.

செய்வர். வேறு சிலர் தங்கள் குலதெய்வத்தின் கோயிலிலிருந்து தீர்த்தம் எடுத்து வந்து அதனைக் குடிக்கச் செய்வர். நகரத்தார் அல்லாத மற்ற இனத்தவர் வளைகாப்பு என்றும் சீமந்தம் என்றும் கொண்டாடுவர். நகரத்தார்களில் பெரும் பகுதியினர் கருவுற்ற பெண்ணையும் அவள் கணவனையும் அழைத்துக்கொண்டு இராமேசுவரம் சென்று அங்குத் தீர்த்தமாடி வழிபட்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

சுவீகாரம் (பிள்ளை கூட்டிக் கொள்ளுதல்) : ஊழ்வினை காரணமாகவோ அல்லது உடல்நிலை கோளாறு காரணமாகவோ, மக்கட்பேறு பெற முடியாதவர்கள் தாங்கள் சார்ந்திருக்கின்ற கோயில்-பிரிவிலுள்ள பையன் ஒருவனைத் தங்கள் வாரிசாகத் தத்து எடுத்துக் கொள்கிற வழக்கமும் நகரத்தார்களிடையே உண்டு. ஒரு நல்ல நாளில் ஓர் ஊரில் இருந்து உற்றார் உறவினர் சுற்றத்தாருடன் அந்தப் பையனைத் தங்கள் ஊருக்குச் சுவீகாரமாக அழைத்துவந்து, இயற்கையாகவே குழந்தை பிறந்தபோது நடத்துகின்ற புதுமையைப் போலவே, சுவீகாரப் புதுமையையும் நடத்தி வருகிறார்கள். திருமணங்களில் எழுதிக் கொள்ளுகிற திருமண உடன்பாட்டு ஒப்பந்தத்தைப்போல (இசைவுப்பிடிமானம்), இந்தச் சுவீகாரம் செய்து கொள்ளும் போதும் ஒரு ஒப்பந்தம் எழுதி அதில் **பிள்ளை விடுகிறவர், பிள்ளை கூட்டிக் கொள்பவர்** இருவரும் கையெழுத்துச் செய்து முறி ஒன்று எழுதிக் கொள்வார்கள்.[1]

உ

சிவமயம்

பார்த்திப வருடம் ஆனி மாதம் 10-ஆம் தேதி கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங் குடியான ராசநாராயணபுரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையான் தேவகோட்டை சு.ப.ராம. சுப்பிரமணியன் செட்டி ராமசாமிக்கு, காரைக்குடி முருகு. முருகப்பன் செட்டியார் மகன் குமரப்பன் என்ற ராமசாமியை சுவீகார புத்திரனாகக் கூட்டிக் கொண்டதினாலே மேற்படி, சுப்பிரமணியனின் தேட்டு, ஆட்டு, நீட்டுப்பெட்டி, தெய்வ ஆதாயம், ஆஸ்தி பூஸ்தி சகலமும், மேற்படி மனைவி வள்ளியம்மையின் ஸ்ரீதனம் சீர்முறை நகைப் பணம் நகையாவற்றையும், மேற்படி குமரப்பன் அடைந்து அனுபவித்துக் கொள்கிறது. சண்முகநாதபுரம் வள்ளியப்ப செட்டி அருணாசலம் வகையறா தாய்மாமனாக இருந்து மாமச் சடங்கு செய்துவருகிறது. இப்படிக்கு நகரத்தார் சொல்ல இது எழுதியது, கல்வாச நாட்டில் இளையாற்றங்குடியான குலசேகரபுரத்தில் இரணியூர் மருதங் குடியான இராசநாராயண புரத்தில் பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையான் சாமிநாதன் செட்டி செந்தில்நாதன்.

1. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், 1994, பக் – 103.

பிள்ளை கூட்டிக் கொள்பவர்	கையெழுத்து
பிள்ளை விடுபவர்	கையெழுத்து
பிள்ளை கூட்டிக் கொள்ளும் தாய்மாமன்	கையெழுத்து
பிள்ளை பிறந்த இடத்து தாய்மாமன்	கையெழுத்து

குறிப்பு: ஆட்டு என்பது பூர்வீகச் சொத்துகள், தேட்டு என்பது தான் சொந்தமாய் சம்பாத்யம் செய்தது. நீட்டுப்பெட்டி என்பது முன்னோர்கள் சிலருக்குப் படைக்கும் பேழை.

நகரத்தார்களிடம் உள்ள சிறப்பான அம்சம் ஆண் மக்களை மட்டுமே தத்து எடுப்பது. பித்ரு கருமங்களைச் செய்ய ஆண்கள் மட்டுமே உரியவன் என்பது இவர்களின் ஆழ்நம்பிக்கை.

சதாபிஷேகம்

மனிதன் பிறந்த ஓராண்டில் அப்தபூர்த்தி சாந்தியும் (புதுமை) 7-ஆவது வருஷத்தில் உக்ரத சாந்தியும் 60-ஆவது வயதில் பீமரத சாந்தியும், எட்டு மாதங்கொண்ட 80-ஆவது வயதில் சதாபிஷேக சாந்தியும், ஆயிரம் பிறை பார்க்கும்போது சதாபிஷேக ஸஹஸ்ரசந்திர தர்ஸன சாந்தியும், 100 -ஆவது வயதில் மகாபிஷேகமும் விதிமுறைகளோடு செய்து கொள்கின்றனர்.

எல்லா மனிதர்களுக்கும் 60 ஆண்டு முடிந்து 61- ஆவது ஆண்டு தொடக்கத்திலிருந்து காலன், யவனன், யமனன், ஸீமதூம்ரன் என்ற நான்கு வித துஷ்ட கிரஹங்களால் எந்தச் சமயத்திலும் அபமிருத்தியு தோஷங்கள் வரக் கூடுமென்றும் அதன் தோஷ நிவிருத்தியாக 60 வருஷத்துக்கும் 60 தேவதைகள் வைத்துப் பூஜித்து மஹா மிருத்தியுன் ஜயஹோமமும் செய்து கொண்டால் 61-வது வயதிலிருந்து 120-ஆவது வயது வரை நீண்ட ஆயுளோடு வாழ்வார்கள் என்று மறை நூல்கள் கூறுகின்றன.

புண்ணிய நதிகளின் நீரிலும் மண்ணிலும் தெய்வங்களை இருக்கச் செய்து தூய்மை பெறுவதே கும்பம் வைப்பதும் ஹோமம் செய்வதும் ஆகும்.

திருமண நிகழ்ச்சிகளுக்கு முகூர்த்தக் கால் ஊன்றி மனை போடுவது போலவே இந்த நிகழ்ச்சிகளுக்கும் செய்து கொள்வார்கள். மணைக்கு முன்னதாக 63 குடங்கள் வைப்பதற்குத் தோதாக ஒரு மேடையும் அதற்கு முன்பாகச் சதுர வடிவம், எண்கோண வடிவம், வட்ட வடிவம் உள்ள 3 ஹோம குண்டங்களையும் கட்டி 63 குடங்கள் வைக்கின்ற மேடையை மலர்களால் அலங்கரித்துக் கொள்வர். மணிவிழாவிற்கு முதல் நாள் மாலை மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாகச் சென்று ஊரில் உள்ள

பிள்ளையார் கோயில் சென்று வழிபட்டு இல்லம் திரும்பி மணிவிழா நிகழ்ச்சிகளைத் தொடங்குவர். அன்று தம்பதிகள் மணையில் அமர்ந்தபடி உற்றார், உறவினர்கள், மக்கள், மருமக்கள், பேரன், பேத்தியர்க்குப் புத்தாடைகள் வழங்குவர்.

ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியில் கும்பம் வைக்க வேண்டிய விவரங்கள்:

மஹாமிருத்யுன்ஜயர், விஷ்ணு, மார்க்கண்டேயர், அக்கினி, நிர்ருதி, குபேரன், சூரியன், அங்காரகன், குரு, சனி, கேது, மஹா பலி, பிரமா, ருத்ரன், இந்திரன், யமன், வாயு, ஈசானன், சந்திரன், புதன், சுக்கிரன், ராகு, அசுவத்தாமா, வியாஸர், ஹனுமான், கிருபாசாரியார், ஆயுள்தேவதை, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்தரட்டாதி, அபிஜித், ஸப்தரிஷி, விபீஷணன், பரசுராமர், அசுவதி, கார்த்திகை, மிருகசீரிஷம், புனர்பூசம், ஆயில்யம், பூரம், ஹஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி, விருஷதேவதை, வருணன்.

ஆக 60 கும்பம் தான் மகரிஷி சொல்லியிருக்கிறார். பின்னர் வந்த மகான்கள் திருமூர்த்திகளுக்கும் சக்திகளாகிய துர்க்கா, இலட்சுமி, சரஸ்வதி மூன்றையும் சேர்த்து 63 கும்பங்கள் வைக்க வேண்டுமென்று வழி வகுத்தார்கள். கும்பங்களில் கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி, சமுத்திரதீர்த்தம், தாமிரபரணி, வைகை, புஷ்கரணி, சரவணப் பொய்கை முதலிய புண்யநதி தீர்த்தங்களை நிரப்பி மேற்படி தீர்த்தங்களின் மணல்கள், புற்றடிமண், பசுவின் குளம்பு மண் முதலியவையும் கும்பத்தில் சேர்த்து சுகந்தமான சாமான்களும் சேர்த்து ஆசார்ய முகமாகவும் வேத விற்பன்னர்களைக் கொண்டும் பூஜிக்க வேண்டியது. என்றும், அந்தந்தத் தெய்வங்களுக்கு உரிய மந்திர ஜப பாராயணங்களையும் செய்ய வேண்டியது பன்னிரு திருமுறைப் பாராயணங்களையும் செய்தும் கும்பஸ்தாபனம் செய்து விதிப்படி பூஜிக்க வேண்டும் என்றும் வழி வகுத்தார்கள்.

நாற்கோண வடிவமுள்ள ஹோம குண்டத்தில் அரசும் சமித்துவும் பசுநெய்யுங் கொண்டு ஆயுஷ்ய ஹோமம் செய்தும், எண் கோண குண்டத்தில் சிந்திக்கொடி பசுநெய் கொண்டு மஹா மிருத்யுன்ஜய ஹோமமும் செய்தும் வட்ட வடிவமுள்ள குண்டத்தில் வெள்ளெருக்கு, புரசு, கருங்காலி, நாயுருவி, அரசு, அத்தி, வன்னி, அருகம் புல், தர்ப்பை இந்த ஒன்பது சமித்துகளும் பசுநெய்யும் கொண்டு நவக்கிரஹ ஹோமம் செய்தும் பூர்ணாஹுதி செய்வர். ஹோமத்தில் பூர்ணாஹுதிக்கும் முன்பு பஞ்சதானங்கள் எனப்படும்

உப்பு, பருத்தி, இரும்பு தண்டம் (அயதண்டம்), கருப்புக் கம்பளி, அய பாத்திரம் (இரும்புச் சட்டியில் எண்ணெய் ஊற்றி) தானம் செய்வர். பிறகு, பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து சுற்றத்தார், மகள், மகன்களால் கும்பம் அபிஷேகம் செய்து கொண்டும், பெரியோர் களிடத்தில் ஆசீர்வாதம் பெற்றும், தங்கள் மக்களுக்கு ஆசீர்வாதம் செய்வர்.

பிறகு தசதானம் என்னும் 10 வகைப் பொருள் தானம் வழங்கல், கோதுமை, பச்சரிசி, துவரை, பாசிப்பயறு, கொண்டைக்கடலை, மொச்சை, எள், உளுந்து, கொள்ளு ஆகிய ஒன்பது பொருள்களை நவக்கிரகத் தானமாக வழங்கல்; ஷட்தானம் என்னும் ஆறுவகைப் பொருளைத் தானமாகக் கொடுத்தல்; மகாதானம் என்னும் 20 வகைப் பொருள்களைத் தானமாக வழங்கல் முதலிய தானங்கள் செய்வார்கள். பின்னர் மீண்டும் மணையில் அமர்ந்துகொண்டு அந்தணர் ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்த பிறகு, தன் துணைவிக்குத் திருப்பூட்டுவார்கள். அதன் பின்னர்ச் சுற்றத்தாரோடு மங்கல வாத்தியம் முழங்க உள் ஊரில் உள்ள சிவன்கோயிலுக்குச் சென்று சிவதரிசனம் செய்து கொண்டு வருவார்கள்.

அது போலவே, 70-ஆவது வயதில் பீமரத சாந்தியும், எட்டு மாதங்கொண்ட 80-ஆவது வயதில் சதாபிஷேகமும், ஆயிரம் பிறை பார்க்கும் அதாவது 100-ஆவது வயதில் மகாபிஷேகமும் இந்த முறைப்படியே செய்து கொள்வார்கள்.[1]

இறுதிச் சடங்கு: மண்ணில் பிறந்தவர்கள் எவரும் இறப்பது நிச்சயம். நகரத்தார் சமூகத்தில் இந்த இறுதிச் சடங்கு ஒவ்வொரு விதமாக அமைந்திருக்கிறது. இவற்றில் தாய்வழி, மனைவி வழி உறவினர்கள் செய்ய வேண்டிய பல கடமைகளும் உள்ளன.

எப்பொழுதுமே, எதையும் அமங்கலமாகச் சொல்ல விரும்பாத நகரத்தார்கள்-ஒருவரின் மரணத்தை இறந்துவிட்டார் என்று எழுதுவதில்லை. அதற்கு மாறாக **சிவபதவி** அடைந்துவிட்டார் என்றோ அல்லது தற்கால வழக்கப்படி **இயற்கை எய்திவிட்டார்** என்றோ எழுதுவதுதான் வழக்கம்.

ஒருவர் இறந்துவிட்டால் அவர் இறந்தவுடன் இறைவனிடத்தில் இணைந்து விட்டதாகவே கருதி முதலில் நீராட்டித் திருநீறுபூசி, மாலையிட்டு தெற்குப் பக்கம் தலை வைத்துப் படுக்க வைப்பார்கள். பக்கத்தில் திருவிளக்கு ஏற்றித் தேங்காய் உடைத்து வைப்பார்கள். கைகளை மடக்கிக் கட்டியும் கால் கட்டை விரல்கள் இரண்டையும் இணைத்துக் கட்டியும், வாயையும் துணியினால் கட்டிவைப்பார்கள்.

பிறகு, உற்றார் உறவினர்களுக்குத் தகவல் சொல்லி அனுப்பு வார்கள். பறைக் கொட்டுக்குச் சொல்லி அனுப்பிக்

1. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், 1994, பக், 94 – 98.

கொட்டச் செய்வார்கள். ஒருவேளை அவ்வூரில் திருவிழாக்கள் ஏதேனும் நடந்து கொண்டிருந்தால் இந்தப் பறைக் கொட்டு கொட்டுவதில்லை. உறவினர்கள் எல்லாம் வந்ததும், இறந்தவரின் மகனிடமோ, சகோதரர்களிடமோ துக்கம் விசாரிப்பார்கள். பாடை கட்ட வேண்டிய பொறுப்பு தோட்டிக்கே உரியது. ஆயினும், இப்பொழுது எல்லாம் ஒவ்வொரு ஊரிலும் சவ ஊர்தி வந்துவிட்டதால், இந்தப் பாடை கட்டும் பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவருகிறது. உறவினர்கள் எல்லோரும் வந்ததும் மீண்டும் பிணத்தைக் குளிப்பாட்டி (அப்படி குளிப்பாட்டுவதற்கு முன்பு மக்கள், மருமக்கள், பேரன், பேத்தியர் அனைவரும் எண்ணெய் தொட்டு வைப்பார்கள்). இந்த நேரத்தில் இறந்தவரின் மகள் வீட்டு முற்றத்தில் ஒரு குந்தாணியில் (உரலில்) பச்சை நெல்லை வைத்து உலக்கையால் குற்றி அரிசி தயார் செய்கிறார்கள். இந்த அரிசியே சுடுகாட்டில் வாய்க்கரிசியாகப் போடப்படுகிறது. இந்த நிகழ்ச்சியைப் பச்சை குத்துதல் என்று நகரத்தார்கள் கடைப்பிடித்து வருகிறார்கள்.

வீட்டு முற்றத்தில் பந்தல்காலிட்டு அதற்கு நடுவே பாய் விரித்து அதில் பிணத்தைக் கிடத்துவார்கள். இறந்தவரின் மனைவியைப் பிணத்தின் தலைமாட்டில் உட்கார வைத்து மகள் முன் செல்ல, (ஒரு சருவச் சட்டியில் கோடித்துணி ஒன்றை வைத்துக் கொண்டு) தந்தை வழி உறவினர்கள், பங்காளிகள், எல்லோரும் அந்தப் பந்தல்காலை மூன்று முறை சுற்றிக் கீழே அமர்ந்து பிணத்தின் மீது கோடித் துணியை வைப்பார்கள். அதன் பின்னர், இறந்தவரின் மனைவி வழிப் பங்காளிகள் எல்லோரும் மனைவியின் சகோதரனிடத்தில் இதே போல் (சருவச் சட்டியில் கோடித் துணியை வைத்து) பந்தல்காலை மூன்று முறை சுற்றி வந்து அமர்ந்து, பிணத்தின் மீது கோடித்துணியை வைப்பார்கள். இது இறந்தவரின் மனைவிக்குத் தாய் வீட்டிலிருந்து வந்த கோடித்துணியாகக் கருதப்படும்.

பிறகு, பிணத்தைப் பங்காளிகள் சவ ஊர்தியில் வைத்துப் பறைக் கொட்டுடன் இறந்தவரின் மூத்த மகன் தீச்சட்டி ஏந்திச் செல்ல, சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வார்கள். பிணத்தைப் பங்காளிகள் தூக்கிச் சென்றதும் பிணத்திற்காகப் பந்தல்காலில் விரித்திருந்த பாயை இறந்தவரின் மகள் சுருட்டி வைக்க வேண்டும். இதைப் பாய் சுருட்டும் சடங்கு என்று நகரத்தார்கள் நடத்தி வருகிறார்கள்.

பொதுவாகச் சுடுகாடு ஊரின் தென் திசையில்தான் இருக்கும். சிதையும், தெற்கு வடக்காகவே அமைந்திருக்கும். சவ ஊர்தியில் இருந்து பங்காளிகள் பிணத்தைத் தூக்கிக் கொண்டு, எரிகுழியை மூன்று முறை வலம் வந்து தலை தெற்குப் பக்கமும் கால்கள்

வடக்குப் பக்கமும் இருப்பதைப் போல் வைப்பார்கள். நாவிதனைக் கொண்டு இறந்தவனின் மூத்த மகனுக்குத் தலைவழித்துக் குளித்ததும், ஈர வேட்டியுடன் வந்து மயானக் காவலன் பிணத்தின் மீதுள்ள ஆடைகள் களைந்த பின், வறட்டி, சந்தனக் கட்டைகள் முதலியவற்றைப் பிணத்தின் மீது வைத்து மண்ணால் பூசிவிட்ட பின் கர்மம் செய்கின்றவன். நீர்ப் பானையை இடது தோளில் சுமந்து கொண்டு மயானக் காவலன் துணையோடு பிணத்தை மூன்று முறை வலம் வரவேண்டும். ஒவ்வொரு வலம் வரும்போதும் மயானக் காவலன், பானையில் ஓட்டை போட நீர் வழிந்து கொண்டே இருக்கும். மூன்று முறை வலம் வந்ததும், பானையைப் பிணத்தின் தலைமாட்டுப் பக்கம் போட்டு உடைத்துவிட வேண்டும். பின்னர், இறந்தவரின் மகன் உறவினர்கள் எல்லோரும் வாய்க்கரிசி போட்ட பின், கர்மம் செய்கின்றவன் சிதைக்குத் தீ மூட்டவேண்டும்.

பிணத்தின் வாயில் போடப்படும் அரிசியே **வாய்க்கரிசி** எனச் சொல்கிறார்கள். சுடுகாட்டில் இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போது, இறந்தவர் வீட்டில் பந்தல் கால்களின் நடுவில் இறந்தவரின் மனைவியை அமரச் செய்து மங்கலப் பெண்டிர்கள், ஆண்பிள்ளைகள் யாரும் பார்க்காத வண்ணம் இரண்டு விதவைகள் அவரது தாலியைக் கழற்றி எதிரில் வைத்து இருக்கும் பால்சட்டியில் போட்ட பின்னர், இறந்தவரின் மனைவி குளித்து வெள்ளாடை அணிந்து திருவிளக்குக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொள்வார். சுடுகாட்டில் இருந்து திரும்பி வந்த, இறந்தவரின் பிள்ளைகள் அனைவரும் இறந்தவரின் மனைவியிடம் வணங்கி விபூதி பெற்றுக் கொள்கிறார்கள்.

காடேத்தல்

இது இரண்டாம் நாள் சடங்கு. இறந்தவருடைய மகன், மறுநாள் காலை பங்காளிகள் இருவருடன் சுடுகாட்டிற்குச் சென்று பிணம் எரிப்பவன் உதவியைக்கொண்டு பிணம் எரித்த இடத்தில் பால்விட்டு - இறந்தவரின் எலும்புத் துண்டுகளைக் கொஞ்சம் பொறுக்கி எடுத்து வீட்டிற்குக் கொண்டுவந்து ஒரு டப்பாவில் வைத்து மூடித் தோட்டத்தின் ஒரு மூலையில் புதைத்து வைப்பார்கள். பின்னர் ஒருநாள் இந்த எலும்புத் துண்டுகளை (அஸ்தி) எடுத்துக்கொண்டு போய் ஓர் ஆற்றங்கரையிலோ, கடற்கரையிலோ விட்டுக் கரைத்து வருவார்கள். இறந்தவரின் பிணத்தை எரித்த இடத்தின் வெம்மை குறைந்து இறந்தவரின் ஆன்மா சாந்தி அடையவே இந்தப் பால் ஊற்றும் நிகழ்ச்சி **காடாற்றுதல்** எனப் பெயர் பெற்றது. நகரத்தார்கள் இதனைச் சொல் வழக்கில் **காடேத்தல்** என்று குறிப்பிடுகிறார்கள்.

இறந்தவர் உபதேசம் பெற்று இருந்தால் ஊருணிக் கரையிலும், உபதேசம் பெறாவிட்டால் வீட்டில் நீர்த்தாரை (தூப்பாய்)யின்

முன்பு ஒரு செங்கல்லை வைத்து அதற்கு இறந்த நாள் அன்று செய்கின்ற கருமங்கள் அத்தனையும் செய்து எண்ணெய், சீயக்காய், மஞ்சள், பால், இளநீர் முதலியவற்றால் குளிப்பாட்டித் தேங்காய் உடைத்துத் தீபம் காட்டி, ஊருணியிலேயே அந்தக் கல்லைப் போட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்புவர். இந்தச் சடங்கு பெரும்பாலும் ஐந்தாம்நாள் அல்லது ஏழாம் நாள் நடைபெறும். ஒருவாரம் துக்கம் காத்து அழுது அரற்றியதால் ஏற்பட்ட உடல் சூட்டைத் தணிப்பதற்காக அன்று உற்றார் உறவினர் எல்லோரும் கூடிப் புலால் உணவு அருந்துவர். இந்தப் புலால் உணவு உண்ணும் வழக்கம் இப்பொழுது நகரத்தார்களிடையே முற்றிலும் மறைந்துவிட்டது என்று சொல்லலாம்.

சவண்டி

சபீண்டிகரம் என்ற வடமொழிச் சொல்லின் திரிபே சவண்டி என்று உருமாறியிருக்கிறது. இதற்குத் **'தீட்டுக் கழித்தல்'** என்று பெயர், இறந்தவர் வீட்டில் பதினாறாம் நாள் புரோகிதர் ஒருவரால் கணபதி ஹோமம் செய்யப்பட்டுத் தீட்டுக் கழிப்பர். இதனால் உறவினர்கள் சகோதரிகள் முதலியவர்களின் தீட்டு நீங்குகிறது.

பழம், காய்கறி, அரிசி, தேங்காய் முதலிய பொருள்களை நார்ப் பெட்டியில் நிரப்பிப் புரோகிதர்களுக்குக் கொடுப்பார்கள். ஏழை, எளியவர்கள் முதலியவர்களுக்குப் பொருட்களைத் தானமாகக் கொடுத்தும் பாவத்தைக் கழித்துக் கொள்வர். தந்தைக்குப் பிறகு நாங்களும் உங்களுக்குச் செய்வோம் என்ற கருத்தில் இறந்தவரின் பெண் குழந்தைகளுக்கு அரிசி, பழம், காய்கறி முதலியன கொடுத்து அனுப்புவார்கள். அன்று பெண் குழந்தைகள் விடை பெற்றுச் செல்வார்கள்.

இறந்தவரின் உடல் அடக்கம் செய்வது அல்லது எரிப்பது முதலிய சடங்குகளைக் குளிகை காலத்தில் செய்வதையும் இரவு 11 மணிக்கு மேல் காலை 4 மணி வரை பிணத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்வதையும் நகரத்தார் சமூகத்தில் காண முடிகிறது.[1]

அவிட்டம் முதல் ரேவதி நட்சத்திரம் வரை உள்ள நட்சத்திரம் வரை உள்ள நட்சத்திரங்களில் உயிர் நீத்தவர்களைப் பாதத்தில் இறந்ததாகச் சொல்வதுண்டு. இதனால் இறந்தவர்களின் குடும்பத்தில் எஞ்சியிருப்பவர்களுக்குக் கெடுதல்கள் நேரலாம் என்பது நகரத்தாரிகளின் நம்பிக்கை. இதற்காகச் சில பரிகாரங்களும் செய்வதுண்டு.

இதுகாறும் கூறியவை ஒர் ஆண் இறந்தபோது செய்யக்கூடிய நிகழ்ச்சிகள். திருமணமான ஒரு பெண் இறந்தார் அந்தப் பிணத்தைப்

1. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், 1994, பக், 109 – 111.

பந்தக்காலிட்டு மகன், பங்காளிகள் முதலில் சுற்றிவந்ததும், சகோதரனும், தாய் வீட்டுப் பங்காளிகளும் சுற்றி வருவர். சுற்றி வந்ததும் இடுகாட்டிற்குப் பிணத்தை எடுத்துச் செல்வர். இதில் தாலி வாங்கும் நிகழ்ச்சியைத் தவிர மற்ற எல்லா நிகழ்ச்சிகளும் நடைபெறும். சிறு குழந்தைகள், வயதுக்கு வராத பெண்குழந்கைள், ஆண் குழந்தைகளின் பிணங்களைப் புதைப்பதும் மற்றவர்களை எரிப்பதும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

ஈமக்கிரியைச் சடங்குகளில் கலந்து கொள்ள வருபவர்கள் இறந்தவர் வீட்டின் முன்பு இருவர் கையேந்தி நிற்க வருபவர்கள் இவர்களின் கைகளைத் தொட்டு ஆறுதல் கூறி உள்ளே சென்று துக்கம் விசாரிப்பர். இதனை நகரத்தார்கள் **'கை கோத்தல்'** என்று கூறுகின்றனர்.

ஐந்து, ஏழு, அல்லது பதினாறு நாள்கள் துக்கம் காத்த பின்னர் இறந்தவரின் மகன் தன் மாமனார் வீட்டிற்கோ, தாய்வழிப் பாட்டன் வீட்டிற்கோ சென்று **'காய்ச்சியூற்றுதல்'** நடத்துவது நகரத்தாரின் வழக்கமாக இருக்கிறது. துக்கம் காத்தவருக்கு ஆறுதல் அளிப்பதாக இந்நிகழ்ச்சி அமைகிறது.

⌘ ⌘ ⌘

26. நகரத்தார் அணிகள்

பழங்காலத்தில் **ஆடகம், சாம்புநதம், கிளிச்சிறை, சாதரூபம்** என்னும் நால்வகைப் பொன்னும், நவமணிகளும் மிகுதியாக இருந்தன. அவற்றைக் கொண்டு பலவிதமான அணிகலன்கள் செய்யப்பட்டன. பொன்னால் அணி செய்பவர் **'உருக்குத் தட்டார்'** என்றும், பொன்னையும், மணியையும் பிரியாதவாறு இணைத்து இழைப்பவர் **'மணித் தட்டார் '** என்றும் கூறப்பட்டது. இவ்வாறு வடமலையில் பிறந்த பொன்னும், கீழ்க்கடலில் உண்டான பவளமும், தென்கடலில் கிடைத்த முத்தும் காவிரிப்பூம் பட்டினத்துக் கடைத்தெருவில் குவிந்து கிடந்தன. அவ்வாறே பாண்டிநாட்டுத் தலைநகராம் மதுரை, ஆவணி வீதியில் குறை பாடற்ற நவமணிக் குவியல்கள் காணப்பட்டன.

அணிகளை **மகளிர்அணி, ஆடவர்அணி, குழந்தைகள் அணி** என மூன்று வகையாகப் பிரிக்கலாம். அந்நாளில் குழந்தைகளுக்குப் பாதுகாப்பாக **'ஐம்படைத்தாலி'** எனும் அணி அணிவிக்கப் பட்டது. காத்தல் கடவுளாகிய திருமாலின் **சங்கு, சக்கரம், வில், வாள், கதை** எனும் ஐந்து படைகளையும் சிறு வடிவத்தில் பொன்னால் செய்து கோத்துக் கழுத்திலிடுவார்கள். முருகனுக்கு எடுக்கப்பட்ட விழாவைக் காணும் பொருட்டு காவிரிப்பூம் பட்டினத்தில் ஆடவரும், மகளிரும் குழுமியிருந்தனர். அப்போது குழந்தைகள் அணிந்திருந்த ஐம்படைத்தாலியை அவர்கள் வாயினின்று சிந்திய உமிழ்நீர் நனைத்தது என மணிமேகலையில் கூறப்படுகிறது. மேலும், இதனைத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மிகுந்த இளம் வயதிலேயே போர்க்களம் புகுந்தான் என்பதைத் **'தாலி களைந்தன்று மிலனே'** என்ற புறப்பாட்டின் அடி உணர்த்துகிறது. சதங்கை போன்ற காலணிகளைச் சிறுவர் அணிந்திருந்தனர் என்பதைப் **'பொறக்கால் புலவர்'** எனும் பட்டினப்பாலைச் சொற்றொடர் விளக்குகிறது.

அரசர்களும், வீரர்களும் வீரத்திற்கு அறிகுறியாகக் காலில் கழலும், தோளில் வாகுவலயமும் அணிந்திருந்தனர் என்பது புறநானூறு போன்ற நூல்களில் காணப்படுகிறது. பகை அரசர்களை வென்ற மன்னர் தோல்வியுற்ற மன்னரது முடியிலுள்ள பொன்னைக் கொண்டு வெற்றிக்கு அடையாளமாகக் கழல் செய்து அணிந்து கொள்வர். இவையன்றிப் பல விலையுயர்ந்த மணிகளால் செய்யப் பட்ட அணிகளை அணிந்தும், போருக்குச் செல்லும் காலத்தில்

பொன்னால் செய்யப்பட்ட அடையாள மாலைகளையே அணிந்து சென்றனர்.

ஆயிழையார் எனப்பட்ட பழந்தமிழ் மகளிரும் முற்றுப்பெற்ற வேலைப்பாடு மிக்க **முற்றிழை** எனப்படும் அணிகளை அணிந்துள்ளனர். பெண்கள் சாதாரணமாகச் சங்குவளை, பொன்வளை ஆகியவற்றை அணிந்துள்ளனர். இதனை **ஒண்டொடி, பைந்தொடி, பொற்றொடி** எனும் சொற்கள் விளக்குகின்றன. தலையானங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் அரசி தன்னுடைய கைகளில் பொன் வளைகளையும், வலம்புரிச் சங்கு வளைகளையும் அணிந்திருந்தாள் என்பதை,

"பொலந்தொடி நின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து"

என்ற **நெடுநல்வாடை** வரிகள் கூறும்.

காதில் மகரக்குழையும், **ஓலை, ஓலைக்குழை** எனும் அணியையும் அணிந்தனர். பனை ஓலையைச் சுருட்டி அணிவதனால் **ஓலை (அ) பத்தரகுண்டலம்** என்று பெயர் பெற்றது. செல்வர்கள் ஓலையைப் பொன்னால் செய்து அணிந்தார்கள். வயிரக்கற்கள் அழுத்திச் செய்யப்பட்ட வயிர ஓலைக்கு **'சந்திரபாணி'** என்னும் பெயர் வழங்கியது. காதிலே அணியப்பட்ட மற்றொரு நகை **'குதம்பை'** என்பது. **'கர்ணப்பூ'** என்றும், **'செவிப்பூ'** என்றும் பெயருள்ள இன்னொரு வகையான காதணியையும் அக்காலத்துப் பெண்கள் அணிந்தனர். மூக்குக்கு அணிந்த மூக்குத்தி, புல்லாக்கு என்னும் நகைகளைப் பற்றிப் பழைய நூல்களிலும் காணப்பட வில்லை. விஜயநகரர் காலச் சிற்பங்களில்தான் மூக்குத்தியை முதன் முதலாகக் காண்கிறோம்.[1] மூக்கிலே அணி பூட்டுவது இயற்கைப் பெண் வடிவத்திற்கு அழகு தருவதாயினும் அது இல்லாதிருப்பது அதைக் காட்டிலும் அழகு தரும் என்பது சிற்பிகளின் கருத்து; நமது மரபாகும். எனவே சிற்பங்களில் தனித்து அணிகளைப் பெரும்பாலும் மூக்கில் அமைப்பதில்லை.[2]

கழுத்துக்கும் **சட்டு, ஞாண், பொன்னரி மாலை, முத்து, பவள மாலைகள்** அணிந்தனர். அடுத்து **'மேகலை'** என்பது, பெண்கள் இடையில் உடுத்திய ஆடையின் மேல் அணியும் ஆபரணம். இது 32 முத்து வடங்களினால் பட்டையாக அமைக்கப்பட்ட அழகான அணிகலன். நாட்டிய மடந்தையாகிய மாதவி அரையில் நீலப்பட்டாடை உடுத்தி அதன் மேல் 32 முத்து வடத்தினால் செய்யப் பட்ட மேகலையை அணிந்திருந்தாள்.

---

1. மா.சந்திரமூர்த்தி, இரணியூர்க் கோயில், முதற் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990, பக் – 83
2. டாக்டர். வைகணபதி ஸ்தபதி, அணிகள், கல்வெட்டு காலாண்டிதழ், ஆனந்த ஆண்டு, ஐப்பசி, 1976. பக் – 30.

"பிறங்கிய முத்தரை முப்பத் திருசரத்
திற்றிகழ் பூந்துகில் நீர்மையின் உடீஇ"

என்று சிலம்பு கடலாடு காதை கூறுகிறது.

கண்ணகியின் கால்சிலம்பில் மாணிக்கமும், கோப்பெருந் தேவியின் கால்சிலம்பில் முத்துகளும் இருந்தன என்று சிலம்பின் வழக்குரைகாதை விளக்குகிறது. பெருங்குடிப் பெண்கள் காலில் அணிந்த காலணிகளில் முக்கியமானது சிலம்பு. இதற்குக் குடைச்சூல் என்றும், நூபுரம் என்றும் பெயர் உண்டு. பாடகம் எனும் அணி சிலம்புக்கு மேலே அணியப்பட்டது. குறங்குசெறி தொடையை அலங்கரித்தது. அல்குலிடத்து அணிவது விரிசிகை என்னும் அணியாகும்.[1] கைவிரல்களுக்கும், கால்விரல்களுக்கும், மோதிரங்கள் அணியப்பட்டன. 'காலாழி' கால் பெருவிரலிலும் 'மகரவாய்' மோதிரம் கால் நடுவிரலிலும் 'பீலி' என்பதும் கால்விரல்களில் அணியப்பட்டன. விரலில் முடக்கு எனும் நெளிமோதிரமும் அணிந்திருந்தனர் என்பதை நெடுநல்வாடை விளக்குகிறது. கையில் சுண்டுவிரலுக்கு அடுத்த விரலில் அணியப்பட்ட மோதிரம் பகுவாய் மோதிரம் எனப்படும். இது மகரமீன் (வாளை முன்) வாய் திறந்து இருப்பது போலக் காணப்படும். மணி மோதிரம் நடுவிரலில் அணியப்படுவது. ஆள்காட்டி விரலில் அணியப்படுவது மரகத மோதிரம். முடமோசியார் பாடல் ஒன்று,

ஈகை யரிய இழையணி மகளிரொடு
சாயிற் றென்ப வாஅய் கோயில்

என்று குறிப்பிடும் வரியிலிருந்து மகளிர் மங்கலநாண் அணிந் திருந்தனர் என்பதை அறிய முடிகிறது. பெருங்குடிப் பெண்கள் கால்களில் சிலம்பு அணிந்திருந்தனர்.

மேலும் ஆடல் மகளாகிய மாதவி தலையில் தெய்வவுத்தி, வலம்புரி, பூராப்பாளை, வடபல்லி, தென்பல்லி கழுத்தில் வீரச்சங்கிலி, ஞாண், சவடி, சரப்பளி, முத்தாரம் கைகளில் சித்திரவளை, மணிவளை, பவளவளை கால்களில் பரியகம், நூபுரம். பாடகம், சதங்கை என அணிந்திருந்ததாகக் குறிக்கப்படுகிறது. இவ்வாறு அழகுக்காக அணிகள் அணியப்பட்டாலும் அணி களின்றியே அழகு அதிகமாகத் தோன்றும் என்பதை ,

கூடல் மகளிர் கோலங் கொள்ளும்
ஆடகப் பைம்பூ ணருவிலை யழிப்பச்
செய்யாக் கோல மொடு வந்தீர் – சிலப்பதிகாரம்
புனையா ஓவியம் போல நிற்றலும் – மணிமேகலை

1. ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ஏசியன் எஜிகேஷனல் சர்வீஸ், புது தில்லி, ஆறாம் பதிப்பு, 1991, பக், 34 – 35.

எனும் வரிகள் வலியுறுத்துகின்றன. இவ்வாறு அணிகளுக்கு இடப்பட்ட பெயர்கள் மிக அழகிய பெயர்கள். மக்கள் அணிந்த அணிகளைத் தெய்வீக வடிவங்களிலும் பிற சிற்பங்களிலும் செதுக்கி வைத்து இன்று எல்லா அணிகளையும் நாம் கண்டறியும் வண்ணம் செய்துள்ளனர்.[1]

நகரத்தார் சமூகத்தினர் மன்னர் பின்னோராகச் செல்வ வளத்தோடு வாழ்ந்ததால் தொடக்க காலத்திலிருந்தே தங்கம், வெள்ளி, வைர அணிகலன்களை அன்றாட வாழ்வில் அணிந்து கொள்வதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர். இப்பழக்கம் இன்றளவும் தொடர்கிறது.

நகரத்தாரின் திருமணப் பதிவு ஆவணமாகிய இசைப் பிடிமானத்தில் மணப்பெண் அணியும் சில அணிகலன்களைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. **பூஷணம், மோதிரம், பொன் வளையல்** என்பவை அதில் இடம் பெறுபவை. இவற்றுள் பூஷணம் என்பது கழுத்துருவைக் குறிக்கும் என்கிறார் டாக்டர் சுப. திண்ணப்பன்.[2]

நகரத்தார் சமூக ஆண்கள் **கழுத்துச் சங்கிலி, கைச்சங்கிலி, கடிகாரத்துக்குத் தங்கச் சங்கிலி, வைரமோதிரம், தங்கமோதிரம், நவரத்தின மோதிரம், உருத்திராட்ச மாலை, கவுடு, நவகண்டிமாலை** ஆகிய அணிகளைப் பயன்படுத்துகின்றனர். முற்காலத்தில் ஆண்கள் **கடுக்கனும், தங்க அரைஞாண் கயிறும்,** நகரத்தார்கள் வீட்டுப் பெண்மணிகள் விசேஷ காலங்களில் காதுக்குக் **கொப்பு, "முடிச்சுக் கடுக்கன்"** என்ற சவடி, **"பிறைசீதேவி"** என்னும் தலையணி, தங்கமணியும் பவளமும் சேர்ந்த **'மணிக்கோவை,** வெள்ளியால் செய்த **'இடைச்சூரி',** தங்க மணிகளும், பவளமும் சேர்ந்த **கைக் கட்டை,** காலிலும், கையிலும் வெள்ளி **மோதிரங்கள்,** வெள்ளிக் **கங்கணக் காப்பு** ஆகியவற்றை அணியும் பழக்கம் இருந்திருக்கிறது. செட்டிநாட்டில் நகைகளின் பெயர்களும் செந்தமிழில் உள்ளன என்பார் சோமலெ.[3]

திருமணத்தன்று மணமகன் கழுத்தில் மகரியும் காலில் மிஞ்சியும் அணிவது இச்சமூகத்தின் தனித்தன்மை. அவ்வாறே **கவுரிசங்கரம்** எனப்படும் **சிவகண்டி** மாலையை மணிவிழா, பிறையாயிரம் கண்டபெருவிழா போன்றவற்றில் விழா நாயகர் அணிந்து கொள்வார். தந்தை அல்லது தாயாரின் இறப்பின்

1. டாக்டர். வை.கணபதி ஸ்தபதி, அணிகள், கல்வெட்டு காலாண்டிதழ், ஆனந்த ஆண்டு, ஐப்பசி, 1976. பக் – 30.
2. டாக்டர். சுப. திண்ணப்பன், இசை பிடிமானம், காண்க, சோமலெ, செட்டிநாடும் செந்தமிழும், பக் – 554.
3. சோமலெ, மேலது, சென்னை, பக் – 468.

பொழுதும் அது தொடர்பான சடங்குகளின் போதும் ஆண்மக்கள் கவுரிசங்கரம் அணிந்து கொள்வர்.

நகரத்தார் சமூகத்தில் பெண்கள் **தோடு, டோலக், மாட்டல், மூக்குத்தி, தாலிச் சங்கிலி, தங்கக் காப்பு, வைர மோதிரம், தங்க மோதிரம், தடை, கொலுசு, மிஞ்சி** எனப்படும் கால்மோதிரம் ஆகிய அணிகளை அணிகிறார்கள். கணவனை இழந்த பெண்கள் கழுத்தில் வெறும் சங்கிலி மட்டும் அணிந்து கொள்கின்றனர். நெருங்கிய உறவினர் வீட்டு விழாக்களின் போது **கண்டசரம், பூச்சரம், மங்களசரம், நீளச்சங்கிலி** போன்ற வைர நகைகளையும் வைரக் காப்பினையும் அணிந்து கொள்வர். திருமணத்தன்று மணப்பெண்ணுக்கு அலங்காரம் செய்கின்ற பொழுது **நெற்றிச் சுட்டி, ஒட்டியாணம்** போன்ற அணிகளைப் பயன்படுத்து கின்றார்கள். பெண்ணுக்குத் திருப்பூட்டும் **கழுத்துரு** இச்சமூகத்தின் தனிச்சிறப்புக்குரிய அணிகலனாகும்.

இதுநகரத்தார்களுக்கு மட்டுமே உரிய மங்கல அணிகலனாகும். கழுத்துருவைப் **பெரிய நகை** என்று கூறுவது மரபு. இப்பெயருக்கு டாக்டர் சுப. அண்ணாமலை பின்வருமாறு விளக்கமளிக்கிறார். **"திருப்பூட்டுதல்** என்ற சொல்லை **கழுத்துத் திரு** என்று கூறுவதே சரியான சொல் என அறியலாம். திரு என்பது இலக்குமி. கழுத்துத் திருவின் நடு நாயகமாக மாங்கல்யம் இருக்கும். லட்சுமி ஏத்தனம் என்பது இதன்உறுப்புக்களுள் ஒன்று. நகையைப் **பூண்** என்பர். **பூணைப் பூட்டுதல்** என்பதே சரியான தொடர். ஆதலில் திருப்பூட்டுதல் என்பது நல்ல இலக்கிய வழக்கு. இதனை இன்று வரை நகரத்தார் மட்டுமே வழங்குகின்றனர்."[1]

இக்கழுத்துருவைத் திருமணத்திற்குப் பின்னர் மணிவிழா, பிறையாயிரம் கண்ட பெருவிழா ஆகியவற்றில் விழா நாயகி அணிந்து கொள்வார். மேலப்பத்தூர், மேல வட்டகை போன்ற சில பகுதிகளில் திருமணத்தன்று மணமக்களின் தாய், சகோதரி ஆகியோர் கழுத்துரு அணியும் பழக்கம் உண்டு.

நகரத்தார் சமூகத்தில் குழந்தைகளுக்குத் **தோடு, சங்கிலி, காப்பு, மோதிரம், தங்க அரைஞாண் கயிறு, வெள்ளித்தண்டை** ஆகிய அணிகளை அணிவிக்கின்றனர். **ஐம்படைத்தாலி** முற்காலத்தில் குழந்தைகளின் கழுத்தில் அணிவிக்கப்பட்டது. இதில் இடம் பெற்றிருந்த **சங்கு, சக்கரம், கதை, கட்கம், வில்** ஆகியவை பின்னாளில் தங்க அரைஞாண் கயிற்றில் இடம் பெற்றன. இவை காத்தல் கடவுளாகிய திருமாலின் ஆயுதங்கள். எனவே குழந்தையை இவை காக்கும் என்பது நம்பிக்கை.

1. டாக்டர். சுப.அண்ணாமலை, தேவகோட்டை சிவஸ்ரீதத் புருஷ தேசிகர் மணிவிழா மலர்,தேவகோட்டை, ஜனவரி, 1975.

நகரத்தார் ஆண்கள் அணியும் **மகரி, மிஞ்சி** ஆகியவையும் பெண்கள் அணியும் கழுத்துருவும் பிற சமூகத்தினர் பயன்படுத்தாத அணிகலன்கள் ஆகும். அதுபோலவே நகரத்தார் பெண்கள் அணியும் தாலிச் சங்கிலியும் பிற சமூகத்தினரிடமிருந்து வேறுபட்ட இயல்புடையது. பெரும்பாலான சமூகத்தினர் மஞ்சள்கயிற்றில் தாலியைக் கோத்து அணிந்து கொள்வர். ஆனால், நகரத்தார் சமூகத்தில் தங்கச் சங்கிலியிலேயே தாலியைக் கோத்து அணிந்து கொள்வர். திருமணத்தின் போதே **பெரிய தாலிச்சங்கிலி, சின்னத் தாலிச்சங்கிலி** என இரண்டு தாலிச் சங்கிலிகள் அணிவிக்கப்பெறும். இவற்றுள் ஒன்றை மட்டுமே அன்றாட வாழ்வில் அணிந்து கொள்வர். தாலியின் வடிவமைப்பும் மற்றச் சமூகத்திலிருந்து வேறுபட்டது. நடுவில் வீடு போன்ற அமைப்பும் இருபுறமும் மகாலட்சுமிப் பொட்டும் உடையதாகத் தாலி அமைந்திருக்கும்.

அணிகலன்களின் பெயர்களைக் குறிப்பிடுவதிலும் நகரத்தார் சமூகத்தில் சில தனிமரபுகள் காணப்படுகின்றன. அணிகலன் என்பதை **நகை** என்றே குறிப்பிடுவர். கழுத்துரு, பூச்சரம் போன்ற வைரநகைகள் ஆகியவற்றைப் **பெரிய நகைகள்** என்று குறிப்பிடுவர். பிற சமூகத்தினரால் தங்க வளையல், மெட்டி, உருத்திராட்சம் என அழைக்கப்படுபவை நகரத்தார் சமூகத்தினரால் முறையே **காப்பு, மிஞ்சி, கவுடு** என்றே அழைக்கப்பெறும்.[1] அரைஞாண் கயிறு என்பது மருவி **அருணாக்கயிறு** என வழங்குகிறது. மாப்பிள்ளை திருமணத்தன்று அணியும் **மகரி** இப்போது **மயில்பதக்கம்** என அழைப்படுகிறது. இப்போது மயில் வடிவில் இருக்கும் பதக்கம் முன்னர் மீன் வடிவில் இருந்ததால் மகரி என்று பெயர் பெற்றிருக்கலாம்.

⌘ ⌘ ⌘

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 2 – 3.

27. நகரத்தார் உணவு வகைகள்

ஐந்நில மக்கள் உணவு

பழந்தமிழர் சமுதாயத்தில் மக்கள் பாகுபாடு நில இயற்கையையும் தொழிற் பண்பையும் அடிப்படையாகக் கொண்டு இருந்தது. மக்கள் அவர்கள் வாழும் தினை, நிலங்களுக்கேற்ப பகுக்கப்பட்டனர். முல்லை நிலங்களில் வாழ்ந்தோர் ஆயர் - ஆய்ச்சியர் எனவும், குறிஞ்சி நிலங்களில் வாழ்ந்தோர் குறவர் - குறத்தியர் எனவும், நெய்தல் நிலங்களில் வாழ்ந்தோர் பரதவர் - பரத்தியர் எனவும், மருத நிலங்களில் வாழ்ந்தோர் உழவர் - உழத்தியர் எனவும், பாலை நிலத்தில் வாழ்ந்தோர் எயினர் - எயித்தியர் எனவும் வழங்கப்பட்டனர்.

குறிஞ்சி

தினையே குறிஞ்சி நிலத்தில் விளையும் முக்கிய தானியம் ஆகும். குறிஞ்சி நிலத்து உணவு பற்றி மலைபடுகடாம்,

'தடியும் கிழங்கும் தண்டினர் தரீஇ
ஓம்புநர் அல்லது உடற்றுநர் இல்லை'

என்று கூறுகிறது. குறிஞ்சிப்பாட்டின் வரிகளும்,

'பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்
வசைஇல் வான்தினைப் புரையோர் கடும்பொடு
விருந்து உண்டு எஞ்சிய மிச்சில்'

என்று கூறுகிறது. தேனையும், கிழங்கையும் பிற நிலத்தார்க்கு விற்று, மீன் நெய்யையும் நறவையும் வாங்கிச் சென்று அதனை உணவாகக் குறிஞ்சி நில மக்கள் பயன்படுத்தினர்.

முல்லை

தினையரிசிச் சோறு, பால், தயிர், மோர், நெய், வான்கோழி இறைச்சி, முயல் இறைச்சி, மான் இறைச்சி முதலியவை இவர்களது முக்கிய உணவாக இருந்தன. இவர்களது உணவு பற்றிய குறிப்பினை,

'மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பி
னிருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்'

என்று பெரும்பாணாற்றுப்படை தருகிறது.

இது மட்டுமின்றி முல்லை நிலச் சீறூர்களில் இருந்தவர்கள் வரகரிசிச்சோறும், அவரைப் பருப்பும் கலந்து செய்த **'கும்மாயம்'**

எனப் பெயர் பெற்ற உணவை உண்டனர் என்பதனை,

'நெடுங் குரல் பூளைப் பூவின் அன்ன
குறுந் தாள் வரகின் குறள் அவிழ்ச் சென்றி
புகர் இணர் வேங்கை வீ கண்டன்ன
அவரை வான் புழுக்கு அட்டி'

என வரும் பெரும்பாணாற்றுப் படை பாடல் வரியிலிருந்து உணர முடிகிறது.

மருதம்

உழுதொழில் சிறந்து உணவும் பிறவும் நிறையப் பெற்றவர்கள் மருதநிலத்து மக்களேயாவர். இவர்களது சிறந்த உணவாகச் செந்நெல்லும், வெண்நெல்லும் இருந்தன. இதனை,

'வினைஞர் தந்த வெண்ணெல்வல்சி
மனைவா ழளகின் வாட்டொடும் பெறுகுவீர்'

என்ற பெரும்பாணாற்றுப்படைப் பாடலாலும்,

'அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்'

என்ற சிறுபாணாற்றுப்படைப் பாடலாலும் அறிய முடிகிறது. மருதநிலம் நாகரிகத்தின் வளர்ப்புப் பண்ணையாகும்.

நெய்தல்

இந்நிலத்து மக்கள் மழைக்கடவுளைத் தெய்வமாகக் கொண்டவர்கள். மீன்களைப் பிடித்தல், அவற்றை உலர்த்துதல், உப்பை விளைவித்தல், மீனையும் உப்பையும் விற்றல் முதலிய தொழில்களைக் கொண்டவர். இவர்களின் முக்கிய உணவு மீன், மற்றும் கடல் உயிரினங்கள். இதனை,

'மீன் தடிந்து, விடக்கு அறுத்து
ஊன் பொரிக்கும் ஒலி முன்றில்'

எனப் பட்டினப்பாலை வரிகளும்,

'கடல் இறவின் சூடு தின்றும்
வயல் ஆமைப் புழுக்கு உண்டும்'

என்று பெரும்பாணாற்றுப்படையும் கூறுகிறது.

பாலை

இவர்கள் மான் இறைச்சியையும், வெண்சோற்றையும் உணவாகக் கொண்டவர்கள்.

'எயிற்றியர் அட்ட இன்புறி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை ஆயமோடு
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்'

என்று இவர்களைச் சிறுபாணாற்றுப்படை குறிக்கிறது.

இவை மட்டுமின்றி உணவின் பிற பெயர்களாக **உணா, வல்சி, உண்டி, ஓதனம், அசனம், பதம், இரை, ஆகாரம், உறை, ஊட்டம்** எனப் பிங்கலந்தை குறிப்பிடுகிறது. இவ்வாறு ஐந்நில மக்களின் காலமான காட்டுமிராண்டித் தனங்கள் மாறி உணவு வாயிலாகச் சமுதாய உணர்ச்சி வளர ஆரம்பித்த காலத்தில் உணவுப் பொருள்களை உண்டாக்கி உண்ணும் முறைகள் மாற மாற உணவுடன் சுவையும் நாகரிகமும் பிறவும் வளரத் தொடங்கின. பயிர்த்தொழில் ஆரம்பித்து விவசாயத் துறையில் மிக்க தேர்ச்சி பெற்றனர். இன்றைக்கு வழங்குகின்ற உணவுப் பொருள்கள் அனைத்தையும் கண்டு பிடித்து உணவுப் பொருள்கள் தோன்றத்துக்கும் வளர்சிக்கும் வித்திட்டவர் இந்த ஐந்நில மக்களே என்பது உண்மை.[1]

கல்வெட்டுகளில் உணவு

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்'

என்று தொல்காப்பியம் புறத்திணையில் கூறுவது போலச் சிறப்புடன் வாழ்ந்த அன்றைய தமிழர் பயன்படுத்திய உணவு வகைகள் பலவற்றின் பெயர்கள் பல கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.[2] திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கசோழன் (1070 - 1110) கல்வெட்டு ஒன்று ,

'திருப்பணியாரத்துக்குத் தெங்காய் கருப்புக்கட்டி' எனக் குறிக்கிறது. **பணியாரம் பற்றிக் கிடைத்த முதல் கல்வெட்டு இதுவே.** இதனால் சோழர் காலத்திலேயே பணியாரம் தயாரிக்கக் கருப்பட்டி என்ற கருப்புக்கட்டியைத் துணைப்பொருளாகப் பயன்படுத்தினர் என்பது அறிய முடிகிறது.

பராக்கிரம பாண்டியன் கல்வெட்டு ஒன்று பணியாரத்துக்குத் துணைப் பொருள்களாகப் பழங்களையும் பயன்படுத்தியதை,

'பணியாரம் செய்யத்தேங்காய், கதலிப்பழம், சீரகம், மிளகு, சுக்கு, சர்க்கரை, ஆரஞ்சுபழம், கரும்பு'

என்று குறிப்பதிலிருந்து இதனை அறியலாம்.[3]

மேலும் கும்மாயம் அல்லது பயற்றுப் பொங்கல் அக்காலத்தே முக்கிய உணவாகத் திகழ்ந்ததை அம்பாசமுத்திரம் வரகுண பாண்டியன் கல்வெட்டு (கிபி10 ஆம் நூற்றாண்டு) தெரிவிக்கிறது.

1. சே. நமசிவாயம், தமிழர் உணவு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 2003.
2. மா. சந்திரமூர்த்தி, கல்வெட்டுக்கள் காட்டும் உணவும்– பண்பாடும், நந்தி திங்களிதழ், சென்னை, 1975.
3. நடன. காசிநாதன், (பதிப்பாசிரியர்) கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள், பகுதி – 2, தொல்லியல் துறை வெளியீடு, சென்னை.

கும்மாயம் பயற்றுப்போனகம் என்று அழைக்கப்பட்டதைத் திருப்பைங்கிளிக் கல்வெட்டும் விளக்குகிறது. இவனது காலத்தில் சருக்கரைப் பொங்கல் அல்லது அக்கார வடிசில் என்று பணியாரம் வழங்கியதையும் கல்வெட்டுகள் கூறுகின்றன.[1] கல்வெட்டுகள் வழங்கும் இந்தப் பணியாரமும், கும்மாயமும் இன்றும் நகரத்தார் உணவு வகைகளில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது. சமையல் என்பது ஒரு கலையாகும். ஒவ்வொரு நாட்டிற்கும், தேசத்திற்கும் உணவு வகைகள் வேறுபடினும் அவரவர்க்கு உரிய பாரம்பரியமான சில உணவு முறைகள் தனித்துவம் பெறுகின்றன. என்றாலும் தமிழ்நாட்டு உணவு முறைகள் அனைவராலும் விரும்பப்படுகிற விதத்தில் உலகம் முழுவதும் பரவியுள்ளது. அதிலும் செட்டிநாட்டு உணவு வகைகள் பழைமை மாறாமல் ஆச்சி மார்களால் தயாரிக்கப்படுவது போன்றே நாடு முழுதும் தயாரிக்கப் படுகிறது. தற்போது பல நாகரிக உணவு முறைகள் நமது நாட்டில் இருப்பினும் நமது பாரம்பரியமான உணவு முறைகளே விசேஷ காலங்களிலும், திருமணம், படைப்பு போன்ற நாள்களிலும் சமைக்கப் படுகின்றன.

காலையில் பலகாரம், மதியம் சாப்பாடு, இரவு பலகாரம் அல்லது சாப்பாடு என்பது நகரத்தார் குடும்பங்களில் தொன்று தொட்டு இருந்துவரும் உணவுப் பழக்கம்.

மற்றபடி காலைப் பலகாரம் என்பது இட்டிலி அல்லது தோசை என ஏதேனும் ஒரு சிற்றுண்டியாக அமையும். மதியச் சாப்பாடு என்பது புழுங்கலரிசிச் சோறு, ஒரு குழம்பு, இரண்டு அல்லது மூன்று தொடுகறிகள், தயிர் அல்லது மோர் என அமையும். சில வீடுகளில் நெய்ச்சோறு குழம்புக்கு முன்னதாக அமையும். தொடுகறிகள் நகரத்தார் பேச்சு வழக்கில் **'வெஞ்சனம்'** எனப்படும்.

நமது வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரிப்பதில் மட்டுமின்றி, வழிபோக்கர்களை உபசரிக்கும் அன்ன சத்திரங்களைக் கட்டி நம் முன்னோர் பசிப்பிணி நீக்கினர். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதற்கேற்ப காலை முதல் இரவு வரை இயங்கிய அன்ன சத்திரங்கள் நமது நாட்டில் மட்டுமே இருந்தன என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் அதிகமாக உள்ளன.[2] உண்ண உணவு மட்டுமின்றிச் சனி நீராட எண்ணெயும், இரவு தங்க இடமும், செல்லும் வழியில் எல்லாம் தாகம் தீர்க்கத் தண்ணீர்ப் பந்தலும், நீர்மோரும் சத்திரங்கள் வழங்கின.

வீட்டிற்கு விருந்தினர் வந்தாலோ, பொங்கல், புத்தாண்டு போன்ற சிறப்பு நாள்களிலோ, வீட்டில் திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிக்குரிய விருந்து நடந்தாலோ, இவற்றில் சிறப்பு உணவு

1. கல்வெட்டில் பலகாரங்கள், தமிழ்நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு (பதிப்பாசிரியர்) இரா. நாகசாமி, சென்னை.

வகைகள் சேர்த்துப் பரிமாறப்படும். காலைப் பலகாரத்திற்கு மூன்று அல்லது நான்கு சிற்றுண்டி வகைகள் பரிமாறப்படும். மதியம் பருப்பு, நெய், குழம்பில் இரண்டு மூன்று வகை, தயிர் அல்லது மோர், ஐந்து அல்லது ஆறு வெஞ்சனத்தோடு விருந்து அமையும். தயிர்ச் சோற்றிற்கு முன் 'சூப்'பும், (காய்கறி ரசம்) இறுதியில் பாயசமும் குடிப்பதற்கு வழங்கப்படும். மாலைச் சிற்றுண்டியாக இரண்டு அல்லது மூன்று சிற்றுண்டிகள் வழங்கப்படும்.

நமது நாட்டுத் தட்ப வெப்ப நிலைக்கேற்ப அந்தந்தப் பருவங்களில் கிடைக்கும் காய்கறிகளைக் கொண்டே நமது உடலுக்குத் திங்கு ஏற்படா வண்ணம் பக்குவப்படுத்தி நம் முன்னோர் களால் சமைக்கப்பட்ட உணவே இன்றைய சூழலுக்கேற்பப் பலவிதங்களில் மாறி இருக்கிறது. என்றாலும் இதற்கு அடிப்படை நமது பழைமையான உணவு முறைகளே என உறுதியாகக் கூறலாம். தவிர, அந்தந்தப் பருவ காலங்களில் மிகுதியாகக் கிடைக்கும் காய்கறிகளை அதிகமாக வாங்கி வற்றலாகக் காய வைத்துப் பருவ காலங்கள் முடிந்த பிறகும் பயன்படுத்தும் சிறப்பான வழக்கம் நகரத்தார் பெண்களிடையே உண்டு.

நகரத்தார் குடும்பங்களில் மட்டுமே சமைக்கப்படுகின்ற சில உணவு வகைகள் தேவையான சமையல் - குறிப்புகளுடன் கீழே தரப்பட்டுள்ளன.

இளங்குழம்பு

செய்முறை: இது புளி சேர்த்தும், சேர்க்காமலும் இருவிதமாகத் தயாரிக்கப்படுகிறது. தேவையான அளவு நீரில் புளி உப்பு இரண்டையும் சேர்த்துக் கரைத்துக் கொண்டு அதில் சாம்பார் பொடி கலந்து வைக்கவும். பிறகு பாத்திரத்தில் எண்ணெய் விட்டுக் கடுகு, வெந்தயம், உளுத்தம் பருப்பு, சீரகம், பெருங்காயம் போட்டு சிவந்தவுடன் கறிவேப்பிலை, வெங்காயம், தக்காளி சேர்த்து வதங்கிய பிறகு கரைத்து வைத்துள்ள புளிநீரைச் சேர்க்கவும். இதனுடன் சிறிது நசுக்கிய பூண்டு பல்லு, வேகவைத்த பருப்பு நீரையும் சேர்த்துக் கொதிவந்தவுடன் இறக்கிக் கொத்தமல்லித் தழையைச் சேர்க்கவும். இதனையே புளி இல்லாமல் செய்வதானால் தக்காளியை நன்றாக அரைத்துத் தேவையான நீரில் கரைத்துக் கொண்டு மேற்கூறிய முறையிலேயே தாளிக்கவும்.

இது திருமணம் போன்ற விருந்துகளில், 'ரசத்'திற்குப் பதிலாகப் பரிமாறப்படுகிறது. காய்கறிகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி, சாம்பார் போல ஆனால் பருப்பு நிறைய இல்லாமல், மிகவும் தண்ணீர் போலச் சமைக்கப்படும் குழம்பு. இதனாலேயே இதற்குத் **'தண்ணிக் குழம்பு'** என்றும் ஒரு பெயர் வழங்குகிறது.

உக்காரை

செய்முறை: தேவையான பச்சரிசி, பாசிப்பருப்பு இரண்டையும் சம அளவு எடுத்துக்கொண்டு பாசிப் பருப்பை மட்டும் வேக வைக்கவேண்டும். பச்சரிசியை மாவாக அரைத்துச் சிறிது நெய்விட்டு வறுத்துக் கொள்ளவும். தேங்காயைத் துருவி வதக்கிக்கொள்ளவும். வெல்லத்தைச் சிறிது நீர் சேர்த்துக் கரைத்து மண் இல்லாமல் வடிகட்டி அடுப்பில் வைத்து கொதிக்க விடவும். அதில் வேகவைத்த பாசிப் பருப்பு, பச்சரிசி மாவு, தேங்காய், சிறிது நெய் சேர்த்து வேகவிட்டுப் புட்டுப் பதத்தில் உதிரியாக இறக்கவும்.

இது திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் செய்யப்படும் இனிப்புச் சிற்றுண்டி.

கந்தரப்பம்

செய்முறை: தெற்கு வட்டகையில் பெருவழக்காகச் சிறப்பு நிகழ்ச்சிகளில் செய்யப்படும் சிற்றுண்டி. புழுங்கலரிசி, உளுந்து, வெந்தயம் இவற்றை நன்கு ஊறவைத்து வெல்லம் சேர்த்து மாவாக ஆட்டிக் கொள்ளவேண்டும். இதில் தேங்காய்த் துருவலையும் சுக்கு, ஏலக்காய்த் தூளையும் சேர்த்துக் கரைத்துக்கொண்டு பணியாரம் போல் எண்ணெயில் ஊற்றி வேகவைத்து எடுக்கவேண்டும்.[1]

கருப்பட்டிப் பணியாரம்

செய்முறை: பச்சரிசியைக் கழுவி நன்றாக ஊறவைத்து நீரை வடிகட்டவும். சிறிது ஈரப்பதம் இருக்கும்போதே அரிசியை இயந்திரத்தில் மாவாக அரைத்து வைக்கவும். கருப்பட்டியும் வெல்லமும் சேர்த்துச் சிறிது நீர் விட்டுக் கரைத்து வடிகட்டவும். பின்னர் அடுப்பில் ஏற்றி இளம்பாகு வந்ததும் இதில் அரிசி மாவைச் சேர்த்துக் கிளறிச் சூடானதும் இறக்கி விடவும். ஆறிய பிறகு இதில் தேவையான அளவு எடுத்து நீர்விட்டுக் கரைத்துப் பணியாரமாக ஊற்றி எடுக்கவும். (வெல்லம் சேர்க்காமல் கருப்பட்டியில் மட்டும் தயார் செய்யலாம்).

நகரத்தார் வீடுகளில் நடைபெறும் படைப்புகளிலும், பிள்ளையார் நோன்பிலும் சமைக்கப்படும் சிறப்பு இனிப்புச் சிற்றுண்டி. படைப்பு வீடுகளில் இது **படைப்புப் பணியாரம்** எனப் பெயர் பெறும்.

1. Vishnu Varthan, C., chettnad Heritage and Food Style A project Report Submitted for the degee of Bachelor of Science, Department of Hotel Management Mohamed Sathak College, Sholinganallur, Chennai, 2005. pp 122 - 130.

கற்கண்டு வடை

செய்முறை: திருமணம் போன்ற விருந்துகளில் பரிமாறப்படும் இனிப்புச் சிற்றுண்டி. உளுந்தை ஊறவைத்து, தண்ணீரை நன்றாக வடித்து விடவேண்டும். ஊறிய உளுந்தில் கற்கண்டைச் சேர்த்து ஆட்டுரலில் மாவாக ஆட்டிக் கொள்ளவேண்டும். கற்கண்டை முதலிலேயே தூள் செய்து கொண்டால் உளுந்து அரைக்கும் போது அதிகம் தண்ணீர் விடாமல் கற்கண்டுத் தூளையே சேர்த்துக் கெட்டியாக அரைத்துக் கொள்ளலாம். இந்த மாவை வடையாகத் தட்டி, எண்ணெயில் வேகவைத்து எடுத்தால் கற்கண்டு வடை பரிமாறத் தயாராகிவிடும்.

கவணரிசி

செய்முறை: கவணரிசி என்றே ஒரு வகை அரிசி விற்கிறது. அதனை வாங்கி ஊறவைத்துத் தண்ணீரை வடித்துவிட்டு அளவாகத் தண்ணீர் வைத்து வேகவைத்துக் கொள்ள வேண்டும். தேவையானால் சிறிது பாசிப்பருப்பும் வேகவைத்து இதில் சேர்க்கலாம். வேகவைத்த கவணரிசியில், சர்க்கரை, துருவிய தேங்காய்ப்பூ இவற்றைக் கலந்து, பரிமாறலாம். திருமணம் போன்ற விருந்தில் ஓர் இனிப்புச் சிற்றுண்டியாக இதனைப் பரிமாறுவர்.

கும்மாயம்

செய்முறை: பாசிப்பருப்பு, பச்சரிசி, உளுந்து மூன்றையும் வெறும் வாணலியில் சிறிது பொன்னிறமாக வறுத்து இயந்திரத்தில் மாவாக்கிக் கொள்ளவும். அரைத்த மாவைத் தண்ணீர் சேர்த்துச் சிறிது கெட்டியாகக் கரைக்கவும். பாத்திரத்தில் சிறிது நீர்விட்டு வெல்லம், கருப்பட்டி சேர்த்துக் கரைத்து வடிகட்டவும். வடிகட்டிய வெல்ல நீரை அடுப்பில் ஏற்றி இளம்பாகு வந்ததும் கரைத்து வைத்துள்ள மாவை ஊற்றிச் சிறிது சிறிதாக நெய் சேர்த்துக் கிளறவும். கலவை அல்வா பதம் வந்ததும் ஏலக்காய் போட்டு இறக்கவும்.

இது திருமணம் போன்ற விருந்துகளில், மாலைப் பலகாரத்துக்குப் பரிமாறப்படும் ஓர் இனிப்புச் சிற்றுண்டி. பாண்டிய நாட்டிலிருந்த உணவு முறைகளில் இதுவும் ஒன்று என்பதை "கறியமுதுக்கும் மூன்று ஸந்திக்குங் கும்மாய அமுதுக்கும்"[1] கும்மாயத்துக்குப் பயற்றுப் பருப்புரி"[2] எனும் கல்வெட்டு வரிகளால் உணர முடிகிறது.

---

1. தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி, VII, 521
2. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி, XIV, 13

அவியல்

செய்முறை: தேவையான காய்கறிகள் (வாழைக்காய், கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, பீன்சு, கேரட், முருங்கைக்காய்) அனைத்தையும் சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். தேங்காய், கசகசா, பொட்டுக்கடலை, பச்சை மிளகாய் சேர்த்துத் தண்ணீர் விட்டு அரைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டுப் பட்டை, லவங்கம், சோம்பு, வெங்காயம், தக்காளி, பூண்டு விழுது எல்லாவற்றையும் போட்டுத் தாளித்து வெட்டிய காய்கறிகளைப் போட்டு நீர்விட்டு உப்புச் சேர்த்து வேகவிடவும். காய்கறிகள் வெந்த பிறகு அரைத்த தேங்காய் விழுதைக் கொட்டிக் கொதித்த பிறகு இறக்கும்போது தயிர் சேர்த்துக் கலக்கவும். அவியல் தயாராகிவிடும்.

மண்டி

செய்முறை: வாழைக்காய், உருளைக்கிழங்கு, கீரைத்தண்டு, முருங்கைக்காய், கத்தரிக்காய், பலாக்காய், வெண்டைக்காய் அனைத்தையும் அரிசி கழுவிய நீரில் தேவையான உப்புச் சேர்த்து வேக வைக்கவும். அரிசி களைந்த நீரில் சிறிது புளி, உப்புப் போட்டுக் கரைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டுக் கடுகு, பச்சை மிளகாய், தக்காளி, பூண்டு, வெங்காயம் சேர்த்துத் தாளித்து வேகவைத்த காய்கறிகள், கரைத்து வைத்துள்ள புளிக் கரைசல் ஊற்றிச் சேர்ந்து வரும்போது சிறிது அரிசி மாவு கரைத்து ஊற்றிக் கெட்டியானவுடன் இறக்கவும்.

சீப்புச் சீடைக்காய்

செய்முறை: இதுவும் நொறுக்குத் தீனி வகையைச் சேர்ந்ததே. ஆனால், சிறிது கலைநயமும், கூடுதல் சுவையும் உடையது. பச்சரிசியை இடித்து வறுத்து, அதனுடன் பொட்டுக் கடலை, உளுந்து மாவைச் சேர்த்து, அதில் தேங்காய்ப்பால்(தேங்காய்ப் பாலுடன் சிறிது வெந்நீரும் சேர்க்கலாம்.) ஊற்றி மாவாகப் பிசைந்து கொள்ளவும். சீப்புச் சீடைக்கட்டை என்றே ஒன்று செட்டிநாட்டுப் பகுதியில் விற்கிறது. அதில், மாவை உருண்டையாக உருட்டி வைத்து, நீளமாகத் தாளில் பிழிந்து சிறிய துண்டுகளாக வெட்டி மோதிர வளையம் போல ஒட்ட வேண்டும். இவ்வாறு ஒட்டியதை எண்ணெயில் வேக வைத்து எடுக்கவும்.

பலாக்காய் பிரட்டல்

செய்முறை: பலாக்காயைத் தோல் நீக்கித் துண்டுகளாக வெட்டி உப்புச் சேர்த்து வேகவைக்கவும். வெங்காயம், தக்காளி, பூண்டு, இஞ்சி, சோம்பு இவற்றை விழுதாக அரைத்துக் கொள்ளவும்.

பின்னர் தேங்காய், கசகசா, பொட்டுக்கடலை சேர்த்து நீர் விட்டு அரைக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டுப் பட்டை, இலவங்கம் தாளித்து அரைத்த விழுதைப் போட்டு வதக்கவும். பின்னர் வேகவைத்த பலாக்காய் அரைத்த தேங்காய் விழுது சேர்த்து மிளகாய்ப்பொடி சேர்த்து கொதிக்க விடவும். கெட்டியாக நன்கு சுருள பிரட்டவும்.

திரட்டுப் பால்

செய்முறை: நகரத்தார் குடும்பங்களில் 'பிள்ளையார் நோன்பு' அன்று பரிமாறப்படும் ஓர் இனிப்பு இது. பாலைச் சுண்டக் காய்ச்சி, சருக்கரை அல்லது வெல்லத்தை இடித்து அதில் போட்டுச் சிறிது பாசிப்பருப்பு மாவையும் சேர்த்துத் தயாரிக்கப்படுகிறது.

தேன்குழல்

செய்முறை: இது நொறுக்குத்தீனிச் சிற்றுண்டி வகையைச் சேர்ந்தது. பச்சரிசி, புழுங்கல் அரிசி இவற்றைத் தனித்தனியே ஊறவைத்துத் தண்ணீரை வடிகட்டி உலரவைத்துக் கொள்ளவும். பின்னர் உளுத்தம் பருப்பை வறுத்து மூன்றையும் சேர்த்து இயந்திரத்தில் அரைத்து, அந்த மாவில் சிறிது நெய் (அ) டால்டா, தண்ணீர் ஊற்றிப் பிசைந்து கொள்ளவும். பிறகு தேன்குழல் கட்டையில் அந்த மாவை உருண்டையாக உருட்டி வைத்து, எண்ணெய்ச் சட்டியில், வட்ட வடிவமாக, முறுக்குப் போலப் பிழியவும். அது வெந்த பிறகு எடுத்துப் பாத்திரங்களில் வைத்துக் கொண்டால் மாதக்கணக்கில் மாலைச் சிற்றுண்டியாகும். தேன்குழலிலும், அரைவேக்காட்டு நிலையில், வெந்தும் வேகாமல் எடுக்கப்படும் தேன் குழலுக்குப் **பச்சைத் தேன்குழல்** என்று பெயர்.

எனவே, திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளின் விருந்தில், மாலைப் பலகாரத்தில் ஒரு சிற்றுண்டியாக, நகரத்தார் விருந்துகளில், பச்சைத் தேன்குழல் பரிமாறப்படுவது பழக்கமாக இருக்கிறது. செட்டி நாட்டில் சிற்றுண்டிக்குத் தேன்குழல், சீடைக்காய், மனக்கோலம் போன்ற தமிழ்ப் பெயர்களே நிலவி வருகின்றன.[1]

சொதி

செய்முறை: தேவையான காய்கறிகளை உப்புப் போட்டு வேகவைத்துக் கொள்ளவும். பாசிப்பருப்பினை மசிய வேக வைக்கவும். தேங்காயை அரைத்துப் பால் எடுத்துக் கொள்ளவும். இஞ்சி, வெங்காயம், பூண்டு, பச்சை மிளகாய், தக்காளி இவற்றை மசிய அரைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டுக் கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை தாளித்து அரைத்த விழுதினைப்

1. சோமலெ, செட்டிநாடும் – செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 469.

போட்டு வதக்கி, வேகவைத்த காய்கறிகள், பாசிப் பருப்பு, தேங்காய்ப் பால் போட்டுக் கொதிக்க விடவும். இறக்கும்போது எலுமிச்சம்பழம் சாறு சேர்க்கவும்.

பால் பணியாரம்

செய்முறை: இதுவும் விருந்துகளில் பரிமாறப்படும் இனிப்புச் சிற்றுண்டியே. பச்சரிசி, உளுந்து சேர்த்து ஊறவைத்து ஆட்டுரலில் கெட்டியான மாவாகத் தேவையான உப்புச் சேர்த்து ஆட்டிச் சிறுசிறு உருண்டைகளாக எண்ணெயில் வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். பாலில் சருக்கரை ஏலக்காய் சேர்த்துக் காய்ச்சி, அதில் வெந்த உருண்டைகளை ஊற வைத்து, நன்கு ஊறியதும் பரிமாறுவர்.

மசாலா குழம்பு

செய்முறை: முழுப் பச்சைப் பயறு, கடலைப் பருப்பு, துவரம் பருப்பு, வெள்ளைக் காராமணி, வெள்ளைக் கொண்டைக் கடலை அனைத்தையும் முதலில் நன்கு ஊறவைக்கவும். நன்றாக ஊறியபிறகு பருப்பு வகைகளுடன் பூண்டு, சோம்பு, இஞ்சி, சிவப்பு மிளகாய், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துக் கெட்டியாக வடைமாவுப் பதத்தில் அரைத்துக் கொள்ளவும். அரைத்த மாவை வடை போலத் தட்டி வாழை இலையில் வைத்து நன்கு மூடி இட்லிப் பானையில் வேகவைத்து எடுத்துக் கொள்ளவும். வெந்த பிறகு சிறிய துண்டுகளாக வெட்டி எண்ணெயில் பொறித்துக் கொள்ளவும். புளியைத் தண்ணீரில் கெட்டியாகக் கரைத்து அதில் சாம்பார் பொடி, உப்புச் சேர்த்துக் கொள்ளவும். (தேவையானால் சிறிது வெல்லம் சேர்க்கலாம்) தேங்காய், சிறிது கசகசா சேர்த்து விழுதாக அரைத்துக் கொள்ளவும். பின்னர் வாணலியை அடுப்பில் ஏற்றி எண்ணெயில் கடுகு, நசுக்கிய பூண்டுப் பற்கள், வெங்காயம், தக்காளி சேர்த்து நன்றாக வதக்கிய பிறகு புளிக் கரைசலை அதில் ஊற்றி அரைத்த தேங்காய் விழுதையும் ஊற்றிக் கொதிக்க விடவும். கெட்டியாக வரும்போது பொரித்த துண்டுகளைப் போட்டு மேலும் 5 நிமிடம் கொதிக்கவிட்டு இறக்கவும்.

மனக்கோலம்

செய்முறை: பச்சரிசி, பாசிப் பருப்பு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு அனைத்தையும் வறுத்து மாவாக ஆக்கிக் கொள்ளவும்.பின்னர் மாவில் தேவையான உப்புச் சேர்த்துத் தண்ணீர் தெளித்துப் பிசைந்து மனக்கோல அச்சில் பிழிந்து எண்ணெயில் பொறித்து எடுத்துக் கொள்ளவும். வெல்லத்தைத் தண்ணீர் விட்டுக் கரைத்து வடிகட்டிப் பாகு காய்ச்சவும். பாகில் சிறிய பற்களாக நறுக்கி, வதக்கிய தேங்காய், பொட்டுக்கடலை, ஏலக்காய் சேர்த்துப்

பொறித்து வைத்துள்ள மனக்கோலத்தின் மேல் ஊற்றி நன்றாக கலந்து வைக்கவும். (இதற்குப் பாசிப் பருப்பு அதிகமாகவும் மற்றப் பருப்புகள், அரிசி அளவில் குறைந்தும் இருக்க வேண்டும்)

மசாலா அடை

பச்சரிசி, துவரம் பருப்பு, கடலைப் பருப்பு, பாசிப் பருப்பு, வெள்ளைக் கொண்டைக் கடலை இவற்றைத் தனித்தனியாக மூன்று மணி நேரம் ஊறவைக்கவும். முதலில் அரிசியை நன்றாக அரைத்துக் கொள்ளவும். அடுத்து பருப்பு வகைகளைப் போட்டு அவற்றுடன் சிவப்பு மிளகாய், தக்காளி, இஞ்சி, பூண்டு , உப்பு, சோம்பு போட்டுச் சற்று ரவையாக அரைத்துக் கொள்ளவும். பின்னர் அரிசி மாவு பருப்புக் கலவை இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து வெங்காயத்தைப் பொடியாக அரிந்து போட்டுத் தேங்காய்த் துருவல் சேர்த்துக் கெட்டியாகக் கரைத்துச் சற்றுக் கனமாகத் தோசைக் கல்லில் வார்த்து எடுக்கவும்.

இலைஅடை

பச்சரிசியை இரண்டு மணி நேரம் ஊறவைத்து மாவாகச் சிறிது கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். தேங்காயைத் துருவிக் கொள்ளவும். அவலை நன்றாகக் கழுவிச் சிறிது ஊறவைத்து வடிகட்டவும். வெல்லத்தை நீரில் கரைத்து வடிகட்டி இளம்பாகு பதம் வரும் வரை காய்ச்சவும். பிறகு பாகில் தேங்காய்ப்பூ, ஏலப்பொடி, கொட்டி அவல் சேர்த்து நன்றாகக் கலக்கவும். சிறிய வாழை இலைத் துண்டில் அரிசிமாவு வைத்துப் பரப்பி அதன் நடுவே வெல்லப் பாகு, அவல் பூரணம் வைத்துச் சுருட்டி இட்லிப் பானையில் இலையுடன் வேகவைத்து எடுக்கவும்.

கடா

தேவையான பச்சரிசியைக் கழுவிக் காயவைத்து மாவாக அரைத்துக் கொள்ளவும். பாலை அடுப்பில் ஏற்றி நன்றாகக் காய்ந்த பிறகு வெல்லத்தைப் பொடி செய்து பாலில் போட்டு நன்றாகக் கரைய விடவும். இதனை வடிகட்டி மறுபடியும் அடுப்பில் வைத்துப் பச்சரிசி மாவைச் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கை விடாமல் கிளற வேண்டும். கிளறும் போதே ஏலக்காய்த்தூள், நெய் ஊற்றிக் கொண்டே கிளறவும். மாவு நன்றாக வெந்தவுடன் நெய் மேலே மிதக்கும். இது விசேஷகாலத்தில் தயாரிக்கப்படும் சிறப்பு இனிப்பு வகையாகும்.

பெருமாள் கோயில் தோசை

புழுங்கல் அரிசி, பச்சரிசி, உளுந்து மூன்றையும் ஊறவைத்துத் தோசைக்கு அரைப்பது போல அரைக்கவும். மறுநாள் மாவில் சீரகம், மிளகுதூள், நெய், சிறிது துருவிய இஞ்சி, உப்புச் சேர்த்துச் சற்றுக் கனமாக வார்க்கவும்.

புளி கத்தரிக்காய்ப் பச்சடி

கத்தரிக்காயைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். சற்று அதிகமான புளியை உப்புடன் சேர்த்துக் கரைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் ஊற்றிக் கடுகு, சிவப்பு மிளகாய், பெருங்காயம், வெங்காயம், கத்தரிக்காய் சேர்த்து வதக்கிக் கரைத்த புளிக் கரைசலை ஊற்றிச் சிறிது மஞ்சள் தூள் சேர்த்துக் கெட்டியாகக் கொதிக்க விடவும். தேவையானால் சிறிது பச்சரிசி மாவைக் கரைத்து ஊற்றவும்.

வாழைக்காய்க் கோளா உருண்டை

இதில் பலவகை உண்டு. மொந்தன் வாழைக்காயை மட்டும கறி சமைப்பது வழக்கம். இதில் மாவுச்சத்தும், அயம் (இரும்பு) சத்தும் அதிகம் உண்டு.[1] வாழைக்காயை நன்றாக வேகவைத்துத் தோலை உரித்துக் கொள்ளவும். சிவப்பு மிளகாய், சோம்பு, கசகசா, பொட்டுக் கடலை, பூண்டு, வெங்காயம், இஞ்சி சேர்த்து நன்றாக அரைக்கவும். இதனுடன் வேகவைத்த வாழைக்காயைச் சேர்த்துப் பிசைந்து கோளாவாக உருண்டை செய்து எண்ணெயில் பொறித்து எடுக்கவும்.

வெள்ளைப் பணியாரம்

செய்முறை: பச்சரிசி, உளுந்து இவற்றைச் சேர்த்து இரண்டு அல்லது மூன்று மணிநேரம் ஊறவைத்து ஆட்டுரலில் மாவாக ஆட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு வாணலியில் எண்ணெய் ஊற்றிக் கரண்டியால் அப்பம் போல ஊற்றி வேகவைத்து எடுக்கவும். இதில் சிறிது பால், தேவையானால் சிறிது சர்க்கரை சேர்க்கலாம். இது நகரத்தார் வீடுகளில் சிறப்பு விருந்தில் பரிமாறப்படும் ஒரு சிற்றுண்டி.

இங்கே குறிப்பிடப்பட்டவை அனைத்தும் நகரத்தாரின் உணவு வகைகளே எனினும், வெள்ளைப் பணியாரம், அவை அனைத்தை யும் விட, நகரத்தார் சிறப்புச் சிற்றுண்டியாகக் கருதப்படுகிறது என்றால் மிகையாகாது. நகரத்தார் சிறப்பு உணவு வகைகளாக இங்கு விளக்கப் பட்டிருக்கும் அனைத்தின் பெயர்களும் தனித் தமிழிலேயே அமைந் திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகையால் வீட்டுக்கு வந்திருக்கும் ஒருவரை, இன்றியமையாத விருந்தினராகக் கருதும், நகரத்தார் குடும்பத்தினர், கட்டாயமாக வெள்ளைப் பணியாரம் சுட்டுப் பரிமாறுவது பழக்கம் எனலாம். இப்பணியாரத்தைக் கல்வெட்டுகள் "திருப்பண்ணியாரத்துக்கு அப்பமுது"[2] எனக் குறிப்பதிலிருந்து இதன் பழைமையின் சிறப்பினை அறியமுடிகிறது.

1. மயிலை சீனி. வேங்கடசாமி, உணவு நூல், மணிவாசகர் பதிப்பகம், 2002, பக் 30.

2 JOR, No-XX, Appen. 19-20.

நகரத்தார் பெண்கள் (ஆச்சிமார்கள்) உணவு வகைகளை வெறும் பொழுது போக்கிற்காகவோ ஆடம்பரத்திற்காகவோ அல்லாமல் முறைப்படியும் உடலுக்குக் கேடுவிளைவிக்காத வகையிலும் செய்து வந்தனர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

அரிசி வற்றல், கூழ்வற்றல், ஜவ்வரிசி வடாம், கத்திரி வற்றல், மிளகாய் வற்றல், சுண்டை வற்றல், கறிவடகம் முதலிய செய்வதற்குரிய பொருள்கள் மலிவாகக் கிடைக்கும் காலங்களில் வாங்கி, வெயில் காலங்களில் தயார் செய்து மழைக் காலங்களில் உபயோகப்படுத்தி வருகின்றனர். வாழை இலை முதல் வெற்றிலை வரை பரிமாறி விருந்தோம்பலில் நகரத்தார்களுக்கு இணையானவர் எவருமே இல்லை எனச் சொல்லும் அளவிற்குப் புகழ் பெற்றவர்கள். திருமணம், சஷ்டியப்த பூர்த்தி போன்ற பெரிய விழாக்களில் மட்டுமல்லாமல், சாதாரணமான நாள்களில்கூட நகரத்தார் அளிக்கும் உணவும் விருந்தும் அவர்கள் வரவேற்கின்ற பாங்கும் நெஞ்சை விட்டு நீங்காத இனிய நினைவாக இருக்கும். நகரத்தார் மணவிழாக் காலங்களில் தஞ்சாவூர் தலைவாழை இலை (தாட் இலை) போட்டுப் பரிமாறுவர்.[1] அன்றாடக் காலை உணவிற்கு இலையிடும்போது அளவோடு சிறிய இலையாக இட்டு, அதில் இரண்டிரண்டு இட்லியாக அல்லது ஒவ்வொரு தோசையாகப் பரிமாறுவர். இதனால் சிறுகச் சிறுக பரிமாறும்போது விருந்தினரை அருகிலிருந்து கவனித்து அவர் சுவை அறிந்து கனிவோடு விருந்தோம்ப இயலும். கிள்ளிப் போடுதலும் அள்ளித் தருதலும் நகரத்தார் மரபு. முதலில் கிள்ளிக் கொஞ்சமாகப் பரிமாறி அவர்கள் எதை விரும்பி உண்கின்றனரோ அதை அள்ளிப் பரிமாறும் வழக்கம் உடையவர்கள்.

⌘ ⌘ ⌘

1. Muthiah, S. Meenakshi Meyappan - Visalakshmi Ramasamy, Chettiar Heritage, Chennai, 2002.

28. நகரத்தார் உறவுமுறைப் பெயர்கள்

இவ்வுலகில் தோன்றி மறைந்த மொழிகள் பலவாகும். அவற்றுள் வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்புகள் பலவற்றைத் தமிழ்மொழி ஒன்று மட்டுமே பெற்றிருக்கிறது. தொன்மைச் சிறப்பு, தனிமைச் சிறப்பு, இனிமைச் சிறப்பு, இளமைச் சிறப்பு, எளிமைச் சிறப்பு, ஒலிச் சிறப்பு, உருபுச் சிறப்பு, சுழிச் சிறப்பு, பண்புச் சிறப்பு, எழுத்துச் சிறப்பு, சொற் சிறப்பு, பொருட் சிறப்பு, கவிதைச் சிறப்பு, உவமைச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இலக்கணச் சிறப்பு எனப் பதினாறு சிறப்புகள் தமிழுக்கு உண்டு.

இவற்றுள் சொற் சிறப்பு என்பது தமிழில் தனித்தன்மை வாய்ந்தது. பொதுவாகப் பெண் என்பதற்கு மற்ற மொழிகள் உருவத்தை மட்டுமே காட்டுகின்றன. பருவத்தைக் காட்டுவனவாக இல்லை. ஆனால், தமிழில் உள்ள சொற்கள் உருவத்தையும் அதன் பருவத்தையும் காட்டுவனவாக அமைந்துள்ளன. பெண்களில்,

பேதை	-	1	-	5	வயது
பெதும்பை	-	5	-	10	"
மங்கை	-	10	-	16	"
மடந்தை	-	16	-	25	"
அரிவை	-	25	-	30	"
தெரிவை	-	30	-	35	"
பேரிளம் பெண்	-	35	-	45	"
மூதாட்டி	-	45	-	60	"

கிழவி - 60 அதற்கு மேல். அவ்வாறே ஆண்களில்,

பிள்ளை	-	குழந்தைப் பருவம்
சிறுவன்	-	விளையாட்டுப் பருவம்
பையன்	-	பள்ளிப் பருவம்
காளை	-	காதற் பருவம்
தலைவன்	-	குடும்பப் பருவம்
முதியோன்	-	தளர்ச்சிப் பருவம்
கிழவன்	-	இறுதிப் பருவம்

என அழைக்கப்படுகிறது.

இவ்வாறு ஆண், பெண் மட்டுமின்றிப் பல சொற்களுக்கும் உருவம் - பருவம் - வண்ணம் காட்டுவனவாகவே அமைந்துள்ளன. தமிழ் வளம்பெற்ற ஒரு மொழி. அதன் சொற்சிறப்பு ஒரு தனிச்சிறப்பு. இவ்வாறே பழங்காலத்தில், சமுதாயத்தில் உறவுமுறைகள் மிக நுணுக்கமாகப் பிரிக்கப்பெற்று, அவற்றைக் குறிக்கத் தனித்தனிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன.[1] மேலும், அவை அனைத்தும் தனித் தமிழ்ச் சொற்களே. பழந்தமிழ் இலக்கியங்களில் பயிலும் உறவுமுறைச் சொற்கள் நகரத்தார் சமூகத்தில் இன்றும் வழங்குகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

உடன் பிறந்தவர்களில் மூத்தவர்களைக் குறிப்பிடவும் அழைக்கவும் நகரத்தார்கள் **அண்ணன்** என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர். சித்தப்பா, பெரியப்பா, சின்னத்தா, பெரியத்தா மக்களின் மூத்தவர்களை அண்ணன் என்றே அழைப்பது வழக்கம். ஆணைப் பொறுத்தவரை தன் மனைவிக்கு அத்தான் முறை உள்ள அனைவரையும், மனைவியின் சகோதரி கணவனாகிய சகலையையும் அண்ணன் என்றே அழைப்பர். அதுபோலச் சம்பந்தியார் வயதில் மூத்தவராயின் அண்ணன் என்றே அழைப்பர். பெண்கள் கணவருக்கு அத்தான் முறை உள்ளவர் களையும், கணவரின் சகோதரி கணவன் மூத்தவராயின் அண்ணன் என்றே அழைப்பர்.

அவ்வாறே உடன்பிறந்தவர்களுள் மூத்த பெண்களைக் குறிப்பிடவும் அழைக்கவும் **ஆச்சி** என்ற சொல்லையே பயன்படுத்து கின்றனர். உறவு முறையில் அண்ணன் என்று அழைக்கப்பட்ட பெரியத்தா, சின்னத்தா, சித்தப்பா, பெரியப்பா, மனைவியின் சகோதரன் மனைவி, சம்பந்தி, மனைவியின் அத்தான் மனைவி அனைவரையும் ஆச்சி என்றே அழைப்பர். பெண்களும், கணவனின் சகோதரன் மனைவியையும் அண்ணன் பெண்டிர் முறை உள்ள அனைவரையும் ஆச்சி என்றே அழைப்பர்.

பொதுவாகப் புதிய ஆண் யாரோடு பழக நேர்ந்தாலும் அவர்களை அண்ணன் என அழைப்பதே நகரத்தார் மரபு.

நகரத்தார் சமூகத்தில் **'பெண்டிர்'** என்ற சொல் மனைவி என்ற பொருளுடையதாக உறவுமுறையில் வழங்குகிறது. தஞ்சை பெரிய கோயிலிலுள்ள இராஜராஜன் கல்வெட்டிலும் பெண்டிர் என்ற சொல் மனைவியரைக் குறிக்கும் சொல்லாகவே அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது. எனவே, அண்ணன் மனைவி **'அண்ணன் பெண்டிர்'** ஆகிறாள். ஆனால், வழக்கில் இது மருவி **'அண்ண முண்டி'** என வழங்குகிறது. அண்ணன் முறை உடையவர்கள் அனைவரின் மனைவியையும் 'அண்ணன் பெண்டிர்' என அழைப்பதே நகரத்தார் சமூகத்தில் மரபு.

---

1. கி.ஆ.பெ. விசுவநாதம், தமிழ் சொற்சிறப்பு, உலகத்தமிழ் மாநாடு விழாமலர், சென்னை, 1968, பக் – மொ – 2.

பொதுவாக அத்தை மகன், அம்மான் மகன் ஆகியோரை **அத்தான்** என்று அழைப்பர். இதுவும் வழக்கில் **'அய்த்தான்'** என மருவி வழங்குகிறது. ஆச்சி கணவன், ஆச்சி முறை உடையவர்கள் கணவனையும் அத்தான் என்றே அழைப்பர். ஆணைப் பொறுத்த வரை தன் மைத்துனனோ, தன் சம்பந்தியானோ தன்னைவிட வயதில் மூத்தவராக இருந்தால், அவரை அத்தான் என்று அழைப்பர். மனைவிக்கு அண்ணன் முறை உடைய அனைவரையும் அத்தான் என்றே அழைப்பர். பெண்ணாக இருப்பின், தன்னைவிட வயதில் மூத்த கொழுந்தனாரை அத்தான் என்று அழைப்பர். கணவனுக்கு அண்ணன் முறை உடைய அனைவரையும் அத்தான் என்றே அழைப்பர்.

பொதுவாக அத்தை மகள், அம்மான் மகள் ஆகியோரை **அத்தியாண்டி** என அழைப்பர். இது வழக்கில் **'அய்த்தியாண்டி'** ஆகியிருக்கிறது. பெண்கள் தங்களைவிட வயதில் மூத்த நாத்தனாரை அத்தியாண்டி என அழைப்பர். கணவனுக்கு ஆச்சி முறை உடைய அனைவரையும் அத்தியாண்டி எனவே அழைப்பர்.

தந்தையுடன் பிறந்த பெண்ணை **அத்தை** என அழைப்பது நகரத்தார் சமூக மரபு. **'அய்த்தை'** என்பது இச்சொல்லின் மருவிய வழக்கு. பெண்கள் தங்கள் மாமியாரை அத்தை என அழைப்பர்.

இச்சமூகத்தினர் மட்டுமே தந்தையை **'அப்பச்சி'** என அழைக்கின்றனர். இதனால் செட்டிநாட்டுப் பகுதியில் வாழும் பிற சமுதாயத்தினர் நகரத்தார் என்ற பொருளைக் குறிக்கவே கூட இச்சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

தந்தை இரண்டாவது திருமணம் செய்து கொண்டால், முதல் மனைவியின் மக்கள், இரண்டாவது மனைவியைப் பற்றிக் குறிப்பிடும் போது பயன்படுத்தும் சொல் **'அப்பச்சி பெண்டிர்'**. இதன் மருவிய வடிவம் **'அப்பச்சிவண்டி'**. தந்தையின் இரண்டாவது மனைவியை அழைக்கும்பொழுது **'ஆச்சி'** என அழைப்பதே பெருவழக்கு.

தந்தையின் தாயைக் குறிக்கவும், அழைக்கவும் நகரத்தார் பயன்படுத்தும் சொல் **அப்பத்தாள்.** அப்பன் + ஆத்தாள் என்ற சொற்கள் இணைந்து உருவான சொல்லே அப்பத்தாள்.

தாயுடன் பிறந்த ஆணை, அதாவது தாய் மாமனைக் குறிக்கவும், அழைக்கவும் நகரத்தார் பயன்படுத்தும் சொல் **அம்மான்.** உரையாசிரியர்கள் கரிகாற் சோழனின் தாய் மாமனான இரும்பிடர்த் தலையார் பற்றிக் குறிப்பிடும்போது, 'இரும்பிடர்த் தலையார் என்னும் தம் அம்மானை' எனக் குறிப்பிடுகின்றனர். அப்பழந்தமிழ்ச் சொல் நகரத்தார் சமூகத்தில் இன்றும் வழக்கில் இருக்கிறது என்பது நினைத்துப் பார்க்கத்தக்கது. அத்தை கணவனையும், மாமனாரையும் கூட நகரத்தார்கள் **அம்மான்** என்றே அழைப்பர்.

அம்மான் மனைவியை வழங்கவும் அழைக்கவும் உள்ள அம்மான் பெண்டிர் நகரத்தார் மரபில் **'அம்மாமுண்டி'** என வழங்குகிறது. பொதுவாகப் புதிய பெண் யாரோடு பேச நேர்ந்தாலும் அவர்களை ஆச்சி என அழைப்பதே நகரத்தார் மரபு. மேலும் சாதியைக் குறிப்பிடும் சொல்லாகவும் இச்சொல் பயன்படுகிறது. நகரத்தார்களில் ஆண்கள் பெயருக்குப் பின் **'செட்டியார்'** எனக் குறிப்பிடுவது போல் பெண்கள் பெயருக்குப் பின்னால் **'ஆச்சி'** என்றே குறிப்பிடுவர்.

தாயைக் குறிக்கவும், விளிக்கவும் நகரத்தார் பயன்படுத்தும் சொல் **ஆத்தாள்.**[1] பட்டினத்தார் தம் பாடலில் இச்சொல்லை இப்பொருளிலேயே பயன்படுத்துகிறார்.

"அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்"

என்பது பாடல்.[2]

உறவற்ற பொது மனிதர்களிடம் தன் **கணவன்** பற்றி, நகரத்தார் சமூகப்பெண் குறிப்பிடும்போது, சங்ககால மரபைப் பின்பற்றுவது நினைந்து போற்றத்தக்கது. சங்க இலக்கியங்களில் தலைவி, தலைவனைக் குறிப்படப் பயன்படுத்தும் தொடர் 'என் புதல்வன் தந்தை' என்பது. அது போலவே நகரத்தார் சமூகப்பெண் 'என் மக்களுக்கு அப்பச்சி' எனப் பொதுவாகவோ, தன் மகன் அல்லது மகள் பெயர் சுட்டி அவனது அல்லது அவளது அப்பச்சி எனக் குறிப்பாகவோ சுட்டுவது இன்றும் பழக்கத்தில் காணப்படுகிறது.

தாயின் தாயைச் சுட்டவும், தந்தையின் தாயை அழைக்கவும் நகரத்தார் **ஆயாள்** என்றும், தந்தையின் தந்தை, தாயின் தந்தை ஆகியோரை அழைக்க **ஐயா** என்றும் குறிப்பிடுகின்றனர். இதை **'அப்பத்தாள் வீட்டு ஐயா'** என்றும் **'ஆயாள் வீட்டு ஐயா'** என்றும் பிரித்துச் சுட்டுவது நகரத்தார் மரபு.

கணவனின் உடன் பிறந்த ஆண் **'கொழுந்தனார்'** எனச் சுட்டப் படுவார். இது **'கொழுதுனா'** என மருவி வழங்குகிறது. கொழுந்தனார் மூத்தவராயின் அத்தான் என்று அழைப்பதும், இளையவராயின் பெயர் சொல்லியோ 'தம்பி' என்றோ அழைப்பதும் மரபு.

கொழுந்தனார் மனைவியைக் குறிக்கும் கொழுந்தனார் பெண்டிர் எனும் இச்சொல் **'கொழுதுனா முண்டி'** என மருவி வழங்குகிறது. கொழுந்தனார் பெண்டிர் மூத்தவராயின் 'ஆச்சி' எனவும், இளையவராயின் பெயர் சொல்லியும் அழைப்பது மரபு.

---

1. சோமலெ, செட்டிநாடும் – செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 461.
2. டாக்டர் ச.மெய்யப்பன், (பதி) பட்டினத்தார் பாடல்கள், மணிவாசகர் பதிப்பகம், மூன்றாம் பதிப்பு, சென்னை, 2003, பக் – 143.

மனைவியின் உடன் பிறந்த பெண் **கொழுந்தியாள்** எனச் சுட்டப்படுவார். கொழுந்தியாள் இளையவராயின் பெயர் சொல்லி அழைப்பர். மூத்தவராயின் பெரும்பாலும் முறைச்சொல் எதனையும் பயன்படுத்தி அழைக்காமலே, செய்திகளை மட்டும் பேசுவர். இதுவே நகரத்தார் குடும்பங்களில் காணப்படும் பழக்கம்.

தந்தையின் தம்பி, தாயின் தங்கை கணவர் ஆகிய உறவு முறைகளைச் சுட்டும் சொல் **சித்தப்பா.** இந்த உறவின் மனைவியர் சின்னத்தாள் என்று குறிக்கப்படுவர்.

அப்பத்தாளின் தங்கை, அப்பத்தாள் வீட்டு ஐயாவின் தம்பி மனைவி, போன்றவர்களைச் சுட்டவும், அழைக்கவும் நகரத்தார் சமூகத்தில் பயன்படும் சொல் **சின்னப்பத்தாள்.** தந்தைக்குச் சின்னத்தாள் முறை உள்ள அனைவரையும் சின்னப்பத்தாள் என அழைப்பர்.

மனைவி அல்லது கணவரின் அப்பா, பெரியப்பா மற்றும் சித்தப்பா முறை உறவுள்ள அனைவரையும் சுட்டப் பயன்படும் சொல் **மாமனார்.** அவர்கள் **'அம்மான்'** என்றே அழைக்கப்படுவர். இவர்களின் மனைவியர் **மாமியார்** எனவும், அழைக்கையில் **அத்தை** என்றே அழைக்கப்படுவர்.

ஆயாளின் தங்கை, ஆயா வீட்டு ஐயாவின் தம்பி மனைவி போன்றவர்களைச் சுட்டவும், அழைக்கவும் பயன்படும் சொல் **சின்னாயாள்** என்பது. பொதுவாகத் தாயாருக்குச் சின்னத்தாள் முறை உள்ள அனைவரையும் சின்னாயாள் என்றே அழைப்பர். அவ்வாறே ஐயாவின் தம்பி, அப்பத்தாளின் தங்கை கணவர், ஆயாளின் தங்கை கணவர் போன்றவர்களைச் சுட்டவும், அழைக்கவும் பயன்படும் சொல் **சின்னையா** என்பது. பொதுவாகத் தாயாருக்குச் சித்தப்பா முறை உள்ளவர்கள், தந்தைக்குச் சித்தப்பா முறை உள்ளவர்கள் ஆகிய அனைவரையும் சின்னையா என அழைப்பர்.

உடன் பிறந்த பெண்களுள் இளையவர்களைச் சுட்டப் பயன்படும் சொல் **தங்கச்சி.** அவளைப் பெரும்பாலும் பெயர் சொல்லியே அழைப்பர். மிகச் சில நேரங்களில் 'தங்கச்சி' என அழைப்பதும் உண்டு. பொதுவாக, வயதில் குறைந்த, உறவற்ற, புதிய பெண்கள் யாரோடு பேச நேர்ந்தாலும், அவர்களைத் 'தங்கச்சி' என அழைக்கும் பழக்கம் நகரத்தார் சமூகத்தில் நிலவுகிறது. அதே போல் உடன்பிறந்த ஆண்களுள் இளையவர்களைச் சுட்டப் பயன்படும் சொல் **தம்பி.** அவனைப் பெரும்பாலும் பெயர் சொல்லியே அழைப்பர். மிகச் சில நேரங்களில் 'தம்பி' என அழைப்பதும் உண்டு. பொதுவாக, வயதில் குறைந்த, உறவற்ற ஆண்கள் யாரோடு பேச நேர்ந்தாலும், அவர்களைத் தம்பி என அழைக்கும் பழக்கம் நகரத்தாரிடையே காணப்படும் ஒன்று.

தம்பி மனைவியைச் சுட்டப் பயன்படும் சொல் **தம்பிபெண்டிர்.** இதன் வழக்கு வடிவம் **'தம்பி வண்டி'** என்பதாகும். தம்பி மனைவி இளையவளாகவே அமைவதால் பெயர் சொல்லியே அழைப்பது பழக்கம்.

கணவன் உடன்பிறந்த பெண்களைச் சுட்டும் **நாத்தனார்** எனும் இச் சொல் மூத்தவராயின் **'அத்தியாண்டி'** என்றும், இளையவரா யின் பெயர் சொல்லியும் அழைப்பர். இது 'நாத்தூண்' என்பதன் மருவிய சொல்.

நகரத்தார் கோவில்கள் ஒன்பதில், ஒருவர் எந்தக் கோயிலை, எந்த உட்பிரிவைச் சேர்ந்தவரோ, அதே கோயிலை, அதே உட்பிரிவைச் சேர்ந்த அனைவரும் அவர்தம் **பங்காளிகள்** எனச் சுட்டப்படுவர். மிகச் சில நேரங்களில் இது விளிச் சொல்லாகவும் பயன்படுகிறது. பங்காளியை **'மானி'** என விளிப்பர். பங்காளிகள் அல்லாத உறவினர்களைச் சுட்ட நகரத்தார் சமூகத்தில் பயன்படும் சொல் **தாயபிள்ளைகள்** என்பது.

மனைவியைச் சுட்டப் பயன்படும் நகரத்தார் சமூகச்சொல். **'பொண்டாட்டி'** என்றும் வழங்கும். மனைவி பெண்டு எனக் குறிக்கப்படுவதைச் சங்க இலக்கியங்களில் காணலாம். **'ஊரன்பெண்டு'** என்ற தொடர் மருதநிலத் தலைவன் மனைவியை ஐங்குறுநூற்றிலும், **'பெருங்கோப்பெண்டு'** எனும் தொடர் புறநானூற்றில் பூதப்பாண்டியன் மனைவியையும் சுட்டுவதை நினைவுகூறலாம்.

தந்தையின் அண்ணன் மனைவி, தாயின் ஆச்சி ஆகியவர்களை அழைக்கப் பயன்படும் சொல் **பெரியாத்தாள்.** அதே போல் தந்தையின் அண்ணனையும், தாயின் ஆச்சி கணவன் ஆகியவர் களைச் சுட்டவும், அழைக்கவும் பயன்படும் சொல் **பெரியப்பச்சி.**

அப்பத்தாளின் ஆச்சி, அப்பத்தாள் வீட்டு ஐயாவின் அண்ணன் மனைவி போன்றவர்களைச் சுட்டவும் அழைக்கவும் பயன்படும் சொல் **பெரியப்பத்தாள்.** பொதுவாகத் தந்தையின் பெரியத்தாள் முறை உடைய அனைவரையும் பெரியப்பத்தாள் என்றே அழைப்பர்.

ஆயாவின் ஆச்சி, ஆயா வீட்டு ஐயாவின் அண்ணன் மனைவி போன்றவர்களைச் சுட்டவும், அழைக்கவும் பயன்படும் சொல். **பெரியாயாள்.**பொதுவாகத் தாயாருக்குப் பெரியத்தாள் முறை உள்ள அனைவரையும் பெரியாயாள் என்றும், ஐயாவின் அண்ணன், அப்பத்தாளின் ஆச்சி கணவர், ஆயாளின் ஆச்சி கணவர் போன்றவர்களைச் சுட்டவும், அழைக்கவும் பயன்படும் சொல் **பெரியையா.** பொதுவாகத் தாயாருக்குப் பெரியப்பச்சி, தந்தைக்குப் பெரியப்பச்சி முறை உள்ள அனைவரையும் பெரியையா என்றே அழைப்பர்.

மகள் வயிற்றில் அல்லது மகனுக்குப் பிறக்கும் ஆண் குழந்தை **பேரன்** எனச் சுட்டப்படும். பொதுவாக ஐயாவின் பெயர் அவனுக்குச் சூட்டப்படும் வழக்கம் இருந்ததால், **'பெயரன்'** என்ற சொல் தோன்றிப் 'பேரன்' என மருவி இருக்க வேண்டும். பேரனின் மனைவியைச் சுட்டப் பயன்படும் **பேரன் பெண்டிர்** வழக்கில் **'பேரமுண்டி'**யாகி இருக்கிறது.

மகள் வயிற்றில் அல்லது மகனுக்குப் பிறக்கும் பெண் குழந்தை **பேர்த்தி** எனச் சுட்டப்படுவாள். பொதுவாக அப்பத்தாள் அல்லது ஆயாளின் பெயர் அவளுக்குச் சூட்டப்படும் வழக்கம் இருந்ததால், **'பெயர்த்தி'** என்ற சொல் தோன்றிப் 'பேர்த்தி' என மருவியிருக்க வேண்டும்.

தம் பெண் குழந்தையைச் சுட்டப் பயன்படும் சொல் **மகள்**. 'பெண்' என்ற சொல்லே 'மகள்' என்ற பொருளில் பயன்படுத்தப் படுவதும் உண்டு. மகள் கணவன் **மாப்பிள்ளை** என அழைக்கப்படுவார். ஆண்கள் தங்கள் உடன் பிறந்த பெண்களின் மகனையும், பெண்கள் தங்கள் உடன்பிறந்த ஆண்களின் மகனையும், சில நேரங்களில் ஆண்கள் தம் தங்கைக் கணவனையும் மாப்பிள்ளை என அழைப்பர்.

தம் ஆண் குழந்தையைச் சுட்டப் பயன்படும் சொல் **மகன்**. 'பையன்' 'அரசு' போன்ற சொற்கள் மகன் என்ற பொருளில் நகரத்தார் சமூகத்தில் பயன்படுத்தப்படுகின்றன. மகனுடைய மனைவியைச் சுட்டப் பயன்படும் சொல் **மகன் பெண்டிர்**. இது வழக்கில் **'மகமுண்டி'** யாக மருவி நிற்கிறது.

ஆண்கள் தங்கள் உடன்பிறந்த பெண்களின் மகளையும், பெண்கள் தங்கள் உடன்பிறந்த ஆண்களின் மகளையும் சுட்டவும் சில நேரங்களில் அழைக்கவும் **மருமகள்** என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

மனைவியுடன் பிறந்த ஆணைச் சுட்டும் சொல் **மைத்துனன்**. மைத்துனர் மூத்தவராயின் **'அத்தான்'** என்றும், இளையவராயின் பெயர் சொல்லியும் அழைப்பது மரபு. இவ்வளவு தெளிவான உறவுமுறைகளும், அவற்றுக்கெனத் தனிச்சொற்களும் பயன்படுத்தப் பட்டு வரும் நகரத்தார் மரபில் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காலச் சூழலுக்கு ஏற்ப சிறிது சிறிதாக அப்பச்சி, ஆத்தாள் போன்ற சொற்கள் மறைந்து அனைத்துச் சமூகத்தினருக்கும் பொதுவான சொற்களாகிய அப்பா, அம்மா, அண்ணி, மாமா முதலிய சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் உறவுமுறைப் பெயர்களில் உள்ள தனித்தன்மையைத் தொடர்ந்து பயன்படுத்து வதும் பாதுகாப்பதும் அவசியமாகும்.

⌘ ⌘ ⌘

29. நகரத்தார் கட்டடக் கலை - வீடுகள்

மனித நாகரிக வளர்ச்சியினைக் குறிக்கையில் பழைய கற்காலம், புதிய கற்காலம், உலோக காலம் என அறிஞர் பகுத்துக் கூறுவர். குகைகளில் வாழ்ந்த மனிதன் படிப்படியாக வளர்ந்து நல்ல வீடுகளை அமைத்து வாழக் கற்றுக்கொண்டான்.

பழந்தமிழர் இல்லங்கள்

ஆதியில் குறிஞ்சி நில வாழ்வில் மனிதன் இயற்கையான குகைகளில் வாழ்ந்தான். இவ்வாறு குறிஞ்சி நில வாழ்வில் பயன்பட்ட குகை போன்ற அமைப்பை ஏனைய நில வாழ்க்கையில் செயற்கையாக அமைத்துக் கொண்டான். இவையே பிற்காலத்தில் கோயில் மண்டபங்களுக்கு அடிப்படையாக அமைந்தன.[1]

இதற்கு அடுத்த முல்லை நில வாழ்வில் மனிதன் மரநிழலில் கூட்டமாக வாழ்ந்து வந்தான். அம்மர நிழலே அவர்கள் இல்லமாக பயன்பட்டது. இவ்விடங்கள் மன்றம் எனப்பட்டன. இத்தகைய மரநிழலில் மக்கள் வாழ்ந்த மன்றங்கள் **வாகை மன்றம் (மாமலர் பெருஞ்சினை வாகை மன்றமும்** - மணிமேகலை) **வெள்ளில் மன்றம் (புள்ளிறை கூரும் வெள்ளின் மன்றமும்** - மணிமேகலை) என்று மணிமேகலையும், **வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பாவை மன்றம்** பலவும் சிலம்பும் குறிக்கிறது. இம்மன்றங்களே பொது அவைகளுக்கும், கோயில்களுக்கும் அடிப்படையாக அமைந்தன.

முல்லை நில வாழ்க்கையின் தொடர்ச்சியாக விலங்கினின்று தம்மைக் காத்துக்கொள்ள மரங்களின் மீது பரண் அமைத்து வாழத்தொடங்கினான். இவை வரகு தாட்கள் வேய்ந்த குடிசைகளாக இருந்தன. இதுவே பின்னர் விளை புலங்களைப் பாதுகாக்கப் பரணாகப் பயன்பட்டுக் காலப்போக்கில் எழுந்த பலநிலை மாடங்களாக வளர்ந்தன. (முகில்தோய் மாடம் - சிலம்பு).[2]

---


1. பழந்தமிழர் குடியிருப்புகள், உலகத்தமிழ் மாநாடு விழாமலர், சென்னை, 1968.
2. மா. சந்திரமூர்த்தி, சங்ககாலக் கலைகள், தமிழகக் கோயிற்கலைகள், முதற்பதிப்பு, தொல்லியல் துறை வெளியீடு, சென்னை, 1973, பக் – 5.



மருதவாணன் – காவிரிப்பூம்பட்டினம்



வெள்ளித் தொட்டிலில் மருதவாணன்
நகரத்தார் மரபு விழா



மருதவாணன் கப்பல் முலம்
கொண்டு விக்க செல்லுதல்



நகரத்தார் ஆண்கள்
உபதேசம் பெறுதல்




சம்பு புறப்படுதல்-நகரத்தார் விடுதி - காசி



சம்பு கோயிலை அடைதல்
விசுவநாதர் கோயில் - காசி




தண்ணீர் கொண்டு வரும் காண்டாக்காரன்




திருமண விழாவில் காலை உணவு தயாரித்தல்



நகரத்தார் காலை உணவு-திருமண விருந்து



மதிய விருந்து தயாரித்தல்-நகரத்தார் திருமணம்



உணவு தயாரிப்பு - மேற்பார்வை
நகரத்தார் திருமண விருந்து



தஞ்சாவூர் தாட் இலையில்
மதிய விருந்து - சைவ உணவு



கவணரிசி-இனிப்புச் சிற்றுண்டி



வர்கணம்



கேப்பை புட்டு
கேழ்வரகு உணவு



கருப்பட்டிப் பணியாரம்
நகரத்தாரின் தனிச்சுவை உணவு



சீயம் - இனிப்பு சேர்த்த உணவு



தேன்குழல்
நகரத்தாரின் விசேஷ பலகாரம்



மஞ்சுவிரட்டு காளை–வீர விளையாட்டு




மஞ்சு விரட்டு எனும் மாடு பிடித்தல்
சிராவயல் - செட்டிநாடு



மாடு பிடித்தல் நிகழ்ச்சி
நெற்குப்பை




நகரத்தார்
வங்கியியலின் முன்னோடி




நகரத்தார் தம்பதிகள்
கி. பி. 18 – ஆம் நூற்றாண்டு




ஆச்சிமார் கைவண்ணத்தால்
உருவான கலர் கொட்டான்கள்




செட்டிநாட்டில் பயன்பாட்டில் உள்ள
பர்மா (மண்) ஜாடி வகைகள்



செட்டிநாட்டின் பாரம்பரிய வெள்ளிக்குடம்



பாரம்பரியமாக பணம் மற்றும்
கணக்குகள் கையாளும் கைப்பெட்டி



தேங்காய் துருவியுடன் கூடிய
அரிவாள்மனை



காவடியின் பூவேலைப்பாடுகள்
பக்கவாட்டுத் தோற்றம்



செட்டிநாட்டின் மரப்பாச்சி பொம்மைகள்



பர்மா வாழ் நகரத்தார்கள்
பயன்படுத்திய மரவைகள்



செட்டிநாட்டில் பயன்படுத்தும்
மண் ஜாடிகள்

இதன் அடுத்த நிலையாகப் பாலை நிலத்தில் ஈந்தின் ஓலையால் வேயப்பட்ட குடிசைகள் இருந்ததை **'ஈந்தலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை'** எனப் பெரும்பாணாற்றுப் படை குறிக்கிறது. அடுத்து **நெய்தல்** நிலத்தில் தாழை சூழ்ந்த குடிசைகள் இருந்தன. இவை மீன், வலை முதலியவற்றை உலர்த்துவதற்காக நடுவில் இடைவெளி விட்டு வட்டமாக அமைந்து இருந்தன. இதனை

'நெடுந் தூண்டிலிற் காழ் சேர்த்திய
குறுங் கூறைக் குடி நாப்பண்
நிலவடைந்த இருள் போல
வலையுணங்கு மணல் முன்றில்'

எனப் பட்டினப்பாலை குறிக்கிறது.

அடுத்து **மருத** நிலத்தில் வைக்கோலால் வேயப்பட்ட ஓலைக் குடிசைகள் இருந்தன. இதனைப் **'புதுவை வேய்ந்த கவிகுடில்'** எனப் பெரும்பாணாற்றுப்படை (225) குறிக்கிறது.

இப்படி இல்லம், மனை, அகம், நகர், இருக்கை, குடில், குடி, குடிசை, இருப்பு என ஆரம்பித்து பின்னாளில் பல பகுதிகளோடு பெரிய இல்லங்கள் தோன்றின.

இவை வீட்டின் பல பக்கங்களிலும் வளைவாக அமைக்கப் பட்ட திண்ணைகள் படிகளுடன் உயர்ந்து விளங்கின. இதனை,

குறுந்தொடை நெடும்படிக்கால்
கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்து

எனப் பட்டினப்பாலைக் குறிக்கிறது. இவ்வாறு திண்ணைகளும், படிகளும் இருந்தன என்பதிலிருந்து வீடுகள் வெள்ளத்தால் சேதமடையா வண்ணம் மிக உயர்ந்தனவாய் அமைக்கப்பட்டிருந்தன என்றும், திண்ணைகள் வளைவாக அமைக்கப்பட்டிருந்ததை அறியும்போது வீடுகள் நாற்புறமும் இடைவெளிவிட்டு கட்டப் பட்டிருந்தன என்றும் தெரிய வருகிறது.

அத்தகைய இல்லங்களின் வாயில்கள் உயர்ந்தனவாகவும், கதவுகள் பல பலகைகள் இணைக்கப்பட்டு வன்மையாகவும், வேலைப்பாட்டுடனும் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றை **'நீணெடு வாயில்'**, **'புதவக் கதவம்'** என்று சிலம்பும், **'புலிப்பொறிப் போர்க்கதவின்'** என்று பட்டினப்பாலையும் (பட்டி - 261) குறிக்கிறது. வீட்டின் தூண்கள் பருத்த நிலைகளின் மேல் நெடியனவாக அமைக்கப்பட்டு இருந்தன. **'பருநிலை நெடுந்தூண்'**, **'கொடுங்கால் மாடத்து நெடுங்கடை துவன்றி'** என்று பட்டினப்பாலையும், **'மணித்தூண்'** எனச் சிலம்பும் (சிலம்பு, கொலை, 198) குறிக்கிறது. இல்லங்களில் காற்றோட்டத்திற்காக

மான் கண்ணினைப் போன்ற குறுங்கண் சாளரங்களும் இருந்தன. (கோலச் சாளரக் குறுங்க ணுழைந்து - சிலம்பு). பல்வேறு பருவ நிலைக்கேற்ப மாடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. மேலும் கூடம், இடைக்கழி, அட்டில், பள்ளி, அணிகலவறை போன்ற இலக்கியங்களில் குறிக்கும் பல பகுதிகளோடு பேரில்லங்கள் அமைந்திருந்தன. நல்ல காற்றோட்டமான பல இல்லங்கள் மதுரையில் இருந்ததை மதுரைக் காஞ்சி **'சில் காற்றிசைக்கும் பல் புழை நல்வில்'** எனக் கூறுகிறது. இல்லங்களின் முன்பாகப் பந்தல்கள் இருந்தன. பொருள்களைத் தொகுத்து வைக்கும் கொட்டில்கள் இருந்தன. இல்லங்கள் சுட்ட கற்களினால் கட்டப்பட்டு சுதை தீற்றப் பெற்று வண்ண ஓவியங்களால் அணி செய்யப்பட்டன என்பதை

"சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டு நிற்குநரும்"

என மணிமேகலையும் கூறுகிறது.

இவ்வாறு நிலையான குடியிருப்புகளை அமைத்து வாழத் தொடங்கிய பின்னர்ச் சிற்றூர், பேரூர், மூதூர், நகர், ஊர் என விரிவடைந்தது. நகரத்தின் நடுவில் அரசனின் கோயில், அதனைச் சுற்றி அமைச்சர், படைத்தலைவர், வணிகர் போன்ற பெருமக்கள் வாழும் வீதிகளும், அவற்றின் புறத்தே ஏனையோர் வீதிகளும் அமைந்திருந்தன. இதைக் "கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும் பாடல் சல் சிறப்பிற் பட்டினப்பாக்கமும்" எனச் சிலம்பு கூறுகிறது. இவை அனைத்தையும் உள்ளடக்கி மதிலும், அகழியும், அவற்றின் புறத்தே புறஞ்சேரிகளும் அமைந்திருந்தன என்று புகார் நகர அமைப்பைச் சிலப்பதிகாரம் விரித்துக் கூறுகிறது.[1] அவ்வாறு புகார் நகரில் அமைந்திருந்த ஆற்றைப் போல அகன்ற வீதிகளை 'ஆறு கண்டென்ன அகல் நெடுந்தெரு' என்று பட்டினப்பாலையும், மதுரைத் தெருக்களின் அமைப்பு பிரம்மனின் உந்தியில் பூத்த மலரை ஒத்து அமைந்திருந்ததைப் 'பூவின் இதழகத் தனைய தெருவம்' என்று மதுரைக் காஞ்சியும் கூறுகின்றன.[2] மதுரை நகரில் நிலத்துக்கு அடியில் கழிவுநீர் செல்லும் வழியாக அமைக்கப்பட்டிருந்த 'சுருங்கை' யானை செல்லும் அளவு வசதி பெற்றிருந்தது என்றால் அக்காலக் கட்டடக் கலையின் சிறப்பு விளங்கும்

1. பழந்தமிழர் குடியிருப்புகள், உலகத்தமிழ் மாநாடு விழாமலர், சென்னை, 1968
2. இரா.நாகசாமி – மா. சந்திரமூர்த்தி, தமிழகக் கோயிற் கலைகள், 1973, பக் – 28.

பாரம்பரிய தமிழர் வீடுகள்

நம் பாரம்பரிய தமிழர் வீடுகள் இடப்பரப்பு விரிவாக நன்கு வரையறுக்கப்பட்டு ஒரே இடத்தில் பல தலைமுறைகளும், பல குடும்பங்களும் வாழும் கட்டாயத்தில் இருக்கும். வீடுகள் விரிவான குடும்பப் பாரம்பரியத்தின் வரைபடியாக அமைந்திருந்தது. இந்த இடப்பரப்பில் தனிப்பட்ட நபர்களுக்கான இடம் ஒதுக்கப்பட வில்லை, குடும்பத்தின் நபர்கள் உணவு, ஓய்வு போன்ற அன்றாட வாழ்வின் நிகழ்ச்சியைப் பொதுவான இடமான வாசல் அல்லது முற்றத்தில் பகிர்ந்து கொண்டனர்.

பொதுவாகத் தமிழர் வீடுகள் உள்ளே நுழைந்ததும் காணப்படும் கோலம் குடும்பத்தின் இடப்பரப்பின் முதல் எல்லையாய் அமைகிறது. உற்றார் உறவினரின் நல்வருகையையும், இல்லத்திற்கு நல்ல மதிப்பையும் பெற்றுத் தருகிறது. தமிழ்நாட்டுச் சிற்றூர்களிலும், பேரூர்களிலும், காலையில் வீட்டு முன்வாயிலில் சாணநீர் தெளித்துப் பெருக்கிக் கோலமிடுவது மரபு. நகரத்தார் தவிர்த்த ஏனைய இனக்குழுவினர் தமது வீட்டின் எல்லை வரையிலும் பெருக்கிச் சாணநீர் தெளித்துக் கோலமிடுவர். ஆனால், நகரத்தார் எவ்வளவு பெரிய அரண்மனை போன்ற வீடாயினும், வாயில் அளவிற்கு, முதற்படியிலிருந்து ஒரு முழம் அளவிற்கு மண் எல்லையிட்டு, பெருக்கிச் சாணநீர் தெளித்துக் கோலமிடுவர்.

இதனை அடுத்துத் திண்ணை எனும் உயரக் கட்டிய மேடை இருக்கும். மேலே சாதாரணமாகக் கூரையிட்டு மூடியிருக்கும். தெருவை நோக்கி உள்ள முகப்பை ஒட்டி இருக்கும் இத்திண்ணை கள் வழிபோக்கரும், பயணிகளும் ஓய்வு பெறவும், உறங்கவும் வசதி அளித்தன.

அதனை அடுத்துள்ள வெராண்டா நிழலும் குளிர்ச்சியும் தரத்தக்க வகையில் அமைந்தன. வெராண்டாவைத் தாண்டி நடை என்று அழைக்கப்படும் பகுதி மரத்தூண்கள் பதிக்கப்பட்டிருக்கும். இந்த நடைவழி தொடர்ந்து முற்றம், வெளிவாசல் இரண்டையும் இணைக்கும்.

உள்வழியான நடை முற்றத்திற்குக் கொண்டு செல்லும். வீட்டின் மய்யப் பகுதியான முற்றம் திறந்த வெளியாக இருக்கும். சூரிய ஒளி உள்ளே பாயும். வெளி உலகம், உள் உலகம் என்ற இரு கூறுகளையும் சமன் செய்யும் இடம். விண்ணோடு தொடர்புடைய இந்த இடம் சாதாரண இல்லத்தின் நங்கூரமாகும்.

முற்றத்தின் மய்யத்திலும் அதனைச் சுற்றிலும் கூட்டுக் குடும்ப வாழ்வில் பெரும்பாலான பகுதி இயங்குகிறது. ஒன்று கூடுதல், இல்லற இயக்கங்கள், ஓய்வு ஆகியவற்றின் இருப்பிடமாக இருக்கிறது.

இந்த முற்றத்தைச் சுற்றிலும் பெரும்பாலும் சன்னல்கள் இன்றி தானிய களஞ்சியங்கள், ஆடைகள் மற்றும் சமையலறைப் பொருள்கள் சேகரிப்பு, பாத்திரங்கள் வைக்கும் அறைகள் இருக்கும். இந்த அறைகளில் ஒன்று நடுநாயகமாகக் கூடம் என்று அழைக்கப் படும். குலதெய்வத்தின் பூஜை, மற்றும் குடும்ப விழாக்கள் நடக்கும் முக்கிய இடமாகக் கூடம் அமையும்.

இதற்கு அடுத்தே சமையலறை அமையும். வீட்டின் இறுதிப் பகுதியாகச் சமையலறையின் பின்புறம் கொல்லை இடம்பெறும். இதில் ஒரு கிணறு, துளசிமாடம், வாழை போன்ற தோட்டங்கள் இருக்கும். இதன் பாதி திறந்த வெளியாகத் துணிதுவைத்தல், பால்கறத்தல், கழிப்பிடம் போன்ற இல்லற நடமாட்டங்களுக்கு இடமளிக்கும்.[1]

தெற்கு, கிழக்கு ஆகிய ஆசியப் பகுதியிலிருந்து சீனாவின் வடபகுதி வரை உள்ள கிராமம் மற்றும் நகரங்களின் கட்டடக் கலையில் பல ஒற்றுமைகள் காணப்பட்டாலும் தமிழர் கட்டடக் கலை தனக்கே உரிய தனிப்பாங்கால் தனிச்சிறப்புத் தன்மை வாய்ந்தது.

செட்டிநாட்டு வீடுகள்

இன்று கூட்டுக் குடும்பங்கள் பல சிதைவுற்ற நிலையில் பாரம்பரியமான வீடுகள் இடிக்கப்பட்டுப் பல நவீன குடியிருப்புகள் ஐரோப்பியர் ஆங்கிலப் பாணியில் தோன்றுகின்றன. எனினும் செட்டிநாட்டில் இன்றும் பல பழைமையான வீடுகள் சிதைவுறாவண்ணம் பாதுகாக்கப்படுகின்றன. ஆங்கிலேயக் கலப்பால் வீட்டின் உட்புறம் நவீனமாகத் தோன்றினும் பழைமை மாறாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதுவும் செட்டிநாட்டில் உள்ள நகரத்தார் வீடுகள் ஒவ்வொன்றும் அரண்மனையை ஒத்துக் காணப்படுகின்றன. எனினும் பண்டைய தமிழர் வீடுகளில் இருந்த மோட்டு நீரைச் சேகரித்துத் தொட்டிக்கட்டு போன்ற முற்றத்திற்கு அனுப்பும் உரோமன் ஓடுகள், வாய்க்கால் அமைப்புக் கொண்ட கூரைகளின் சரிவுநிலை, அதனைச் சுற்றி வரும் தாழ்வாரம், சமையல், குளியல் இடம், பெண்களின் ஒதுக்கிடம் போன்ற பக்கவாட்டு இடப்பரப்புகள் இன்றும் செட்டிநாட்டின் வீடுகளில் காணப்படுகின்றன.

அதிலும் காரைக்குடி, தேவகோட்டை, கோட்டையூர், திருப்புத்தூர், பள்ளத்தூர், கானாடுகாத்தான், புதுவயல், கண்டனூர் போன்ற இடங்களில் உள்ள வீடுகளைப் பார்த்தால் வியக்காமல் இருக்க முடியாது.

1. திருமதி. ச. மதனகல்யாணி,புதுச்சேரி – ஒரு வணிகத்தள ஊரின் வரலாறு, பதிப்பகம் – பிரஞ்சுக் கல்லூரி, புதுச்சேரி, 1998, பக் 21 – 22.

பண்டைய தமிழ் மரபுப்படி கட்டப்பட்ட நகரத்தார் வீடுகளில் தெற்காசிய நாடுகளுடன் வணிகத் தொடர்பு ஏற்பட்ட பின்னே மேற்கத்திய சாயல்கள் ஏற்பட்டுள்ளன. வேலைப்பாடு அமைந்த பர்மா தேக்குக் கதவுகள், ஜன்னல்கள், பெல்ஜியம் கண்ணாடி பதித்த கதவுகள், இத்தாலியன் மார்பிள், கூரையில் பூ வேலைப்பாடு அமைந்த ஓடுகள், சரம் விளக்கு என வீட்டைஅழகுபடுத்தினர்.

இன்று வரை இவர்களின் வீடுகள் தரமானதாக உறுதியுடன் இருப்பதற்கு சுண்ணாம்புச் சாந்துடன், முட்டை, கருப்பட்டி, கடுக்காய் சேர்த்து அரைத்துக் கலவையாகப் பயன்படுத்தி இருப்பதே காரணம். இவ்விதம் வீடுகளை அமைப்பதற்கு எமுவங்கோட்டை எனும் ஊரில் வீடுகள் கட்டுபவர்கள் இருந்திருக்கிறார்கள்.

நகரத்தார்களுக்கு வீடுகள் தனிப்பட்ட அந்தஸ்தின் அடையாளமாகும். அதனால் நிலைப்படியின் மேலும், வீடுகளின் முகப்பிலும் செல்வத்தின் தெய்வமான திருமகளையும், கந்தர்வ உருவங்களையும் வடித்தனர். காலப்போக்கில் மேற்கத்திய கலப்பால் நாகரிக உருவங்களும் இடம் பெற்றன.

நாட்டுக்கோட்டை நகரத்தார் என்ற பெயருக்கேற்ப, கோட்டைகள் போல வீடுகள் கட்டி வாழ்வது இச்சமூகத்தின் இயல்பு. செட்டிநாட்டு ஊர்களில் நகரத்தார் வீடுகளின் முகப்புகள் முதல் வீதியிலிருந்தால் பின் கதவுகள் இரண்டாவது வீதியில் அமையும். இவ்வளவு நீளமாகக் கட்டப்பட்ட வீடுகளின் அகலமும் மிக விரிந்ததாகவே இருக்கும். இவ்வாறு பெரிய வீடுகள் கட்டி வாழத் தொடங்கியது சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் (கிபி. 1850 - 1900) எனலாம்.

செட்டிநாட்டில் இவ்வாறு வீடுகள் கட்டிய காலத்தை மூன்று கட்டங்களாகப் பகுக்கலாம். சென்ற நூற்றாண்டின் இறுதியில் வீடுகள் கட்டுவது தொடங்கப்பட்டாலும் பெருமளவில் வீடுகள் கட்டப்பட்ட காலம் 1900 முதல் 1920 வரையிலான ஆண்டுகள். முதல் உலகப் போரை ஒட்டிப் பல நகரத்தார் குடும்பங்களுக்கு வெளிநாட்டுத் தொடர்பு குறைந்ததால் பிறகு 1920 - 1940 வரை வீடுகள் கட்டப்பட்டன என்றாலும் முந்தைய காலகட்டத்தைவிட எண்ணிக்கை குறைவேயாகும். 1940க்குப் பிறகு மிகப்பெரிய அளவில் வீடுகட்டும் போக்கு மாறி சிறிய அளவில் காலத்திற்கேற்ப நவீன பங்களா முறைகளில் வீடு கட்டும் பழக்கம் தோன்றியது.

முதல் இரண்டு காலகட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளை நகரத்தார் பாணி வீடுகள் என்று சொல்லலாம். நகரத்தார் பாணி வீடுகளின் அமைப்பு பெரும்பாலும் கீழ்க்காணுமாறு இருக்கும்.

முகப்பு

நகரத்தார் ஆரம்ப காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கடல்கோள் காரணமாகக் கடற்கரையிலிருந்து உள்நாடுகளுக்குக் குடிபெயர்ந்த காரணத்தால் அந்த அச்சம் காரணமாக, வீதியிலிருந்து குறைந்தது 10 (அ) 15அடி உயரத்தில் வீட்டின் தளம் அமையுமாறு வீடுகள் கட்டப் பட்டிருக்கும். எனவே முகப்பு வாயில்கள் வரிசையாக நிறையப் படிகள் கொண்டதாக இருக்கும். முகப்பினுள் நுழைந்ததும் இடையே ஒரு நடைபாதையும் இருபுறமும் திறந்த வெளியும் அமைந்திருக்கும். அவற்றில் ஒரு பக்கத்தில் கிணறு இருக்கும். அடுத்துக் கீழ்ப்பத்தி இருபுறமும் அமைந்திருக்கும். அதனை ஒட்டி 'முகப்புத் திண்ணைகள்' 3 அடி உயரமுடையனவாகவும் 'பட்டக சாலைகள்' ஒன்றரையடி உயரம் உடையனவாகவும் இருக்கும். இருபுறத் திண்ணைகளிலும் அறைகள் அமைந்திருக்கும்.

முகப்பிலிருந்து வளவுக்குள் நுழையும் வாயிலில் பெரிய நிலையும் இரட்டை மரக் கதவுகளும் இருக்கும். இந்த நிலை கலையழகு மிக்க மரச் சிற்ப வேலைப்பாடு உடையதாக, நகரத்தார் தனித்தன்மையைக் காட்டும் வகையில் அமைந்திருக்கும். நிலையின் மேற்புறம் அமர்ந்த நிலையில் திருமகளும் இருபுறமும் மாலையேந்திய யானைகளும், யானைகளுக்கு இருபுறமும் வேறு சிற்பங்களும் புடைப்புச் சிற்பங்களாக அமைந்திருப்பது பெருவழக்கு. நிலையில் இருபுறமும் பக்கவாட்டில் எழுதகச் சிற்பங்களாகக் குதிரைவீரர்கள், யானைகள், யாளிகள், தேர்கள், பூமாலைகள், பூங்கொடிகள், கொடிக் கருக்குகள், இலைக் கருக்குகள் போன்றவற்றில் எவையேனும் அமைந்திருக்கும்.

வளவு

நகரத்தார் வீடுகளில் மிகுந்த சிறப்பிடம் பெறும் பகுதி வளவு ஆகும். நடுவில் நல்ல நீள அகலத்தோடு கூடிய திறந்த வெளி முற்றம் இருக்கும். அதனைச் சுற்றியுள்ள பகுதி சுற்றுப்பத்தியாகும். நடுவாசல் தளத்திலிருந்து ஒன்றரை அடி உயரம் உள்ள சுற்றுப் பத்தியின் விளிம்பு (ஓரடி அகலம்) வெள்ளைக் கற்களால் அமைந்திருக்கும். இவ்விளிம்பில் மேற்கூரையைத் தாங்கும் தூண்கள் வரிசையாக அமைந்திருக்கும். சுற்றுப்பத்தியின் நீள்பகுதிகள் இரண்டிலும் வரிசையாக அறைகள் அமைந்திருக்கும். இவற்றை 'வளவு வீடுகள்' என்றே நகரத்தார் குறிப்பிடுவர். இவை ஒற்றை அறைகளாக இருந்தால் 'ஒற்றை வீடுகள்' என்றும் இரட்டை அறைகளாக இருந்தால் 'இரட்டை வீடுகள்' என்றும் அழைக்கப் பெறும். சுற்றுப்பத்தியின் அகலப் பகுதியில் இருபுறமும் நடுவில் நடைபாதை விட்டுப் பட்டகசாலைகள் அமைந்திருக்கும். பட்டக சாலைகளிலும் அறைகள் இருக்கும். சுற்றுப்பத்தியின் நான்கு

மூலைகளிலும் மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகள் அமைந்திருக்கும்.

வளவு வீடுகள் அக்குடும்பத்தைச் சேர்ந்த புள்ளிகளுக்குள் பங்கு பிரித்துக் கொள்ளப்படுவதால், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பங்காளிகள் அனைவரும் ஒரு வளைவிற்குள் வாழ்ந்தனர் என்ற அடிப்படையில் உருவான **வளைவு** என்ற சொல்லே பின்னர் **வளவு** என மருவியது. குடும்பத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளின் போது இந்த வளவு நடுவாசலில்தான் முகூர்த்தக்கால் ஊன்றப்படும். சாந்தி சதாபிஷேகத்தின் பொழுது வாசலில்தான் மணை போடப்படும். தைப் பொங்கலன்று இவ்வாசலில்தான் கோலமிட்டுப் பொங்கலிடுவர். இறப்புச் சடங்குகளின் போது பந்தல் போடுவது, இறந்தவர் உடல் குளிப்பாட்டப் பெறுவது, பச்சை குத்துவது ஆகியவை இவ்வாசலிலேயே நடைபெறும்.[1] வளவு வீடுகளில் ஒன்றுதான் அக் குடும்பத்துக்குரிய சாமிவீடாகவும் வீட்டுப் படைப்புக்குரிய இடமாகவும் அமையும். அங்குதான் படைப்புக்குரிய பேழைகள் கட்டியிருக்கும். திருமணத்தின் பொழுது மணமகளின் தந்தைக்குரிய வளவு வீடே கலியாண வீடாக அமையும். அந்த வீட்டுக்கெதிரில் வளவுச் சுற்றுப் பத்தியில் கலியாணமணை போடுவதும் அரசாணிக்கால் கட்டுவதும் இடம் பெறும். இவை நகரத்தார் பாணி வீட்டில் வளவுக்குரிய முதன்மையைப் புலப்படுத்தும். பிற்காலத்தில் ஏற்பட்ட செழிப்பால் வளவு கவினுறு மண்டபமாக திராவிடக் கட்டடக்கலை நுணுக்கத்தின் விளக்கமாக எழும்பிற்று.

கலியாணக் கொட்டகை

வளவை அடுத்து, குறுக்கு வசத்தில் நீளமாக ஒரு கூடம் அமைந்திருக்கும். நடுவில் தூண்கள் அமைந்திருப்பதும் உண்டு. இது சிறப்பு நிகழ்ச்சிகளின் போது விருந்தளிக்கப் பயன்படுவதால் **'போஜனஹால்'** என்று அழைக்கப்பெறும். பெரும்பாலான வீடுகளில் இந்தக் கூடத்தின் விதானம் கலைநயம் நிறைந்த வேலைப்பாடுகள் மிகுந்ததாக இருக்கும். சில வீடுகளில் இத்தகைய கூடங்கள் இரண்டு அமைந்திருக்கும். முகப்புக்கும் வளவுக்கும் இடையே ஒன்று, வளவை அடுத்து ஒன்று. முகப்பை அடுத்திருக்கும் கூடங்கள் கூடுதல் கலைநய வேலைப்பாடு அமைந்ததாக இருக்கும். சில வீடுகளில் இக்கூடத்தில் மேல்மாடங்களும் (balcony) அமைந்திருக்கும். **ஒற்றைக்கூடம்** வளவின் வலப்புறம் அல்லது இடப்புறத்தில் நீளவாக்கில் அமைந்திருப்பதும் உண்டு.[2]

---

1. சோமலெ, செட்டிநாடும் – செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 18.

2. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 258

இரண்டாம் கட்டு

கலியாணக் கொட்டகையை அடுத்து வளவு போல நடுவில் ஒரு திறந்தவெளி முற்றமும் சுற்றுப்பத்தியும் உடையதாக இந்த இரண்டாம் கட்டு இருக்கும். வளவு போன்ற அமைப்பில் இரண்டாவதாக இக்கட்டு இருப்பதால் இதற்கு இரண்டாங் கட்டு என்று பெயர். இதன் சுற்றுப் பத்திகளில் ஏதேனும் ஒரு பக்கத்தில் அறைகள் அமைந்திருக்கும்.

அடுப்படி

இரண்டாங் கட்டை அடுத்து, குறுக்கு வசத்தில் நீளமாக அமைந்திருக்கும். பிள்ளைகளின் திருமணத்திற்குப் பிறகு அவர் களை வேறு வைத்து, அவர்களுக்குத் தனி அடுப்படி அமைத்துக் கொடுப்பது மரபு. அத்தகு தனி அடுப்படிகள் இந்த ஒரே கூடத்தில் வரிசையாக அமைந்திருக்கும். சில வீடுகளில் அடுப்படியும் நடுவாசலும் சுற்றுப் பத்தியும் கொண்ட அமைப்பாக இருப்ப துண்டு. சுற்றுப்பத்திகளில் வரிசையாக அடுப்படிகள் அமைந் திருக்கும். இவ்வாறு அமையும் அடுப்படிகள் 'மூன்றாம் கட்டு' என அழைக்கப்பெறும்.

அடுப்படிக்குப் பின்னால் தோட்டம் அமைந்திருக்கும். முற்காலத்தில் இவை மாடு, குதிரை கட்டும் இடமாகவும் பயன்பட்டன. முகப்பில் ஒரு கிணறு இருப்பது போகத் தோட்டத்திலும் ஒரு கிணறு இருக்கும். சில வீடுகளில் முகப்பு வாசற்படிகளின் இருபுறமும் ஒட்டுத் திண்ணைகள் எனப்படும் சிறிய திண்ணைகள் இருக்கும். இத்திண்ணைகளில் தூண்கள் இருப்பதும் உண்டு. வீட்டுக்கு வெளியே வீதியில் மிகச் சில வீடுகளில் தகரக் கொட்டகைகள் அமைத்திருப்பதும் உண்டு.

வீட்டின் முன்புறத் தோற்றம் பொலிவாக அமைய இருபுறமும் சிங்கங்கள் அல்லது யானைகள், கலசங்கள், தேர்போன்ற அமைப்புகள், பறவைகள் சுதையால் அமைக்கப்பட்டிருக்கும்.

முகப்பு வாசற்படிகள், நடையில் ஏறும் படிகள், ஒருகட்டுக்கும் அடுத்த கட்டுக்கும் இடையில் அமையும் படிகள், வளவு வீடுகளின் படிகள் ஆகியவை அனைத்தும் வெள்ளைக் கற்களால் அமைந்திருக்கும். முகப்பு, வளவு ஆகியவற்றின் நடையும் சுற்றுப் பத்தியின் விளிம்புகளும் வெள்ளைக் கற்களால் அமைந்திருக்கும்.

திண்ணைகள் அவற்றின் பக்கச் சுவர்கள் ஆகியவை இத்தாலியப் பளிங்குக் கற்களால் அழகுபடுத்தப் பெற்றிருக்கும். வளவுச் சுற்றுப்பத்திகள் ஆத்தங்குடிக் கற்களால் அமைக்கப் பெற்றிருக்கும். வளவுச் சுற்றுப் பத்தியின் பக்கச் சுவர்கள்,

பட்டகசாலைச் சுவர்கள், பட்டக சாலை, சுற்றுப் பத்தித் தளங்கள் ஆகியவை மிகவும் வழுவழுப்பான பூச்சுவேலை உடையதாக இருக்கும். இதற்குப் பயன்படுத்திய கலவையை **'முத்துவெள்ளை'** என்றும் அதில் **சுண்ணாம்பு, கருப்பட்டி, முட்டை வெள்ளைக் கரு** ஆகியவை கலந்திருந்ததாகவும் கூறுவர்.

ஒரு கட்டடக்கலையின் தொடர்ந்த வரலாற்றை அறிய தூண்கள் பெரிதும் துணை செய்கின்றன. பண்டைத் தமிழரின் வீடுகளில் இருந்த தூண்களை நெடுங்கால் மாடம், கொடுங்கால் மாடம், குறுங்கால் குடிசை, சேர்ந்த கால்களை உடைய குடில், முடக்காற் பந்தர், வண்காற் பந்தர், திரண்ட காலுடைய பந்தர் என்னும் செய்திகள் சங்ககால மக்களின் வீடுகளை அறிந்துக் கொள்ள உதவுகிறது.[1] செட்டிநாட்டு நகரத்தார் வீடுகளின் தூண்கள் கருங்கல், வெள்ளைக்கல், மரம் ஆகியவற்றால் அமைந்திருக்கும். கருங்கல் தூண்கள் பளபளப்புடையனவாகவும் மற்றத் தூண்கள் வேலைப்பாடுடையனவாகவும் அமைந்திருக்கும். வளவுச் சுற்றுப்பத்தித் தூண்களின் மேலுள்ள போதிகை அமைப்பு நாணுதல் பூ முனையோடு இருக்கும்.

நிலை, கதவு, சன்னல், சன்னல் கதவுகள் உத்தரங்கள் இவை அனைத்தும் பர்மா தேக்கு அல்லது தோதகத்தி மரங்களாலேயே அமைந்திருக்கும். வளவு வீடுகளின் நிலைகளும் சில வீடுகளில் கலையழகு மிக்க வேலைப்பாடுகள் உடையதாக இருக்கும். வளவு வீடுகளின் கதவுகள் அகலமான ஒற்றைக் கதவுகளாகவே அமைந் திருக்கும். இரட்டை வீடுகளில் உள்வீட்டுக்குத் தனிநிலையும் கதவும் உண்டு.

மேற்கூரை அமைப்பைப் பொறுத்தவரை நாட்டு ஓடே பயன்படுத்தப்பெற்றது. நீண்ட கைகளின்மீது மரப்பலகைகள் அடித்து அவற்றின் மீது நாட்டு ஓடுகள் பரப்பப் பெற்றிருக்கும். வளவின் மேற்கூரை **சாய்வு** (Slop) அமைப்பு உடையதாக இருக்கும். நான்கு மூலைகளிலும் **துத்தநாகத் தகரங்கள்** அமைத்து மழைத்தண்ணீர் முற்றத்தில் வந்துவிழ வகை செய்திருப்பர். அத்தகரங்களுக்குக் **'கூடல்வாய்த் தகரம்'** என்று பெயர்.[2] நடுவாசல் களில் விழும் மழைத்தண்ணீர் தரைக்குக்கீழ் அமைக்கப்பட்ட கழிவு நீர்க்குழாய்கள் வழியாக முன்புறமோ பின்புறமோ வெளியேற்றப் படும். முன்புறத்தில் உள்ள தூம்புகள் கலைநயத்தோடு அமைந் திருக்கும்.

---

1. டாக்டர் இராசு பவுன்துரை, செட்டிநாட்டு நகரத்தார் வீடுகளும் கட்டடக்கலை மரபும், மெய்யப்பன் பதிப்பகம், 2004, பக் – 67.
2. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 76.

முகப்புத் திண்ணைகள், வளவுப் பட்டகச் சாலைகள், வளவு வீடுகள் ஆகியவற்றின் மேற்கூரைகள் மாடியினுடைய தளங்களாக அமையும். எனவே இக்கூரைகள் இன்றைய கான்கிரீட் கூரைகளைப் போல அமைக்கப் பெற்றிருக்கும். உத்தரங்கள், மரக் கைகள் ஆகியவற்றின் மீது சிவு செங்கற்களை ஒட்டுக் கற்களாக ஒட்டி இக்கூரையை அமைப்பர். குழாய் ஓடுகளும் பயன்படுத்தப்படுவது உண்டு.

வளவின் இரட்டை வீடுகளுக்கு மேலே அமையும் மாடித்தளம் நீண்ட பத்தி ஒன்றும் அறைகளும் உடையதாக அமையும். ஒற்றை வீடுகளின் மேல்மாடி நீள்கூடமாக மட்டும் அமையும். கலியாணக் கொட்டகைகளுக்கு மேலும் முகப்புத் திண்ணை, வளவுப் பட்டக சாலைகளுக்கு மேலும் உள்ள மாடித்தளங்கள் நீண்ட அகன்ற கூடங்களாக இருக்கும். சில வீடுகளில் முகப்புத் திண்ணைகளுக்கு மேல் அமைந்துள்ள கூடம் வெளிப்புறச் சுவர் இல்லாமல் உப்பரிகை அமைப்பில் அமைந்திருக்கும்.

நகரத்தார்கள் இவ்வளவு பெரிய வீடுகள் கட்டியதற்குக் காரணங்கள் பல. கூட்டுக் குடும்ப அமைப்பில் ஒவ்வொரு புள்ளிக்கும் தனித்தனியே வாழிடங்களும் சரக்கறைகளும் அடுப்படிகளும் தேவை. அவற்றை நிறைவு செய்யும் வண்ணம் இவ்வீடுகள் அமைந்துள்ளன. இரண்டாவதாகப் பருவநிலை மாறுதல்கள் அனைத்திற்கும் ஏற்றமுறையில் வேறுவேறு பகுதி களைக் கொண்டதாக இவ்வீடுகள் வடிவமைக்கப் பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில் கூதிர்ப்பள்ளி, வேனிற்பள்ளி எனத் தனித்தனிப் பள்ளியறைகள் குறிப்பிடப் பெறுகின்றன.[1] இந்தப் பெரிய வீடுகளில் வளவுவீடு கூதிர்ப்பள்ளியாகவும் சுற்றுப்பத்திகளும் பட்டகசாலைகளும் வேனிற் பள்ளியாகவும் பயன்படுகின்றன. நகரத்தார் சமூகத்தில் அடிக்கடி குடும்பச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடை பெறுவது வழக்கம். ஆகவே, நிறையப்பேர் கலந்துகொள்ளும் வகையிலும் பெரிய விருந்துகள் நடத்தும் வகையிலும் தனித்தனிக் கட்டுகளைக் கொண்ட பெரிய வீடுகளைக் கட்டினர். நகரத்தார் இனத்தில் வீடுகள் அவர்களது பாரம்பரிய சமூகக் கௌரவச் சின்னங்களாகக் கருதப்படுகின்றன. செட்டிநாட்டில் கீழ்க்காணும் வீடுகள் கலைநயம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

நகரத்தார் சமூகத்தினர் எந்த நாட்டிலிருந்தாலும் தங்களது சொந்த ஊரில் இருக்கிற வீடு. அது கொடுக்கும் கௌரவமே தனிதான். திருமணம், குடும்ப விழாக்கள் என்றால் கூடுவது கலியாண மண்டபம் போலப் பிரமாண்டம் காட்டுகிற தங்கள் வீடுகளில்தான்.

1. பழந்தமிழர் குடியிருப்புகள், உலகத்தமிழ் மாநாடு விழாமலர், சென்னை, 1968

காரைக்குடியில் உள்ள ஆயிரம் ஜன்னல் வீடு மிகப் பிரபலமானது. ஒரு வீட்டிற்கு ஆயிரம் ஜன்னல்கள் இருந்தால் அதன் பிரமாண்டம் எப்படியிருக்கும் என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. காரைக்குடியில் உள்ள அழகப்ப செட்டியார் வீடு நல்ல உயரத்துடன் ஒரு கோயில் போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது. 1908-இல் கட்டப்பட்டது இது. கல்விக்காகப் பெருமளவு பணத்தையும், நிலத்தையும் வாரி வழங்கிய அழகப்ப செட்டியாரின் வீட்டினுள் அந்தக் காலப் பூ வேலைப்பாடமைந்த டைல்ஸ், தொழில் நுட்பம் காட்டும் தேக்கு கதவுகள் வளைந்த யானைத் தந்தங்களுக்கிடையே காந்தி படம், கூரையில் தொங்கும் சரவிளக்குகள் எனப் பிரமாண்டம் பளீரிடுகிறது. வீட்டின் சாவியின் எடையே ஒரு கிலோ இருக்கும்.

பிரமாண்டத்திற்குப் பெயர் போன இன்னொரு ஊர் கானாடு காத்தான். செட்டிநாட்டரசர் அண்ணாமலை செட்டியாரின் அரண்மனையின் அழகை வருணிக்க வார்த்தைகளே இல்லை. உள்ளே போகப் போக விரிந்து கொண்டிருக்கும் அரண்மனை, வெளிநாட்டுப் பளிங்குக் கற்கள் போட்ட திண்ணைகள் என்று வீட்டின் உள்ளே காணப்படும் வனப்புகள் தேரில் மட்டுமே காணமுடியும்.

அடுத்து குமுதம்க் எடிட்டர், எஸ்.ஏ.பி. அவர்களின் வீடு வெளியிலிருந்து பார்த்தால் தெரியாத பிரமாண்டம் உள்ளே சென்றதும் வியக்க வைக்கிறது. ஒரு கலியாண மண்டபத்தில் இருப்பதைவிடப் பெரிய போஜனஹால் பிரம்மாண்டமாக எல்லா வசதிகளுடன் விரிந்து காட்சியளிக்கிறது.[1]

செட்டிநாட்டுப் பகுதியில் இப்படிப் பிரமாண்டமாக வீடுகளை நகரத்தார்கள் கட்டியதற்கான காரணம் 1870 முதல் 1930 வரை நகரத்தார்களுக்குப் பொற்காலம் என்றே சொல்லலாம். பிரிட்டாஷ்காரர்களின் இம்பீரியல் வங்கியில் கடன் வாங்கி வெளிநாடுகளுக்குச் சென்று சற்று அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து வருமானம் ஈட்டினர். பர்மா, மலேசியா, இலங்கை, இந்தோனேஷியா நாடுகளில் வியாபாரத்திலும், வங்கியியலிலும் உச்சத்தில் இருந்த காலகட்டத்தில் தான் செட்டிநாட்டில் பெரும்பாலும் தனிக் கவனம் செலுத்தி சிறப்பாக வீடுகளைக் கட்டினர். அப்போது ஆங்கிலேய - இந்தியக் கலைப்பாணியில் உருவான வீடுகளுக்குப் பர்மா தேக்குகளைக் கொண்டுவந்து நிலைக் கதவுகள், இத்தாலியில் இருந்து மார்பிள்கள் என்று அழகுக்கு அழகு சேர்த்தனர்.

---

1. டாக்டர். எஸ்.ஏ.பி. ஜவஹர் பழனியப்பன், இணையற்ற இளையாற்றங்குடி, குமுதம் வெளியீடு, சென்னை, 2004, பக் 196 – 197.

நகரத்தாரின் வீடுகளின் நிலைக் கதவுகள் மேலிருக்கும் சூரியப் பலகை விசேஷமானது. இத்தகைய வீடுகளைக் கட்டுவதற்காகவே ஆசாரிகளும், ஸ்தபதிகளும் எழுவங்கோட்டை என்ற கிராமம் முழுக்க இருந்தனர். இக்கட்டடங்களுக்குத் தேயைான செங்கற்களை அனுப்ப ராஜபாளையத்தில் தனியாக கொத்தனார் தெருவே இருந்திருக்கிறது.

நகரத்தார்களுக்கு வீடு என்பது அந்தஸ்தின் அடையாளம். கல்யாணம், சடங்கு போன்றவற்றில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர் களாக இருந்ததும் அதைத் தங்களின் வீடுகளிலேயே நடத்த விரும்பியதும் இன்னொரு காரணம்.

வீடுகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பொடுசு என்ற மரமும், பர்மாவிலிருந்து தேக்கு, ரோஸ்வுட், இலுப்பை ஆகிய மரங்களையும் வரவழைத்துப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

நகரத்தார்கள் பரந்த மனதுடையவர்கள் என்பார்கள். அவர்களின் வீடுகளும் அவர்களின் மனதைப் போல பரந்து விரிந்தவைதான். நகரத்தார்களின் வீடுகள் கம்பீரத்தையும், அழகுணர்ச்சியையும், செல்வ வளத்தையும், பரந்த மனத்தையும் காட்டிக்கொண்டு இன்றும் கம்பீரமாக நிற்கின்றன.

⌘ ⌘ ⌘

1. டாக்டர். எஸ்.ஏ.பி. ஜவஹர் பழனியப்பன், இணையற்ற இளையாற்றங்குடி, குமுதம் வெளியீடு, சென்னை, 2004, பக் 199.

30. படைப்பு

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தல்" என வரும்

தொல்காப்பியப் பாடலில் இறந்தோரைத் தெய்வமாக்கி வழிபடும் பெரும்படை என்ற சொல் காணப்படுகிறது.

ஒவ்வொரு நகரத்தாரின் வீடுகளிலும் ஒரு தனியறை முன்னோர் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டிருக்கும். தங்கள் குடும்பத்தின் முன்னோரின் நினைவாக அவர்களது உடைமைகளை ஒரு பெட்டியில் வைத்து குடும்ப விழாக்கள், சடங்கு வழிபாட்டின் போது அவைகளை வெளியே எடுத்து வழிபடும் அறையாகும். தமிழகத்தில் நகரத்தார்களிடம் கள்ளர் இனத்தவர்களிடம் மட்டுமே இத்தகைய வழக்கத்தைக் காண்கிறோம். இந்த அறை ஓர் புனித இடமாக இவர்களால் கருதப்படுகிறது.[1] காப்பிய காலத்தினராகக் கருதப்படும் நகரத்தார்கள் தங்களின் முன்னோர்களை வழிபடுதல் என்ற சடங்கை **'படைப்பு'** என்ற பெயரில் மரபாகப் பின்பற்றி வருகின்றனர். இது இவர்களின் பண்பாட்டில் ஓர் இன்றியமையாத நிகழ்வு. இது இருவிதமாக **'வீட்டுப் படைப்பு, பொதுப் படைப்பு'** எனப் படைக்கப்படுகிறது. வாரிசுதாரர் குறைவாக இருக்கும்போது வீட்டுப் படைப்பாகவும், வாரிசுதாரர் எண்ணிக்கையில் அதிகரித்துப் பல்வேறு ஊர்களில் குடியேறிய பிறகு அனைவரும் கூடிப் படைக்கும்போது பொதுப் படைப்பாகவும் மாறுகிறது. ஆண் வழியினர் மட்டுமே படைப்புச் செய்கின்றனர். பெண்கள் ஏதாவது காரணத்திற்காக வேண்டிக் கொண்டு பிறந்த வீட்டிற்கு வந்து படைப்புச் செய்கின்றனர்.

வீட்டுப் படைப்பு

இறந்த முன்னோரின் வேட்டி, துண்டு, உருமால் (அ) புடவை ஆகியவற்றை ஓர் ஓலைப்பெட்டியில் வைத்து அதைப் படைப்பு வீட்டின் உத்திரத்தில் கட்டி வைத்திருப்பர். அப்பெட்டி 'பேழை' எனப்படுகிறது. படைப்பு நாள் அன்று பேழையைத் திறந்து துணியைக் கிணற்றடி அல்லது ஊருணியில் நனைத்துக் காயவைத்து

1. டாக்டர் இராசு பவுன்துரை, செட்டிநாட்டு நகரத்தார் வீடுகளும் கட்டடக்கலை மரபும், மெய்யப்பன் பதிப்பகம், 2004, பக் – 67.

எடுத்து வருவர். இச்சடங்கை வீட்டு ஆண்களே செய்கின்றனர். பெண்கள் படைக்கும் வீட்டின் வெளியே தனியாக அடுப்பு வைத்து உணவு சமைப்பர்.

இரவு காயவைத்த துணிகளைப் படைப்பு இடத்தில் வைத்துச் சந்தனம், குங்குமம் இடுவர். படைப்புக்குரியவர் ஆணாக இருந்தால் கவுடு, சிவகண்டி மாலையும், பெண்ணாக இருந்தால் கழுத்துரு, தாலி, கால்மிஞ்சி போன்ற அணிகளும் வைத்து வழிபடுகின்றனர். இவற்றோடு பால், பழம், எண்ணெய், சீயக்காய், மஞ்சள் மற்றும் அவர்களுக்கு விருப்பமான பொருள்களும் வைக்கப்படுகின்றன. பின்னர் இலையில் சாப்பாடு, உரிய வெஞ்சனங்களுடன் பரிமாறப்படுகிறது. வணங்கிய பின் படைத்த இலைகளில் வீட்டுப் பெரியவர்கள் சாப்பிடுகிறார்கள். படைத்துச் சாப்பிட்ட இலைகளை வெளியில் எறிவதில்லை. மறுநாளே வெளியில் எறிகின்றனர். பின்னர்ப் படைப்பு வீட்டுக் கதவைப் பூட்டிவிட்டால் மறுநாளே திறக்கின்றனர்.

சில வீடுகளில் மறுநாள் காலை நீச்சோறு படைப்பு (முதல்நாள் சாதத்தில் நீர்விட்டு வெங்காயம் போட்டுக் கலந்து வைப்பர்) படைக்கப்படுகிறது. இந்த நீர்சோற்றுப் படைப்பின் போது துவரம் பருப்பை அரைத்து நறுக்கிய காய்கறிகள் சேர்த்து மரக்கறிக்காய்த் தோசையும் படைக்கப்படுகிறது. இவ்வாறு சேர்த்துப் படைக்கும் போது இதைப் பேச்சு வழக்கில் **'நெய் சோற்றுப் படைப்பு'** என அழைக்கின்றனர். பிறகு படைப்புத் துணிகளை மடித்துப் பேழைக்குள் வைத்துக் கட்டிவிடுகின்றனர். சில சமயங்களில் புதிய துணிகள் வைக்க நேரும்போது பேழைக்குள் இருக்கும் பழைய துணிகளை முன்னர் யார் வைத்தார்களோ அவர்களே எடுத்துக் கொள்வதும் மரபாக உள்ளது. சில வீடுகளில் ஆண்டுதோறும் படைப்பது உண்டு. சில வீடுகளில் குடும்ப விழாக்களை ஒட்டிப் படைப்பது உண்டு. படைப்பு நாளில் காலையில் தங்கள் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று விபூதி தீர்த்தம் பெற்றுக் கொள்வர். இதையே பங்காளிகள் பல ஊரினர் கூடிப் பொதுப் படைப்பாக மேற்கொள்கின்றனர்.

பொதுப் படைப்பு

வெவ்வேறு ஊர்களில் குடியேறும் பங்காளிகள் படைப்புக் காகப் பிறந்த ஊரில் கூடி வழிபடுவர். இப்படி எண்ணிக்கையில் அதிகமான ஊர் பங்காளிகளின் பொதுப் படைப்புகள் நடக்கும் ஊர்கள் வருமாறு:

அரியக்குடி: அரியக்குடி, கண்டனூரைச் சேர்ந்த வைரவன் கோயில் பிரிவினர் - பொதுப்படைப்புப் படைக்கின்றனர்.

க. அளகாபுரி: அமராவதிப்புதூர், க. அளகாபுரியைச் சேர்ந்த பிள்ளையார்பட்டி நகரத்தார் **அக்கினியாத்தாள்** படைப்பும் - க. அளகாபுரி, புதுவயலைச் சேர்ந்த வைரவன் கோயில் பெரிய வகுப்பு நகரத்தார்கள் **ஆண்டாத்தாள்** படைப்பும் - க. அளகாபுரி, காரைக்குடி, புதுவயலைச் சேர்ந்த இளையாத்தங்குடி பட்டணசாமி பிரிவினர் **கருப்பர்** படைப்பும் - அரிமழம், க. அளகாபுரி, கானாடுகாத்தான், தேவகோட்டை, தேனிப்பட்டி, பலவான்குடி, பள்ளத்தூரைச் சேர்ந்த இளையாத்தங்குடி பட்டணசாமி பிரிவினர் **நாச்சாத்தாள்** படைப்பையும் படைக்கின்றனர்.

பி. அளகாபுரி

ஆத்தங்குடி : இவ்வூரில் வைரவன் கோயில் பிள்ளையார் வகுப்பு பங்காளிகள் கடியாப்பட்டி, சொ. புதூர், பள்ளத்தூர் பங்காளி களுடன் சேர்ந்து **பொதுப்படைப்புப்** படைக்கின்றனர். பிள்ளையார் பட்டிப் பங்காளியர் கண்டனூர் கோட்டையூர் பங்காளிகளுடன் சேர்ந்து **அக்கினியாத்தாள்** படைப்பும் - மாத்தூர் மணலூர் பிரிவினர், உ. சிறுவயல், கொத்தமங்கலம் பங்காளிகளுடன் சேர்ந்து **இராயாத்தாள்** படைப்பைப் படைக்கின்றனர்.

ஆவினிப்பட்டி: தேவகோட்டை, வலயப்பட்டி, ஆவினிப் பட்டியைச் சேர்ந்த மாத்தூர் குளத்தூர் பங்காளிகளால் **குப்பியப்பத்தாள்** படைப்பும் - வைரவன் கோயிலைச் சேர்ந்தவர்கள் **கட்டுச்சோத்துக் கருப்பையா** படைப்பையும் படைக்கின்றனர்.

இராங்கியம்: இராங்கியம், கண்டவராயன்பட்டி, குழிப்பிறை, கொப்பனாபட்டி பூலாங்குறிச்சி, விரையாச்சிலை, வேகுப்பட்டியைச் சேர்ந்த இளையாத்தங்குடி கழனிவாசல்குடி பிரிவினரால் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை **வளத்தியம்மன்** படைப்பும் - இலுப்பைக் குடியைச் சார்ந்த இராங்கியம், குழிப்பிறை, பனையப்பட்டி ஊர் நகரத்தார்களால் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை **அடைக்காத்தாள்** படைப்பும் - பல்வேறு ஊர்களைச் சேர்ந்த இளையாத்தங்குடி ஒக்கூருடையார் பிரிவினர் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆடிமாதம் பொன்னமராவதியில் **துர்க்கையம்மன்** படைப்பையும் படைக்கின்றனர்.[1]

இராயவரம்: கல்லல், தேவகோட்டை, நெற்குப்பை, புதுவயல் ஆகிய ஊர்களிலுள்ள இளையாத்தங்குடி கிண்கிணிக்கூருடையார் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை **தெய்வானை அம்மனுக்கு** 3 நாள்களுக்குப் படைப்புச் செய்கின்றனர். இரணியூர்க் கோயில் பங்காளிகள் இராங்கியம், உலகம்பட்டி, காரைக்குடி, குருவிகொண்

1. நூலாசிரியரால் நேரில் கள ஆய்வில் கண்டறியப்பட்டது.

டான்பட்டி, கொப்பனாபட்டி, செவ்வூர், மிதிலைப்பட்டி, வலையபட்டி பங்காளிகளுடன் சேர்ந்து 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை **செங்கிடாய் கருப்பருக்கு** 4 நாள்கள் படைப்புச் செய்கின்றனர். இரணியூர்க் கோயிலின் மற்றொரு பிரிவினர் கண்டனூர், கானாடு காத்தான், கொ. இலட்சுமிபுரம், கொத்தமங்கலம் ஆகிய ஊர் பங்காளிகளுடன் சேர்ந்து **காயாத்தாள்** படைப்பைப் படைக்கின்றனர். வைரவன் கோயில் தெய்வநாயகர் வகுப்பினர் ஆடிமாதம் முதல் வெள்ளி அன்று **அடைக்காத்தாளுக்கும், கருப்பையாவிற்கும்** படைப்பு நடத்துகின்றனர். இளையாத்தங்குடி கழனிவாசல் பங்காளிகள் **நல்லாத்தாளுக்கும், கருப்பையாவிற்கும்** படைக்கின்றனர். மாத்தூர் மணலூர் பிரிவினர் ஆடிமாதம் முதல் வெள்ளி அன்று **தேவியாரம்மன்** படைப்புப் படைத்து வருகின்றனர். கண்ணூர் பிரிவினர் சிறுகூடல்பட்டியில் **நாராயணசாமி** படைப்பு நடத்தி மறுநாள், வைரவன்பட்டி, மக்கமடை ஐயனாரைத் தொழுது, மூன்றாம் நாள் **முத்தாயி கிழவி** படைப்பு நடத்துகின்றனர்.

கண்டனூர்: ஆத்தங்குடி, கண்டனூர், கோட்டையூரைச் சேர்ந்த பிள்ளையார்பட்டி பங்காளிகளால் **அக்கினியாத்தாள்** படைப்பும் - வைரவன் கோயில் தெய்வநாயகர் வடகாட்டுப் பட்டியார் வகுப்புப் பிரிவினரால் **கருப்பர்** படைப்பும் - இலுப்பைக்குடியினரால் **முத்தழகி ஆயா** படைப்பும் - நேமம் கோயிலார் 2 வருடத்திற்கு ஒருமுறை **பொதுப்** படைப்பையும் செய்கின்றனர்.

கருங்குளம்: இவ்வூரில் உள்ள இளையாத்தங்குடி கழனிவாசல் பிரிவு பங்காளிகள் நேமத்தான் பட்டியைச் சேர்ந்தவர்களுடன் ஆடிமாதம் **பதினெட்டாம்படி கருப்பர்** படைப்பைப் படைத்து வருகின்றனர்.

காரைக்குடி: இங்குப் பிள்ளையார்பட்டிக் கோயிலாரால் **மெய்யாத்தா** படைப்பும் - மாத்தூர் அரும்பாக்கூருடையாரால் **மறத்திப்** படைப்பும் - இளையாத்தங்குடி ஒக்கூருடையாரால் **திருமாத்தா** படைப்பும் - நேமம் கோயிலாரால் **அக்கினியாத்தாள், சோணையா** படைப்பும் பொதுப் படைப்பாகப் படைக்கப் படுகின்றன.

கீழச்சிவல்பட்டி: இவ்வூரில் வைரவன் கோயிலார் ஆடிமாதம் முதல் திங்கள் அன்றும், நேமம் கோயிலார் ஆடிமாதக் கடைசி வெள்ளியிலும் **மாங்கல்யக்காரி** படைப்புப் படைக்கின்றனர். கீழச்சிவல்பட்டி, பி. அளகாபுரி, தேவகோட்டை, கண்டனூர், புதுவயல், க. அளகாபுரி ஊர்களைச் சேர்ந்த வைரவன் கோயில் பங்காளிகள் மாசிமாதம் **ஆண்டாத்தாள்** படைப்பை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை படைக்கின்றனர். சூரக்குடி நகரத்தார் ஆடி மாதம் **அழகாத்தாள்** படைப்பையும் - மாத்தூர் நகரத்தார்

மாசிமாதம் **கண்ணாத்தாள்** படைப்பையும் - சிறுகூடற்பட்டிப் பங்காளிகளுடன் பிள்ளையார்பட்டிக் கோயிலார் மாசிமாதம் **நாகம்மாள் செங்கிடாய் கருப்பர்** படைப்பையும் படைத்து வருகின்றனர்.

கொத்த மங்கலம்: இவ்வூரில் ஆத்தங்குடி, இராயவரம், கண்டனூர், கோட்டையூரைச் சேர்ந்த மாத்தூர் அரும்பாக்கூர் பங்காளிகள் சேர்ந்து **தாயாத்தாள்** படைப்பைப் படைக்கின்றனர். ஆத்தங்குடி, கொத்தமங்கலம், உ. சிறுவயலைச் சேர்ந்த மணலூர் பங்காளிகள் **இராயாத்தாள்** படைப்பைப் படைக்கின்றனர்.

கோட்டையூர்: ஆத்தங்குடி, காரைக்குடி, கோனாபட்டு, நேமத்தான்பட்டி, பள்ளத்தூர் ஆகிய இவ்வூர் இளையாத்தங்குடி கழனிவாசல் பங்காளிகள் ஆடி மாதம் **பூமண பிச்சாத்தாள்** படைப்பைப் படைத்து வருகின்றனர்.

கோனாபட்டு: ஆத்தங்குடி, பிள்ளையார்பட்டி பங்காளிகள் சேர்ந்து **பூமண பிச்சாத்தாள்** படைப்பையும் - இலுப்பைக்குடி, மாத்தூர் பங்காளிகள் **பொதுப் படைப்பையும்** - வைரவன் கோயில் பங்காளிகளில் துவார் குடும்பத்தார் மாசி மாதத்தில் **அடைக்காத்தாள்** படைப்பையும் படைத்து வருகின்றனர்.

சண்முகநாதபுரம்: இளையாத்தங்குடி ஒக்கூருடையார், பட்டணசாமியார், பெருமருதூருடையார், கழனிவாசல் குடியார் ஆகியோரும், மாத்தூர் உறையூர், அரும்பாக்கூர் ஆகியோர் தனித்தனியே பொதுப்படைப்பும், சூரக்குடி பங்காளியர் காரைக்குடி பங்காளிகளுடனும் சேர்ந்து தனித்தனியே **பொதுப் படைப்பும்** படைக்கிறார்கள்.

சிறாவயல்: இவ்வூர் இலுப்பைக்குடி பங்காளிகள் **பகச்சாலமூர்த்தி சிந்தாடி அம்மன்** படைப்பையும் பிள்ளையார்பட்டி பங்காளியினர் **அடைக்காத்தாள் கருப்பையா வள்ளியம்மை** படைப்பையும் - வைரவன் கோயில் பங்காளிகள் மகிபாலன்பட்டி ஊராருடன் **கருப்பர்** படைப்பையும் படைத்து வருகின்றனர்.

சிறுகூடற்பட்டி: பி. அளகாபுரி, கீழச்சிவல்பட்டி, சிறுகூடற்பட்டி, தேவகோட்டை ஆகிய ஊர்களைச் சேர்ந்த மாத்தூர் அரும்பாக்கூர் பங்காளிகள் தேவகோட்டையில் மாசி மாதம் **நயினப்பையா** படைப்புச் செய்கின்றனர். கீழச்சிவல்பட்டி, சிறுகூடற்பட்டி, பிள்ளையார்பட்டிப் பங்காளிகள் **நாகம்மை ஆயாள்** படைப்பைக் கீழச்சிவல்பட்டியில் நடத்துகின்றனர். வைரவன் கோயில் பங்காளிகள் இவ்வூரில் **அடைக்காத்தாள்** படைப்பை ஆடி மாதம் செய்கின்றனர். மாத்தூர் கண்ணூர் பிரிவைச்

சேர்ந்தவர்கள் சிறுகூடற்பட்டியில் **நாராயணசாமி கோயில்** படைப்பைப் படைத்து வருகின்றனர்.[1]

உ.சிறுவயல்: மாத்தூர், அரும்பாக்கூர் பங்காளிகள் கானாடு காத்தான் க.வெ. குடும்பத்தாருடன் **மாங்கல்யாத்தாள்** படைப்பையும் - இலுப்பைக்குடி பங்காளிகள் **பொதுப்படைப்பையும்** ஆடி மாதம் படைக்கின்றனர். ஆத்தங்குடி, உ. சிறுவயல், சொ. புதூர், ஆ. முத்து பட்டணத்தைச் சேர்ந்த மாத்தூர் மணலூர் பிரிவுப் பங்காளிகள் **அழகாத்தாள்** படைப்பைப் படைக்கின்றனர். காரைக்குடி, சண்முகநாதபுரம், உசிறுவயல், விராமதி ஆகிய ஊர்களைச் சேர்ந்த இளையாத்தங்குடி ஒக்கூர் பங்காளிகள் காரைக்குடியில் மாசி மாதம் **திருமாத்தாள்** படைப்பைப் படைத்துவருகின்றனர்.

செம்பனூர்: நேமம் கோயில் பங்காளிகள் இவ்வூரில் கல்லல் ஊரினருடன் சேர்ந்து நாலு ஆண்டுகளுக்கு ஒரு முறை **தீப்பாய்ந்த அம்மன்** படைப்பை 7 நாள்கள் பொதுப்படைப்பாகப் படைத்து வருகின்றனர்.

செவ்வூர்: இவ்வூரில் பூலாங்குறிச்சி, வேகுப்பட்டி, மிதிலைப்பட்டி, பனையப்பட்டி, நெற்குப்பை ஊர்களைச் சேர்ந்த சூரக்குடிக் கோயில் பங்காளிகளால் **சோணையன் படைப்பு** 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை சித்திரை மாதத்தில் 3 நாள்கள் நடத்தப்படுகிறது.[2]

தேவகோட்டை: இவ்வூரில் இளையாத்தங்குடி ஒக்கூர் பங்காளிகள் **அடைக்காத்தாள்** படைப்பையும் - பெருமருதூர் பங்காளிகள் **திண்ணப்பையா, பழனியப்பையா** படைப்பையும் - மாத்தூர் மணலூர் பங்காளிகள் **முத்தாத்தாள்** படைப்பையும் படைத்து வருகின்றனர். அரும்பாக்கூர் பங்காளிகள் பி. அளகாபுரி, கீழச்சிவல்பட்டி, சிறுகூடற்பட்டி ஆகிய ஊர் பங்காளிகளுடன் மாசி மாதம் **நைனப்பையா** படைப்பும் - இலுப்பைக்குடிப் பங்காளிகள் காரைக்குடி, கண்டனூர் பங்காளிகளுடன் தை மாதம் **பழனியப்ப செட்டி கருப்பாத்தான்** படைப்பும் படைத்துவருகின்றனர்.

தேனிப்பட்டி: இவ்வூரில் வைரவன் கோயில் பிரிவினரின் இரண்டு **பொதுப்படைப்பும்** - சூரக்குடிப் பங்காளிகளுடன் **பொதுப்படைப்பும்** - தேனிப்பட்டி, தேவகோட்டையைச் சேர்ந்த இரணியூர் கோயிலார் **பொதுப்படைப்பும்** - தேனிப்பட்டி, க.அளகாபுரி, புதுவயல் ஊர்களைச் சேர்ந்த இரணியூர் கோயிலார் **பொதுப்படைப்பும்** என மொத்தம் 5 படைப்பு வீடுகள் உள்ளன.

---

1. நூலாசிரியரால் நேரில் கள ஆய்வில் கண்டறியப்பட்டது.
2. செவ்வூர் சோணையன் கோயில், படைப்பு விழாமலர், தொகுப்பு, புலவரி பெரி. ஆறுமுகம், நெற்குப்பை, 1978.

நற்சாந்துப்பட்டி: இவ்வூரில் வைரவன் கோயில் கழனிவாசல் பிரிவினர் **சேவாத்தாள்** படைப்பையும் - பிள்ளையார்பட்டி நகரத்தார் **அழகி அப்பத்தாள்** படைப்பையும் - மாத்தூர் உறையூர் பிரிவினர் **வள்ளியப்பத்தாள்** படைப்பையும் - இளையாத்தங்குடி பெருமருதூருடையார் **இலட்சுமி அப்பத்தாள், உமையாள் ஆயாள், நல்லி அப்பத்தாள்** படைப்பு ஆகியவற்றையும் படைக்கின்றனர். நற்சாந்துப்பட்டி, வி. இலட்சுமிபுரம், கடியாபட்டி, குருவிகொண்டான்பட்டி, நேமத்தான்பட்டி, பள்ளத்தூர், பனையப்பட்டி, புதுப்பட்டி, விரையாச்சிலை, வேந்தன்பட்டி ஆகிய ஊர்களில் வாழும் இலுப்பைக்குடி நகரத்தார் இரண்டு ஆண்டுக்கொரு முறை **அடைக்கம்மை அப்பத்தாள்** படைப்பைப் படைத்து வருகின்றனர்.

நாட்டரசன் கோட்டை: இவ்வூரில் மதகுப்பட்டி, அலவாக்கோட்டை, நாட்டரசன் கோட்டை மாத்தூர் பிரிவினர் **சிவகாமியாத்தாள்** பொதுப்படைப்பை இரண்டு (அ) மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை படைத்து வருகின்றனர்.

நெற்குப்பை: ஆ. தெற்கூர், குருவிகொண்டான்பட்டி, நெற்குப்பை, வலையப்பட்டி ஊர்களைச் சேர்ந்த இரணியூர் கோயில் பங்காளிகள் 5 வருடத்திற்கு ஒருமுறை **மாங்கல்யக்காரி அம்மன்** படைப்பை ஆவணி மாதம் 3 நாள்கள் நடத்துகின்றனர். நெற்குப்பை, வேந்தன்பட்டி ஊர்களின் நேமம் கோயில் பங்காளிகள் 2 வருடத்திற்கு ஒரு முறை **உடையம்மைப் பாட்டி** படைப்பைத் தை மாதம் 3 நாள்கள் நடத்துகின்றனர்.

பலவான்குடி: இவ்வூரின் மாத்தூர் பங்காளிகள் ஆத்தங்குடி, தேவகோட்டை ஊரினருடன் சேர்ந்து ஆடி மாதம் **தேனாத்தாள்** படைப்பையும் - இரணியூர் கோயில் பங்காளிகள் சித்திரை மாதம் **ஆண்டாத்தாள்** படைப்பையும், ஏழூர் இரணிக்கோயில் பங்காளிகளும், இவ்வூர் இரணிக்கோயில் பங்காளிகளும் சேர்ந்து பள்ளத்தூரில் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை **அழகாத்தாள்** படைப்பையும் படைக்கின்றனர். வைரவன் கோயிலார் க. அளகாபுரி, கொத்தமங்கலம், சிறாவயல், நாச்சியாபுரம், நேமத்தான்பட்டி பங்காளிகளுடன் சேர்ந்து **பெரிய கருப்பண்ணசாமி** படைப்பையும் படைத்து வருகின்றனர்.

பள்ளத்தூர்: கடியாப்பட்டி, காரைக்குடி, கொத்தமங்கலம், கோட்டையூர், தேவகோட்டை, பலவான்குடி, பள்ளத்தூர், புதுவயல் ஆகிய ஊர்களைச் சேர்ந்த இரணியூர் கோயில் பங்காளிகள் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை **அழகாத்தாள்** படைப்பைப் படைத்து வருகின்றனர். வைரவன் கோயில் தெய்வநாயகர் பிரிவினர்

நாச்சாத்தாள் படைப்பையும் - நேமம் கோயில், சூரக்குடிக் கோயில் பங்காளிகளால் தனித்தனிப் பொதுப் படைப்புகளும் படைக்கப்படுகின்றன.[1]

புதுவயல்: இளையாத்தங்குடி பெருமருதூருடையார் பங்காளிகள், காரைக்குடி பங்காளிகளுடன் சேர்ந்து ஒரு பொதுப்படைப்பும், சூரக்குடிக் கோயில் பங்காளிகள், வைரவன் கோயில் பெரிய வகுப்பு, தெய்வ நாயகர் வகுப்புப் பங்காளிகள் ஆகியோர் தனித்தனியே பொதுப் படைப்புகள் படைத்து வருகின்றனர்.

பொன்னமராவதி: இளையாத்தங்குடி ஒக்கூருடையார் பங்காளிகள் இராங்கியம், வலையப்பட்டிப் பங்காளிகளுடன் சேர்ந்து 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை துர்க்கையம்மன் படைப்புப் படைத்துவருகின்றனர்.

மகிபாலன்பட்டி: சிறாவயல், சிறுகூடற்பட்டி, கண்டவராயன் பட்டி., புதுப்பட்டி, மகிபாலன்பட்டி ஆகிய ஊர்களின் வைரவன் கோயில் நகரத்தாரால் ஆடிமாதம் (அ) தை மாதம் கருப்பர் படைப்பு 3 நாள்கள் படைக்கப்படுகிறது.[2]

ஆ. முத்துப்பட்டணம்: ஆத்தங்குடியிலும், முத்துபட்டணத்திலும் உள்ள பிள்ளையார்பட்டி நகரத்தார் சேர்ந்து ஒரு பொதுப் படைப்பையும், மாத்தூர் மணலூர் பங்காளிகள் ஒரு பொதுப் படைப்பையும் படைத்துவருகின்றனர்.

எண்ணிக்கையில் குறைந்த ஓர் ஊர்ப் பங்காளிகள் படைப்பு நடத்தும் ஊர்கள் வருமாறு

அரண்மனைச் சிறுவயல்: இவ்வூரில் சூரக்குடி பங்காளிகள் பொதுப் படைப்புப் படைக்கின்றனர்.

அரிமழம்: பிள்ளையார்பட்டி வகையினராலும், மாத்தூர் மணலூர், அரும்பாக்கூர் பிரிவினராலும் தனித்தனியே பொதுப் படைப்புப் படைக்கப்படுகிறது.

அவலாக்கோட்டை: மாத்தூர் உறையூர் பிரிவினர் - நாச்சாத்தாள் படைப்பைப் பொதுப் படைப்பாகப் படைத்து வருகின்றனர்.

நா. அளகாபுரி: இவ்வூரைச் சேர்ந்தவர்கள் மாங்கல்யக்காரி என்ற தேனாத்தாள் படைப்பை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை சித்திரை வளர்பிறை வெள்ளிக்கிழமையில் தொடங்கி 3 நாள்கள் நடத்துகின்றனர்.

1 & 2 நூலாசிரியரால் நேரில் கள ஆய்வில் கண்டறியப்பட்டது.

பி. அளகாபுரி: பி. அளகாபுரி, இராயவரம், தேவகோட்டை ஊர்களைச் சேர்ந்த மாத்தூர் கண்ணூருடையார் பங்காளிகள் சிறுகூடற்பட்டியில் **நாராயணசாமி** கோயில் படைப்பையும் - க.அளகாபுரி, பி. அளகாபுரி, கண்டனூர், கீழச்சிவல்பட்டி, தேவகோட்டை, புதுவயல் ஆகிய ஊர்களைச் சேர்ந்த வைரவன் கோயில் பங்காளிகள் கீழச்சிவல்பட்டியில் **ஆண்டாத்தாள்** படைப்பையும் படைக்கின்றனர்.

கொ. இலட்சுமிபுரம்: இவ்வூர் மாத்தூர் உறையூர் பங்காளிகள் **ஆலத்துப்பட்டிப்** படைப்பையும், கொத்தமங்கலம், பள்ளத்தூர், கருப்பூர் பங்காளிகள் **வடிவியாத்தாள் - கருப்பையா** படைப்பையும் படைக்கின்றனர்.

வி. இலட்சுமிபுரம்: வைரவன் கோயில் நகரத்தாரால் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பட்டி, வலையப்பட்டி பங்காளிகள் சேர்ந்து **பாட்டிமார்** படைப்பைப் படைக்கின்றனர்.

உலகம்பட்டி: நெற்குப்பை, உலகம்பட்டி ஊரின் நேமம்கோயில் பங்காளிகள் 3 வருடங்களுக்கு ஒருமுறை ஆடி மாதம் **மாங்கல்யக்காரி** படைப்புப் படைக்கின்றனர்.

கடியாப்பட்டி: இளையாத்தங்குடி கழனிவாசல் பங்காளிகள் **பெரியசாமி** படைப்பையும் - மாத்தூர் அரும்பாக்கூர் பங்காளிகள் பொதுப் படைப்பையும் - வைரவன் கோயில் பிரிவினர் **கருப்பர்** படைப்பையும் செய்கின்றனர்.

கண்டவராயன்பட்டி: இளையாத்தங் குடிக் கோயிலின் கழனி வாசல் குடியின் ஒரு பிரிவினர் **பத்தினி நாச்சியம்மன்** படைப்பும், ஒரு பிரிவினர் **மேடைக்காளி** படைப்பும் - மாத்தூர் மணலூர் பிரிவினர் **தேவியாரம்மன்** படைப்பும் படைக்கின்றனர். பிள்ளையார் பட்டி நகரத்தார் **பத்தினி நாச்சியம்மன்** படைப்பைப் பொதுப்படைப்பாகப் படைத்துவருகின்றனர்.

கல்லல்: இவ்வூரில் வைரவன் கோயில் பிள்ளையார் வகுப்பினர் **ஒப்பிலிக் கருப்பர்** படைப்பும் - மாத்தூர் கருப்பூர் பிரிவினர் **பதினெட்டாம்படி கருப்பர்** படைப்பும் பொதுப் படைப்பாக படைக்கின்றனர்.

கல்லுப்பட்டி: இவ்வூரில் உள்ள பிள்ளையார்பட்டிப் பங்காளி கள் **மெய்யாத்தாள்** படைப்பைப் பொதுவாகப் படைத்து வருகின்றனர்.

காளையார் மங்கலம்: இவ்வூரில் சூரக்குடிப் பங்காளிகளால் **பொதுப்படைப்பு** 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை படைக்கப்படுகிறது.

கானாடு காத்தான்: இங்கு மாத்தூர் அரும்பாக்கூர் பிரிவினர் **வெ.ப. படைப்பையும்** - கருப்பூர் பிரிவினர் **பாப்பாத்தாள் படைப்பையும்** - இரணியூர் கோயிலார் **நாச்சாத்தாள்** படைப்பையும் படைத்துவருகின்றனர். இளையாத்தங்குடி பட்டணசாமிப் பிரிவினர் அளகாபுரியிலும், நேமம்கோயில் நகரத்தார் பள்ளத்தூரிலும், மாத்தூர் அரும்பாக்கூர் பிரிவினர் உ. சிறுவயலிலும் பொதுப்படைப்புப் படைத்துவருகின்றனர்.

குருவிகொண்டான்பட்டி: பிள்ளையார்பட்டிக் கோயிலாரும், வைரவன் கோயிலாரும் இவ்வூரில் **பொதுப் படைப்பு** படைக்கின்றனர்.

குழிப்பிறை: இவ்வூர் மாத்தூர் மணலூர் பிரிவினர் **தேவியாரம்மன் படைப்பு** - இளையாத்தங்குடி பெருமருதூருடையார் பங்காளிகள் **அடைக்காத்தாள்** படைப்பு, கிண்கிணிக் கூருடையார் பங்காளிகள் **அடைக்கப்பத்தாள்** படைப்பு ஆகியவற்றைப் பொதுப் படைப்பாகப் படைத்துவருகின்றனர்.

கொப்பனாபட்டி: இரணியூர் கோயிலாரால் **செங்கிடாய் கருப்பர்** படைப்பு இராயவரத்தில் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை படைக்கப்படுகிறது. இளையாத்தங்குடி கோயிலாரால் **வளத்தியம்மன்** படைப்பு இராங்கியத்தில் படைக்கப்படுகிறது.

சொக்கலிங்கம் புதூர்: வைரவன் கோயில் நகரத்தார் தை மாதம் **அடைக்காத்தாள்** படைப்பையும் - மாத்தூர் நகரத்தார் உ. சிறுவயல் பங்காளிகளுடன் சேர்ந்து ஆடி மாதம் **அழகாத்தாள்** படைப்பையும் படைத்துவருகின்றனர்.

சோழபுரம்: மாத்தூர் உறையூர் பிரிவுப் பங்காளிகள் **தீப்பாய்ந்தாள்** படைப்பினைப் பொதுப் படைப்பாகப் படைத்து வருகின்றனர்.

நேமத்தான்பட்டி: இளையாத்தங்குடி கழனிவாசல் நகரத்தாரால் **பதினெட்டாம்படி கருப்பர்** படைப்பும் - வைரவன் கோயில் நகரத்தாரால் நெய்வாசல் பட்டியில் **பெரியசாமி** படைப்பும் - நேமத்தான் பட்டியில் **அடைக்காத்தாள்** படைப்பும் படைக்கப்படுகிறது.[1]

பனையப்பட்டி: இவ்வூர் இரணியூர் கோயில் பங்காளிகள் தங்களது பொதுப்படைப்பாக **ஏகம்மை ஆயாள்** படைப்பை நடத்திவருகின்றனர்.

---

1. நூலாசிரியரால் நேரில் கள ஆய்வில் கண்டறியப்பட்டது.

பாகனேரி: ஆத்தங்குடி, கண்டனூர், காரைக்குடி ஆகிய ஊர்களைச் சேர்ந்த பிள்ளையார்பட்டி நகரத்தார் குடும்பத்தாரால் **அக்கினியாத்தாள்** வழிபாடு நடத்தப்படுகிறது.

பூலாங்குறிச்சி: பிள்ளையார்பட்டிக் கோயில் பங்காளிகள் **அடைக்காத்தாள்** வழிபாடு படைக்கின்றனர்.

மானகிரி: இவ்வூர் நகரத்தார்களால் ஆண்டுதோறும் ஆடி மாதம் **தேனாத்தாள்** படைப்பு நடத்தப்படுகிறது.

மிதிலைப்பட்டி: மாத்தூர் குளத்தூர் பிரிவினர் இரண்டு - இளையாத்தங்குடி கழனிவாசல் பிரிவினர் ஒன்று என மூன்று **படைப்பு வீடுகள்** இவ்வூரிலுள்ளன.

மேலைச்சிவபுரி: பிள்ளையார்ப்பட்டிக் கோயிலைச் சேர்ந்த முருகப்ப செட்டியார் வழியினரால் **பிச்சாத்தாள்** படைப்பும் - நேமம் கோயில் பங்காளிகளால் **சின்னம்மாள்** படைப்பும் படைக்கப்பட்டுவருகிறது.

வலையப்பட்டி: இவ்வூர் இளையாத்தங்குடி ஒக்கூருடையார் பிரிவினர் பொன்னமராவதியில் **துர்க்கை அம்மன்** படைப்பும் - பிள்ளையார்ப்பட்டி பிரிவினர் ஒரு **பொதுப்படைப்பும்** - மாத்தூர் மணலூர் பங்காளிகள் **பாப்பாத்தி அம்மாள்** படைப்பையும் படைத்துவருகின்றனர்.

விராமதி: இவ்வூரில் இளையாத்தங்குடி ஒக்கூர் பிரிவினர் வைகாசியில் **வள்ளியம்மை ஆயாள்** படைப்புப் படைக்கின்றனர். உ. சிறுவயல், சண்முகநாதபுரம், விராமதி, காரைக்குடியைச் சேர்ந்த ஒக்கூர் பிரிவினர் சிலர் காரைக்குடியில் **திருமாத்தாள்** படைப்பும், வேறு சிலர் தை மாதத்தில் **சாத்தம்மை ஆயாள்** படைப்பும் படைக்கின்றனர்.

வேந்தன்பட்டி: இவ்வூர் மாத்தூர் பிரிவினரால் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மூலங்குடி சென்று **பாப்பாத்தி அம்மாள்** படைப்பை 2 நாள்கள் படைக்கின்றனர். இலுப்பைக்குடிக் கோயிலாரால் ஒரு **பொதுப்படைப்பும்** - மாத்தூர் மு.அ.செ. படைப்பு வீட்டில் ஒரு **பொதுப் படைப்பும்** படைக்கப்படுகிறது.[1]

⌘ ⌘ ⌘

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 258

31. வட்டார வழக்குச் சொற்கள்

உலகின் எந்த நாட்டிற்கும் இரு விதமான மொழிகள் உள்ளன. ஒன்று பேச்சு வழக்கு, மற்றொன்று எழுத்து வழக்கு. நகரத்தார்கள் வணிகத்திற்காகப் பல நாடுகளுக்குச் செல்லும்போது தமது தேவைக்காக அம்மொழியை அறிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. எனினும் மிகக் குறுகிய காலத்தில் அந்த நாட்டின் வட்டார மொழிகளைக் கற்றுவிடுகின்றனர். எனினும் இவர்கள் தமது நாட்டில் வாழும்போது வெளியில் உள்ள நாடுகளின் வட்டாரச் சொற்களும், கலப்பும் குறைவாகவே இருக்கும். இவர்கள் தமது பேச்சு வழக்கில் பெரும்பாலும் இலக்கியச் சொற்களையே பயன்படுத்தி உள்ளனர். இந்த இயற்றமிழ் காலப்போக்கில் திரிந்து இருந்தாலும் அழகுடன் கையாளப்படுகிறது. தஞ்சைத் தமிழ், நெல்லைத் தமிழ், மதுரைத் தமிழ், கொங்குத் தமிழ் போன்று செட்டிநாட்டின் வட்டார வழக்குச் சொற்களும் இம்மக்களைத் தனித்து இனம் காணச் செய்கின்றன.

இவர்களின் பேச்சு வழக்கில் வழங்கப்படும் **ஊருணி,**

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

என்றும்,

ஏக்கறுதல் - விரும்புதல்,

"உடையார் முன்இல்லார் போல் ஏக்கற்றும்
கற்றார் கடையரே கல்லாதவர்"

என்றும், திருக்குறளில் காணப்படுகிறது. **அதைவினால்** - அல்லது, **எக்கு** - எனக்கு, **கெத்து** - செல்வாக்கு என்ற சொற்களை இலக்கியம் கூறுகிறது.

ஆகச்சே - இச்சொல் ஆகச் செய்தே என்ற பொருளில் பதிற்றுப் பத்தில் உள்ளது. **உக்கிப்போவது** - கவலையால் இளைத்துப் போவது என்ற பொருளில் இச்சொல் தொல்காப்பியச் சூத்திரத்தில் கையாளப்பட்டிருக்கிறது.

கண் பொருதவில்லை - இச்சொல்லை **'இமைபொருதா'** எனப் புறநானூறு குறிக்கிறது. **கருங்கை ஆள்** - தொழிலாளர் எனப் பொருள் கூறும் இச்சொல் "மரங்கொல் தச்சரும் - கருங்கைக்

கொல்லரும்" எனச் சிலப்பதிகாரத்தில் இந்திர விழாவூரெடுத்த காதையில் காணப்படுகிறது.

கெடக்கிறான் - இச்சொல்லை 'நின்றான் இருந்தான் கிடந்தான் தன் கேள் அலறச் சென்றான்' என நாலடியார் குறிக்கிறது. **சொளகு** - முறம். சங்க இலக்கியத்தில் காணப்படும் சுளகு என்ற சொல்லின் திரிபு.

'நாண்டுக்கிணு சாவது' - சீவகசிந்தாமணி நாணிட்டுக் கொண்டு என்று கூறுகிறது. **பொாக்குனு** - விரைந்து செயலாற்றுதல் என்று பொருள் தரும். இது 'பொருக்கென' என்பதன் திரிபு. "புண்டரீகக்கண் புரவலன் **பொருக்கென** எழுந்து" என்பது கம்பராமாயணக் கூற்று.

மொல்ல மாறி - முல்லை மாறி, முல்லை கற்புக்கு உரிய பூவாக அகத்திணை கூறுவதால் கற்பினை இழந்த பெண் என்றும், நாணயமில்லாதவர்கள் என்ற பொருளிலும் வழங்கப்படுகிறது. இந்த இலக்கியத்தமிழ் இன்றும் நடைமுறையில் உள்ளது.[1] பொதுவாகப் பல வழக்குச் சொற்கள் நகரத்தார் பேச்சில் வழங்கப்பெற்று வந்தாலும், சிறப்பான சில செட்டிநாட்டு வழக்குச் சொற்களும் அவற்றின் பொருள்களும் கீழே தரப்பெற்றுள்ளன.

அங்கிட்டு	-	அங்கு, இட்டு என்பது அசை. (மலையாளத்தில் அங்ஙோட்டு)
அங்ஙனே	-	அங்கே (அங்ஙனம்; ஙனம் = இடம்)
அடசல்	-	குப்பை கூளம்
அடசி	-	விலகி
அடிச்சரக்கு	-	நல்லசரக்கு
அண்ணாவி	-	உபாத்தியாயர், ஆசிரியர்
அந்தாசு	-	ஏறத்தாழ
அவலை, சவலை	-	அடுத்தடுத்துப் பிறந்த பால் மணம் மாறாப் பச்சிளம் குழந்தைகள்
ஆபாள சோபாளம்	-	சொத்து சுகங்கள்
ஆவிச்சுக்கிறது	-	தன் நலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளல்
இராப்பாடு பட்டது	-	இரவு பகலாக உழைத்தது
பகல் பாடு பட்டது	-	(ரப்பாடுபட்டது, ராச்சியத்திற்கு எட்டலை - பகப்பாடுபட்டது பட்டணத்திற்கு எட்டலை)

1. சோமலெ, செட்டிநாடும் – செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 512.

ஈமஞ்சாமம்	-	பொழுது வரையறையின்றி (ஈமம்-பகல், சாமம்-இரவு)
உக்கிராணம்	-	உணவுப் பொருள் பண்டசாலை
உண்டியக்கடை	-	சிறு வங்கி
உடந்தையில்	-	அந்தச்சமயத்திலேயே, உடனடியாக
ஊத்தை	-	அழுக்கு (ஊறி வருவது ஊத்தை)
எக்குத்தப்பு	-	அருமையாக, எதிர்பாராத விதமாக
எசகேடு	-	இடையூறு (இசை கெடுவது)
எனத்துட்டி	-	வாராக்கடன், எனத்துஷ்டி
ஏப்பை சாப்பை	-	எளிதில் எமாறுபவர்[1]
ஏவம்	-	இன்னொருவருக்காகப் பரிந்து பேசுவது; குற்றம்.
ஒரு தலைக்கு நிற்கிறான்	-	சண்டைக்கு நிற்கிறான்; பிடிவாதமாக இருக்கிறான்
ஒலுகு	-	மிகுதியான பஞ்சு உள்ள சதுர வடிவான தலையணை. திண்டு
கச்சடா	-	கீழ்த்தரமான
கங்காணம் பயிர்களை	-	நிலத்துக்கு உரியவர் கண்காண அறுவடை செய்தல்
கடவு	-	இடம்
கம்மல்	-	மப்பும் மந்தாரமும்
கமாம்சு	-	அலுவலகம்
கரச்சல்	-	தொந்தரவு, மனத்தைக் கரைப்பது
கருக்கல்	-	காலைச் சூரியன் தோன்றுதற்கு முந்திய பொழுது
கருமாயம்	-	விலை மிகுதி
கல்மிசம்	-	சந்தேகம்; மனஅழுக்கு
கல்வெட்டான ஆள்	-	பிடிவாதமான ஆள்.
கல்லை பண்ணுவது	-	கேலி செய்வது
குறளி	-	பொய் சொல்பவர்,
கூட்டெழுத்து	-	இருவரும் கணவனும் மனைவியுமாக வாழவேண்டும் என்ற இறையருள்

1. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், 1994, பக் – 114.

கூதரை	-	ஏமாளி
கூதல்	-	குளிர்
கொடசல்	-	கேலி
கொட்டாரம்	-	நெற்களஞ்சியம்
கொண்டு விற்பது	-	கொள்ளுதல் வாங்குதல்; வாங்கி விற்பது.
கோக்காலி	-	உயரமான நாற்காலி
கைபழகுதல்	-	வேலையில் பயிற்சி பெறுதல்
சல்லி	-	பைசா
சவட்டிப்பிட்டான்	-	துன்பப்படும்படி கசக்கிப் பிழிந்து வேலை வாங்கிவிட்டான்.
சமையல் பொறை	-	சமையல் கட்டு
சிலாத்தி	-	சல்லடை
சிறுவக்கட்டை	-	அழகின்மை
சீனாம்பரம்	-	அபூர்வம், ஓவியம்
சுருக்கா	-	சீக்கிரமாக
சுணக்கம்	-	தாமதம்
சூடிக்கை	-	சுறுசுறுப்பு (சூட்டிகை)
சொளகு	-	முறம்
சோமாறிவிட்டான்	-	நம்பிக்கை மோசம் செய்துவிட்டான்; திருடிவிட்டான்.
தடுமன்	-	நீர்க்கோவை
தப்பிலி	-	தவறான செயல்களில் ஈடுபடுபவர்
தபா	-	தடவை
தலைப்பில் வாங்கினது	-	முதன் முறையாக வாங்கியது
தாக்கல்	-	செய்தி
துப்புக் கெட்டவன்	-	திறமையில்லாதவன்
திருப்பூட்டுதல்	-	மணமகள் கழுத்தில் தாலி கட்டுவது
தொலைக்குப் போவது	-	பொருளீட்டுவதற்காக நெடுந் தொலைவிலுள்ள கடல் கடந்த நாடுகளுக்குச் செல்வது.
நடையன்	-	செருப்பு[1]
நாட்டாமுட்டி	-	சில்லறை வேலை (தரக்குறைவான)

1. சோமலெ, செட்டிநாடும் – செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 506.

நட்டமே நிற்றல்	-	ஒருவேலையும் செய்யாது வீணே நின்று கொண்டிருத்தல்
நிரவல்	-	சராசரி
நீக்குப் போக்கு	-	நலம் தீங்குகளை ஆராயும் திறன்.
நூலாம்படை	-	ஒருவகைத் தூசி / ஒட்டடை
பட்டுக் கிடப்பான்	-	திட்டுகிற சொல்; இறந்துகிடப்பான்
பதில் வெட்டு	-	போலி
பராபரிப்பேச்சு	-	வதந்தி
பின்னீடு	-	பிற்காலத்தில்
பிருகபிடித்தல்	-	கெஞ்சுவது / கிராக்கிபண்ணிக் கொள்வது
பெட்டியடி	-	பணம் புழங்கும் இடம், அலுவலகம்
போகணி	-	குவளை
மகிற ஊத்து	-	நிறையும்வரை ஊற்று
மறுக்கா	-	மறுகால், மற்றொரு முறை
மறுக்கொளி	-	பயித்தியம், மறுக்கொண்டவன்
மானம்பு	-	மஹார் நோன்பு
மிதப்பு	-	பணவசதி
முறி	-	ஒலையில் எழுதும் உடன்பாடு.
மேப்புசாப்பு	-	பெயரளவுக்கு
மேலைக்கு	-	அடுத்த ஆண்டில்
மக்காநத்து	-	மறுநாள்
லேசுபாசு	-	சாதாரணமாக, ஓரளவாக
வந்தியளா	-	(இப்போதுதான்) வந்தீர்களா? என்பதன் மரூஉ; வாருங்கள் என்பது இதன் பொருள்.
வறளி	-	பிடிவாதக்காரன்
வயிராவி	-	கோயில் வேலையாள்களுள் ஒருவன்
வல்லிசு	-	கறார்
வாவரசி	-	வாழ்வரசி
வங்கொறடு	-	வறட்டுப் பிடிவாதம், தரங்கெட்டவன்
விதரணை	-	பகுத்தறிவு, உலகியல் அனுபவம்
வெஞ்சனம்[1]	-	இது சமைக்கப் பெற்ற காய்கறியைக் குறிக்கும். வியஞ்சனம் என்பதன் மரூஉ.

1. பழ. அண்ணாமலை, ஊரும் பேரும், மணிவாசகர் பதிப்பகம், 1986, பக் 103.

வெரசா - விரைவாக

வெள்ளனா - அதிகாலையில்

இவை மட்டுமின்றிப் பேச்சுத் தமிழில் தனிச் சொற்களைப் பயன்படுத்தும் பழக்கம் நீண்டகாலமாக வழக்கிலிருப்பதும் சிறப்பாகும்.

விறகு என்பது பிணத்தை எரிக்கப் பயன்படுவதால் அதை **எரிதுரும்பு** என்றே கூறுகின்றனர். தாலிச்சங்கிலி அறுந்துப் போய்விட்டால் **தாலிச்சங்கிலி பெருகிவிட்டது** என்பர். திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்குப் போடப்படுவதைக் **கொட்டகை** என்றும், இழவு வீட்டில் போடப்படுவதைப் **பந்தல்** என்றும் குறிப்பிடுவர். அவ்வாறே மங்கல நிகழ்வுகளுக்குச் சென்று திரும்பும் போது **'போயிட்டு வரேன்'** என்றும், அமங்கல நிகழ்வுகளுக்குச் சென்று திரும்பும் போது **'போறேன்'** என்று மட்டும் கூறி விடை பெறுவர். சுவாமி விளக்கு, குத்து விளக்கு முதலியவற்றை அணைக்கும்போது விளக்கை **மலையேற்று** என்றோ, விளக்கை **நல்லாவை** என்றோ, **விளக்கைக் குளிரவை** என்றோ கூறுவது மரபாக உள்ளது. இப்படி எந்த நிகழ்ச்சிக்கும் அமங்கலச் சொற்களை இவர்கள் உபயோகிப்பதே இல்லை.[1]

எட்டுத் தொகை, பத்துப்பாட்டுப் போன்ற சங்க இலக்கியங் களிலும், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற காப்பியங் களிலும் காணப்படும் தமிழ்ச் சொற்கள் இன்றும் நகரத்தாரின் பேச்சு வழக்கிலிருப்பது அவர்கள் பண்டைய மரபைப் போற்றிப் பாதுகாப்பதை உறுதிப்படுத்துகிறது.

⌘ ⌘ ⌘

1. சோமலெ, செட்டிநாடும் – செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984, பக், 515.

32. நகரத்தார் பெயர் சூட்டும் மரபு

நகரத்தார் ஒரு சிறுபான்மைச் சமூகத்தினர்தான். ஆயினும் தமிழக வரலாற்றில் பெரும் பங்கு பெற்றுள்ளனர். சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி ஆகிய மூன்று காப்பியங்களும் நகரத்தார்களைப் பற்றிய காப்பியங்களே. நகரத்தார் சைவர்களாக மாறுவதற்கு முன் சமண - பௌத்த மதங்களில் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். சாத்தன், சாத்தப்பன், மாசாத்துவான், மாசாத்தியார், சாத்தம்மை போன்ற பெயர்கள் சமண - பௌத்த மரபை ஒட்டியவை ஆகும். நாட்டுக்கோட்டை செட்டியார் களிடையே தான் இப்பெயர்கள் அதிகம் காணப்படுகின்றன. இவர்கள் வேளாளர் குலப்பெண்களை மணப்பதற்கு முன் எவ்வளவு காலம் வரை சமண-பௌத்த மதங்களில் இருந்தார்கள் என அறிய முடியவில்லை. காலத்தின் கட்டாயத்தால் இவர்கள் சமணர்களாக இருந்தார்களா, பின்னர்ச் சைவர்களாக ஆனார்களா என்பது தெரியவில்லை. இன்றும் காணும் இவர்களின் சில பழக்க வழக்கங்கள் பௌத்த-சமண பாணியில் காட்சியளிக்கின்றன.

எனினும் இக்காலத்தில் சைவ சமய இறைப்பணியைக் கடமையாகக் கொண்டவர்கள் நகரத்தார்கள். அறம் என்றால் தருமம். விடை என்றால் எருது. இவ்வாறு தருமமே எருது வடிவில் அறவிடையாகச் சிவபெருமானுக்கு வாகனமாயிற்று. பெற்றம், ஆ, எருது, விடை, சே, காளை என்பன ஒரே பொருளுடைய பல சொற்கள். நாகு என்பது பெண் பாலான பசுவினைக் குறிக்கும்.

எனவே சிவபெருமான் பெற்றத்தை வாகனமாகக் கொண்டு ஆளுவதால் **பெற்றாச்சி** என்றும், ஆவினை விரும்பி (இச்சித்து) ஏற்றதால் **ஆவிச்சி** என்றும், ஆவினைத் தனக்கு உடமையாக ஏற்றதால் **ஆவுடையப்பன்** என்றும், சே என்ற பொருளில் **சேக்கப்பன்** என்றும், காளை என்ற பொருளில் **காளையப்பன்** என்றும், நாகு என்ற பொருளில் **நாகப்பன்** என்றும் அழைக்கப்படுகிறார்.

இதிலிருந்து செட்டிநாட்டில் வழக்கிலிருக்கும் பெத்தாச்சி, சேவுகன், சேக்கப்பன், காளையப்பன், நாகப்பன், ஆவிச்சி, ஆவுடையப்பன் போன்ற பெயர்கள் நகரத்தார்களுக்கு

சிவபெருமானின் மேல் உள்ள ஆழ்ந்த ஈடுபாட்டை உணர்த்துகின்றது. தவிர ஆணவத்தின் ஆற்றலை ஒடுக்கி வினையினைத் தீர்க்கவல்ல ஒரே தலைவன் சிவபெருமானே. எனவே **வினைதீர்த்தான்** என்ற அவரது பெயரினைச் செட்டிநாட்டில் இன்றும் பரவலாகக் காணமுடிகிறது. உயிர்கள் அனைத்தையும் தமக்கு அடிமையாகவும், உயிரற்ற ஜடப்பொருள்களை எல்லாம் தமது உடைமையாகவும் கொண்டவர் சிவபெருமான். இவ்வாறு அனைத்தையும் தமது உடைமையாகக் கொண்ட இறைவனின் திருப்பெயரே **உடையப்பன்** என்று செட்டிநாட்டில் வழங்கப்படுகிறது. தாங்கள் அன்றாடம் வழிபடும் இறைவனுக்கு உரிய இறைப்பணிகள் மற்றும் திருப்பணிகள் செய்வதுடன் தங்கள் குழந்தைகளுக்கும் இறைவனுடைய பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர்.

சிறப்பாக நகரத்தார் தாங்கள் வழிபடும் பெருந்தெய்வங்கள் - சிறுதெய்வங்கள் மற்றும் குலதெய்வங்களின் பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்டுவதைப் பண்டையநாள் தொட்டு பெருவழக்காகக் கொண்டனர். அப்பெயர்களை அழைக்கும் போதெல்லாம் இறைவன் பெயரைக் கூறும் புண்ணியமாகக் கருதினர். இதற்கு அவர்கள் தெய்வங்கள் மீது கொண்ட நீங்காத பக்தியும் நிறைந்த ஈடுபாடும் ஒரு காரணமாகக் கூறலாம். மேலும், குழந்தையின் ஐயா, அப்பத்தாள், ஆயாள் பெயர்களையும் சூட்டுவதை மரபாகக் கொண்டுள்ளனர்.

இவர்கள் ஆண்குழந்தைகளுக்கு

1. அண்ணாமலை
2. அருணாசலம்
3. அரங்கநாதன்
4. அழகப்பன்
5. ஆவிச்சி
6. ஆவுடையப்பன்
7. ஆண்டியப்பன்
8. ஆறுமுகம்
9. இராகவன்
10. இராமசாமி
11. இலக்குமணன்
12. இளையபெருமாள்
13. உடையப்பன்
14. உலகப்பன்
15. ஏகப்பன்
16. கணேசன்
17. கண்ணப்பன்
18. கதிரேசன்
19. கதிரவன்
20. காசிவிசுநாதன்
20. காளத்திநாதன்
21. காளையப்பன்
22. குமரப்பன்
23. கைலாசம்
24. கோபாலன்
25. கோவிந்தன்
26. சண்முகம்

27. சத்தியமூர்த்தி
28. சந்திரசேகரன்
29. சந்திரமௌலி
30. சபாபதி
31. சரவணன்
32. சிதம்பரம்
33. சிவசுப்ரமணியம்
34. சிவராமன்
35. சிவனடியான்
36. சினிவாசன்
37. சுந்தரமூர்த்தி
38. சுந்தரேசன்
39. சுப்பையா
40. செந்தில்நாதன்
41. சேக்கப்பன்
42. சேவுகன்
43. சேது
44. சேதுராமன்
45. சொக்கன்
46. சொக்கலிங்கம்
47. சோமசுந்தரம்
48. தியாகராசன்
49. திருநாவுக்கரசு
50. தேனப்பன்
51. நாகப்பன்
52. நாராயணன்
53. பழனியப்பன்
54. பெற்றாச்சி
55. மாணிக்கம்
56. மாணிக்கவாசகம்
57. மீனாட்சிசுந்தரம்
58. முத்து பழனியப்பன்
59. முத்து மாணிக்கம்
60. முத்தையா
61. முத்தப்பர்
62. மெய்யப்பன்
63. வடுகநாதன்
64. வள்ளியப்பன்
65. விசுவநாதன்
66. வினை தீர்த்தான்
67. வெங்கடாசலம்
68. வேலாயுதம்
69. வைரவன் என்றும் அழைக்கின்றனர்.

குலதெய்வங்களை வழிபடும் மரபாக

70. அடைக்கப்பன்
71. ஆண்டான்
72. ஆதினமிளகியான்
73. ஆவிச்சி
74. ஆவுடையப்பன்
75. இராக்கப்பன்
76. ஐயப்பன்
77. கருப்பாத்தான்
78. கருப்பையா
79. காடப்பன்
80. குப்பான்
81. சூராண்டான்
82. சடையப்பன்
83. சாத்தப்பன்
84. சின்னகருப்பன்
85. சின்னான்
86. செட்டியப்பன்
87. சேக்கப்பன்
88. சேவுகன்
89. சோலையப்பன்
90. சோமையா

91. தீர்த்தப்பன்
92. நல்லான்
93. நாகப்பன்
94. நாச்சியப்பன்
95. பிச்சப்பன்
96. பெரிச்சியப்பன்
97. பெரியகருப்பன்
98. பெரியண்ணன்
99. மாயாண்டி
100. முத்து கருப்பன்
101. முத்து வீரப்பன்
102. மூக்கன்
103. மூக்கையா
104. வீரப்பன்
105. வெள்ளையன் என்றும் அழைத்து வருகின்றனர்.

அதுபோலப் பெண் குழந்தைகளை இறைவியின் பெயரால்

1. அகிலாண்டேசுவரி
2. அங்கயற்கண்ணி
3. அலமேலு
4. அன்னபூரணி
5. ஆண்டாள்
6. உண்ணாமுலை
7. உமையாள்
8. உலகம்மை
9. ஏகம்மை
10. ஒப்பிலாள்
11. கண்ணம்மை
12. கண்ணாத்தாள்
13. கருப்பாயி
14. கல்யாணி
15. காந்திமதி
16. காளியம்மை
17. குப்பாயி
18. கோதை
19. கோமதி
20. சாத்தம்மை
21. சிகப்பி
22. சிட்டாள்
23. சிவகாமி
24. சீதா
25. செல்லம்மை
26. சேவாத்தாள்
27. சோலைச்சி
28. சௌந்தரம்
29. ஞானம்
30. தருமாம்பாள்
31. திருநெல்லை
32. தில்லை
33. தெய்வானை
34. தேனம்மை
35. தையல் நாயகி
36. நல்லம்மை
37. நாகம்மை
38. நாச்சம்மை
39. பார்வதி
40. பிச்சம்மை
41. பெத்தாள்
42. பெரிச்சி
43. பொன்னழகி
44. மணிமேகலை
45. மீனாட்சி
46. முத்தாத்தாள்
47. முத்தாயி

48. முத்துகருப்பி

49. மெய்யம்மை

50. வள்ளியம்மை

51. விசாலாட்சி என்றும் அழைத்து வருகின்றனர்.

அறுவகை சமயங்களாகப் போற்றப்படும் காணாபத்யம்-கணபதி, சைவம்-சிவபெருமான், வைணவம்-விஷ்ணு, சாக்தம்-அம்பிகை, கௌமாரம்-முருகன், சௌரம்-சூரியன் ஆகிய ஆறு வகை வழிபாட்டு தெய்வங்களுக்கு உரிய பெயர்களைத் தம் குழந்தை களுக்குச் சூட்டி மகிழ்ந்துள்ளனர். தவிர நகரத்தார் தம் குலதெய்வங் களின் பெயர்களை வைப்பதையும் பாரம்பரியமாகப் பின்பற்றி வந்துள்ளனர். இவர்களின் இச்செயல் சமய ஈடுபாட்டையும், இந்து சமயத்தில் அவர்கள் கொண்டுள்ள பற்றினையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. இது இவர்களின் தனித்தன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு தெய்வங்களின் பெயர்களைச் சூட்டுவதும், இல்லங்களிலும் கோயில்களிலும் தெய்வங்களைத் தொழுவதும், பழனி வைத்தீசுவரன் கோயில்களுக்கு நடைப்பயணம் மேற்கொள்வதும், காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துவதும் செல்லும் வழியில் அன்னதானம் செய்வதும், கோயில்களைப் பராமரித்துப் பாதுகாப்புச் செய்வதும், புதுப்பித்துத் திருப்பணி செய்வதும் நகரத்தார்களின் உயிரோடும் உணர்வோடும் தோய்ந்த செயலாக அமைவதைக் காணமுடிகிறது. இன்று பல நாகரிகப் பெயர்களால் அழைக்கப்பட்டாலும் மற்றப் பதிவுகளில் மரபுப் பெயர்களே வழங்கப்படுகின்றன.

⌘ ⌘ ⌘

33.வாய்மொழி இலக்கியம்

தமிழக நாகரிகத்தினை அறிய வரலாறு உதவுவது போலக் கிராமியப் பண்பாட்டை அறிய நாட்டுப்புறவியல் பெரிதும் உதவுகிறது. இவை ஏட்டில் எழுதா இலக்கியமாகக் காகிதத்தில் எழுதப்படாமல் செவிவழியாகக் கூறப்படுவது. இதில் வரலாறு, இறைஉணர்வு, முன்னோர் பெருமை போன்றவை இலக்கண சந்தம் இன்றியே சுவைபடப் பாடப்பட்டவை. இதில் நாட்டுப்புறப் பாடல்கள் என்பது பெரிதும் தனித்தமிழ்ப் பாடல்களாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது. அதிலும் அவை அந்த வட்டாரத் தமிழையே பெரும்பாலும் சார்ந்திருப்பது தனி அழகாகும்.

செட்டிநாட்டுத் தமிழை இரு விதமாகக் கூறலாம். பெண்கள் பயன்படுத்தும் இலக்கியச் சொற்கள். ஆண்கள் வெளிநாடுகளில் தங்கள் வாணிகம் புரியும் போது கற்ற சில தமிழ்ச் சொற்கள்.

இவற்றில் பெண்கள் தங்கள் இலக்கியத் தமிழில் பாடும் செட்டிநாட்டுத் தாலாட்டு, ஒப்பாரி இவை யாரும் புனைந்து எழுதாதவை. ஏட்டுப்படிப்பைக்கூடப் பெறாத காலத்திலேயே இலக்கிய மணத்துடன் இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்கள், புராணங்களைத் தம் குழந்தைகளுக்கு இளம் வயதிலேயே நற்பண்புகளுடன் வளரப் பாட்டிலே பாடும் இலக்கிய நயம் பல தலைமுறைகளாக வாய்மொழியாகப் பரவி இருக்கின்றன.

இவை ஆச்சிமார்களால் பொழுது போக்காகப் பாடப்படா மல், அவர்களின் பிறந்த வீட்டுப்பெருமை, புகுந்த வீட்டுக் குலப் பெருமை, தான் குழந்தைக்காகத் தவமிருந்து நோற்ற நோன்பு, பிறந்த குழந்தை தாய்க்குத் தரும் இன்பம், அதனால் தாய்க்கு ஏற்படும் பெருமிதம் போன்றவையும் வெளிப்படுகின்றன. தால்+ஆட்டு, தால் -நாக்கு, ஆட்டு-அசைதல், நாவை அசைத்துத் தாலாட்டுப் பாடும் பெண் தன் குழந்தைக்குப் பாடலிலேயே தன் உள்ளத்தில் பெருகும் உணர்வு களைக் கூறும் நுட்பமான அறிவும் அதனைப் பாடும் நயமும் பாராட்டத்தக்கது.

"ஆராரோ ஆராரோ ஆரிரரோ

கரும்போ சிறுதேனோ – கற்கண்டோ சர்க்கரையோ
தேனோ திரவியமோ தெவிட்டாத தெள்ளமுதோ

மாசி வடுவோ, வைகாசி மாம்பழமோ – கோடைப் பலாச் சுளையோ
குலை சேர்ந்த மாங்கனியோ – கொஞ்ச வந்த ரஞ்சிதமோ,
கண்ணுக்கு கண்ணெழுதி – கடைக் கண்ணுக்கு மையெழுதி,
தூங்காத கண்ணுக்குத் – துரும்பு கொண்டு மையெழுதி,
அயராத கண்ணுக்கு – அரும்பு கொண்டு மையெழுதி
உறங்காத கண்ணுக்கு – ஓலை கொண்டு மையெழுதி,
எங்கள்குறை தீர்க்க வந்த – இந்திரனும் நீதானோ?
மனக்கவலை தீர்க்க வந்த – மாமணியும் நீதானோ?
கலி தீர்க்க வந்த – கண்மணியும் நீதானோ?"

"யாரடித்தார் ஏன் அழுதாய்

அத்தை அடித்தாளோ அல்லிப் பூச் செண்டாலே?
பாட்டி அடித்தாளோ பால்வார்க்கும் கையாலே?
மாமா அடித்தாரோ மல்லிகைப்பூச் செண்டாலே?
தாத்தா அடித்தாரோ தாங்கிவரும் கையாலே?
ஆத்தா அடித்தாளோ அமுதூட்டும் கையாலே?
சித்தி அடித்தாளோ திலகமிடும் கையாலே?
வம்புக் கழுதானோ வாயெல்லாம் பால்வடிய
பாலுக் கழுதானோ பவளவாய் பொன் சொரிய
தேனுக் கழுதானோ செம்பவள வாயாலே
அடித்தாரைச் சொல்லிஅழு ஆக்கினைகள் செய்திடுவோம்
தொட்டாரைச் சொல்லிஅழு தோள் விலங்கு போட்டிடுவோம்."[1]

கீழேயுள்ள தாலாட்டுப் பாடல்களில் ஆச்சிமார்கள் பெருந் தெய்வங்கள் மட்டுமின்றிச் சிறு தெய்வங்களான கருப்பர், முன்னோடி, நாகர், சாத்தையா, வீரப்பர் போன்ற தெய்வங்களையும் தங்கள் குழந்தைகளுக்குக் காவலுக்கு அழைத்துப் பாடுகின்றனர். இப்பாடல்களின் மூலம் இளம் மனத்திலேயே இறையுணர்வை தூண்டுகின்றனர்.

"சங்கரா உன் காவல் – சாத்தையா உன் அடிமை
வீரப்பா உன் காவல் – வேறு வினை வாராமல்
சொக்கலிங்கம் உன் காவல் – சொப்பனங்கள் தட்டாமல்
கருப்பையா உன் காவல் – கண்ணேறு வாராமல்
கண்ணேறு வந்தால் – வெண்ணீறு இடுங்கள்"

ஆறிரண்டு காவேரி அதன் நடுவே ஸ்ரீரங்கம்
ஸ்ரீரங்க ரெங்கருக்கும் – ஆனைக்கா செம்புலிங்க நாதருக்கும்
திருமயத்து மெய்யருக்கும் – அங்கயற்கண்ணியர்க்கும்

1. அ. சேஷாத்திரி சர்மா, நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, மூன்றாம் பதிப்பு, 2003, பக், 232 – 233.

ஆலவாய்ச் சொக்கருக்கும் – அவர் இளைய தம்பியர்க்கும்
முத்துமுருகருக்கும் முடிதிரித்த சொக்கருக்கும்
பவளமுடி தரித்த பன்னிருவர் ஐவருக்கும்
நாக மடந்தையருக்கும் – நல்லதொரு முன்னோடிக்கும்
பொதுவாக விளையாண்ட – என் அய்யா புள்ளிமான் கண்ணோ நீ
தனதாய் விளையாண்ட – ஜாதிமான் கண்ணோ நீ?
ஆளப்பிறந்தவனுக்கு – ஆரார் துணையிருப்பார்
சாமந் துணையிருப்பார் சந்திரரும் சூரியரும்
ஒக்கத் துணையிருப்பார் கூடத் துணையிருப்பார்
கொற்றவாளீசுரரும் உமையாளும் பார்வதியும்
சேர்ந்து துணையிருப்பார் திருநெல்லையும்
வந்து துணையிருப்பார் மாமுனியும் தேவர்களும்
வெள்ளி துணையிருக்கும் – என் அய்யாவுக்கு – விடிமீனும் கூட இருக்கும்.

"காசியிலே பட்டெடுத்துக்
கப்பலிலே தொட்டி கட்டிம்
தொட்டி வரிந்து கட்டித்
துரைமகளைப் போட்டாட்டித்
தொட்டிலுக்கும் கீழே
துணையிருப்பாள் மீனாட்சி
கட்டிலுக்கும் கீழே
காத்திருப்பார் சொக்கலிங்கம்"

எனப் பாடி இறைவனும் - இறைவியும் எப்போதும் குழந்தையைக் காத்தருள் புரிவர் என்ற இறைநெறியைக் கூறுகிறாள்.

தான் குழந்தைப் பேற்றுக்காக ஸ்ரீரங்கம், கும்பகோணம், மதுரை போன்ற தலங்களில் நீராடி, காவிரிப்பூம்பட்டினத்தில் சங்கு முகம் (சங்கமம்) ஆடி, சாயவனம் பார்த்து, திருவெண்காட்டில் முக்குளம் தீர்த்தமாடியதைத் தாலாட்டில் நினைவு கூறுகிறாள்.

"ஸ்ரீரங்கம் ஆடி திருப்பாற் கடலாடி
மாமாங்கம் ஆடி மதுரைக் கடலாடி
சங்குமுக மாடி சாயாவனம் பார்த்து
முக்குளமும் ஆடி முக்தி பெற்று வந்த கண்ணே
திங்கள் தனைப் பணிந்து திருக்கேச்சுரம் ஆடி
தைப்பூசம் ஆடி தவம் பெற்று வந்த கண்ணே"[1]

மாவிளக்கை ஏற்றி நோன்பு நோற்ற விதத்தைக் கூறித் தன் வேதனையை மாற்ற வந்த குழந்தையைத் தாலாட்டுகையில்,"

1. சோமலெ, செட்டிநாடும் – செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984.

"இரும்பாலே ஊரணியாம்
இருபுறமும் தாமரையாம்
தாமரையின் நூலெடுத்துத்
தனிப்பசுவின் நெய்யுருக்கி
வாழெலையும் மாவிளக்கும்
வச்செடுத்த குஞ்சலரோ
தென்னெலையும் மாவிளக்கும்
சேர்த்தெடுத்த குஞ்சலரோ
குஞ்சலரோ அஞ்சலரோ
ஆடும் சிதம்பரரோ" *என்றும்,*

"காணிக்கை நேர்ந்தேன் கைநிறைந்த
பொன்னேர்ந்தேன்
மாணிக்கம் நேர்ந்தேன் மணிக்
குழந்தை வேணுமென்று
வாடிய நாளெல்லாம் வருந்தித் தவமிருந்து
தேடிய நாள்தன்னில் செல்வமாய் வந்த கண்ணே
மலடி மலடியென்று வையகத்தார் ஏசாமல்
மலடி என்ற சொல்லை மாற்றப் பிறந்தாயே" *என்றும்,*

"நாழிச் சிறு சலங்கை
நல்ல பவுன் பொன் சலங்கை
உழக்குச் சிறு சலங்கை
உசத்தி உள்ள பொன் சலங்கை
ஆருக்கு இடுவ மின்னு
தேடித் திரிகையிலே
எனக்கிடுங்க என்று சொல்லி
எதிர் கொண்டு வந்தவனோ
தனக்கிடுங்க என்று சொல்லித்
தவம் சொல்லி வந்தவனோ

"ஐந்து கடை புரள என் கண்ணா
உனக்கு அழகுகடை மார்புரள
கொஞ்சும் சடையாண்டி எனக்குக்
குழந்தைக்கலி தீர்த்தாண்டி
பிச்சைக்கு வந்தாண்டி எனக்குப்
பிள்ளைக்கலி தீர்த்தாண்டி
கண்ணா உனைக்காண
நான் போகாத கோயிலில்லை

எட்டாத கோயிலுக்கு
ஏணி வைத்துத் தீபமிட்டேன்
மனமது மகிழ்ந்து அமரன்
தந்தான் சிறுகுழந்தை"

என்றும் மகிழ்வுடன் கூறுகிறாள்.

கீழ்காணும் தாலாட்டுப் பாடல்கள் அம்மானின் செல்வாக்கை விரித்துக் கூறும்.

"சங்கினால் பால் கொடுத்தால்
சந்தன வாய் நோகுமென்று
தங்கத்தினால் சங்கு செய்து
தருவார்கள் தாய்மாமன்"

"அம்மான் அரண்மனைக்கு
அமைந்த மருமகனோ
மாமன் அரண்மனைக்கு
வாய்த்த மருமகனோ"

"போட்டு விளையாடப் பொன்னாலே அம்மானை
கட்டி விளையாடக் காசி சிண்டு மணி
வைத்து விளையாட வண்ணக் கிலுகிலுப்பை
ஒட்டி விளையாட ஒலியா ரயில் வண்டி"

"நெத்திக்குச் சிட்டி
நிழல் பார்க்கக் கண்ணாடி
காலுக்குத் தண்டை
கைக்குக் கணையாழி
கொண்டு வந்தும் காண்பாக
கோதைக்கிளிக் கம்மானார்"

"வையாபுரி யாறு வாசலிலே சித்தாறு
சித்தாத்துத் தண்ணி சிக்கடிக்கும் என்று சொல்லிக்
கொம்பால் இளநீரு கொண்டு வந்தார் உன்மாமன்
கறக்கப் பசு கொண்டு என்னரசே கன்னு கட்டத் தும்பு கொண்டு
உட்கார்ந்து பால்கறக்க என்னரசே முக்காலியும் பொன்னாலே
அணைச்சு பால்கறக்க என்னரசே அணைகயிறும் பொன்னாலே
காய்ச்ச பானை என்னரசே கோரிவிடப் பொன்னாலே பாத்திரமும்
இத்தனையும் கொண்டுவந்தார் என்னரசே உங்களம்மான்"[1]

என்றும் கூறுகிறாள். புகுந்த வீட்டுப் பெருமையைக் கூறும்போது,

1. பழ. அண்ணாமலை, ஊரும் பேரும், மணிவாசகர் பதிப்பகம், 1986, பக் 90 – 91.

"தெள்ளுதமிழ் வளர்த்த
தென்னவராம் பாண்டியர்க்குப்
பிள்ளைக்கலி தீர்த்த
பெருமானும் நீ தானோ
மாம்பழத்தைக் கீறி
வயலுக்கு உரம் போட்டுத்
தேன் பாய்ந்து நெல் விளையும்
செல்வ முளார் புத்திரனோ!
வெள்ளித்தேர் பூட்டி
மேகம் போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும்
அதிட்டமுள்ளார் புத்திரனோ!
சேற்றிலொரு செங்கழுநீர்
திங்களொரு பூப்பூக்கும்
நூற்றிலொரு பூவெடுத்து
முடிப்பார் மகனாரோ!
இன்னார் மகனோ?
இனியார் மருமகனோ?
தனதாய விளையாடும்
தமிழோ புனக்கிளியோ?
பொதுவாய் விளையாடும்
புள்ளிமான் நித்திரையோ!" என்றும் மகிழ்வுடன் கூறுகிறார்.

பாட்டனாரின் பெருமையைக் கூறும் கீழே உள்ள பாடல்களில் தம் முன்னோர் பொன்னால் முறம், மரக்கால் செய்து செல்வச் செழிப்புடன் வாழ்ந்த காலத்தையும், நந்தவனம் அமைத்து, பாடசாலை கட்டி, ஊருணி வெட்டி, கோயில்கள் கட்டி, தடையின்றி உணவு படைத்த தருமங்களைக் கூறி அதைத் தன் மகனும் தொடர்ந்திட இளம் வயதிலேயே தாலாட்டின் மூலம் மனத்தில் பதிய வைக்க முயலும் தாயின் ஆர்வம் செட்டிநாட்டுப் பாடல்களில் காணப்படுகிறது.

"பாட்டனார் எல்லையிலே
பட்டு வந்து விக்கிதென்று
பட்டுவெல மதிக்கும் பாண்டி
மன்னர் உன் பாட்டன்
முப்பாட்டான் எல்லையிலே
முத்து வந்து விக்கிதென்று
முத்து வெல மதிக்கும்
முடிமன்னர் உன் பாட்டன்"[1]

1. டாக்டர் ஆறு. அழகப்பன், தாலாட்டுப் பாடல்கள், பாரி நிலையம், சென்னை, 108.

"நந்தவனம் கண்திறந்து
நாலுவகைப் பூ எடுத்துப்
பூஎடுத்துப் பூஜை பண்ணும்
புண்ணியவார் பேரனோ
மலரெடுத்துப் பூஜை பண்ணும்
மகராஜா பேரனோ
அரும்பெடுத்துப் பூஜை பண்ணும்
அர்சுணவார் பேரனோ
வித்தகசாலை கட்டும்
வீமருட பேரனோ
பாடகசாலை கட்டும்
பாண்டியனார் பேரனோ
குளிக்கக் குளமும் வெட்டிக்
கும்பிடவும் கோயில் கட்டி
அசராமல் அன்னமிடும்
அர்சுணவார் பேரனோ?"

"வைகைநதித் தீர்த்தம் வந்து
அள்ளி விதை பாவி
அழகர்மலைத் தீர்த்தம் வந்து
எங்கும் விதைபாவி
ஏழுகடல் தீர்த்தம் வந்து
சரஞ்சரமாய் நெல் விளையும்
சன்னிதி போல் போர் ஏறும்
கொத்துக் கொத்தாய் நெல் விளையும்
கோபுரம் போல் போர் ஏறும்
கட்டுக் கலங்காணும்
கருதுழக்கு நெல் காணும்
அடித்துப் பொலி தூர்த்த
அதுவும் கலங்காணும்
பொன் சுளுகு கொண்டு
பொதி தூற்றி நிற்பாராம்
பொன் மரக்கால் கொண்டு
பொதியளந்து நிற்பாராம்"[1]

இன்று தாலாட்டில் பல புதிய பாடல்கள் தோன்றி இருப்பினும் இங்கு உள்ளவை பெரியவர்களால் நீண்ட காலமாகப் பாடப்படுபவை.

1. செ. அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

ஒப்பாரி:

அழுகை என்பது துக்கத்தை வெளியிடும் வழி. அளவுக்கு மீறி துக்கம் ஏற்படும்போது உணர்ச்சி மிகுதியால் அத்துக்கம் பாடல்களாகப் பீறிட்டு வெளிவருவதே ஒப்பாரி. தாலாட்டு என்பது செவிவழியாக, காலம் காலமாக ஒருவர் பாடி, அது தொடர்ந்து வந்திருக்கலாம். ஆனால், ஒப்பாரி தம் நெருங்கிய உறவை இழக்கும் போது தமக்கும் இறந்தவருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை நினைவில் கொண்டு எதிர்பாராமல் பாடப்படுவதாகும். செட்டி நாட்டில் இழவில் அழுதிடும் பெண் கூட இசையோடு அழுவது வியப்பிற்குரியது. அதிலும் உறவு முறைக்கேற்ப ஒப்பாரி பாடப்படும் போது, கேட்பவர் மனத்தையும் உருகச் செய்யும் உணர்வுக் கலவையாக அமைகிறது.

திருமணமான சில நாள்களில் இளம் வயதில் கணவனை இழந்து வாடும் பெண் தன் ஒப்பாரிப் பாடலில்,

"கல்யாண முகூர்த்தமென்று கடலேறிப் பாக்கு வைத்துச்
சீமந்தமென்று சீமையெங்கும் பாக்கு வைத்து
வாழை பிளந்து வளவெல்லாம் பந்தலிட்டுத்
தென்னைப் பிளந்து தெருவெல்லாம் பந்தலிட்டு
ஈர்க்கி பிளந்து இருகாதம் பந்தலிட்டு
மூங்கில் பிளந்து முக்காதம் பந்தலிட்டு
சாஸ்திர விதிப்படிக்கு சடங்குகளும் தான் நடத்தி
அரசாணி சுத்தி அழகாய் வருகையிலே
குலம் வாழும் பிள்ளையைக் கோரி எடுத்து
நல்ல கோதையின் கையில் குணமாகத் தந்தீரே
இத்தனையும் பெற்று இதுவாய் இருக்கையிலே
கட்டின காப்பு களைவதற்குள்
காப்புக் கழற்றி கால் மோதிரம் இடுவதற்குள்
சீராட்டு அன்றைக்குச் சீக்கென்று சொல்லி
சிவலோகம் சேர்ந்தீரே"

எனக் கதறுகிறாள்.

திருமணப் பந்தலிலேயே தன் கணவனை இழந்த பெண்,

"தாலி கொண்டு வந்த தட்டானும் போகலியே
மாலை கொண்டு வந்த வயிராவி போகலியே
சேலை கொண்டு வந்த சேணியனும் போகலியே
பந்தல் பிரிக்கலையே வந்த சனம் போகலியே

கல்யாணப் பானைகளும் கழுவிக் கவுக்கலையே
கட்டின தாலிகளும் களும்பு பிடிக்கலையே
பணியாரம் சுட்ட சட்டி பாதிமணம் போகலையே
அரசாணிக் கெதிக்கே அருகிருந்த தென்றும் இல்லை
முளைப்பாரிக் கெதிக்கே முன்னிருந்த தென்றும் இல்லை
சுண்டு விரல் கைப்பிடித்து சுத்தி வந்த தென்றும் இல்லை
கோலமிட்ட திண்ணையிலே குத்தவைத்த தென்றும் இல்லை
வருணத் தடுக்கிலே வந்திருந்த தென்றும் இல்லை
அரைமுளத் திண்ணையிலே அருகிருந்த தென்றும் இல்லை
கால்முளத் திண்ணையிலே கலந்திருந்த தென்றும் இல்லை
தச்சனடிச்ச தளம் பெரிய கட்டிலிலே
ஒக்க நெருக்கி ஒருநாளும் இருக்கலியே
கட்டிய சேலை இன்னும் கசங்கி மடியவில்லே
வச்சபூ இன்னும் வாசம் குறையவில்லே
மஞ்சள் கலையவில்லே மடிப்புக் குலையவில்லே
தாலிக்கு அரும்பெடுத்த தட்டானும் கண் குருடோ?
சேலைக்கு நூலெடுத்த சேணியனும் கண் குருடோ?
பஞ்சாங்கம் பார்க்க வந்த பார்ப்பானும் கண்குருடோ?
எழுதினவன் தான் குருடோ? எழுத்தாணி கூரிலையோ?"

எனப் புலம்புகிறாள்.

மற்றொரு பெண் தன் பெற்றோர் எத்தனை மாப்பிள்ளை களைப் பார்த்துச் சரியில்லை என்று சொல்லிப் பாகனேரி மாப் பிள்ளைக்கு மணமுடித்து வைத்ததைக் கூறுகிறாள்.

இலுப்பைக்குடிக் கோயில் மாப்பிள்ளையை இணக்கமில்லை என்றார்கள்.
வேலங்குடிக் கோயில் மாப்பிள்ளையை விவஸ்தையில்லை என்றார்கள்
சூரக்குடிக் கோயில் மாப்பிள்ளையை நம்பள் சொந்தமில்லை என்றார்கள்.
நேமம்கோயில் மாப்பிள்ளையை நமக்கு நேர்மையில்லை என்றார்கள்.
பிள்ளையார்பட்டிக் கோயில் மாப்பிள்ளையைப் பலமில்லை என்றார்கள்
வயிரவன் கோயில் மாப்பிள்ளையை வாயில்லை என்றார்கள்
இரணியூர் கோயில் மாப்பிள்ளையை நமக்கு இணையில்லை என்றார்கள்
மாத்தூர் கோயில் மாப்பிள்ளையை மணமில்லை என்றார்கள்
இளையாத்தங்குடி மாப்பிள்ளைக்கு இணக்கமென்று சொல்லிஎன்னை
ஏங்க வைத்துப் பார்த்தீரே! [1]
தேவகோட்டை மாப்பிள்ளையைத் திறமை இல்லை என்றீரே
தாணிச்சாவூரணி மாப்பிள்ளையைத் தரமில்லை என்றீரே
ஆராவயல் மாப்பிள்ளையை ஆதரவு இல்லை என்றீரே

1. ச.மெய்யப்பன் (பதி), நகரத்தார் கலைக்களஞ்சியம், 2002, பக், 90.

அமராவதிப்புதூர் மாப்பிள்ளையை அழகில்லை என்றீரே
அரியக்குடி மாப்பிள்ளையை அறிவில்லை என்றீரே
காரைக்குடி மாப்பிள்ளையைக் கருத்தில்லை என்றீரே
கோட்டையூர் மாப்பிள்ளையைக் குணமில்லை என்றீரே
அழகாபுரி மாப்பிள்ளையை ஆகாது என்றீரே
கண்டனூர் மாப்பிள்ளையைக் கடுச்சென்று என்றீரே
புதுவயல் மாப்பிள்ளையைப் பொருத்தமில்லை என்றீரே
கோனாபட்டு மாப்பிள்ளையைக் கூர்மையில்லை என்றீரே
ஆத்தங்குடி மாப்பிள்ளையை ஆத்தியில்லை என்றீரே
பலவான்குடி மாப்பிள்ளையைப் பணமில்லை என்றீரே
இலட்சுமிபுரம் மாப்பிள்ளையை இலட்சணமில்லை என்றீரே
ராயவரம் மாப்பிள்ளையை ராங்கியில்லை என்றீரே
கடியாப்பட்டி மாப்பிள்ளையைக் காசியில்லை என்றீரே
பாகனேரி மாப்பிள்ளைக்குப் பணமிருக்கு என்று சொல்லி பரிசம் வைத்துப் பார்த்தீரே அது இப்போ பாழாய் முடிந்துச்சே!

கணவனை இழந்து வெகுநாள்கள் ஆனபோதிலும் மனைவி தான் நடத்திய இல்லறத்தை நினைத்துப் புலம்பும் புலம்பலில்,

"தள்ளி இருன்னு சொல்லாத தங்கராசன் போயிட்டாரே
போயிருன்னு சொல்லாத பொன்னரசன் போயிட்டாரே
ஒதுங்கியிருன்னு சொல்லாத உத்தமரும் போயிட்டாரே
மன்ன பலகாரம் பண்ணி வெகுநாளாச்சே
மல்லியும் காப்பியும் போட்டு வெகுநாளாச்சே
தொக்குத் துவையல் அரைச்சு வெகுநாளாச்சே
வெல்லப் பணியாரம் பண்ணி வெகுநாளாச்சே
செண்பகப்பூ தோசை சுட்டு வெகுநாளாச்சே
தேயிலையும் காப்பியும் கலந்து வெகுநாளாச்சே
காலைக்கறி சமைப்போம் கால் எலும்பு சூப்பு வைப்போம்
வேளைக்கறி சமைப்போம் வெண்டைக்காய் சூப்பு வைப்போம்
சோறு சுடுதுண்ணா துகில் எடுத்து ஆத்தி வந்தேன்
பாலு சுடுதுண்ணா பட்டு எடுத்து ஆத்தி வந்தேன்"

என நினைவு கூறுகிறாள்.

இப்படி இல்லறம் நடத்தித் தான் பெற்ற குழந்தைகள் இறக்க நேர்கையில் விதியை நொந்து பாடும் புலம்பலில் தாய் படும் துயரம் தெரியும். இறந்தது பெண்குழந்தையாக இருந்தால்,

"வயிரநகை மங்கிவிடும் மாதழகு சோதிமின்னும்
பொடிவயிரம் மங்கி விடும் பொன்னழகு சோதி மின்னும்
மணிவயிரம் மங்கிவிடும் மாதழகு சோதி மின்னும்

சிறுவயிரம் மங்கிவிடும் சிட்டழகு சோதி மின்னும்
அழகை எழுதியவன் ஆயுள் எழுதலையே
வடிவை எழுதியவன் வயதெழுத மாட்டலையே"
பச்சைக்கிளி வளர்த்தோம்
பறக்கையிலே தப்பவிட்டோம்
குஞ்சுக்கிளி வளர்த்தோம்
கூவையிலே தப்பவிட்டோம்
ஈக் கடிக்க சம்மதியோம்
எமன் வரச் சம்மதித்தோம்
காற்றடிக்கச் சம்மதியோம்
காலன் வரச் சம்மதித்தோம்"

என்றும்,

"பொட்டுள்ள நெத்தியைப் புழுதி அரிச்சிரிச்சு
மையிட்ட நெத்தியை மண் கரையான் தின்னுரிச்சு
நீலமணிக் கண்கள் ரெண்டும் நிலக்கரையான் தின்னுரிச்சு
வைரமணிக் கண்கள் ரெண்டும் மண்கரையான் தின்னுரிச்சு
சுட்டாணிக் கையிரண்டும் கரையான் அரிச்சிரிச்சு
சிந்தாணி கையிரண்டும் செங்கரையான் தின்னுரிச்சு"

எனக் கதறுகிறாள்.

இறந்தது ஆண்குழந்தையாக இருந்தால்,

"கட்டி முத்தே ரத்தினமே கைநிறைந்த குஞ்சரமே
வச்ச முத்தே ரத்தினமே மடிநிறைந்த குஞ்சரமே
கன்னியரைக் கைப்பிடிச்சா கன பாவம் சுத்துமினு
மங்கையரை மாலையிட்டா மாபாவம் சுத்துமினு
தன் பாவம் கொண்டு தனி வழி போனானே"

"மார்பிலே தொட்டிகட்டி மடிமேல் நடை பழகி
வாதா வளர்ந்த மகன் வகை மோசம் செய்து
வனம் பாக்க போறமின்னான்.
தோளிலே தொட்டி கட்டித் தொடை மேல் நடைபழகி
சோக்காக வளர்ந்த மகன் துயரம்
வச்சு கண்ணசந்தான்"

என்று துயர்ப்படுகிறாள்.

செட்டிநாட்டில் முதல் குழந்தை பிறந்தவுடன் புதுமை எனும் சடங்கு நடத்துவது வழக்கம். அவ்வாறு குழந்தை பெறாமல் இறக்கும் இளம் பெண்ணுக்காகப் பாடும் பாடல் இது.

"பிள்ளை முதலாகலையே பெருமாளும் தேவியுமா
புதுமைதனைச் செய்யலையே, பேராசை தீரலையே

மாலையிட்ட ஓவியம் போல் மாது திருவயிற்றில்
மஞ்சள் நிழலாடலையே மாசேனை கூட்டி
மருந்து குடிக்கலையே
மஞ்சள் முதலாகலையே மன்னரும் தேவியுமா
மாராப்புக் கட்டலையே மனசாசைத் தீரலியே"

கணவனோடும், குழந்தைகளோடும் நன்றாக வாழ்ந்து சுமங்கலியாக இறக்கும் பெண்களை வாழ்வரசி என வாழ்த்தி ஒப்பாரி புனைவது செட்டிநாட்டில் வழக்கம். அப்படி இறக்கும் பெண்ணை,

"பொட்டோடே மையோடே
பிறந்த கெடியோடே
போடு சரப் பட்டோடே
பூந்தோப்பு மாலைவந்து
பொய்கையிலே நீர் மோந்து
பூமியிலே நீராடிப்
பொட்டியிலே பொன் கழற்றிப்
பொறுமை உள்ளார் கை கொடுத்துப்
பூவோட நீ கலக்க
புண்ணியங்கள் செய்த ஆத்தா!
மையோட பொட்டோடே
வளர்ந்த கெடியோடே
வங்காளப் பட்டோடே
மாந்தோப்பு மாலை வந்து
வையையிலே நீர் மோந்து
வாசலிலே நீராடி
மரவையிலே பொன்கழற்றி
மதிச்சாண்டார் கைகொடுத்து
மலரோடே நீ கலக்க
மாதவங்கள் செய்த ஆத்தா
அந்தி மல்லிப் பூவோடே
ஆரணங்குப் பட்டோடே
அருமை முத்துக் கையாலே
அனல் வாங்கிப் போன ஆத்தா
மல்லிகைப் பூவோடே
மடி பொசந்த பட்டோடே
வரிசை முத்துக் கையாலே
மலர் வாங்கிப் போன ஆத்தா
காடு மணமணக்கக்

கண்டாங்கி தீப் பறக்க
கட்டை எல்லாம் பால்வடிய
கட்டித் தீ கொண்ட ஆத்தா
செடிகள் மணமணக்கச்
சித்தாடை தீப் பறக்க
செடியெல்லாம் பால்வடிய
செல்லத் தீக் கொண்ட ஆத்தா" [1]

என வாழ்த்துகின்றனர்.

இவ்வாறு பாடப்படும் ஒப்பாரி பெண்களின் உணர்ச்சி இலக்கியம் மட்டுமின்றி ஆண்களாலும் பாடப்படுகிறது. துக்கத்தில் இருப்பவரின் நிலையை ஒப்புக்கொண்டு சுற்றி இருப்போரும் அதே உணர்வில் பாடும் பா (ஒப்பு-பா) ஒப்பாரி ஆகும். மேலும், ஒருவர் முதிர்ந்த வழியில் நன்றாக வாழ்ந்து இறந்தால் அவர்களின் குலப்பெருமைகள் ஒப்பாரியில் கூறப்படுகிறது. காலம் காலமாகச் சூழ்நிலைக்கேற்பப் பல கிராமங்களில் பாடப்படும் இந்த அவலச்சுவை நிறைந்த பாடல்கள் நமது பண்பாட்டை அறிய துணை செய்கின்றன.

பழமொழிகளில் செட்டியார்

உலகில் நெடுங்காலமாக வழங்கப்பட்டு வரும் சொற்றொடர் பழமொழி. முன்னோர் எச்சொல்லை எப்பொருளில் வழங்கினரோ அச்சொல்லை அப்பொருளிலேயே வழங்குவது மரபு. இதனை வடநூலார் **பிரயோக சக்தி** என்பர். பழமொழிகள் பெரும்பாலும் கற்றோராலும் உலகியல் அனுபவம் மிகுந்த அறிஞராலும் வழங்கப்பட்டது. கற்ற மூதறிஞர்களும்,முற்காலப்புலவரான திருவள்ளுவரும், பிற்காலப் புலவரான கம்பர் போன்றோர்களும் பழமொழிகள் பலவற்றைத் தம் நூல்களில் உரிய இடங்களில் அமைத்துள்ளனர் எனில் அவர்கள் பழமொழிகளை எத்தனை பெருமையுடையதாகக் கருதினர் என்பது விளங்கும். தமிழில் பழமொழி நானூறு, பழமொழி சதகம் போன்ற நூல்களும், அகப்பொருள் நூல்களும் பழமொழிகளைப் பெருமை மிக்கதாகக் கருதி இருந்தது புலப்படுகிறது. பல சொற்கள் விளக்க வேண்டியதை சிலச் சொற்களால் விளக்குவதே பழமொழி ஆகும் . இதனை வடநூலார் **'சேகோத்தி'** என்று கூறுவர். பொதுவாகச் செட்டியார் களைப் பற்றிய பழமொழிகள் அவர்கள் வாழ்வியலாகவே அமைந்திருக்கும்.

1. சோமலெ, செட்டிநாடும் – செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 1984.

செட்டி மகன் கப்பலுக்குச் செந்தூரான் துணை..

கெட்டாலும் செட்டி செட்டியே கிழிந்தாலும் பட்டு பட்டே

உண்பான் தின்பான் நயனப்பசெட்டி உடன் ஏறுவான் பெருமாள் செட்டி

கப்பலேறிப் பட்ட கடன் கொட்டை விற்றா தீரப்போகிறது

எண்ணிச் செய்கிறவன் செட்டி எண்ணாமல் செய்கிறவன் மட்டி

கையைச் செட்டியார் குறைத்தார் காலைக் கைக்கோளர் குறைத்தார்

செட்டியாருக்கு ஒரு காலம் சேவகனுக்கு ஒரு காலம்

இறைக்க ஊறும் மணற்கேணி ஈயப்பெருகும் பெருஞ்செல்வம்

செட்டிகூடிக் கெட்டான் சேணியன் பிரிந்து கெட்டான்

செட்டிக்கு ஏன் சென்ம சனியன்

செட்டி சிங்காரிப்பதற்குள்ளே பட்டணம் பறி போகிறது.

செட்டி படை வெல்லுமா சேற்றுத் தவளை கடிக்குமா

செட்டி பணத்தைக் குறைத்தான் சேணியன் நூலைக் குறைத்தான்

செட்டி போன இடமெல்லாம் வட்டம் காற்பணம்

செட்டி கெட்டால் பட்டு உடுப்பான்

கொண்டபடி விற்றால் கோடி இலாபம்

உப்பு வாணிகன் அறிவானா கர்ப்பூர விலை

வாழ்ந்த மகள் வந்தால் வண்ணத் தடுக்கிடு கெட்ட மகள் வந்தால் கிழிந்த தடுக்கிடு

இவ்வாறு நாம் வாழ்ந்த வாழ்வின் விமர்சனத்தைச் சொல்வன பழமொழிகள். வழிவழியாக வந்து நயம் பெற்ற மொழிவகையே பழமொழியாகும். தமிழ்நாட்டின் பல்வேறு பொருள்நிலைகள், பழக்க வழக்கங்கள், சமய பேதங்கள் முதலிய எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டாலும் எந்நாட்டு மரபிலும் முரண்படாத உண்மைகளை விளக்குவன.முக்கியமாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறன் கொண்டவை பழமொழிகள். உலகில் வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகத் தோன்றுவதுண்டு. அதுபோல அவர்களது பண்புகளும் மாறுபடுகின்றன. அப்பண்புகளின் அடிப்படையிலேயே பழமொழிகள் எழுகின்றன.

நிறைவாக இவ்வாறு நாகநாட்டிலிருந்து புறப்பட்டு தொண்டை நாடு, சோழநாடு, பின்னர் பாண்டி நாடு என வந்து

தமக்கென ஒரு நிலப்பகுதியை ஏற்படுத்தி, "நகரத்தார் என்றொரு இனமுண்டு - தனியே அவர்க்கொரு குணமுண்டு" என சொல்லும் அளவு முற்றிலும் தனித்தன்மைக் கொண்ட நல்ல பண்புகளை அடிப்படையாகக் கொண்டு நீண்ட நெடிய பாரம்பரியத்தை தக்கவைத்துக் கொண்டவர்கள். நகரத்தார்கள். இன்றளவும் தாம் கண்ணகி - கோவலன் மரபினைச் சார்ந்த காப்பியக்காலத்தவர் என்ற எண்ணத்தில் இருந்து மாறுபடாமல் சங்ககால மரபுகளை, வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றி வரும் குலம் நகரத்தார் குலமாகும்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மனையறம் படைத்த காதையில் கூறுவதைப் பின்பற்றித் தாம் காப்பிய மரபினர் என்ற நல்லியல்பை மறவாது திருமணமான மகனை வேறு வைத்தல் என்ற முறையில் தனித்து வாழ அனுமதிப்பார்கள். தன் சுக துக்கங்களை எதிர் கொள்ளவும் தானே தனித்து நின்று பொருள் ஈட்டி தன் குடும்பத்தைக் காக்கும் வல்லமையைப் பெறவும், தலைவனுக்குரிய தலைமைப் பண்புகளைப் பெறவும் இம்முறை வழிவகுக்கும். அதே நேரம் அவர்களை வழி நடத்தும் கடமையும் கொண்டவர்களாக இருப்பதால் தம் இல்லத்துக்குள்ளேயே வேறு வைத்தல் என்னும் முறையை இன்றும் கடைபிடித்து வாழும் சமுதாயம் நகரத்தார் சமுதாயம் மட்டுமே. தன் சமூக இளைஞர்களைத் தனக்கே உரித்தான கட்டு திட்டங்களோடு ஒரு வரம்புக்குள் வளர்த்து வருகிறது இச்சமூகம்.

"**திரைக்கடல் ஓடி திரவியம் தேடு**" என்ற வார்த்தையின்படி திரவியத்தை தேடி அதனை, திருப்பணிகளுக்கும், அறப் பணிகளுக்கும் பயனளிக்கும் விதமாகக் கொடையளித்து கடல் கடந்த நாடுகளிலும், அலைகடலுக்கு அப்பாலும் ஆலயங்கள் அமைத்தும், தமிழ்ப் பண்பைப் பரப்பியும் தமிழர்களின் நாகரிகச் சுவடுகளைப் பதித்தவர்கள். காசி முதல் கன்னியாகுமரி வரை அன்ன சத்திரங்கள், ஆலயத் திருப்பணிகள், பசுமடங்கள், வேதபாட சாலைகள், தண்ணீர் பந்தல்கள், பள்ளிகள், மருத்துவனைகள் என தாம் சேர்த்த பொருள்களை அறப்பணிகளுக்காக வாரி வழங்கும் ஒரே இனம் நாட்டுக்கோட்டை நகரத்தார் இனமாகும்.

இவர்கள் இறையுணர்வு மிகுதியாக உடையவர்கள். சைவ சமயத்தை தம் சமயமாக ஏற்றுக் கொண்டு சிவநெறி போற்றும் சீலர்கள். திருத்தொண்டர் புராணத்தில் வருகின்ற காரைக்கால் அம்மையாா நகரத்தார் மரபினர் ஆவார். அவரைப் பார்த்து "அம்மையே" என உலகம் உய்யும் வண்ணம் சிவபெருமான் அழைத்தருளினார். அதே இறைவன் மருதவாணனாகத் தோன்றி

நகரத்தார் மரபில் வந்த திருவெண்காடருக்கு மகனாக வளர்ந்தார். இவ்வாறு இறைவனே அம்மையே என அழைத்ததும், மகனாக வளர்ந்து தாய் - தந்தையரை மகிழ்வித்ததும் நகரத்தார் குலத்தினரை மட்டுமே என்பது மகிழ்வைத் தருகிறது. மருதவாணனை வியாபாரத்திற்கு அனுப்புவது துறவு மேற்கொள்வது என ஒரு பாரம்பரிய விழாவை இன்று வரை நடத்தி வருவது பாராட்டுக்குரியது.

உடலுக்கு ஊறு செய்யாத எளிய உணவு நகரத்தார் உணவு. செட்டி நாட்டுக்கென்றே தனிவகைப் பலகாரங்கள் உண்டு. அவைஇன்று தென்னகமெங்கும் சிறந்து இந்தியா முழுதும் மணம் பரப்புகிறது. வெள்ளைப்பணியாரம், பால் பணியாரம், கற்கண்டு வடை, படைப்புப் பணியாரம், கந்தரப்பம், மனக்கோலம் இந்த சமூகத்திற்கு மட்டுமே அமைந்த கைவண்ணம். அவர்களது இளங்குழம்பாகிய தண்ணீர்க் குழம்பு ரசத்திலும் சுவை மிக்கது. குறைந்த செலவில் சுவை மிக்க உணவுப் பண்டங்களை சமைப்பது செட்டிநாட்டுப் பெண்களின் தனித்திறமை எனக் குறிப்பிடலாம். வள்ளுவப் பெருமான் கூறும் **'நோக்கக் குழையும் விருந்து'** என்பதை நகரத்தாரின் விருந்தோம்பல் முறையிலே காணலாம்.

அதுபோன்றே அவர்கள் கணக்கெழுதும் முறையும் தனிச்சிறப்புடையது. வங்கிகள் அன்றைய கணக்கை அன்றே நடைமுறைப்படுத்துவதுபோல தினசரி இருப்புப் பார்த்து இருப்புக்கட்டுதல் நகரத்தார்களின் வணிக வழக்கமாகும். இதனால் அன்றாட வரவு - செலவு கணக்கை வகைப்படுத்தும் சீர்மை திட்டம் நகரத்தார்களின் நடைமுறைகளில் ஒன்றாக உள்ளது. கணக்கெழுதுதல், திட்டமிடுதல் போன்றவைகளில் திறமை மிக்கவர்களாக இருப்பதனால் மணவிழா, கோயில் விழா மற்றும் பொதுவிழா என எந்த விழாவானாலும் அனைத்தையும் முன்னதாகவே திட்டமிட்டு சிறப்பாக செயலாற்றுகின்றனர். எதனையும் திட்டமாகவே மதிப்பீடு செய்வது இவர்களின் இயல்புகளில் ஒன்று.

பர்மாவின் வீழ்ச்சிக்குப் பின்னர் காலங்கடந்து ஆங்கிலக்கல்வி கற்கத் தொடங்கினாலும் சுதந்திர இந்தியாவின் நாடாளும் உறுப்பினர்களாக, அமைச்சர்களாக, மாநகரத் தந்தையாக, பெருமை மிகு நீதியரசர்களாக, பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களாக என அரசியல், நீதித்துறை, கல்வித்துறை, ஆன்மிகம், நிர்வாகம், வர்த்தகம் என பல்வேறு துறைகளிலும் கால் பதித்து வெற்றிகரமாக வரலாறு படைத்த சமூகம் இந்நகரத்தார் சமூகம்.

இதழியல் களத்திலும் இச்சமூகத்தின் பங்கு அதிகம். தமிழகத்திலுள்ள பதிப்பகங்களில் அதிகமான பதிப்பகங்கள் நகரத்தாருக்குச் சொந்தமானது. நல்ல தமிழ் வளர்ப்பதை கடமையாகக் கொண்ட இவர்கள் பதிப்புப் பணியை தொழிலாகக் கருதாமல் தமிழுக்குச் செய்யும் தொண்டாகக் கருதி வருகின்றனர். இவர்களின் தமிழ்ப்பற்று பெருமை மிக்கது. செட்டிநாட்டுத் தமிழ் சிந்தைக்குரியது, செவிக்கினியது, தூயது. எழுத்தாளர்கள், சொற்பொழிவாளர்கள், பத்திரிக்கையாளர்கள், பதிப்பாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், நூலாசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், சிந்தனையாளர்கள் என இவர்கள் சமூகம் சமுதாயத்திற்கு வழங்கியவர்கள் அதிகம். இந்த சமூகத்தின் உயர்க்குணங்கள், பண்பு நலன்கள், செயல்திறங்கள், அக ஒழுங்கு, புற ஒழுங்கு, கல்வி, சான்றாண்மை, தலைமைப் பண்பு என பலவற்றை தன்னகத்தே கொண்ட, பாரம்பரியமாக ஒரு பெரிய குடும்ப நடைமுறைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் இச்சமூகம் சமுதாயத்தற்கு ஆற்றிய பணி மற்ற சமூகத்தினரை விட அதிகம் என்பதே உண்மையாகும்.

⌘ ⌘ ⌘

துணைநூற் பட்டியல்

1. அண்ணாமலை. பழ..செட்டிநாடு ஊரும் பேரும், மு.மு.முத்தையா ஆய்வுத்தளம், சென்னை: டிசம்பர், 1986.
2. அண்ணாமலை.பழ.. நகரத்தார் கணக்கியல் முறை, மு.மு.முத்தையா ஆய்வுத்தளம், சென்னை: பிப்ரவரி, 1988.
3. அண்ணாமலை.பழ., நகரத்தார் திருமண நடைமுறை, மு.மு.முத்தையா ஆய்வுத்தளம், பள்ளத்தூர்: 1984.
4. அண்ணாமலை.பழ., நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், பாரி நிலையம், சென்னை: டிசம்பர், 1994.
5. அழகப்பன்.ஆறு., டாக்டர், தாலாட்டுப் பாடல்கள், பாரி நிலையம், சென்னை: 108.
6. அறிவொளி, அ., இராமேஸ்வரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை: செப்டம்பர், 1999.
7. அன்னகாமு, செ., ஏட்டில் எழுதா கவிதைகள், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
8. ஆண்டியப்பன், ப.சொ., சிவகோத்திர வைசிய விருத்தி, முதற்பாகம், மினர்வா அச்சுக் கூடம், சென்னை: 1924.
9. ஆறுமுகம், பெரி., புலவர், செவ்வூர் சோணையன் கோயில் படைப்பு வீட்டு வரலாறு, நெற்குப்பை: 1978.
10. இராமநாதன் செட்டியார்.அ., வயிநாகரம், நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு, சென்னை: 1953.
11. இனியவன், (வே. திருவரங்கம்) நனிபுகழ் நகரத்தார், ஔவை மன்றம், சென்னை: டிசம்பர், 1990.
12. இராஜகோபாலன், எம்., மருந்தீஸ்வரர் எனும் நல் மருத்துவர் (திருவான்மியூர் ஆலய வரலாறு), பெசன் நகர், சென்னை: பிப்ரவரி, 2003.
13. இராசவேலு, சு., - திருமூர்த்தி, கோ.,தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை: ஜூன், 1995.
14. இராசவேல், சு., - சேஷாத்திரி, அ.கி., தமிழ்நாட்டுக் குடைவரைக் கோயில்கள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை: டிசம்பர், 2000.

15. இராசமாணிக்கம், தி., தமிழகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு. சென்னை: 1984.
16. இராசகோபால், சு., (பதி) ஆவணம், இதழ் - 9, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்: 1998, 2002.
17. இராசேந்திரன், ம., முனைவர், (பொ.பதி) தமிழ்நாட்டு வரலாறு. பாண்டியப் பெருவேந்தர் காலம், தமிழ் வளர்ச்சி இயக்ககம். குறளகம்.சென்னை: 2000.
18. இராமன், கே.வி., டாக்டர், பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை: 1977.
19. எஸ்ஸாரெம், நகரத்தார்களின் குலதெய்வங்கள், கோலாலம்பூர்: அக்டோபர், 1997.
20. கணபதி ஸ்தபதி, வை., சிற்பச் செந்நூல், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை: 1978.
21. கணேசன், சா., இராசராசன், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை: 1968.
22. கணேசன், சா., முதலியோர், (பதி) கையேடு, கலைக்காட்சிக்குழு, இரண்டாவது உலகத் தமிழ் கருத்தரங்கு மாநாடு, சென்னை: 1968.
23. கணேசன், சா., கம்பனடிப்பொடி, கட்டுரைக் களஞ்சியம், கம்பன் கழகம், காரைக்குடி: 1988.
24. கணேசன், சா., கம்பனடிப்பொடி, பிள்ளையார்பட்டித் தலவரலாறு. பிள்ளையார்பட்டி: 1955.
25. கதிரேசன் செட்டியார், சு.கதி., புதிய வட்டிக்கணக்குப் புத்தகம், 1928.
26. கருப்பையா, பழ., பட்டினத்தார் ஒரு பார்வை, மணிவாசகர் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, சென்னை: 2003.
27. காசிநாதன், நடன., (தொகு) தமிழர் நாகரிகம், முதல் தொகுதி, தொல்லியல் துறை வெளியீடு, சென்னை: 1994.
28. காசிநாதன், நடன., - சந்திரமூர்த்தி, மா., - இராசேந்திரன், பொ., கும்பகோணமும் மகாமகப் பெருவிழாவும், தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை: 1992.
29. காசிநாதன், நடன., (பதி) கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள், பகுதி - 2, தொல்லியல் துறை வெளியீடு, சென்னை.
30. கிரி, பி.வி., பதிப்பும் மதிப்பும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை: ஆகஸ்ட், 2005.
31. குருமூர்த்தி, சா., தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை: செப்டம்பர், 1974.

32. கோபால கிருஷ்ண காந்தி. இந்திய விவரச்சுவடி - தமிழ்நாடு. புதுக்கோட்டை மாவட்டம். தமிழ்நாடு அரசு: 1993.

33. சக்திவேல். சு., டாக்டர். தமிழ்மொழி வரலாறு. மணிவாசகர் பதிப்பகம். முதற்பதிப்பு. சென்னை: 1984.

34. சண்முகம். நாக., (பதி) இளையாத்தங்குடி அருள்மிகு நித்தய கல்யாணி அம்பிகை சமேத கைலாசநாதர் திருக்கோயில் குடமுழுக்கு விழாமலர். இளையாத்தங்குடி: 1985.

35. சண்முகம். சுப., செட்டிநாட்டில் தமிழ் வழக்கு. சென்னை: 1990.

36. சந்திரமூர்த்தி. மா., மாத்தூர்க் கோயில், மணிவாசகர் பதிப்பகம். சிதம்பரம்: ஆகஸ்ட், 1988.

37. சந்திரமூர்த்தி. மா., இலுப்பைக்குடி கோயில், மணிவாசகர் பதிப்பகம். சிதம்பரம்: ஆகஸ்ட், 1988.

38. சந்திரமூர்த்தி. மா., இரணியூர்க் கோயில். மணிவாசகர் பதிப்பகம். சென்னை: ஜூலை, 1990.

39. சந்திரமூர்த்தி. மா., நேமம் கோயில். மணிவாசகர் பதிப்பகம். சிதம்பரம்: பிப்ரவரி, 1991.

40. சந்திரமூர்த்தி. மா., பிள்ளையார்பட்டி. மணிவாசகர் பதிப்பகம். சென்னை: நவம்பர், 1992.

41. சந்திரமூர்த்தி. மா., சூரக்குடிக் கோயில். மணிவாசகர் பதிப்பகம். சென்னை: ஜூலை, 1994.

42. சந்திரமூர்த்தி. மா., வயிரவன் கோயில். மணிவாசகர் பதிப்பகம். சென்னை: பிப்ரவரி, 1996.

43. சந்திரமூர்த்தி. மா., வேலங்குடிக் கோயில். மணிவாசகர் பதிப்பகம். சென்னை: மார்ச், 2003.

44. சந்திரமூர்த்தி. மா., இளையாத்தங்குடி கோயில். மணிவாசகர் பதிப்பகம். சென்னை: ஜூன். 2004.

45. சந்திரமூர்த்தி. மா., - வேதாசலம். வெ., பராக்கிரமபாண்டிய புரம். கலைத்தாய் பதிப்பகம். சென்னை: 2002.

46. சந்திரமூர்த்தி. மா., தமிழ்நாட்டுச் சிவாலயங்கள். தொகுதி - 1. மணிவாசகர் பதிப்பகம். சென்னை: 2003.

47. சந்திரமூர்த்தி. மா., தமிழ்நாட்டுச் சிவாலயங்கள். தொகுதி - 2. மணிவாசகர் பதிப்பகம். சென்னை: 2004.

48. சந்திரமூர்த்தி.மா., கல்வெட்டுக்கள் காட்டும் உணவும்- பண்பாடும். நந்தி திங்களிதழ். சென்னை: 1975.

49. சந்திரமூர்த்தி. மா., கானாடுகாத்தான் பெரிய கோயில், கல்வெட்டு காலாண்டிதழ் எண் - 20, தொல்பொருள் ஆய்வுத்துறை. சென்னை.

50. சதாசிவ பண்டாரத்தார், சி.வை., கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை: நவம்பர், 2003.

51. சரஸ்வதி அமுதன். நகரத்தார் சமூக முறைகள், 'காதல்' மாத இதழ், (ஆசி) அரு. இராமநாதன், மார்ச், 1977.

52. சாமிநாதையர், உ. வே., என் சரித்திரம், உ.வே.சா. நூலகம், கலாஷேத்திரா, சென்னை.

53. சிதம்பரனார்., சாமி, பட்டினப்பாலை ஆராய்சி உரை. இலக்கிய நிலையம், இரண்டாம் பதிப்பு, சென்னை: 1973.

54. சிதம்பரம். சித., காவிரிப்பூம்பட்டினம் அருள்மிகு பட்டினத்தார் அற்புதத் திருவிழா - சிறப்பு மலர்: 1997.

55. சிங்கார வடிவேலன், அர., டாக்டர், சி.த.நடராசன், (பதி) இலுப்பைக்குடி திருக்கோயில் திருக்குட நீராட்டு விழாமலர், இலுப்பைக்குடி: 1985.

56. சீனி வேங்கடசாமி, மயிலை., உணவு நூல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை: செப்டம்பர், 2002.

57. சுப்பிரமணிய ஐயர், சதாவதானம் தனவைசியராகிய நாட்டுக் கோட்டை நகரத்தார் சரித்திரம், தஞ்சாவூர்: முதல் பதிப்பு. 1894, இரண்டாம் பதிப்பு, 1904.

58. சுப்பிரமணியன் செட்டியார், கு.பழ.சு.பழ., நகரத்தார் அறப்பட்டயங்கள், நெற்குப்பை: 1992.

59. சுப்பிரமணிய ஐயர், இலுப்பைக்குடி தலபுராணம், தெய்வம் அச்சகம், தேவகோட்டை: 1987.

60. சுப்பிரமணிய பிள்ளை, கா., இலக்கிய வரலாறு, (இரண்டாம் பகுதி) மறுபதிப்பு, சென்னை: 1958.

61. செந்துறை முத்து, புலவர்.,திருவையாறு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்: அக்டோபர், 1989.

62. சேஷாத்ரி சர்மா, அ., வரகூர், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, வானதி பதிப்பகம், சென்னை: முதற் பதிப்பு,ஆகஸ்ட், 1970., மூன்றாம் பதிப்பு மார்ச், 2003.

63. சொக்கலிங்கம்,தே., டாக்டர், நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் அறப்பணிகளும் வரலாறும், பார்வதி பதிப்பகம், காரைக்குடி: ஆகஸ்ட், 1997.

64. சொக்கலிங்கம், ராய., (தமிழ்க்கடல்) சி.வி.சிடி.வி. அறக்கட்டளை, சென்னை: 1966.

65. சோமலெ. அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப்பணிகள், சோமு நூலகம், சென்னை: மார்ச், 1979.

66. சோமலெ. இராமநாதபுரம் மாவட்டம், பாரி நிலையம், சென்னை: மே, 1972.

67. சோமலெ. செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை: டிசம்பர், 1984. இரண்டாம் பதிப்பு, டிசம்பர், 1999.

68. சோமலெ. செட்டிநாடும் தமிழும், பாரிநிலையம். சென்னை: டிசம்பர், 1954.

69. சோமலெ. தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா: 1975.

70. சௌந்தரபாண்டியன், எஸ்., டாக்டர், (பதி) நாவாய் சாத்திரம், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை: 1995

71. தமிழ்வாணன், லேனா., புதுக்கோட்டை மாவட்டம், சென்னை: 1986.

72. தமிழண்ணல், டாக்டர், தாலாட்டுப் பாடல்கள், செல்வி பதிப்பகம், காரைக்குடி.

73. தமிழண்ணல், பத்துப்பாட்டு (ஆய்வுரை), பெரிய நாயகி அச்சகம், மதுரை: 1975.

74. தேனப்பன், வ., டாக்டர், ஒன்பது நகரக் கோயில்கள், தேன் வள்ளியம்மை பதிப்பகம், தேவகோட்டை: டிசம்பர், 1990.

75. நடராச கவிராயர், வி., வடிவுடையம்மை பிள்ளைத் தமிழ், கலாரத்நாகரம், சென்னை: 1894.

76. நமசிவாயம்.சே., தமிழர் உணவு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை: 2003.

77. நாகசாமி, இரா., யாவரும் கேளிர், புக் வென்சர், சென்னை: ஜூன், 1973.

78. நாகசாமி இரா. - சந்திரமூர்த்தி, மா., தமிழகக் கோயிற் கலைகள், தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை: 1973.

79. நாகசாமி, இரா. - காசிநாதன், நடன. - தாமோதரன், கு. - ஹரிஹரன், ச., கல்வெட்டியல், தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை: 1972.

80. நாகசாமி, இரா., (பதி) கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை: பிப்ரவரி, 1968.

81. நாகசாமி, இரா., (பதி) தஞ்சைப் பெருவுடையார்கோயில் கல்வெட்டுக்கள், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை: 1974.

82. நாச்சியப்பன், நாகப்பா.,திருப்பரங்குன்றம் கோயில், வேற்கோட்டம், 1989.

83. நாராயணசுவாமி, எஸ்., (தொகு) படிமத் திருக்கோலங்கள் (பிரதிமா லட்சணம்),திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை: 1998.

84. பழநியப்பன், அழ., நகரத்தார் திருமணம், கையேடு, தேவகோட்டை ஏப்ரல், 1991.

85. பவுன்துரை, இராசு.,டாக்டர், செட்டிநாட்டு நகரத்தார் வீடுகளும் கட்டடக்கலை மரபும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்: டிசம்பர், 2004.

86. பவுன்துரை, இராசு., டாக்டர், தமிழகக் கோயிற் கட்டடக்கலை மரபு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்: மார்ச்,2005.

87. பழநியப்பன், கி., கோயில் மாநகர் (மதுரை மீனாட்சி சுந்தரர் திருக்கோயில் வரலாறு) மதுரை: 1963.

88. பாலுசாமி, நா., டாக்டர், பேராசிரியர், வாழ்வியற் களஞ்சியம், தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

89. பெரியசாமித் தூரன், ம.ப., கலைக்களஞ்சியம், தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை.

90. பரமகுரு, மரு., பறம்புமலை திருக்கொடுங்குன்றம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை: ஏப்ரல், 1992.

91. பாலசாரநாதன், சு., வித்துவான், (பதி) திருத்தலங்கள் வரலாறு, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், பெசன்ட்நகர், சென்னை: 1990.

92. பாலசுப்பிரமணியன். சி., தமிழ் இலக்கிய வரலாறு, பாரி நிலையம், சென்னை: 1992.

93. மகாலிங்கம், நா., (பதி) கொங்குத் திருக்கோயில்கள், அருள்மிகு பவானி சங்கமேசுவரர் திருக்கோயில் திருக்குட முழுக்குப் பெருவிழா வெளியீடு, செப்டம்பர், 2000.

94. மதனகல்யாணி, ச., (பிரெஞ்சிலிருந்து தமிழில்), புதுச்சேரி - ஒரு வணிகத்தள ஊரின் வரலாறு, பிரெஞ்சுக் கல்லூரி வெளியீடு, புதுச்சேரி: பிப்ரவரி, 1998.

95. முத்தப்ப செட்டியார், ஜெயங்கொண்டார் சதகமும் தேவி கோத்திரமும், மன்னவன் வெளியீடு, கீழச்சிவல்பட்டி: 1950.

96. மெய்யப்பன், ச., (பதி). முத்தய்யா, கரு., அருணாசலம், சபா., நகரத்தார் கலைக்களஞ்சியம், மெய்யப்பன் தமிழாய்வகம். சிதம்பரம்: மே, 2002.

97. மெய்யப்பன், ச., தமிழ்நாட்டை வளப்படுத்திய சமூகம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை: அக்டோபர், 1997.

98. மெய்யப்பன், ச., அண்ணாமலை அரசர். அண்ணாமலைப் பல்கலைக்கழக பவளவிழா வெளியீடு, மணிவாசகர் பதிப்பகம். சென்னை: சூலை, 2004.

99. மெய்யப்பன், ச., (பதி) பட்டினத்தார் பாடல்கள், மணிவாசகர் பதிப்பகம், மூன்றாம் பதிப்பு, சென்னை: செப்டம்பர்,2003.

100. மாணிக்கம், வ.சுப., டாக்டர், (பதி) நகரத்தார் அறப்பட்டயங்கள். நெற்குப்பை: அன்னதான மடம், 1961.

101. ராமசாமி, அ., டாக்டர், இந்திய விவரச்சுவடி தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு அரசு: 1990.

102. வள்ளி சொக்கலிங்கம், திருப்புத்தூர், தொல்பொருள் ஆய்வுத்துறை. சென்னை: 1981.

103. வேதாசலம், வெ., (பதி) ஆவணம் இதழ் - 17, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்: ஜூலை, 2006.

104. வைத்தியலிங்கன், செ., சிற்பக்கலை, மெய்யப்பன் பதிப்பகம். சிதம்பரம்: 2003.

105. ஜவஹர் பழனியப்பன், எஸ்.ஏ.பி., டாக்டர், இணையற்ற இளையாற்றங்குடி, குமுதம் வெளியீடு, சென்னை: ஜூன், 2004.

English Books

1. Abdul Majeed, A., Thulasiraman, D., Vasanthi, S., Alagankulam Excavation Report, Madras, 1994
2. Chandrasekhar,S., The Nagarathars of South India - The Macmillan Company of India Ltd., Chennai: 1980.
3. Chandrasekhar, S.,'The Nagarathars: The Land, The people and their Marriage (and population) Registration system' Population Review (Annamalai Nagar) vol.20. No.1 and 2. Jan-Dec. 1976.
4. S.Chandrasekhar, 'The Nagarathars the Chettiars' The Sunday statesman (New Delhi)30 October 1977
5. Chandramurthy, M., 'The Icon of Dakshinamurthy and cultural Milieu' paper presented in the Seminar on socio-cultural development, C.P.R. Institute of Indological Research, chennai, 31.1.1998.
6. Devakunjari, Dr., Madurai through the Ages, SAHER, Madras, 1979.
7. Iravatham Mahadevan, Ancient Tamil contact: Recent Epigraphical evidences, Journal of the Institute of Asian studies, Vol - XII, No.I, 1994.
8. James Harle, Temple Gateways in South India - The Architecture and Iconography of Chidambaram Gopuras, Faber and Faber, London, 1963.
9. Manickam, V.S.P., Dr, Collected Papers, Karaikudi: 1978.
10. Muthiah, Meenakshi Meyappan S., - Visalakshi Ramasamy, Chettiar Heritage, Chennai: 2002.
11. Naidu, B.V.N., 'The Nattukottai Chettiars and their Banking System' Rajah Annamalai Chettiars Commemoration volume, (Annamalai University, India - 1941).
12. Nagaswamy, R., (Editor) Damilica, (தமிழகம்), Dept of Archaeology, 1970.

13. Raman, K.V., Some aspects of Pandiyan History in the light of recent discoveries, 1972.

14. Nanditha Krishna, Dr., Sacred Tanks of South India, published by C.P.R. Environmental Educational Centre, Chennai, 2002.

15. Seshadri, R.K., A Swadeshi Bank from South India. Indian Bank; Madras: 1982.

16. Subramanian, N., Sangam Polity, Asia Publishing House, 1966.

17. Thurston, Edgar., - Caste and tribes of Southern India, Cosmo Publication, Delhi: 1909.

18. Thinakaran, A.J., Dr, The Second Pandian Empire (A.D. 1190-1312), Madurai, 1987.

19. Vishnu Varthan, C., Chettinad Heritage and Food Style - A project Report Submitted for the degree of Bachelor of Science, Department of Hotel Management Mohamed Sathak College, Sholinganallur, Chennai, 2005.

⌘ ⌘ ⌘

பிற்சேர்க்கை

புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகள்
கல்வெட்டு எண் - 802

இக்கல்வெட்டு செவலூர் பூமீசுவரர் கோயிலில் சுவாமி *சன்னிதி வடபுறம் சுவரில் காணப்படுகிறது.*

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம் - - - - - என் மெல் செல்லா நின்ற பாத்திப வருஷம் தை - - - - கல்வாசல்
2. நாட்டுக் குலசேகரபபுரத்து இளையாத்தக்குடி நகரத்தாற்கும் மெற்படி ஊர் கழனிவாசலுடையான்
3. செழியரையர் ஆவுடையாற்கும் கூடலூர் நாட்டுச் செவ்வலூர் ருடையார் திருப்பூமீசுவமுடைய நாயநார்
4. திருக்கொயீலில் ஸ்ரீபண்டாரத்தாரும் செவ்வலூர் ஊராக அமைந்த ஊரவரும பிறமாணம் பண்ணிக்
5. குடுத்தபடி இக்கொயிலுக்கு நாயகரும் சுப்பிறமண்ணியரும் நகரத்தார் ஏறியருளப்பண்ணி இந்த நாய
6. கற்கு நாச்சியாரை ஆவுடையர் ஏறியருளப் பண்ணுகையில் இந்நாயனார் பூசை திருநாளுக்கு இளை
7. யாத்தக்குடி நகரத்தார் தம்பிரான் வந்தான் என்று திருச்சின்னம் பணிமாறத்திங்கள் திவதத்துக்கு நக
8. ரத்தாற்கும் செழியதரையற்கும் ஒடுக்கும் குடுத்து திருக்காத்திகைக்கு பிறசாதமுங்கட்டி திருநாளுக்கு நகரத்தார்
9. ஒருநாளைக்குறையத்துப் பரிவட்டமும் கட்டிவித்துக் கொள்ளக்கடவார்களாகவும் நகரத்தாற்கு
10. எங்கள் மலையடி ஊரில் வடக்கில் தெருவில் இட்ட மனை நகரத்தாற்கு மனை --- ஆவுடையாற்கு மனை
11. - ஆக மனை முப்பதுக்கும் கீழ்பாறகெல்லை நாராசத்தெருவுக்கு மெற்க்கும் தென்பாறகெல்லை குச
12. வன் மதிளுக்கு வடக்கும் மெல்பாற்கெல்லை தெருவுக்கு ஊன்றின நாட்டுக்கல்லுக்கு கிழக்கும் வடபாற
13. கெல்லை கொட்டை மதிளுக்கு வடக்கில் பாறைக்குத் தெற்கும் ஆகஇசைந்த பெருநான்கெல்லைக்குட்பட்ட மனை
14. முப்பதும் சந்திராதித்தவற் செல்லக்கடவதாகவும் இடுகாடு இவர்களும் ஊராவரும் பொருந்தின இடத்திலெ இடக்கட
15. வொமாகவும் புழவரிலெ குடி ஏறினாலும்முப்பது மனையும் இட்டு நான்கெல்லையும் கல்நாட்டிக் குடுக்க கடவொமாக

16. வும் இப்படி பிறமாணம் பண்ணிக்குடுத்தொம் இளையாத்தக்குடி நகரத்தாற்கும் ஆவுடையாற்கும் ஸ்ரீபண்டாரத்தாரும் ஊ
17. ராக அமைந்த ஊரவரொமும் ஸ்ரீ பண்டாரத்தாரும் ஊரவரும் சொற்படிக்கு இந்தப் பிறமாணம் எழுதினென் இவ்வூற்கண
18. க்கு இளங்காவுடையான் பிரகட்கண்டவெளான் எழுத்து இது

கல்வெட்டு எண் - 854

இக்கல்வெட்டு திருமெய்யம், இராங்கியம் பூமீசுவரர் கோயிலின் சுவாமி சன்னிதி தென்புறச் சுவரில் காணப்படுகிறது.

1. சுபத்தி ஸ்ரீ சகாத்தம் - - - - - இதன்மெல் செல்லா நின்ற காரவருஷம். . . . .
2. கல்வாசல் நாட்டு இளையாத்தக்குடியான குலசெகரபுரத்து காளையகாவல்ப்பெருந்தெருவில்
3. திருவெட்பூருடையான் இன்பவனப் பெருமாள் ஆன தன்மபரிபாலம் மெற்படி உலகுடையாயரும் இராசசிங்க மங்கலம் ஊரவரும்
4. இன்னாயினார் பூமீசுரமுடையாற்கு கல்வெட்டி குடுத்தபடி முன்னாள் எங்கள் ஒற்றியான விறையாகிச்சன் வயலில்
5. பிள்ளான் வயக்கல் முற்றும் குளச்செய் முற்றும் ஒற்றி ஓலையும் கிழித்து எங்கள் தன்மமாக
6. காலசந்தி பூசிப்பர் ஆகவும் இது சந்திராதித்தவரை செல்ல நடந்து பொதக்கடவதாகவும் இப்படிக்கு
7. தன்மபரிபாலருள்ளிட்டார் தன்மமாகக் கல்வெட்டிக் குடுத்தொம் . . . . ஊரவரொம்
8. இப்படிக்கு தன்மபரி . . . . குடையார் தெய்வத்தார்.

கல்வெட்டு எண் - 977

இக்கல்வெட்டு ராங்கியம் பூமீசுவரர் கோயிலின் தென்புறம் சுவரில் காணப்படுகிறது.

1. . . . . காற்திகை - - - - வயிரவ நயினார்விசையாலை
2. யதெவர் இராசிங்கமங்கலம் ஊர் மெலைத்தெரு . . . . பிடிபாடு பண்ணிக்

3. குடுத்தபடி நம்முடைய நாயக்கத்தனம்மான இளையாத்தக்குடி உடையார்
4. ஆவுடையீசுரமுடைய நயினார் தெவதானமாகை . . . . . . ல் புரவில்
5. தில் தண்ணீர் தங் . . ஊர் இராசிங்கமங்கலத்து . . . .
6. விடவெணு . . . . . மு . . ணாளும் தா . . . . விடுகையிலெ ஊராயிசைந்த ஊரவற்
7. க்கு இந்த தண்ணீர் மாறும்பொழுது நயினாற்கு தண்ணீர் விலை சுவாமி பொகம்மாக நெல்லுக்குடுத்
8. தால்லொழிந்து மாற ஒண்ணாது என்று சொல்லுகையில் தாங்கள் வந்து நம்மையும் கண்டு
9. நயினாற்கு சுவாமிபொகம் தண்ணீற்கூலிக்கு நெல்லாக நாம் கற்பித்த நீதி குடுப்பொம் என்றும்
10. சொல்லுகையில் கீரனூர் குளத்தில் தண்ணீர் கீரனூர்வயலுக்கு பாதியும் தங்கள் பிறங்
11. கொட்டை வயலுக்கு பாதியும்மாக மாறு . . . க்கு கிழெ தளக்கல்லுப்பொட்டு ஒரு கல்லிலெ
12. இரண்டு கண்ணாக மடை திறந்து மடையும் வைத்து பெர்பாதி ஆக இரண்டு மடை ஆக
13. வைத்து தண்ணீர்மாற கற்வித்து நாயினாற்கு தண்ணீற்கூலி ஆக சுவாமிபொகம் அஞ்ஞா
14. ழிக்காலால் பன்னிரண்டு கட்டி கலமாக . . . . . . நெல்லு வருவ . . . . . . மாறமுதல்
15. லாக வாடாக்கடைமை ஆகத்தண்ணீர் . ழிவறக்குடுத்து சந்திராதித்தவற்செல்ல . மா. ச்செல்ல
16. வும் குளத்தில் மீனும் பொதுவிலெ பிடித்து குழித்திடக்கடவராகவும் வடக்கில் மடையில் தண்
17. ணீர் குளத்தில் மா . க . . . . வாய்க்கால் கொண்டு பொவராகவும் இப்படிக்கு இக்கொயில் தான
18. த்தார் கற்பகமான குலசெகரபட்டர் எழுத்து பரமெசுவரபட்டர் நெல்வாசலாண்டார் எழுத்து
19. இப்படிக்கு திருவாசல்கணக்கு தனியூர் திருவரன்கம் மாடாபத்தியம் திரியவிருந்தான் வாணாதராயன் எழுத்து.

⌘ ⌘ ⌘

நூலாசிரியர் மா. சந்திரமூர்த்தி படைப்புகள்

- ❖ தமிழகக் கோயிற்கலைகள் (1973)
- ❖ பூம்புகார் (1973)
- ❖ ஆய்வுக் கொத்து (1973)
- ❖ ஆய்வுத் தேன் (1974)
- ❖ வரலாற்றில் வெற்றிலை (1977)
- ❖ வரலாற்றில் ஓமலூர்க் கோட்டை (1978)
- ❖ இராசராசன் வரலாற்றுக்கூடம் (1988)
- ❖ இலுப்பைக்குடிக் கோயில் (1988)
- ❖ மாத்தூர் கோயில் (1988)
- ❖ தில்லையும் திருநடனமும் (1990)
- ❖ இரணியூர்க் கோயில் (1990) (தஞ்சைப் பல்கலைக்கழக பரிசுப் பெற்றது)
- ❖ நேமம் கோயில் (1991) (பாண்டித்துரைத் தேவர் நினைவுப் பரிசுப் பெற்றது)
- ❖ பிள்ளையார்ப்பட்டி (1992)
- ❖ கும்பகோணமும் மகாமகப் பெருவிழாவும் (1992)
- ❖ குந்தவையின் கலைக்கோயில்கள் (1992) (தமிழக அரசு பரிசுப் பெற்றது)
- ❖ இராசேந்திரசோழன் அகழ்வைப்பகம் (1993)
- ❖ சூரக்குடிக் கோயில் (1994)
- ❖ மகாபலிபுரம் காண்டீப அருங்காட்சியகம் – கையேடு (1994)
- ❖ எசாலம் வரலாற்றுப் புதையல் (1995)
- ❖ வயிரவன் கோயில் (1996) (தமிழக அரசு பரிசுப் பெற்றது)
- ❖ அருள்மிகு சித்திரத வல்லப பெருமாள் திருக்கோயில் தலவரலாறு (1997)
- ❖ கடும்பாடி அம்மன் கோயில் தலவரலாறு (1999)
- ❖ கீழ்க்கட்டளைக் கோயில்கள் வரலாறு (1999)
- ❖ கெங்கபுரம் வரதராஜப் பெருமாள் கோயில் வரலாறு (2000)
- ❖ சின்னதாராபுரம் ஸ்ரீ முனிமுக்தீசுவரர் கோயில் வரலாறு (2002)
- ❖ பராக்கிரம பாண்டியபுரம் (2002) (தமிழ்நாடு அரசு பரிசுப் பெற்றது)
- ❖ வேலங்குடிக் கோயில் (2003)
- ❖ இளையாத்தங்குடிக் கோயில் (2004) (பொற்கிழிப் பரிசுப் பெற்றது)
- ❖ தமிழ்நாட்டுச் சிவாலயங்கள் – முதல் தொகுதி (2003)
- ❖ தமிழ்நாட்டுச் சிவாலயங்கள் – இரண்டாம் தொகுதி (2004)
- ❖ பண்டைத் தடயம் (2005)
- ❖ சமணத் தடயம் (2005)
- ❖ கங்கை கொண்ட சோழபுரம் – கையேடு (2005)
- ❖ அயன்புரம் ஸ்ரீ பரசுராம லிங்கேசுவர் கோயில் (2006)
- ❖ நகரத்தார் மரபும் பண்பாடும் (2006)



நூலாசிரியரைப் பற்றி

நாகை மாவட்டம் காவிரிப் பூம்பட்டினத்தைச் சார்ந்த நெய்தவாசலில் 19.6.1946 – இல் பிறந்த இவர் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் கல்வெட்டாய்வாளர் பணியில் சேர்ந்தார். பின்னர் தொல்பொருள் ஆய்வாளர், ஆழ்கடல் அகழாய் வாளர், பதிவு அலுவலர், உதவி இயக்குநர், துணை இயக்குநர் எனப் பல நிலைகளில் பணியாற்றிப் பணி நிறைவு பெற்றவர்.

மறைந்த கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்களால் செட்டிநாட்டுப் பகுதிக்கு அறிமுகம் ஆனவர். செட்டிநாட்டைப் பற்றித் தொல்லியல் நோக்கில் இவரை ஆய்வு செய்யத் தூண்டியவர் அறிஞர் சோமலெ அவர்கள். இவரது செட்டிநாட்டு ஆய்வு வேட்கையை உணர்ந்து வாழ்நாள் பணியாக 'நகரத்தார் குலமரபுக் கோயில்கள்' ஒன்பதையும் எழுத ஊக்கமளித்தவர் தமிழவேள் டாக்டர் ச. மெய்யப்பனார் அவர்கள்.

"நகரக்கோயில் வரிசை ,பெருந்திட்டத்தில் இவர் உருவாக்கிய ஒன்பது நூல்களையும் ஒருங்கிணைத்து மதிப்பீடு செய்யும் பொழுது இந்நூல்களின் ஆய்வுத் தலைப்புகள், பகுப்பு முறை, செய்திகள்,அரிய கண்டுபிடிப்புகள், ஆய்வு முடிவுகள் அவற்றின் ஒட்டு மொத்தமான பரிமாணங்களைக் கருத்தில் கொண்டு இவரின் மொத்த பங்களிப்பு டி.லிட் பட்டத்திற்கு உரியது "என முனைவர் ச.மெய்யப்பனார் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

"கோயிற்கலைகள் பற்றிய ஒரு பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டால் இத்தகைய நூல்கள் அதில் பாட நூலாகத் தக்கவை. நிரம்ப நிதி சேர்த்து ஒன்பது நகரக்கோயில்களைப் பற்றிய செய்திகளை முழுவதுமாக ஒரே நூலாக வெளியிட முயல வேண்டும். அதை ஆங்கிலம், செருமன், பிரெஞ்சு, இந்தி, வங்காளம் போலும் உலகப் பெருமொழிகளில் எல்லாம் சுருக்கமாக வேனும் வெளியிட வேண்டும்" என்று முனைவர் தமிழண்ணல் அவர்களின் பாராட்டுரை பெற்றவர். இவரது முதல் நூலான 'தமிழகக் கோயிற்கலைகள்' சில கல்லூரிகளில் இன்றும் பாடநூலாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

மாத்தூர் நகரக் கோயிலைச் செய்தமைத்த சிற்பி ம. வைத்தியநாத ஸ்தபதி அவர்களின் புதல்வரான சிற்பச்சித்தர் டாக்டர் வை. கணபதி ஸ்தபதி அவர்கள் "கடந்த கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக இவர் ஆற்றிவந்த இப்பணிக்குத் தமிழ் கூறும் நல்லுலகமும், தமிழ் மக்களும், நாட்டுக்கோட்டை நகரத்தார்களும், செட்டிநாட்டுச் சிற்பிகளும் கடமைப்பட்டுள்ளனர். இவரை நகரத்தார்கள் கௌரவித்து மேலும் உயர்விக்க வேண்டும்" எனக் கருத்துரை வழங்கியுள்ளார்.

தொடர்ந்து மணிவாசகர் பதிப்பகத்தில் எழுதி வரும் ஆசிரியர் தற்போது கல்வெட்டு, ஆவணம், பட்டயம், ஓலைச்சுவடி, மூல நூல்கள் என அரிதின் முயன்று ஆராய்ந்து 'நகரத்தார் மரபும் பண்பாடும்' என்ற இந்நூலை எழுதியுள்ளார்.